GEOGRAPHY AND INDIAN ECONOMY
DEC MONTHLY TEST – 1

# GEOGRAPHY AND INDIAN ECONOMY DEC MONTHLY TEST – 1 (TAMIL)

| | | |
|---|---|---|
| **GEOGRAPHY - MONSOON, RAINFALL, WEATHER, CLIMATE** | | |
| 8TH book GEO | Unit - 2 | வானிலையும் காலநிலையும் |
| 10th book | Unit - 2 | இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள் |
| 12th book | Unit - 7 | பேணத் தகுந்த மேம்பாடு |
| INDIAN ECONOMY | | |
| **PLANNING COMMISSION,NITI AYOG, NATIONAL DEVELOPMENT COUNCIL** | | |
| 6th TERM 2 | Unit 1 | பொருளியல் ஓர் அறிமுகம் |
| 7th TERM 2 | Unit 1 | உற்பத்தி |
| 11TH Book | Unit 1 | நுண்ணினப் பொருளியல்: ஓர்அறிமுகம் |
| | Unit 7 | இந்தியப் பொருளாதாரம் |
| | Unit 8 | இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும் |
| | Unit 9 | இந்தியாவின் மேம்பாட்டு அனுபவங்கள் |
| 12th book | Unit 1 | பேரியல் பொருளாதாரம் |
| | Unit 11 | பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல் |
| **MONETARY POLICY, FISCAL POLICY, FINANCE COMMISSION, GST& TAXES** | | |
| 8th book ECO | unit – 1 | பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள் |
| 9th book | Unit -3 | பணம் மற்றும் கடன் |
| 10th book | Unit – 1 | மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம் |
| | Unit – 4 | அரசாங்கமும் வரிகளும் |
| 12th Economics | Unit – 2 | தேசிய வருவாய் |
| | Unit – 4 | நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள் |
| | Unit – 5 | பணவியல் பொருளியல் |

| | | |
|---|---|---|
| | **Unit – 6** | வங்கியியல் |
| | **Unit – 9** | பொது நிதி |

APPOLO STUDY CENTRE

# GEOGRAPHY - MONSOON, RAINFALL, WEATHER, CLIMATE

**8th – Term I**

**அலகு – 2**

**வானிலையும் காலநிலையும்**

**அறிமுகம்:**

- காலநிலை இயற்கைச் சூழ்நிலையின் அடிப்படைக் கூறுகளில் ஒன்றாகும். இது நிலத்தோற்றம், மண்வகைகள், இயற்கைத் தாவரங்கள், விலங்குகள் மற்றும் மனிதர்களிடையேயும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

- தமிழ்நாட்டில் உள்ள தர்மபுரி மாவட்டத்தின் ஒரு சிறிய கிராமத்தில், மே மாதம், யுக்தா தன்னுடைய விடுமுறையை தம்பியுடனும், குடும்பத்துடனும் மகிழ்ச்சியாக கொண்டாடிக் கொண்டு இருக்கின்றாள். அவள் எப்பொழுதும் பருத்தியால் ஆன உடையை அணிகிறாள். அவளுடைய அம்மா கோடைக்காலத்திற்கு ஏற்ற உணவான கஞ்சி, நீர்மோர், எலுமிச்சைசாறு, தர்பூசணி போன்றவற்றைத் தன் குழந்தைக்கு வழங்குகின்றனர்.

| |
|---|
| புவியின் வளி மண்டலமானது வாயுக்களால் ஆன பல அடுக்குகளைக் கொண்டதாகும். இது புவியைச் சூழ்ந்துள்ளது. புவியின் ஈர்ப்பு விசையினால் வாயுக்களைப் புவியில் தக்க வைத்துக் கொள்கிறது. இதில் 78% நைட்ரஜனும்,21% ஆக்ஸிஜனும்,0.97% ஆர்கானும்,0.03% கார்பன் டை ஆக்ஸைடும் 0.04% மற்ற வாயுக்களும் மற்றும் நீராவியும் உள்ளன. |

அதே மே மாதத்தில் தியா என்பவர் நியூசிலாந்து நாட்டில் உள்ள ஆக்லாந்து என்னும் நகரத்தில் தன் குடும்பத்துடன் வசிக்கிறார். அவர்கள் மேல்சட்டை, வன்துணியாடை, கையுறை, காலுறை போன்ற ஆடைகளை அணிந்துள்ளார். அவருடைய அம்மா அவருக்கு, சாண்ட்விச், ஓட்ஸ் உணவு, வஞ்சிரமீன், வடிசாறு போன்ற சூடான உணவு வகைகளை அளிக்கிறார். யுக்தா கிருஸ்துமஸ் விழாவைக் குளிர்காலத்திலும், தியா கிருஸ்துமஸ் விழாவைக் கோடைக்காலத்திலும் கொண்டாடுகின்றனர்.

- யுக்தா, தியா இருவரும் வெவ்வேறான அரைக் கோளத்தில் வெவ்வேறு வகையான வாழ்க்கை முறையை மேற்கொள்கின்றனர்.

- இதற்கு அவ்விடங்களின் வெவ்வேறான வானிலையே காரணமாகும்.

- காலநிலையும் வானிலையும் மனிதனுடைய செயல்பாடுகள், உணவு வகைகள்,ஆடைமுறைகள், வசிக்கும் வீடு, செய்யும் தொழில்கள், வேளாண்மை, கடல் பயணம், மீன் பிடித்தல், நவீன போக்குவரத்து மற்றும் நாம் விளையாடும் நேரத்தின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.
- எனவே ஒவ்வொருவரும் வானிலை மற்றுமு் காலநிலைப் பற்றிய அறிவை பெற்றிருக்கவேண்டும். இப்பாடப்பகுதியில் வானிலை, காலநிலையின் உட்கூறுகள் பற்றி படிப்போம். மேலும் அவை எவ்வாறு மனிதவாழ்க்கை முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதைப் பற்றி தெரிந்துகொள்வோம்.

| |
|---|
| "Climate" என்ற சொல் கிளைமா என்ற பண்டைய கிரேக்க மொழியில் இருந்து பெறப்பட்டதாகும்.<br>கிளைமோ "Klimo" என்றால் தமிழில் சாய்வுகோணம்(Inclination) என்று பொருள். |

**வானிலை (Weather):**

- வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் வளிமண்டலத்தில் நிலவும் சூரிய வெளிச்சம், வெப்பம், மேகமூட்டம், காற்றின் திசை, காற்றழுத்தம்ட,ஈரப்பதம், மழைப்பொழிவு மற்றும் பிறகூறுகளின் தன்மைகளை குறிப்பதாகும். வானிலை குறுகிய காலமான ஒரு நாளோ, ஒரு

வாரமோ அல்லது ஒரு மாதமோ நடக்கக்கூடிய நிகழ்வைக் குறிப்பதாகும். மேலும் இது நேரத்திற்கு நேரம், காலத்திற்கு காலம் ஒரு வருடத்திற்குள்ளாகவே மாறக்கூடியது. காலையில் வானிலை தெளிவான வானத்துடன் வெப்பமாகவும் மாலை நேரத்தில், மேகமூட்டத்துடன் கூடிய மழையாகவும் இருக்கக்கூடும். இதேபோல் வானிலை குளிர்காலத்தில் குளிராகவும், கோடைக்காலத்தில் வெப்பமாகவும் இருக்கும்.

- நம்மில் சிலர் அடிக்கடி "இன்றைய காலநிலை மிகவும் நன்றாக உள்ளது" அல்லது "மோசமாக உள்ளது" என்று கூறுவதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் அக்கூற்று தவறானது. அதற்கு பதிலாக "இன்றைய வானிலை நன்றாக உள்ளது அல்லது மோசமாக உள்ளது என்றே கூற வேண்டும். இன்றைய "வானிலை அறிக்கை" என்று கூறுகின்றார்கள். ஆனால் கால நிலை அறிக்கை என்று கூறுவதில்லை. (எ.கா) இன்றைய மட்டைப்பந்து விளையாட்டு மோசமான வானிலையின் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

**காலநிலை** (Climate):

- காலநிலை என்பது ஒரு பகுதியின் நீண்ட நாளைய வானிலை சராசரியைக் குறிப்பதாகும். இது வளி மண்டலத்தின் வானிலைக் கூறுகளின் சராசரி தன்மையினை நீண்ட காலத்திற்கு அதாவது 35 வருடங்களுக்கு கணக்கிட்டுக் கூறுவதாகும். காலநிலையின் கூறுகளும் மற்றும் வானிலையின் கூறுகளும் ஒன்றே ஆகும். வானிலையைப் போன்று காலநிலை அடிக்கடி மாறக்கூடியது அல்ல.

**காலநிலையையும் வானிலையையும் கட்டுப்படுத்தக்கூடிய காரணிகள்:**

- சூரியக்கதிர்களின் படுகோணம், சூரிய ஒளிப்படும் நேரம், உயரம், நிலம் மற்றும் நீர் பரவல், அமைவிடம், மலைத்தொடர்களின் திசை அமைவு, காற்றழுத்தம், காற்று மற்றும் கடல் நீரோட்டம் போன்றவை ஓரிடத்தின் / பகுதியின் / பிரதேசத்தின் காலநிலையையும், வானிலையையும் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும்.

> வளியியல் என்பது வானிலையின் அறிவியல் பிரிவாகும்.
> காலநிலையியல் என்பது காலநிலையின் அறிவியல் பிரிவாகும்

- புவிகோள வடிவமானது ஆதலால் புவியின் மேற்பரப்பில் சூரியக்கதிர்கள் ஒரே சீராக விழுவது இல்லை. புவியின் துருவப் பகுதிகள் சூரியனுடைய சாய்வான கதிர்களைப் பெறுகின்றன. அதனால் அங்கு சூரிய வெளிச்சம் குறைவாகவோ அல்லது இல்லாமலோ இருப்பதால் அங்கு மிகக் கடும் குளிர் நிலவுகிறது. பூமத்திய ரேகையைச் சுற்றியுள்ள பகுதிகளில் சூரியக்கதிர்கள் செங்குத்தாக விழுவதால் அங்கு காலநிலையானது மிகவும் வெப்பமுடையதாகவும், குளிர்காலமே இல்லாததாகவும் உள்ளது. வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்களே நீரோட்டத்திற்கும்,காற்றோட்டத்திற்கும் காரணமாக உள்ளன. வெப்பக்காற்று வளிமண்டலத்தில் மேல் நோக்கிச் செல்வதால் அவ்விடத்தில் காற்றின் அழுத்தம் குறைவாக உள்ளது. அதனால் குளிர்காற்று புவிக்கு அருகிலேயே தங்கிவிடுகின்றது.

**காலநிலை மற்றும் வானிலையின் முக்கியக்கூறுகள்:**

- வெப்பநிலை, மழை வீழ்ச்சி, காற்றழுத்தம்,ஈரப்பதம் மற்றும் காற்று ஆகியவை காலநிலை மற்றும் வானிலையின் முக்கியக் கூறுகளாகும்.

**வெப்ப நிலை** (Temperature):

- வெப்ப நிலை என்பது, வானிலை மற்றும் காலநிலையின் முக்கியமான கூறு ஆகும். புவியும் அதன் வளி மண்டலமும் சூரியனின் வெப்ப கதிர்வீசலால் வெப்பம் அடைகின்றன. வெப்பநிலை என்பது காற்றில் உள்ள வெப்பத்தின் அளவை குறிப்பதாகும். காற்றிலுள்ள வெப்பமானது சூரிய கதிர்வீசலால் மட்டுமின்றி வளிமண்டல நிறையையும் சிறிதளவு சார்ந்துள்துள்ளது. வெப்பமானது புவியை வந்தடையும் கதிர்வீச்சின் காலத்தைப் பொறுத்தும் புவி வெப்பகதிர்வீச்சலின் அளவை பொறுத்தும் வெப்பம் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றது. இதற்கு காரணம் புவியின் இயக்கங்கள், தன்சுழற்சி, சூரியனை வலம் வருதல் மற்றும் புவி அச்சின் சாய்வுத் தன்மை ஆகியனவாகும்.

**வெப்பநிலை மானி**

- வெப்ப நிலை,ஈரப்பதத்தின் அளவு, ஆவியாதல், திரவமாதல், பொழிவு ஆகிவற்றின் அளவுகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

- சூரிய கதிர்வீச்சுகளிலிருந்து பெறப்படும் வெப்ப ஆற்றல் மூன்று வழிமுறைகளில் புவியை வந்தடைகிறது. அவை வெப்ப கதிர் வீச்சு, வெப்பக் கடத்தல் மற்றும் வெப்பச் சலனம் ஆகும். புவியின் வளிமண்டலம், சூரிய கதிர்வீசலை விட புவி கதிர்வீசலால் தான் அதிக வெப்பம் அடைகிறது.

| |
|---|
| வெப்பநிலை செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் வேறுபடுகிறது. வெப்பம் மாறும் மண்டலத்தில், வெப்பநிலையானது 1000 மீட்டர் உயரத்திற்கு 6.5°C என்ற அளவில் வெப்பநிலை குறைந்து கொண்டே செல்கிறது. இதனை வெப்ப குறைவு வீதம் என்று அழைப்பர். |

**வெப்பப்பரவலை தீர்மானிக்கும் காரணிகள்:**

- அட்சரேகை, உயரம், நிலத்தின் தன்மை, கடல் நீரோட்டம், வீசும் காற்று, சரிவு, இருப்பிடம், கடலிலிருந்து தூரம், இயற்கைத் தாவரங்கள், மண் ஆகியவை வெப்பப்பரவலை பாதிக்கும் முக்கியகாரணிகளாகும்.

நிலவரைபடங்களில் வானிலைக் கூறுகளின் பரவலைச் சம அளவுக் கோட்டு வரைபடம் மூலம் காண்பிக்கப்படுகிறது. சம அளவுக் கோடு என்பது சம அளவுள்ள இடங்களை இணைப்பதாகும். இக்கோடுகள் வானிலைக் கூறுகளின் அடிப்படையைக் கொண்டு அளவுக்கோடுகள் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| ஐசோதெர்ம் (Isotherm) | சமவெப்பக் கோடு |
| ஐசோக்ரைம் (Isocryme) | சராசரி சமவெப்பநிலைக்கோடு |
| ஐசோகெல் (Isohel) | சம சூரிய வெளிச்சக் கோடு |
| ஐசெல்லோபார் (Isollobar) | சம காற்றழுத்த மாறுபாட்டுக் கோடு |
| ஐசோபர் (Isobar) | சம காற்றழுத்தக் கோடு |
| ஐசோஹைட்ஸ் (Isohytes) | சம மழையளவுக் கோடு |

**வெப்பநிலையை அளவிடுதல்:**

- வெப்பநிலை என்பது ஒரு குறிப்பிட்ட கன அளவு காற்றில் குறிப்பிட்ட நேரத்தில் அவிடப்படுகிறது. இது செல்சியஸ், பாரன்ஹீட் மற்றும் கெல்வின் அளவுகளால் அளவிடப்படுதாகும். வானிலை ஆய்வாளர்கள் வெப்பநிலையை அளக்க வெப்பமானி, ஸ்டீவன்சன் திரை வெப்பமானி, மற்றும் குறைந்தபட்ச அதிக பட்ச வெப்பமானி மூலமும் கணக்கிடுகிறார்கள். சூரியக் கதிர்களிலிருந்து புவி பெறுகின்ற வெப்ப ஆற்றலானது வெளியேறுகின்ற புவி கதிர்வீசலால் இழக்கப்படுகிறது. வளிமண்டலம் புவிகதிர்வீசலால் வெளியேற்றும் வெப்பத்தால் பிற்பகல் 2.00 மணியிலிருந்து 4.00 மணிக்குள் அதிக வெப்பமடைகிறது. ஆகையால் நாள்தோறும் அதிக பட்ச வெப்பநிலை பிற்பகல் 2.00 மணியிலிருந்து 4.00 மணிக்குள் பதிவாகிறது. குறைந்த பட்ச வெப்பநிலை அதிகாலை 4.00 மணிமுதல் சூரிய உதயத்திற்கு முன் பதிவாகிறது.

**வெப்பநிலை வீச்சு (Mean Temperature):**

- ஓர் இடத்தில் 24 மணி நேரத்திற்குள் நிலவும் அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலைக்கும் இடையேயுள்ள சராசரியே வெப்பநிலை வீச்சு ஆகும். (87°F + 73 F) / 2 = 80°F) ஒரு நாளில் அமையும் உச்ச வெப்பநிலைக்கும் மற்றும் நீச வெப்பநிலைக்கும் இடையேயுள்ள வேறுபாடு தின வெப்பவியாப்தி அல்லது தினசரி வெப்பநிலை வீச்சு எனப்படும். ஒரு ஆண்டின் அதிக வெப்பமான சராசரி மாதத்திற்கும் குறைந்த வெப்பமான சராசரி மாதத்திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டிற்கு ஆண்டு வெப்பவியாப்தி என்று பெயர்.

- வெப்பநிலை பரவலைச் சமவெப்ப கோடுகள் மூலம் காணலாம். சம அளவு வெப்பநிலைக் கொண்ட இடங்களை இணைத்து வரையப்படும் கற்பனைக் கோடுகள் சமவெப்ப கோடுகள் ஆகும்.

**புவியின் வெப்ப மண்டலங்கள்:**

- புவியின் கோள வடிவமே வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு வெப்பநிலையைப் பெறுவதற்கு காரணமாக அமைகிறது. அதனை அடிப்படையாக கொண்டு புவி மூன்று வெப்ப மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

### வெப்ப மண்டலம் (Torrid Zone):

- இப்பகுதி கடக ரேகைக்கும், மகரரேகைக்கும் இடைப்பட்ட பகுதியாகும். இது சூரியனிடமிருந்து செங்குத்தான கதிர்களைப் பெறுவதால் அதிகபட்சமான வெப்பத்தைப் பெறுகிறது. இம்மண்டலம் வெப்பமண்டலமட் அல்லது அயன மண்டலம் என்றும் அழைக்கப்படுகிறது.

### மித வெப்ப மண்டலம் (Temperate Zone)

- வட அரை கோளத்தில் கடகரேகைக்கும், ஆர்டிக் வட்டத்திற்கும் இடைப்பட்ட பகுதியாகவும், தென் அரை கோளத்தில் மகரரேகைக்கும் அண்டார்டிக்கா வட்டத்திற்கும் இடைப்பட்டப் பகுதியாக அமைந்துள்ளது. இது சூரியனின் சாய்வானக் கதிர்களைப் பெறுவதாலும் சூரிய கதிர்களின் படுகோணம் துருவத்தை நோக்கிச் செல்லச் செல்ல குறைகிறது. எனவே இம்மண்டலம் மித வெப்பமண்டலம் என்று அழைக்கப்படுகிறது.

### குளிர் மண்டலம் (உறைப்பனி மண்டலம்) (Frigid zone):

- உறைப்பனி மண்டலம் ஆர்டிக் வட்டத்திற்கும், வடதுருவப்பகுதிக்கு இடையேயும், அண்டார்ட்டிக் வட்டத்திற்கும் தென்துருவப்பகுதிக்கு இடையேயும் அமைந்துள்ளது. இங்கு ஆண்டு முழுவதும் குறைந்த வெப்பத்தைப் பெறுவதால் இப்பிரதேசம் பனியால் சூழப்பட்டுள்ளது. இப்பகுதி துருவ மண்டலம் என்று அழைக்கப்படுகிறது.

**அதிகபட்ச வெப்ப நிலை / குறைவான வெப்ப நிலை:**

புவியில் இதுவரை பதிவான மிக அதிகபட்ச வெப்பநிலை 56.7°C (134°F). இது 1913 ஆம் ஆண்டு ஜீலை 10 ஆம் நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் கலிபோர்னியாவிலுள்ள கிரீன்லாந்து மலைத்தொடர் (மரணப் பள்ளத்தாக்கு) என்ற இடத்தில் பதிவாகியுள்ளது.

இதுவரை பதிவான குறைந்தபட்ச வெப்பநிலை (-89.2°C) (-129.6°F 184.OK) இது 1983 ஆம் ஆண்டு ஜுலை 21 ஆம் நாள் அண்டார்டிக்காவில் உள்ள சோவியத் வோஸ்டக் நிலையத்தில் பதிவாகியுள்ளது.

### மழைப்பொழிவு (Rain Fall):

- வளிமண்டல நீராவி நீர் சுருங்குதல் மூலம் பூரித நிலையை அடைந்து புவிஈர்ப்பு விசையின் காரணமாக கீழ்நோக்கி விழும் திரவ நீரே மழை பொழிவு எனப்படும். நீர்சுழற்சியின் முக்கிய கூறு மழையாகும். இது புவியில் நன்னீரை உருவாக்குகின்றது. மழைநீரே எல்லாவகையான நீருக்கும் முக்கியமான ஆதாரமாக விளங்குகிறது. வெப்பநிலை மற்றும், மழைபரவலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. பொதுவாக மழைப்பொழிவு நிலநடுக்கோட்டுப் பகுதிகளில் அதிகமாகவும், துருவப்பகுதிகளை நோக்கிச் செல்லச் செல்ல மழையின் அளவு குறைகிறது. மழைப்பொழிவு மழை மானியால் அளவிடப்படுகிறது.

### காற்றின் அழுத்தம் (Air Pressure):

- புவியின் மேற்பரப்பில் குறிப்பிட்ட பகுதியிலுள்ள உள்ள காற்றின் எடையே வளிமண்டல அழுத்தம் அல்லது காற்றழுத்தம் எனப்படும். காற்றின் அழுத்தம் காற்றழுத்த மானியால் அளவிடப்படுகிறது. கடல் மட்டத்தில் உள்ள நிலையான காற்றழத்தத்தின் அளவு 1013.25 மில்லி பார் ஆகும். பூமியில் உள்ள எல்லாப் பகுதிகளிலும் காற்றழுத்தத்தின் அளவு 103 கிலோ / ச.செ.மீ ஆகும். நிலையான வளிமண்டல அழுத்த வேறுபாட்டினால் காற்றழுத்தம் கிடையாகவும் செங்குத்தாகவும் காணப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டு காற்றின் அழுத்தத்தை குறைந்த காற்றழுத்த மண்டலம் என்றும், அதிக காற்றழுத்த மண்டலம் என்றும் வகைப்படுத்துகின்றனர்.

- குறைந்த காற்றழுத்தப் பகுதி என்பது வளி மண்டலப் பகுதிகளில் சுற்றியுள்ள பகுதிகளை விட அழுத்தம் குறைவாக இருக்கும். இப்பகுதியை நோக்கி அழுத்தம் அதிகமுள்ள பகுதியில் இருந்து காற்று வீசும். அதிக காற்றழுத்தம் என்பது வளிமண்டலப் பகுதிகளில் சுற்றியுள்ள பகுதிகளைவிட அழுத்தம் அதிகமாக இருக்கும். காற்று இங்கிருந்து குறைந்த காற்றழுத்தப் பகுதியை நோக்கி வீசும்.

| |
|---|
| உலகில் இதுவரை பதிவான மிக அதிக பட்ச அழுத்தம் 1083 mb, ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் தேதி ரஷ்யாவில் உள்ள ”அகாட்” என்ற இடத்தில் கடல் மட்டத்தில் பதிவானது. உலகில் இதுவரை பதிவான மிகக் குறைந்த அழுத்தம் 870mb அடி 1929 டிசம்பர் 12 ஆம் தேதி பசிபிக் பெருங்கடலில் உள்ள மரியானா தீவிற்கு அருகில் உள்ள ”குவாம்” என்ற கடல் பகுதியில் உருவான டைபூனின் கண் பகுதியில் பதிவானதாகும். |

- குறைவான காற்றழுத்த மண்டலம் "L” என்ற எழுத்தாலும் அதிக காற்றழுத்த மண்டலத்தை "H” என்ற எழுத்தாலும் வானிலை வரைப்படத்தில் குறிக்கப்படுகிறது. குறைந்த அழுத்த மண்டலம் காற்றழுத்த தாழ்வு மண்டலம் என்றும், சூறாவளி என்றும் அழைக்கப்படுகிறது. அதிக அழுத்த மண்டலம் எதிர் சூறாவளி காற்றுகள் என்று அழைக்கப்படுகிறது. குறைந்த அழுத்த மண்டலம் மேக மூட்டத்தையும், காற்றையும், மழைப் பொழிவையும் உருவாக்குகிறது. அதிக அழுத்த மண்டலம் அமைதியான வானிலையைத் தருகிறது. சம அழுத்தக்கோடு (ஐசோபார்) சம அளவுள்ள காற்றழுத்தத்தின் பரவலை காணப் பயன்படுகிறது.

- மனிதர்கள் சிறிய அளவு காற்றழுத்த வேறுபாட்டால் பொதுவாக பாதிக்கப்படுவதில்லை. ஆனால் சிறிய காற்றழுத்த வேறுபாடு மிகப்பெரிய அளவில் உள்ள போது புவியின் காற்றமைப்பையும், புயல் காற்றையும் தீர்மானிக்கிறது. வளிமண்டல அழுத்தத்தை கட்டுப்படுத்தும் காரணிகள் உயரம், வளிமண்டல வெப்பநிலை, காற்று சுழற்சி, பூமியின் தன்சுழற்சி, நீராவி மற்றும் வளிமண்டலப் புயல்கள் போன்றவையாகும்.

**காற்றழுத்தத்தை அளவிடுதல்:**

- வானிலை ஆய்வாளர்கள் காற்றழுத்தத்தை காற்றழுத்தமானி அல்லது அனிராய்டு காற்றழுத்தமானி மூலம் அளக்கின்றனர். வளிமண்டல அழுத்த வேறுபாட்டை தொடர்ச்சியாகப் பதிவு செய்ய காற்றழுத்தப் பதிவுத்தாள் (Barograms) பயன்படுகிறது.

**ஈரப்பதம் (Humidity):**

ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் காற்றில் உள்ள நீராவியின் அளவு ஈரப்பதம் என அழைக்கப்படுகிறது. இது வளிமண்டலத்தின் தொகுதியில் 0 – 5% வரை இருக்கும். ஈரப்பதம் வளிமண்டலத்தின் ஒரு முக்கிய அங்கமாகும். வளிமண்டலத்தில் ஈரப்பத்தின் அளவு வெப்பநிலையின் அளவை பொறுத்து அமைகிறது. அதனால் ஈரப்பதத்தின் அளவு நிலநடுக்கோட்டிலிருந்து துருவத்தை நோக்கிச் செல்லும்போது குறைகிறது. காற்றில் உள்ள ஈரப்பதத்தை அளவிட பல்வேறு அளவீட்டு முறைகள் உள்ளன.

- **சுய ஈரப்பதம் (Specific Humidity)**: ஒரு குறிப்பிட்ட எடைக்கொண்ட காற்றிலுள்ள நீராவியின் எடை ஈரப்பதம் எனப்படும். பொதுவாக கிராம் நீராவி ∴ கிலோகிராம் காற்று எனக் குறித்துக் காட்டப்படுகிறது.

**உண்மையான ஈரப்பதம் (Absolute Humidity):**

- ஒரு குறிப்பிட்ட கன அளவுள்ள காற்றில் உள்ள நீராவியின் எடைக்கு உண்மையான ஈரப்பதம் என்று பெயர். இது ஒரு கன மீட்டர் காற்றில் எவ்வளவு கிராம் நீராவி உள்ளது எனக் குறித்துக் காட்டப்படுகிறது.

- ஒப்பு ஈரப்பதம் (Relative Humidity): ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையில் ஒரு குறிப்பிட்ட கன அளவுள்ள காற்றில் எவ்வளவு நீராவி இருக்க முடியுமோ அந்த அளவிற்கும், அதேசமயம் அக்காற்றில் தற்போது எவ்வளவு நீராவி உள்ளதோ அந்த அளவிற்கும் உள்ள விகிதம் ஒப்பு ஈரப்பதம் எனப்படும். இது சராசரி சதவிகித முறையில் காணப்படுகிறது.

## ஈரப்பதத்தை அளத்தல் (Measurement of Humidity)

- ஈரநிலைமானி (ஹைக்ரோ மீட்டர்) கொண்டு காற்றின் ஈரப்பதத்தை அளக்கலாம் (ஸ்வன்சன் திரையில் வறண்ட மற்றும் ஈர குமிழ் கட்டுகள் ஒவ்வொன்றாக அடுக்கப்பட்டதாகும்) பொதுவாக வெப்பகாற்று குளிர்காற்றைவிட அதிக நீராவியைத் தக்கவைத்துக்கொள்ளும். காற்றில் ஒப்பு ஈரப்பதம் 100மூ அடையும்பொழுது காற்று பூரித நிலையை அடையும். இந்தப் பூரித நிலையையில் வெப்பநிலை பனிப்புள்ளி நிலைக்குச் சென்று விடும். இந்த நீராவி மேலும் குளிர்வடைந்து நீர் சுருக்கமாகி மேகங்கள் மற்றும் மழைக்கு வித்திடுகிறது. ஒப்பு ஈரப்பதம் மனிதனின் உடல் நலத்தையும் ஆரோக்கியத்தையும் பாதிக்கிறது. அதிக மற்றும் குறைந்த ஈரப்பதம் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிக்கும். இது பல்வேறு பொருட்கள், கட்டங்கள், மின்சாதன பொருட்களின் நிலைத்தன்மையைப் பாதிக்கும்.

| |
|---|
| காற்றின் அழுத்தம் குறைவதனால் காற்றில் சுவாசிப்பதற்கான ஆக்ஸிஜனின் அளவும் குறைகிறது. மிக உயரமான இடங்களில் காற்றில் ஆக்ஸிஜனின் அளவும் காற்றின் அழுத்தமும் மிகவும் குறைவாக உள்ளது (அதனால் மனிதர்கள் அங்கு இறக்கக் கூடும்) ஏறும்பொழுது ஆக்ஸிஜனை உருளையில் அடைத்து எடுத்துச் செல்கின்றனர். அவர்கள் சிறிது கால அவகாசம் எடுத்துக் கொண்டு அதிக உயரங்களுக்குத் தம்மை பழக்கப் படுத்திக் கொள்கின்றனர். ஏனெனில் அழுத்தம் அதிகமான இடங்களுக்குச் செல்லும் பொழுது மூச்சுத்திணறல் ஏற்படும். விமானங்களில் செயற்கை அழுத்தத்தை உருவாக்கி பயணிகளை வசதியாக சுவாசிக்கும்படி அமைத்துள்ளனர். |

**காற்று:**

- கிடைமட்டமாக நகரும் வாயுவிற்கு காற்று என்று பெயர். செங்குத்தாக நகரும் வாயுவிற்கு காற்றோட்டம் என்று பெயர். காற்று எப்பொழுதும் உயர் அழுத்தப்பகுதிகளிலிருந்து குறைந்த அழுத்த பகுதியை நோக்கி வீசும். காற்றால் உருவாக்கப்படும் சுழல் காற்று மற்றும் கடும் காற்றை உணரத்தான் முடியும் பார்க்க முடியாது. காற்று எத்திசையிலிருந்து வீசுகிறதோ அதே பெயரில் அழைக்கப்படுகிறது. எ.கா. தென்மேற்குப் பகுதியிலிருந்து வீசும் காற்றிற்கு தென்மேற்குப் பருவக்காற்று என்று பெயர்.

காற்றின் அமைப்புகள் மூன்று பெரும் வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை யாவன.

1. கோள் காற்றுகள் அல்லது நிரந்தர காற்றுகள் (Planetary Winds)
2. பருவக் காலக் காற்றுகள் மற்றும் (Seasonal winds)
3. தலக் காற்றுகள் அல்லது பிரதேசக் காற்றுகள் (Local winds)

| |
|---|
| உலகிலேயே முதன் முதலாக காலநிலை வரைபடங்களின் தொகுப்பைத் அல் - பலாஹி. என்ற அரேபிய நாட்டு புவியியல் வல்லுநர் அரேபியாநாட்டு பயணிகளிடமிருந்து காலநிலைப் பற்றிய விவரங்களைச் சேகரித்து வெளியிட்டார். |

**கோள் காற்றுகள்:**

- ஆண்டு முழுவதும் ஒரே திசையை நோக்கி வீசும் காற்றுகள் கோள் காற்றுகள் அல்லது நிலையான காற்று என்று அழைப்பர். எ.கா. வியாபாரக் காற்று, மேலைக்காற்று, துருவக்காற்று, பருவக்காலக் காற்று என்பது பருவத்திற்கு ஏற்றவாறு அதன் திசையை மாற்றி வீசும். இக்காற்றுகள் கோடைக்காலத்தில் கடலிலிருந்து நிலைத்தை நோக்கியும், குளிர்காலத்தில் நிலத்திலிருந்து கடலை நோக்கியும் வீசும். தலக்காற்றுகள் அல்லது பிரதேசக் காற்றுகள் என்பது ஒரு நாள் அல்லது ஆண்டின் குறுகிய காலத்தில் குறிப்பிட்ட நேரத்தில் ஒரு சிறிய பகுதியில் வீசும். எ.கா. நிலக்காற்று, கடல் காற்று.

| |
|---|
| பிரேசிலின் பெரும்பகுதியில் காற்றின் வேகம் குறைவாக உள்ளது. ஆப்பிரிக்காவின் காபான், காங்கோ மற்றும் DR காங்கோ, சுமத்ரா. இந்தோனேசியா மலேசியா ஆகியவை பூமியில் குறைந்த காற்று வீசும் பகுதியாகும். |

பியோபோர்டு அளவை என்ற கருவி காற்றின் வேகத்தை அளவிட பயன்படுகிறது. இது இப்பொழுது உலகம் முழுவதும் பயன்பாட்டில் உள்ளது. இக்கருவி 1805 ஆம் ஆண்டு இராயல் கப்பற்படை

அதிகாரியான பிரான்சிஸ் பியோபோர்டு அவர்களால் உருவாக்கப்பட்டது. இக்கருவியை முதன் முதலில் எச்.எம்.எஸ் பீகாலால் அதிகாரப்பூர்வமாக பயன்படுத்தப்பட்டது.

**காற்றின் திசை மற்றும் வேகத்தை அளவிடல்:**

- வானிலை வல்லுநர்கள் காற்றின் திசையை அளவிட காற்றுமானி அல்லது காற்று திசைக்காட்டி என்ற கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். காற்றின் வேகத்தை அளக்க அனிமாமீட்டர் என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது. விண்ட்ரோஸ் என்பது காற்றின் திசையையும், வீசும் காலத்தையும் நிலவரைபடத்தில் குறிக்கும் ஒரு வரைபடம். மீட்டிரோகிராப் அல்லது டிரிபில் ரிஜிஸ்டர் என்ற கருவி காற்றின் திசை, வேகம் சூரிய வெளிச்சம், அனிமாமழை ஆகிய வானிலைக் கூறுகளைப் வரைகோட்டுப்படத்தின் மூலம் பதிவு செய்யும் கருவியாகும்.

# 10th Full Book
## Unit - 2
### இந்தியா – காலநிலை மற்றும் இயற்கைத் தாவரங்கள்

**அறிமுகம்**

- நாம் கோடைக்காலத்தில் அதிகமாக தண்ணீரைப் பருகுகிறோம் ஆனால் குளிர் காலத்தில் அதே அளவு தண்ணீரைப் பருகுவதில்லை. வட இந்தியாவில் கோடைக்காலத்தில் மென்மையான பருத்தியாலான ஆடைகளையும் குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளையும் ஏன் அணிகிறோம்? தென்னிந்திய மக்கள் குளிர்காலத்தில் கம்பளி ஆடைகளை அணியாதது ஏன்? ஏனெனில், வட மற்றும் தென்னிந்தியாவில் தட்பவெப்பநிலை மாறுபடுவதே இதற்கு காரணமாகும்.

- முந்தைய அத்தியாயத்தில் இந்தியாவின் நிலத்தோற்ற அமைப்பு, மற்றும் வடிகாலமைப்பு எவ்வாறு சுற்றுச் சூழலுடன் தொடர்புடையது என்பதை கற்றறிந்தோம். இந்த அத்தியாயத்தில் இந்தியாவின் காலநிலை, மழைப்பரவல், இயற்கைத் தாவரங்கள் மற்றும் வன விலங்குகளைப் பற்றி கற்போம்.

| |
|---|
| சமச்சீர் காலநிலை என்பது 'பிரிட்டிஷ் காலநிலை' என்றும் அழைக்கப்படுகிறது. இக்காலநிலை அதிகவெப்பமுடையதாகவோ அல்லது மிகக்குளிருடையதாகவோ இருக்காது. |

**இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள்**

- அட்சம் பரவல், கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, கடல் மட்டத்திலிருந்து உயரம், பருவக்காற்று, நிலத்தோற்றம், ஜெட் காற்றுகள் போன்றவை இந்திய காலநிலையை பாதிக்கும் காரணிகளாகும்.

**அட்சங்கள்**

- இந்தியா $8^{o}4'$ வட அட்சம் முதல் $37^{o}6'$ வட அட்சம் வரை அமைந்துள்ளது. $23^{o}30'$ வட அட்சமான கடகரேகை நாட்டை இரு சமபாகங்களாக பிரிக்கிறது. கடகரேகைக்கு தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் ஆண்டு முழுவதும் அதிகவெப்பமும் மிக குளிரற்ற சூழலும் நிலவுகிறது. கடகரேகைக்கு வடக்கே உள்ள பகுதிகள் மித வெப்ப காலநிலையைக் கொண்டுள்ளது. கோடைக்காலத்தில் இப்பகுதியின் வெப்பம் $40^{o}C$-க்கு மேலாகவும் குளிர் காலத்தில் வெப்பநிலை உறைநிலையை ஒட்டியும் உள்ளன.

**உயரம்**

- புவிப்பரப்பிலிருந்து உயரே செல்ல செல்ல வளிமண்டலத்தில் ஒவ்வொரு 1000 மீட்டர் உயரத்திற்கும் $6.5^{o}C$ என்ற அளவில் வெப்பநிலை குறைகிறது. இதற்கு "இயல்பு வெப்ப வீழ்ச்சி" என்று பெயர். எனவே சமவெளிப் பகுதிகளைக் காட்டிலும் மலைப்பகுதிகள் குளிராக இருக்கும். உதகை, தென்னிந்தியாவின் இதர மழை வாழிடங்கள் மற்றும் இமயமலையில் அமைந்துள்ள முசௌரி, சிம்லா, போன்ற பகுதிகள் சமவெளிகளைவிட மிகவும் குளிராக உள்ளது.

**கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு**

- கடலிலிருந்து அமைந்துள்ள தொலைவு, வெப்பம் மற்றும் அழுத்த வேறுபாடுகளைத் தோற்றுவிப்பதன் மூலம் மழைப்பொழிவையும் பாதிக்கின்றது. இந்தியாவின் பெரும்பகுதி குறிப்பாக தீபகற்ப இந்தியா கடலிலிருந்து வெகுதொலைவில் இல்லை. இதன் காரணமாக இப்பகுதி முழுவதும் நிலவும் காலநிலை கடல் சார் ஆதிக்கத்தை கொண்டுள்ளது. இப்பகுதியில் குளிர்க்காலம் குளிரற்று காணப்படும் வருடம் முழுவதும் சீரான வெப்பநிலையைக் கொண்டுள்ளது.

- கடல்களின் ஆதிக்கமின்மை காரணமாக மத்திய மற்றும் வட இந்திய பகுதிகள் வெப்பநிலையில் பருவகால மாறுபாடுகளைக் கொண்டுள்ளன. இங்கு கோடையில் கடும்வெப்பமும் மற்றும் குளிர் காலத்தில் கடும் குளிரும் நிலவுகிறது. கொச்சி கடற்கரை பகுதியில் அமைந்திருப்பதால் இதன் வருடாந்திர சராசரி வெப்பம் 30°C அளவுக்கு மிகாமல் உள்ளது. மாறாக கடற்கரையிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ள புதுடில்லியின் வருடாந்திர சராசரி வெப்பம் 40°C க்கும் அதிகமாக உள்ளது. கடற்கரை பகுதியில் காற்றில் ஈரப்பதம் மிகுந்து இருப்பதால் இவை அதிக மழைத்தரும் திறனைக் கொண்டுள்ளது. இதனால் கடற்கரைக்கு அருகிலுள்ள கொல்கத்தாவில் மழைப்பொழிவு 119 செ.மீ ஆகவும் உள் பகுதியில் அமைந்திருக்கும் பிகானிரில் (இராஜஸ்தான்) 24 செ.மீ க்கு குறைவான மழைப்பொழிவே பதிவாகின்றது.

**பருவக்கால காற்று**

- இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் மிக முக்கிய காரணி பருவக் காற்றாகும். இவை பருவங்களுக்கேற்ப மாறி வீசும் காற்றுகளாகும். இந்தியா ஒரு ஆண்டின் கனிசமான காலத்தில் பருவக்காற்றுகளின் தாக்கத்திற்கு உள்ளாகிறது. இந்தியாவில் சூரயினின் செங்குத்துக் கதிர்கள் ஜுன் மாத மத்தியில் விழுகின்றபொழுதிலும் கோடைக்காலம் மே மாத இறுதியில் முடிவடைகிறது. ஏனெனில் தென்மேற்கு பருவக்காற்று தொடக்கத்தின் காரணமாக வெப்பநிலை குறைந்து இந்தியாவின் பல பகுதிகளுக்கு மிதமானது முதல் கனமழை வரை பொழிகிறது. இதேபோல் தென்கிழக்கு இந்தியாவின் காலநிலையும் வடகிழக்கு பருவக்காற்றின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.

> வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள வளிமண்டலத்தின் தன்மையைக் குறிப்பதாகும்.
>
> காலநிலை என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியின் சுமார் 30 – 35 ஆண்டு சராசரி வானிலையைக் குறிப்பதாகும்.

**நிலத்தோற்றம்**

- இந்தியாவின் நிலத்தோற்றம், காலநிலையின் முக்கிய கூறுகளான வெப்பநிலை, வளிமண்டல அழுத்தம், காற்றின் திசை மற்றும் மழையளவை பெருமளவில் பாதிக்கின்றது. இமயமலைகள் மத்திய ஆசியாவிலிருந்து வீசும் கடும் குளிர்க்காற்றை தடுத்து, இந்திய துணைக் கண்டத்தை வெப்பப் பகுதியாக வைத்திருக்கிறது. இதனால் குளிர் காலத்திலும் வடஇந்தியா வெப்ப மண்டல காலநிலையைக் கொண்டுள்ளது. தென்மேற்கு பருவக்காற்று காலங்களில் மேற்கு தொடர்ச்சி மலைகளின் மேற்கு சரிவுப்பகுதி கன மழையைப் பெறுகிறது. மாறாக மகாராஷ்டிரா, கர்நாடகா, தெலங்கானா, ஆந்திரப்பிரதேசம் மற்றும் தமிழ்நாட்டின் பெரும் பகுதிகள் மேற்கு தொடர்ச்சி மலைகளின் மலைமறைவுப் பகுதி அல்லது காற்று மோதாப்பக்கத்தில் அமைந்திருப்பதால் மிகக்குறைந்த அளவு மழையைப் பெறுகின்றன. இப்பருவத்தில் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ள மங்களூர் 280 செ.மீ மழைப்பொழிவையும், மலைமறைவுப் பகுதியில் அமைந்துள்ள பெங்களூரு 50 செ.மீ மழைப்பொழிவையும் பெறுகின்றன.

**ஜெட் காற்றோட்டங்கள்**

- வளிமண்டலத்தின் உயர் அடுக்குகளில் குறுகிய பகுதிகளில் வேகமாக நகரும் காற்றுகள் "ஜெட்காற்றுகள்" என்கிறோம். ஜெட் காற்றோட்ட கோட்பாட்டின் படி, உப அயன மேலை காற்றோட்டம் வடபெரும் சமவெளிகளிலிருந்து திபெத்திய பீடபூமியை நோக்கி இடம்பெயர்வதால் தென்மேற்கு பருவக்காற்று உருவாகின்றது. கீழை ஜெட் காற்றோட்டங்கள் தென்மேற்கு மற்றும் பின்னடையும் பருவக்காற்று காலங்களில் வெப்பமண்டல தாழ்வழுத்தங்களை உருவாக்குகின்றன.

**பருவக்காற்று**

- "மான்சூன்" என்ற சொல் "மௌசிம்" என்ற அரபு சொல்லிருந்து பெறப்பட்டது. இதன் பொருள் பருவகாலம் ஆகும். பருவ காலம் என்ற சொல் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரபு மாலுமிகளால் இந்தியப்பெருங்கடல் கடற்கரைப் பகுதகளில் குறிப்பாக அரபிக்கடலில் பருவங்களுக்கேற்ப மாறி வீசும் காற்றுகளை குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டது. இக்காற்று

கோடைக்காலத்தில் தென்மேற்கு திசையிலிருந்து வடகிழக்கு நோக்கியும், குளிர்காலத்தில் வடகிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு நோக்கியும் வீசுகிறது.

- பருவக்காலக் காற்றுகள் எளிதில் புரிந்துக்கொள்ள இயலாத ஒரு சிக்fyhd நிகழ்வு ஆகும். வானிலை வல்லுநர்கள் பருவக்கால தோற்றத்தைப் பற்றி பல கோட்பாடுகளை உருவாக்கியுள்ளனர்.

- இயங்கு கோட்பாட்டின்படி, சூரியனின் நிலைக்கு ஏற்ப பருவகால இடப்பெயர்வாகும். வளி அழுத்த மண்டலங்களால் பருவக்காற்றுகள் உருவாகின்றன. வடகோள உச்ச கோடையில் சூரியனின் செங்குத்துக்கதிர் கடக ரேகையின்மீது விழுகின்றது. இதனால் அனைத்து வளி அழுத்த மற்றும் காற்று மண்டலங்கள் வடக்கு நோக்கி இடம்பெயர்கின்றன. இச்சமயத்தில் இடை அயனக் குவி மண்டலமும் (ITCZ) வடக்கு நோக்கி நகர்வதால் இந்தியாவின் பெரும் பகுதி தென் கிழக்கு வியாபாரக் காற்றின் ஆதிக்கத்திற்கு உள்ளாகின்றன. இக்காற்று பூமத்திய ரேகையைக் கடக்கும் போது புவி சுழற்சியால் ஏற்படும் விசையின் காரணமாக வடகிழக்கு நோக்கி வீசுகிறது. இது தென்மேற்கிலிருந்து வீசுவதால் தென்மேற்கு பருவக்காற்றாக மாறுகிறது.

- குளிர்பருவத்தில் வளியழுத்த மற்றும் காற்று மண்டலங்கள் தெற்குநோக்கி நகர்வதன்மூலம் வடகிழக்கு பருவக்காற்று உருவாகின்றது. இவ்வாறு பருவங்களுக்கேற்றவாறு தங்களது திசைகளை மாற்றிக்கொண்டு வீசும் கோள் காற்றுகளைப் பருவக்காற்று என்கிறோம்

**பருவக்காலங்கள்**

- வானிலை நிபுணர்கள் இந்திய காலநிலையில் நான்கு பருவங்களை அடையாளம் கண்டுள்ளனர். அவை.

    1. குளிர்காலம்: ஜனவரி முதல் பிப்ரவரி வரை
    2. கோடைக்காலம்: மார்ச் முதல் மே வரை
    3. தென்மேற்கு பருவக்காற்று காலம் அல்லது மழைக்காலம்: ஜூன் முதல் செப்டம்பர் வரை
    4. வடகிழக்கு பருவக் காற்று காலம்: அக்டோபர் முதல் டிசம்பர் வரை

**1. குளிர்காலம் (அ) குளிர் பருவம்**

- இக்காலத்தில் சூரியனின் செங்குத்து கதிர்கள் இந்தியாவிலிருந்து வெகுதொலைவிலுள்ள மகரரேகையின் மீது செங்குத்தாக விழுகிறது. இதனால் இந்திய பகுதி சாய்வான சூரியக்கதிர்களைப் பெறுகிறது. இதுவே குறைந்த வெப்பத்திற்கு காரணமாக உள்ளது. தெளிவான வானம், சிறந்த வானிலை, மென்மையான வடக்கு காற்றுகள், குறைந்த ஈரப்பதம் மற்றும் மிகுந்த தினசரி பகல்நேர வெப்ப வேறுபாடுகள் ஆகியன இப்பருத்தின் குணாதிசயங்கள். இப்பருவத்தில் வட இந்தியாவில் ஓர் உயர் அழுத்தம் உருவாகி காற்று வடமேற்கிலிருந்து சிந்து-கங்கை பள்ளத்தாக்குகள் வழியாக வீசுகிறது. தென்னிந்தியாவில் காற்றின் திசையானது கிழக்கிலிருந்து மேற்காக உள்ளது. சராசரி வெப்ப நிலையானது வடக்கிலிருந்து தெற்கே அதிகரிக்கிறது. நாட்டின் வடமேற்கு பகுதியில் வடக்கு நோக்கி செல்லும்பொழுது வெப்பம் கணிசமாக குறைகிறது.

- ஒரு நாளின் குறைந்தபட்ச சராசரி வெப்பநிலையானது தென்னிந்தியாவில் $22^{o}C$ லிருந்து வடக்கு சமவெளிகளில் $10^{o}C$ ஆகவும் பஞ்சாப் சமவெளியில் $6^{o}C$ ஆகவும் உள்ளது மேற்கு இமயமலை, தமிழ்நாடு, கேரளா ஆகிய பகுதிகள் இப்பருவத்தில் மழையைப் பெறுகின்றன. இக்காலத்தில் மத்தியத் தரைக்கடல் பகுதியில் உருவாகும் மேற்கத்திய இடையூறுடன் தாழ்வழுத்தங்கள் வட இந்தியாவில் மழையைத் தருகின்றன. இக்காற்றை இந்தியாவிற்கு கொண்டுவருவதில் ஜெட் காற்றோட்டம் முக்கிய பங்கு வகிக்கிறது. இக்காற்றானது பஞ்சாப், ஹரியானா, இமாச்சலப் பிரதேசத்தில் மழைப் பொழிவையும், ஜம்மு காஷ்மீரின் மலைப் பகுதிகளில் பனிப் பொழிவையும் தருகிறது. இம்மழை குளிர்கால கோதுமை பயிரிடலுக்கு மிகவும் பயனளிக்கிறது.

**2. முன் பருவக்காற்றுக்காலம் அல்லது கோடைக்காலம்**

- இப்பருவத்தில் சூரியனின் செங்குத்துக் கதிர்கள் இந்திய தீபகற்பத்தின் மீது விழுகிறது. எனவே வெப்பநிலை தெற்கிலிருந்து வடக்கு நோக்கி அதிகரிக்கிறது. கோடைக்காலத்தின் முற்பகுதியில் நாடு முழுவதும் வெப்பமான வறண்ட வானிலை நிலவுகிறது. கோடைக் காலத்தின் மத்தியிலும், இறுதியிலும் நிலப்பகுதி இடியுடன் கூடிய ஆலங்கட்டி மழையின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறது.

- இப்பருவத்தில் இந்தியா முழுவதும் வெப்பம் அதிகரிக்கின்றது. ஏப்ரல் மாதத்தில் தென் இந்திய உட்பகுதிகளில் தின சராசரி வெப்பநிலை 30$^oC$ - 35$^oC$ ஆக பதிவாகிறது. மத்திய இந்திய நிலப்பகுதியின் பல பகுதிகளில் பகல் நேர உச்ச வெப்பநிலை 40$^oC$ ஆக உள்ளது. இப்பருவத்தில் குஜராத், வடக்கு மகராஷ்ட்டிரா, ராஜஸ்தான் மற்றும் வடக்கு மத்தியப்பிரதேசத்தில் பல இடங்கள் அதிக பகல் நேர வெப்பத்தையும், குறைந்த இரவு நேர வெப்பத்தையும் கொண்டுள்ளது.

- வளிமண்டல அழுத்த நிலையின் வேறுபாட்டால் அரபிக்கடல் மற்றும் வங்கக் கடல் பகுதிகளில் காற்றானது தென் மேற்கிலிருந்து வடகிழக்கு நோக்கி வீசுகிறது. இக்காற்றுகள் மே மாதத்தில் மேற்கு கடற்கரை பகுதிகளுக்கு முன் பருவகால மழையைத் தருகின்றன. ‘‘மாஞ்சாரல்’’ (Mango shower) என்ற இடியுடன் கூடிய மழையானது கேரளா மற்றும் கர்நாடக கடற்கரை பகுதிகளில் விளையும் ‘‘மாங்காய்கள்’’ விரைவில் முதிர்வதற்கு உதவுகிறது.

- ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் வடமேற்கு திசையிலிருந்து வீசும் தலக்காற்று நார்வெஸ்டர் அல்லது கால்பைசாகி என்று அழைக்கப்படுகிறது. இக்காற்று கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதிகளான பீகார், மேற்கு வங்கம் மற்றும் அசாம் மாநிலங்களுக்கு இடியுடன் கூடிய குறுகியக் கால மழையைத் தருகிறது.

**3. தென்மேற்கு பருவக்காற்றுக் காலம் அல்லது மழைக்காலம்**

- இந்திய காலநிலையின் முக்கிய அம்சமாக தென்மேற்கு பருவக்காற்று விளங்குகிறது.

- பருவக்காற்று பொதுவாக ஜுன் முதல் வாரத்தில் இந்தியாவின் தென் பகுதியில் தொடங்கி கொங்கணக் கடற்கரை பகுதிக்கு ஜுன் இரண்டாவது வாரத்திலும் ஜுலை 15-இல் அனைத்து இந்தியப் பகுதிகளுக்கும் முன்னேறுகிறது.

- உலகளாவிய காலநிலை நிகழ்வான ‘‘எல்நினோ’’ தென்மேற்கு பருவக்காற்றுக் காலத்தில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

- தென்மேற்கு பருவக்காற்று தொடங்குவதற்கு முன் வட இந்தியாவின் வெப்பநிலையானது 46$^oC$ வரை உயருகிறது. இப்பருவக்காற்றின் இடி மற்றும் மின்னலுடன் கூடிய துவக்கம் (தென் இந்தியாவில்) ‘பருவமழை வெடிப்பு’ எனப்படுகிறது. இது இந்தியாவின் வெப்பநிலையை பெருமளவில் குறைக்கிறது. இக்காற்று இந்தியாவின் தென் முனையை அடையும்பொழுது இரண்டு கிளைகளாகப் பிரிக்கிறது. இதன் ஒரு கிளை அரபிக்கடல் வழியாகவும் மற்றொரு கிளை வங்காள விரிகுடா வழியாகவும் வீசுகிறது.
- தென்மேற்கு பருவக்காற்றின் அரபிக்கடல் கிளை மேற்கு தொடர்ச்சி மலையின் மேற்குச் சரிவுகளில் மோதி பலத்த மழைப் பொழிவை தருகிறது. இக்கிளையானது வடக்கு நோக்கி நகர்ந்து இமயமலையால் தடுக்கப்பட்டு வட இந்தியா முழுவதும் கனமழையைத் தோற்றுவிக்கிறது. ஆரவல்லிமலைத் தொடர் இக்காற்று வீசும் திசைக்கு இணையாக அமைந்துள்ளதால் இராஜஸ்தான் மற்றும் வட இந்தியாவின் மேற்கு பகுதிக்கு மழைப்பொழிவை தருவதில்லை.

- வங்காள விரிகுடா கிளை, வடகிழக்கு இந்தியா மற்றும் மியான்மரை நோக்கி வீசுகிறது. இது காசி, காரோ, ஜெயந்தியா குன்றுகளால் தடுக்கப்பட்டு மேகாலயாவில் உள்ள மௌசின்ராமில் (mawsynram) மிக கனமழையைத் தருகிறது. பிறகு இக்காற்று கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகரும்போது மழைப் பொழிவின் அளவு குறைந்து கொண்டே செல்கிறது.

- இந்தியாவின் ஒட்டு மொத்த மழைப்பொழிவில் 75 சதவீத மழைப் பொழிவானது இப்பருவக்காற்று காலத்தில் கிடைக்கிறது. தமிழ்நாடு மலை மறைவுப் பகுதியில் அமைந்துள்ளதால் குறைவான மழையைப் பெறுகிறது.

**4. வடகிழக்கு பருவக்காற்றுக் காலம் அல்லது பின்னடையும் பருவக்காற்றுக் காலம்**

- செப்டம்பர் மாத் இறுதியில் அழுத்த மண்டலமானது புவியில் தெற்கு நோக்கி நகர ஆரம்பிப்பதால் தென்மேற்கு பருவக்காற்று பின்னடையும் பருவக்காற்றாக நிலப்பகுதியிலிருந்து வங்காளவிரிகுடா நோக்கி வீசுகிறது. பூமி சுழல்வதால் ஏற்படும் விசையின் (கொரியாலிஸ் விசை) காரணமாக காற்றின் திசை மாற்றப்பட்டு வடகிழக்கிலிருந்து வீசுகிறது. எனவே இக்காற்று வடகிழக்கு பருவக்காற்று என அழைக்கப்படுகிறது. இப்பருவக்காலம் இந்திய துணைக்கண்ட பகுதியில் வட கீழைக் காற்றுத் தொகுதி தோன்றுவதற்கு காரணமாக உள்ளது எனலாம்.

- இப்பருவகாற்றின் மூலம் கேரளா, ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் தென் கர்நாடகாவின் உட்பகுதிகள் நல்ல மழைப்பொழிவைப் பெறுகின்றன. இப்பகுதிகள் மொத்த மழைப்பொழிவில் சுமார் 35 சதவீதத்தைப் பெறுகின்றன. வங்கக்கடலில் உருவாகும் புயலால் தமிழ்நாடின் பல பகுதிகளும் ஆந்திரா மற்றும் கர்நாடகாவின் சில பகுதிகளும் மழையைப் பெறுகின்றன.

- கடற்கரைப் பிரதேசங்களில் கனமழையுடன் கூடிய பலத்த புயல் காற்று, பெரும் உயிர்சேதத்தையும், பொருட்சேதத்தையும் ஏற்படுத்துகிறது. இப்பருவத்தில் நாடு முழுவதும் பகல் நேர வெப்பநிலை வீழ்ச்சியடைகிறது. நாட்டின் வடமேற்கு பகுதியின் சராசரி வெப்ப நிலையானது அக்டோபர் மாதத்தில் $38^oC$-இல் இருந்து நவம்பர் மாதத்தில் $28^oC$ ஆக குறைகிறது.

**உயர் சிந்தனை**

- மௌசின்ராம் உலகிலேயே மிக அதிக மழைபெறும் பகுதியாக உள்ளது. ஏன்?

**மழைப் பரவல்**

- இந்தியாவில் ஆண்டு சராசரி மழையளவு 118 செ.மீ, இருப்பினும் நாட்டின் மழைவீழ்ச்சியின் பரவல் சீரற்று காணப்படுகிறது. 11 சதவீத பரப்பளவு 200 செ.மீட்டருக்கும், அதிகமான ஆண்டு மழைப் பொழிவையும், 21 சதவீத பரப்பு, 125-200 செ.மீ மழைப்பொழிவையும், 37 சதவீத நிலப்பரப்பு 75 – 125 செ.மீ மழை பொழிவையும், 24 சதவீத நிலப்பரப்பு 35-75 செ.மீ, மழை பொழிவையும், 7 சதவீத நிலப்பரப்பு 35 செ.மீட்டருக்கு குறைவான மழைப் பொழிவையும் பெறுகின்றன.

- மேற்கு கடற்கரை, அசாம், மேகாலயாவின் தென்பகுதி, திரிபுரா, நாகலாந்து, அருணாச்சலப்பிரதேசம் போன்ற பகுதிகள் 200 செ.மீட்டருக்கும் அதிகமான மழைப்பொழிவையும் பெறுகின்றன. ராஜஸ்தான் மாநிலம் முழுவதும், பஞ்சாப், ஹரியானா, உத்திரப்பிரதேச மாநிலத்தின் மேற்கு மற்றும் தென்மேற்கு பகுதிகள், மத்தியப் பிரதேசத்தின் மேற்கு பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்கு பகுதி மற்றும் தக்காணப் பீடபூமி பகுதி மற்றும் தமிழக கடற்கரையின் ஒரு குறுகியப்பகுதி போன்றவை 100 செ. மீட்டருக்கும் குறைவான மழைப்பொழிவைப் பெறுகின்றன. மற்ற பகுதிகள் 100 முதல் 200 செ.மீ வரையிலான மழைப்பொழிவைப் பெறுகின்றன.

**12th**

## Unit 7 - <u>பேணத் தகுந்த மேம்பாடு</u>

**அறிமுகம்:**

- கடந்த சில நூற்றாண்டுகளில் மனிதனின் வாழ்வு முறையில் தவீர மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. வேளான் வளர்ச்சி, தொழில்மயமாக்கல், நகரமயமாதல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் அதிவேக வளர்ச்சி மனிதனின் இறப்புவிகிதத்தைக் குறைத்து அதிவேக மக்கள் தொகைப் பொருக்கத்திற்கு காரணமாக அமைந்துள்ளது. மக்கள்தொகைப்பெருக்கம் அதிகரிக்க அதிகரிக்க இயற்கைவளங்களின் தேவை அதிகரித்து வளங்களை அளவுக்கு அதிகமாக பயன்படுத்தும் நிலை உருவாகியிருக்கிறது. வளங்கள் அபாய நிலையில் அழிந்துவருவதை உணர்த்தும் மற்றும் அதைத் தடுத்து எவ்வாறு பேணிக்காப்பது என்ற உண்மையை அறிந்து நாடுகள் விழித்து எழுந்திருக்கின்றன.

- இம்முயற்சி இவ்வுலகத்தை வளங்களின் நிலைத்தன்மையை நோக்கிக் கொண்டு செல்கிறது. இந்த நிலைத் தன்மையானது கலாச்சார உயர்ப்புத் தன்மை, ஆரேக்கியமான பொருளாதார நிலை, சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு மற்றும் சமத்துவ சமூகம் எனும் நான்கு தூண்களினால் ஊக்கப்படுத்தப்படுகிறது.

- தற்போது அனைத்து நாடுகளும் பேணத்தகுந்த மேம்பாட்டின் மீது கவனம் செலுத்துகின்றன.

**ஐக்கிய நாடுகள் சபையும் பேணத்தகுந்த மேம்பாடும்:**

- பேணத்தகுந்த மேம்பாடு என்ற கருத்து முதலில் 1872 ஆம் ஆண்டு ஜென் மாதம் 16ந் தேதி ஸ்டாக்ஹோமில் மனிதன் வாழும் சூழல் எனும் தலைப்பில் நடைபெற்ற ஐக்கியநாட்டுகள் சபை கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட கொள்கைகளில் வெளியிடப்பட்டது. வளர்ச்சி என்பது பேணத் தகுந்ததாக இருக்கவேண்டும் என தற்போது உணரப்பட்டுள்ளது. ஒரு நாட்டின் வளர்ச்சி என்பது பொருளாதாரம் மற்றும் சமூக வளர்ச்சியை மட்டும் சார்ந்ததல்ல மாறாக இயற்கை வளங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பதையும் சார்ந்தது. எனவே அவற்றிற்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். ஐக்கியநாடுகள் சபையானது சர்வதேச சமூகத்திற்கான நீண்டகால சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் உத்திகளைக் கண்டறிய வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் இருந்து 22 நபர்கள் கொண்ட குழுவை பணித்தது. இந்த சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக்கான உலக ஆணையம் (WCED) நார்வே நாட்டின் அப்போதைய பிரதமரான க்ரோ ஹார்லம் ப்ரண்ட்லண்ட் (Gro Harlem Brundland) தலைமையின் கீழ் செயல்பட்டது. இது ப்ரண்ட்லண்ட் ஆணையம் என்றும் அழைக்கப்பட்டது. இது தனது கண்டுபிடிப்புகளை நமது பொதுவான எதிர்காலம் (Our Common Future) என்ற தலைப்பின்கீழ் 1987ஆம் வருடம் ஐக்கியநாடுகள் சபைக்கு சமர்ப்பித்தது.

- **ப்ரண்ட்லண்ட் அறிக்கையானது** மனிதர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தது. இது இயற்கை வளங்களை மீண்டும் பகிர்ந்தளிப்பதன் மூலம் பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தி அனைவருக்கும் தங்கள் அடிப்படைத் தேவைகளை பெற ஊக்குவிக் வேண்டும் என்று எதிர்கால சந்ததியினருக்கான உலகளாவிய சமநிலை எனும் கருத்தை சார்ந்ததாகும். இந்த ஆணையம் பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான மூன்று முக்கிய கூறுகளை அடிக்கோடிட்டுக் காட்டியது. அவையாவன, சுற்றுச்சூழல், பொளாதாரம் மற்றும் சமூகம். பின்னர் இவை மூன்றடிக் கோவைகள் என அழைக்கப்பட்டன.

- 1992 மற்றும் 2002 இல் ரியோ டி ஜெனிரோயோ மற்றும் ஜோகன்னஸ்பெர்க்கில் நடைபெற்ற புவி உச்சி மாநாட்டில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சி குறித்த கருத்தரங்கு இந்த ப்ரண்ட்லண்ட் ஆணையத்தின் விளைவாக நடத்தப்பட்டதாகும். ரியோ உச்சி மாநாட்டின் முக்கிய சாதனையானது காலநிலை மாற்றம் பற்றிய மாநாடு க்யோட்டோ நெறிமுறை (Kyoto Protocol) ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தது. இதைப் பற்றி நீங்கள் ஏற்கனவே அறிந்து உள்ளீர்கள். ஒப்பந்தத்திற்கு வழிவகுத்தது. இதைப் பற்றி நீங்கள் ஏற்கனவே அறிந்து உள்ளீர்கள்.

- ஐக்கிய நாடுகள் சபை நடத்திய பேணத்தகுந்த மேம்பாடு கருத்தரங்கு, ரியோ 2012,ரியோ+20 அல்லது புவி உச்சி மாநாடு என்றும் அறியப்பட்டது. இது பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான மூன்றாவது மட்டும் சமீபத்திய கருத்தரங்கு ஆகும். இது ரியோடிஜெனிரோவில் 2012 ஜூன் 13 முதல் 22 வரை பிரேசில் அரசால் நடத்தப்பட்டது.

**பேணத்தகுந்த மேம்பாடு குறித்த கருத்தும் இலக்குகளும்:**

- இயற்கைப் பாதுகாப்பிற்கான சர்வதேச அமைப்பு 1980இல் பேணத்தகுந்த மேம்பாடு என்ற சொல்லை அறிமுகப்படுத்தியது. பேணத்தகுந்த மேம்பாடு என்பது எதிர்கால தலைமுறைகளின் தேவைகளுக்காக இருக்கும் வளங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தாமல் இப்போதைய தலைமுறையின் தேவையை பூர்த்திசெய்யும் வளர்ச்சியாகும்.

- பேணத்தகுந்த மேம்பாட்டின் முக்கிய நோக்கமானது நியாயமான மற்றும் சமமான முறையில் பொருளாதார நன்மையை தொடர்ந்து வளங்குவதும் ஆகும்.

**பேணத்தகுந்த மேம்பாடு இலக்குகள்:**

- ஐக்கியநாடுகள் சபையானது 1992ல் சுற்றுச்சூழல் மற்றும் வளர்ச்சிக் கருத்தரங்கில் ஒரு உலக உறுதிமொழிளை வெளியிட்டது. இதில் நியாயமான, நிலையான மற்றும் அமைதியான சமுதாயத்தை உலக அளவில் உருவாக்கவேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டது. இந்த செயல் திட்டமானது பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான "கோரிக்கை 21" என்ற பெயரில் வெளியிடப்பட்டது.

- செப்டம்பர் 2015-ல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுசபையானது "உலகளாவிய ஒருகிணைந்த மற்றும் மாற்றமுடைய பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான "நிகழ்வு 2030" என்ற கருத்தை முறையாக ஏற்றது. பேணத்தகுந்த மேம்பாட்டிற்கான 17 இலக்குகள் இதில் உள்ளன. இந்த இலக்குளானது ஒவ்வொரு நாட்டிலும் 2016 முதல் 2030க்குள் செயல்படுத்தப்பட வேண்டும் எனக் அறிவுறுத்தப்பட்டது.

- ஏழ்மையை ஒழிக்கவும், புவியைக் காக்கவும், எல்லோரும் வளம்பெறவும் பேணத்தகுந்த மேம்பாட்டின் ஒரு பகுதியாக உலக நாடுகள் இலக்குகளை ஏற்றுகொண்டன. ஒவ்வொரு இலக்கும் 15 வருடங்களுக்குள் பூர்த்தி செய்யபட வேண்டும். இந்த இலக்குக்ளை அடைய அரசாங்கங்கள், தனியார் துறைகள், சமூகம் மற்றும் மக்கள் என ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய பங்கை பொறுப்பாக செய்யவேண்டும்.

**இலக்கு 1: எல்லா இடங்களிலும் எல்லா வகையான வறுமையையும் ஒழித்தல்:**

- உலகில் ஐந்தில் ஒருவர் இன்றும் ஒரு நாளைக்கு 1.9 டாலருக்கும் குறைவான வருமானத்தில் வாழ்கிறார். பொருளாதார வளர்ச்சி என்பது நிலையான பணியைக் கொடுப்பதும் சமத்துவத்தை முன்னேற்றுவதும் ஆகும்.

**இலக்கு 2: பசியை ஒழிப்பது, உணவு பாதுகாப்பு மற்றும் மேம்பட்ட ஊட்டசத்தை பெறுவது மற்றும் நிலையான விவசாயத்தை மேம்படுத்துவது**

- மக்கள் சார்ந்த கிராமப்புறங்களின் வளர்ச்சிக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும் ஆதரவாக இருக்கும் அதேவேளையில் விவசாயம், காடுவளர்ப்பு மற்றும் மீன்பிடித்தல் ஆகியவை ஊட்டசத்துமிக்க உணவையும் ஒரு கண்ணியமான வருமானத்தையும் தரக்கூடியதாகும். இன்றைய உலகின் 815 மில்லியன் மக்களின் பசியையும் மேலும் 2050க்குள் வரவிருக்கும் கூடுதலான 2 கோடி மக்களின் பசியையும் போக்கவேண்டுமானால் உலக அளவிலான உணவு மற்றும் விவசாய முறைகளில் ஒரு ஆழ்ந்த மாற்றம் தேவைப்படுகிறது.

**இலக்கு 3: ஆரோக்கியமான வாழ்வை உறுதி செய்தல் மற்றும் எல்லாவயதிலும் அவர்களின் நலநன மேம்படுத்துதல்**

- மனிதர்களின் ஆயுட்காலம் நீடித்தல், குழந்தைகள் மற்றும் பிரசவ காலத்தில் ஏற்படும் பொதுவான நோய்கள் மற்றும் இறப்பு விகிதத்தைக் குிறத்தலில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சுத்த நீர் மற்றும் சுகாதாரம் கிடைப்பதிலும் மலேரியா, காசநோய், இனம்பிள்ளைவாதம் மற்றும் எச்ஐ.வி/எயிட்ஸ் பரவுதல் போன்றவற்றை குறைப்பதிலும் ஒரு பெரிய முன்னேற்றமும் ஏற்பட்டுள்ளது.

**இலக்கு 4: எல்லாம் உள்ளடங்கிய தரமான கல்வியை எல்லோருக்கும் அளிப்பதை உறுதிப்படுத்தல் மற்றும் வாழ்நாள் முழுவதும் கல்வியை ஊக்குவித்தல்**

- எல்லா நிலைகளிலும் கல்வி எல்லோருக்கும் அளித்தல் என்பதில் ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றம் நிகழ்ந்துள்ளது. மேலும் பள்ளிகளில் சேர்க்கை குறிப்பாக பெண் குழந்தைகளின் சேர்க்கை எண்ணிக்கை அதிகரித்துள்ளது. எடுத்துக்காட்டாக, உலக அளவில் தொடக்க கல்வியில் எல்லா நாடுகளும் ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்வி சமமாக அளிக்கப்பட்டுள்ளன. சில நாடுகள் எல்லா நிலைகளிலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம கல்வி வழங்குகின்றன.

**இலக்கு 5: பாலின சமத்துவம் அடைதல் முக்கியமாக பெண்கள் மற்றும் பெண் குழந்தைகளின் அதிகாரத்தை அதிகப்படுத்துதல்**

- பாலின சமத்துவம் என்பது மனிதனின் அடிப்படை உரிமை மட்டும் அல்ல சமாதானமான வளமான மற்றும் நிலையான ஒரு உலகிற்கு ஒரு அத்தியாவசிய அடிப்படை ஆகும்.

**இலக்கு 6: எல்லோருக்கும் நீர் மற்றும் சுகாதார வாழ்வை உறுதிப்படுத்தல்**

- நாம் வாழ நினைக்கும் உலகில சுத்தமான எளிதில் கிடைக்கக்கூடிய அளவில் நீர் இருப்பது அவசியம் ஆகும். இதை நிறைவேற்றுவதற்கு புவியில் தேவையான அளவு நீர் உள்ளது. ஆனால் மோசமான பொருளாதாரம் சரியில்லாத உள்கட்டமைப்புக் காரணமாக ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கானோர் அதிலும் அதிக எண்ணிக்கையில் குழந்தைகள் நீர், சுகாதாரம் மற்றும் சுத்தம் தொடர்பான நோய்களால் இருக்கின்றனர். நான்கில் ஒருவர் 2050 க்குள் தொடர்ச்சியான சுத்த நீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படும் நாட்டில் வாழ்வர்.

**இலக்கு 7: எளிதில் கிடைக்கக்கூடிய, நம்பத் தகுந்த நிலையான மற்றும் நவீன ஆற்றல் அனைவருக்கும் கிடைப்படை உறுதிசெய்தல்**

- ஆற்றல்தான் இன்றைய உலகில் நாம் உதிர்நோக்கும் பெரிய சவால்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு முக்கிய மையமாக உள்ளது. பேணத்தகுந்த ஆற்றல் மக்களின் வாழ்வு, பொளாதாரம் மற்றும் புவியை மாற்றியமைப்பதற்கு கிடைத்த ஒரு மிகப்பெரிய வாய்ப்பாகும்.

**இலக்கு 8: நிலையான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் எல்லோருக்கும் கண்ணியமான வேலைவாயப்பு போன்றவற்றை மேம்படுத்துவது.**

- நிலையான பொளாதார வளர்ச்சிக்கு நல்ல தரமான வேலைவாய்ப்புகளைத் தந்து அதன் மூலம் நாட்டின்ட பொருளாதாரத்தை மேம்படுத்தி அதேவேளையில் நாட்டின் சுற்றுச்சூழக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாத ஒரு சமுதாயம் தேவை - வேலை செய்யும் வயதில் இருக்கும் அனைவருக்கும் வேலைவாய்ப்புகளும் கண்ணியமான பணிச்சூழல்களும் தேவை.

**இலக்கு 9: மீள்திறன்மிக்க கட்டமைப்புகளை உருவாக்குதல், நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கத்தை ஏற்றுக்கொள்ளல்:**

- நிலையான தொழில் வளர்ச்சியே ஒரு நாட்டின் வருமானத்திற்கு முக்கிய உற்பத்திக் காரணியாகவும் மற்றும் வேகமான, நிலையான வாழ்க்கை தரத்தை உயர்த்தவதும், சுற்றுச்சூழலுக்கும் தொழில்மயமாக்கலுக்கும் ஏற்ற தொழில்நுட்பத் தீர்வு கொடுப்பதும் ஆகும்.

**இலக்கு 10: தேசங்களுக்குள் மற்றும் தேசங்களுக்கு இடையேயான சமநிலையற்ற தன்மையை நீக்குதல்.**

- சமநிலை அற்ற தன்மையை குறைக்க வேண்டுமானால் ஒதுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள்மீது கவனம் செலுத்தும் வகையில் கொள்கைகள் இயற்றப்பட்டு அவை உலக அளவில் பொது நெறிமுறைகளாக ஏற்கப்படவேண்டும்.

**இலக்கு 11: நகரங்கள் பாதுகாப்பானதாக, நம்பத்தகுந்ததாக மற்றும் நிலைப்புத்தன்மை கொண்டதாக ஆக்குவது.**

- நகரங்களானது கருத்துக்கள், வணிகம், கலாச்சாரம், அறிவியல், உற்பத்தி, சமூகவளர்ச்சி மேலும் பல செயல்களின் மையமாக திகழ்கிறது. நகரங்களானது மக்கள் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் காண வழி வகுக்கின்றன. கூட்ட நெரிசல், அடிப்படை சேவைகளுக்கு போதாத நிதி, போதுமான அளவு வீடுகள் இல்லா நிலைமை மற்றும் அழியும் நிலையில் உள்ள கட்டமைப்பு போன்றவை நகரங்களுக்கே உரிய சவார்களாகும்.

**இலக்கு 12: நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தியை உறுதிசெய்தல்:**

- நிலையான நுகர்வு மற்றும் உற்பத்தி என்பது உற்பத்தி வளங்களை ஊக்குவித்தல் மற்றும் போதுமான ஆற்றல், திறன், நிலையான கட்டமைப்பு. அடிப்படை சேவைகள், கண்ணியமான பணிகளைப் பெறுதல் மேலும் எல்லோருக்கும் மேம்படி வாழ்க்கை நிலையைத் தருதல் போன்றவற்றை அடைய வழிவகுத்தல் ஆகும். இந்த இலக்கை நாம் நிறைவேற்றும் போது இது ஒட்டுமொத்த வளர்ச்சித்திட்டங்களையும் நிறைவேற்ற உதவிபுரிகிறது. எதிர்கால பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமுகத்திற்கான செலவினங்களைக் குறைக்கவும் பொருளாதாரப் போட்டிகளை வலிமையாக்கவும் ஏழ்மையைக் குறைக்கவும் உதவிபுரிகிறது.

**இலக்கு 14: பெருங்கடல், கடல் மற்றும் கடற்கார் வளங்களைப் பாதுகாத்து நிலையாக உபயோகித்தல்:**

- உலகின் பெருங்கடல்கள் - அவற்றின் வெப்பநிலை, நீரோட்டங்கள் மற்றும் அதில் வாழும் உயிர்கள் ஆகியவை புவியை மனிதனின் வாழிடமாக உருவாக்கும் ஒரு உலகளாவிய அமைப்பாக இயங்குகின்றன. இந்த உலகளாவிய வளங்களை மிகவும் கவனமாக கையாளுதல் என்பது பேணத்தகுந்த எதிர்காலத்திற்கு ஒரு சிறந்த வழியாகும்.

**இலக்கு 15: நிலையாக காடுகளை மேலாண்மை செய்தல், பாலைவனமாகாமல் தடுத்தல் நில அழிவை தடுத்து மறுபடியும் செழிப்புற செய்தல் உயிரினப்பன்மை அழிவதைத் தடுத்தல்.**

- புவியின் நிலப்பரப்பில் காடுகள் 30% காணப்படுகின்றன. காடுகள் உணவு மற்றும் உறைவிடம் தருவது மட்டுமல்லாமல் காலநிலை மாற்றத்தைத் தடுப்பதிலும், உயிரினப்பன்மையை பேணுவதிலும் உள்நாட்டு உயிரினங்களுக்கு ஒரு வாழிடமாகவும் விளங்குகிறது. பதிமூன்று மில்லியன் ஹெக்டேர் காடுகள் ஒவ்வொரு வருடமும் அழிக்கப்படுகின்றன. அதேவேளையில் தொடர்ச்சியாக அழிந்துவரும் 3.6 பில்லியன் ஹெக்டேர் வறண்ட நிலங்கள் பாலைவனமாகிறது.

**இலக்கு 16: நியாயமான மற்றும் சமாதானமான உள்ளடங்கிய சமுதாயத்தை உருவாக்குதல்**

- சமாதானமான சமுதாயத்தை உருவாக்க ஊக்குவிக்க, எல்லோருக்கும் நியாயம் எளிதில் கிடைக்க, திறமையான பொறுப்பான நிறுவனங்களை எல்லா நிலைகளிலும் உருவாக்க இந்த இலக்கு அர்பணிக்கப்படுகிறது.

**இலக்கு 17: பேணத்தகுந்த மேம்பாட்டிற்காக உலகளாவிய நட்புணர்வை நிலையான வளர்ச்சிக்காக மறுபடியும் உயிர்ப்பித்தல்**

- பேணத்தகுந்த மேம்பாட்டின் வெற்றி என்பது அராசாங்கங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் மக்கள் சமுதாயம் இவற்றிற்கு இடையேயான கூட்டாண்மையில் உள்ளது. இந்த கூட்டானது கொள்கைகள், தார்மீக மதிப்புகள், பங்கிட்ட காட்சிகள் மற்றும் மக்களையும் புவியையும்

மையமாக கொண்ட இணைந்த இலக்குகளை காட்டுவதாக இருக்கவேண்டும். இவை உலகளாவிய அளவில், பிராந்திய, தேசிய மற்றும் உள்ளூர் அளவில் தேவை.

காலநிலை மாற்றத்தை பேரிட பங்கேற்ற நாடுகள் COP21ல் பாரிஸில் 2015 டிசம்பர் 12ல் நடைபெற்ற "பாரிஸ் உடன்பாட்டை" ஏற்றன். இந்த உடன்பாடு நவம்பர் மாதம் 4 ஆம் நாள் 2016ல் நடைமுறைக்கு வந்தது. இந்த உடன்பாட்டின்படி எல்லா நாடுகளும் உலக வெப்பமயமாதலை 2 டிகிரி செல்சியஸ் அளவுக்கு குறைக்க முடிவு செய்தனர். தற்போது உள்ள மிக மோசமான நிலையை மனதில் கொண்டு 1.5டிகிரி செல்சியஸ் வரையாவது குறைக்கவேண்டும் என உறுதி கொண்டனர்.

### காலநிலை மாற்றமும் பேணத் தகுந்த மேம்பாடு:

- வரலாற்றின் தொடக்கத்திலிருந்து பார்ப்போமானால் புவியின் காலநிலை மாறிக்கொண்டே வந்துள்ளது. கடந்த 650,000 வருடங்களில் பனியுகமும் வெப்பயுகமும் லட்சக்கணக்கான ஆண்டுகளாக மாறிமாறி இருந்துள்ளது. இந்த காலநிலை மாறுபாட்டிற்கு முக்கிய காரணம் புவியின் சுழற்சியில் ஏற்படும் சிறு மாற்றமும் அதனால் நமது புவிக்கோளத்திற்கு கிடைக்கும் சூரிய வெப்பம் மற்றும் ஒளியில் ஏற்படும் மாற்றமுமே ஆகும். தற்போது நம் புவியின் காலநிலையானது வெப்பமடைந்து வருகிறது. அது"புவிவெப்பமடைதல்" என்று குறிக்கப்படுகிறது. கடந்த 100வருடங்களில் புவியின் வெப்பநிலையானது $100^0$ ∴பாரன்ஹீட் அதிகரித்துள்ளது. இது ஒரு சிறு மாற்றம்தான் ஆனால் புவியில் ஏற்படக்கூடிய மிகச்சிறிய மாற்றமும் மிகப்பெரிய காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். உருகும் பனியாறு, கடல் நீர் மட்டம் உயர்வு, நீண்டகால பஞ்சம், அதிக மழை மற்றும் வெள்ளம் போன்ற மாற்றங்கள் ஏற்பனவே நடைபெற ஆரம்பித்துவிட்டது.

### காலநிலை மாற்றத்திற்கான காரணங்கள்:

- புதைவடிவ எரிபொருள்களை எரிக்கும்போது வாயுக்கள் வளிமண்டலத்திற்கு செல்கின்றன. ஆற்றவுக்காக எரிக்கப்படும் புதைபடிவ எரிபொருள்கள் போக்குவரத்து வாகனங்களால் ஏற்படும் பாதிப்பு மற்றும் காடுகளை அழித்தலோடு இணைந்து புவி வெப்பமயமாதலுக்கு காரணமாகிறது. இது ஒரு இடத்தின் காலநிலையை மாற்றக்கூடும்.

### காலநிலை மாற்றத்தின் விளைவுகள்:

- விஞ்ஞானிகளால் கடந்த காலத்தில் முன்னறிவிப்புசெய்யப்பட்ட கடலில் மிதக்கும் பனிக்கட்டிகள் உருகுதல், கடல் நீர்மட்ட உயர்வு மற்றும் கடுமையான வெப்ப அலைகள் போன்ற பின்விளைவுகள் இன்று உலக அளவில் நடைபெறுகின்றன.

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றத்திற்கான வரையறை மாநாடு (UNFCCC) 2017ஆம் ஆண்டு. மே 17ந்தேதி நடைபெற்றது. இதில் பேணத்தகுந்த மேம்பாட்டோடு காலநிலை மாற்றம் மற்றும் பேரழிவு அபாய குறைப்பிற்கான செண்டாய் வரையறை ஆகியவற்றை ஒருங்கிணைப்பதைக் குறித்து விவாதிக்கப்பட்டது.

1. **வெப்ப நிலை தொடர்ந்து உயரும்:** பசுமை இல்ல வாயுக்கள் வெப்பத்தை உள்ளழுத்து அது வளிமண்டலத்திற்கு செல்லவிடாமல் தக்கவைத்து புவியின் வெப்பநிலை உயர்வுக்குக் காரணமாக இருக்கிறது என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

2. **உறைபனி அற்ற நிலை (வளரும்நிலை) நீளும்**: இது வளரும் பயிர்கள் மீது தீய விளைவுகளை ஏற்படுத்தும். வெப்பமான சூழல் பூச்சிகள் அதிக நாட்கள் உயிரோடு இருக்க உதவும். இது பயிர்களின் அழிவுக்கு வழிவகுக்கும். அதிகரிக்கும் வெப்பநிலை வேளாண்மையில் அதிக உற்பத்தி செய்கின்ற மற்றும் நன்கு பயிர் விளைகின்ற நிலங்களில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும்.

3. **மழை காலங்களில் ஒரு மாற்றம்:**ஈர மாற்றம் வறண்ட நிலத்திற்கான மாறுபடு அதிகரிக்கும். அதாவதுஈரநிலங்கள் மேலும் ஈரமாகும். வறண்ட நிலங்கள் மேலும் ஈரமாகும் வறண்ட நிலங்கள் மேலும் வறண்டு போகும்.

4. **அதிக வறட்சி மற்றும் வெப்ப அலைகள்:** உயரும் வெப்பநிலை மற்றும் மாறும் மழை அளவால் வறட்சி மற்றும் வெப்ப அலைகள் அதிகரிக்கின்றன.

5. **கடல்நீர் மட்டம் உயருதல்:** உலக அளவில் கடல் நீர் மட்டமானது 1900 களிலிருந்து குறைந்தது ஆண்டுக்கு 0.1லிருந்து 0.25 செ.மீ உயரம் வரை உயருகிறது என்று வஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

6. **ஆர்டிக் துருவமானது பனியற்ற நிலைக்கு செல்லக்கூடும்:** இன்னும் அரை நூற்றாண்டின் இடையில் ஆர்டிக் துருவமானது கோடைகாலத்தில் முழுவதுமாக உருகக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளல்:**

- காலநிலை மாற்றத்தை இருவகைகளில் எதிர்கொள்ளலாம். அவையாவன,

1. **மீட்சித்திறன்:** இது காலநிலை மாற்றத்திற்குக் காரணமான பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைப்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

2. தழுவல்: காலநிலை மாற்றத்தின் விளைவாக ஏற்படும் பாதிப்புகளை எவ்வாறு குறைப்பது என்பதைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இவ்விரு அணுகுமுறைகளும் ஏற்பனவே நடந்துகொண்டிருக்கிற உலகளாவிய மாற்றங்களை எவ்வாறு எதிர்கொள்ளவது என்பதில் முக்கியப் பங்குவகிக்கின்றன.

**மீட்சித்திறன் செயல்பாடுகள்:**

- காலம் கடந்து போவதற்கு முன் காலநிலை மாற்றத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து இப்போதே அவற்றை நடைமுறைபடுத்த தொடங்க வேண்டும்.

1. **மாசில்லா மற்றும் ஆற்றல் மூலங்கள்:** புதைபடிவ எரிபொருட்கள் சார்ந்திருப்பதைக் குறைத்துக்கொண்டு புதுப்பிக்கத்தக்க மற்றும் பசுமை ஆற்றல், நீர் அல்லது புனல்மின் ஆற்றல், மீத்தேன் வாயு அல்லது மாட்டுச் சானவாயு, மற்றும் புவி வெப்ப ஆற்றல்களைச் சார்ந்து இருப்பதே காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள ஒரு முக்கிய வழி முறையாகும்.

2. **ஆற்றலை சேமிக்க சில குறிப்புகள்:** விலை கூடிய ஆற்றல் சேமிக்கும் மின்கருவிகளாகிய CFL பல்புகள், குறிர்சாதனப்பெட்டி, காற்றுபதனி (Air Condition) முதலியவற்றை உபயோகிப்பதைக் குறைக்கவேண்டும். பயன்பாட்டில் இல்லாதபோது மின்சாதனங்களை நிறுத்தி வைப்பது அவசியமாகும்.

3. **வாகனம் ஓட்ட பசுமைக் குறிப்புகள்:** நச்சுப் புகை வளிமண்டலத்தில் கலக்காமல் இருக்க வாகனங்களின் உபயோகத்தைக் குறைத்தலே சிறந்த உத்தியாகும். பொது வாகனங்களை உபயோகத்தில், ஒரு மகிழுந்தில் சேர்ந்து பணிக்குச் செல்லுதல் (Car pooling) மின்சாரத்தில் இயங்கும் கார்கள் அல்லது இரண்டு சக்கர வாகனங்களை உபயோகித்தல் போன்றவை ஒரு சிற்நத மாற்று உத்தியாகும்.

4. **குறைத்தல் - மீண்டும் பயன்படுத்துதல் - மறு சுழற்சி முறைகள்:** குறைத்தல் - மீண்டும் பயன்படுத்துதல் - மறுசுழற்சி முறைகள் நமது வளங்களையும் ஆற்றலையும் பேணிப்பாதுகாக்க உதவுகிறது. இது மாசுபாட்டைக் குறைத்த அதன் மூலம் பசுமை இல்ல வாயுக்களைக் குறைக்கிறது.

5. **காடுகளை மீண்டும் வளர்த்தல்:** கார்பன்-டை-ஆக்ஸைடை வளிமணடலத்திலிருந்து நீக்கும் மிகவும் சுத்தமான மற்றும் வலிமையான ஒரு காரணி பசுமையான மரங்களாகும். நாம் மரங்களையும் காடுகளையும் மனிதனின் நவீன வளர்ச்சிக்காக அழித்ததன் விளைவாக கார்பன்-டை-ஆக்ஸைடை வளிமண்டலத்தில் இருந்து நீக்கும் புவியின் திறன் அதிக அளவு குறைந்து விட்டது.

6. **இயற்கை வேளாண்மை:** வளிமண்டல கார்பன்டைஆக்ஸைடின் ஒரு முக்கிய தேக்கமாக மண் காணப்படுகிறது. பாரம்பரிய விவசாயத்திற்காக காடுகள் அழிக்கப்பட்டதால் இந்த தேக்கத்தை அதிக அளவில் அழித்துகொண்டிருக்கிறது. ஆனால் பேணத்தகுந்த மற்றும் இயற்கை வேளாண்மையானது மண்ணின் இயற்கைத் தாதுக்களை தக்கவைத்துக் கொள்வதன் மூலமும் மண்ணரிப்பைக் குறைப்பதன் மூலமும் மற்றும் மண்ணின் இயற்கையமைப்பை மேம்படுத்துவதன் மூலமும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ள உதவுகிறது. இயற்கை வேளாண்மை இயற்கை உரங்களை பயன்படுத்தி சரியான மகசூல் பெற உதவுகிறது.

**வடிகால் நீர் மேலாண்மை மற்றும் அதன் முக்கியத்துவம்:**

- வடிகால் நீர் அல்லது வடி நிலம் என்பது ஒரு நதி வழிந்தோடும் புவிப்பகுதியாகும். அதில் நதி நீர் ஒரு இடத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஒரு பொதுவான வடிகாலை நோக்கி வழிந்து ஓடுகிறது.

- நீர் மேலாண்மை என்பது தகுந்த உற்பத்தியைப் பெற நிலம் மற்றும் நீர் வளங்கைள சரியாக மேலாண்மை செய்வதாகும். மேலும் இதனால் இயற்கை வளங்கள் குறைவான அளிவிலேயே பாதிக்கப்படுகிறது.

- வடிகால் நீர் மேலாண்மை என்பது மண் மற்றும் நீரைப் பேணிப் பாதுகாத்தல், தகுந்த முறையில் நிலத்தைப் பேணுதல், காடுகளை பராமரித்தலை ஊக்குவித்தல் மேலும் பேணத்தகுந்த வேளாண்ம முறைகளைப் பயிற்சி செய்தல், விளைநிலங்கள் மற்றும் மேய்ச்சல் நிலங்களைப் பேணிப் பாதுகாத்தல், மண்வளத்தை பாதுகாத்தல், வேளாண்மைக்கான உள் நாட்டு நீரை சரியாக மேலாண்மை செய்தல், வடிகால், வெள்ளப்பெருக்கைக் கட்டுபடுத்த சிறு அணைகளை கட்டுதல், மற்றும் தனி மனிதனின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் அதன் மூலம் சுற்றுச்சூழல் சமநிலையை மேம்படுத்துதல் ஆகியவற்றோடு தொடர்புடையதாகும்.

**வடிகால் நீர் மேலாண்மையின் முக்கிய படிநிலைகள்:**

- வடிநில திட்டமானது வடிநிலத்தின் தன்மையை கண்டறிவதும் அந்த நிலத்திற்காக நீர் மூலங்களின் இருப்பை குறிப்பு எடுப்பதும் ஆகும். வடிநிலை மேலாண்மைத்திட்டதின் படிகளாவன:-

  1. வடிநிலத்தின் எல்லை மற்றும் வடிநிலத்தில் காணப்படும் சிறிய வடிநிலங்களையும் விளக்கி ஒருவரை படம் வரைந்து கொள்ளுதல்.

  2. வடிநிலத்தில் உள்ள நீர் ஆதாரங்களை வரைபடமாக வரைந்து அவற்றினை குறிப்பு எடுத்துக்கொள்ளல்.

  3. வடிநிலத்தில் காணப்படும் இயற்கையான மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட வடிநிலங்கைள குறிப்பு எடுத்து நிலவரைபடம் வரைக.

  4. நிலப்பயன்பாடு மற்றும் நிலப்பரப்பை குறிப்பு எடுத்து நிலவரைபடம் வரைக.

  5. வடிநிலத்தின் நிலவரைபடத்தைத் தயார் செய்க.

  6. நதியின் கரை மற்றும் கட்டுமான தலம் உட்பட மண் அரிக்கப்பட்ட நிலத்தை அமையாளம் காணுதல்.

  7. வடிநிலத்தில் உள்ள நீரின் தன்மையை அடையாளம் கண்டு அதை அடிப்டையாக வைத்துக்கொள்ளல்.

**இந்தியாவில் வடிநில மேலாண்மை:**

- நமது நாட்டில் வடிநில மேலாண்மைத் திட்டமானது இந்திய அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்டு 1970களின் தொடக்கத்திலிருந்து செயல்படுத்தப்படுகிறது. பலவகை மேம்பாட்டுத் திட்டங்களாகிய

"வறட்சி பாதிப்புக்குள்ளாகும் இடங்களுக்கான திட்டம்" (DPAP),"பாலை நில மேம்பாட்டு திட்டம்" (RVP),"மழைபெறும் நிலங்களுக்கான தேசிய வடிநில மேம்பாட்டுத் திட்டம்"(NWDPRA) மற்றும் "ஒருங்கிணைக்கப்பட்ட தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்" (IWDP) ஆகிய திட்டங்கள் பல்வேறுபட்ட நீர்பிடிப்பு சூழலில் ஆரம்பிக்கப்பட்டது. 1980 மற்றும் அதற்கு முன்பான வடிநில மேம்பாட்டு திட்டங்கள் அனைத்தும் மண்வளம் பேணிபாதுகாத்தல் மற்றும் மழைநீர் சேமிப்புத்திட்டங்களையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்டது.

**மழைநீர்சேமிப்பு:**

- உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் தங்களது அன்றாட வீட்டுத்தேவைகளுக்கு சுத்தமான நீரின்றி இருக்கின்றனர். பல இடங்களில் நாம் பொதுவாக உபயோகிக்கும் குடிநீர் குழாய் காணப்படுவதில்லை அல்லது நம்பகத் தன்மை இல்லாமை அல்லது அதை செயல்முறைபடுத்துவது விலை கூடியதாக உள்ளது. அதிகரிக்கும் நீர்பற்றாக்குறையே 21ஆம் நூற்றாண்டின் மிகப்பெரிய சவாலாகும். ஆகவே மழை நீர் சேகரிப்பு ஒரு மதிப்புமிக்க வளமாக முக்கியத்துவம் பெறுகிறது. மழைநீர் சேகரிப்பை மக்கள் பின்பற்ற ஆரம்பித்தல் இந்த நீர்பற்றாக்குறையை நாம் சமாளிக்க முடியும்.

**மழைநீர் சேமிப்பின் அவசியம்:**

1. நீர் அளிப்புப் பற்றாக்குறையை வெல்வது.
2. நீர் பற்றாக்குறையை சமாளிக்க நிலத்தடி நீரை அதிகரிக்க மிகச்சிறந்த மற்றும் மிகச் சிக்கனமான வழி.
3. நகரப்பகுதியில் காணப்படும் நடைபாதை பகுதியை மண்ணால் நிரப்புவது.
4. அதிக மழை பெறும் பகுதிகள் அல்லது அதிகமாக நீர் தேங்கும் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர அதை நீரால் நிரப்புதல்.
5. நீர் பெருக்குதல் மூலமாக நிலத்தடிநீரின் தன்மையை மேம்படுத்துதல்.
6. பசுமைபூங்கா, பண்ணை மற்றும் தோட்டத்திற்கு நீர்பாசனம் செய்ய நீர் பெறுவது.

**மழைநீர் சேமிப்பு நுட்பங்கள்:**

- மழைநீர் சேமிப்பில் ஒரு முக்கிய நுட்பங்கள் உள்ளன.

1. நில மேற்பரப்பில் நீரை எதிர்காலத்திற்காக சேமித்தல்.
2. நிலத்தடி நீர் வளம் புதுபித்தல்.

- நிலத்தின் மேற்பரப்பில் மழைநீரை சேமிப்பது நிலத்தடி தொட்டிகள், குளங்கள், குறுக்கு அணைகள், தடுப்பு அணைகள் போன்றவற்றை பயன்படுத்தும் ஒரு பாரம்பரிய முறையாகும். நிலத்தடி நீரை நிரப்புதல் தற்போதைய மழைநீர் சேமிப்பின் புதிய திட்டமாகும். இது பொதுவாக கூழாங்கல், பாறாங்கல் மற்றும் மணலால் நிரப்பப்பட்ட குழிகள், கிணறுகள், அகழி முதலிய அமைப்பைக் கொண்டதாகும்.

**சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிடல்:**

- ஒவ்வொரு நாடும் முன்னேற முயற்சி செய்கிறது. முன்னேற்றத்தனி ஒரு முக்கிய அம்சம் உற்பத்தி மற்றும் வியாபாரம் மூலம் பொருளாதாரத்தை முன்னேற்றுதல் ஆகும். ஒவ்வொரு நாடும் தொழிற்சாலைகளை அமைக்கிறது. அவை மனிதர்களுக்கு வேலைவாய்ப்பையும், நுகர்வோரின் தேவைகளையும் பூர்த்தி செய்கிறது. மேலும் நாட்டுக்கு வருவாயையும் தருகிறது. சமீபகாலங்களாக மனிதர்களின் முன்னேற்ற வழிகளின் மேலாதிகடகம் உலகின் அமைப்பில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. நாம் ஏற்கனவே நமது ஆரோக்கியம், வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பில் இதன் தாக்கத்தை உணர ஆரம்பித்துள்ளோம். மற்றொரு பக்கம் முன்னேற்றத்தின் பலன்களும் சமமாக பங்கிடப்படவில்லை. பல நாடுகள் தங்களுடைய

அடிப்படை தேவைகளைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கும் வேளையில் சிலநாடுகள் உயர்ந்த வாழ்கைத் தரத்தைக் கொண்டுள்ளன.

- கடந்த கால முன்னேற்ற திட்டங்கள் எல்லாம் அவற்றால் சுற்றுச்சூழக்கு ஏற்படும் பின்விளைவுகளை பற்றி கருத்தில் கொள்ளாமல் நடைமுறை படுத்தப்பட்டவைகளாகும். அதன்விளைவாக ஆறுகளும் ஏரிகளும் மாசடைந்தன, வாயுமண்டலம் அச்சுறுத்தும் நிலையை அமைந்துள்ளது. குவியும் வீட்டு மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் நிலத்தை அதிகமாக சீரழித்து விட்டது. தொழில்மயமாக்கல் மற்றும் பொருளாதார வளர்ச்சி நமக்கு நவீன சாதனங்கள் மூலம் கிடைக்கும் சுகத்தை தந்தது ஆனால் மக்களின் வாழ்க்கைதரத்தை முற்றிலும் அழித்துவிட்டது.

**சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிடலின் நோக்கங்கள்:**

1. பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயத்தின் மீது தாக்கம் ஏற்படுத்தக்கூடிய முன்னேற்ற செயல்பாடுகளை அடையாளம் கண்டு முன்னறிவித்து மற்றும் அதை மதிப்பிடல்.
2. சுற்றுச்சூழலின் பின்விளைவுகள் குறித்த முடிவுகளை எடுப்பதற்கு தகவல்களை வழங்குதல்.
3. மற்றும் சரியான மாற்று நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை அடையாளம் காணுதல் மூலம் பேணத்தகுந்த மேம்பாட்டை ஊக்கப்படுத்துதல்.

**சுற்றுச்சூழல் தாக்கத்தினை மதிப்பிடும் செயல்முறைகளின் படிநிலைகள்:**

சுற்றுச்சூழல் தாக்கத்தைமதிப்பிடும் எட்டு படிநிலைகள்:

1. **பாதிப்பு குறித்து ஆய்வு:** முதலாவதாக முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீடு தேவையா, தேவையென்றால் எந்த நிலையில் தேவை என்பதாகும்.
2. **நோக்கம்:** முக்கிய தாக்கங்களை விளைவிக்கும் காரணிகளைக் கண்டறிதால். இந்த கட்டம் ஆராய்ச்சியின் கால அளவையும் நிர்ணயிக்கிறது.
3. **தாக்கத்தைஆராய்தல்:** இந்தக் கட்டத்தில் முன்மொழியப்பட்ட திட்டத்தின் சுற்றுச்சூழல் மற்றும் சமூகத் தாக்கத்தைக் கண்டறிந்து அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடல்.
4. **மட்டுப்படுத்துதல்:** இந்த படிநிலையில் நிர்ணயிக்கப்பட்ட திட்டப் பணிகளின் சாத்தியமான பாதகமான சுற்றுபுறசூழல் விளைவுகளை குறைக்கவும் தவிர்க்கவும் பரிந்துரை செய்கிறது.
5. **அறிக்கை:** இந்த நிலையில் ஆய்வுகளின் முடிவுகளை ஒரு அறிக்கையாக தயார் செய்து முடிவு எடுக்கும் அதிகாரிகள் அல்லது சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கு வழங்குதல்.
6. **அறிக்கையை மறு ஆய்வு செய்தல்:** சமர்ப்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் அறிக்கையின் தரம் மற்றும் அதன் வினைவுறுதிறனை சோதித்து முடிவு எடுப்பதற்கு தேவையான தகவல்களைத் தருகிறது.
7. **மடிவு எடுத்தல்:** இந்த நிலையில் அந்த திட்டம் நிராகரிக்கப்பட்டதா அங்கீகரிக்கப்பட்டதா அல்லது இன்னும் மாற்றம் தேவையா என்பது குறித்து முடிவு செய்யப்படுகிறது.
8. **பிந்தைய கண்காணிப்பு:** இந்த நிலையில் செயல்திட்டம் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்ட பின் அதன் பணி தொடங்குகிறது. இந்த செயல்திட்டத்தின் தாக்கங்கள் சட்டதிற்கு புறம்பாக செல்லாதவாறும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டின் அறிக்கையின்படி சுற்றுச்சூழல் பாதிப்பு தடுப்பு நடவடிக்கைகள் நடைமுறைபடுத்தப்படுகிறதா என்பதையும் கண்காணிக்கிறது.

**இந்தியாவில் சுற்றுச்சூழல் தாக்கம் மதிப்பிடுதல் முறை:**

- இந்தியாவில் சுற்றுச்சூழல் தாக்கத்தை அளவிடும் முறை ஆற்றுப்பள்ளதாக்கு செயல்திட்டங்களை அளவிடும் நோக்கத்தோடு 1978ல் தொடங்கப்பட்டது. 1994 ஜனவரி 27ல் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், இந்திய அரசு சுற்றுச்சூழல்

பாதுகாப்புசட்டம் 1986 இன் கீழ் எந்த ஒரு விரிவாக்கத்திட்டம் அல்லது புதுப்பித்தல் திட்டத்திற்கும் அட்டவணை 1இல் பட்டியலிடப்பட்டுள்ளபடி எந்த ஒரு புதிய செயல்திட்டத்திற்கும் சுற்றுசூழல் அனுமதி கட்டாயமாக்கப்பட்டது. 1994ல் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பிற்கு பிறகு அதில் 12 திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மத்திய மற்றும் மாநில ஆணையங்கள் இதை (ELA – Environmental Impact Assesment) மேம்படுத்தி மேலாண்மை செய்யும் பொறுப்பை பங்கிட்டுக்கொள்கிறது. சுற்றுச்சூழல் அனுமதி கிடைக்கும்.

- மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் புதிதாக ஒரு EIA சட்டத்தை செப்படம்பர் 2006-ல் வெளியிட்டது. இந்த அறிவிப்பின்படி கீழ்கண்ட பிரிவில் உள்ள எல்லா செயல்திட்டங்களும் சுற்றுச்சூழல் அனுமதியை மத்திய அமைச்சகத்திலிருந்து பெற்ற பிறகே செயல்படுத்த முடியும்.

1. தொழிற்சாலைகள்
2. சுரங்கங்கள்
3. அனல் மின்நிலையங்கள்
4. ஆற்றுப்பள்ளதாக்குத்திட்டங்கள்
5. உள்கட்டமைப்பு மற்றும் கடற்கரை கட்டுப்பாட்டு மண்டலம்.
6. அணுமின் நிலைய திட்டங்கள்

- புதிய சட்டம் புதிய திட்டங்களுக்கு அனுமதி கொடுப்பதை திட்டங்களின் அளவு மற்றும் திறனை பொறுத்து மாநில அரசு அனுமதி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. EIA ஆனது புதிய திட்டங்களின் சுற்றுப்புற ஆரோக்கிய மற்றும் சமூகத் தாக்கத்தை மதிப்பிடும். இது சுற்றுச்சூழலையும் முன்னேற்றத்தையும் இணைக்கிறது. பாதுகாப்பான மற்றும் பேணத்தகுந்த வளர்ச்சியே சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீட்டின் நோக்கமாகும்.

**பேணத்தகுந்த மேம்பாட்டை ஊக்கப்படுத்தும் முறைகள்:**

- ஏற்கனவே விவாதித்தப்படி ஐக்கியநாடுகள் சபையின் 193 உறுப்பு நாடுகளும் செம்படம்பர் 2015ல் நடைபெற்ற உறுப்பினர்கள் செயல்கூட்டத்தில் ஏற்படுத்திய 2030 பேணத்தகுந்த மேம்பாட்டு கோரிக்கைகளின் ஒரு பகுதியாக 17 பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்குகள் மற்றும் 169 இலக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இது ஜனவரி 1,2016லிருந்து நடைமுறைக்கு வந்தது. இந்த இலக்குகளானது சர்வதேச நாடுகளின் ஆலோசனைகளின் முடிவாகும். இதன்படி சர்வதேச நாடுகளின் அரசாங்கங்களும் இலட்சக்கணக்கான குடிமக்களும் கலந்து கொண்டு பேணத்தகுந்த மேம்பாட்டை உலகளாவிய பாதையில் கொண்டுசென்று அடுத்த 15 வருடங்களில் நிறைவேற்றுவதாக ஏற்றுக்கொண்டனர்.

- பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்குகளும் நோக்கங்களும் வறுமை, பசி, கல்வி, ஆரோக்கியம் மற்றும் நலவாழ்வு, பாலின சமத்தும், நீர் மற்றும் தூய்மை, ஆற்றல், பொருளாதார வளர்ச்சி மற்றும் ஏற்புடைய வேலை, உள் கட்டமைப்பு, தொழிற்சாலை மற்றும் புத்தாக்கம், சமநிலையற்ற தன்மையை குறைத்தல், பேணிப் பாதுகாக்க வேண்டிய நகரங்கள், நுகர்வு மற்றும் உற்பத்தி, காலநிலை செயல், சூழலியல், சமாதானம் மற்றும் நியாயம், மற்றும் கூட்டாண்மை போன்ற முக்கியமான பகுதிகளை செயல்படுத்த தூண்டும். இந்த கோரிக்கையானது பொருளாதார வளர்ச்சியில் கவனம் செலுத்துவது மட்டும் அல்ல இன்னும் அதிக சமநிலை சமூகத்தை உருவாக்குவது மற்றும் பாதுகாப்பான அதிக செழிப்பான உலகை உருவாக்குவதும் முக்கியம் என்பதை இனம் கண்டு உள்ளது.

**பாரிபடா:** காடுகளைப் பாதுகாத்து வளப்படுத்தும் ஒரு குக்கிராமத்தின் கதை பாரிபடா என்பது மஹாராஷ்டிரா குஜராத் எல்லையில் உள்ள ஒரு குக்கிராமம். இங்கு வசிக்கும் பழங்குடிகளின் ஒருங்கிணைந்த அல்லது கூட்டு முயற்சியானது இதை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சென்றுள்ளது. வெறும் 1,000 மக்கள் மட்டுடே இருந்தாலும் இவர்கள் தங்கள் காட்டையும் வனத்தையும் பாதுகாப்பதோடு அல்லாமல் அதன் மூலம் ஐக்கிய நாடுகளின் பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்குகளையும் நோக்கங்களையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல அதன் மூலம் ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் பயனடைந்துள்ளனர்.

இந்த கிராமத்தினர் காட்டைப் பாதுகாத்து உள்ளனர். அதனால் காடுகள் இவர்கள் நீர் சேமிக்க உதவுகின்றன. அந்த நீர் வேளாண்மை மற்றும் பண்ணைகளுக்கு உதவுகிறது.

பண்மைணத் தொழிலானது வளத்தைக் கொடுத்தது. இது அவர்கள் படிப்பறிவை வளர்த்தது. படிப்பறிவானது அவர்களது எல்லையை விரிவாக்கி அவர்கள் வாழ்க்கையை முழுவதும் மாற்றியமைத்துள்ளது.

பால் பண்ணை மற்றும் கோழி பண்ணையை கடந்த காலகட்டதில் உருவாக்கிய இந்த கிராமத்தினர் அவற்றை விற்பனை செய்யவும் ஒரு அமைப்பை உருவாக்கினர். இதன் மூலம் பசியின்மை மற்றும் சமத்துவமற்ற நிலையை குறைத்தல் போன்றவற்றை உறுதிபடுத்தினர்.

இக்கிராம மக்கள் எல்லா வளங்கள் மற்றும் புதிய செயலை சோதனை செய்து பார்ப்பதில் முன்னோடிகள். நீர், நிலம், வனபாதுகாப்பு, உயிரினப்பன்மையைப் பதிவு செய்தல், உயிரிவாயு, சூரியஆற்றல், பொதுமக்களின் துணையோடு அடிப்படை உள்கட்டமைப்பை உருவாக்குதல் ஆகியவற்றை கூட்டாக ஈடுபாட்டுடன் செய்தனர். "மரம் வெட்டுவதைத் தடுத்தல், மரம் நடுதல் ஆகியவை முதலில் கிராம கூட்டங்களில் நிறைவேற்றப்பட்டு பின் உடனடியாக நடைமுறைபடுத்தப்பட்டது. ஆனால் இக்கிராமத்தின் 445 ஹெக்டேர் வனத்திற்குள் மனிதர்கள் மற்றும் மிருகங்கள் வராமல் தடுப்பது மிகப்பெரிய சவாலாக இருந்தது."

**எந்த நாடுகள் ஐக்கிய நாடுகளின் பேணத்தகுந்த மேம்பாடு இலக்குகளை வேகமாக நிறைவேற்றுகின்றன?**

- பேணத்தகுந்த மேம்பாடு இலக்குகளின் இறுதியான குறிக்கோளானது ஏழ்மையைக் குறைப்பது, புவியைப் பாதுகாப்பது மற்றும் ஒவ்வொருவரின் மேம்பாட்டை உறுதிசெய்வது போன்றதாகும். ஒவ்வொரு குறிக்கோளும் ஒரு தனிப்பட்ட இலக்குகளைக் கொண்டுள்ளது. இந்த இலக்குகள் 2030க்குள் நிறைவேற்றப்படவேண்டும்.

- நாடுகள் பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்கை நிறைவேற்றுவதில் எவ்வளவு அருகாமையில் உள்ளன? இதைத் தெரிந்து கொள் இலாபமற்ற நோக்கில் இயங்கும் தன்னார்வ நிறுவனங்களான பெர்ட்டரல்ஸ்மன் ஸ்டி:.பட்ங் (Bertelsmann Stiftung) மற்றும் ஐக்கியநாடுகளின் பேணத்தகுந்த மேம்பாட்டு தீர்வுகள் கணிணி கட்டமைப்பு மையம் ஒரு மூல அட்டவணையைத் தயாரித்தது. அவற்றில் ஒவ்வொரு நாட்டின் செயல்திறனையும் காணலாம். இந்த செயல்திறன் அடிப்படையிலான தரநிலை பட்டியலில் ஸ்வீடன் முதலிடம் பெற்றுள்ளது. அதை அடுத்து பட்டியலில் காணப்படுவது டென்மார்க் மற்றும் பின்லாந்து போன்ற நாடுகளாகும். குழு ஏழு (G 7) நாடுகளில் ஜெர்மனி மற்றும் பிரான்சு மட்டுமே முதல் 10 இடங்களில் உள்ளன. இந்த பட்டியலில் அமெரிக்க ஐக்கிய நாடுகள் 42 ஆவது இடத்திலும் அதே வேளையில் சீனா மற்றும் ரஷ்யா முறையே 62, 71வது இடத்திலும் உள்ளன. முதல் இருபது நாடுகள் பட்டியலில் கனடா (13), செக்குடியரசு (15) மற்றும் சொல்வேனியா (17) போன்றவை முதலிடத்தில் உள்ளன. ஆசியா-பசிபிக் நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் முறையே 18, 19 மற்றும் 20 ஆம் இடத்தில் உள்ளன. இந்த பேணத்தகுந்த மேம்பாட்டு இலக்குகள் குறியீடு அடிக்கோடிட்டு காட்டுவது என்னவென்றால் "உச்சநிலை செயலாக்கத்தை அடைந்து விட்டாலும் எல்லா நாடுகளும் இலக்குக்கும் செயலாக்கமைடைந்த வீதத்துக்கும் உள்ள இடைவெளியை நிரப்புவதை தங்கள்' முக்கிய பணியாகக் கொள்ளவேண்டும்" என்பதாகும்.

- இந்த பேணத்தகுந்த மேம்பாட்டு திட்டத்தில் செயல்படுத்தும் 157 நாடுகளில் இந்தியா 116 ஆவது உலகளாவியக் குறியீட்டைக் கொண்டுள்ளது.

## INDIAN ECONOMY

## PLANNING COMMISSION,NITI AYOG, NATIONAL DEVELOPMENT COUNCIL

### 6th பொருளாதாரம் தொகுதி - II
### அலகு– 1
### பொருளியல் ஓர் அறிமுகம்

- “கிராமங்களில் வாரம் அல்லது மாதம் ஒருமுறை பொதுவான ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்திற்கு மக்களின் தேவைக்கேற்ற குறிப்பிட்ட பொருள்களை ஒருங்கிணைத்து விற்பனை செய்யும் இடம் தான் சந்தை”.

**நுகர்வோர் பொருட்கள்:**
அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மக்கள் அங்காடியிலிருந்து வாங்கிப் பயன்படுத்தும் பொருட்கள் நுகர்வோர் பொருட்கள் என்று அழைக்கப்படுகின்றன.
(எ.கா) அரிசி,துணிகள், மிதிவண்கள் போன்றவை.

- கிராமத்துலதான் பெரும்பாலான பொருட்கள் விளைவிக்கப்பட்டுச் சந்தைக்குக் கொண்டு வரப்படுகின்றன”.

சேமிப்பு என்பது கையில் கிடைக்கும் வருமானத்தில் நுகர்வுக்குச் செலவு செய்ததுபோக எதிர்காலத் தேவைக்காக ஒதுக்கப்படும் ஒரு தொகையாகும்.

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். - **குறள் 0479**
**விளக்கம்:**
தன் செல்வத்தின் அளவு அறிந்து அதற்கு ஏற்ப வாழாதவனுடைய வாழ்க்கை பல வளங்களும் இருப்பது போலத் தோன்றி உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாமல் அழியும்.

- “பழைய காலத்தில் பண்டமாற்று முறைன்னு ஒன்று இருந்தது ஒரு பண்டத்திற்குப் பதிலாக மற்றொரு பண்டத்தை மாற்றிக் கொள்வது தான் அது (எ.கா) ஒரு மூட்டை அரிசிக்குப் பதிலாகத் தேவையான அளவு துணியைப் பெற்றுக் கொள்வதாகும்”.

- ஒருவரிடம் அரிசி அதிகமாக இருக்கும், ஒரு நெசவாளரிடம் துணி அதிகமாக இருக்கும். அரிசி வைத்திருப்பவர் துணியை வாங்க விரும்புவார். ஆனால் துணியை வைத்திருப்பவர் அரிசியை வாங்கத் தயாராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் பரிமாற்றம் நடக்கும்”.

**முதல் நிலைத் தொழில்கள்:**
- உணவுத் தேவைக்கும் தொழில் உற்பத்திக்கும் தேவையான மூலப்பொருள்களை உற்பத்தி செய்வது முதல் நிலைத் தொழில்கள் எனப்படுகிறது.
  - வேளாண்மை
  - கால்நடைகள் வளர்த்தல்
  - மீன் பிடித்தல்
  - கனிமங்கள், தாதுப்பொருட்கள் போன்ற மூலப்பொருள்கள் சேகரித்தல்
  - கனிகள், கொட்டைகள், தேன், மூலிகைகள், ரப்பர், பிசின் போன்றவை சேகரித்தல் மரம் வெட்டுதல்

- “பண்டங்களை ஒருவருக்கொருவர் மாற்றிக் கொள்ளும்போது பண்டங்களின் மதிப்பில் ஏற்படும் வேறுபாடு பல பிரச்சினைகளுக்கு வழி வகுத்தது. இப்பிரச்சனையைத் தீர்க்க கண்டுபிடிக்கப்பட்ட கருவிதான் பணம்”.

* ‘‘பழங்காலத்துல வேட்டையாடிகளாக, உணவு சேகரிப்பாளர்களாக வாழ்ந்து வந்த மக்கள் படிப்பாடியாக வேளாண்மை செய்யக் கற்றுக் கொண்டனர்.

* இவ்வாறு அவர்கள் வேளாண்மை செய்வதற்கு வசதியாகவே நீர் நிலைகள் அருகே குடி இருப்புகளை அமைத்துக் கொண்டு, அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர். இவ்வாறு குடியேறிய இடங்களே கிராமம், ஊர் என்று அழைக்கப்பட்டன. இன்றளவும் விவசாயம் நமது நாட்டின் பொருளாதார ஆணிவேராகத் திகழ்கிறது. மனிதனின் தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் அளவில்லை. அதன் அடிப்படையிலேயே புதிது புதிதாக தொழில்களைச் செய்யக் கற்றுக் கொண்டான். வேளாண்மை மற்றும் மேய்ச்சலில் ஈடுபடுபவர்கள் விவசாயிகள், உழவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

* விவசாயம் போலவே இன்னும் சில தொழில்களையும் முதன்மையான தொழில்கள்னு சொல்லுவாங்க’’.

* ‘‘விவசாயம், தொழிற்சாலைகள் எல்லாம் நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியாக இருக்கு. உங்களுக்குப் புரியும்படி நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பற்றி மூன்று பிரிவுகளாகச் சொல்லலாம்’’.

* ‘‘விவசாயம் தான் முதன்மையான வேலையாக இருக்கும் பட்டணம்னு சொல்லப்படுகின்ற நகரம் போன்று வசதிகள் அங்கே இருக்காது. அதே நேரம் அவர்களுக்குத் தேவையான அடிப்படையானவை கிடைக்கும்படி இருக்கும். சின்னச்சின்ன கடைகள் இருக்கும். அரிசி, பருப்பு மாதிரியே காய்கறி உற்பத்தியும் கிராமங்களில்தான் அதிகம். பால், காபி, டீ போன்ற பானங்களில் சேர்க்கும் சர்க்கரை, ஆலைகளில்தான் உற்பத்தியாகுதுன்னாலும் அதுக்கு மூலப் பொருளான கரும்பு கிராமங்களில்தான் விளையுது. மிளகாய் தொடங்கி கடுகு வரை சமையலுக்கான பெரும்பாலான பொருட்கள் கிரமத்துலேர்ந்துதான் வருது’’.

* அங்கே உற்பத்தி செய்யுறது மட்டும்தான் அவங்க. அப்பொருட்களை அவங்கட்ட இருந்து வாங்கி, விற்க நிறைய வியாபார இடை நிலை முகவர்கள் இருப்பதால், விவசாய உற்பத்தியாளர்களுக்குப் போய்ச்சேரும் பணம் குறைவாகத்தான் இருக்கும்’’.

**இரண்டாம் நிலைத் தொழில்கள்:**

* முதல் நிலைத் தொழில்கள் மூலம் சேகரிக்கப்படும் மூலப்பொருள்களில் இருந்து இயந்திரங்கள் முதல் அன்றாடத் தேவைக்கான பொருட்கள் வரை பெருமளவில் உற்பத்தி செய்தல் இரண்டாம் நிலை தொழில்கள் என்றும், தொழில் துறை என்றும் அழைக்கப்படுகின்றன.

* உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள், மூலதனம், உடமை ஆகியவற்றின் அடிப்படையில் தொழில்கள் வகைப்படுத்தப்படுகின்றன.

**மூலப்பொருள் பயன்பாடு அடிப்படையில் தொழிற்சாலைகளை வகைப்படுத்துதல்:**

* வேளாண் அடிப்படைத் தொழிற்சாலைகள் - பருத்தி, சர்க்கரை, உணவு பதப்படுத்துதல்
* காடுசார்ந்த தொழிற்சாலைகள் - காகிதத் தொழில், மரச்சாமான்கள், கட்டுமானப் பொருள்கள்
* கனிமத் தொழிற்சாலைகள் - சிமெண்ட், இரும்பு, அலுமினியம் போன்ற தொழிற்சாலைகள்
* கடல்சார் தொழிற்சாலைகள் - கடல் உணவு பதப்படுத்துதல்

* கிராமங்கள் நம் நாட்டின் முதுகெலும்பு. இதுவும் நான் சொல்லவில்லை. மகாத்மா காந்தியடிகள் சொன்னது’’.

**மூன்றாம் நிலைத் தொழில்கள்:**

* முன்னர் கூடிய இரண்டு நிலைகளில், குறிப்பாக தொழில் துறையில், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் உற்பத்திப் பொருள்களை தேவையான மக்களுக்குக் கொண்டு

சேர்ப்பதற்கும் தேவையான சேவைகளை வழங்குவதால் இவை சேவைத் துறை தொழில்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. மக்களின் அன்றாடத் தேவைகளையும் சேவைத் துறை வழங்குகிறது.

- ❖ போக்குவரத்து – சாலை, ரயில், கடல், ஆகாயப் போக்குவரத்துகள்
- ❖ தொலைத் தொடர்பு – அஞ்சல், தொலைபேசி, தகவல்தொழில்நுட்பம்
- ❖ வர்த்தகம் - பொருள்களைக் கொள் முதல் செய்தல், விற்பனை செய்தல்
- ❖ வங்கி – பணப் பரிமாற்றம், வங்கிச் சேவைகள்

- இன்று உலக மக்கள் தொகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான மக்கள் நகரங்களில் தான் வாழ்கிறார்கள். நம்ம தமிழ்நாட்டில் 47 சதவீத மக்கள் நகரங்களில் வாழ்கிறார்களாம்.

- தமிழ்நாடு உற்பத்தி தொழிலிலும் சேவைத் தொழிலிலும் சிறந்து விளங்கும் மாநிலம். இவை நகரங்களை மையமாகக் கொண்டே இயங்குகின்றன.

- கிராமங்களைவிட நகரங்களில் வேலை வாய்ப்புகள் அதிகம். சிறுதொழில் செய்பவர்கள் தொடங்கி அமைப்பு சாரா தொழிலாளர்கள் வரை நகரத்தில் தான் அதிகமாக இருக்காங்க.

- கிராமத்தில் முடி திருத்தகம், துணிகளைத் துவைத்து, இஸ்திரி போட்டுக்கொடுக்கும் சலவை நிலையங்கள் எல்லாம் ஒண்ணோ ரெண்டோ தானே இருக்கும். ஆனால் நகரத்தில் இந்த மாதிரி சிறுதொழில் செய்பவர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பார்கள். இப்படி நகரத்தில் கிடைக்கக்கூடிய உபரி வருவாயும் அதிகமாக இருக்கும்.

- நன்கு வடிவமைக்கப்பட்ட சாலைகள், துறைமுகம், விமான நிலையம், ரியல் நிலையங்கள் போன்ற இடங்கள் எல்லாம் ஏற்றுமதி, இறக்குமதி சிறப்பாக நடக்கத் துணை புரிகின்றன. இதற்கு உதவுவதற்கு ஏற்றார் போல வங்கிக் கிளைகள் நகரங்களில் அதிகம். இப்படி அன்றாடப் பணப்புழக்கத்திற்குப் பெருமளவில் வங்கிகள் உதவி செய்வதோடு, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் துணையாக நிற்கின்றன.

- இவை அனைத்தையும் மூன்றாம் நிலை தொழில்கள் எனலாம்.

## 7th பொருளாதாரம்
## அலகு I
## உற்பத்தி

- பொருளாரத்தில், உற்பத்தியும் நுகர்வும் இரு இன்றியமையாத செயல்கள். அதேபோன்று, பொருளாதாரத்தில் உற்பத்தியாளர், நுகர்வோர் என இருவரும் இன்றியமையாதவர்களாக உள்ளனர். உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையே காணப்படும் சிறந்த செயலாற்றல், திறன்மிக்க நல்ல பொருள்கள் தயாரிப்பை உறுதிசெய்கிறது. இருவருக்குமிடையே நிகழும் இந்த இடைவினையாற்றல், நுகர்வோரை உற்பத்தியாளரின் வாடிக்கையாளர், வழங்குநர் என இருவழிகளில் செயல்பட வைக்கிறது. வழங்குபவராகவும் நுகர்வோர் செயல்படுகிறார். நுகர்வோர், தமக்குப் பயனளிக்கக்கூடிய பொருளைப் பெறும்வேளையில், பொருளை விற்பனை செய்யும் விற்பனையாளரும் தமக்கேற்ற வருமானத்தைப் பெறுகிறார். இவ்விருவரும் உற்பத்தியாளர், தாம் உற்பத்தி செய்யும் பொருளுக்கு அளிக்கின்ற உள்ளீடுகளுக்கு ஏற்ற விலையை அளித்துச் சமன் செய்கின்றனர்.

**பயன்பாட்டின் வகைகள் வடிவப்பயன்பாடு**

ஒரு விளைபொருளின் வடிவம் மாற்றப்படும்போது, அதன் பயன்பாடு மிகுதியாகிறது.

எடுத்துக்காட்டாக, விளைபொருளாகிய பருத்தியைக்கொண்டு ஆடைகள் உருவாக்கப்படும்போது, அதன் தேவையும் பயன்பாடும் உயர்கின்றன.

**இடப்பயன்பாடு**

ஒரு விளைபொருள், ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும்போது, அதன் பயன்பாடு மிகுதியாகிறது.

எடுத்துக்காட்டாக, விளைபொருளான அரிசி தமிழ்நாட்டுக்கும் கேரளாவுக்கும் கொண்டு செல்லப்படும்போது, அதன் தேவையும் பயன்பாடும் அதிகரிக்கின்றன.

**காலப் பயன்பாடு**

ஒரு விளைபொருளை எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து சேமிப்புக் கிடங்கு வைக்கும்போது, அதன் பயன்பாடு மிகுகிறது.

எடுத்துக்காட்டாக, நுகர்வோர்களால் ஆண்டு முழுவதும் பயன்படுத்தக்கூடிய உணவுப் பயிர்களான நெல், கோதுமை போன்றவற்றைச் சேமித்து வைப்பதால், அவற்றின் தேவையும் பயன்பாடும் மிகுதியாகின்றன.

- பொருளாதாரத்தில் உற்பத்தி என்னும் சொல், மாற்றத் தக்க மதிப்புடைய பொருள்களையும் சேவைகளையும் உருவாக்குவதைக் குறிக்கிறது. அதாவது, பயன்பாட்டை என்பது, நமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதாகும். பயன்பாட்டை அதன் இயல்பைப் பொருத்து வடிவப் பயன்பாடு, இடப்பயன்பாடு, காலப் பயன்பாடு, பயன்பாடு என வகைப்படுத்தலாம்.

நம் இந்தியாவில் கலப்பு பொருளாதார நிலை காணப்படுகிறது. அதாவது,பொருளாதாரத்தில் தனியார் துறை நிறுவனங்களும் பொதுத் துறை நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுகின்றன.

**உற்பத்தியின் வகைகள்**

- உற்பத்தியில் மூவகை உள்ளன. அவையாவன:
    1. முதன்மை நிலை உற்பத்தி
    2. இரண்டாம் நிலை உற்பத்தி

3. மூன்றாம் நிலை உற்பத்தி

## 1. முதன்மை நிலை உற்பத்தி

- இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, நேரடியாகப் பயன்படுத்திச் செய்கின்ற செயல்பாடுகளுக்குட்பட்ட நிலையை முதன்மை நிலை உற்பத்தி என்கிறோம். முதன்மைநிலையில் வேளாண்மைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால், இதனை வேளாண்மைத் துறை உற்பத்தி எனவும் கூறுவர்.

- வேளாண்மையும் அதனுடன் தொடர்புடைய செயல்கள், வனங்களைப் பாதுகாத்தல், மீன் பிடித்தல், சுரங்கத்தொழில், எண்ணெய் வளங்களைப் பிரித்தெடுத்தல் போன்ற செயல்பாடுகள் முதன்மை நிலை உற்பத்தியுள் அடங்கும். இந்தச் செயல்பாடுகளை மேற்கொள்ளும் தொழிற்சாலைகள், பூமியின் மேற்பரப்பிலிருந்தும் ஆழ்கடலிலிருந்தும் இயற்கை வளங்களைப் பிரித்தெடுக்கின்றன.

## 2. இரண்டாம் நிலை உற்பத்தி

- முதன்மை நிலையின் உற்பத்திப் பொருள்களை மூலப்பொருள்களாகப் பயன்படுத்திப் புதிய உற்பத்திப் பொருள்களாக உருவாக்கும் செயல்பாட்டை இரண்டாம் நிலை உற்பத்தி என்கிறோம். இரண்டாம் நிலையில் தொழிலுக்கு முதலிடம் அளிக்கப்படுவதால், இதனைத் தொழில்துறை உற்பத்தி எனவும் கூறுவர். எடுத்துக்காட்டாக, மாவிலிருந்து ரொட்டி தயாரித்தல், இரும்புத் தாதுவிலிருந்து பயன்படக்கூடிய பொருள்களைத் தயாரித்தல் போன்றவற்றைக் கூறலாம். மேலும், நான்கு சக்கர வண்டிகள், ஆடைகள், இரசாயனப் பொருள்கள் போன்றவற்றைத் தயாரித்தலும் பொறியியல் துறை சாரந்த பணிகள், கட்டடப்பணிகள் சார்ந்த தொழில்களும் இரண்டாம் நிலை உற்பத்தியுள் அடங்கும்.

## 3. மூன்றாம் நிலை உற்பத்தி

- முதன்மை நிலை, இரண்டாம் நிலைகளின் உற்பத்திப் பொருள்களைச் சேகரிப்பதும் பரிமாற்றம் செய்வதும் மூன்றாம் நிலை உற்பத்தியாகும். மூன்றாம் நிலை உற்பத்தியாகும். மூன்றாம் நிலையில் சேவைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால் இதனைச் சேவைத்துறை உற்பத்தி எனவும் கூறுவர். சேவைத் துறை நிறுவனமானது, உற்பத்திப் பொருள்களைத் தொழில்துறை நிறுவனங்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் நேரடியாக வழங்குகிறது. எடுத்துக்காட்டாக வாணிகம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து, செய்தித்தொடர்பு, சட்டம், நிருவாகம், கல்வி, உடல்நலப் பாதுகாப்பு போன்ற அரசுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் சேவைத்துறை உற்பத்தி நிறுவனங்களாக விளங்குகின்றன.

**எடுத்துக்காட்டு**

முதன்மை மற்றும் இரண்டாம் நிலை உற்பத்தி

- பருத்தி (முதன்மைத் துறை) – பருத்தித் தொழில் (இரண்டாம் நிலை உற்பத்தி) = ஆடை உற்பத்தி

- இரும்புத்தாது (முதன்மைத் துறை) - இரும்புத் தொழில் (இரண்டாம் நிலை உற்பத்தி) = பொருள் தயாரிப்பு

- கோதுமைமாவு (முதன்மைத் துறை) – ரொட்டித் தொழிற்சாலை = உணவு உற்பத்தி (இரண்டாம் நிலை உற்பத்தி)

நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், பெரும்பங்கு வகிப்பவை பெரும்பங்கு வகிப்பவை மூன்றாம் நிலை அல்லது சேவைத் துறை உற்பத்திகளே.

**உற்பத்திக்கான காரணிகள்**

- மனிதனின் செயல்பாடுகள் பொருளை உற்பத்தி செய்தல், நுகர்தல் என்னும் இரு கூறுகளில் உள்ளடங்கியுள்ளன. உற்பத்தியின்போது, பொருள்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றாக மாற்றம் செய்யப்படுகின்றன. அதாவது, உற்பத்திக்குக் காரணமாக அமையும் உள்ளீட்டுப் பொருள்கள் யாவும் வெளியீட்டுப் பொருள்களாக மாற்றப்படுகின்றன. ஆகவே, ஒரு பொருளின் உற்பத்திக்கு உதவுகின்ற காரணிகளை நிலம், உழைப்பு, முதலீடு என வகைப்படுத்தலாம்.

- ஒரு பொருளை உற்பத்தி செய்வதில், இம்மூன்று காரணிகளும் இணைந்து செயல்படுகின்றன. ஆனால், அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதற்கு நான்காவதாக ஒரு காரணி தேவை. அதுதான், அமைப்பு. ஏனெனில், பண்டங்களும் பொருள்களும் தாமாகவே உற்பத்தி செய்யமுடியாது. இவற்றை உற்பத்தி செய்வதற்குப் பொறுப்பு ஏற்கும் ஒரு காரணியே அமைப்பு அல்லது நிறுவனமாகும்.

- உற்பத்திக் காரணிகளை முதல்நிலை உற்பத்திக் காரணிகள் எனவும் மூலப்பொருள்களிலிருந்து பெறப்பட்ட உற்பத்திக்காரணிகள் எனவும் இரண்டாகப் பிரிக்கலாம். முதல்நிலை உற்பத்திக்காரணிகளில் நிலமும் உழைப்பும் அடங்கும். இவை இரண்டும் இயற்கையின் கொடை. இவற்றின் துணையின்றி எந்தப் பொருள்களையும் நம்மால் உற்பத்தி செய்யமுடியாது.

- மூலப்பொருள்களிலிருந்து பெறப்பட்ட உற்பத்திக் காரணிகளில் முதலீடும், அமைப்பும் அடங்கும். இவ்விரண்டு காரணிகளும் முதல்நிலை உற்பத்திக் காரணிகளுடன் ஒன்றிணைந்து செயல்படும்போது, மொத்த உற்பத்தியானது அதிகரிக்கிறது.

**நிலம்**

- ‘நிலம்’ என்னும் உற்பத்திக் காரணி, இயற்கை வளங்கள் அனைத்தையும் அனைத்தையும் அல்லது இயற்கை மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும் கொடை அனைத்தையும் குறிப்பதாகும். நிலப்பரப்பு, நீர், காற்று, கனிமவளங்கள், காடுகள், ஆறுகள் ஏரிகள் கடல்கள், மலைகள், தட்பவெப்பநிலை, காலநிலை ஆகிய அனைத்தும் நிலம் என்ற சொல்லுக்குள் அடங்குகின்றன. ஆகவே, இவையாவும் மனிதனால் உருவாக்கப்படாத பொருள்கள் ஆகும்.

| |
|---|
| குறிப்பிட்ட நிலப்பகுதி அமைந்துள்ள இடத்தில் கிடைக்கும் வளங்களைப் பொருத்து, நிலத்தின் வடிவம் மாற்றமடைகிறது. எடுத்துக்காட்டாக, வேளாண்மை செய்யும்போது, விளைநிலமாகவும் மனை விற்பனை செய்யும்போது, வீட்டு நிலமாகவும் மாறுகிறது. |

**நிலத்தின் சிறப்பியல்புகள்**

1. **நிலம் இயற்கையின் கொடை**

- மனிதன் மற்ற உற்பத்திக் காரணிகளைப் பெறுவதற்காக மனிதன் முயற்சி செய்கிறான். ஆனால் நிலம் என்ற உற்பத்திக் காரணியைப் பெறுவதற்கு அவன் எந்த முயற்சியும் செய்ய வேண்டியதில்லை. நிலமானது மனித உழைப்பினால் உருவானதன்று. மாறாக, அது மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடங்குவதற்கு முன்பே என தோன்றியதாகும்.

2. **நிலத்தின் அளிப்பு நிலையானது**

- நிலத்தின் மொத்த பரப்பளவையும் எந்த மாற்றத்திற்கும் உட்படுத்த இயலாது. மனிதன் மேற்கொள்ளும் முயற்சியால் நிலத்தின் அளவை அதிகரிக்கவோ, குறைக்கவோ முடியாது. நிலத்தின் மேற்பரப்பிலும் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது. நிலத்தின் செழிப்பை உயர்த்த முடியுமே தவிர, அதன் அளவை மாற்ற முடியாது. எனவே நிலத்தின் அளிப்பு என்றென்றும் நிலையானது.

3. **நிலம் அழிவில்லாதது**

- மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்துப் பண்டங்களும் அழிந்து போகக் கூடியவை. ஆனால் நிலம் அழிவில்லாதது. நிலத்தின் அளிப்பு என்றும் மாறாததாக, அழிவற்றதாக உள்ளது.

**4. நிலம் ஒரு முதன்மை உற்பத்திக் காரணி**

- பண்டங்களை உற்பத்தி செய்திட நிலம் ஒரு முக்கியக் காரணியாகும். நாம் செய்கின்ற எந்த ஓர் உற்பத்திப் பொருளுக்கும் நிலமே அடிப்படையாக அமைகிறது. எடுத்துக்காட்டாக, தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப்பொருட்களை அளிக்க உதவுகிறது. வேளாண்மை மூலம், பயிர்களை விளைவிக்க உதவுகிறது.

**5. நிலம் இடம் பெயரக் கூடியதன்று**

- நிலத்தை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. உதாரணமாக, இந்தியப் பரப்பின் எந்த ஒரு பகுதியையும் வேறு நாட்டிற்கு இடம் பெயரச் செய்ய இயலாது.

**6. நிலம் ஆற்றல் வாய்ந்தது**

- மனிதனால், அழிக்க முடியாத ஆற்றல்கள் சிலவற்றை நிலம் கொண்டுள்ளது. இயற்கையில் ஏற்படும் மாற்றங்களால் நிலத்தின் செழிப்புத் தன்மையில் மாற்றம் ஏற்படலாம். ஆனால் அதனை முழுமையாக அழித்தல் இயலாது.

**7. நிலம் செழிப்புத் தன்மையில் மாறுபடும்**

- நிலம், அதனுடைய செழிப்புத் தன்மையின் அடிப்படையில் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. அதனால் தான் நிலத்தின் உற்பத்தித் திறன் எல்லா இடத்திலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஓரிடத்தில் அதிக உற்பத்தி இருந்தால் மற்றொரு இடத்தில் உற்பத்தி குறைவாக இருக்கும். நிலம் என்பது இயற்கையின் நன்கொடை. தொடக்க நிலையில் நிலத்திடமிருந்து நாம் பெறுவது ஒன்றுமில்லை. இருப்பினும், உற்பத்திக்காகப் பயன்படும் நிலம் போதுமானதாக இருப்பதில்லை. எனவே எங்கெல்லாம் நிலத்தின் மதிப்பு குறைவாக இருக்கிறதோ அங்கெல்லாம் பற்றாக்குறையைப் பொறுத்தே உற்பத்தி செய்யும் பொருள் சந்தையில் விலை பெறுகிறது.

## உழைப்பு (Labour)

- உற்பத்தியில், மனித உழைப்பு ஓர் உள்ளீடாகும். வேலையினால் ஏற்படும் துன்பத்தைக் கருதாமல் கைமாறு எதிர்பார்த்து முழுமையாகவோ, பகுதியாகவோ உடல் அல்லது மனதால் பயன்கருதி மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு என ஆல்பிரட் மார்ஷல் உழைப்பிற்கு விளக்கமளிக்கிறார்.

| |
|---|
| ஆடம்ஸ்மித் "பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுகிறார். இவரது கோட்பாடு, செல்வத்தை அடிப்படையாகக் கொண்ட 'செல்வ இலக்கணம் ஆகும்.' நன்னெறி கருத்துக் உணர்வுக் கொள்கை," நாடுகளின் செல்வமும், அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும் ஓர் ஆய்வு" (1776) என்பன, அவரின் சிறந்த இரு படைப்பு நூல்கள். |

**உழைப்பின் சிறப்பியல்புகள்**

- மற்ற உற்பத்திக் காரணிகளோடு ஏற்படும், உழைப்பு அழியக்கூடியதாக உள்ளது. அதாவது உழைப்பைச் சேமித்து வைக்க இயலாது. வேலையில்லாத தொழிலாளியின் உழைப்பு. அவர் வேலை செய்யாத நாளில் இழக்கப்படுகிறது. உழைப்பைத் திரட்டவோ அடுத்த நாள் தள்ளிப்போடவோ இயலாது. அதனை ஒருமுறை இழந்தால் மீண்டும் திரும்பப் பெற இயலாது.

  ❖ உற்பத்தியில் உழைப்பு என்பது ஓர் செயற்படு காரணியாகும். நிலமோ, மூலதனமோ உழைப்பும் இல்லாமல் அதிக உற்பத்தியை அளிக்க இயலாது.

  ❖ உழைப்பு ஒரே சீரானதல்ல. திறமையும் பயிற்சியும் நபருக்கு நபர் மாறுபகின்றன.

- ❖ உழைப்பை, உழைப்பாளரிடமிருந்து பிரிக்க இயலாது.
- ❖ உழைப்பு இடம் பெயரக்கூடியது. குறைந்த ஊதியம் பெறுதைக் காட்டிலும்அதிக ஊதியம் பெற வேண்டும் என்பதற்காக, மனிதர்கள் ஓரிடத்திலிருந்துமற்றொர் இடத்திற்கு இடம் பெயர்கிறார்கள்.
- ❖ தனியாக உழைக்கும் உழைப்பாளரிடம் பேரம்பேசும் ஆற்றல் குறைவு, தமக்கு வேலை அளித்தவரிடம் தம் உழைப்புக்கான கூலியை உயர்த்த வேண்டுமென்றோ பணிபுரியும் இடத்தை மேற்படுத்த வேண்டுமென்றோ போராட முறையாது. தொழிலாளிகள் தங்களுக்குள் ஒருங்கிணைந்து தொழிற்சங்கம் அமைத்துப் போராடுவதன் மூலம் பேரம் பேசும் ஆற்றல் அதிகரிக்கிறது.

**வேலை பகுப்பு முறை**

- வேலை பகுப்பு முறையை, ஆடம்ஸ்மித், தனது ‘‘நாடுகளின் செல்வமும்’’ அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும், என்ற நூலின் மூலம் அறிமுகப்படுத்தியுள்ளார். ஒரு உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே வேலைப்பகுப்பு முறை எனப்படும். அதாவது, பல்வேறு கட்டங்களிலும் ஒரே தொழிலாளி ஈடுபடாமல், அவற்றைப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு கட்டப்பணியையும் ஒரு தொழிலாளி மேற்கொள்ள வேண்டும்.

**எடுத்துக்காட்டு**

- ஒரு தையல்காரர் ஒரு சட்டையை முழுமையாகத் தைத்து உருவாக்குவதில் தையல்காரர் மட்டுமே ஈடுபடுகிறார். ஆனால், ஆயத்த ஆடைகள் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களில் துணிகளை வெட்டுதல், உடல்பகுதி துணிகளைத் தைத்தல், கைப்பகுதிகளைத் தைத்தல், பொத்தான் வைக்கும் பகுதிகளைத் தைத்தல் போன்ற ஒவ்வொரு பணிகளையும் தனித்தனி உழைப்பாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக, அனைத்து பகுதிகளையும் இணைத்துச் சிலர் தைக்கின்றனர். இந்நிலையில் அத்துணி முழுமையான ஒரு ஆடையாக உருவாகிறது.

**வேலைப்பகுப்பபு முறையின் நன்மைகள்**

- உழைப்பாளி ஒருவர், ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதனால், அந்த வேலையில் திறமையுடையவராக ஆகிறார்.
- இம்முறை நவீன இயந்திரங்களை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடுத்துவதற்கு வழி வகுக்கிறது. உதாரணம் கம்பியில்லாத் தந்தியின் கண்டுபிடிப்பு.
- காலமும், மூலப்பொருட்களும் மிகத் திறமையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**வேலைப்பகுப்பு முறையின் தீமைகள்**

- தொழிலாளி, ஒரே வேலையைத் திரும்ப, திரும்ப செய்வதால், சுவையற்ற, களிப்பற்ற, தன்மையை அடைகிறார். இது மனிதத் தன்மையை அழக்கிறது.
- ஒரு பகுதி பணியினை மட்டும் ஒரு தொழிலாளி மேற்கொள்வதால், அவன் குறுகிய தேர்ச்சியை மட்டுமே பெறுகிறான். இதனால் வேலை வாய்ப்பின்மை பெருகும் நிலை உருவாகிறது.
- இம்முறை, கைவினைப் பொருட்களின் வளர்ச்சியினைப் பாதிக்கின்றது. ஒரு தொழிலாளி, ஒரு பொருளினை முழுவதுமாக உருவாக்கிய மனநிறைவினைப் பெறுவதில்லை.

**மூலதனம் (Capital)**

- மூலதனம் என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். எளிமையாகக் கூறினால், மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கும். செல்வத்தை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட செல்வம் என்றும் மூலதனத்தைக் கூறலாம். மார்ஷலின் கருத்துப்படி,"இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக் கூடிய பிற வகைச் செல்வங்களே மூலதனம் ஆகும்."

**மூலதனத்தின் வடிவங்கள்**

1. பரும்பொருள் மூலதனம் (அல்லது) பொருட்சார் மூலதனம். (எ.கா.) இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள் போன்றவை
2. பணமூலதனம் அல்லது பணவியல் வளங்கள் (எ.கா.) வங்கி வைப்புகள், பங்குகள் மற்றும் பத்திரங்கள் போன்றவை.
3. முனித மூலதனம் அல்லது மனிதத் திறன் வளங்கள் (எ.கா.) கல்வி, பயிற்சி மற்றும் சுகாதாரம் ஆகியவற்றில் முதலீடுகள்.

**மூலதனத்தின் சிறப்பியல்புகள்**

- ❖ மூலதனம் செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி
- ❖ மனித முயற்சியால் உருவாக்கப்படுகிறது
- ❖ இது உற்பத்தியில் தவிர்க்க முடியாத காரணியல்ல. இது இன்றியும் உற்பத்தி நடைபெறும்.
- ❖ மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது
- ❖ இதன் அளிப்பு நெகிழுந்தன்மையுடையது
- ❖ மூலதனம் ஆக்கமுடையது
- ❖ மூலதனம் பல ஆண்டுகள் நீடிக்கும்
- ❖ மூலதனத்தை ஈடுபடுத்துவதன் நோக்கம், எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்பதேயாகும்.

**தொழில் முனைவோர் (அல்லது) தொழிலமைப்பு (Entepreneur)**

- தொழில் முனைவோர், எனப்படுபவர் பல உற்பத்திக் காரணிகளை (நிலம், உழைப்பு, மூலதம்) ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் ஆவார். அக் காரணிகளைச் சரியான அளவிலும், முறையிலும் தொடங்கி, இடர்ப்பாடுகளை ஏற்று உற்பத்தி அதிகரிக்க முயல்பவரே தொழில் முனைவோர் ஆவார்.
- தொழில் முனைவோர்,'தொழில் அமைப்பாளர்' எனவும் அழைக்கப்படுகிறார். தற்காலத்தில், தொழில் முனைவோர்,"சமுதாய மற்றும் காணும் முகவர்" என அழைக்கப்படுகிறார்.
- இவர் சமுதாய விருப்பமுள்ள உற்பத்தியைக் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சமுதாய் நலம் மேம்படவும் காரணமாகிறார்.

**தொழில் முனைவோரின் சிறப்பியல்புகள்**

- இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்.
- உற்பத்தி அலகின் இருப்பிடத்தைத் தீர்மானித்தல்

- புதுமைகளை உருவாக்குதல்
- வெகுமதி செலவைத் தீர்மானித்தல்

இடர்களை ஏற்றல் மற்றும் நிச்சயமற்ற தன்மையை எதிர்கொள்ளல்.

11வது பொருளாதாரம்
அலகு– 1

### நுண்ணினப் பொருளியல்: ஓர்அறிமுகம்

- ஓர் இயல் என்பது அதன் உள்ளடக்கத்தை, பெயர் மற்றும் தலைப்பிலிருந்து, தெளிவாகவும், சரியாகவும் புரிந்துகொள்ளும்படி இருத்தல் வேண்டும். பொருளியல் போன்ற பாடத்திற்கு 'பொருளியலின் அறிமுகம்','பொருளியல் ஓர் அறிமுகம்','அடிப்படைப் பொருளியல்','பொருளியலின் கூறுகள்','தொடக்கப்ப பொருளியல்','பொருளியலின் அடிப்படைகள்' போன்ற தலைப்புகளில் பொருளியல் நூல்கள் பல காணக்கிடைக்கின்றன. இவற்றில் காணப்படும் பொருளடக்கங்கள் ஒரே மாதிரியானவை என்றாலும், படிப்போரின் ஆர்வம் மற்றும் திறனுக்கு ஏற்றபடி ஒவ்வொரு நூலும் பயன்படுகின்றது.

- ஓர் இயலின் நல்ல அறிமுகம் அதன் தலைப்பின் பொருளை மட்டும் கொண்டிராமல், அவ்வியலின் தன்மை மற்றும் எல்லைகளையும் விளக்குவதாக அமைய வேண்டும். அதாவது, அவ்வியல் தொன்மையானதா அல்லது நவீனமானதா, இயங்காததா அல்லது இயங்கக் கூடியதா என்பதை உணர்த்தும் வகையிலும் இருக்க வேண்டும். அவ்வியலைப் படிப்பவர்கள் அது கலையியல் மட்டுமா, அறிவியல் மட்டுமா, இரண்டையும் சார்ந்ததா என்பதையும் தெளிவாக வகைப்படுத்தும் நிலையில் இருக்க வேண்டும். அந்த இயலில் அனைத்து முக்கிய பிரிவுகளின் சிறப்பம்சங்கள் இடம் பெற்றிருக்க வேண்டும். அறிமுகத்தைப் படிக்கும்போதே, அவ்வியலுக்கும் மற்ற இயல்களுக்கும் உள்ள தொடர்பினை படிப்பவர்கள் புரிந்து கொள்ளும்படி இருத்தல் வேண்டும்.

- பாடப்பகுதியில் புதிய பகுதிகள் இடம் பெற்றிருப்பதோடு, அவற்றை எவ்வாறு புதிய வழிமுறைகளில் புரிந்து கொள்ள வேண்டுமென்பதையும் முன்னிலைப்படுத்த வேண்டும். மேலும் அறிமுகப் பகுதியில் அந்த பாடத்திட்டத்தில் இடம் பெறக் கூடிய கோட்பாடுகளை வருவிக்க பயன்படுத்தப்படும் முறைகளும் இடம் பெற வேண்டும்.

**பொருளியல்: பொருள்**

- பொருளியல் (Economics) என்ற சொல் ஆய்க்கனோமிக்ஸ் (Oikonomikos) என்னும் பழமையான கிரேக்கச் சொல்லிலிருந்து வந்தது. ஆய்க்கோஸ் (oikos) என்றால் இல்லங்கள் மற்றும் நேமோஸ் (nomos) என்றால் நிர்வாகம், வழக்கம் அல்லது விதி என்று பொருள்படும்.

- 'பொருளியல்' என்றால் 'இல்லங்களின் நிர்வாகம்' என்று பொருள்படும். ஆரம்பத்தில் அரசியல் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்ட இவ்வியல், 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 'பொருளியல்' என்று ஆல்.ஃ.பிரட் மார்ஷலால் பெயர் மாற்றப்பட்டது.

**பொருளியல்: அதன் இயல்புகள்**

- பொருளியலின் இயல்பினை, குறிப்பிட்ட சில பொருளியல் அறிஞர்களின் பல்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.

- பொருளியலின் இயல்பு என்பது அதன் பாடப்பொருளையும், ஏன், எப்படி அவை பாடப்பொருள்களில் இடம்பெற்றுள்ளன என்பதையும் குறிப்பிடுகின்றது பொருளியலுக்கு பல்வேறு இலக்கணம் வழங்கப்பட்டதன் காரணமாக, சில வல்லுநர்கள் பொருளியலுக்கு விளக்கம் தேடுவது மிகவும் சிரமமான செயல் என்று கூறியுள்ளனர். எடுத்துக்காட்டாக, கீன்ஸ் "அரசியல் பொருளாதாரம் தனது வரையறை மூலம் தனக்கு தானே குரல் வளையை நெரித்துக் கொள்கிறது" என்பதாக பொருளியலை அணுகுகிறார்.

- ஓர் இயலின் வரையறையானது கற்பதற்கு ஆர்வத்தைத்தூண்டுவதாகவும், வியக்கத்தக்கதாகவும், மகிழ்ச்சியளிக்கக்கூடியதாகவும் அல்லது பயனுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். உண்மையில்,

வரையறைகளே இத்தகைய சமூக அறிவியலின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்துள்ளன. அறிவியல் போன்று புதிய வரையறைகளை உருவாக்கிக்கொள்ள மக்களுக்குச் சுதந்திரம் உள்ளது. பெரும்பாலான இலக்கணம் கூறுவதற்கான வாய்ப்புகள் பொருளியலுக்கு அதிகமாக இருப்பதால்தான், உற்சாகம் தரும் ஏராளமான வரையறைகள் வருகின்றன. ஒவ்வொரு வரையறையும் பொதுமைபடுத்தப்பட்ட தனித்துவம் வாய்ந்தவை. பொருளியலின் பாடப் பொருளைப் பற்றிய ஒரு முழுமையான அறிவை அடைவதற்கு இந்தப் பல்வேறு வரையறைகளும் வழி வகுக்கின்றன.

- கருத்துக்கள் இணைந்து அதில் உள்ள சிறப்பம்சங்கள் வலியுறுத்தப்பட்டு புதிய வரையறைகள் எழுவதன் மூலம், அறிவியல் ஒவ்வொரு நிலையிலும் படிப்படியாக வளர்கிறது. மேலும், ஓர் இயல் என்பது தெளிவான வரையறையும், எல்லையும் கொண்டிருந்தால்தான் அதை கற்பது சாத்தியம் ஆகும்.

நான்கு வரையறைகள் ஒவ்வொரு குறிப்பிட்ட காலக்கட்டத்திலும் பொருளியலின் கருத்து வளர்ச்சிக்கு ஏற்ப நான்கு வரையறைகள் தரப்பட்டுள்ளன. அவை

1. தொன்மை காலத்தை உணர்த்தும் ஆடம் ஸ்மித்தினுடைய செல்வ இலக்கணம்:
2. புதிய தொன்மை காலத்தை உணர்த்தும் மார்ஷலின் நல இலக்கணம்:
3. புதிய யுகத்தை உணர்த்தும் இராபின்ஸின் பற்றாக்குறை இலக்கணம்:
4. நவீன யுகத்தை உணர்த்தும் சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணம்.

**செல்வ இலக்கணம்: ஆடம்ஸ்மித்**

- ஆடம்ஸ்மித் (1723-1790) ''நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்சு'' (1776) என்ற தனது நூலில் ''பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல்'' என்று வரையறுத்துள்ளார்.

- அவர் ஒரு நாட்டின் செல்வம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது மற்றும் அதிகரிக்கப்படுகிறது என்பதை விளக்குகின்றார். அவரைப் பொறுத்தவரை சமுதாயத்தில் உள்ள தனி மனிதர்கள் தங்கள் சுய இலாபத்தை முன்னேற்ற விரும்புவதாக அவர் கருதுகிறார். தனிமனிதர்கள் அவ்வாறு செயல்படும்போது அவர்களை திரைக்குப் பின்னாலிருந்து ஒரு புலனாக உந்து சக்தி (Invisible hand) வழி நடத்துகிறது. ஒவ்வொரு மனிதனும் சுய ஆர்வத்தால் தூண்டப்படுவதாக ஸ்மித் கூறுகிறார். ஒவ்வொரு நபரும் தனது சுய நன்மைக்காக உழைக்கிறான்.

- உற்பத்தியின் அளவினை அதிகரிக்க வேலை பகுப்புமுறையை (Division of Labour) அறிமுகப்படுத்துவதை ஸ்மித் ஆதரிக்கின்றார். சமுதாயம் மற்றும் நிறுவனங்களில் நிலவும் கடுமையான போட்டியின் காரணமாக சிறந்த பொருட்கள் கிடைக்க உதவுகின்றன. அளிப்பு ஆற்றல் மிகுந்து இருப்பதினால் நுகர்வோருக்கு குறைந்த விலையில் பண்டங்கள கிடைக்கிறது.

| |
|---|
| ஆடம்ஸ்மித்தின் நூலான ''நாடுகளின் செல்வம்'' (1776) –வெளியீட்டுக்குப்பின் பொருளியல் ஒரு தனி இயலாக உருவானது. |

**திறனாய்வு**

- ஸ்மித்தைப் பொறுத்தவரை, பொருளியல் என்பது செல்வத்தைத் திரட்டுதல்மற்றும் 'செல்வத்தைச் செலவிடுதல்' சார்ந்து நடவடிக்கைகளாகும். பொருட்சார் செல்வம் என்ற ஒன்றிற்கு மட்டுமே அதிக அளவு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. செல்வமே இறுதியானதாக கருதப்பட்டுள்ளது. இந்த கருத்தினால் பொருளாதாரத்தின் முக்கிய பகுதியான மனித நலம் அவரால் புறக்கணிக்கப்பட்டுள்ளது. மதம் மற்றும் கார்லைல் போன்றோர், நீதிநெறிக்கு புறம்பான சுயநலத்தைக் கற்றுத் தருவதாக பொருளியல் வர்ணிக்கப்படுவதால், பொருளியலை ஓர் ''இருண்ட அறிவியல்'' (dismal science) எனக் கூறியுள்ளனர்.

**நல இலக்கணம்: ஆல்.ஃ.பிரட் மார்ஷல்**

- ஆல்.ஃ.பிரட் மார்ஷல் (1842-1924) தன்னுடைய ''பொருளியல் கோட்பாடுகள்'' (1890) என்ற நூலில் பொருளியலை கீழ்வருமாறு வரையறுத்துள்ளார்:

- ''அரசியல் பொருளியல் அல்லது பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும். பொருளியல் ஒருபுறம் செல்வத்தைப்பற்றியும், முக்கியமான மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது''.

**மார்ஷல் வரையறையின் சிறப்பம்சங்கள்**

1. அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும், முடிவுமானது செல்வமே என்று பொருளியலில் கருதப்படவில்லை. மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான், செல்வத்தையல்ல.

2. பொருளியல் சாதாரண மனிதனின் நடத்தையைப் பற்றியதே; அந்தச் சாதாரண மனிதர்கள் அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி, உச்ச பட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்.

3. பொருளியல் ஒரு சமூக அறிவியல் ஆகும். அது சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிப் படிக்கிறது.

**திறனாய்வு**

1. மார்ஷல், பொருள்சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார். அவர் பொருள்சாரா நலனைத் தரக்கூடிய மருத்துவர், ஆசிரிவர் போன்றோரதுபணிகளைக் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால், அவர்களது பணிகளும் மனித நலனை மேம்படுத்துகிறது.

2. பொருள் சாரா பணிகளுக்கு வெகுமதியாக அளிக்கப்படும் பணத்தினைப் பற்றி, மார்ஷல் தனது கூலிக் கோட்பாட்டில் ஏதும் கூறாமல் புறக்கணத்துவிட்டார்.

3. மார்ஷலின் இலக்கணமானது நலன் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், நலன் என்பது தெளிவுறவரையறுக்கப்படவில்லை. நலன் என்பது மனிதருக்கு மனிதர், நாட்டுக்கு நாடு, காலத்திற்குக் காலம் வேறுபடக்கூடியது. மக்கள் நலனை மேம்படுத்தும் மற்றும் மேம்படுத்தாத பொருட்களை பற்றி மார்ஷல் தெளிவாக வேறுபடுத்தி காட்டியுள்ளார். ஆனால் நடைமுறையில், பொருளாதாரத்தில் மதுபானங்கள் போன்ற பொருட்கள் மனிதநலனை மேம்படுத்துவதான இல்லை எனினும், விலை பெறுபவையாக உள்ளதால், அவையும் பொருளியலின் எல்லைக்குள் உட்படுத்தப்படுகிறது.

4. எனினும், நலன் என்பது தனி மனிதனோ அல்லது மனிதர்களின் குழுவோ மகிழ்ச்சியாகவோ அல்லது வசதியாகவோ வாழ்வதாகும். துனிமனிதனின் நலன் அல்லது நாட்டின் நலனானது அந்த நாடு கொண்டுள்ள செல்வ இருப்பை மட்டுமே சார்ந்தது அல்ல. அது அந்நாட்டின் அரசியல், சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளையும் சார்ந்ததாகும்.

**பற்றாக்குறை இலக்கணம்: இலயனல் இராபின்ஸ்**

- இலயனல் ராபின்ஸ்,''பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை'' என்ற தமது நூலை 1932ல் வெளியிட்டார். அவரை பொறுத்த வரையில் பொருளியல் என்பது ''விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓரி அறிவியலே'' ஆகும்.

**ராபின்ஸ் இலக்கணத்தின் முக்கிய சிறப்பியல்புகள்:**

1. விருப்பங்கள் மனிதனின் தேவைகளை குறிக்கின்றன. மனிதர்கள் எல்லையற்ற தேவைகளை உடையவர்கள்.

2. மனிதர்களின் எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்களின் அளிப்புகள் குறைவானதாகவோ அல்லது பற்றாக்குறையாகவோ உள்ளன. ஒரு பொருளின் பற்றாக்குறை என்பது அதன் தேவையை பொருத்து அமைகிறது.

3. மேலும், பற்றாக்குறையான வளங்கள் மாற்று வழிகளில் பயன்தரக் கூடியவையாக உள்ளன. எனவே, மனிதன் தன் தேவைகளை வரிசைப்படுத்தி, முதலில் மிகுந்த அவசரத் தேவையை பூர்த்தி செய்கிறான். எனவே, ராயின்ஸ் கூற்றுப்படி பொருளியல் என்பது தேவைகளைத் தேர்வு செய்யும் அறிவியலாகும்.

**திறனாய்வு**

1. ராபின்ஸ் மனிதர்களுக்கு நலன் தரக்கூடிய பொருட்கள் அல்லது நலன்தரா பொருட்கள் என்று தரம் பிரிக்கவில்லை. அரிசி மற்றும் மதுபானம் ஆகிய இரண்டு உற்பத்தியிலும், பற்றாக்குறையான வளங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அரிசியை உற்பத்தி பயன்படுத்தப்படுகின்றன. அரிசியை உற்பத்தி செய்வதால் மனிதனின் நலன் மேம்படுகிறது. ஆனால் மதுபான உற்பத்தி மனிதனின் நலனை மேம்படுத்தாது. ஆனாலும், முடிவுகளைச் சமமாகவே பொருளியல் கருதுகிறது என ராபின்ஸ் கூறுகிறார்.

2. பொருளியல் என்பது நுண்ணியல் பொருளியல் கருத்துக்களான வளங்களைப் பங்கிடுதல், பண்டங்களின் விலைத் தீர்மானம் ஆகியவற்றை மட்டுமே கூறுவது அல்ல. அது பேரியல் பொருளாதார நிகழ்வுகளான தேசிய வருவாய் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதையும் உள்ளடக்கியது. ஆனால் ராபின்ஸ் பொருளியலை வளங்களை ஒதுக்கீடு செய்யும் இயலாக மட்டுமே சுருக்கிக் கூறிவிட்டார்.

3. ராபின்ஸின் இலக்கணமானது பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

**வளர்ச்சி இலக்கணம்: சாமுவேல்சன்**

- பால் அந்தோணி சாமுசேல்சன், பொருளியல் என்பது,''மனிதனும், சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு, பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும் எதிர்காலத்திலும், மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்'' என வரையறை செய்கிறார.

**வளர்ச்சி இலக்கணத்தின் முக்கியக் கருத்துக்கள்**

1. எல்லையற்ற இலக்குகளோடு தொடர்புடைய சாதனங்கள் பற்றாக்குறையானவை, அவை மாற்றுப் பயனுடையவை என ராபின்சைப் போன்றே பால் சாமுவேல்சனும் கூறுகிறார்.

2. சாமுவேல்சன் தன்னுடைய இலக்கணத்தில் காலத்தையும் சேர்த்து இயக்கத் தன்மையுடையதாக உருவாக்கியுள்ளார். தன்மையுடையதாக உருவாக்கியுள்ளார். எனவே, அவரது இலக்கணம் பொருளாதார வளர்ச்சியை உள்ளடக்கியதாக உள்ளது.

3. சாமுவேல்சனின் இலக்கணம் பணம் பயன்படுத்தப்படாத, பண்டாற்றுப் பொருளாதாரத்திற்கும் பொருந்தக்கூடியது.

4. சாமுவேல்சனின் இலக்கணம், உற்பத்தி, பகிர்வு மற்றும் நுகர்வு போன்ற பல கருத்துக்களையும் உள்ளடக்கியுள்ளது.

5. சாமுவேல்சன் பொருளியலை ஒரு சமூக அறிவியலாகக் கருதினார். ஆனால் ராபின்ஸ் பொருளியலை தனி மனிதனின் நடத்தை பற்றிய அறிவியலாகக் கருதினார்.

மேற்காண் அனைத்து இலக்கணங்களிலும் சாமுவேல்சனின் வளர்ச்சி இலக்கணமே அதிக திருப்திகரமானதாகக் கருதப்படுகிறது.

**பொருளியலின் எல்லை**

- பொருளியலின் எல்லை என்பது பொருளியலின் பாடப் பொருளாகும். பொருளியல் ஒரு கலையா அல்லது ஓர் அறிவியலா மற்றும் அறிவியலாக இருப்பின் அது இயல்புரையியலா அல்லது நெறியுரையியலா என்பது இங்கு தெளிவுபடுத்தப்படுகிறது.

**பொருளியல்: பாடப்பொருள்**

- பொருளியல், பொருளாதாரத்தில் உள்ள அமைப்புகள், தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் நடத்தைகள் மற்றும் அவற்றிற்கிடையேயான தொடர்புகளில் கவனம் செலுத்துகிறது. இது பண்டங்கள் மற்றும் பணிகளின் நுகர்வு, உற்பத்தி மற்றும் உற்பத்திக் காரணிகளுக்கான வருமானப் பகிர்வு ஆகியவைகளை ஆராய்கிறது. நடைமுறையில் இருக்கும் சமுதாய, சட்ட மற்றும் நிறுவன அமைப்புகளின் அடிப்படையில் பகுத்தறிவுள்ள மனிதர்களின் நடவடிக்கைகளைப் பொருளாதாரம் உள்ளடக்கியுள்ளது. பொருளாதார அறிவியலில், சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படாதவைகள் மற்றும் நெறிமுறை இல்லாத நடவடிக்கைகள் சேர்க்கப்படுவதில்லை.

- பொருளியல், கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி, மனிதனுடைய பன்முக விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் வழிகளைப் பற்றி ஆராய்கிறது. பற்றாக்குறை என்பது மக்களின் விருப்பத்திற்கும், அதற்குத் தேவையான வளங்களுக்குமிடையே உள்ள இடைவெளியாகும். மனிதனுடைய விருப்பங்களைக் குறைத்துக் கொள்வதன் மூலமாகவோ அல்லது மனித விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்களின் அளிப்பை அதிகரிப்பதன் மூலமாகவோ பற்றாக்குறைய சரிசெய்ய முடியும். விருப்பத்தைக் குறைத்துக் கொள்வதை விட, பண்டங்களின் அளிப்பை அதிகப்படுத்துவதே சிறந்தது என சில பருப்பொருள்சார் பொருளியல் அறிஞர்கள் கருதுகிறார்கள்.

- பொருளியல் மனித நடவடிக்கைகளோடு தொடர்புடையது. மனிதர்கள் ஒருவருக்கொருவர் தொடர்புடையவர்கள்; மற்றும் ஒருவரின் செயல் சமுதாயத்தில் உள்ள மற்றவர்களையும் பாதிக்கும். ஆகவே, பொருளியல் மனித அறிவியல் அல்லது சமூக அறிவியல் என்று அழைக்கப்படுகின்றது.

- பகுத்தறிவுள்ள அல்லது சாதாரண மனிதனின் நடவடிக்கைகளே பொருளியலின் பாடப்பொருளாகும்.

- மனிதனின் செல்வம் சார்ந்த அனைத்து நடவடிக்கைகளும் பொருளியலின் பாடப்பொருளாகும். எனவே செல்வம் சாராத மனித நடவடிக்கைகள் (பொருளாதாரம் சாரா நடவடிக்கைகள்) பொருளியலில் சேர்க்கப்படுவதில்லை. உதாரணமாக, மகிழ்ச்சிக்காக மட்டைப் பந்து விளையாடுதல், தாயின் குழந்தைப் பராமரிப்பு போன்றவை பொருளியல் பாடப் பொருளாக கருதப்படாது.

- பொருளியல் ஒரு கலையா அல்லது ஓர் அறிவியலா என்பதை தெளிவுபடுத்த வேண்டும். அது அறிவியல் எனில் அதனுடைய குறிப்பிடத்தக்க இயல்புகளை தெளிவாகக் கூறவேண்டும்.

**பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்**

(i) **பொருளியல் ஒரு கலை**

- கலை என்பது நடைமுறையில் உள்ள ஒரு குறிப்பிட்ட இலக்குகளை அடைய அறிவைப் பயன்படுத்துவதாகும். பொருளியல் அனைத்து பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வழிகாட்டுகிறது.

- A.C. பிகு, ஆல்ஃபிரட் மார்ஷல் மற்றும் பலர் பொருளியலை ஒரு கலையியல் என்கின்றனர்.

(ii) **பொருளியல் ஓர் அறிவியல்**

- அறிவியல் என்பது ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட ஓர் அறிவுத் தொகுதியாகும். தொடர்புடைய அனைத்து உண்மைகளும் சேகரிக்கப்பட்டு, வகைப்படுத்தப்பட்டு அளவிடப்பட்டு, ஆய்வு செய்யப்படுகின்றன. இவற்றின் மூலம் கிடைக்கப் பெற்ற உண்மைகளைப் பயன்படுத்தி காரண – விளைவு ஆகியவற்றுக்கிடையேயான தொடர்புகளை அறிவியல் எடுத்துரைக்கின்றது.

- அறிவியல் விதிகள் பரிசோதனைகள் மூலம் சோதிக்கப்பட்டு எதிர்கால கணிப்புகளை உருவாக்குகின்றன. இந்த விதிகள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

- இயற்பியல், வேதியியலைப் போன்றே பொருளியலும் ஓர் அறிவியல் என்று ராபின்ஸ், ஜோர்டன் மற்றும் ராபர்ட்சன் போன்ற பொருளியல் வல்லுநர்கள் கருதுகின்றனர். பொருளியல் அறிவியலைப் போன்று பல ஒருமித்த பண்புகளை கொண்டுள்ளது.

- பொருளியல், பிரச்சினைக்களுக்கான காரணவிளைவுக்களுக்கு இடையேயுள்ள உறவுகளைப் பற்றி ஆராய்கிறது. ஆகையால் பொருளியல் கலை மற்றும் அறிவியலாக கருதப்படுகிறது. கலை மற்றும் அறிவியல் ஆகிய இரண்டும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

**பொருளியல்: இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல்**

- இயல்புரை அறிவியல், உள்ளதை உள்ளவறு கூறுகிறது. அதாவது பிரச்சினையை உண்மையின் அடிப்படையில், அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்கிறது. எடுத்துக்காட்டாக, விலை ஏற்றத்தின்போது, அதற்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன.

- நெறியுரை அறிவியல், எதுவாக இருக்கு வேண்டும் என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது. இங்கு முடிவுகள் உண்மையின் அடிப்படையின் அமைவதில்லை. ஆனால் சமூக, பண்பாடு, அரசியல், சமயம் சார்ந்த வெவ்வேறான கருத்துக்களின் அடிப்படையில் அமைகிறது. இது அடிப்படையில் உள்ளுணர்வு சார்ந்ததாக இருக்கிறது.

- சுருக்கமாக, இயல்புரை அறிவியல் என்பது ஏன் மற்றும் எப்படி என்பதையும், நெறியுரை அறிவியல் எதுவாக இருக்க வேண்டும் என்பதையும் கூறுகிறது. இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை எளிதாக விளக்கலாம்.

- வட்டிவீதம் அதிகரிக்கும்போது, இயல்புரை அறிவியல் வட்டி வீதத்தை ஏன் குறைக்க வேண்டும், எப்படிக் குறைப்பது என்று கூறுகிறது. நெறியுரை அறிவியல் என்பது வட்டி வீதம் அதிகரிப்பதால் ஏற்படக் கூடிய நன்மை அல்லது தீமையைக் கூறுகிறது.

- இயல்புரை மற்றும் நெறியுரைப் பொருளியலை விளக்கும் மூன்று கூற்றுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

**இயல்புரைப் பொருளியல்**

1. பண அளிப்பு அதிகரிப்பு பொருளாதாரத்தில் விலை ஏற்றத்தை ஏற்படுத்துகிறது.

2. நீர்ப்பாசன வசதி மற்றும் இரசாயன உரங்களின் விரிவாக்கத்திற்கேற்ப உணவு தானிய உற்பத்தி அதிகரிக்கிறது.

3. பிறப்பு வீத அதிகரிப்பும, இறப்பு வீதக் குறைவும் மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தில் பிரதிபலிக்கின்றன.

**நெறியுரை பொருளியல்**

1. பணவாட்டத்தை விட பணவீக்கமே மேலானது.

2. வளர்ச்சி குறைந்த நாட்டில் ஆடம்பரப் பண்டங்களை அதிகமாக உற்பத்தி செய்வது நல்லதல்ல.

3. செல்வம் மற்றும் வருமானப் பகிர்விலுள்ள ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும்.

**பொருளியலின் அடிப்படைக் கருத்துக்கள்**

- மற்ற அறிவியல்களைப் போன்றே பொருளியலிலும் அதன் கோட்பாடுகளை விளக்கும் சில கருத்துக்கள் உள்ளன. அவற்றின் பொருள் பற்றிய முழுமையான, தெளிவான புரிதலே கோட்பாடுகளை அறிவதற்கு உதவும். அது சார்ந்த மேலோட்டமான விளக்கங்கள் பின்வருமாறு:

**பண்டங்கள் மற்றும் பணிகள்**

- பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகிய இரண்டும் மனித விருப்பங்களை பூர்த்தி செய்கின்றன. பொருளியலில் பண்டங்கள் என்பது குறிப்பிட்டு சொல்லப்படாதவரை, பணிகளையும் சேர்த்தே ''பண்டங்கள்'' என்ற சொல் குறிக்கும்.

  1. தொட்டுணரக் கூடியவை:
  2. உருவ வடிவமுடையவை, அவற்றின் வடிவத் தன்மைகள் நீண்ட காலத்திற்குப் பாதுகாக்கப்படும்:
  3. அதன் உரிமையாளரிடமிருந்து தனித்துக் காணப்படும்:
  4. சில நபர்களுக்குச் சொந்தமானவை:
  5. மாற்றக் கூடியவை:
  6. பரிமாற்ற மதிப்பு உடையவை.

**பண்டங்கள் மற்றும் பணிகளின் வகைகள்**

**அ) இலவச மற்றும் பொருளாதார பண்டங்கள்**

- இயற்கையில் அபரிதமாகக் கிடைக்கக் கூடியவை இலவசப் பண்டங்களாகும். மனிதன் அவற்றை சொந்தமாக்குவதற்கும், பயன்படுத்துவதற்கும் எந்த வித செலவும் செய்ய வேண்டியதில்லை. உதாரணம், காற்று மற்றும் சூரிய ஒளி. கடந்த காலத்தில் இலவசப் பண்டங்களுக்குத் தண்ணீரும் ஓர் உதாரணம்: ஆனால் தற்போது தண்ணீருக்கு விலை கொடுக்க வேண்டியுள்ளதால், அதை இலவசப் பண்டமாகக் கருதமுடியாது.

- நோபல் பரிசு பெற்ற மில்டன் ∴பிரிடு மேன் கருத்துப்படி ''இலவச உணவு என்று எதுவும் இல்லை''. அதாவது ஒன்றை இழக்காமல் ஒன்றைப் பெறுவது சாத்தியமில்லை என்று கூறுகிறார். இலவசம் என்பது எப்போதும் தனிமனிதனுக்கான அல்லது சமுதாயம் முழுமைக்கான செலவாகும். இதனது செலவு உள்ளடங்கியுள்ளது. பொதுப்பண்டங்கள் இலவசமாகவும், சிலருக்கு பணம் செலுத்தவதாலும் கிடைக்கப் பெறும். இது பொருளியலில் 'பிறவாய்ப்புச் செலவு' என்று கூறப்படுகிறது.

- மற்றொரு பக்கம் பொருளாதாரப் பண்டங்கள் அதிகளவில் கிடைப்பதில்லை, அவைகளின் அளிப்பு பற்றாக்குறையானது. மனிதன் அதன் மீது உரிமை கொண்டாடவும் அல்லது பயன்படுத்தவும் பணம் செலவிட வேண்டியுள்ளது.

**ஆ) நுகர்வோர் பண்டங்கள் மற்றும் மூலதன பண்டங்கள்**

- நுகர்வோர் பண்டங்கள் என்பது நேரடியாக மனித விருப்பங்களை நிறைவேற்றுவதாகும். உதாரணமாக, தொலைக்காட்சி, மரச்சாமான்கள், வாகனங்கள் போன்றவை.

- மூலதன பண்டங்கள் (உற்பத்தியாளர்கள் பண்டங்கள்) என்பவை நேரடியாக நுகர்வோருக்கு மனநிறைவு தருவதில்லை. அவை நுகர்வோர் பண்டங்களைத் தயாரிக்க பயன்படுகின்றன. எடுத்துக்காட்டாக இயந்திரங்கள், இதுநுகர்வோருக்கு நேரடியாக பயனைத் தராது. ஆனால் தொழிற்சாலைகளில் உற்பத்தியாளர்களுக்கு இது தேவைப்படுகிறது. ஒரு வீட்டில் உள்ள தையல் இயந்திரம் வியாபாரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டால், அது மூலதனப் பண்டங்களாகின்றது. இல்லையெனில் அது நுகர்வுப் பண்டமாகும்.

**இ) அழியும் பண்டங்கள் மற்றும் நீடித்து இருக்கக் கூடிய பண்டங்கள்**

- விரைவில் அழியக்கூடிய பண்டங்கள் குறுகிய காலம் கொண்டவை. அதன் ஆயுட்காலம் குறைவானது. ஊதாரணமாக மீன், பழங்கள், பூக்கள் போன்றவைகள் நீடித்து இருக்காது

- விரைவில் அழியக்கூடிய பண்டங்களை விட நீடித்து இருக்கக்கூடிய பண்டங்களின் ஆயட்காலம் சற்று நீண்டது. உதாரணமாக, மேசை, நாற்காலி போன்றவை.

**பணிகள்**

- பண்டங்களோடு சேர்ந்து பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன. பணிகளின் இயல்புகள்

- **புலனாகாப் பொருட்கள்:** புலனாகாப் பொருட்களுக்கு உருவ அடையாளம் இல்லை. ஆனால் மற்ற பண்டங்களோடு தொடர்புடையவை. உதாரணமாக அடையாளக் குறியீடு, நிறுவன நன்மதிப்பு போன்றவையாகும். ஆனால் இன்றைய நாட்களில் புலனாகாப் பொருட்கள் உருவப் பொருட்களாக சந்தைப்படுத்தப்படுகின்றன. (எ.கா.) இசையானது விரலியில் (பென்டிரைவ்) சேமிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

- **புலதரப்பட்ட பண்டங்கள்:** பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகின்றன. தரத்தின் அடிப்படையில் அவை வகைப்படுத்தப்படுகின்றன. ஒரே விதமான பணி பலதரப்பட்ட அனுபவங்கள் தருகின்றது. எ.கா. இசை மற்றும் மருத்துவர் சேவை

- **பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது:** பணிகள் அதனை செயல்படுத்துபவருக்கே உரியவை. உதாரணமாக உழைப்பாளரிடமிருந்து உழைப்பை பிரிக்க இயலாது.

- **அழியக் கூடியவை:** பண்டங்களை போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது. உதாரணமாக மட்டை பந்து விளையாட்டை காண வாங்கப்பட்ட கட்டண வில்லை, விளையாட்டு முடிந்த பிறகு பயன் தராது அதன் பயனைப் பாதுகாக்க இயலாது; அதற்கு பரிமாற்ற மதிப்பு இல்லை.

**பயன்பாடு**

**அ) பொருள்**

- பொதுவாகப் பயன்பாடு என்பது பயன்படுத்தலைக் குறிக்கும். பொருளியலில் மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டங்கள் மற்றும் பணிகளின் ஆற்றலே பயன்பாடு எனப்படும்.

- ஒரு குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட காலத்தில், தனிப்பட்ட நுகர்வோருக்கு பண்டங்கள் மற்றும் பணிகளின் மூலம் கிடைப்பதே பயன்பாடாகும்

**ஆ) பயன்பாட்டின் இயல்புகள்**

1. **பயன்பாடு உளவியல் சார்ந்தது:** இது நுகர்வோரின் மனநிலையை சார்ந்தது. (உ.ம்.) சைவ உணவு உட்கொள்பவருக்கு இறைச்சி பயன்பாட்டைக் கொடுக்காது.

2. **பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல:**(உ.ம்.) புகைப்பழக்கம் உள்ளவருக்கு சிகரெட்டிலிருந்து பயன்பாடு கிடைத்தாலும் அவரின் உடல்நலம் பாதிக்கப்படலாம்.

3. **பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல:** (உ.ம்.) நோயுற்ற ஒருவர் மருந்து எடுத்துக் கொள்ளும் போது பயன்பாடு கிடைத்தாலும், நிச்சியமாக அது மன மகிழ்வை தராது எனலாம்

4. **பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்:** ஒரு தனி நபர் ஒரே விதமான பண்டத்திலிருந்து பெறும் பயன்பாடானது இடம் மற்றும் சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடும். ஓர் உணவு தரும் பயன்பாடு அந்த உணவை அருந்தும் குழலைப் பொறுத்தும் அமையலாம்.

5. **பயன்பாடானது மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது:**ஒரு நுகர்வோர் குறைந்துசெல் பயன்பாட்டை எதிர்கொள்வார்.

6. **பயன்பாடு ஒரு உளவியல் கருத்தாகும்:** அதனை துல்லியமாக அளவிடவோ எண்ணிக்கையிடவோ முடியாது.

7. **பயன்பாடு நீதிநெறி, ஒழுக்க நெறி முக்கியத்துவம் கொண்டதல்ல:** (உ.ம்.) கத்தியை சமையல்காரர் காய்கறிகளை வெட்டப் பயன்படுத்துகிறார். கொலைகாரன் தனது எதிரியை தாக்கப் பயன்படுத்துகிறான். மனிதனின் விருப்பத்தை நிறைவு செய்யும் பண்டம் மட்டுமே பயன்பாடு கொண்டுள்ளது என பொருளியலில் கருதப்படுகிறது.

**இ) பயன்பாட்டின் வகைகள்**

**பயன்பாட்டின் வகைகள் பின்வருமாறு,**

1. **வடிவப் பயன்பாடு:** ஒரு பண்டம் அல்லது பணி ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் கிடைக்கும்போது தான் நுகர்வோர் பயன்பாட்டைப் பெறுகிறார். மூலப் பொருட்கள் உண்மை வடித்தில் இருக்கும்போது ஒரு நுகர்வோருக்குப் பயன்பாட்டை தராமல் இருக்கலாம். ஆனால் அவற்றை முடிவுற்ற பண்டமாக மாற்றும்போது அவை அவருக்குப் பயன்பாட்டை தருகின்றன. (உ.ம்.) பருத்தி மூலப் பொருளாக இருக்கும்போது நுகர்வோருக்குப் பயன்பாட்டை தருவதில்லை. ஆனால் அதை துணியாக மாற்றும்போது, துணி நுகர்வோருக்குப் பயன்பாட்டைத் தருகிறது.

2. **காலப் பயன்பாடு**: ஒருவரிடம் இரத்தத்தை தானமாக பெறுகிறபோது, மற்றொரு நோயாளி பயன்பாட்டைப் பெருவதில்லை. ஆனால் சிகிச்சையின் போது அதன் பயன்பாட்டை அடைகிறான். அதாவது இரத்தத்தைப் பயன்படுத்துகின்றபோது பயன்பாட்டைப் பெறுகிறான்.

3. **இடப் பயன்பாடு** : ஒரு மாணவன் புத்தகம் தயாரிக்கும் இடத்தில் (உற்பத்தி மையம்) வேலை செய்யும்போது, புத்தகத்தின் பயன்பாட்டைப் பெறுவதில்லை. ஆனால் அவன் கல்வி கற்குமிடத்தில் (நுகர்வு மையம்) புத்தகத்தின் பயன்பாட்டைப் பெறுகிறான்.

4. **சேவைப் பயன்பாடு**: ஒரு நுகர்வோர் தேவையான நேரத்தில் தேவைப்படுகிற பணியினைப் பெறும்போது சேவைப் பயன்பாட்டைப் பெறுகிறார். (உ.ம்.) சேவைப் பணியை வழக்குத் தொடுத்தவர் வழக்குரைஞரிடமும், நோயாளி மருத்துவரிடமும் பெறுகிறார்கள்.

5. **உடைமைப் பயன்பாடு**: ஒரு மாணவன் புத்தகம் அல்லது அகராதியை வாங்கும்போது மட்டுமே உடைமைப் பயன்பாட்டை அடைகிறான்.

6. **அறிவுப் பயன்பாடு:** அறிவுப் பயன்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட ஒன்றைப் பற்றி பெறும் அறிவாகும். விளம்பரம் மூலமாக ஒரு பொருளைப் பற்றிய தகவல் அறியப்படுகிறது. அந்த தகவல் சீர்படுத்துவதாகவும் அமையலாம். சீர்கெடுப்பதாகவும் அமையலாம். அது சீர்படுத்துதாக அமைந்தால் அதிலிருந்து பயன்பாடு பெறப்படுகிறது என்று கொள்ளலாம்.

ஈ) பயன்பாட்டை அளவிடுதல்

- மனிதனின் விருப்பம், நுகர்வின் போது நிறைவடைகிறது. நுகர்வோர் பெறும் பயன்பாடு யுடில்ஸ் (utils) என்று அளவிடப்படுகிறது. யுடில்ஸ் என்பது பயன்பாட்டின் ஓர் அளவீடாகும். ஒரு நபர் ஓர் அலகு பொருளில் இருந்து பெறும் பயன்பாட்டிற்கு சமமாக விலை தருகிறார். இதனால்தான் பயன்பாட்டை அளக்கும் அளவு கோலாக பணத்தை மறைமுகமாக பயன்படுத்தலாம் என்று மார்ஷல் குறிப்பிடுகிறார்.

**விலை**

- பண்டங்களின் மதிப்பை பணத்தால் குறிப்பிட்டால் அது விலை எனப்படும். ஒரு பண்டத்தின் விலை, அளிப்பு மற்றும் தேவை சக்தியால் தீர்மானிக்கப்படுகிறது. உற்பத்திச் செலவும் பொருளியலின் விலையை நிர்ணயிப்பதாக சில பொருளியலாளர்கள் கருதுகிறார்கள் விலையானது எந்த பண்டத்தை எந்த அளவில் உற்பத்தி செய்ய வேண்டுமென்பதைத் தீர்மானிக்கின்றது. விலை பண்டத்தை எவ்வாறு தயாரிக்கப்பட வேண்டுமென்பதையும் தீர்மானிக்கின்றது.

**அங்காடி**

- பொதுவாக அங்காடி என்பது பொருட்களை வாங்குவதும், விற்பதும் நடைபெறும் ஒரு இடமாகும். பொருளியலில் அங்காடி என்பது ஒரு விலையில் பண்டங்களையும், பணிகளையும் பரிமாற்றம் செய்திட விற்பவரும் இணைவதை குறிக்கும்.

**செலவு**

- செலவு ஒரு குறிப்பிட்ட அளவு பண்டத்தை உற்பத்தி செய்வதற்கு அல்லது வாங்குவதற்கு ஏற்படும் செலவினங்களைக் குறிக்கிறது. வருவாயுடன் ஒப்பிட்டு ஒரு நிறுவனம் பெறும் இலாபத்தையோ அல்லது இழப்பையோசெலவானது நிர்ணயிக்கின்றது.

**வருவாய்**

- பண்டங்கள் மற்றும் பணிகளை விற்று ஈட்டும் வருமானம் வருவாய் எனப்படும். ஒரு பொருளின் அனைத்து அலகையும் விற்பதன் மூலம் கிடைக்கும் பணம் மொத்த வருவாய் (TR) எனப்படும்.

**சமநிலை**

**அ) நிலையான சமநிலை**

- சமநிலை என்பது மாற்றமில்லா நிலையை அடைவது என்று ஸ்டிக்லர் குறிப்பிடுகிறார். நுகர்வோர் உச்ச மனநிறைவை பெறுகின்ற போது சமநிலையடைகிறார். உற்பத்தியாளர் உச்ச இலாபம் பெறுகின்ற போது சமநிலையடைகிறார். உற்பத்தி காரணிகள் முழு வேலை வாய்ப்பையும், உச்ச வெகுமதியையும் பெறும் போது சமநிலை அடைகின்றன. எனவே, நிலையான சமநிலை என்பது நிலையான வேலை, அளவு, வருமானம், தொழில்நுட்பம், மக்கள்தொகை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டது.

**ஆ)தனிச் சமநிலை அல்லது பகுதிச் சமநிலை மற்றும் பொதுச் சமநிலை**

- ஒரேயொரு மாறியின் (ஒரு பொருள்) மூலம் கிடைக்கக் கூடிய சமநிலை பகுதிச் சமநிலை அல்லது தனிச் சமநிலை என அழைக்கப்படுகிறது.

- பொதுசமநிலை என்பது பொருளாதாரத்தில் செயல்படுகின்ற அனைத்து மாறிகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு மொத்த பொருளாதாரத்திலும் சமநிலை ஏற்படுவதைக் குறிக்கின்றது.

**வருமானம்**

- வருமானம் என்பது ஒரு பொருளாதார அலகால் ஒரு குறிப்பிட்ட காலத்தில்,ஈட்டப்பட்டதாகவோ,ஈட்டப்படாததாகவோ, பணமாகவோ அல்லது பிறவைச் சம்பாத்தியமாகவோ பெறுவதாகும். இது குறைவானதாகவோ, அதிகமானதாகவோ இருக்கலாம். பெயரளவு வருமானம் என்பது பணமாகப் பெறக்கூடியதைக் குறிக்கும்.

- உண்மை வருமானம் என்பது பண வருமானத்தின் மூலம் வாங்கும் பண்டங்களின் அளவாகும். இது பணத்தின் வாங்கும் சக்தியாகும். இது பணவீக்க விகிதத்தை சார்ந்துள்ளது.

**பொருளியல் முறைகள், கூறுகள், கோட்பாடுகள் மற்றும் விதிகள்**

**பொருளியல் ஆய்வு முறைகள்: பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு**

- மற்ற அறிவியலைப் போன்று பொருளியலும் அதற்குரிய விதிகளைக் கொண்டுள்ளது. இந்த விதிகள் உற்பத்தி, பரிமாற்றம் மற்றும் பகிர்வு ஆகியவற்றோடு தொடர்புடையவை.

- .தர்க்க ரீதியாக ஒரு விதியை அடைவதும் அல்லது அறிவியல் ரீதியாக பொதுமைப்படுத்துவதும் ஆய்வு முறை எனப்படும்.

பொருளியலில் இருவகையான ஆய்வு முறைகளும் பயன்படுத்தப்படுகின்றன.

**அ) பொருளியல் பகுத்தாய்வு முறை**

- பகுத்தாய்வு முறையை பகுத்தறியும் முறை என்றும் கருத்தியலான முறை என்றும் கூறுவதுண்டு. பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும். புகழ்பெற்ற தொன்மை மற்றும் புதிய தொன்மை பொருளியல் அறிஞர்களான ரிக்கார்டோ, சீனியர் ஜே.எஸ்.மில், மால்தஸ், மார்ஷல், பிகு ஆகியோர் தமது பொருளியல் ஆய்வில் இம்முறையை பெரிதும் பயன்படுத்தினர்.

**பகுத்தாய்வு முறையின் படிகள்**

- **படி-1:** எந்த பிரச்சினையை ஆராய்கிறோம் என்பதை துல்லியமானகவும், தெளிவாகவும் ஆராய்ச்சியாளர் அறிந்திருக்க வேண்டும்.

- **படி-2:** ஆய்வில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப கருத்துக்களை தெளிவாக ஆய்வாளர் வரையறுக்க வேண்டும். மேலும், கோட்பாட்டின் எடுகோள்கள் சுருக்கமாக கூறப்படவேண்டும்.

- **படி-3:** அனுமானங்களின் (Assumptions) வாயிலாக கருதுகோள்களை (Hypothesis) உருவாக்க வேண்டும்.

- **படி-4:** கருதுகோள்கள் எதார்த்த உலகில் நேரடி உற்றுநோக்கல் மூலமாகவும், புள்ளியியல் ஆய்வு முறைகள் மூலமாகவும் சரிபார்க்கப்பட வேண்டும். (உ.ம்.) ஒரு பண்டத்தின் விலைக்கும் அப்பண்டம் தேவைப்படும் அளவிற்கும் தலைகீழ் உறவு உள்ளது.

**ஆ) பொருளியல் தொகுத்தாய்வு முறை**

- தொகுத்தாய்வு முறை செயலறி முறை என்றும் அழைக்கப்படுகிறது. இதனை வரலாற்றுப் பள்ளியை சேர்ந்து பொருளியல் அறிஞர்கள் பின்பற்றினர். இம்முறை தனிக் கருத்திலிருந்து பொதுக் கருத்தைப் பெறுவதாகும்.

கீழ்காணும் முறைகளின் அடிப்படையில் பொருளியல் பொதுமைகள் பெறப்படுகின்றன.

(i) பரிசோதனைகள்
(ii) உற்று நோக்குதல் மற்றும்
(iii) புள்ளியியல் முறைகள்

- **படி-1:** ஒரு குறிப்பிட்ட பொருளாதார நிகழ்வுகளைப் பற்றி புள்ளி விவரங்களை சேகரித்து, அவைகளை முறையாக ஒழுங்குபடுத்தி அவற்றிலிருந்து பொது முடிவுக்கு வருவதாகும்.

- **படி-2:** விவரங்களை உற்று நோக்குவது மூலம் முடிவுக்கு வருவதும் எளிது.

- **படி-3:** விவரங்களைப் பொதுமைப்படுத்தி கருதுகோள்கள் உருவாக்குதல்.

- **படி-4:**கருதுகோள்களை சரிபார்த்தல் (உ.ம்.) ஏங்கலின் விதி.

| |
|---|
| ஏங்கலின் விதியின்படி,''உணவுப் பண்டங்களுக்காக செலவிடப்படும் செலவின் சதவீதம், மொத்த செலவு (வருமான உயர்வின் போது) அதிகரிக்கும்போது குறையும். |

- இன்றைய பொருளாதார அறிஞர்கள் இரண்டு முறைகளும் ஒன்றை ஒன்று சார்ந்ததாக கருதுகின்றார்கள். ஆல்.ஃ.பிரட் மார்ஷலின் கூற்றுப்படி: ''நடப்பதற்கு வலது காலும், இடது காலும் எவ்வாறு அவசியமோ, அது போல பகுத்தாய்வு முறையும், தொகுத்தாய்வு முறையும் அறிவயில் ஆய்வுக்கு அவசியமாகும்''.

**பொருளாதார உண்மைகளும், கோட்பாடுகளும்**

- பொருளாதார அறிஞர்கள் ஆய்வு முறைகளை பயன்படுத்தி உண்மைகளை உற்றுநோக்குகின்றனர். எடுத்துக்காட்டாக, பண்டத்தின் விலையில் ஏற்படுகின்ற மாற்றத்தால் பண்டத்தின் தேவை அளவில் ஏற்படும் மாற்றத்தை ஆராய்கின்றார்கள்.

- இதன் மூலம் இரண்டு மாற்றங்களும் தலைகீழ் தொடர்புடையன என்பதை உணர்கிறார்கள். அதாவது விலை அதிகரிக்கும்போது பண்டத்தின் தேவையின் அளவு குறைகிறது. இவ்வாறு தேவைக் கோட்பாடு வடிவமைக்கப்பட்டுள்ளது. பின்னர் மற்ற பல கூறுகளை பல காலங்களில் பல இடங்களில் ஆராய்ந்த பிறகு உருவாகக் கூடிய கோட்பாடானது, விதியாக உயர்வுப் பெற்று உலகளாவிய விதி என்று ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

**பொருளியல் விதிகளின் இயல்புகள்**

- ஒரு விதி எனப்படுவது இருவேறு அல்லது அதற்கு மேலான காரணிகளுக்கு இடையேயான காரண காரிய தொடர்பினை விளக்குவதாகும். மார்ஷல் பொருளியல் விதிகளை போக்குரைக் கூற்றுகள் (Statement of tendencies) என்கிறார். பணவிலையால் அளவிடத்தக்க நடவடிக்கைகளின் உந்துதலை விவரிக்கும் சமூக விதிகள் என்று அவர் குறிப்பிடுகிறார்.

- இயற்கை அறிவியலில் ஒரு குறிப்பிட்ட காரணத்தைப் பின்பற்றி உறுதியான விளைவு எதிர்பார்க்கப்படுகிறது. பொருளியலில் விதிகள், காரணம் மற்றும் விளைவு ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பைக் கொண்டு இயங்குகின்றன. இங்கு புள்ளி விவரங்களின் மூலம் கணிக்கப்படுகின்ற விளைவுகள் அவசியமானதாகவும், தவிர்க்க முடியாதவையாகவும் உள்ளது. இருப்பினும் பொருளியல் விதிகள், இயல் அறிவியல்களைப் போன்று துல்லியமானவை அல்ல. புவிஈர்ப்பு விசையின் துல்லியத்தன்மையோடு ஒப்பிடக்கூடிய அளவிற்கு பொருளியல் விதிகள் இல்லை என்கிறார் மார்ஷல்.

- இயல் அறிவியலாளர்கள் அறிவியல் தன்மைகளை ஆய்வுக்கூடத்தில் கருவிகளின் துணையால் திரும்பத் திரும்ப ஆராய்ந்து தெளிவான, துல்லியமான முடிவுகளுக்கு வர இயலும். மாறுகின்ற மனநிலையைக் கொண்ட மனிதர்களின் நடத்தைகளைக் கொண்டு எதிர்பார்க்கப்படும் கணிப்பு

தவறானதாக அமையும். எனவே பொருளியல் அறிவியலில் மாற்றங்களை எளிதில் கொண்டுவர இயலாது. தேவை விதிக்கு பல விதிவிலக்குகள் உள்ளன. எனவே பொருளாதார விதிகள் மீற முடியாதவை அல்ல.

| நுண் பொருளியலின் முக்கியத்துவம் |
|---|
| • ஒரு பொருளாதாரத்தின் செயல்பாட்டை அறிந்துகொள்ள உதவுகிறது. |
| • பொருளாதாரக் கொள்கைக்கான கருவிகளைத் தருகிறது. |
| • பொருளாதார நலனின் நிலையை பற்றி ஆராய்கிறது. |
| • வளங்களை திறன்பட பயன்படுத்த உதவுகிறது. |
| • பன்னாட்டு வாணிபத்தில் பயன்படுகிறது. |
| • பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு பயன்படுகிறது. |
| • வளங்களை உத்தம அளவில் பங்கிட பயன்படுகிறது. |
| • முன் கணிப்பிற்கு அடிப்படையாக உள்ளது. |
| • விலை நிர்ணயம் செய்ய உதவுகிறது. |

- மார்ஷல், பொருளியல் விதிகளை எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதாக கணிக்க முடியாது. எனவே பொருளியல் விதிகளை அலைகளின் விதிகளோடு ஒப்பிடலாம் என்கிறார். குறைவான காற்றழுத்தம் கொண்ட அலைக்கு பின்னர் அதிக உயரமான அலைகள் வரும் என்பதை எப்படி உறுதியாக கூறமுடியாதோ, அது போல பொருளியல் விதிகளை உறுதியிட்டு சொல்ல இயலாது. ஏனெனில் மனிதனின் நடத்தைகள் எளிதில் மாறக்கூடியதாக உள்ளது (உ.ம்.) மற்றவை மாறாதிருக்கும் போது, ஒரு பண்டத்தின் விலை குறைந்தால் அப்பண்டத்தின் தேவை அதிகரிக்கும். அதற்கு மாறாக, விலை அதிகரித்தால் அப்பண்டத்திற்கான தேவை குறைகிறது என்று தேவை விதி எடுத்துரைக்கின்றது.

- ‘மற்றவை மாறாமலிருக்க’ (Ceteris paribus) எனும் அனுமானத்தை (Assumption) பயன்படுத்துவதால் பொருளாதார விதிகள் கருதுகோள்களாகின்றன. இருப்பினும் இயல் அறிவியலில் உள்ள கற்பனைக் கூறுகளைவிட பொருளியலில் உள்ள கற்பனைக் கூறுகள் குறைவானது என்பதையும் கணக்கில் கொள்ளவேண்டும்.

- பணத்தை அளவுகோலாகப் பயன்படுத்தவதால், பொருளியலின் விதிகள் சரியானதாகவும், சுருக்கமானதாகவும், பிற சமூக அறிவியல்களை விட துல்லியமாகவும் உள்ளன. எனினும், அளவுகோலான பணத்தின் மதிப்பே நிலையாக இல்லாத காரணத்தால், பொருளாதார விதிகளை எப்போதும் அனுமானங்கள் சூழ்ந்துள்ளன. பொருளாதார விதிகள் உலகறிந்த உண்மைகளாக உள்ளது. உதாரணமாக சேமிப்பு வருமானத்தை சார்ந்துள்ளது. மற்றொரு உலகறிந்து உண்மை மனித விருப்பங்கள் எண்ணற்றவை.

**பொருளியலின் உட்பிரிவுகள்**

- பொருளியல் கீழ்க்காணும் உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

**நுகர்வு**

- மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு, பொருளாதார நடவடிக்கையின் துவக்கப் புள்ளியாக விளங்குகிறது. இந்தப் பகுதியில் மனித விருப்பங்களின் இயல்புகளின் அடிப்படையில், நுகர்வோரின் நடத்தை, குறைந்துசெல் பயன்பாடு, நுகர்வோர் உபரி போன்ற பல விதிகள் விளக்கப்பட்டுள்ளன.

**உற்பத்தி**

- உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும். இது உற்பத்தி காரணிகளின் இயல்புகளை உள்ளடக்கி உள்ளது. அதாவது நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு மேலும் உள்ளீடு, வெளியீடுகளுக்கு இடையேயான உறவு ஆகியன இப்பிரிவில் இடம் பெற்றுள்ளன.

**பரிமாற்றம்**

- பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது. இதன் பிரிவு வர்த்தகம் (trade) மற்றும் வணிகத்தை (commerce) உள்ளடக்கியது. உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் நுகர்வோரின் கைகளுக்கு கிடைக்கின்றபோதுதான் நுகர்வு சாத்தியமாகிறது.

**பகிர்வு**

- உற்பத்தி என்பது உற்பத்தி காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும். இவ்வாறாக நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு போன்றவைகளின் முயற்சியால் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செய்யப்பட்ட செல்வங்கள் உற்பத்தி காரணிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இப்பிரிவில் உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்படும் ஊதியங்களான வாரம், கூலி. வுட்டி மற்றும் இலாபம் ஆகியவற்றைப் பற்றி படிக்கப்படுகிறது. பகிர்வு என்னும் பகுதி உற்பத்தி காரணிகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுவதை விளக்குகிறது.

**பொருளியலின் வகைகள்**

- பொருளியல் என்பது விரைவாக வளர்கின்ற ஒரு பாடம். இது எல்லைகள் தாண்டி விரிந்திருக்கிறது. பற்றாக்குறையான வளங்களை, திறமையான முறையில் ஒதுக்கீடு செய்து நீட்டித்த நலத்தைப் பெறுவதற்கு உதவுவது, இந்த பாடத்தின் அடிப்படை உந்துதலாகும். பின்வருவன சில முக்கிய பாடப் பிரிவுகளாகும். இதில் வளங்கள் சிறந்த முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**நுண்ணியல் பொருளியல்**

- தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை நுண்ணியல் பொருளியலில் படிக்கிறோம். பல்வேறுபட்ட சந்தை சூழலில் தொழில் நிறுவனங்கள், வாங்குபவர்கள் விற்பவர்கள் இணைந்து எவ்வாறு விலையைத் தீர்மானிக்கும் செயலில் ஈடுபடுகிறார்கள் என்பதை நுண்ணிய பொருளியலில் படிக்கப்படுகிறது.

நுண்ணியப் பொருளியல் கீழ்கண்டவற்றை உள்ளடக்கியுள்ளது.

(i) மதிப்பீட்டுக் கோட்பாடுகள் (பண்டங்கள் மற்றும் காரணிகளின் விலைத் தீர்மானம்)
(ii) பொருளாதார நலக் கோட்பாடு

| |
|---|
| நுண்பொருளியல் மற்றும் பேரியல் பொருளியல் என்ற சொற்களை முதன்முதலில் 1933 ஆம் ஆண்டு நார்வே நாட்டு பொருளியலறிஞரான பேராசிரியர் ராக்னர்.ஃபிரிஷ் பயன்படுத்தினார். பின்பு ஜே.எம்.கீன்சு 1936 ஆம் ஆண்டு வெளியிட்ட வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக் கோட்பாடு என்ற நூலின் மூலம் இந்த இரண்டு சொற்களுக்கான வேறுபாடுகளை தெளிவாக வெளிப்படுத்தி இந்த சொற்களை பிரபலமடையச் செய்தார். |

| **நுண்ணியப் பொருளியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையில் உள்ள வேறுபாடுகள்** | |
|---|---|
| **நுண்ணியப் பொருளியல்** | **பேரியல் பொருளியல்** |
| தனிப்பட்ட பொருளாதார முகவர்களான உற்பத்தியாளர், நுகர்வோர் எடுக்கும் பொருளாதார முடிவுகளை விளக்குவது நுண்ணியப் பொருளியல் பிரிவு. | இந்த பிரிவு முழுப் பொருளாதாரத்தின் முழுத் தொகுதியையும் ஆராயும் பகுதிகள் கொண்டது. (உ.ம்) மொத்த உற்பத்தி, தேசிய வருவாய், மொத்த சேமிப்பு மற்றும் முதலீடு ஆகியன. |
| பொருளாதாரத்தின் சிறு பகுதிகளை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. | நாட்டின் முழுப் பொருளாதாரத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறது. |
| இப்பிரிவு தனியொரு பண்டம் மற்றும் காரணியின் விலை எவ்வித முறையில் நிர்ணயிக்கப்படுகிறது என்பதை விளக்குகிறது. | இது பொருளாதாரத்தின் பொது விலை நிலையோடு தொடர்புடையது. |
| இது விலைக்கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. | இது வருவாய் கோட்பாடு என்றும் அழைக்கப்படுகிறது. |

| | |
|---|---|
| தனிப்பட்ட நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரது உத்தம அளவு குறிக்கோளுடன் தொடர்பு உடையது. | இது வளர்ச்சி முறையின் உத்தம அளவுடன் தொடர்புடையது. |

**பேரியல் பொருளாதாரம்**

- பேரியல் பொருளியல் நுண்ணியப் பொருளியலில் இருந்து சற்று மாறுபட்டது. இது ஒட்டு மொத்த பொருளாதார நடவடிக்கைகளை விளக்குகிறது. நாட்டு உற்பத்தி, பண வீக்கம், வேலையின்மை மற்றும் வரி போன்ற பல ஒட்டு மொத்தங்களைப் பற்றி படிக்கிறது. கீன்சின்,"வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு" என்ற நூல் தற்கால பேரியல் பொருளாதாரத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது.

**பன்னாட்டு பொருளாதாரம்**

- நவீன உலகில் எந்த ஒரு நாடும் தனிப்பட்ட நிலையில் வளர்ச்சி அடைய இயலாது என்று கருதப்படுகிறது. வேளிநாட்டு மூலதனம், முதலீடு (அயல்நாட்டு நேரடி முதலீடு) மற்றும் பன்னாட்டு வாணிபத்தின் மூலம் ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளோடு தொடர்பு கொண்டுள்ளன. இவற்றை பன்னாட்டுப் பொருளியல் விளக்குகிறது.

**பொதுப் பொருளாதாரம்**

- பொதுநிதி என்பது வருமானம் அல்லது வருவாயை அதிகரிக்க பொது அதிகார அமைப்புகள் ஒன்றோடொன்று இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கையை விளக்குகிறது. பொதுச் செலவு, பொது வருவாய், பொதுக் கடன் மற்றும் நிதி நிர்வாகம் போன்றவை பொதுநிதியின் எல்லைகளாகும்.

**வளர்ச்சி பொருளாதாரம்**

- தலா வருமானம், மனித மேம்பாட்டு குறியீடு, மகிழ்ச்சி குறியீடு ஆகியவற்றின் அடிப்படையில் நாடுகள் வளர்ச்சி அடைந்த நாடுகள், வளர்ந்துவரும் நாடுகள், பின் தங்கிய நாடுகள் என வகைப்படுத்தப்படுகின்றன. வளர்ச்சிப் பொருளாதாரமானது வளர்ந்த நாடுகளின் இயல்புகள், வளர்ச்சிக்கானத் தடைகள், வளர்ச்சிக்கு உதவும் பொருளாதாரக் காரணிகள் மற்றும் பொருளாதாரம் சாரா காரணிகள், பல்வேறு வளர்ச்சி மாதிரிகள் மற்றும் வளர்ச்சிக்கான உத்திகள் போன்றவற்றை விளக்குகிறது.

**சுகாதாரப் பொருளாதாரம்**

- சுகாதாரப் பொருளாதாரம் என்பது செயல்முறை பொருளாதாரத்தின் ஒரு பகுதியாகும். இது சுகாதாரக் குறியீடுகள், நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கும் நடவடிக்கைகள், மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கல்வி, கிராமப்புற சுகாதாரப் பணி, மருந்து விலை கட்டுப்பாடு, பிரசவத்திற்கு பின்னரான தொடர்பான பாதுகாப்பு, மகப்பேறு மற்றும் குழந்தை சுகாதாரம், சுகாதாரத்திற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு போன்றவற்றை உள்ளடக்கியதாகும்.

**சுற்றுச் சூழல் பொருளாதாரம்**

- இயற்கை வளங்களின் இருப்பை சுரண்டுதல் மற்றும் சுற்றுச்சூழல் மாசு ஆகியன விரைவான பொருளாதார முன்னேற்றத்தின் விளைவாக தீய விளைவுகளாகும். எனவே பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே உள்ள உறவை ஆராயும் சுற்றுச்சூழல் பொருளாதாரத்தை படிப்பதும் அவசியமாகும். சுற்றுச்சூழல் பொருளியலில் சூழலியல் (Ecology), பொருளியல், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றிறகிடையேயான தொடர்புடைய பிரச்சினைகளைப் பற்றி படிக்கிறது.

**அடிப்படை பிரச்சினைகள்**

| **அடிப்படைப் பொருளியல் பிரச்சினைகள்** |
|---|
| • விருப்பங்கள் எண்ணற்றவை |

- வளங்கள் பற்றாக்குறையானவை
    - இலவசமாக கிடைப்பதல்ல
- விருப்பங்களின் தெரிவு
- பொருளியல்

  பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு மக்கள் எவ்வாறு தங்களது விருப்பத்தை பூர்த்தி செய்கிறார்கள் என்பதைக் கூறுகிறது.

- வளங்கள் ஏராளமாகவும், தேவைகள் சிலவாகவும் இருந்தால் பொருளாதாரப் பிரச்சினை இருப்பதில்லை. ஆனால் இத்தகைய சூழ்நிலை ஒரு போதும் இருப்பதில்லை. எப்போதும் வளங்கள் குறைவாகவும் நமது தேவை எண்ணிலடங்காதவையாகவும் இருக்கிறது. எனவே எல்லாச் சமுதாயத்திலும் சில தெரிவுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

**என்ன உற்பத்தி செய்வது? எவ்வளவு உற்பத்தி செய்வது?**

- எந்த பண்டங்களை உற்பத்தி செய்வது? எவ்வாறு உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? எங்கு உற்பத்தி செய்வது? எவ்வளவு உற்பத்தி செய்வது? போன்ற வினாக்கள் எல்லாச் சமுதாயங்களிலும் எழுகின்றன. இவற்றிற்கான விடை சில முக்கியமான சிக்கலான முடிவுகளை சார்ந்துள்ளது:

1. உணவு, உடை, வீட்டுப்பொருட்கள் போன்றவற்றை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பரப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்வதா?

2. விவசாயப் பொருட்களை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது தொழிற்சாலைப் பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்வதா?

3. வளங்களை அதிகமாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா? அல்லது வளங்களை அதிகமாக ராணுவப் பணிகளுக்கு பயன்படுத்துவதா

4. நுகர்வுப் பண்டங்களை அதிகம் வைத்துக் கொள்வதா? அல்லது முதலீட்டுப் பண்டங்களை வைத்துக் கொள்வதா?

5. அடிப்படைக் கல்விக்கு அதிகம் செலவு செய்வதா? அல்லது உயர்கல்விக்கு அதிகம் செலவு செய்வதா?

**எவ்வாறு உற்பத்தி செய்வது?**

ஒவ்வொரு சமுதாயமும் உழைப்புச் செறிவு மிக்க தொழில் நுட்பத்தை அதிகம் பயன்படுத்துவதா?அல்லது, மூலதனச் செறிவு மிக்க தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துவதா? என்பதை முடிவு செய்யவேண்டும். அதாவது உழைப்பை அதிகம் பயன்படுத்துவதா அல்லது இயந்திரத்தை அதிகம் பயன்படுத்துவதா என்று தீர்மானிக்க வேண்டிருக்கிறது.

**யாருக்காக உற்பத்தி செய்வது?**

- ஒவ்வொரு சமுதாயமும் உற்பத்தி செய்த பண்டங்களை சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு எவ்வாறு பிரித்துக் கொடுப்பது? யார் அதிகம் பெறுகிறார்கள்? யார் குறைவாகப் பெறுகிறார்கள்? என்பதையும் அறிய வேண்டியுள்ளது. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்ச நுகர்வுக்காவது பண்டங்கள் மற்றும் பணிகள் கிடைக்கின்றனவா? என்பதையும் உறுதிசெய்ய வேண்டியுள்ளது. வளங்கள் பற்றாக்குறையாகவே இருப்பதால் மாற்று வாய்ப்புகளையும் தெரிவு செய்ய வேண்டிய கட்டாயத்தை ஒரு சமுதாயம் சந்திக்கின்றது.

- ஒரு பொருளாதாரத்தில், உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளை தனி நபர்களுக்கு ஒதுக்கீடு செய்வது போன்ற பிரச்சினைகளையும் சமுதாயம் சந்திக்க வேண்டியுள்ளது.

### உற்பத்தி வாய்ப்பு வளைகோடு

- ஏதேனும் இரு பொருள்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்ற வினாவிற்கு பதில் தரும் முறையை வடிவியல் சாதனம் மூலம் விளக்குவதே, உற்பத்தி வாய்ப்பு வளைகோடு எனப்படும். கொடுக்கப்பட்ட வளங்கள் மற்றும் தொழில்நுட்ப நிலையில், உற்பத்தி வாய்ப்பு வளைகோடானது சமுதாயத்தால் தேர்வு செய்யப்படும் பண்ட வரிசையை எடுத்துக் காட்டுகிறது.

  சில அனுமானங்களின் அடிப்படையிலேயே உற்பத்தி வாய்ப்பு வளையோடு விளக்கப் பெறுகின்றது.


  i) காலத்தில் மாற்றம் இல்லை. வளைகோட்டின் நெடுகிலும் ஒரே காலம் நிலைத்திருக்கிறது.
  ii) உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் நிலையானது.
  iii) சமுதாயத்தில் முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது.
  iv) கொடுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு இரு பண்டங்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும்.
  v) உற்பத்தி வளங்கள் முற்றிலும் இடம் பெயரக் கூடியவை.
  vi) உற்பத்திக் காரணிகளின் அளவும், தரமும் கொடுக்கப்பட்டுள்ளன.
  vii) உற்த்தியில் குறைந்துசெல் விதி நிலவுகிறது.

கீழ்க்காணும் அட்டவணையைப் பயன்படுத்தி ஓர் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டை வரையலாம்.

### உற்பத்தி வாய்ப்பு அட்டவணை

| உற்பத்தி வாய்ப்புகள் | டன் கணக்கில் உணவு உற்பத்தியின் அளவு | மோட்டார் வாகனத்தின் உற்பத்தி எண்ணிக்கை |
|---|---|---|
| I | 0 | 25 |
| II | 100 | 23 |
| III | 200 | 20 |
| IV | 300 | 15 |
| V | 400 | 8 |
| VI | 500 | 0 |

- இந்த அட்டவணையிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள தொழில் நுட்பத்தில் அனைத்து வளங்களும் உணவு உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டால், அதிகபட்சம் 500 டன் உணவை உற்பத்தி செய்ய முடியும் என்பதை அறியலாம். மாறாக, அனைத்து வளங்களையும் மோட்டார் வாகனத்தை மட்டுமே உற்பத்தி செய்ய பயன்படுத்தினால், 25 மோட்டார் வாகனங்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். இந்த எதிர்மாறான வாய்ப்புகளுக்கு இடையில், நாம் கொஞ்ச அளவு உணவை விட்டுக்கொடுத்தால், நமக்கு சில மோட்டார் வாகனங்கள் கிடைக்கும். இந்த முடிவு பொருளாதார சமூக அமைப்புகளைப் பொறுத்தே அமையும். உற்பத்தி வாய்ப்பு அட்டவணையைக் கொண்டு வரையப்படுவது உற்பத்தி வாய்ப்பு வளைகோடாகும்.




வரைபடம் 1.2.

- X -அச்சில் உணவின் அளவும்,Y - அச்சில் மோட்டார் வாகனத்தின் எண்ணிக்கையும் காட்டப்பட்டுள்ளது. வெவ்வேறு ஆறு வகையான உற்பத்தி வாய்ப்புகளும் P1, P2, P3, P4, P5 மற்றும் P6 என்ற புள்ளிகளால் குறிப்பிடப்பட்டுள்ளன.

- இருவேறு உற்பத்தி வாய்ப்பு அட்டவணைகளுக்கு இடையில், எண்ணிலடங்கா உற்பத்தி வாய்ப்புகள் இருக்கலாம். அளிக்கப்பட்ட வளங்களையும், தொழில்நுட்பத்தையும் கொண்டு ஒரு சமுதாயமோ அல்லது நிறுவனமோ உற்பத்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய வரைபாதையை உற்பத்தி வளைகோடு காட்டுகிறது. இந்த வளைகோட்டைத் தாண்டி வெளியே உள்ள (உ.ம். புள்ளிP) புள்ளிகள் அடைய முடியாதவை. ஏனெனில், சமுதாயத்தின் வளங்கள் பற்றாக்குறையாக உள்ளன. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் உள்ள P7 போன்ற புள்ளியை சமுதாயத்தால் அடைய முடியும், ஆனால் அப்போது வளங்கள் முற்றிலுமாக பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும். (உதாரணமாக சமுதாயம் P4 எனும் புள்ளியில் இருந்தால் மோட்டார் வாகனங்களின் உற்பத்தியை நிலைபெறச் செய்து உணவு உற்பத்தியை அதிகரிக்கலாம் அல்லது உணவு உற்பத்தியின் அளவை நிலைபெறச் செய்து மோட்டார் வாகனங்களின் உற்பத்தியை அதிகரிக்கலாம் அல்லது ஒரே சமயத்தில் இரண்டின் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்).

- உற்பத்தி வாய்ப்பு வளைகோடு மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி இடம் பெயர்வதற்கான காரணங்களாவன:

  1) உற்பத்தி சாதனங்களின் அளிப்பில் ஏற்படும் மாற்றம் மற்றும்
  2) தொழில் நுட்ப நிலையில் ஏற்படும் மாற்றம்.

- வளங்களின் அளிப்பு அதிகரிப்பதாலும், தொழில்நுட்ப மேம்பாட்டினாலும், காலப் போக்கில் பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றல் அதிகரிக்கலாம், இதனால் உற்பத்தி வாய்ப்பு வளைகோடு கீழே தரப்பட்டுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி AEயில் இருந்து $A_1$ $E_1$ ஆக மேல்நோக்கி இடம்பெயரும்.

  இவ்வாறு உற்பத்தி வாய்ப்பு வளையோடு மேல் நோக்கி இடம் பெயருதல் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படை அம்சமாகும்.

**உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் பயன்கள்**

- பல்வேறு ஆய்வுகளுக்கு உற்பத்தி வாய்ப்பு வளைகோடு எனும் சாதனம் பயன்படுகிறது. அவற்றில் பிரபலமான சில இங்கு விவாதிக்கப்பட்டுள்ளன.

**(i) தேர்ந்தெடுப்பின் பிரச்சினை**

- வளங்கள் பற்றாக்குறையாகவும், தேவைகள் எண்ணற்றவையாகவும் இருப்பதால் அதிக வருவாய் உள்ள குழுக்களுக்கும் குறைந்த வருவாய் உள்ள குழுக்களுக்கும் இடையே வளங்களைப் பங்கிடுதலில் சிக்கல்கள் எழலாம். வெவ்வேறு நிலையில் இருக்கிற குடிமக்களுக்கு இடையே பண்டங்களை பங்கிடுதலிலும் சிக்கல்கள் எழலாம். உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டில் பல இணைப்புகள் (பலவாய்ப்புகள்) உள்ளதால் தெரிவு சார்ந்த பிரச்சினைகள் எழாது.

**(ii) பற்றாக்குறை எனும் கருத்து**

- உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் உதவியுடன் பற்றாக்குறை எனும் கருத்தை விளக்கலாம். ஏந்த ஒரு சமுதாயமும் குறிப்பிட்ட அளவிலான வளங்களை மட்டுமே பெற்றிருப்பதால், இருக்கிற தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஒரு குறிப்பிட்ட அளவிலேயே உற்பத்தி செய்ய முடியும் என்பதை நாம் அறிவோம். பொருளாதார பற்றாக்குறையே வாழ்வின் எதார்த்த நிலை. வளங்களின் பற்றாக்குறையினால் ஏற்படும் சிரமங்களை உற்பத்தி வாய்ப்பு வளைகோடு பிரதிபலிக்கிறது

**(iii) மைய சிக்கல்களுக்கான தீர்வு**

பொருளாதாரத்தின் மையமான சிக்கல்களுக்கு உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் மூலம் விளக்கம் அளிக்க முடியும். எதை எவ்வளவு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினைக்கான தீர்வு உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் எந்த பகுதியை தேர்ந்தெடுப்பது என்ற முடிவில் அடங்கியுள்ளது. உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டின் உட்பகுதியில் உள்ள ஏதேனும் புள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால், அது அந்த பொருளாதாரம் திறனற்ற உற்பத்தி முறையையும் திறனற்ற வளங்களின் தொகுப்பினையும் கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகின்றது.

## $11^{th}$பொருளாதாரம்

## அலகு– 7

## இந்தியப் பொருளாதாரம்

**வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் என்பதன் பொருள்:**

- ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது பொதுவாக அந்நாட்டின் வருமானத்தால் அளவிடப்பட்டாலும், அது மொத்த உள்நாட்டு உற்பத்தியாலேயே (GDP) குறிப்பிடப்படுகிறது. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில். அதாவது ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த பண மதிப்பைக் குறிக்கும்.

- ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் என்பது பொதுவாக அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியால் மட்டும்ட குறிப்பிடப்படுவதன்றி, அந்நாட்டு மக்களின் உயர்ந்த வாழ்க்கைத்தரம் அல்லது மக்களின் நல்வாழ்வையும் உள்ளடக்கியதாகும். ஒரு நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தின் அளவீடுகள் என்பது மனிதவள மேம்பாட்டுக் குறியீடு (HDI) வாழ்க்கைத் தரக்குறியீடு (PQLI) மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNHI) ஆகியவற்றைப் பொறுத்தது.

**மொத்த நாட்டு மகிழ்ச்சிக் குறியீடு (GNHI):**
”மொத்த நாட்டு மகிழச்சி” என்ற தொடர் 1972 ஆம் ஆண்டு பூடான் நாட்டின் நான்காவது மன்னரான ஜிக்மே-சிங்யே-வாங்சுக் என்பவரால் உருவாக்கப்பட்டது. இது நிலைத்த முன்னேற்றம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கலாச்சார மேம்பாடு, சிறந்த நிர்வாகம்

- வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே உலக நாடுகள் வளர்ந்த மற்றும் வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகள் என்று வகைப்படுத்தப்படுகின்றன. வளர்ந்த பொருளாதார நாடுகள் என்பவை தொழில்மயமான, வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படுவதுமான நாடுகளைக் குறிக்கும். (எ.கா) அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் மற்றும் ஜப்பான். வளர்ந்த நாடுகள் என்பவை முழுமையாக பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகள் என்று குறிப்பிடப்படுகின்றன. மாறாக தன் வளங்களான நிலம், சுரங்கங்கள், உழைப்பாளர்கள் ஆகியவற்றை முழுமையாகப் பயன்படுத்தாத நாடுகளை அதாவது குறைந்த தலா வருவாய் கொண்ட நாடுகளை வளர்ந்து கொண்டிருக்கிற நாடுகள் என்று அழைக்கிறோம். (எ.கா) ஆப்பிரிக்கா, பங்களாதேஷ், மியான்மர், பாகிஸ்தான், இந்தோனேசியா, இந்நாடுகளை முன்னேனேற்றமடையாத வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய மற்றும் மூன்றாம் உலக நாடுகள் என்றும் அழைக்கலாம்.

**இந்தியப் பொருளாதாரம்:**

- உலகின் வலிமையான மற்றும் பெரிய பொருளாதாரங்களின் வரிசையில் இந்தியா 7-வது இடத்தைப் பிடித்திருக்கிறது. தொழில்மயமாதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையில் முன்னேறிக்கொண்டிருக்கும் நாடுகளில் 7 சதவீத பொருளாதார வளர்ச்சியுடன் ஒரு வலுவான இடத்தை அடைந்திருக்கிறது. நமது வளர்ச்சி விகிதம் நீடித்ததாகவும், நிலையானதாகவும் இருப்பதுடன் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பெருமளவில் கொண்டிருந்தாலும் சில பின்தங்கியிருப்பதற்கான அறிகுறிகளும் காணப்படுகின்றன.

**முன்னேறிய நாடுகளின் இயல்புகள்:**

1. உயர்ந்த நாட்டு வருமானம் வளர்ச்சி
2. உயர்ந்த தனிநபர் வருமானம்

3. உயர்ந்த வாழ்க்கைத் தரம்

4. முழு வேலைவாய்ப்பு

5. தொழில்துறையின் ஆதிக்கம்

6. உயர் தொழில் நுட்பம்

7. தொழிற்செறிவு

8. அதிக நுகர்ச்சி நிலை

9. அதிக நகர்மயமாதல்

10. சீரிய பொருளாதார வளர்ச்சி

11. சமுதாய, சமத்துவம், பாலின சமத்துவம் மற்றும் மிகக்குறைந்த வறுமை நிலை

12. அரசியல் நிலைத்தன்மை மற்றும் நல்ல ஆட்சி

**இந்தியப் பொருளாதாரத்தின் இயல்புகள்:**
**இந்தியப் பொருளாதாரத்தின் பலங்கள்:**

1. **இந்தியா ஒரு கலப்பு பொருளாதாரம்:**

- இந்தியப் பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரத்திற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இதன் பொருள் தனியார் துறையும் பொதுத்துறையும் இணைந்த சீரியமுறையில் செயல்படுவது. ஒரு புறம் மிக முக்கியமான அடிப்படை மற்றும் கனரக தொழில்கள் பொதுத்துறையால் நிர்வகிக்கப்படுகின்றன. அதே சமயம் பொருளாதார தாராள மயமாக்கலின் விளைவாக தனியார் துறையின் வளர்ச்சி முக்கியத்துவம் பெற்றுள்ளன. இதனால் தனியர் துறையும் பொதுத்துறையும் ஒரே கட்டமைப்பின் கீழ் இணைந்து செயல்பட ஏதுவாகின்றது.

2. **வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது:**

- இந்தியாவில் அதிகமானோர் வேளாண் தொழில் செய்து வருவதால் அது பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் 60% மக்கள் தங்கள் வாழ்க்கை ஆதாரமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இந்தியாவில் 17% மொத்த உள்நாட்டு உற்பத்தி வேளாண் துறையிலிருந்தே கிடைக்கிறது. பசுமைப்புரட்சி,பசுமைமாறாபுரட்சி மற்றும் உயிரி தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளால் வேளாண்மையில் தன்னிறைவு அடைந்ததுடன் அல்லாமல் உபரி உற்பத்தி அடைந்துள்ளது. பழங்கள், காய்கறிகள், வாசனைப் பொருட்கள், தாவர எண்ணெய், புகையிலை, விலங்குகளின் தோல் போன்ற இந்திய வேளாண் பொருட்கள் பன்பாட்டு வாணிபத்தின் மூலம் நமது பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்கின்றன.

3. **வளர்ந்து வரும் சந்தை:**

- முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளுக்கிடையே இந்தியாவின் சந்தை பிற நாடுகளுக்கு பல்வேறு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. நிலைத்த உள்நாட்டு உற்பத்தியை தொடர்ந்து தக்க வைத்து கொண்டிருப்பதால், பிற நாடுகள் அந்நிய நேரடி முதலீடு (FDI) மற்றும் அந்நிய நிறுவன முதலீட்டாளர் (FII) வழியாக முதலீடு செய்ய பெரும் ஆர்வம் காட்டி வருகின்றனர். இது இன்னொரு வகையில் இந்தியப் பொருளாதாரம் வலிமையாக மாறுவதற்கு உதவி செய்து வருகிறது. இந்தியா குறைந்த முதலீட்டில், குறைவான இடர்பாட்டு காரணிகளினால் அதிகமான வளர்ச்சி சாத்தியங்களைக் கொண்டுள்ளதால் நம் நாடு வேகமாக வளர்ந்து சந்தையாக மாறி இருக்கிறது.

4. **வளர்ந்து வரும் பொருளாதாரம்:**

- உலகப் பொருளாதாரத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) ஏழாவது இடத்தையும், வாங்கும் சக்தியில் (PPP) மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. விரைவான பொருளாதார வளர்ச்சியின் விளைவாக இந்தியப் பொருளாதாரம் G20 நாடுகளில் இடம் பெற்றுள்ளது.

5. **வேகமாக வளரும் பொருளாதாரம்**:

- இந்தியப் பொருளாதாரம் அதிக நிலையான வளர்ச்சியினை கொண்டது. 2016 – 17 ல் சீன மக்கள் குடியரசு நாட்டிற்கு அடுத்தபடியாக மொத்த உள்ளநாட்டு உற்பத்தி 7.1% பெற்றதன் வாயிலாக உலகின் வேகமாக வளர்ந்து வரும் நாடுகளுக்கிடையே, இந்தியா மிக வேகமாக வளர்ந்து வருகிறது என்பதை காட்டுகிறது.

6. **வேகமாக வளரும் பணிகள் துறை:**

- இந்தியாவின மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்கு பணிகள்துறையின் பங்களிப்பாகும். தகவல் தொழில்நுட்பம்,BPO போன்ற தொழில்நுட்ப சேவைகள் பேரளவு வளர்ச்சி பெற்றுள்ளது. இவை பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்கு வகிக்கின்றன. இத்தகைய வளர்ந்து வரும் பணிகள் துறைகள், நாட்டை உலக அளவில் கொண்டு செல்லவும் மற்றும் பணிகள் துறையின் பிரிவுகளை உலகம் முழுவதும் பரவச் செய்யவும் துணைநிற்கின்றன.

7. **பேரளவு உள்நாட்டு நுகர்ச்சி:**

- நமது நாட்டின் வேகமான பொருளாதார வளர்ச்சியின் காரணமாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளதால், உள்நாட்டு நுகர்வுப் பொருட்களை வங்குவது பெருமளவு அதிகரித்து இருக்கிறது. வாழ்க்கைத்தரம் உயர்ந்ததால் மக்களின் வாழ்க்கை முறையை மாற்றி உள்ளது.

8. **நகரப்பகுதிகளின் விரைவான வளர்ச்சி:**

- பொருளாதார வளர்ச்சிக்கான அறிகுறிகளில் நகரமயமாதல் முக்கிய அறிகுறியாகும். சுதந்திரத்திற்குப் பின்னர் நகர்ப்புறங்கள் விரைவான வளர்ச்சி பெற்று வருகிறது. மேம்பட்ட போக்குவரத்து மற்றும் தொடர்புகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகள் நகரமயமாதலை மேலும் விரைவுபடுத்துகின்றன.

9. **நிலையான பேரளவு பொருளாதாரம்:**

- உலக நாடுகளில் இந்தியா ஒரு நிலைத்த பேரளவு பொருளாதார நாடு என்பதை தொடர்ந்து நிருபித்து வருவதை புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. நடப்பாண்டின் பொருளாதார ஆய்வறிக்கை இந்தியப் பொருளாதாரத்தை "நிலைத்த, உறுதிவாய்ந்த, சிறந்த எதிர்காலம் கொண்ட பேரியல் பொருளாதாரத்திற்கான சொர்க்கம்" என்று குறிப்பிடுகிறது. பொருளாதார ஆய்வறிக்கையின்படி, 2014 – 2015 க்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 8% ஆக இருக்கும் என நிர்ணயித்து இருந்தபோதிலும் உண்மையான வளர்ச்சி அதைவிட சற்று குறைவாக 7.6% ஆக இருந்தது. இதன்மூலம் இந்தியா ஒரு நிலையான பேரளவு பொருளாதார வளர்ச்சியுடையது என நிருபித்து வருகிறது.

10. **மக்கள் தொகை பகுப்பு:**

- இந்திய மனித வளம் இளைஞர்களால் நிரம்பியுள்ளது. இதன் பொருள் இந்தியா, அதிக அளவு இளைஞர்கள் எண்ணிக்கையைக் கொண்டுள்ளது. இளைஞர்களே வளர்ச்சியின் அடிப்படை. இந்திய இளைஞர்களின் திறமை மற்றும் அவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சியின் காரணமாக பொருளாதார வளர்ச்சி உச்சத்தை எட்டியுள்ளது. நாடு உச்ச வளர்ச்சி அடைவதற்கு மனிதவளம் ஒரு முக்கிய பங்கு அளிக்கிறது. மேலும் இது வெளிநாட்டு முதலீட்டையும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளையும் ஈர்க்கிறது.

**இந்தியப் பொருளாதாரத்தின் பலவீனம்:**

1. **அதிக மக்கள் தொகை:**

- மக்கள் தொகைப் பெருக்கத்தில் இந்தியா, சீனாவிற்கு அடுத்த இரண்டாவது நாடாக உள்ளது. வரும் காலத்தில் சீன மக்கள் தொகையையும் மிஞ்சக்கூடும். மக்கட்தொகை வளர்ச்சி வீதம் இந்தியாவில் அதிகமாக இருப்பதால் இந்திய பொருளாதார வளர்ச்சிக்கு பெரிதும் தடையாக உள்ளது. மக்கள் தொகை அதிகரிப்பு ஒவ்வொரு 1000 பேருக்கும் 1.7 என்ற வீதத்தில் அதிகரிக்கிறது. ஆண்டு தோறும் ஏற்படும் மக்கள் தொகை பெருக்கம் ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகைக்குச் சமமாக உள்ளது.

2. **ஏற்றத்தாழ்வு மற்றும் வறுமை:**

- இந்திய பொருளாதாரத்தில் பொருளாதார ஏற்ற தாழ்வுநிலை நீடிக்கிறது. அதிக அளவில் வருமானம் மற்றும் சொத்துக்களைப் பெற்றிருக்கும் 10% இந்தியர்களின் சொத்துக்கள் மேலும் அதிகரித்தவண்ணம் உள்ளது. இதனால் சமுதாயத்தில் மீதமுள்ள அதிக அளவு மக்களின் வறுமை நிலை அதிகரிப்பதற்கும்,வறுமைகோட்டிற்கு கீழ் உள்ளவர்கள் வீதம் அதிகரிப்பதற்கும் காரணமாக அமைகிறது. பணக்காரர்கள் தொடர்ந்து பணக்காரர்களாகவும், ஏழைகள் தொடர்ந்து ஏழைகளாகவும் நீடிக்கின்றனர்.

3. **அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு:**

- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சி மற்றும் வளர்ச்சி வாய்ப்புகள் இருந்த போதும். அத்தியாவசியப் பண்டங்களின் விலை தொடர்ந்து உயர்கிறது. இந்த தொடர் விலை ஏற்றத்தால் வாங்கும் சக்தி குறைவதோடு மட்டுமல்லாமல் நிரந்தர வருமானம் இல்லாத ஏழை மக்களை பாதிக்கிறது.

4. **உள்கட்டமைப்பு பலவீனம்:**

- கடந்த பத்து இருபது ஆண்டுகளில் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் படிப்படியான முன்னேற்றம் காணப்பட்டாலும் மின் ஆற்றல், போக்குவரத்து, பண்டங்கள் பாதுகாப்பு பெட்டகம் போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகளில் இன்றளவும் பற்றாக்குறையாக உள்ளது.

5. **வேலைவாய்ப்பை உருவாக்க திறனற்ற நிலை:**

- அதிகரித்து வரும் இளைஞர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலை வாய்ப்பு வசதியை அதிகரிப்பது அவசியமாகிறது. உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சி வேலை வாய்ப்பை உருவாக்கவில்லை. எனவே, இந்தியப் பொருளாதாரம் ”வேலை வாய்ப்பற்ற வளர்ச்சி” என்ற பண்பைக் கொண்டுள்ளது.

6. **பழமையான தொழில் நுட்பம்:**

- வேளாண்மை மற்றும் சிறுதொழில் நிறுவனங்களின் தொழில்நுட்ப நிலை இன்னும் பழமையானதாகவும், வழக்கொழிந்ததாகவும் உள்ளது.

**இந்தியாவில் மக்கள் தொகை போக்குகள்:**

- மக்கள் தொகை அம்சங்கள் பற்றி அறிவியல் நெறிப்படி படிப்பதே மக்கள் தொகையியல் எனப்படும். இந்திய மக்கள் தொகை போக்கின் பல்வேறு கூறுகளாவன.

  - ❖ மக்கள் தொகை அளவு
  - ❖ வளர்ச்சி வீதம்

❖ பிறப்பு மற்றும் இறப்பு வகிதம்

❖ மக்கள் தொகை அடர்த்தி

❖ பாலின விகிதம்

❖ வாழ்நாள் எதிர்பார்ப்பு

❖ எழுத்தறிவு விகிதம்

**மக்கள் தொகை அளவு:**

| கணக்கெடுப்பு ஆண்டு | மக்கள தொகை (கோடிகளில்) | சராசரி ஆண்டு வளர்ச்சி |
|---|---|---|
| 1901 | 23.84 | - |
| 1911 | 25.21 | 0.56 |
| 1921 | 25.13 | -0.03 |
| 1931 | 27.90 | 1.04 |
| 1941 | 31.87 | 1.33 |
| 1951 | 36.11 | 1.25 |
| 1961 | 43.92 | 1.96 |
| 1971 | 54.81 | 2.20 |
| 1981 | 68.33 | 2.22 |
| 1991 | 84.33 | 2.16 |
| 2001 | 102.70 | 1.97 |
| 2011 | 121.02 | 166 |

- கடந்த நூறு ஆண்டுகளில் நான்கு மடங்கு மக்கள் தொகை அளவு அதிகரித்து உலக அளவில் சீனாவிற்கு அடுத்து 2-ம் நிலையை அடைந்துள்ளது. உலகின் புவிப்பரப்பில் 2.4% பரப்பளவு மற்றும் உலக வருவாயில் 1.2% வருவாயைப் பெற்றுள்ள இந்தியா, உலக மக்கள் தொகையில் 17.5% - ஐக் தன்னகத்தே கொண்டுள்ளது. வேறு வகையில் கூறினால் உலக மக்கள் தொகையில் 6-ல் ஒருவர் இந்தியர். உண்மையில் உத்திரபிரதேசம் மற்றும் மகாராஸ்டிரா இவற்றின் மக்கட்தொகையின் கூடுதலை ஒப்பிட்டால் மக்கள் தொகையில் மூன்றாம் இடம் பிடிக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளை விட அதிகம். இந்தியாவின் சில மாநிலங்களின் மக்கள் தொகை உலகின் பல்வேறு நாடுகளின் மக்கட் தொகையை விட அதிகளவு உடையது.

- காலரா, பிளேக், இன்ஃபுளுயன்சா போன்ற கொள்ளை நோய்கள் மற்றும் பஞ்சம் இவற்றின் காரணமாக 1911 – 1921 காலகட்டத்தில் மக்கள் தொகை எதிர்மறையாகக் குறைந்தது. 1921 ஆம் ஆண்டு மக்கள் தொகை அதிகரிக்க துவங்கியதால் அவ்வாண்டு “பெரும் பிரிவினை ஆண்டு” என அழைக்கப்படுகிறது.

- 1951 ஆண்டு மக்கள் தொகைப் பெருக்க வீதம் 1.33% லிருந்து 1.25% ஆக குறைந்து வந்தது. ஆகையால் இது “சிறுபிளவு ஆண்டு” என அழைக்கப்படுகிறது.

- 1961-ல் இந்திய மக்கள் தொகை உயர்வு வீதம் 1.96% அதாவது 2% ஆகும். ஆகையால் 1961 ஆம் ஆண்டை ”மக்கள் தொகை வெடிப்பு ஆண்டு” என்கிறோம். 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை ஒரு பில்லியன் (100 கோடி) அளவைக் கடந்தது.

- 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இளைஞர்களின் மக்கட் தொகை குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. இது “மக்கட் தொகை மாறுதலைக“ குறிக்கிறது.

**பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதம்:**

**குழந்தைகள் பிறப்பு விகிதம்:**
இது 1000 மக்கள் தொகைக்கு பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறிக்கம்.

**இறப்பு விகிதம்:** இது 1000 மக்கள் தொகைக்கு இறப்பவர்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

வெவ்வேறு ஆண்டுகளில் இந்தியாவில் குழந்தைகள் பிறப்பு விகிதம் மற்றும் இறப்பு விகிதங்கள்.

**பிறப்பு மற்றும் இறப்பு வீதம்:**

| ஆண்டு | பிறப்பு வீதம் | இறப்பு வீதம் |
|---|---|---|
| 1951 | 39.9 | 27.4 |
| 2001 | 25.4 | 8.4 |
| 2011 | 21.8 | 7.11 |

- 1951-ல் 39.9 ஆக இருந்த பிறப்பு விகிதம் 2011 ஆம் ஆண்டு 21.8 ஆக குறைந்தது. பிறப்பு விகிதம் குறைவாக இருந்தாலும் குறிப்பிடப்படும் படியானதாக இல்லை. இறப்பு விகிதம் 1951 ல் 27.4 ஆக இருந்தது. 2011 – ல் 7.1 ஆக குறைந்தது.

- மேற்கண்ட அட்டவணை பிறப்பு விகிதத்தின் குறைவானது, இறப்பு விகிதத்தின் குறைவைவிட குறைவாக உள்ளதைக் காட்டுகிறது.

- கேரளா மிகக் குறைந்த பிறப்பு விகிதம் (14.7) மற்றும் உத்திரபிரதேசம் (29.5) அதிக அளவு பிறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளது. மேற்கு வங்காளம் மிகக் குறைந்த இறப்பு விகிதத்தையும் (6.3) ஒரிசா அதிக இறப்பு விகிதத்தையும் (9.2) கொண்டுள்ளது. மாநிலங்களிடையே பத்தாண்டுகளில் (2001 – 2011) பீகார் அதிக மக்கள் தொகை பெருக்கத்தையும் கேரளா குறைந்த பிறப்பு விகிதத்தையும் கொண்டுள்ளது. பீகார் (BI), மத்திய பிரதேசம் (MA), ராஜஸ்தான் (R), உத்திரபிரதேசம் (U) ஆகிய நான்கு மாநிலங்கள் ”BIMARU” பிமரு மாநிலங்கள் எனப்படுகின்றன. அவை அதிக மக்கள் தொகை கொண்ட மரிநலங்கள் ஆகும்.

$$\text{மக்கள் தொகை அடர்த்தி} = \frac{\text{மொத்த மக்கள் தொகை}}{\text{அப்பகுதியின் நிலப்பரப்பு}}$$

- மக்கள்தொகை அடர்த்தி என்பது ஒரு சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கையைக் குறிக்கின்றது. அதாவது நிலம் மற்றும் மனிதன் விகித அளவைக் குறிக்கிறது. மொத்த நிலப்பரப்பு மாறாதிருக்கும் போது அதிகரிக்கும் மக்கள் தொகையானது மக்கள் தொகையின் அடர்த்தியை அதிகரிக்கின்றது.

**மக்கள் தொகை அடர்த்தி:**

| ஆண்டு | மக்கள் தொகை அடர்த்தி (ஒரு சதுர கிலோ மீட்டரில் உள்ள மக்கள்) |
|---|---|
| 1951 | 117 |
| 2001 | 325 |
| 2011 | 382 |

- சுதந்திரம் அடைவதற்கு சற்று முன்னர் வரை மக்கள் தொகை அடர்த்தி 100-க்கும் குறைவு. ஆனால் சுதந்திரத்திற்கு பின்னர் மக்கள் தொகை அடர்த்தியானது 1951 ல் 117 – ஆக இருந்து உயர்ந்து பின் 2001 – ல் 325 ஆக அதிகரித்தது.

- 2011- ல் மக்கள் தொகைக் கணக்கீட்டின்படி மக்கள் தொகை அடர்த்தி 382 ஆகும். இவ்வாறு மக்கள் தொகை அழுத்தம் மேலும் அதிகரிக்கிறது. கேரளா, மேற்கு வங்காளம், பீகார், உத்திரபிரதேசம் ஆகிய மாநிலங்கள் இந்தியாவின் சராசரி அடர்த்தியை விட மக்கள் தொகை அடர்த்தி மிகுந்து காணப்படுகிறது. பீகார் மிகவும் அதிக மக்கள் தொகை அடர்த்தியுடன், ஒரு சதுர கி.மீக்கு 1,102-என உள்ளது. அதனை அடுத்ததாக மேற்கு வங்காளம் 880 மக்கள் தொகை அடர்த்தி கொண்டுள்ளது. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 17 நபர்கள் என்ற அளவில் அருணாசலப் பிரதேசம் மிக குறைவான மக்கள்தொகை அடர்த்தியைப் பெற்றுள்ளது.

**பாலின விகிதம்:**

- மக்கள் இது 1000 ஆண்களுக்கு உள்ள பெண்களின் விகிதத்தை குறிக்கிறது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆண் பெண் பாலின விகிதத்தை அளவிடவும், பாலினச் சமநிலையை பிரபலப்படுத்துவதற்கான முக்கியமான சுட்டிக் காட்டியாகும்.

**பாலின விகிதம்:**

| கணக்கெடுப்பு ஆண்டு | பாலின விகிததம் (1000-ஆண்களுக்கு உள்ள பெண்கள் வீதம்) |
|---|---|
| 1951 | 946 |
| 2001 | 933 |
| 2011 | 940 |

- இந்தியாவில் பெண்களை விட ஆண்களின் பெருக்க விகிதம் அதிக சாதகமாக உள்ளது. கேரளாவில், 2011 ஆம் ஆண்டு கணக்கீட்டின்படி 1084 என்ற அளவில் வயது வந்தோர் பாலின விகிதம் இருந்தது. இறுதியாக 2011ல் எடுக்கப்பட்ட மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி பாலின விகிதம் அதிகரித்து உள்ளது. 2011-ன் படி ஹரியானா மிகக்குறைந்த பாலின விகிதமான 877-யும் கேரளா மற்றும் மாநிலங்களை விட பெண்கள் பாலின விகிதம் அதிகரித்து 1000 ஆண்களுக்கு 1084 பெண்களைக் கொண்டுள்ளது.

**பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பு:**

- பிறப்பின் போது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் அளவே வாழ்நாள் எதிர்பார்ப்பு எனக் குறிக்கப்படுகிறது. வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் அதிகரித்து வருகிறது. இறப்பு விகிதம் அதிகமாக இருக்கும் போது வாழ்நாள் காலம் குறைவாகவும், மாறாக இறப்பு விகிதம் குறைவாக இருக்கும் போது வாழ்நாள் காலம் அதிகமாகவும் உள்ளது. வேறு வகையில் கூறுவதானால் அதிக வாழ்நாள் காலம், குறைந்த இறப்பு விகிதத்தையும், குறைந்த வாழ்நாள் காலம் அதிக இறப்பு விகிதத்தையும் குறிப்பிடுகின்றது.

**வாழ்நாள் எதிர்பார்ப்பு**

| ஆண்டு | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1951 | 32.5 | 31.7 | 32.1 |
| 1991 | 58.6 | 59.0 | 58.7 |
| 2001 | 61.6 | 63.3 | 62.5 |
| 2011 | 62.6 | 64.2 | 63.5 |

- 1901 – 1911 ஆண்டுகாலங்களில் வாழ்நாள் எதிர்பார்ப்பு விகிதம் 23 வருடங்கள் மட்டுமே ஆகும். இது 2011-ல் 63.5 வருடங்கள் என்ற அளவில் அதிகரித்தது இதற்கு முக்கியக் காரணம் இறப்பு விகிதம் குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததே ஆகும். ஆயினும் மற்ற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் இந்தியாவின் வாழ்நாள் எதிர்பார்ப்பு காலம் குறைவே ஆகும்.

**எழுத்தறிவு விகிதம்**

- இது மொத்த மக்கள் தொகையில் எழுத்தறிவு பெற்றவர்கள் எண்ணிக்கை விகிதத்தை குறிப்பிடுகிறது. 1951-ல் ஆண்கள் நான்கில் ஒருவர் மற்றும் பெண்கள் பன்னிரெண்டில் ஒருவர் என்ற அளவிலேயே எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை இருந்தது. சராசரியாக ஆறு பேருக்கு ஒருவர் மட்டுமே எழுத்தறிவு பெற்றவர் ஆவார். இது 2011ல் ஆண்கள் 82% மற்றும் பெண்கள் 65.5% என்ற அளவில் ஒட்டு மொத்த எழுத்தறிவு விகிதம் 74.04%. இது மற்ற வளர்ந் நாடுகள் மற்றும் இலங்கையைக் காட்டிலும் கூட மிகவும் குறைவு.

| கணக்கெடுப்பு ஆண்டு | கல்வியறிவு பெற்றவர்கள் | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| 1951 | 18.3 | 27.2 | 8.9 |
| 2001 | 64.8 | 75.3 | 53.7 |
| 2011 | 74.04 | 82.1 | 65.5 |

- கேரளா 92% - உடன் அதிக எழுத்தறிவு விகிதமும், அடுத்தப்படியாக கோவா (82%) எழுத்தறிவு விகிதமும் ஹிமாச்சலப் பிரதேசம் (76%) மகாராஷ்டிரா (75%) மற்றும் தமிழ்நாடு (74%) என அடுத்த இடங்களைப் பிடிக்கிறது. 2011-ன் படி பீகார் 53% குறைவான எழுத்தறிவு விகிதம் பெற்ற மாநிலமாக உள்ளது.

**இயற்கை வளங்கள்:**

- ஒரு நாட்டில் இயற்கையிலிருந்து பெறப்படும் வளங்கள் இயற்கை வளங்கள். காடு, நீர், கனிம வளங்கள் மற்றும் ஆற்றல் சக்திகள் ஆகியன முக்கிய இயற்கை வளங்கள் ஆகும். அதிக இயற்கை வளங்களைக் கொண்டுள்ள இந்தியா பெருவாரியான ஏழை மக்களையும் கொண்டுள்ளது. இயற்கை நமக்கு பல்வேறு காலநிலை, பாசனத்திற்கான பல்வேறு ஆறுகள், மின் சக்தி, அதிக கனிமவளங்கள் காடுகள் மற்றும் பல்வேறு மண் வளங்களை அளிக்கிறது.

**இயற்கை வளங்களின் வகைகள்**

**புதுப்பிக்கக்கூடிய வளங்கள்:**
நீண்டகாலங்கள் நிலைத்து இருக்கக்கூடிய மீண்டும் உருவாக்கக்கூடிய வளங்கள் எ.கா. காடுகள், வனவிலங்குகள், காற்று, கடல்வளங்கள், நீர்மின் சக்தி, உயிரினத் தொகுதி, காற்றாலை மின் உற்பத்தி போன்றவை.

**புதுப்பிக்க இயலாத வளங்கள்:**
மீண்டும் உருவாக்கப்பட முடியாத நிலைத்து இருக்க முடியாதவைகள் எ.கா. படிம எரிபொருட்கள் நிலக்கரி, பெட்ரோலியம் கனிமங்கள் போன்றன.

**மண் வளம்:**

- இந்தியா மொத்த பரப்பளவில் 32.8 லட்சம் சதுர கிலோமீட்டர் நில பரப்புடன் உலகில் ஏழாவது இடத்தை பெற்றுள்ளது. இது உலக நிலப்பரப்பில் 2.42% ஆகும். இந்தியா நிலப்பரப்பளவில் உண்மையில் பெரியநாடு என்ற போதும் மிகப்பெரிய மக்கட் தொகை அளவினால் நிலப்பரப்பு – மனிதன் விகிதம் சாதகமானதாக இல்லை.

- வேளாண் புள்ளி விவர அறிக்கையின்படி, அதிக விவசாய பரப்பில் விவசாயம் செய்பவர்கள் (10 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேலும்) குறைவான எண்ணிக்கையிலும் மிக குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் (1 ஹெக்டேர் அதற்கும் குறைவு) அதிகமான எண்ணிக்கையிலும்

இருக்கின்றனர். இது நிலம் துண்டாடப்படுதால், மேலும் பிரிவினையைக் கூடும் என்பபதையே காட்டுகிறது.

**வனவளம்:**

- 2007 – ம் ஆண்டு கணக்கீட்டின் படி இந்தியாவின் காடுகள் 69.09மில்லியன் ஹெக்டேர் அதாவது மொத்த நிலப்பரப்பில் 21.02% ஆகும். இதில் 8.35 மில்லியன் ஹெக்டர் அடர்ந்த காடுகள்,31.90 மில்லியன் மில்லியன் ஹெக்டேர் காடுகள் ஓரளவு அடர்ந்த காடுகள் மற்றும் 28.84 மில்லியன் ஹெக்டேர் காடுகள் பரந்தவெளி காடுகள்.

**முக்கியமான கனிம வளங்கள்:**

1. **இரும்புத்தாது:**

- இந்தியாவில் உயர்தரமான இரும்புத்தாது அபரிமிதமாகக் காணப்படுகிறது. (ஹேமடைட்) இரும்பு தாது 4630 மில்லியன் டன் மற்றும் (மேக்னடைட்) இரும்புத்தாது 10619 மில்லியன் டன் அளவிற்கு இரும்புத்தாது நமது நாட்டில் இருப்பு உள்ளது. ஹேமடைட் இரும்புத்தாது அதிகமாக சத்தீஸ்கர், ஜார்கண்ட்,ஒடிசா, கோவா மற்றும் கர்நாடகா ஆகிய இடங்களில் கிடைக்கிறது. மேக்னடைட் தாது கர்நாடகாவில் உள்ள மேற்கு கடற்கரையில் அதிகம் கிடைக்கிறது. கேரளா, தமிழ்நாடு மற்றும் ஆந்திரப்பிரதேசங்களிலும் சில இடங்களில் இரும்புத்தாது காணப்படுகிறது.

2. **நிலக்கரி மற்றும் பழுப்பு நிலக்கரி:**

- பூமிக்கு அடியில் அதிகமாக கிடைக்கக் கூடிய கனிமங்களில் நிலக்கரி முக்கியமானதாகும். சீனா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாட்டிற்கு அடுத்தபடியாக நிலக்கரி உற்பத்தியில் மூன்றாவது இடத்தில் இந்தியா உள்ளது. மேற்கு வங்காளம், பீகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா மற்றும் ஆந்திரபிரதேசம் முக்கிய நிலக்கரி கிடைக்கக்கூடிய இடங்களாகும். வங்காளம், ஜார்கண்ட் மாநில நிலக்கரி வயல்களிலிருந்து அதிக அளவு நிலக்கரி கிடைக்கிறது.

3. **அலுமினியத்தாது (பாக்சைட்)**

பாக்சைட் அலுமினியம் தயாரிக்கப் பயன்படும் முக்கியமான தாது ஆகும். கிழக்குக் கடற்கரையில், ஒடிசா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய இடங்களில் அதிக அளவு பாக்சைட் தாது செறிந்து காணப்படுகிறது.

4. **மைக்கா:**

- மைகா ஒரு வெப்பத்தை தடுக்கும் கனிமம் மற்றும் அரிதிற் மின் கடத்தி ஆகும். இந்தியா மொத்த வியாபாரத்தில் 60% பங்குடன், மைக்காதாள் உற்பத்தியில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. பெக்மடைட் எனப்படும் மைக்கா வகை ஆந்திர பிரதேசம், ஜார்க்கண்ட், பீகார் மற்றும் ராஜஸ்தானில் கிடைக்கிறது. மின் உபகரணங்களில் மின் தடுப்பானாக பயன்படுத்தப்படுகிறது.

5. **சுத்திகரிக்கப்படாத எண்ணெய்:**

- இந்தியாவில் அஸ்ஸாம் மற்றும் குஜராத்தின் பல இடங்களில் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் எடுக்கப்படுகிறது. டிக்பாய், பாடர்பூர், நாகர்காட்டிகா, காசிம்பூர், பள்ளியரியா, ருத்ராபூர், சிவசாகர், மார்ன் (அஸ்ஸாமின் அனேக இடங்கள்) காம்பே வளைகுடா அங்கலேஸ்வர் மற்றும் காலோல் (குஜராத்தின் அனேக இடங்கள்) ஆகியவை முக்கியமான எண்ணெய் வளங்கள் உள்ள இடங்களாகும்.

6. **தங்கம்:**

- இந்தியா குறைந்த அளவே தங்க வளம் இருப்பு பெற்று விளங்குகிறது. மூன்று முக்கிய தங்கச் சுரங்கப் பகுதிகள் உள்ளன. கோலார் மாவட்டத்தில் கோலார் தங்க வயல் சுரங்கத்திலும் ரெய்ச்சூர் மாவட்டத்தில் உள்ள ஹட்டி தங்க வயல் சுரங்கத்திலும் (இரண்டும் கர்நாடகாவில்

உள்ளது) மற்றும் ஆந்திர மாநிலம் அனந்தபூர் மாவட்டத்தில் உள்ள ராம்கிரி தங்க வயல் சுரங்கத்திலும் ஓரளவு தங்கம் கிடைக்கிறது.

7. **வைரம்:**

- UNECE அறிக்கையின்படி நாடு முழுவதிலும் 4582 ஆயிரம் காரட் வைரங்கள் கிடைக்கின்றன. அதில் அதிகமாக மத்தியபிரதேசத்தின் பன்னாவிலும், ஆந்திரபிரதேசத்தில் கர்னூல் மாவட்டம் ராமல்ல கோட்டா போன்ற இடங்களிலும், கிருஷ்ணா நதியின் படுகையிலும் கிடைக்கிறது. புதிதாக ராய்பூர் இம்பெர்லி சுரங்கம் ராஜ்பூர் மற்றும் சட்டீஸ்கரிலுள்ள பாஸ்டர் மாவட்டத்திலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

- ஒடிஷாவின் நியுபடா மற்றும் பார்கர் மாவட்டம், ஆந்திராவின் நாராயணபேட் மத்தூர் கிருஷ்ணா பகுதி, கர்நாடகாவின் ராய்ச்சூர் குல்பர்ஹா மாவட்டத்தில் ரெய்சூர் ஆகிய சில வைரம் கிடைக்கக்கூடிய மற்ற இடங்களாகும்.

**கட்டமைப்பு வசதிகள்:**

- கட்டமைப்பு மேம்பாடு என்பது பல்வேறு வளர்ச்சிக்கு உதவும் வகையிலான கட்டமைப்புகளாகும் இது இரு வகைப்படும்.

1. பொருளாதார கட்டமைப்பு 2. சமூக கட்டமைப்பு

**பொருளாதார கட்டமைப்பில் உள்ளடக்கியது:**

- போக்குவரத்து தொலை தொடர்பு, ஆற்றல் வளங்கள், நீர்பாசனம் பண மற்றும் நிதிநிறுவனங்கள் முதலியனவாகும்.

**சமூக கட்டமைப்பில்:**

- கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி, சுகாதாரம் வீட்டு வசதி மற்றும் பொது வசதிகள் ஆகியன அடங்கியுள்ளன.

**பொருளாதார கட்டமைப்பு வசதிகள்:**

- பொருளாதார கட்டமைப்பு வசதிகள் நாட்டின் உற்பத்தி மற்றும் பகிர்வு வசதிக்கு பயன்படுவதாகும்.

- உதாரணமாக, இருப்புப் பாதைகள், சரக்கு வாகனங்கள், தபால் மற்றும் தொலை தொடர்பு நிலையங்கள், துறைமுகங்கள், கால்வாய்கள், மின் உற்பத்தி நிலையங்கள், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் ஆகியவை பொருளாதார கட்டமைப்புக்கு உதவுகின்றன. இவை பண்டங்கள் பணிகள் உற்பத்திக்கு உதவுகின்றன.

**போக்குவரத்து:**

- உறுதியான பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்து இடங்களையும் நன்றாக இணைக்ககூடிய திறன்மிகு போக்குவரத்து முறை தேவைப்படுகிறது.

- இந்தியா இருப்புப் பாதை, சாலை, கடல்வழி (கப்பல் போக்குவரத்து) மற்றும் வான்வழி போக்குவரத்தின் நல்ல கட்டமைப்பை பெற்றுள்ளது. சாலைப் போக்குவரத்தில் 30 லட்சம் கி.மீ நீளம் கொண்ட சாலைகளால் உலகத்தின் மிகப்பெரிய சாலை போக்குவரத்து கொண்ட நாடாக திகழ்கிறது. ஆசியாவில் மிகப்பெரிய இருப்புப் பாதை வழிகளிலும், உலகின் நான்காவது பெரிய போக்குவரத்து அமைப்பாகவும் விளங்குகிறது. இந்தியாவின் இருப்புப் பாதை நீளம் உள்ளது 63,000 கி.மீ இதில் 13,000 கி.மீ மின் மயமாக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் முக்கியமான துறைமுகங்களான கொல்கத்தா, மும்பை, சென்னை, விசாகப்பட்டினம், கோவா ஆகிய இடங்களில் 90% கடல் வழி வாணிபமும், உலகின் பல பகுதிகளிலிருந்தும் சரக்கு கப்பல்கள்

மற்றும் பயணிகள் கப்பல்கள் பொருட்கள் இறக்கும் இடங்களாகவும், உலகின் அதிக பயணிகள் வந்து போகும் இடங்களாகவும் உள்ளன. இந்தியாவின் முக்கிய நகரங்களை வான் வழி போக்குவரத்து நாட்டின் பெரிய நகரங்கள் மற்றும் சிறு நகரங்களை இணைக்கின்றன. உள்நாட்டு விமானச் சேவையை இந்தியன் ஏர்லைன்ஸ் மற்றும் தனியார் விமான சேவைகள் செய்து வருகின்றன. பன்னாட்டு விமானப் போக்குவரத்து ஏர் இந்தியன் நிறுவனம் வழங்கி வருகிறது.

- இந்திய இரயில்வே முதல் Wi-fi-வசதியை பெங்களுருவில் தொடங்கியது.
- இந்திய விமான போக்குவரத்து நிறுவனம், ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் ஆகியவை 27-8-2007 அன்று ஒன்றாக இணைத்தது.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் துறைமுகங்களின் மேலாண்மை மற்றும் வளர்ச்சிக்கு, குறிப்பாக சிறு துறைமுகங்களின் வளர்ச்சிக்கு வழிகாட்ட 1950-ல் தேசிய துறைமுக வாரியம் உருவாக்கப்பட்டது.

**ஆற்றல்:**

- நம் வாழ்க்கைக்கு தேவையான அங்கங்களில் ஒன்று மின் ஆற்றலாகும். இன்றைய நவீன தொழில்நுட்ப காலத்தில் மின்சாரம் இன்றி நம்மால் வாழ்வது சிரமம். மின் உற்பத்திக்கு பயன்படுத்துக் கிடைக்கக்கூடிய மூல வளங்கள் அடிப்படையில் அவை இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

1. புதுப்பிக்க இயலாத மின் ஆற்றல் மூல வளங்கள்
2. புதுப்பிக்கக்கூடிய மின் ஆற்றல் மூல வளங்கள்

1. **புதுப்பிக்க இயலாத மின் ஆற்றல் மூலங்கள்:**

- இதன் பெயருக்கு ஏற்றார் போல் இத்தகைய வளங்களை நாம் மறுபடியும் பயன்படுத்த முடியாது. அவை தீர்ந்து விட்டால் மறுபடியும் உருவாக்க முடியாது. இத்தகைய ஆற்றல் மூலங்கள் தொடர்ந்து பயன்படுத்திட அவை காலப்போக்கில் தீர்ந்து போகும். உதாரணம் நிலக்கரி, பெட்ரோலியம், இயற்கை வாயு மற்றும் பல.

2. **புதுப்பிக்கக்கூடிய மின்சக்தி மூல வளங்கள்:**

- இத்தகைய வளங்களை மீண்டும் மீண்டும் பயன்படுத்த இயலும் ஏனென்றால் இத்தகைய வளங்கள் தீர்த்து போகாதவை. இவை ஏராளமாகவும், முற்றுப் பெறாதவைகளாகவும் இருக்கின்றன.

  ஆவை

  1. சூரிய சக்தி
  2. காற்று சக்தி
  3. அலைகள் சக்தி
  4. புவி வெப்ப சக்தி
  5. உயிரி எரிவாயு சக்தி

- சில நேரங்களில் புதுப்பிக்க கூடிய வளங்களை, வழக்கில் இல்லாத ஆற்றல் எனவும் அழைப்பதுண்டு. காரணம் இவ்வளங்கள் கொண்டு முன்காலங்களில் மின் ஆற்றல் உற்பத்தி செய்யப்பட வில்லை அல்லது வழக்கத்தில் இல்லை எனலாம்.

**சமூகக் கட்டமைப்பு:**

- மனித வளங்களை மேம்படுத்துவதும், பொருளாதார வளர்ச்சிக்கு மறைமுகமாகத் துணை செய்வதுமான அமைப்புகளை சமூகக் கட்டமைப்புகள் என்கிறோம். இந்த அமைப்புகள் உற்பத்தி மற்றும் பகிர்வுக்கு வெளியே இருக்கின்றன. இந்த சமூக அமைப்புகளின் மேம்பாடு மனித வளங்களின் திறமையையும், உற்பத்தி திறனையும் அதிகரிக்கின்றன. (எ.கா) பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் மற்றும் பொது வசதி மற்றும் இதர குடிமை வசதிகள், குறைவான சமூக அடிப்படைக் கட்டமைப்பினால், இந்தியப் பணியாளர்களின் உற்பத்தித் திறன் குறைவாக இருக்க காரணமாக உள்ளது சமூகக் கட்டமைப்புகளின் நிலை மற்றும் வளர்ச்சி பற்றி காண்போம்.

**கல்வி:**

**இந்தியாவில் கல்வி:**

- இந்தியாவில் குருகுல முறையில் பன்னெடுங்காலமாக கல்வி போதிக்கப்பட்டது. தற்போது வளர்ந்து வரும் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப இந்தியக் கல்வி முறை வேகமாக வளர்ந்து வருகிறது. மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகம் (MHRD) தம் நாட்டின் கல்விக் கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

**இந்திய கல்வி முறை:**

- 1976 வரை மாநில அரசின் பொறுப்பில் இருந்த கல்வி அதன்பிறகு மத்திய மாநில அரசுகளின் கூட்டுப்பொறுப்பில் வந்தது. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டுதுறை கல்விக்கான வரவு செலவுகளை மேற்கொள்கிறது.
  இந்திய கல்வி முறை, அடிப்படையில் ஆறு நிலைகளைக் கொண்டுள்ளது.

  - குழந்தைக்கல்வி
  - தொடக்க கல்வி
  - இடைநிலைக் கல்வி
  - மேல்நிலைக் கல்வி
  - இளங்கலைப் பட்டம்
  - முதுகலைப் பட்டம்

**இந்திய கல்வி நிறுவனங்கள்:**

- இந்திய கல்வி முறை 10, +12 முறையைக் கொண்டுள்ளது. உயர் கல்வியைப் பொறுத்த அளவில், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், பல்வேறு படிப்புகளை மற்றும் பாடங்களை வழங்கி வருகின்றன. பல்கலைக்கழக மானியக் குழுச் (UGC) சட்டத்தின்படி பல்கலைக்கழகங்களின் தரம் அளவிடப்படுகிறது. கல்வித்துறை என்பது பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களை உள்ளடக்கியது. இது சமூதாயத்தின் எல்லா பிரிவு மக்களுக்கும் நடுநிலையான கல்வியளிக்கும் அமைப்பு ஆகும். வரவு செலவுத் திட்டத்தில் 3% (GDP) நிதி கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டு, பெருமளவு நிதி பள்ளிக் கல்விக்கே செலவிடப்படுகிறது. இருப்பினும் ஒரு மாணவருக்கு ஆகும் கல்விச் செலவு இன்னமும் குறைவாகவே இருக்கிறது.

**உடல் நலம்:**

1. **இந்தியாவில் உடல் நலம்:**

- இந்தியாவின் உடல்நலம் மாநில அரசின் பொறுப்பில் வருகிறது. மத்திய சுகாதாரம் மற்றும் நலவாழ்வு கழகம் பல்வேறு நலக் கொள்கைகளையும் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகிறது. மத்திய நலத்துறை அமைச்சகம் நலத்துறையின் நிர்வாகத்தையும், அதற்கான தொழில்நுட்ப தேவைகளையும் கவனித்துகொள்கிறது.

- இந்தியாவில் உடல்நலம் பேணுதல் பல முறைகளில் (பலவடிவங்களில்) நடக்கிறது. ஆயுர்வேதம், சித்தா, யுனானி, மூலிகை மருத்துவம், ஹோமியோபதி, ஆங்கில மருத்துவம், யோகா போன்ற பல முறைகள் இங்குண்டு. ஒவ்வொன்றும் தனித்தனி சிகிச்சை முறைகள் மற்றும் சிறப்புக் குணங்கள் உள்ளன. இந்தியாவில் மருத்துவ சிகிச்சை மேற்கொள்ள நடுவண் நலத்துறை அமைச்சகத்திடமிருந்து முறையான அனுமதி பெறவேண்டும். அனைத்து மருத்துவ நடைமுறைகளும் ஓரே அமைச்சகத்தின் கீழ் (ஆயுஷ் AYUSH) தற்போது உள்ளன.

2. **இந்தியாவில் உடல்நலப் பணிகள்:**

- இந்தியாவில் உடல்நலப்பணிகள் மத்திய நலத்துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்றன. மாநிலங்களைப் பொறுத்த வரையில் கேரளா மற்ற மாநிலங்களை விட உடல் நலம் பேணுதலில் சிறப்பான இடத்தை பெற்றிருக்கிறது. மற்ற முன்னேறிய நாடுகளை ஒப்பிடுகையில் இந்தியாவில் உடல்நலம் பேணுதல் திருப்திகரமானதாக இல்லை. இலங்கையை விட இந்தியாவில் உடல் நலம் பேணுதல் குறைவாக உள்ளது.

**இந்தியப் பொருளாதாரச் சிந்தனையாளர்களின் பங்களிப்பு:**

**திருவள்ளுவர்:**

- திருவள்ளுவரின் பொருளாதாரக் கருத்துக்கள் காலத்தால் அழியாத, அறநூலான திருக்குறளில் காணக் கிடைக்கின்றன. திருவள்ளுவரின் காலம் குறித்து பல்வேறு கருத்துகள் அறிஞர்கள் மத்தியில் நிலவினாலும் பொதுவாக பொ.ஆ.மு. மூன்றாம் நூற்றாண்டின் சங்க காலத்தையே அவரின் காலமாகக் கருதலாம். திருவள்ளுவரின் கருத்துக்கள் நடைமுறைக்கு ஏற்றவைகளாகவே இன்றும் கருதப்படுகின்றன.

- வள்ளுவரின் நிறைய பொருளாதாரக் கருத்துகளை திருக்குறளின் இரண்டாம் பகுதியான பொருட்பாலில் காணப்படுகின்றன. பொருட்பால் செல்வத்தோடு தொடர்புடையது. வாழ்வின் அடிப்படைகளை அறிந்தவர் வள்ளுவர். அவர் மழையை வாழ்வின் பெரும் ஆதாரமாகக் கருதினார். மழை தான் உணவு தருகிறது. மழைதான் பொருளாதார வாழ்வில் அடிப்படையை உருவாக்குவதாக நம்பினார். வாழ்வின் அடிப்படை பொருளாதார தேவையான வேளாண்மை மழையைச் சார்ந்திருக்கிறது அழிமானத்தையும் தரும், அழிமானத்திலிருந்து மீண்டும் தழைத்தோங்கவும் செய்யும் ஆகிய இரண்டையும் செய்யும் தன்மையுடையது மழையாகும்.

**உற்பத்திக் காரணிகள்:**

- உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, முதல், அமைப்பு, காலம், தொழில்நுட்பம் ஆகியவை குறித்து பல கருத்துகளை வள்ளுவர் எளிமையாகச் சொல்லியிருக்கிறார்.

**“பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த**
**மக்கட்பேறு அல்ல பிற”**

என்கிறார் திருவள்ளுவர் (குறள் 61)

1. **வேளாண்மை:**

- வள்ளுவர் வேளாண்மையை, அடிப்படைப் பொருளாதார நடவடிக்கை என்கிறார். உலகத்தின் அச்சாணியாக வேளாண்மை இருப்பதாகவும், பொருளாதார ரீதியாக பிற துறைகளின் செழுமை வேளாண்மை துறையின் செழிமையைச் சார்ந்தது. உழவுத்தொழில் புரிபவன் மட்டுமே தலையாய மனிதன்.

**”உழுதுண்டு வாழ்வோரே வாழ்வார் மற்றெல்லாம்**

**தொழுதுண்டு பின் செல்பவர்"**

(குறள் எண் - 1032, அதிகாரம் - உழவு)

உழவுத்தொழிலே மற்ற தொழில்களைவிட உயர்ந்ததாக வள்ளுவர் கருதுகிறார்.

**2. பொது நிதி:**

- திருவள்ளுவர் பொதுநிதி பற்றி பொது வருவாய், பொதுச்செலவு, நிதி நிர்வாகம் ஆகிய தலைப்புகளில் விரிவாக எழுதியிருக்கிறார்.
  1. வருவாய் உருவாக்குதல்
  2. வருவாயை சேகரித்தல்
  3. வருவாய் நிர்வாகம்
  4. பொதுச் செலவு பற்றியெல்லாம் குறிப்பிடுகிறார்.

3. **பொதுச் செலவு**:

- வள்ளுவர் சமநிதிநிலை அறிக்கையைப் பிரிந்துரை செய்கிறார். "ஒரு நாடு அதன் செலவுகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் பட்சத்தில் அதன் வருமானம் குறைவாக இருந்தாலும் பாதகமில்லை" என்கிறார். நிதிநிலைக் கொள்கை வகுக்கும்போது செய்ய வேண்டியதாக அவர் சொல்வது "எப்போதும் உபரி நிதிநிலை இருக்கட்டும். சில நேரங்களில் சம நிதி நிலை இருக்கலாம். ஆனால் ஒரு போதும் பற்றாக்குறை நிதிநிலை மட்டும் கூடாது" பொதுச் செலவை கீழ்க்காணும் மூன்று இனங்களுக்கு செலவிடுமாறு வலியுறுத்துகிறர் வள்ளுவர்
  1. பாதுகாப்பு 2. பொதுப்பணிகள் 3. சமூகப்பணிகள்

**4. வெளிநாட்டு உதவி**

- வள்ளுவர் வெளிநாட்டு உதவி பெறுதலை ஆதரிக்கவில்லை. குறள் 739 ல் வெளி உதவி கோரும் நாடுகள் நாடுகளே அல்ல என்கிறார். வேறுவகையில் சொல்வதனால் அவர் தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தையே வலியுறுத்தினார்.

**5. வறுமை மற்றும் பிச்சையெடுத்தல் (இரத்தல்)**

- பசிக்கொடுமையிலிருந்து பெறும் விடுதலையே ஒவ்வொரு மனிதனும் பெறக்கூடிய அடிப்படை சுதந்திரம் என்றும் அனைத்து குடிமகனும் இதனை அனுபவிக்க வேண்டும் என்று வள்ளுவர் கருதினார். வறுமையே அனைத்து தீமைகளுக்கும் வேறாய் இருந்து எக்காலத்தும் தீராத துன்பங்களைத் தருவதாகவும் கருதினார். ஆனால் இந்தியாவில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் எண்ணிக்கையில் பிச்சையெடுப்பவர்கள், வசிப்பிடமின்றி சாலையோரம் வாசிப்பவர்கள் மற்றும் குப்பை பெருக்குபவர்கள் அதிகமாக உள்ளனர்.

6. **செல்வம்**

- செல்வம் வாழ்வதற்கான வழியே அன்றி அதுவே இலக்கல்ல என்று வள்ளுவர் கருதினார். செல்வம் சிறந்த மதிக்கத்தகுந்த வழிகளிலேயே ஈட்டப்படவேண்டும் என்கிறார். செல்வத்தைப் பதுக்கி வைப்பது பயனற்றுப் போகும் என்றகிறார். அவரைப் பொறுத்த வரையில் தொழில்தான் உண்மையான செல்வம், மேலும் உழைப்பு தான் மிகப் பெரும் வளம்.

**7. நலம்பேணும் அரசு:**

- திருவள்ளுவர் நலம்பேணும் அரசு எது என்பதைக் குறித்து விளக்கியுள்ளார். ஒரு நலம்பேணும் அரசில் வறுமை, எழுத்தறிவின்மை மற்றும் நோய்கள் போன்றவை இருக்காது என்கிறார்.

  ❖ நோய் நொடியற்ற ஆரோக்கியமான மக்கள்பெருஞ்செல்வம்

❖ நல்ல விளைச்சல்

❖ வளம் மற்றும் மகிழ்ச்சி

❖ மக்களுக்கு முழுப் பாதுகாப்பு

**மகாத்மா காந்தியடிகள்:**

- காந்தியப் பொருளதாரம் நன்நெறியை அடிப்படையாகக் கொண்டது. 1921-ல் காந்தி "ஒரு தேசத்தின் அல்லது ஒரு தனியாரின் தார்மீக ஒழுக்க நெறிகளை காயப்படுத்தினால் அந்த பொருளாதார நடவடிக்கையும் இழுக்கானது மேலும் அது பாவமானது" என எழுதுகிறாா். "தர்மீக மதிப்புகளைப் புறந்தள்ளும் பொருளாதாரம் உண்மையற்றது" என அதே நம்பிக்கையை காந்தியடிகள் மீண்டும் 1924 ல் கூறுகின்றாா்.

**காந்தியப் பொருளாதார சிந்தனைகளின் சிறப்பியல்புகள்:**

1. **கிராமக் குடியரசு:**
   - காந்தியடிகள் கிராமங்களில் தான் இந்தியா வாழ்வதாகக் கருதினாா். தன்னிறைவு பெற்ற கிராமமாக முன்னேறுவதை அவர் விரும்பினாா். அதிக அளவில் இயந்திரங்களைப் பயன்படுத்துதல், நகர்மயமாதல் மற்றும் தொழில் மயமாதல் ஆகியவற்றை எதிர்த்தாா்.

2. **இயந்திரங்கள்:**
   - காந்தியடிகள் இயந்திரங்களை "மிகப்பெரிய பாவம்" என்று வர்ணித்தாா். காந்தியடிகள், "இயந்திரங்களின் தீமைகள் குறித்து விளக்க புத்தகங்கள் எழுதப்பட வேண்டும், அதன் தீமைகள் மக்களுக்கு உணர்த்தப்படவேண்டும். இயந்திரங்கள் வரமல்ல, மாறாக நமக்கு சாபம் என்று நாம் உணர வேண்டும். இயந்திரத்தின் தீமைகளை நாம் பார்க்க வேண்டும். அவைகள் நம் இணக்கமான வாழ்வை முடிவுக்கு கொண்டு வந்து விடும்" என்கிறாா்.

3. **தொழில்மயம்:**
   - தொழல்மயம் மனித இனத்தின் பெரும் சாபக்கேடு என்று காந்தி கருதினாா். நாட்டின் திறனை முழுவதும் சுரண்டுவதை தொழில்மயம் சாா்ந்துள்ளது எனக் கருதினாா்.

4. **உற்பத்தி பரவலாக்கம்:**
   - உற்பத்தி பரவலாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திய காந்தி அது அநேக இடங்களில் சிறிய அளவிலும் அல்லது வீடுகளிலேயே உற்பத்தி நடைபெற வேண்டுமென்றும் விரும்பினாா்.

5. **கிராம சர்வோதயா:**
   - "உண்மையான இந்தியா வாழ்வது நகரங்களிலோ புறநகரங்களிலோ இல்லை கிராமங்களில் தான்" என்று சொன்ன காந்தியடிகள் கிராமங்கள் தன்னிறைவு பெற்றவைகளாகவும் சுயசாா்பு பெற்றவைகளாகவும் இருக்க வேண்டும் என்றாா்.

6. **உடல் உழைப்பு (bread labour):**
   - மனித உழைப்பின் மகத்துவம் உணர்ந்தவர் காந்தியடிகள். கடவுள் மனிதனைப் படைத்ததன் நோக்கமே, தனக்கு தேவையான உணவை தானே நெற்றியில் வியர்வை சிந்தி தன் உழைப்பின் வழியால் பெற்றுக்கொள்வான் என்ற கருத்தை நம்பினாா். மனித உழைப்பு என்பதே உடல் உழைப்பு தான் என்று காந்தி உறுதிபடக் கூறுகிறாா்.

7. **அறக்கட்டளைக் கோட்பாடு:**
   - தற்போதைய முதலாளித்து முறையை மாற்றி சமத்துவ சமூகத்தை உருாக்குவதே அறக்கட்டளைக் கோட்பாடு எனப்படும் இதில் முதலாளித்துவத்திற்குப் பங்கில்லை. இருப்பினும் இந்தியா சூதாட்ட முதலாளித்துவம் மற்றும் குறைகூறும் முதலாளித்துவம் சார்ந்த அனுபவங்களையும் பெற்றுள்ளது.

8. **உணவுப்பிரச்சனை:**

- உணவுப்பொருட்களின் மீதான எந்தவிதக் கட்டுப்பாடுகளையும் காந்தி எதிர்த்தார். அத்தகைய கட்டுபாடுகள் செயற்கைப் பற்றாக்குறையை உருவாக்கும் என்றார். இந்தியா ஒர சமயத்தில் உணவு தானியத்திற்காக கையேந்தும் நிலையில் இருந்தது. ஆனால் தற்போது, உணவு தானியம், பழங்கள், காய்கறிகள், பால், முட்டை இறைச்சி போன்ற அதிக அளவு உற்பத்தி செய்து உலக அளவில் உயர்ந்த இடத்தில் உள்ளது.

**9. மக்கள் தொகை:**

- காந்தி செயற்கையான குடும்பக் கட்டுபாட்டு முறைகளை எதிர்த்தார். ஆனாலும், மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சுயகட்டுப்பாடு மற்றும் பிரம்மச்சாரியத்தை வலியுறுத்தினார். சுயகட்டுப்பாடு மற்றும் பிரம்மச்சாரியத்தை வலியுறுத்தினார். சுயகட்டுப்பாடே மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த சிறந்த வழி என்று கருதினார்.

**மதுவிலக்கு:**

- முழுமையான மதுவிலக்கை வலியுறுத்தியவர் காந்தியடிகள். "மது நமக்கு எந்த விதத்திலும் துணை செய்வதல்ல, மாறாக நோயைத் தருகிறது" என்றார் காந்தியடிகள். "இந்தியா குடிகாரர்களின் நாடாக இருப்பதை விட ஏழைகளின் நாடாக இருப்பதே மேல்" என்றார். ஆனால் பல மாநிலங்களின் வருவாய் மது விற்பனையைச் சார்ந்துள்ளது.

**ஜவஹர்லால் நேரு:**

- நவீன இந்தியாவை கட்டமைத்த முதன்மை சிற்பிகளில் ஒருவர் ஜவஹர்லால் நேரு ஆவார். சுதந்திர இந்தியாவின் முதல் பிரதம அமைச்சராக பதவியேற்ற நாள் முதல், 1964-ல் இறக்கும் வரை அவர் பதவி வகித்தார். அவர் ஒரு மிகப்பெரிய தேச பக்தர், சிந்தனையாளர், அரசியல்வாதி அவருடைய பொருளாதார கருத்துக்கள் அவர் ஆற்றிய எண்ணற்ற உரைகளிலிருந்தும் அவர் எழுதிய புத்தகங்களிலிருந்தும் நமக்கு கிடைக்கின்றன.

**ஜனநாயகம் மற்றும் மதச் சார்பின்மை:**

- ஜனநாயகத்தை உறுதியாக நம்பியவர் ஜவஹர்லால் நேரு. அவர் பேச்சுரிமை குடிமக்கள் உரிமை, வாக்குரிமை சட்டத்தின் வழி ஆட்சி மற்றும் பாராளுமன்ற ஜனநாயகம் ஆகியவற்றை நம்பியவர். மதச்சார்பின்மை இந்தியாவிற்கு நேரு தந்த மிகப்பெரிய பங்களிப்பு. நமது இந்தியாவில் இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்துவ மதம். புத்த மதம். ஜைனமதம், சொராஸ்வீரிய மதம், சீக்கிய மதம் போன்ற இன்னும் பிற மதங்களும் இருக்கின்றன. ஆனால் மதப்பெருமான்மையால் எந்த ஒரு அச்சுருத்தலும் இல்லை. மதச்சார்பின்மை என்பது எல்லா மதங்களுக்கும் சமமான மரியாதை ஆகும்.

**திட்டமிடுதல்:**

- திட்டமிடுதலை நம் நாட்டில் அறிமுகப்படுத்திய பெருமை ஜவஹர்லால் நேருவையேச் சேரும். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த அணுகுமுறைக்கு, திட்டம் அவசியம் என்று அவர் கருதினார். 1956-ம் ஆண்டு மே மாதம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கருப்பொருள் மீதான விவாதத்தை பாராளுமன்றத்தில் துவக்கிவைத்து பேசினார். "திட்டமிடுதலின் சாரம் என்பது மனித சக்தி வளங்கள், பணம் இவற்றை சிறந்த வழிகளில் பயன்படுத்துவதை குறிக்கும்" – என்கிறார்.

- திட்டமிடுதல் என்பது தொழில் மயமாதலோடு தொடர்புடையது. இதன்மூலம் ஒரு நாடு தன்னைத்தானே வளர்ச்சியடைய செய்து தற்சார்பினை அடைகிறது. எனவே நேரு திட்டமிட்ட வளர்ச்சிபெற இந்த யுக்த்தியை முன்னெடுக்கிறார். "அறிவியல், ஆராய்ச்சி, தொழில் நுட்பம் மற்றும் தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் நேருவின் பங்களிப்பு மறக்க முடியாது. அவர் பிரதமராகப் பணியாற்றிய காலத்தில் தான் பல IIT (இந்திய தொழில் நுட்ப கழகம்) மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் தொடங்கப்பட்டன. அவர் எப்போதும் அறிவியல் மனப்பான்மையை வலியுறுத்தினார்.

**3. ஜனநாயக சமதர்மம்:**

- சமதர்மம் என்பது இந்தியாவிற்கு நேருவின் மிகப்பெரிய பங்களிப்பு ஆகும். அவர் நம் இந்தியாவை சமதர்ம சமூகமாக கட்டமைக்க விரும்பினார். ஆனால் நேருவின் சமதர்மம் என்பது ஜனநாயக சமதர்மம் ஆகம்.

**பி.ஆர். அம்பேத்கர்:**

- பி.ஆர்.அம்பேத்கர் (1891 – 1956) ஒரு பன்முகத்திறன் பெற்றவர். அவர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய சிற்பி, சமதர்ம காவலர், சமூக நீதி பாதுகாவலர் மற்றும் அரசின் திட்டங்களை வடிவமைத்தவர். "பழங்கால இந்திய வர்த்தகம்" (1915 – ல் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் முதுகலை பட்டப் படிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை) "இந்தியாவின் தேசிய பங்கீடு பற்றி வரலாறு மற்றும் பகுப்பாய்வு ஆய்வறிக்கை" (முனைவர் பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை) என்ற இரண்டு நூல்களிலும் அவருடைய பொருளாதார கருத்துக்கள் காணப்படுகின்றன. மேலும் "பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாணநிதிகளின் மதிப்பீடு: மாகாண ஏகாதிபத்தியத்தின் நிதிகள் பரவலாக்கம் பற்றிய ஓர் ஆய்வு" கட்டுரையாக வெளியிடப்பட்டது.

- 1921-ல் அம்பேத்கருடைய பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாண நிதி பரவலாக்கள் என்ற ஆய்வுக் கட்டுரை ஆ.ளுஉ பட்டத்திற்காக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் 1923 ல் ரூபாயின் பிரச்சனைகள்" என்ற ஆய்வறிக்கையை ஏற்று லண்டன் பொருளாதார பள்ளி னு.ளுஉ பட்டம் வழங்கியது. ஆச்சரியமான விசயம் என்னவென்றால் இந்திய ரிசர்வ் வங்கியானது அம்பேத்கர் நூலான ரூபாயின் பிரச்சினைகள் அதன் தோற்றமும் - அதன் தீர்வும் என்பதில் வழங்கப்பட்ட வழிகாட்டுதலின் படி கருத்தாக்கம் பெற்றது. அவருடைய பொருளாதார கருத்துக்கள் நான்கு தலைப்புகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. **நிதிப்பொருளாதாரம்**:

- அம்பேத்கருடைய பெரும்பாலான நூல்கள் அவர் வெளிநாட்டில் தங்கியிருந்த 1913 – 1923 வரையிலான காலத்தில் எழுதப்பட்டவை. அவர் நிதிப் பொருளாதாரம் குறித்து நிறைய எழுதி இருக்கிறார். மாகாண நிதி பெருக்கத்தை மூன்று நிலைகளாகப் பிரிக்கிறார்.

  1. ஒப்படைப்பு வரவு செலவுத் திட்டம் (1871 – 72) முதல் 1876 – 77 முடிய)
  2. ஒதுக்கீடு வரவு செலவுத் திட்டம் (1877 – 78 முதல் 1881 – 82 முடிய) மற்றும்
  3. வருவாய் பங்கீடு வரவு செலவுத் திட்டம் (1882 – 83 முதல் 1920 – 1921 முடிய)

2. **வேளாண்மை பொருளாதாரம்:**

- 1918-ல் அம்பேத்கர் "இந்தியாவில் குறைந்த நிலவுடமை மற்றும் தீர்வுகள்" என்ற கட்டுரையை எழுதினார். ஆடம்ஸ்மித்தின் "நாடுகளின் செல்வத்தைப் போல்" நிலவுடைமை ஒருங்கிணைப்பு மற்றும் நிலவுடைமை விரிவாக்கம் இவற்றிற்கிடையேயான வேறுபாட்டினை கூறுகிறார்.

3. **நிதிப்பொருளாதாரம்:**

- சமூக முன்னேற்றத்திற்கு சாதி மிகப் பெரிய தடையாக இருப்பதாக அம்பேத்கர் நம்பினார். சாதி சமூக பிரிவினைக்கு வழிவகுக்கிறது. தனி நபர்கள் தங்களுக்குள் வேலைகளை பரிமாறிக்கொள்ளும் வழி இருக்கவேண்டுமென்று அவர் சொன்னார். மேலும் சாதிய முறை சமூக பதட்டத்திற்கு காரணமாக அமைகிறது. சாதி முறை அரசியல் ஜனநாயகத்தை விடவும், சமூக ஜனநாயத்தை அமைப்பதில் தோல்வியடைந்திருக்கிறது என்று அவர் கூறுகிறார்.

4. **சமதர்ம பொருளாதாரம்:**

- அம்பேத்கர் ஒரு சமதர்மவாதி சமூக நீதியின் பாதுகாவலர். அவர் அனைத்து முக்கியமான தொழில்களையும் நாட்டுஉடமை ஆக்க வேண்டுமென்றும், நிலத்தை அரசே நிர்வகிக்க வேண்டும் என்றும் கூட்டு வேளாண்மை நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். அரசே

காப்பீடு வணிகம் செய்ய வேண்டும் என விரும்பினார். அனைத்து மக்களுக்கும் கட்டாயமாக காப்பீட்டு வசதி அளிக்கப்பட வேண்டுமென்று கூறினார்.

- அம்பேத்கர் மிகச்சிறந்த பொருளியல் அறிஞர் என்பதில் அய்யமில்லை. ஆனால் சட்டம் மற்றும் அரசியலில் அவரது அளப்பரிய பங்களிப்புகள் அவருடைய பொருளாதார பங்களிப்பை குறைத்து காட்டிவிட்டன. எல்லாவற்றிற்கும் மேலாக அவர் மிகச்சிறந்த சமூக சீர்திருத்தவாதி.

**J.C குமரப்பா:**

- ஜோசப் செல்லத்துரை குமரப்பா தமிழ்நாட்டின் தஞ்சாவூரில் 1892-ஜனவரி 4-ல் பிறந்தார். கிராமப் பொருளாதார முன்னேற்றக் கொள்கைகளின் முன்னோடியாக அறியப்படுகின்ற குமரப்பா அவரது அனைத்து பொருளாதார கருத்துக்களையும் காந்தியம் என்பதன் அடிப்படையிலேயே அமைத்துக்கொண்டார். மேலும் ”காந்தியப் பொருளாதாரம்” என்ற கருத்தையே அவர் உருவாக்கினார்.

**காந்தியப் பொருளாதாரம்:**

- J.C. குமரப்பா, காந்தியின் கருத்தான கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் வளர்ச்சி சங்கம் ஆகியவற்றை வலுவாக ஆதரித்தார். கிருஸ்துவ மற்றும் காந்திய மதிப்பீடுகளை உள்ளடக்கி அவர் கோட்பாடுகளைப் கொண்டு வந்தார். அதில் அஹிம்சைக் கொள்கை, மனித நடத்தைகளை மையப்படுத்துதல் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றை பொருள் முதல் வாதத்திற்குப் பதிலாக பயன்படுத்தினார். சோசலிசம் எடுத்துரைக்கும் வர்க்கப் போர் முக்கியத்துவத்தை நிராகரிக்கும் அதே வேளையில், தரையில்லா சந்தையில் உள்ள பருப்பொருள் வளர்ச்சி, போட்டி மற்றும் திறன் ஆகியவற்றின் முக்கியத்துவத்தையும் நிராகரித்தார் காந்தியும் குமரப்பாவும் மனிதனின் பொருளாதார தேவைகளை நிறைவேற்ற வேண்டுமானால் சமூக பொருளாதார பிரச்சினைகள், வேலையின்மை, வறுமை, மற்றும் ஆதரவற்ற நிலை ஆகியவற்றை களையவேண்டும் என்று கூறுகின்றனர்.

- குமரப்பா உப்பு சத்தியாக் கிரகத்தின் போது “யங் இந்தியா“ பத்திகையில் பணியாற்றிக் கொண்டே, அகமதாபாத்தில் உள்ள குஜராத் வித்யா பீடத்தில் பொருளாதார பேராசிரியராகவும் பணியாற்றி வந்தார். அனைத்திந்திய கிராம தொழில் கழகத்தை 1935-ல் தோற்றுவித்தார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் போது ஓராண்டிற்கும் மேல் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோது “நிலைத்த பொருளாதாரம்”, ”இயேசுவின் வழிமுறைகள் (1945)” மற்றும் ”கிறிஸ்துவம்: அதன் பொருளாதாரம் வாழ்க்கை முறையும் (1945)” ஆகிய இரண்டு புத்தகங்களை எழுதினார்.

- காந்தியைப் பின்பற்றுபவர்கள் சுற்றுப்புற சூழலியல் குறித்து நிறைய கோட்பாடுகளை உருவாக்கினர். குமரப்பா 1930 & 1940 ஆண்டுகளுக்குகிடையே இதுகுறித்து நிறைய புத்தகங்களை எழுதினார். வரலாற்று ஆய்வாளர் இராமச்சந்திர குஹா அவர்கள் குமரப்பாவை “பச்சை காந்தி“ என்று அழைத்து சிறப்பிக்கிறார். இந்தியாவின் சுற்றுச் சூழலியல் குறித்து அடித்தளமிட்டதால் அவ்வாறு அழைக்கப்படுகிறார். இந்தியத்திட்டக் குழுவிலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியிலும் பணியாற்றி வந்த குமரப்பா, வேளாண்மைக்கான தேசிய கொள்கைகள் மற்றும் கிராம முன்னேற்றம் குறித்து பல கொள்கைகளை வகுத்து தந்தார். சீனா, கிழக்கு ஐரோப்பா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் சென்று அங்கு இருந்த கிராம வளர்ச்சித் திட்டங்களை பார்வையிட்டு நம் நாட்டில் அமல்படுத்த முனைந்தார்.

**V.K.R.V. ராவ்:**

- P.R பிரமானந்தாவின் கூற்றுப்படி, ”சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் இந்தியாவின் தலைசிறந்த பொருளியல் அறிஞர்களாக D.R. காட்கில்,C.N. வக்கில் மற்றும் V.K.R.V ராவ் ஆகியோரைக் குறிப்பிடலாம். இந்த அறிஞர்கள் சிறந்த கனவுகளோடும், இந்தியப் பொருளாதார பிரச்சனைகளை ஆராய்ந்து கொள்கைகளையும் திட்டங்களையும் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக வழங்கியிருக்கிறார்கள்“ என்றார்.

**V.K.R.V ராவ் ஒரு தேர்ந்த எழுத்தாளர் அவர் மூன்று முக்கிய கருத்துக்களில் ஆர்வமுடையவராக இருந்தார்.**

1. தேசிய வருமானம்

2. உணவு, ஊட்டச்சத்து மற்றும் பண்டங்களின் பகிர்வு

3. வேலைவாய்ப்பு மற்றும் தொழில்பகிர்வு

**தேசிய வருமானம் கணக்கீட்டுமுறை:**

- தேசிய வருமான கணக்கீட்டு முறையின் வாயிலாக ராவ் ஒரு நடைமுறைப் பொருளாதார வாதியாக நினைவில் கொள்ளப்படுகிறார். ராவ் J.M. கீன்சின் மாணவர் மட்டுமல்லாது கோலின் கிளார்க் அவர்களுடன் பணி செய்து இருக்கிறார். H.W. சிங்கர், "கீன்சன் மாணவர்களில் சிறந்தவராக V.K.R.V. ராவ்" அவர்களைக் கருதுகிறார். ராவின் கணக்கீட்டு முறை

  1. பொதுவாக வளரும் நாடுகள், குறிப்பாக இந்தியாவிற்கு உகந்த தேசிய வருமானக் கருத்துக்கள்.

  2. முன்னேறிக்கொண்டிருக்கும் பொருளாதாரத்தில் முதலீடு, சேமிப்பு, பெருக்கி ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

  3. வளர்ச்சி குன்றிய நாடுகளின் தொழில்மயமாக்கலின் விளைவுகளை, தேசிய வருவாயை இணைத்துப் படிக்க வேண்டும். "முழு வேலை வாய்ப்பும் பொருளாதார முன்னேற்றமும்" என்ற ராவின் ஆய்வுக் கட்டுரை வேலை வாய்ப்புத் துறையில் மிகச்சிறந்த ஒன்றாக கருதப்படுகிறது.

**1. பான்னாட்டு உணவு உதவி:**

- உலக வறுமையை ஒழிப்பதில் ராவ் சிறந்த கொள்கைகளை வகுத்துத் தந்தது மட்டுமல்லாது உணவுப் பொருட்களை பன்னாட்டு அளவில் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்றும், தேர்ச்சி பெற்ற பன்னாட்டு சாதனங்களின் பங்களிப்பு கருத்தையும் முன்வைத்தார். தனது பங்களிப்பு மட்டுமன்றி, பன்னாட்டு உதவி மற்றும் வெளி வளங்களின் மூலம் உணவுக்கான நிதி வாய்ப்புகளை உருவாக்கினார்.

**2. சமதர்மத்திற்கு ஆதரவு:**

- இந்திய திட்டமிடலின் முந்தைய காலங்களில் ராவ் சமதர்ம இந்தியாவை வலியுறுத்தினார். அரசாங்கமே பொருளியல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் அதிகாரம் கொண்டது என்றும், பொதுத்துறை பொருளாதார வளர்ச்சியின் உச்சத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்து பொருளாதார முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகிக்க வேண்டும் என்ற கருத்தையும் கொண்டிருந்தார்.

**3. ராவின் பார்வையில் தொழில்மயமாதல்:**

- ராவ் எழுதிய "இந்தியப் பொருளியல் வாழ்வில் என்ன தவறு? (1938) என்ற சிறு புத்தகத்தில் இந்தியாவில் தனிநபர் வருமானம் குறைவிற்கும், தனிநபர் ஊட்டச்சத்து குறைவிற்கும் பின்வரும் காரணங்களை விளக்குகிறார்.

**1.** முறையற்ற நிலவுடைமை, நிலம் துண்டாடல், நிலம் பிரிக்கப்படுதல்.

**2.** பயிர்களுக்கு குறைவான நீர்பாசன வசதி கிடைத்தல்.

**3.** பேரளவு தொழில்துறை இன்மையால், வேளாண்மையில் அதிக மக்கள் தொகை அழுத்தம் ஏற்படுகின்றது.

4. முதலீடு இன்மை

5. நாணயத்தில் சுயாட்சி கொள்கையின்மை மற்றும் பணம் பற்றிய கருத்துக்களில் தங்கத்தை உடமையாகக் கொள்வதை ஊக்குவித்தது.

**6. கிராம தொகுதிகள்:**

- கிராம முன்னேற்றத்திற்காக கிராம குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். ஊரக வளர்ச்சிக்காக கிராமங்கள் தொகுப்பாக ஒரே அலகாக செயல்பட வேண்டும். அதனால் கிராமங்களிடையே சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு அடையும், அக்குழுக்கள் திறம்பட சுயமுன்னேற்றத்திற்கு பொதுமக்கள் பங்கேற்புடன் தங்களை வடிவமைத்துக் கொள்ளும். குழுக்கள் ஒன்றுக்கொன்று உதவிக்கொள்பவராகவும், அதன் மூலம் சமூக பொருளாதார தொடர்பு கிராமத்தில் அதிக வளர்ச்சியையும், ஆற்றல் மிக்க உற்பத்தியையும், தன்னாக்க முறையில் செய்ய பொதுமக்கள் அதன் முன்னேற்றத்தில் பங்கெடுத்துக் கொள்பவராகவும் இருக்க வேண்டும் என்று ராவ் கருதினார்.

**7. முதலீடு, வருமானம் மற்றும் பெருக்கி:**

- "முன்னேற்றம் அடையாத நாடுகளின் முதலீடு, வருமானம் மற்றும் பெருக்கி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு" (1952) என்ற ராவ் அவர்களின் புத்தகம் பேரியியல் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தகுந்த பங்களிப்பு வழங்கியது.

- சிந்தனையாளர், ஆசிரியர், பொருளாதார ஆலோசகர் மற்றும் நேரடி கொள்கை வடிவமைப்பாளர் என்ற பார்வையில் J.M. கீன்சின் அடிகளை பின்பற்றுகிறார்.

**8. நிறுவனக் கட்டமைப்பாளர்:**

- ராவ் தேசிய அளவிலான மூன்று ஆராய்ச்சி நிறுவனங்களை உருவாக்கினார். அவை டெல்லி பொருளாதாரப் பள்ளி (டெல்லி), பொருளாதார வளர்ச்சிக் கழகம் (டெல்லி), சமூக பொருளாதார மாற்றத்திற்கான கழகம் (பெங்களூரு).

**அமர்த்தியாகுமார் சென்:**

- நோபல்குழு, சென்னின் பங்களிப்பைப் பற்றி குறிப்பிடும்போது, அவருடைய சமூகத் தொழிவு கொள்கை, வளர்ச்சிப் பொருளாதாரம், வறுமை மற்றும் பஞ்சங்கள் பற்றிய ஆய்வு மற்றும் உரிமங்கள் திறன் முன்னேற்றம் பற்றிய கருத்து (1998) ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

1. **வறுமை மற்றும் பஞ்சம்**:

- சென்னின் வறுமை மற்றும் பஞ்சம் "உரிமை மற்றும் இழப்பு பற்றிய ஓர் கட்டுரை (1981) சிறந்த ஒன்றாக இருக்கிறது. அவருடைய புத்தகத்தில் பல்வேறு பஞ்சங்கள் பற்றி ஆய்வு செய்து அவற்றின் உண்மையான காரணங்கள் எடுத்து காட்டியிருக்கிறார். வறுமை பற்றிய பல்வேறு விளக்கங்களை ஆராய்ந்து முழு வறுமை மற்றும் தொடர்புடைய வறுமை ஆகியவைப் பற்றிய காரணங்களைக் கூறி கவனத்தை ஈர்க்கின்றனர்.

**2. வறுமை மற்றும் சமத்துவமின்மை:**

- சென் இந்தியாவில் வறுமை மற்றும் சமத்துவம் இன்மை பற்றி நிறைய எழுதி இருக்கிறார். வருமானப் பகிர்வு மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் நுகர்வு ஆகியவை கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும் என்பது சென் அவர்களின் முக்கியக் கருத்தாகும்.

3. **திறன் பற்றிய கருத்து**:

- பொருட்கள் அல்லது பயன்பாடுகளைவிட திறன்களை வளர்ப்பது பற்றிய சென்னின் கருத்துக்கள் முக்கியமானவையாக கருதப்படுகின்றன. சென் அவர்களின் கருத்துப்படி திறன் என்பது அடிப்படை கச்சாப் பொருட்களை மக்கள் நலத்திற்காக மாற்றி அமைப்பது ஆகும்.

4. **உரிமைகள்:**

- ஊட்டச்சத்து உணவு, மருத்துவம், உடல் நலப் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு, பஞ்சத்தின் போது வழங்கப்படும் உணவு ஆகியவை நமது உரிமைகளாக மாற வேண்டும் என்று சென் கருதினார். இத்தகைய உரிமைகள் வழிவகுவதில் ஏற்பட்ட தோல்வியே பஞ்சம் ஏற்படுவதற்கு காரணமாகும் என அவர் கருதினார்.

5. **தொழில் நுட்பத் தெரிவு:**

- மூலதன செறிவு நுட்ப முறையில், உழைப்பாளர்கள் உபரியாக உள்ள பொருளாதாரத்தில் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பது கடினம் என்று “தொழில் நுட்பத் தெரிவு“ என்ற புத்தகத்தில் சென் குறிப்பிடுகிறார்.

- முடிவாக அமர்த்தியசென் பொருளியியல் அறிஞர் மட்டுமல்ல நன்னெறி தத்துவ அறிஞரும் ஆவார். அவர் சுதந்திரத்தை நேசிப்பவர் மற்றும் மனித நேய ஆதரவாளர். அவர் ஏழைகளைக் குறித்து அதிக அக்கரை எடுத்துக்கொண்டார். மேலும் அவர்களை இரக்கத்திற்கு உரியவர்களாக பார்க்காமல், உரிமைகள் வழங்கப்பட அதிகார உரிமைகள் கொண்டவர்களாக பார்க்க வேண்டும். அதிகாரம் வழங்குதல், கல்வி, உடல்நலம், ஊட்டச்சத்து, பாலின சமநிலை, துன்பம் நேரும் காலங்களில் பாதுகாப்பு ஆகியவை வழங்கப் படவேண்டியவர்களாக கருதுகிறார்.

அலகு– 8

## இந்தியப் பொருளாதாரம் சுதந்திரத்திற்கு முன்னரும் பின்னரும்

**அறிமுகம்:**

- இந்த பாடம் சுதந்திரத்திற்கு முன் பின் இந்தியாவின் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளை பற்றி விவாதிக்கிறது. இந்தியா நீண்ட காலமாக காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. காலனித்துவம் என்பது இரண்டு நாடுகளுக்கிடையேயான சமூக மற்றும் பொருளாதார தொடர்புகளில் ஒரு நாடு அதிகாரம் செலுத்தும் நிலையிலும், மற்றொரு நாடு அடிமையாக இருப்பதையும் குறிக்கும். அதிகார நிலையில் உள்ள நாடு தான் அதிகாரம் செலுத்தும் நாட்டின் மீது அரசியல் கட்டுப்பாடு மட்டுமில்லாமல் பொருளாதார கொள்கைகளையும் தீர்மானிக்கிறது. அடிமை நாட்டு மக்கள் தங்கள் நாட்டின் வளங்களை பயன்படுத்துவதிலும் முக்கிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் தன்னிச்சையான முடிவுகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பார்கள். காலனி ஆதிக்கத்தின் கசப்பான அனுபவத்தை இந்தியா பெற்றுள்ளது.

**ஆங்கிலேயர் காலத்தில் இந்திய பொருளாதாரம்:**

- வாஸ்கோடகாமா இந்தியாவிலுள்ள கோழிக்கோட்டிற்கு மே 20, 1948 ல் வந்ததற்குப் பின்னரே இந்தியாவிலிருந்து ஐரோப்பாவுடனான கடல் வாணிகம் ஆரம்பித்தது. போர்ச்சுகீசியர்கள் 1510 லிருந்து கோவாவுடன் வாணிகம் செய்து வந்தனர். 1601 ல் கிழக்கிந்தியக் கம்பெனி ஆரம்பிக்கப்பட்டவுடன் ஆங்கிலேயர்கள் இந்தியப் பெருங்கடல் வழி வாணிகத்தைத் தொடங்கினர். 1614 ல் சர் தாமஸ் ரோ ஜஹாங்கீரிடமிருந்து தொழிற்சாலைகள் அமைக்க அனுமதி பெறுவதில் வெற்றி பெற்றதுடன் இந்தியாவின் பல்வேறு பகுதிகளை மெதுவாக ஆக்கிரமிப்பு செய்தார்.

- பிளாசிப் (PLASSEY) போருக்கு நூறு ஆண்டுகளுக்குப் பின் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தது. 1858 – ல் ஆங்கிலப் பாராளுமன்றம், இந்தியாவை ஆளும் அதிகாரத்தை கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து ஆங்கிலேயருக்கு மாற்றி, ஒரு சட்டம் இயற்றியது. கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து அதிகாரம் ஆங்கிலேயருக்கு மாற்றப்பட்ட போது இந்திய பொருளாதார நிலைமையை முழுவதுமாக மாற்ற இயலவில்லை.

**ஆங்கிலேயர் கால வரலாறு**

**ஆங்கிலேயர் காலத்தில்:**

❖ ஆங்கிலேயர் நுழைவுக்கு முன் இந்தியப் பொருளாதாரம் கிராமத்தைச் சார்ந்து வாழ்ந்து வந்தது. அப்போது கிராமப் பொருளாதராமானது சுயசார்புப் பொருளாதாரமாக இருந்தது. ஆனால் ஆங்கிலேய ஆட்சியின்போது தொழிற்சாலைகள் வளர அனுமதிக்கப்பட்டது.

❖ பொருளாதார மற்றும் அமைப்புரீதியான இந்த மாற்றம் இந்திய பொருளாதார நிலையை பின்தங்கிய நிலைக்குத் தள்ளியது. பிரச்சினைகள் அனைத்தும் உடல்நலம், குடியிருப்பு, குழந்தைகள் மற்றும் பெண்கள் நலன் மற்றும் உழைப்பாளர்கள், பொழுதுபோக்கு, குற்றங்கள், மற்றும் சமூகச்சீர்குலைவு ஆகியவற்றைச் சார்ந்ததாகவே இருந்தது. இந்த பிரச்சினைகள் காரணமாக, ஒழுங்குறு அமைக்கப்பட்ட சமூகபணிகளின் முக்கியத்துவத்திற்கான தேவை உணரப்பட்டது.

- பிரிட்டன் நாடு, இந்தியாவைக் காலனி ஆதிக்கத்தின் கீழ் 200 ஆண்டுகளுக்கும் மேலாக சீரழித்து வந்தது. காலனி ஆதிக்க சிதைப்பின் அடிப்படையில் முழு காலத்தையும் வரலாற்றுப் பொருளியல் வல்லுநர்கள் மூன்று கட்டங்களாகப் பிரித்தனர். அவை, வணிக மூலதனக் காலம், தொழில் மூலதனக் காலம், நிதி மூலதனக் காலம்.

**வணிக மூலதனக் காலம்:**

- 1757 லிருந்து 1813 வரையிலான காலம் வணிக மூலதனக் காலம் ஆகும்.

- கிழக்கிந்தியக் கம்பெனியின் முக்கிய நோக்கம் இந்திய மற்றும் கிழக்கிந்தியப் பொருட்களை ஒருவர் முற்றுரிமையாக வாணிபம் செய்து இலாபம் ஈட்டுவதேயாகும்.

- இக்காலத்தில் பிரிட்டனில் தொழில் மூலதனத்தை முன்னேற்ற இந்தியா ஒரு மிக முக்கியமான சுரண்டல் பிரதேசமாக கிழக்கிந்தியக் கம்பெனி கருதப்பட்டது.

- 1750 மற்றும் 1760 களில் வங்காளமும், தென்னிந்தியாவும் கிழக்கிந்தியக் கம்பெனியின் அரசியல் நெருக்கடிக்கு உள்ளான போது முற்றுரிமை வணிகத்தின் (அல்லது வாணிபத்தின்) நோக்கம் நிறைவேறியது.

- இந்நிர்வாகம் வெற்றி பெற்றது. இந்தியத் தலைவர்கள் இப் பிரச்சினையை சுரண்டலுடன் ஒப்பிட்டனர்.

- எல்லாவற்றிற்கும் மேலாக இக்கம்பெனியின் அலுவலர்கள் அனைவரும் நேர்மையற்று, ஊழல் நிறைந்தவர்களாக இருந்தனர்.

**தொழில் மூலதனக் காலம்:**

- 1757 லிருந்து 1813 வரையிலான காலம் வணிக மூலதனக் காலம் ஆகும்.

- 1813 முதல் 1858 வரையிலான காலம் தொழில் மூலதனக் காலமாகும்.

- பிரிட்டிஷ் துணிமணிகளின் சந்தையாக இந்தியா விளங்கியது.

- இந்தியாவிலிருந்து மலிவு விலையில் பெறப்பட்ட கச்சாப் பொருட்கள் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு முழுமை பெற்ற பொருட்கள் இந்தியாவிற்கு அதிக விலையில் இறக்குமதி செய்யப்பட்டன. இவ்வாறு, இந்தியர்கள் வஞ்சிக்கப்பட்டனர்.

- இந்தியாவின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் தூக்கி எறியப்பட்டன.

**நிதி மூலதனக் காலம்:**

- 19 ஆம் நூற்றாண்டின் இறுதி வருடங்களிலிருந்து சுதந்திரம் அமைந்த விரையிலான காலம் மூன்றாவது கட்டமான நிதி மூலதனக் காலமாகும். இக்கால கட்டத்தில் வியாபார நிறுவனங்கள், செலாவணி ஏற்றுமதி இறக்குமதி நிறுவனங்கள் மாற்று வங்கிகள் மற்றும் சில மூலதன ஏற்றுமதிகளில் நிதி ஏகாதிபத்தியம் தன்னுடைய ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கியது.

- இந்திய மூலதனத்தைக் கொள்ளையடித்து இந்தியாவில் இருப்புப் பாதை, சாலை வசதிகள், அஞ்சலகத்துறை, பாசனம், ஐரோப்பிய வங்கி முறை மற்றும் கல்வியில் குறிப்பிட்ட பகுதிகளில் பெரிய அளவில் முதலீடு செய்ய பிரிட்டன் முடிவு செய்தது. இதனால் சில பயன்களும் விளைந்தன என்பதை மறுக்க முடியாது.

- பிரிட்டன் இரயில்வே கட்டமைப்புக் கொள்கையானது கற்பனை செய்ய முடியாத பொருளாதாரப் பயனில்லாக் கொள்கையாகும். இந்தியாவின் வரிசெலுத்துவோர் இருப்புப்பாதை நிர்மாணத்திற்கு நிதி செலுத்தத் கட்டாயப்படுத்தப்பட்டனர். 1858 ஆம் ஆண்டு கிழக்கிந்தியக் கம்பெனி தனது அரசியல் அதிகாரத்தை பிரிட்டிஷ் அரசிடம் ஒப்படைத்தது.

**இந்தியக் கைவினைப் பொருட்கள் நசிவுக் காலம்:**

- இந்தியக் கைவினைப் பொருட்களுக்கு உலக அளவில் மிகுந்த வரவேற்பு இருந்தது. இந்திய ஏற்றுமதியில் கையால் நெய்யப்பட்ட பருத்தி, பட்டு ஆடைகள், காலிகோக்கள் அலங்காரப் பொருட்கள் மற்றும் மரச்சிற்பங்கள் முதன்மையானவையாக இடம் பெற்றிருந்தன.

- பாகுபாடான சுங்க வரிக்கொள்கை மூலம் பிரிட்டிஷ் அரசு வேண்டுமென்றே இந்தியக் கைவினைப் பொருட்களை அழித்தது.

- நவாப் மற்றும் அரசர்கள் காலம் முடிவுக்கு வந்தவுடன், இந்தியக் கைவினைப் பொருட்களைக் காப்பாற்ற எவருமில்லாத நிலை ஏற்பட்டது.

- இந்தியக் கைவினைப் பொருட்களால் இயந்திரத் தயாரிப்புப் பொருட்களுடன் போட்டியிட முடியவில்லை.

- இந்தியாவில் இரயில்வே அறிமுகமான பின் பிரிட்டிஷ் பொருட்களுக்கான உள்நாட்டு சந்தை அதிகரித்தது.

**இந்தியா நில உடைமை முறைகள்:**

- நில உடைமை முறை என்பது நிலங்களுக்கான உரிமை மற்றும் நிர்வகித்தல் பற்றியதாகும். பிற முறைகளிலிருந்து நில உடைமை முறை பின்வரும் விதங்களில் வேறுபடுகிறது.

    1. நிலம் யாருக்கு சொந்தமானது?
    2. நிலத்தில் யார் அறுவடை செய்வது?
    3. நிலவருவாயை அரசுக்கு செலுத்துவதற்குப் பொறுப்பானவர் யார்?

  மேற்கண்ட வினாக்களின் அடிப்படையில் சுதந்திரத்திற்கு முன் மூன்று விதமான நில உடைமை முறைகள் இருந்தன. அவை ஜமீன்தாரி முறை மஹல்வாரி முறை மற்றும் இரயத்துவாரி முறை ஆகும்.

**ஜமீன்தாரி முறை அல்லது நிலச்சுவான்தாரா முறை:**

- லார்டு காரன் வாலிஸ் 1793-ல் நிரந்தர சொத்துரிமைச் சட்டத்தை அறிமுகப்படுத்திய பிறகு ஜமீன்தாரி முறையை ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி உருவாக்கியது. இம்முறையில் நிலச்சுவான்தார்களும், ஜமீன்தார்களும் நிலத்தின் சொந்தக்காரர்களாக அறிவிக்கப்பட்டு நில வருவாயை அரசுக்குச் செலுத்த வேண்டிய முழுப்பொறுப்பும் அவர்களிடமே வழங்கப்பட்டது. வசூலிக்கப்பட்ட நிலவருவாயில் 11-ல் 10-பங்கு அரசுக்குச் செலுத்தப்பட வேண்டும் என்றும் மீதத் தொகை ஜமீன்தார்களுக்கான ஊதியமாகவும் அறிவிக்கப்பட்டது.

**மஹல்வாரி முறை அல்லது இனவாரி முறை:**

- இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் மத்தியபிரதேசம் மற்றும் பஞ்சாபிற்கும் விரிவுபடுத்தப்பட்டது. இம்முறையில் கிராம மக்களாலான குழுவினர் நிலச் சொந்தக்காரர்களாக இருந்து நிர்வாகம் செய்தனர். அக்குழுவினர் நிலத்தை விவசாயிகளிடம் பிரித்துக் கொடுத்து அவர்களிடமிருந்து வருவாயைப் பெற்று அரசுக்குச் செலுத்தினர்.

**இரயத்துவாரி முறை அல்லது சொந்த சாகுபடி முறை:**

- இம்முறை முதன்முதலில் தமிழ்நாட்டில் அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் மகாராஷ்டிரா, குஜராத், அஸ்ஸாம், கூர்க், கிழக்கு பஞ்சாப் மற்றும் மத்தியபிரதேசம் ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இம்முறையில் நிலத்தைச் சொந்தம் கொண்டாடும் உரிமை மற்றும் நிலத்திற்கான கட்டுப்பாடு, நில உரிமையாளரிடமே இருந்தது. உரிமையாளர்களிடம் நேரடியான உறவு இருந்தது. சுதந்திரத்திற்கு முன்னர் இம்முறை குறைந்த அடக்குமுறை உடையதாக இருந்தது.

**தொழில் மற்றும் காலனித்துவ முதலாளித்துவம்:**

- இந்தியாவில் ஆங்கிலேய ஆட்சி காலத்தில் தொழில் மாற்ற செயல்பாடு பொதுவாக இரண்டு வகைகளாகும்.

**1. 19ஆம் நூற்றாண்டில் தொழில் வளர்ச்சி:**

- 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேய முதலீட்டாளர்கள் தாங்கள் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில், பல முன்னோடி தொழில் நிறுவனங்களை இந்தியாவில் ஆரம்பித்தனர். ஆங்கிலேய நிறுவனங்களுக்கு நிலையான ஆதரவு கிடைத்தது. 19 ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் தொழில் புரட்சிக்கு வித்திட்ட போதும், அவர்கள் இலாபத்தை ஈட்டுவதையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இந்திய பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் ஆர்வமில்லாமல் இருந்தனர். 19-ம் நூற்றாண்டின் இறுதியில் 36 சணல் ஆலைகளும், 194 பருத்தி ஆலைகளும் அதிக எண்ணிக்கையிலான தொழில் பூங்காக்களும் இருந்தன. நிலக்கரி உற்பத்தி ஆண்டுக்கு 6 மில்லியன் டன்களாக உயர்ந்தது.

2. **20 ஆம் நூற்றாண்டில் தொழில் முன்னேற்றம்:**
   **20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சுதேசி:**

- இயக்கம் இந்தியாவில் தொழில் மயமாதலை ஊக்குவித்தது. 1914 ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் வெடிக்கும் வரை இந்தியாவின் பழைய – புதிய நிறுவனங்கள் மெதுவான மற்றும் நிலையான வளர்ச்சியைப் பராமரித்து வந்தன. இக்காலத்தில் 70க்கும் மேற்பட்ட பருத்தி ஆலைகளும், 30க்கும் மேற்பட்ட சணல் ஆலைகளும் அமைக்கப்பட்டன. நிலக்கரி உற்பத்தி இரு மடங்கானது. இரும்பு எஃகு தொழிற்சாலைகளுக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது. இரயில்வே அமைப்பு விரிவுபடுத்தப்பட்டது.

- 1924 முதல் 1939 வரையிலான கால கட்டத்தில் பல்வேறு பெரிய நிறுவனங்களான இரும்பு, எஃகு, பருத்தி நெசவாலைகள், சணல், தீப்பெட்டி, சர்க்கரை, காகித மற்றும் காகித கூழ் நிறுவனங்கள் போன்றவை பாதுகாப்பு வளையத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இது இந்தியாவில் பாதுகாக்கப்பட்ட தொழில்கள் விரிவடைய வழிவகுத்தது. இவ்வாறு பாதுகாக்கப்பட்ட தொழில்கள் முழுமையாக இந்தியச் சந்தையைக் கைப்பற்றி அயல்நாட்டுப் போட்டிகளை முழுவதுமாக முறியடித்தன.

- ஆரம்பத்தில் ஆங்கிலேய அரசு இந்தியப் பொருளாதாரத்தை கச்சாப் பொருட்கள் உருவாக்குவதாக உருமாற்றி, தங்கள் நாட்டின் பொருட்களுக்கான சந்தையாக இந்தியாவை ஆக்க முயற்சி செய்தது. இதன் மூலம் பல வரிகளில் இந்தியப் பொருளாதாரத்தை நசுக்க முயற்சித்தது. ஆங்கிலேய முதலீட்டாளர்கள், சாதகமான இந்தியப் புவியியல் காரணிகளைப் பயன்படுத்தி படிப்படியாக சணல், தேயிலை, காபி, பருத்தி நெசவு, காகிதம், காகிதக்கூழ், சர்க்கரை போன்ற பல்வேறு தொழிற்களை இந்தியாவில் உருவாக்கினார்கள் ஆனால் இந்தியத் தொழிலாளர்களை பெருமளவில் உறிஞ்சினார்கள்.

**ஆங்கிலேயர் ஆதிக்கத்தால் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள்:**

1. ஆங்கில ஆதிக்கம் இந்தியத் தொழில்களை முடக்கியது.

2. ஆங்கிலப் பொருளாதாரக் கொள்கைகள் இந்தியாவின் மூலதன ஆக்கத்தைக் குன்றச் செய்து வளர்ச்சியைக் தடுத்து நிறுத்தியது.

3. நம்மிடமிருந்து சுரண்டப்பட்ட சொத்துக்கள் ஆங்கிலேயர்களின் மூலதன முன்னேற்றத்திற்கு நிதியுதவி செய்தன.

4. இந்தியாவின் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு வேளாண்மையை சார்ந்து இருந்தபோதும், இந்திய வேளாண்மைத் தொழில் தேக்கமடைந்து நலிவுற்றுது.

5. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆதிக்கம் நவீன தொழில் துறை வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க எவ்விதப் பங்களிப்பும் வழங்காமல், இந்தியாவின் கைவினைத் தொழில் நிறுவனங்கள் சரிவடைவதற்குக் காரணமாக இருந்தது.

6. ஆங்கில காலனி ஆதிக்கத்தால் தோட்டக்கலை, சுரங்கங்கள், சணல் ஆலைகள் வங்கிகள் மற்றும் கப்பல் போக்குவரத்து போன்ற துறைகளில் முன்னேற்றத்திற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் முதலாளித்துவ நிறுவனங்களை ஊக்குவித்தது. அதை வெளிநாட்டவர்கள் நிர்வகித்தார்கள். இத்தகைய இலாப நோக்க நடவடிக்கைகளால் இந்திய வளங்கள் மேலும் சுரண்டப்பட்டன.

**1991 க்கு முந்தைய முக்கிய தொழிற் கொள்கைகள்:**

- ஆசியாவின் மூன்றாவது முக்கியப் பொருளாதாரம் இந்தியாவாகும். 70 ஆண்டு கால சுதந்திர வாழ்க்கை இந்தியாவின் சமூக பொருளாதார முன்னேற்றத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

- ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் குறிப்பாக தொழில் மயமாதலைச் சார்ந்துள்ளது. சுதந்திரம் அடைந்த போது இந்தியா பலவீனமான தொழில் அடிப்படையைப் பெற்றிருந்தது. ஆகையால் சுதந்திரம் பெற்றதற்குப் பிந்தைய காலத்தில், இந்தியா அரசு வலிமையான தொழில் அமைப்பை உருவாக்குவதற்கான சிறப்பு வலியுறுத்தல்களை மேற்கொண்டது. 1948 மற்றும் 1956 ஆம் ஆண்டுகளில் ஏற்படுதப்பட்ட தொழிற் கொள்கை தீர்மானங்கள் சிறு மற்றும் பெரிய அளவிலான நிறுனங்களை முன்னேற்றுவதற்கான அவசியத்தை எடுத்துக்கூறியன.

**1948 ன் தொழிற்கொள்கை தீர்மானம்:**

- இந்திய அரசு தொழில் மயமாதலின் குறிப்பிடத்தக்க பங்களிப்பை உணர்ந்தது. ஆகையால் 1948 ஆம் ஆண்டு ஏப்ரல் 6 அன்று தனது முதல் தொழிற் கொள்கையை அறிவித்தது. இந்தக் கொள்கையின் முக்கிய நோக்கம் இந்தியாவில் கலப்புப் பொருளாதாரத்தை அறிமுகப்படுத்துதலாகும்.

**தொழிற்கொள்கைகள்**

**தொழிற்கொள்கை – 1948**
**மைய அரசின் முற்றுரிமை ˙ இரயில்வே,**
இராணுவத்தளவாடங்கள், அணு ஆற்றல், தபால்துறை போன்றவை இந்திய அரசின் முற்றுரிமையின் கீழ் செயல்படும்.
மாநில அரசின் முற்றுரிமை: இயற்கை வளங்களான நிலக்கரி, எ∴கு, விமான உதிரிபாகங்கள் தயாரிப்பு, வாகன உற்பத்தி, கம்பில்லா தொடர்பு சாதனங்கள், மற்றும் எண்ணெய் வளங்கள் போன்றவை மாநில அரசின் முற்றுரிமையின் கீழ் செயல்படும்.

**ஒழுங்குப்படுத்தப்படாத தனியார் அமைப்புகள்:**
மேற்காண் இரண்டில் உள்ளடங்காத ஏனைய தொழில்களில் தனியார் அமைப்புகள் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் ஈடுபடலாம்.

1. இந்தியத் தொழில்கள் நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டன. அவை பொதுத்துறை (மூலத்தொழில்கள்) பொது மற்றும் தனியார்துறை (முக்கிய தொழில்கள்), கட்டுப்படுத்தப்பட்ட தனியார் துறை தனியார் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள்

2. இக்கொள்கை குடிசைத் தொழில்கள் மற்றும் சிறிய அளவிலான தொழில்களைப் பாதுகாக்க முயற்சி மேற்கொண்டது.

3. இருப்புப் பாதைகள் மற்றும் இரும்புத்தாது முதலான கனிம வளங்களுக்கான பிரத்தியோக உரிமையில் மாநில மற்றும் மத்திய அரசுகள் ஏகபோகம் பெற்று இருந்தன (ஆனால் இப்போது நிலைமை மாறிக்கொண்டு வருகிறது)

4. இந்திய அரசு, பிற நாடுகளிலிருந்து கிடைக்கக் கூடிய வெளிநாட்டு முதலீட்டின் முக்கியத்துவத்தை ஊக்குவித்தாலும் அதன் முழுக் கட்டுப்பாடு இந்தியர்களின் கரங்களிலேயே இருக்க வேண்டும் என்று முடிவு செய்தது.

**1956 தொழிற் கொள்கை தீர்மானம்:**
மெகலநோபிஸ் வளர்ச்சி மாதிரியின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டது. இது நீண்டகால பொருளாதார வளர்ச்சிக்கு கனரக தொழிற்துறையின் முக்கியத்துவத்தை உணர்த்தியது. இதன்படி தொழில்கள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டது.

**17 – தொழில்கள்:**

இரயில்வே, வான்வழி போக்கவரத்து, இராணுவத் தலவாடங்கள் மற்றும் வெடிமருந்துகள், இரும்பு மற்றும் எ.்.கு, அணு ஆற்றல் போன்ற தொழில்கள் இதில் அடங்கும்.

**12 – தொழில்கள்:**
மாநில அரசு சொந்தமாகக் கொண்டிருக்கும் இந்த தொழில்களுக்கு தனியார்துறை துணையாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

**மூன்றாவது பிரிவு:**
மேற்காண் தொழில்கள் தவிர்த்து ஏனைய தொழில்கள் தனியார்துறையோ அல்லது அரசுத்துறையோ வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு செயல்பட தடையில்லை.

1. கொடுத்தது. அதே நேரத்தில் தனியார் துறையையும் நியாயமான முறையில் வழி நடத்தியது.

2. அரசாங்கம் குடிசைத் தொழில் மற்றும் சிறு தொழில்களை ஊக்குவித்து நேரடி மானியம் அளித்தது, பெருமளவு உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தியை கட்டுப்படுத்த பல்வேறு விதமான வரிகளையும் அரசு விதித்தது.

3. வளர்ச்சிகளால் வட்டார வேற்றுமையைக் குறைக்க இந்த தொழிற் கொள்கை வலியுறுத்தியது.
4. இந்திய முதலீடுகளின் தேவையை அரசு புரிந்திருந்தது.

**பசுமைப்புரட்சி:**

- பசுமைப்புரட்சி என்பது வேளாண் துறையில் தொழில்நுட்ப மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு திருப்புமுனையாக அமைந்தது. 1960-க்கு பிறகு பாரம்பரிய வேளாண் முறைகள் சிறிது சிறிதாக மாற்றப்பட்டு, புதிய தொழில் நுட்பத்தை வேளாண் முறைகள் இந்தியாவில் செயல்படுத்தப்பட்டன. இதற்கு ஆரம்பமாக 1960 – 61 ல் ஏழு மாவட்டங்களில் "வழிநடத்தும் திட்டம்" புதிய தொழில் நுட்பத்தை வேளாண் துறையில் பயன்படுத்தும் முயற்சி எடுக்கப்பட்டது. இது அதிக விளைச்சல் தரும் ரகங்களை உற்பத்தி செய்வதற்கான திட்டம் (HYVP) ஆகும்.

**பசுமைப் புரட்சியின் சாதனைகள்:**

1. புதுமையான யுக்திகளின் பெரிய சாதனை முதன்மைப் பயிர்களான கோதுமை மற்றும் நெல் போன்ற பயிர்களின் உற்பத்தி பன்மடங்காகப் பெருகியது ஆகும்.

2. அதிக விளைச்சல் தரக்கூடிய வகைகளான நெல், கோதுமை, மக்காச்சோளம் மற்றும் சோளம் போன்ற பயிர்களுக்கு மட்டுமே பசுமைப்புரட்சி முக்கியத்துவம் கொடுத்தது.

3. இப்புது யுக்தி வணிகப்பயிர்கள் அல்லது பணப்பயிர்களான கரும்பு, பருத்தி, சணல் எண்ணெய் வித்துக்கள் மற்றும் உருளைக்கிழங்கு போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிக்க உதவயது.

4. சிறந்த விதைகள் மூலமாக அனைத்துப் பயிர்களின் உற்பத்தித் திறனும் பெருகியது.

5. வேளாண்மைக்குத் தேவையான கருவிகளான டிராக்டர்கள், இயந்திரங்கள், கதிரடிப்பான்கள் மற்றும் பம்ப் செட்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழில்கள் வளர்வதற்கு பசுமைப்புரட்சி நேரடிக் காரணமாக விளங்கியது.

6. கிராமப்புற மக்களுக்கு பசுமைப்புரட்சி செழிப்பை வழங்கியது. அதிகமான உற்பத்தி கிராமப்புற மக்களுக்கு அதிக வேலை வாய்ப்பை வழங்கியது. இதன் காரணமாக அவர்களது வாழ்க்கைத் தரம் உயர்வடைந்தது.

7. பல்வகைப் பயிர் வளர்ப்பு முறை மற்றும் அதிக அளவில் வேதி உரங்களைப் பயன்படுத்தியதால் உடைப்பிற்கான தேவை அதிகரித்தது.

8. வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக நிதி ஆதாரங்கள் வழங்கப்பட்டன. இந்த வங்கிகள் விவசாயிகளுக்கு எளிமையான முறைகளில் கடன்களை வழங்கின.

புதிய வேளாண் யுத்தியை பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகிறது. புதிய வேளாண் தொழில்

நுட்பம், விதை – உரங்கள் - தண்ணீர் தொழில்நுட்பம் அல்லது எளிதாக பசுமை புரட்சி என அழைக்கப்படுகிறது.

**பசுமைப்புரட்சியின் பலவீனங்கள்:**

1. பருவ மழைகளை நம்பியிருக்கும் நிலைமை இன்னும் மாறவில்லை இதனால் இந்திய வேளாண்மையில் இன்று வரை ஒரு நிச்சயமற்ற நிலைமை நிலவுகிறது.

2. விதைகள், உரங்கள், பூச்சிக்கொல்லிகள் மற்றும் தண்ணீருக்காக பேரளவு மூலதனம் தேவைப்படுகிறது.

3. பெரு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இடையேயான வருமான இடைவெளி அதிகரித்தது நீர்ப் பாசனம் மற்றும் மழைப் பொழிவை நம்பியிருக்கும் பகுதிகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வு அதிகரித்தது இக்கருத்துக்கு மாற்றுக் கருத்தும் உள்ளது.

4. பண்ணைகள் இயந்திரமயமாக்கப்பட்டதால் பஞ்சாப் மற்றும் ஹரியானாவின் சில பகுதிகளைத் தவிர பிற கிராமப்புறங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கான வேலையின்மை அதிகரித்தது.

**இரண்டாவது பசுமைப்புரட்சி:**

- அதிக வேளாண்மை வளர்ச்சிக்காக இந்திய அரசு இரண்டாவது பசுமைப் புரட்சியை செயல்படுத்தியது. இந்த இரண்டாவது புரட்சியின் முக்கிய நோக்கம். 2006 – 2007 இல் 214 மில்லியன் டன்களாக இருந்த உணவுப்பயிர் உற்பத்தியை 2020 ல் 400 மில்லியன் டன்களாக உயர்த்துதலாகும். வேளாண்மையின் வளர்ச்சி விகிதத்தை அடுத்த 15 – ஆண்டுகளில் 5மூ - லிருந்து 6 – மாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது.

**இரண்டாவது பசுமைப் புரட்சிக்கான தேவைகள்:**

1. ஒரு ஏக்கருக்கான உற்பத்தியை இரண்டு மடங்காகத் தரக்கூடிய மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை அறிமுகம் செய்தல்.

2. மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளை சந்தைப்படுத்த தனியார் துறையின் பங்களிப்பை உறுதி செய்தல்.

3. பாசன வசதிகளைத் துரிதப்படுத்துவதிலும் நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதிலும் அரசு முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

4. நதி நீர் இணைப்பின் மூலம் உபரி நீரை பற்றாக்குறையுள்ள பகுதிகளுக்குபரிமாற்றம் செய்ய வேண்டும்.

**பெரிய அளவிலான தொழிற்சாலைகள்:**

- பெரிய அளவிலான தொழிற்சாலை என்பது பெரிய உள் கட்டமைப்பு அதிக மனிதசக்தி, அதிக மூலதன சொத்துக்களை உள்ளடக்குவதாகும். இது பல தொழிற் சாலைகளை கண்காணித்து ஒரே தொழிற்சாலையின் கீழ் உள்ளடக்குவதாகும். இரும்பு மற்றும் எஃகு தொழிற்சாலை, நெசவு தொழிற்சாலை, ஆட்டோமொபைல் தொழிற்சாலை போன்ற கனரக தொழிற்சாலைகள் அனைத்தும் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் ஆகும். கடந்த சில வருடங்களாக தகவல் தொழில் தொழிலின் அபரிமித வளர்ச்சி மற்றும் அதன் அதிக வருமான உருவாக்கம் போன்ற காரணங்களினால், தகவல் தொழில்நுட்ப தொழில்களும் பெரிய அளவிலான தொழில்களின் வகையில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்திய பொருளாதாரமானது பொருளாதார வளர்ச்சி வெளிநாட்டு பண உருவாக்கம், அதிக நபருக்கு வேலை வாய்ப்பு வழங்குவதல் ஆகியவற்றிற்கு பெரும் தொழிற்சாலையை பெரிதும் நம்பியுள்ளது. பெரும் நிறுவனங்களோ அதிக இலாபம் சம்பாதிப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கும் என பொருளியல் கோட்பாடுகள் கூறியுள்ளன பின்வருபவை பெரிய அளவிலான தொழிற்சாலையானவை ஆகும்.

**1. இரும்பு எஃகு தொழிற்சாலை:**

- முதல் எ.்.கு தொழிற்சாலை ஜாரியாவிலுள்ள குல்டி என்னுமிடத்திலும் மேற்கு வங்காளத்தில் உள்ள "வங்காள இரும்பு தொழில்" கம்பெனி 1870 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- 1907-ல் பெரிய அளவிலான இரும்பு எ.்.கு தொழிற்சாலை (TISCO) ஜாம்ஷெட்பூரிலும், அதனை தொடர்ந்து JJSCO தொழிற்சாலை 1919 பான்பூரிலும் தொடங்கப்பட்டன. இவை இரண்டும் தனியார் துறை ஆகும்.

- முதன் முதலில் நிறுவப்பட்ட பொதுத்துறை நிறுவனம் பத்ராவதியில் உள்ள விஸ்வேஸ்ரய்யா இரும்பு எ.்.கு தொழில் ஆகும்.

**பொதுத்துறையில் எ.்.கு நிறுவனம்:**

| இடம் | உதவி |
|---|---|
| ரூர்கேலா (ஒரிசா) | ஜெர்மனி |
| பிலாய் (மத்தியப்பிரதேசம்) | ரஷ்யா அரசு |
| துர்காபூர் (மேற்குவங்காளம்) | இங்கிலாந்து அரசு |
| பொகாரோ (ஜார்கண்ட்) | ரஷ்ய அரசு |
| பர்னபூர் (மேற்கு வங்காளம்) | தனித்துறையிலிருந்து பெறப்பட்டது |
| விசாகப்பட்டினம் (ஆந்திரா) | ரஷ்ய அரசு |
| பெர்ன்பூர் (மேற்கு வங்காளம்) | தனியார் துறையிடமிருந்து 1976-ல் பெறப்பட்டது |
| சேலம் (தமிழ்நாடு) | இந்திய அரசு (வெளிநாட்டு உதவி இல்லை) |
| விஜய் நகர் (கர்நாடகா) | இந்திய அரசு |
| பத்ராவதி (கர்நாடகா) | நாட்டுடைமையாக்கப்பட்ட விஸ்வேஸ்ரயா இரும்பு எ.்.கு நிறுவம் (மத்திய மாநில அரசுக்கு சொந்தம்) |

- மேற்கூறப்பட்ட அனைத்தும் SAIL ஆல் நிர்வகிக்கப்படுகின்றன தற்போது,TIGCO தவிர மற்ற அனைத்து முக்கிய இரும்பு எ.்.கு நிறுவனங்கள் பொதுத்துறையின் கீழ் இயங்குகின்றன.
- இந்திய எ.்.கு நிறுவனம் (SAIL) 1974ல் நிறுவப்பட்டது. மற்றும் எ.்.கு துறையை மேம்படுத்தும் பொறுப்பும் அதற்கு அளிக்கப்பட்டது.

- தற்போது இந்திய எ.்.கு உற்பத்தியில் உலக அளவில் எட்டாவது உயரிய இடத்திலுள்ளது.

**2. சணல் தொழில்:**

- இந்தியா போன்ற நாட்டிற்கு சணல் தொழில் மிக முக்கியமானதாகும் காரணம் இத்தொழில் மூலம் வெளிநாட்டு செலவாணி ஈட்டப்படுகிறது. மேலும் இத்தொழில் கணிசமான வேலை வாய்ப்பை அளிக்கிறது.

- 1855-ல் மேற்கு வங்க மாநிலத்திலுள்ள ரேஷ்ரா எனும் ஊரில் நவீனமயப்படுத்தப்பட்ட தொழிற்சாலை முதல் முறையாக உருவாக்கப்பட்டது.

- இந்தியாவின் சணல் தொழில், பாரம்பரியமாக ஏற்றுமதி செய்து வருகிறது. உலக அளவில் இந்தியா கச்சா சணல் உற்பத்தியிலும் சணல் பொருட்கள் தயாரிப்பிலும் முதலிடத்திலும் சணல் பொருட்கள் ஏற்றுமதியில் இரண்டாமிடத்திலும் உள்ளது.

**3. பருத்தியும் நெசவுத் தொழிலும்:**

- இந்தியாவில் நெசவுத் தொழில் மிகப் பழமையானதாகும். அதிக தொழிலாளர்களையும் கொண்ட துறையாகும்.

- இந்துறையானது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட பெரிய அளவிலானதும் பரந்துபட்ட அளவிலும் வளர்ந்துள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4%ம், மதிப்புக் கூட்டப்பட்ட உற்பத்தியில் 20%ம் ஏற்றுமதி வருவாயில் மூன்றில் ஒரு பங்கும் இத்துறையின் மூலம் கிடைக்கிறது.

- கொல்கத்தாவிற்கு அருகிலுள்ள குளோஸ்டர் துறைமுக நகரில் 1818-ல் முதல் நவீன துணி உற்பத்தி ஆலை அமைக்கப்பட்டது. ஆயினும் இவ்வாலை சிறப்பாக இயங்கவில்லை.

- அடுத்ததாக 1854-ல் மும்பையில் கே.ஜி.என் டேபேர் (DABER) என்பவரால் "மும்பையின் நூற்பு மற்றும் நெசவு கம்பெனி (MUMBARS SPINING AND WEAVING CO) உருவாக்கப்பட்டது.

**4. சர்க்கரை தொழில்:**

- இந்தியாவில் வேளாண் சார்புத் தொழில்களில் பருத்தி தொழிலுக்கு அடுத்தபடியாக சர்க்கரைத் தொழில் உள்ளது.

- உலக அளவில் இந்தியா பெரிய அளவிலான சர்க்கரை உற்பத்தியாளராகவும் பெரிய அளவிலான நுகர்வோராகவும் இருக்கிறது. சர்க்கரை உற்பத்தியில் இந்திய அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவை மகாராஷ்டிரா மாநிலம் மட்டுமே. அடுத்தபடியாக உத்திரபிரதேச மாநிலம்.

**5. உரத்தொழில்:**

- இந்தியாவில் நைட்ரஜனை பயன்படுத்தி தயாரிக்கும் உரத்தொழிலானது உலகின் மூன்றாவது பெரிய தொழிலாகும்.

6. **காகித்தொழில்**:

- 1812 ல் வங்கத்திலுள்ள செராம்பூர் ஊரில் இயந்திரத்தால் செயல்படும் காகித ஆலை உருவாக்கப்பட்டது.

- உலகிலுள்ள காகித தொழிற்சாலைகளின் பட்டியலில் இந்தியா 15-வது இடத்தில் உள்ளது.

**7. பட்டுத்தொழில்:**

- இயற்கையான பட்டுத் தயாரிப்பில் இந்தியா இரண்டாமிடத்தில் உள்ளது சீனா முதலிடம் தற்போது உலக அளவில் 16% உற்பத்தியை இந்தியா கொண்டுள்ளது.

- இந்தியா மட்டுமே கீழ்க்கண்ட வணிக அடிப்படையிலான 5 வகையான பட்டுத்துணிகளை உற்பத்தி செய்கிறது. அதாவது மல்பெரி பட்டு, வெப்ப மண்டல டஸ்சர் பட்டு, ஓக் டஸ்ஸர், பட்டு எரி மற்றும் முகா பட்டு ஆகியன.

**8. பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு:**

- அஸ்ஸாம் மாநிலத்திலுள்ள டிக்பாய் (DIGBOI) எனும் ஊரில் 1889-ல் வெற்றிகரமாக முதல் முறையாக எண்ணெய் கிணறு தோண்டப்பட்டது.

- தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் எண்ணெய் இருப்பிடங்கள் அடையாளம் காணப்பட்டு எண்ணெய்யை வெளியில் எடுப்பதற்கான பணிகள் நடந்து வருகின்றன.

- இத்தகைய எண்ணெய் மற்றும் எரிவாயு வளங்களை எடுப்பதற்காக உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள டெஹ்ராடூன் (DEHRADUN) நகரில் 1956-ல் எண்ணெய் பரிவாயுக் கழகம் ONGC உருவாக்கப்பட்டது.

**சிறிய அளவிலான தொழிற்சாலைகள்:**

- இந்திய பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மொத்த புத்தாங்களில் 60 முதல் 70 சதவீதம் சிறு தொழில்கள் மூலமாக கிடைத்தவையே. இன்றைய பெரிய தொழில்களில் பெரும்பான்மையான தொழில்கள் சிறு தொழில்களாக உருவாக்கப்பட்டு

பின் வளர்ந்து பெரிய தொழில்களாக மாறியுள்ளன. இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் சிறு தொழில்களின் பங்கு கீழே காண்போம்.

**பொருளாதார முன்னேற்றத்தில் சிறுதொழில்களின் பங்கு:**

1. **சிறு தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பு:**

- சிறு தொழில்கள் அதிக தொழிலாளர்களை பயன்படுத்தும் உத்தியை பயன்படுத்துகின்றன. இதனால் அதிக வேலைவாய்ப்பு கொடுக்கும் துறையாக உள்ளது. இதன் மூலமாக வேலையில்லா திண்டாட்டம் பெரிய அளவில குறைகிறது.

- கைவினைஞர்கள், தொழில் நுட்ப பயிற்சி பெற்றவர்கள் தொழில் முனைபவர்கள் பாரம்பரிய கலைஞர்கள், கிராமப்புற மக்கள் மற்றும் அமைப்பும் சாரா நிறுவனங்களுக்கு வேலை வாய்ப்பை சிறு தொழில் துறை அளிக்கிறது.

- சிறு தொழில்துறையில் உழைப்பு முதலீட்டு விகிதம் அதிகம்.

1. **சிறுதொழில் தரும் சமமான மண்டல வளர்ச்சி:**

- சிறு தொழில்கள் பெரும்பாலும் பின்தங்கிய பகுதிகளிலும், கிராமபுறப் பகுதிகளிலும் அமைவதால் இவற்றின் தாக்கம் பரந்துபட்ட வளர்ச்சியை அளிக்கிறது.

- கிராமம் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் தொழில் வளர்ச்சி வேற்றுமைகளை களைய உதவி செய்கிறது.

- சிறுதொழில்களின் வளர்ச்சியினால், மக்கள் தொகை நெருக்கம் சேரிகளின் வளர்ச்சி, சுகாதாரமின்மை, மாசுபாடு ஆகியவை குறைகிறது.

- இவை இந்தியாவின் புறநகர் பகுதி மற்றும் கிராமப்புற பகுதிகளிலும் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது.

- இதனால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழில் முனைவோர் உருவாகவும் அவர்கள் திறமை வெளிப்படவும் வாய்ப்பாகிறது. அதோடு வருமானம் குறிப்பிட்ட ஒரு சில வணிக குடும்பங்களிடம் மட்டும் குவியாமல் பலரது கைகளில் பரவ வாய்ப்பளிக்கிறது.

2. **உள்ளூர் வளங்களை பயன்படுத்த சிறுதொழில் உதவி செய்கிறது.**

- சிறு சேமிப்பு, தொழில் முனைவோர் திறமை போன்ற உள்ளூர் சார்ந்த வளங்கள் பயன்பாடற்று வீணாகாமல் அது வெளிப்படவும் பலருக்கும் பயன்படவும் சிறு தொழில் காரணமாகிறது.

- கைவினைப் பொருட்கள் தயாரிப்போரின் பாரம்பரிய குடும்பத் திறன்களை வளர்க்க சிறு தொழில் உதவுகிறது. வளர்ந்த நாடுகளில் கைவினைப் பொருட்களுக்கு மிகுந்த வரவேற்பு பொருட்களுக்கு மிகுந்த வரவேற்பு இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

- இந்தியாவின் கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் உள்ள உள்ளூர் தொழில் முனைவோர்களையும் சுய தொழில் செய்வோர்களையும் வளர்த்தெடுக்க சிறு தொழில் உதவுகிறது.

3. **மூலதன பயன்பாடு முழுமைபெற சிறு தொழில் வழி வகுக்கிறது:**

- சிறு தொழில் மூலதனத்தின் தேவை குறைவே இத்துறையில் செய்த முதலீட்டிற்கு காத்திருப்புக் காலம் மிக குறைவாக இருக்குமாதலால் வருமானம் விரைவில் வர வாய்ப்பு

உள்ளது. திருப்பிச் செலுத்தல் காலமும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மிக குறுகியதாக உள்ளது.

- அதிக வெளியீடு மூலதன விகிதத்தையும் அதிக வேலைவாய்ப்பு மூலதன விகிதத்தையும் நிலைப்படுத்தும் சக்தியாக சிறுதொழில் முறை உள்ளது.

- கிராமப்புற மக்களையும் சிறு நகர் வாழ் மக்களையும் சேமிப்பின் பக்கம் திருப்பவும் தொழில் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடவும் சிறுதொழில் துறை ஊக்கப்படுத்துகிறது.

**4. சிறு தொழில்துறை ஏற்றுமதியை உருவாக்குகிறது:**

- சிறுதொழில் துறைக்கு அதிநவீன இயந்திரங்கள் தேவையில்லை. எனவே வெளிநாட்டிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்ய அவசியமில்லை. அதே வேளையில் சிறு தொழில்துறையின் பொருட்களுக்கு அதிக தேவை உள்ளது. இது நாட்டின் அந்நிய செலவாணி மீதான அழுத்தத்தை குறைக்க உதவுகிறது. ஆனாலும் பெருந்தொழில்களின் அளவிற்கு விளம்பரம் செய்ய இயலாமலும் மூலதனம் திரட்ட இயலாமலும் சிறுதொழில்கள் சிதைந்து வருவதையும் காணமுடிகிறது.

- இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்வதன் மூலம் சிறு தொழில்கள் கனிசமான அந்நிய செலவாணியை ஈட்டுகிறது.

**5. பெரிய அளவிளான தொழில்களுக்கு சிறு தொழில் நிறுவனங்களின் பங்கு :**

- சிறு தொழில் நிறுவனங்கள் பெரிய தொழில்களின் வளர்ச்சிக்கு ஆதரவு தருகின்றன.

- பெரிய அளவிலான தொழிற்சாலைகளுக்கு அருகில் அமைந்து சிறு தொழில் நிறுவனங்கள் உதிரிபாகங்கள் உட்கூறுகள் மற்றும் பெரிய தொழில்களுக்குத் தேவையான அனைத்துப் பாகங்களையும் தயாரித்த வழங்கி உதவுகின்றன.

- பெரிய நிறுவனங்களுக்குத் துணை நிறுவனங்களாக செயல்படுகின்றன.

**6. சிறுதொழில் நிறுவனங்கள் நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுகின்றன (சந்திக்கின்றன)**

- இந்தியாவில் நுகர்வோருக்குத் தேவையான பல்வேறு பொருட்களை சிறு தொழில் நிறுவனங்கள் தயாரிக்கின்றன.

- அன்றாடத் தேவைகளுக்கான பொருட்களைத் தயாரிப்பதால் பற்றாக்குறையும் பணவீக்கமும் குறைக்கப்படுகின்றன.

**சிறு தொழில் நிறுவனங்கள் தொழில் முனைவோர்களை உருவாக்குகின்றன**

- சமூகத்தில் தொழில் முனைவோர் வர்க்கம் உருவாக சிறுதொழில் நிறுவனங்கள் உதவுகின்றன. வேலை தேடுவோரை வேலைவாய்ப்பை வழங்குவோராக மாற்றுகின்றன.

- மக்கள் சுயவேலைவாய்ப்பு மற்றும் தற்சார்பு நிலையை அடைய உதவுகின்றன.

- பல்வேறு வகைகளில் இந்தியாவின் தனிநபர் வருமானம் அதிகரிக்க உதவுகின்றன.

- சமூகத்தின் பின்தங்கிய பகுதிகள் மற்றும் ஏழை மக்களை முன்னேற்ற உதவுகின்றன.

- சமூகத்தின் பல்வேறு வகையான பங்கேற்பாளர்களுக்கு தேசிய வருமானத்தை மிகத் திறம்படவும் சமமாகவும் பங்கிடுவதில் சிறுதொழில் நிறுவனங்கள் திறமையானவை.

## குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs):

- தற்போதைய காலத்தில் பல்வேறு வகையான தொழில் பிரிவுகளை வகைப்படுத்த பின்வரும் பண முதலீட்டு எல்லைகள் பயன்படுத்தப்படுகின்றன. இருந்தாலும், இவை காலத்திற்கேற்றாற் போல் மாறக்கூடியவை.

### உற்பத்தி நிறுவனங்கள்:

**1. குறு உற்பத்தி நிறுவனங்கள்:**

தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் 25 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2. சிறு உற்பத்தி நிறுவனங்கள்:**

தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் இருபத்தைந்து இலட்சத்திற்கு அதிகமாகவும் ஐந்து கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

**3. நடுத்தர உற்பத்தி நிறுவனங்கள்:**

தொழிற்சாலை மற்றும் உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் ஐந்து கோடிக்கு அதிகமாகவும் ரூபாய் பத்து கோடிக்கும் மிகாமலும் இருக்க வேண்டும்.

### சேவை நிறுவனங்கள்:

**1. குறு சேவை நிறுவனங்கள்:**
உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் பத்து இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**2. சிறு சேவை நிறுவனங்கள்:**

உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் பத்து இலட்சத்தை விட அதிகமாகவும். இரண்டு கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

**3. நடுத்தர சேவை நிறுவனங்கள்:**
உபகரணங்களுக்கான முதலீடு ரூபாய் இரண்டு கோடியை விட அதிகமாகவும் ஐந்து கோடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

### பொதுத்துறை மற்றும் தனியார் துறை வங்கிகள்:
### பொதுத்துறை வங்கிகள்:

- அரசாங்கத்தின் பங்குகள் பெரும்பான்மையாக் கொண்ட வங்கிகள் பொதுத்துறை வங்கிகளாகும். எடுத்துக்காட்டாக பாரத ஸ்டேட் வங்கி (SBI) ஒரு பொதுதுறை வங்கியாகும். இவ்வங்கியில் அருசு 58.60% பங்குகளைக் கொண்டுள்ளது. 58.87% அரசாங்கப் பங்குகளுடன் கூடிய பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB) ஒரு பொதுத்துறை வங்கியாகும். வழக்கமாக

- பொதுத்துறை வங்கிகளில் அரசின் பங்கு 50 சதவீதத்திற்கும் அதிகமாக இருக்கும். இதில் மாற்றங்களும் வரலாம். பொதுத்துறை வங்கிகள் இரண்டு வகைகளாக பிரிக்கப்படுகின்றன. அவையாவன:

  1. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள்
  2. மாநில வங்கிகள் மற்றும் அவற்றின் கூட்டு நிறுவனங்கள்.

- தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் நிறுவனச் செயல்பாடுகளை அரசாங்கம் கட்டுபடுத்தி ஒழுங்குபடுத்துகிறது. எடுத்துக்காட்டாக, பாரத ஸ்டேட் வங்கி (ளுடீஐ) பஞ்சாப் நேசனல் வங்கி (ீேடீ) பாங்க் ஆ.'.ப் பரோடா (டீழுடீ) ஓரியண்டல் வணிக் வங்கி (ழுடீஊ) அலகாபாத் வங்கி மற்றும் பல இருந்தபோதிலும் பொதுத்துறை வங்கிகள் பங்குகளை விற்கும்போது தனது பங்குகளின் எண்ணிக்கையை அரசு தொடர்ந்து குறைத்து வருகிறது. இதன் காரணமாக இவ்வங்கிகளில் அரசாங்கம் சிறுபான்மை பங்குதாராக மாறவும் வாய்ப்புள்ளது. இதற்கான காரணம் தனியார் மயமாக்கல் கொள்கையாகும்.

**தனியார் துறை வங்கிகள்:**

- இவ்வங்கிகளில் பெரும்பான்மையான பங்குகள், அரசு சாராத தனியார் நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், கார்ப்பரேசன் மற்றும் தனிநபர் வசம் உள்ளன. இவ்வங்கிகள் தனியார் நிர்வாகிகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

- இந்தியாவிலுள்ள மொத்த வங்கிகளில்,72.9மூ வங்கிகள் பொதுத்துறை வங்கிகளாகவும். மீதமுள்ளவை தனியாரால் நிர்வகிக்கப்படும் வங்கிகளாகவும் உள்ளன. எண்ணிக்கை அடிப்படையில் 27 பொதுத்துறை வங்கிகளும், 22 தனியார் வங்கிகளும் உள்ளன. தலைமை வங்கியான இந்திய ரிசர்வ் வங்கி (சுடீஐ) தன்னுடைய வெவ்வேறு வங்கி ஆட்சியின் மூலம் வங்கிகளுக்கு பணம் வழங்குதல் மற்றும் சிறிய அளவிலான நிதி வங்கிகளுக்கு உரிமம் வழங்குதல் (ளுகுடீ) ஆகிய பணிகளைச் செய்ய அனுமதி அளித்துள்ளது. இது அரசாங்கத்தின் நிதி ஆதாரத்தைப் பெருக்கும் முயற்சிக்கான ஒரு ஊக்கியாகும். இதன் விளைவாக ஏர்டெல் பணம் செலுத்தும் வங்கி மற்றும் பே.டி.எம். பணம் செலுத்தும் வங்கி ீயுலு வுஆ) போன்றவை உருவாகியுள்ளன. இப்போக்கு எந்தளவுக்கு நாட்டு மக்களுக்கு நல்லவை பயக்கும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**வங்கிகள் தேசியமயமாக்கப்படல்:**

- சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியா ஒரு திட்டமிட்ட பொருளாதார மேம்பாட்டுக் கொள்கையைக் கையாண்டது. இதற்காக 1951 ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாயின. பொருளாதாரத் திட்டமிடலின் முதன்மை நோக்கம் சமூக நலமாகும். சுதந்திரத்திற்கு முன்னர் வணிக வங்கிகள் தனியார் வசமிருந்தன. இவ்வங்கிகள் அரசாங்கம் திட்டமிடலுக்கான சமூக இலக்குகளை அடைவதற்கு உதவி செய்யத் தவறின. ஆகையால் அரசு 14 பெரிய வணிக வங்கிகளை ஜீலை 19, 1969 அன்று தேசியமயமாக்க முடிவு செய்தது. 1980 ஆம் ஆண்டில், அரசு மேலும் 6 வணிக வங்கிகளை தேசியமயமாக்கியது.

**தேசியமயமாக்கலின் நோக்கங்கள்:**

1. பின்வரும் நோக்கங்களை அடைவதற்காக இந்திய அரசு வணிக வங்கிகளை தேசியமயமாக்கியது.

2. தேசிய மயமாக்கலின் முதன்மையான நோக்கம் சமூக நலத்தை அடைவதேயாகும். வேளாண்மை, சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களின் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் நிதி தேவைப்பட்டது.

3. தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் தனியார் முற்றுரிமையைக் கட்டுப்படுத்துவதற்கும் சமூகத்தில் தேவையான பகுதிகளுக்கு இலகுவாகக் கடன் அளிப்பதற்கும் பேருதவியாக இருந்தன.

4. இந்தியாவில் ஏறத்தாழ 70% மக்கள் கிராமப்புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனவே, கிராமப்புற மக்களிடையே வங்கிச் செயல்பாடுகளை ஊக்குவித்தல் மிகுந்த அவசியமாயிருந்தது.

5. வங்கி வசதிகள் இல்லாத இடத்தில் வட்டாரங்களிடையே இருந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உதவுகின்றன.

6. சுதந்திரத்திற்கு முன் இருந்த வங்கிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை. தேசிய மயமாக்கப்பட்ட பிறகு கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் பல புதிய வங்கிக் கிளைகள் தொடங்கப்பட்டன.

7. தேசிய மயமாக்கப்பட்ட பின் வேளாண்துறை மற்றும் அதைச் சார்ந்த பிற துறைகளுக்குத் தேவையான கடன்களை வங்கிகள் கொடுக்க ஆரம்பித்தன.

8. 1991 ஆம் ஆண்டின் புதிய தொழிற் கொள்கைக்குப் பிறகு, இந்திய வங்கித்துறை பன்முகப் போட்டித் திறமை மற்றும் உற்பத்தித் திறன் போன்ற பல்வேறு முகங்களை எதிர்நோக்கி வருகிறது. மேற்கூரிய முன்னேற்றங்கள் இருந்தும், கிராமம் மற்றும் குடிசைப் பகுதியில் வாழும் மக்கள் தங்களின் கடன் தேவைக்கு, உள்ளூரில் கடன் வழங்குபவர்களைச் சார்ந்திருக்க வேண்டி உள்ளது.

**தேசியமயமாக்குதல்**

1969 – 50 கோடிக்கு மேல் வைப்பத் தொகை கொண்ட 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன.

1980 – 200 கோடிக்கு மேல் வைப்புத் தொகை கொண்ட 6 வங்கிகள் தேசியமாயமாக்கப்பட்டன.

| 19 ஜுலை 1969 | 15 ஏப்ரல் 1980 |
|---|---|
| 1. அலகாபாத் வங்கி | 1. ஆந்திரா வங்கி |
| 2. பாங்க் ஆப் பரோடா | 2. கார்ப்பரேஷன் வங்கி |
| 3. பாங்க் ஆப் மஹாராஷ்டிரா | 3. நியூ பாங்க் ஆப் இந்தியா |
| 4. கனரா வங்கி | 4. ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் |
| 5. மத்திய வங்கி | 5. பஞ்சாப் - சிந்து வங்கி |
| 6. தேனா வங்கி | 6. விஜயா வங்கி |
| 7. இந்தியன் வங்கி | |
| 8. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி | |
| 9. பஞ்சாப் நேஷனல் வங்கி | |
| 10. சின்டிகேட் வங்கி | |
| 11. யூனியன் வங்கி | |
| 12. யுனைடெட் வங்கி | |
| 13. யூகோ வங்கி | |
| 14. பாங்க் ஆப் இந்தியா | |

**இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்:**

- பொருளாதார திட்டமிடலின் நோக்கம் வரையறுக்கப்பட்ட அளவிலான வளங்களைத் திறம்படப் பயன்படுத்தி விரும்பிய இலக்குகளை அடைதலாகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் வாயிலாகப் பொருளாதாரத் திட்டமிடலை மேற்கொள்ளும் முறை ரஷ்யாவிடமிருந்து [முன்னால் சோவியத் ரஷ்யா (USSR)] தருவிக்கப்பட்டது. இதுவரை இந்தியா 12 ஐந்தாண்டுத் திட்டங்களைத் செயல்படுத்தியுள்ளது. பனிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டமே (2012 – 2017) இறுதியான ஐந்தாண்டுத் திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்களை நிறுத்தி விட்டு அதற்கு பதிலாக நிதி ஆயோக் (National institution for Transforming India) மூலம் திட்டமிட முடிவு செய்துள்ளது.

**முதல் ஐந்தாண்டுத் திட்டம் (1951 – 1956):**

- இது ஹாரேட் டாமர் (Harrod – Domer) மாதிரியை அடிப்படையாக் கொண்டது.
- இதன் முதன்மை நோக்கம் நாட்டின் வேளாண்மை முன்னேற்றமாகும்.
- இத்திட்டம் 3.6% வளர்ச்சி வீதத்துடன் (இலக்கை விட அதிகம்) வெற்றி பெற்றது.

**இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (1956 – 1961):**

- இத்திட்டம் PC மஹலநோபிஸ் (P.C. Mahalanobis) மாதிரியை அடிப்படையாகக் கொண்டது.

- இதன் முதன்மை நோக்கம் நாட்டின் தொழில் முன்னேற்றத்தை மேம்படுத்துவதாகும்.
- இத்திட்டம் 4.1% வளர்ச்சியுடன் வெற்றி பெற்றது.

**மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் (1961 – 1966):**

- இத்திட்டம் "காட்கில் திட்டம்" (Gadgil) என்றும் அழைக்கப்பட்டது.
- இத்திட்டத்தின் முதன்மை நோக்கம் சுதந்திரமான பொருளாதாரம் மற்றும் சுய முன்னேற்ற நிலையை ஏற்படுத்துதல் ஆகும்.
- சீனா - இந்தியப் போரின் காரணமாக இலக்கு வளர்ச்சியான 5.6% ஐ அடைய இயலவில்லை.

**திட்ட விடுமுறை காலம் (1966 – 1969):**

- இந்தியா பாகிஸ்தான் போர் மற்றும் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்வியே இத்திட்ட விடுமுறைக்கான முதன்மைக் காரணமாகும்.
- இக்கால கட்டத்தில் ஓராண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு வேளாண்மை, வேளாண் சார் துறைகள் மற்றும் தொழில் துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

**நான்காம் ஐந்தாண்டுத்திட்டம் (1969 – 1974):**

- இத்திட்டத்தின் இரண்டு முக்கிய நோக்கங்கள் நிலையான வளர்ச்சி மற்றும் தற்சார்பு நிலையை அடைதலாகும்.
- இத்திட்டம் அதன் இலக்கினை 5.7% வளர்ச்சியை எட்டாமல் 3.3% வளர்ச்சியை மட்டுமே பெற்று தோல்வியடைந்தது.

**ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டம் (1974 – 1979)**

- இத்திட்டத்தில் வேளாண்மை தொழில் துறை மற்றும் சுரங்கத் தொழிலுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.
- ஒட்டுமொத்தமாக நோக்குகையில் இலக்கு வளர்ச்சியான 4.4% ஐ விட அதிகமாக 4.8% வளர்ச்சி பெற்று இத்திட்டம் வெற்றி பெற்றது.
- இத்திட்டத்திற்கான முன் வரைவு D.P. தார் (DHAR) அவர்களால் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் 1978 ஆம் ஆண்டு (ஓராண்டுக்கு முன்பே) கைவிடப்பட்டது.

**சுழல் திட்டம்:**

- 1978 – 79 ஆம் ஆண்டு ஒரு வருட காலத்திற்காக இச்சுழல் திட்டம் தொடங்கப்பட்டது. இது ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தை நீக்கிய பிறகு தொடங்கியது.

**ஆறாம் ஐந்தாண்டு திட்டம் (1980 – 1985):**

- இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் வறுமை ஒழிப்பு மற்றும் தொழில்துறை தற்சார்பு ஆகும். "வறுமை ஒழிப்பு" (GARIBI HATAO) என்பதே இதன் இலட்சியமாகும்.
- இது முதலீட்டு திட்டத்தை அடிப்படையாக கொண்டது.
- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 5.2% ஆனால் 5.7% வளர்ச்சி எட்டப்பட்டது.

**ஏழாம் ஐந்தாண்டுத் திட்டம் (1985 – 1990)**

- இத்திட்டத்தின் நோக்கம் தன்னிறைவுப் பொருளாதாரத்தை உருவாக்குதல் மற்றும் ஆக்கப்பூர்வமான வேலைவாய்ப்பை வழங்குதல். ஆகியவற்றை உள்ளடக்கியது.

- முதன் முறையாக பொதுத்துறைக்கும் மேலாக தனியார்துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இது தனியார் துறையின் வெற்றியாக அமைந்தது.

- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 5.0% ஆனால் 6.0% வளர்ச்சி காணப்பட்டது.

**ஆண்டுத் திட்டங்கள்:**

- மைய அரசில் நிலையற்ற அரசியல் சூழல் நிலவியதால் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலவில்லை. எனவே 1990 – 91 மற்றும் 1991 – 92 ஆம் ஆண்டுகளுக்கு இரு ஓராண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

**எட்டாம் ஐந்தாண்டுத் திட்டம் (1992 – 1997):**

- இத்திட்டத்தில் வேலைவாய்ப்பு, கல்வி, சமூகநலம் போன்ற மனித வள மேம்பாடு நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

- இத்திட்ட காலத்தில் இந்தியாவிற்கான புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 5.6% ஆனால் 6.8% ஆண்டு வளர்ச்சி எட்டப்பட்டது.

**ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டம் (1997 – 2002)**

- சமூக நீதியுடன் கூடிய சமமான வளர்ச்சிக்கு இத்திட்டத்தில் முக்கிய கவனம் கொடுக்கப்பட்டது.

- இத்திட்டகால வளர்ச்சி இலக்கான 7% வளர்ச்சி எட்டப்படவில்லை. இந்தியப் பொருளாதாரம் 5.6% வளர்ச்சியை மட்டுமே அடைந்தது.

**பத்தாம் ஐந்தாண்டுத்திட்டம் (2002 – 2007):**

- இத்திட்டம் அடுத்த பத்தாண்டுகளில் தலா வருவாயை இரு மடங்காக உயர்த்த இலக்கு நிர்ணயித்தது.

- இத்திட்டம் 2012 ஆம் ஆண்டில் வறுமை விகிதத்தை 15% ஆக்க குறைக்கும் குறிக்கோளைக் கொண்டிருந்தது.

- இத்திட்டத்தின் வளர்ச்சி இலக்கு 8.0%. ஆனால் 7.2% மட்டுமே எட்டப்பட்டது.

**பதினொன்றாம் ஐந்தாண்டுத் திட்டம் (2007 – 2012):**

- இதன் முக்கிய நோக்கம் ”விரைவான மற்றும் அதிகமான உள்ளடக்கிய வளர்ச்சியாகும்.
- இதன் வளர்ச்சி இலக்கு 8.1% ஆனால் எட்டப்பட்டது 7.9% மட்டுமே.

**பனிரெண்டாம் ஐந்தாண்டுத்திட்டம் (2012 – 2017):**

- இதன் முதன்மை நோக்கம் ”விரைவான அதிகமான உள்ளடக்கிய மற்றும் நிலையான வளர்ச்சியே” ஆகும்.

- இதன் வளர்ச்சி இலக்கு 8% ஆகும்.

- சுதந்திரம் அடைந்ததிலிருந்து இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்தில் ஐந்தாண்டு திட்டங்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன எனக் கொள்ளலாம். பற்றாக்குறையான வளங்களைப் பயன்படுத்தி, எவ்வாறு அதிகபட்ச பொருளாதாரப் பலன்களைப் பெறலாம், என்று இத்திட்டங்கள் வழிகாட்டியுள்ளன. இந்திய அரசு ஐந்தாண்டுத் திட்டங்கள் முறையை சோவியத் ரஷ்யாவிடமிருந்து எடுத்துக்கொண்டது என்று தெரிந்து கொள்வது மிக அவசியமாகும்.

**நிதி ஆயோக்**

திட்டக்குழு என்பதற்கு மாற்றாக நிதி ஆயோக் என்னும் அமைப்பு 2015-ம் ஆண்டு ஜனவரி 1-ம் தேதி ஏற்படுத்தப்பட்டது. இது நீடித்த நிலையான வளர்ச்சியை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும் மற்றும் செயல்படுத்தவும் செயல்படும். நிதி ஆயோக் என்பது இந்திய அரசின் திட்டங்களையும் கொள்கைகளையும் கண்காணிக்கும் அறிவு மையமாகும். தேசிய மற்றும் சர்வதேச பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நடைமுறைகளையும், புதிய கொள்கைகளையும் ஏற்படுத்தவும், தனிப்பட்ட பிரச்சனைகளுக்கான ஆதரவையும் தரும். இது சார்ந்த சாதனைகளை புரிந்து கொள்ள தனிப்பட்ட ஆராய்ச்சியை மேற்கொள்ளவேண்டும்.

**மேம்பாட்டுக் குறியீடு:**

**மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI):**

- 1990 முதல் ஐக்கிய நாடுகள் முன்னேற்றக் கூட்டமைப்பு ஒவ்வொரு ஆண்டும் மனித மேம்பாட்டு அறிக்கையைப் பிரசுரம் செய்கிறது. இக்குறியீடு கீழ்க்கண்ட மூன்று குறியீடுகளை அடிப்படையாக கொண்டது. இக்குறியீடு நாடு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் தற்போது தயாரிக்கப்படுகிறது. அரசாங்கத்திற்கு மக்களின் உண்மையான வாழ்க்கைத் தரத்தைக் கண்டறிய HDI பயன்படுகிறது.

**மனித மேம்பாட்டுக் குறியீடு: (HDI)**
HDI– என்பதை பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்த பொருளியல் அறிஞர் மஹபூப் உல் ஹக் (Mahbul ul Haq) - என்பவரும், இந்தியாவைச் சேர்ந்த அமர்த்தியா குமார் சென் அவர்களும் 1990-ல் மேம்படுத்தினர். இதனை ஐக்கிய நாடுகள் முன்னேற்ற திட்டம் (UNDP) வெளியிட்டது. இது எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் குறியீடு, கல்விக் குறியீடு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி அடிப்படையில் அமைக்கப்பட்டது.

1. வாழ்நாள் (ஆயுட்காலம்) என்பது பிறப்பின் போது வாழ்நாள் எதிர்பார்ப்பின் மூலம் கணக்கிடப்படுகிறது.
2. கல்வி அடைவுகள்
3. வாழ்க்கைத்தரமானது வாங்கும் சக்தியின் அடிப்படையிலான தனிநபர் வருமானத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

- மனித மேம்பாட்டுக் குறியீட்டைக் கணக்கிடுவதற்கு முன் குறைந்த பட்ச மற்றும் அதிக பட்ச மதிப்புகள் ஒவ்வொரு குறியீட்டிலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

- ஒவ்வொரு பரிமாணத்திலும் அதன் செயல்பாடுகள் 0-க்கும் 1-க்கும் இடையிலான மதிப்பில் கீழ்க்கண்ட முறையில் கணக்கிடப்படுகிறது.

$$\text{பரிமாணக் குறியீடு} = \frac{\text{உண்மை மதிப்பு குறைந்தபட்ச மதிப்பு}}{\text{அதிகபட்ச மதிப்பு - குறைந்த பட்ச மதிப்பு}}$$

- திட்டக்குழுவின் 2011 ஆம் ஆண்டு மனித மேம்பாட்டு அறிக்கையின்படி மனித வளர்ச்சிக் குறியீடு 1980 முதல் 2011 வரை குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. அதாவது மனித மேம்பாட்டுக் குறியீடு 1981- ல் 0.302 லிருந்து 2011-ல் 0.472 ஆக உயிர்ந்துள்ளது.

- ஐக்கிய நாடுகள் முன்னேற்ற சபையின் சமீபத்திய மனித முன்னேற்ற அறிக்கையின்படி (2016), 188 நாடுகளில் இந்தியா 131-வது இடத்திலுள்ளது. 188 நாடுகளில் இந்தியா நடுத்தர அளவிலான மனித மேம்பாட்டு வளையத்துக்குள் உள்ளது. 2016 ஆம் ஆண்டுக்கான மனித மேம்பாட்டு அறிக்கையின்படி, இந்தியாவில் உடல் நலம் மற்றும் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றில் காணப்படும் வட்டார வேறுபாடுகளினால் இந்தியாவிற்கான மனித மேம்பாட்டு குறியீட்டில் 27% சரிவதற்குக் காரணமாகவுள்ளன. இந்தியாவிற்கான மனித மேம்பாட்டுக் குறியீடு 2010 ல் 0.580 ஆக இருந்தது 2015- ல் 0.624 ஆக உயர்ந்துள்ளது. 2014 ஆம் ஆண்டிலும் இந்தியாவின் தரவரிசை 131 ஆகவே இருந்தது.

- மனித மேம்பாட்டுக் குறியீட்டுக்கான கணக்கீடானது மனித வளர்ச்சிக்கான முக்கிய அம்சங்களை புறக்கணித்துள்ளது என்று பிஸ்வஜித்குஹா கூறியுள்ளார். அவர் HDI1,HDI2, HDI3 மற்றும் HDI4 என்ற நான்கு விதமான மனித மேம்பாட்டுக் குறியீடுகளை உருவாக்கியுள்ளார். HDI1 என்பது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுக் குறியீடுகளை உருவாக்கியுள்ளார். HDI1 என்பது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின் மனித மேம்பாட்டு அறிக்கையினை பொறுத்துள்ளது. வாழ்க்கைதரம், வறுமை ஒழிப்பு மற்றும் நகரமாதல் போன்ற மூன்று பரிணாமங்களைச் சேர்ப்பதன் மூலம் அவர் மனித மேம்பாட்டுக் குறியீட்டுக்கான எல்லையை விரிவுபடுத்தியுள்ளார்.

- இந்தியா உட்பட்ட பல்வேறு நாடுகள், மனித மேம்பாட்டு கணக்கீடத் தேவையான புள்ளி விவரங்களை மேம்படுத்தவும் குறியீட்டை விரிவுபடுத்துவதற்கும் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன.

**முதல் மூன்று நாடுகள் (HDI)**

நார்வே (0.949)
ஆஸ்திரேலியா (0.939)
சுவீட்சர்லாந்து (0.939)

**வாழக்கைத் தரக் குறியீட்டெண் (PQLI):**

- வாழ்க்கைத்தரக் குறியீட்டெண்ணை (PQLI) மோரிஸ் டி.மோரிஸ் (MORRIS DMORRIS) உருவாக்கினார். இது ஒரு நாட்டின் வாழ்க்கைத் தரத்தினை அளவிடப்பயன்படுகிறத. இதற்காக அவர் எதிர்பார்ப்பு ஆயுட்காலம், குழந்தை இறப்பு வீதம் மற்றும் எழுத்தறிவு வீதம் போன்ற மூன்று குறியீடுகளைப் பயன்படுத்தினார். ஒவ்வொரு குறியீட்டெண்ணின் அளவும் 1 லிருந்து 100 வரையிலான எண்களுக்குள் இருக்கும் எண் 1 என்பது ஒரு நாட்டின் மோசமான செயல்பாட்டைக் குறிக்கும் 100 என்பது மிகச்சிறப்பான செயல்பாட்டைக் குறிக்கும். எடுத்துக்காட்டாக,எதிர்பார்க்கப்படும் ஆயுளுக்கான குறியீட்டில், மேல் எல்லையான 100 என்பது 77 வருட ஆயுளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இக்குறியீட்டை ஸ்வீடன் நாடு 1973 ஆம் ஆண்டே அடைந்து விட்டது. 1 என்ற கீழ் எல்லையானது 28 வருட ஆயுளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனை கயனா – பிசாவு (GUINEA – BISSAU) நாடு 1960 ஆம் ஆண்டு பெற்றுள்ளது. PQLI க்கும் HDI க்கும் ஒரு வேறுபாடு உள்ளது. HDI யில் வருமானம் சேர்க்கப்படுகிறது. PQLI லிருந்து வருமானம் நீக்கப்படுகிறது. உடல் மற்றும் பணம் சார்ந்த மேம்பாட்டை HDI குறிப்பிடுகிறது. PQLI உடல் சார்ந்த மேம்பாட்டை மட்டுமே குறிக்கிறது.

அலகு - 9

## இந்தியாவின் மேம்பாட்டு அனுபவங்கள்

**அறிமுகம்:**

- இந்தியா 1947-ல் சுதந்திரம் அடையும் போது, பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையிலே இருந்தது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பங்களில் பின்தங்கிய நிலையில் இருந்ததால் தொழில்மயமாதல் மிகக் குறைவாகவும், உறுதியின்றியும் இருந்தது. விவசாயத்துறை நிலப்பிரபுக்களின் கையில் இருந்தது. எனவே, அங்கு உற்பத்தித்திறன் மிகவும் குறைவாக இருந்தது. போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு பின்தங்கிய நிலையிலே காணப்பட்டன. கல்வி மற்றும் சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லை. மேலும் சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் கானல் நீராகவே இருந்தது. சுருங்கக்கூறின், வறுமையும், வேலையின்மையும் நாட்டின் இரண்டு மிகப்பெரிய பிரச்சனைகளாக இருந்தது. இதன் காரணமாக மக்களின் வாழ்க்கைத்தரம் பின் தங்கிய நிலையில் இருந்தது.

- சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில் 1991-ம் ஆண்டு, இந்திய பொருளாதாரத்தில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஒரு பெரிய பொருளாதார நெருக்கடியை இந்தியா சந்தித்தது. வெளிநாட்டு வாணிபக் கணக்கில் பேரிழப்பு ஏற்பட்டு இருந்தது. எனவே இந்தியா புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கொண்டுவர வேண்டியிருந்தது. இந்திய பொருளாதார அமைப்பில் பெரும்பாலான மாற்றங்களைக் கொண்டு வர வேண்டியிருந்தது. நாட்டின் கட்டமைப்பை மேம்படுத்தும் கொள்கைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் பொருளாதார நெருக்கடிகளுக்கு இந்தியா முற்றுப்புள்ளி வைத்தது. இந்த கொள்கைகள் தொழிற்சாலை, வணிகம், நிதி மற்றும் வேளாண்மை போன்ற பொருளாதாரத்தின் பல துறைகளின் பலவீனத்தையும், முட்டுக்கட்டையாக உள்ள கடுமையான தடைகளை மாற்றுவதையும் முக்கிய நோக்கமாக கொண்டிருந்தது.

**தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாதல் என்பதன் பொருள் (LPG):**
**தாராளமயாக்கலின் தாக்கம்**

| நேர்மறை விளைவுகள் | எதிர்மறை விளைவுகள் |
|---|---|
| வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பு<br>உற்பத்தி அதிகரிப்பு<br>தொழில்நுட்ப வளர்ச்சி மேம்பாடு<br>GDP வளர்ச்சி வீதம் அதிகரிப்பு | வேலையின்மை அதிகரிப்பு<br>வசதி வரவுக் குறைவு |

தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாதல் என்ற கருத்துருக்கள் புதிய பொருளாதாரக் கொள்கையின் மூன்று முக்கிய தூண்களாக இருந்தன.

**தனியார் மயமாதல்:**

- தனியார்மயமாக்குதல் என்பது பொதுத்துறையின் நிர்வாகம் மற்றும் உரிமையை தனியாருக்கு மாற்றுவதைக் குறிக்கும். அரசின் நாட்டுடமையாக்குதலின்மை, அரசு முதலீடுகள் குறைப்பு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களை தனியார் துறைக்கு மாற்றியமைத்தல் போன்றவையே தனியார்மயமாதலின் சாராம்சம் ஆகும்.

**உலகமயமாதல்:**

- உள்நாட்டுப் (இந்தியா) பொருளாதாரத்தையும் ஏனைய உலக பொருளாதாரத்தையும் இணைப்பது உலகமயமாதல் எனப்படும். சுங்க வரிக் குறைப்பு மற்றும் சுங்க வரி தவிர்ப்பு போன்ற செயல்பாடுகளின் மூலம் இறக்குமதியை எளிமைப்படுத்துதல், அயல்நாட்டு நேரடி முதலீடு (FDI)

மற்றும் அயல்நாட்டு தொகுப்பு முதலீடுகளுக்கான (FPI) கதவுகளைத் திறந்து வைப்பது போன்ற ஒரு சில நடவடிக்கைகள் உலகமயமாக்குதலின் அளவீடுகள் ஆகும்.

**உலகமயமாக்கலின் தாக்கம்:**

| நேர்மறை விளைவுகள் | எதிர்மறை விளைவுகள் |
|---|---|
| சந்தை விரிவாக்கம்<br>உள்கட்டமைப்பு வளர்ச்சி<br>உயர்ந்த வாழ்க்கை தரம்<br>பன்னாட்டு ஒத்துழைப்பு | நெருக்கடி போட்டி<br>முற்றுரிமை அதிகரிப்பு |

## LPG க்கு ஆதரவான கருத்துக்கள்:

1. இந்தியாவில் பொருளாதார நடவடிக்கைகளை எளிதாகத் துவங்க இயலாத அளவுக்கு கட்டுப்பாடுகள் இருந்தன. அரசு உரிமைக்கொள்கைகளைச் சற்றே தளர்த்துவது அவசியமாக இருந்தது.

2. பொருளாதார வளர்ச்சியில் தனியார் துறைக்குப் போதுமான வாய்ப்புகளை வழங்கப்படவில்லை என்ற கருதப்பட்டதால் தனியார்மயமாதல் அவசியமானது.

3. வளர்ச்சி குன்றிய நாடுகளின் உதவியின்றி வளர்ந்த நாடுகள் மேலும் வளர முடியாது. இதற்கு உலகமயமாதல் அவசியமாகிறது. வளரும் நாடுகளின் இயற்கை மற்றும் மனித வளங்கள் முழுவதையும் வளர்ந்த நாடுகள் சுரண்டிக்கொள்கின்றன. வளர்ந்த நாடுகள் தங்களது உற்பத்திப் பண்டங்களை சந்தைப்படுத்தும் அங்காடியாக வளரும் பொருளாதார நாடுகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. வளர்ந்த நாடுகள் தங்களுடைய உபரி முதலீட்டை பின்தங்கிய நாடுகளில் அதிகமாக செய்கின்றன. பழைய வழக்கொழிந்த தொழில்நுட்பங்களை வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கு விற்பதன் மூலம் வளர்ந்த நாடுகள் முன்னேறுகின்றன. முடிவாக, பணக்கார நாடுகள் வளரும் நாடுகளின் பொருளாதாரத்தினால் மேலும் வளர்கின்றன.

## LPG ற்கு எதிரான கருத்துகள்:

1. தாராளமயமாக்கும் கொள்கை வெளிநாட்டில் உள்ள பெரிய நிறுவனங்களுக்கு வசதியாகிவிட்டது. வெளிநாட்டு பெரிய நிறுவனங்களை எதிர்க்க இயலாத உள்நாட்டு நிறுவனங்கள் பாதிப்பிற்குள்ளாயின.

2. தனியார் மயமாக்குதல் பெரிய நிறுவனங்களின் முற்றுரிமைச் சக்தியினை வளர்க்கும் என்ற வாதம் உள்ளது. ஆதிக்கம் நிறைந்த நிறுவனங்கள் மட்டுமே தொழில் நீடித்திருக்க முடியும். இதில் சமூகநீதியை எதிர்பார்க்கவோ, நிலைநாட்டவோ முடியாது. எனவே மக்களிடையேயும், வட்டார அளவிலும் வேறுபாடுகள் அதிகரித்து வருகின்றன.

3. உலகமயமாக்குதல் அனைத்து நாடுகளையும் ஒன்றிணைந்து ஒரே குடையின்கீழ் கொண்டு வந்தது. உலகமயமானது பொருளாதார சக்திகளை உலக அளவில் மறுபகிர்வு செய்ய வழிவகை செய்கிறது. ஏற்கனவே வளர்ந்த நாடுகள் மேலும் வளர சாதகமாகவும், வளர்ச்சி குறைந்த நாடுகளின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டன. வளர்ந்த நாடுகளின் பொருளாதாரச் சிக்கல்கள் வணிகத்தின் வாயிலாக வளரும் நாடுகளுக்குப் பரவின.

**1991-க்குப் பின்னர் இந்தியாவில் ஏற்பட்ட மாற்றங்கள்:**

1. வெளிநாட்டுச் செலாவணியின் கையிருப்பு அதிகரிக்கத் துவங்கியது.

2. தொழில்மயமாதல் விரைவாக நடைபெற்றது.

3. நுகர்வு முறை மேம்படத் துவங்கியுள்ளது.

4. விரைவு நெடுஞ்சாலைகள், மெட்ரோ ரயில், மேம்பாலங்கள், விமான நிலையங்கள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் பெருகி வருகின்றன. (இந்த வசதிகள் ஏழைகளுக்கு எட்டப்படவில்லை)

- சில துறைகளின் வளர்ச்சியின் பலன்கள் சமுதாயத்தில் விளிம்புநிலை மக்களுக்கு சென்றடையவில்லை. தவிர சமூக, பொருளாதார, அரசியல், மக்கட்தொகை மற்றும் சுற்றுசூழல் பிரச்சினைகள் மற்றும் சவால்களை அவை தோற்றுவிக்கின்றன. துறைகளின் முன்னேற்றம் நன்மைகளை கொண்டு வருகிறது. ஆனால் அது எந்த பிரிவினரைச் சென்றடைகிறது என்பது சமூக, பொருளாதார நிலையைச் சார்ந்தது. இந்தியப் பொருளாதாரத்தில் இத்தகைய அனைத்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், வறுமை, வேலையின்மை, பேதங்காட்டுதல், சமுதாய புறக்கணிப்புகள், வளம்குன்றிய நிலை, பின்தங்கிய பொருளாதாரம், பணவீக்கம் அதிகரித்தல், வேளாண்மையில் தேக்கம், உணவு பாதுகாப்பின்மை மற்றும் தொழிலாளர்கள் இடப்பெயர்ச்சி ஆகிய அடிப்படைப் பொருளியல் பிரச்சினைகளை பெருமளவு இந்திய மக்கள் எதிர்கொள்கின்றனர். இவற்றுக்கு அரசின் கொள்கைகளை மட்டுமே குறைகூறக் கூடாது. தனிநபர்களின் மதிப்புகள், நம்பிக்கைகள், விதிமுறைகள் ஆகியவையும் காரணமென புதிய நிறுவனப் பொருளியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

**முதலீட்டு விலக்கல் (DISINVESTMENT):**

- முதலீட்டு விலக்கல் என்பது பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை பிற தனியார் நிறுவனங்கள் அல்லது வங்கிகளுக்கு விற்பது. முதலீட்டு விலக்கம் முழுவதுமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை.

**இந்திய பொருளாதாரத்தின் நிலைமை:**

- (குறிப்பிட்ட காலத்தில் இந்திய பொருளாதாரத்தின் நிலைமை இங்கு சுருக்கமாக குறிப்பிடப்படுகிறது. ஆனாலும் மாற்றங்கள் தவிர்க்கப்பட முடியாதவை).
- பன்னாட்டு பண நிதியத்தின் (IMF) கணிப்புப்படி, 2016-ல் இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியின் (GDP) அளவு (நடப்பு விலையில்) 2251 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில் உலக மொத்த GDP மதிப்பில் இந்தியாவின் பங்கு 2.99 விழுக்காடு ஆகும். ஆனாலும் இந்தியா உலக மக்கள் தொகையில் சுமார் 17.5 சதவீதத்தையும், உலக நிலப்பரப்பில் 2.4 சதவீதத்தையும் கொண்டுள்ளது.
- ஆசிய நாடுகளில், மொத்த உற்பத்தியில் சீனா (CHINA) ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அடுத்து இந்தியா 3-வது இடத்தில் உள்ளது. 2016-ல் மொத்த ஆசியாவின் GDP-அளவில் 8.50 சதவீதமாக இந்தியாவின் பங்காக உள்ளது.

**தொழில் துறைச் சீர்திருத்தங்கள்:**

- புதிய தொழிற்கொள்கைய ஜுலை 24, 1991-ல் பாரத பிரதமர் அறிவித்தார். புதிய கொள்கை தொழில்துறையில் கணிசமாக கட்டுப்பாடுகளைத் தளர்த்தியது. தொழிற்கொள்கையின் முதன்மையான நோக்கங்கள் அதிகாரத்தின் பிடியில் இருக்கும் பல தொழில்களை முன்னேற்றுவது, வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் உள்ள கட்டுப்பாடுகளை ஒழிப்பது. MRTP– சட்டக் கட்டுப்பாடுகளிலிருந்து உள்நாட்டு நிறுவனங்களை தளர்த்துவது, உற்பத்தித் திறனிலும், வேலைவாய்ப்பிலும் நீடித்த வளர்ச்சியைப் பராமரிப்பது மற்றும் சர்வதேச போட்டிகளை எதிர்கொள்வது ஆகியனவாகும்.

**தொழிற்கொள்கையில் அரசு எடுத்த முக்கிய முயற்சிகள்:**

தொழிற்கொள்கை பின்வரும் மாற்றங்களை தொழில் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தது.

1. தொழில் உரிமங்கள் விலக்கம் செய்யப்பட்டன.

2. தொழில் துறையில் உள்ள ஒதுக்கீட்டை நீக்குதல்.

3. பொதுத்துறைக் கொள்கை (கட்டுப்பாடுகள் நீக்கம் மற்றும் சீர்திருத்தங்கள்) கொண்டுவரப்பட்டது.

4. MRTP - சட்டம் ஒழிப்பு

5. அந்நிய முதலீட்டுக் கொள்கை மற்றும் அந்நிய தொழில்நுட்பக் கொள்கை கொண்டுவரப்பட்டது.

1. **தொழில் உரிம விலக்களித்தல் அல்லது சிவப்பு நாடா முறை ஒழிப்பு:**

- 1991-ன் புதிய தொழிற் கொள்கையின் மிக முக்கிய அம்சம் என்னவெனில்,தொழிலிலுக்கு உரிமம் பெறுவதிலிருந்து விலக்களித்தல் மற்றும் சிவப்பு நாடா முறையை முடிவுக்கு கொண்டுவருதலாகும். தொழில் உரிமைக் கொள்கையின் கீழ் தனியார் துறை தொழில் துவங்க உரிமம் பெற வேண்டியிருந்தது.

2. **தொழிற்துறையில் உள்ள ஒதுக்கீட்டை நீக்குதல்:**

- முன்னதாக மூலதன தொழிற்சாலைகளும். முக்கிய தொழிற்சாலைகளும் பொதுத்துறைக்கென ஒதுக்கப்பட்டது. தற்போது தொழிற் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு பெரும்பாலான தொழில்கள் தனியார் துறைக்கு திறந்துவிடப்பட்டது. புதிய தொழிற் கொள்கையின் கீழ் அணுசக்தி, சுரங்கம் மற்றும் இரயில்வே ஆகிய மூன்று துறைகள் மட்டுமே பொதுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த மூன்று துறை தவிர ஏனைய துறைகள் தனியார் துறைக்கு திறந்து விடப்பட்டது.

3. **பொதுத்துறை தொடர்பான சீர்திருத்தங்கள்:**

- பொதுத்துறை சீர்திருத்தங்கள் என்பது திறமையாக இயங்கும் நிறுவனங்களுக்கு தன்னாட்சி வழங்குவதாகும். பொதுத்துறையில் எந்தெந்த துறைகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்பதை அரசு அடையாளம் காண்கிறது. தனது முதலீட்டுக் குறைப்புக் கொள்கை மூலம் பொதுத்துறையை மாற்றியமைக்கிறது. நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைக்க வழிவகுக்கப்பட்டுள்ளது.

4. **முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டுச் சட்டத்தை (MRTP)ஒழித்தல்**

- 1991-ம் ஆண்டைய புதிய தொழிற்கொள்கை முற்றுரிமை வாணிப கட்டுப்பாட்டுச் சட்டத்தை அகற்றியது. 2010-ல் போட்டிக்குழு ஏற்படுத்தப்பட்டது. இது பொருளாதாரப் போட்டி நடைமுறைகளைக் கண்காணிக்கும். இக்கொள்கை தனியார் துறையில் போட்டியை ஏற்படுத்தவும், குறித்த எண்ணிக்கையிலான வெளிநாட்டு நிறுவனங்களை ஈர்க்கவும் செய்தது.

5. **வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கை:**

- பொருளதார சீர்திருத்தத்தின் மற்றொரு முக்கிய அம்சம் வெளிநாட்டு முதலீட்டிற்கும் மற்றும் வெளிநாட்டு தொழில் நுட்பத்திற்கும் சிவப்புக் கம்பள வரவேற்பு தருவதாகும். இந்த நடவடிக்கை நாட்டில் தொழில் துறையில் போட்டியை ஏற்படுத்தி வணிகச் சூழலை மேம்படுத்தியுள்ளது. அயல்நாட்டு நேரடி முதலீடு (FDI) மற்றும் அயல்நாட்டு தொகுப்பு முதலீடு (FPI) ஆகியவற்றிற்கு இலக்குவான வழி திறந்துவிடப்பட்டது. 1991-ல் சில உயர் தொழில்நுட்பம் மற்றும் பேரளவு முதலீடு தேவைப்படும் முக்கிய தொழிற்சாலைகளுக்கு அனுமதியளித்தது. இதில் 51-சதவீத பங்குகள் வரை அயல்நாட்டு நேரடி முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டது. இதன் அளவு பல நிறுவனங்களுக்கு 74 சதவீதமாகவும், பின்னர் 100-சதவீதமாகவும் மாற்றியமைக்கப்பட்டது. இதனால் பல புதிய நிறுவனங்கள் இந்த பட்டியலில் சேர்ந்துள்ளது.

- தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் நேரடி வெளிநாட்டு முதலீடு செய்ய பன்னாட்டு நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு முதலீட்டை ஊக்குவிக்கவும், வெளிநாட்டு முதலீடு ஊக்குவிப்பு வாரியம் (FIPB) அமைக்கப்பட்டது.

**வேளாண் துறையில் சீர்திருத்தங்களின் தாக்கம்:**

- பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளின் தொடக்கத்திலிருந்தே, இந்தியப் பொருளாதாரம், தொழில்துறை மற்றும் சேவைத்துறைகளில் ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடைந்துள்ளது. இருந்தாலும், இவ்வளர்ச்சி வேளாண்துறை வளர்ச்சியைத் தடைசெய்தது. (1984 – 85ல் 3.62 சதவீதமாக இருந்த வளர்ச்சி, 1995 – 96 முதல் 2004 - 05 வரை 1.97 சதவீதமாகக் குறைந்தது) வேளாண்துறையில் விளைச்சல் மற்றும் உற்பத்தித் திறனில் ஒரு பெரிய இடைவெளியைப் பதிவு செய்துள்ளது. இதனால் பணப்பயிர்ப் பயிரிடுதலுக்கு விவசாயிகள் இடம்பெயர்ந்தனர். மேலும், கடன் சூழல்களால் பல்வேறு விவசாயக் குடும்பங்கள் வறுமைக்கும், தற்கொலை போன்ற கொடூர முடிவுகளைக் கையிலெடுக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர்.

**பயிர் காப்பீடு:**

- 18 பிப்ரவரி 2016-ல், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம் (The Pradhan Mantri Fasal Bima) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்படி விவசாயிகள் கோலைகாலப் பயிர்களுக்கு 2%, மற்றும் குறுவை சாகுபடி பயிர்களுக்கு 1.5% என்ற ஒரே சீரான சந்தாத் தொகை கட்ட உதவுகிறது. தோட்டப் பயிர்கள் மற்றும் பணப்பயிர்களுக்கு வருடாந்திர சந்தா 5% ஆக இருக்கும்

**குளிர்பதன சேமிப்புக் கிடங்கு:**

- பழங்களின் உற்பத்தியில், இந்தியா உலக அளவில், மிகப் பெரிய உற்பத்தியாளராகவும், காய்கறிகள் உற்பத்தியில் இரண்டாவது மிகப்பெரிய உற்பத்தியாளராகவும் விளங்குகிறது. இருந்தபோதிலும், அறுவடைக்குப் பின்னால் ஏற்படும் 25மூ முதல் 30மூ வரையிலான இழப்புகளினால், தனிநபருக்குக் கிடைக்கக்கூடிய பழங்கள் மற்றும் காய்கறிகளின் அளவு மிகக்குறைவாகவே உள்ளது. அது தவிர நுகர்வோரை அடையும் நேரத்தில் பண்டத்தின் தரம் கனிசமான அளவில் குறைகிறது. விரைவில் அழுகும் தன்மையுடைய பழங்கள் மற்றும் காய்கறிகளை சந்தைப்படுத்துவதில் பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இது அதிக வியாபாரச் செலவுகள், சந்தைகளில் தேக்கம், விலையில் ஏற்றத்தாழ்வுகள் மற்றும் பல பிரச்சனைகளுக்கும் காரணமாக அமைகிறது. இந்தப் பிரச்சினையைச் சமாளிக்க, இந்திய அரசு மற்றும் வேளாண் அமைச்சகம், 1955 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின் மூன்றாவது பிரிவின்படி, ”குளிர்பதன கிடங்கு ஆணை 1964” "Cold Storgage order, 1964", என்பதை ஏற்படுத்தியது. இருந்தபோதிலும் இன்றளவும் குளிர்பதன சேமிப்பு கிடங்கு வசதி போதிய அளவில் இல்லை.

**உழவர் கடன் அட்டைத்திட்டம்:**

- உழவர் கடன் அட்டை, கிஷான் கிரெடிட் கார்ட் (KCC) என்பது கடன் தேவைப்படுகிற ஒரு விவசாயியின் தகுதிக்கேற்ப கடன் மிக எளிதாக மற்றும் சரியான நேரத்தில் வழங்குவதற்கான ஒரு ஏற்பாடாகும். இது 1998-ம் ஆண்டில் இந்திய மைய வங்கி மற்றும் ”விவசாய மற்றும் கிராமப்புற மேம்பாட்டுக்கான தேசிய வங்கி” (National Bank for Agricultural and Rurul Development, NABARD) ஆகியவற்றால் தொடங்கப்பட்டது. விவசாயிகள் கடனுக்காக முறைசாரா வங்கிளைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதே அதன் நோக்கமாகும். முறைசாரா வங்கிகளைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதே அதன் நோக்கமாகும். முறைசாரா வங்கிகளில் கடன் பெறுவது எளிது, ஆனால் வட்டி வீதம் அதிகம். இந்த கடன் அட்டையை பிராந்திய, கிராமப்புற, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை வங்கிகள் வழங்குகிறது. மேலும் அரசு KCC– கடன் அட்டையை மின் தகவல் கடன் அட்டையாக (Smart card cum debit card) அட்டையாக மாற்றி வழங்க அறிவுறுத்தியுள்ளது.

**அறுவடைக்குப் பின் எடுக்கப்படும் நடவடிக்கைகள்:**

- இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் (Indian Council of Agricultural Research – ICAR), 2012 – 13 ஆம் ஆண்டுக்கான விபரங்களைக் கொண்டு, 2014 – ல் ஆம் ஆண்டுக்கான விபரங்களைக் கொண்டு, 2014-ல் ஆம் ஆண்டு மொத்த விற்பனை விலையில், வேளாண்மையில் அறுவடைக்குப்பின் ஓராண்டுக்கான இழப்பீடு,ரூ. 92,651 கோடியாகவுள்ளதாக கணித்துள்ளது.

- விவசாய விளை பொருட்களின் விரயங்களைக் குறைப்பதற்காகவும் மற்றும் அறுவடைக்குப் பின் ஏற்படும் இழப்புகளைக் குறைப்பதற்கும், உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளின் அமைச்சகம் (MOFPI), மத்திய அரசுத் திட்டங்களின் பல்வேறு கூறுகளை நடைமுறைப்படுத்தியுள்ளது.

- பெரிய உணவுப்பூங்கா, ஒருங்கிணைந்த குளிர் இணைப்பு (அறுவடை இடத்திலிருந்து பாதுகாப்பு பெட்டகம் வரும்வரை குளிர்பதன வசதி), மதிப்புக் கூட்டி பாதுகாக்கும் கட்டமைப்பு, நவீன இறைச்சி வதைக் கூடங்கள்.

**தர உத்திரவாதத் திட்டம்:**

- தரக் குறியீடு (அறிவியல் பூர்வமான தரக் குறியீடு) ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மற்றும் பிற முன்னேற்ற நடவடிக்கைகள், மேலும் தோட்டக்கலை மற்றும் தோட்டக்கலை அல்லாத பொருட்களின் அறுவடைக்குப் பின் நேரிடும் இழப்புகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க, விளைநிலங்களிலிருந்து நுகர்வோர் வரை அல்லது உற்பத்திப் பகுதியிலிருந்து அங்காடி வரையிலான ஒருங்கிணைந்த குளிர்பதன மற்றும் பதப்படுத்தும் கட்டடைப்பு வசதிகளை இந்திய அரசு செய்துள்ளது. 2008 – 09 ஆம் ஆண்டு முதல் நடவடிக்கை எடுத்து வருகிறது. எனினும் முன்னேற்றம் என்பது கண்கூட தெரியவில்லை.

**விவசாயபொருட்களுக்கான அங்காடி குழு Agricultural Produce market Committee (APMC)**

- விவசாய பொருட்களுக்கான அங்காடிக் குழு, வேளாண்மை அல்லது தோட்டக்கலை அல்லது கால்நடைப் பொருட்களை வர்த்தகம் செய்வதற்கு மாநில அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்டப்பூர்வமான அமைப்பு ஆகும்.

**APMC ன் செயல்பாடுகள்**

**APMC ன் பணிகள் பின்வருமாறு:**

1. வேளாண் சந்தைகளில் பொது மற்றும் தனியர்களிடையே கூட்டுறவை வளர்ச்சி பெறச் செய்தல்.
2. சந்தை சார்ந்த விரிவாக்க சேவைகளை விவசாயிகளுக்கு வழங்குதல்.
3. விலை நிர்ணயம் மற்றும் அங்காடிப் பறிமாற்றங்களில் வெளிப்படைத் தன்மையை கொண்டு வருதல்.
4. விவசாய உற்பத்திகளை விற்பனை செய்த அதேநாளில் விவசாயிகளுக்குப் பணம் செலுத்துவதை உறுதி செய்தல்.
5. வேளாண் நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
6. வேளாண் பொருட்களின் வரவு மற்றும் விலை தொடர்பான புள்ளி விவரங்களை அவ்வப்போது காட்சிப்படுத்துதல்.

**சீர்திருத்தங்களுக்குப் பிந்தைய விவசாய நெருக்கடிகள்:**

1. **இடுபொருட்களின் செலவு உயர்வு:**

- விதைகளே விவசாயிகளுக்கான மிகப்பெரிய உள்ளீடு ஆகும். தாராளமயமாக்கப்படுவதற்கு முன் நாடு முழுவதும் விவசாயிகள் மாநில அரசாங்க நிறுவனங்களிலிருந்து விதைகளைப் பெற்று வந்தனர். இந்நிறுவனங்கள் விதைகளை தாங்களே உற்பத்தி செய்து தரம் மற்றும் விலை

நிர்ணயித்துக்கு முழுப் பொறுப்பாக இருந்தன. தாராளமயமாக்கல் மூலம் இந்தியாவின் விதைகள் சந்தை உலகளாவிய வேளாண் தொழிலுக்கு திறந்து வைக்கப்பட்டது. மேலும் கட்டுப்பாடுகள் தளர்ந்தப்பட்டதால் 2003 ஆம் ஆண்டு பல மாநில அரசு நிறுவனங்கள் மூடப்பட்டன. இது விவசாயிகளை இரட்டிப்பாகப் பாதித்தது. விலைகள் உயர்வு மற்றும் போலி விதைகள் உருவாக்கம் போன்ற பிரச்சனைகளை மேலும் பூதாகரமாக்கியது.

2. **வேளாண்மை மானியக் குறைப்பு:**

- ஏற்றுமதி நோக்கத்துடன் மிளகாய், பருத்தி மற்றும் புகையிலை போன்ற பணப்பயிர்களை பாரம்பரியப் பயிர்களோடு ஊடு பயிர் வளர்ப்பதற்கு விவசாயிகளை ஊக்குவித்தனர். தாராளமயமாக்கல் கொள்கைகள், பூச்சிக்கொல்லி மற்றும் உர மானியத்தைக் குறைத்து விட்டதால் உரங்களின் விலைகள் 300% அதிகரித்தன மற்றும் மின் கட்டணங்களும் அதிகரித்துள்ளன. ஆனால் விவசாயப் பொருட்களின் விலை அந்தளவுக்கு உயரவில்லை.

3. **இறக்குமதிச் சுங்கவரி குறைப்பு:**

- உலகமயமாக்குதலின் விளைவாக இறக்குமதி மேல் விதிக்கப்பட்ட வரிகள் குறைக்கப்பட்டன. அத்துடன் 2001-ல் 1500 க்கும் மேற்பட்ட பொருட்கள் மீதான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டன. இதன் விளைவாக இறக்குமதி மலிந்து. பொருட்கள் சந்தையில் குவிந்தன. இதனால் பருத்தி மற்றும் மிளகு போன்ற பயிர்களின் விலை சரிந்தன.

4. **கடன் வசதிகளை நிறுத்தி வைத்தல்:**

- 1991-க்குப் பின்னர் தேசியமயமாக்கப்பட்ட வங்கி உட்பட வணிக வங்கிகளின் கடனளிப்பு முறையில் ஏற்பட்ட பெரும் மாற்றத்தால் விவசாயத்திற்குப் போதுமான கடனுதவி அளிக்க இயலவில்லை. இது விவசாயிகளை அதிக வட்டி வசூலிக்கக்கூடிய வட்டிக்கடைக்காரரைச் சார்ந்திருக்கக் கட்டாயப்படுத்தியது.

**வர்த்தகக் கொள்கைச் சீர்திருத்தங்கள்:**

- 1991 முதல் செயல்பட்டு வரும் புதிய வர்த்தகக் கொள்கையின் முக்கிய அம்சங்களாவன.

**சுதந்திரமான இறக்குமதி மற்றும் ஏற்றுமதி:**

- 1991-க்கு முன், இந்திய இறக்குமதியானது ஒழுங்குபடுத்தப்பட்டு காணப்பட்டது. 1992-லிருந்து இறக்குமதியானது வரையறுக்கப்பட்ட எதிர்மறைப் படியல் மூலம் ஒழுங்குபடுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக, ஏப்ரல் 1, 1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வர்த்தகக் கொள்கையின்படி ஏறத்தாழ அனைத்து இடைவினை மற்றும் மூலதனப் பண்டங்களுக்கான இறக்குமதி சுதந்திரமாக்கப்பட்டது. 71 பொருட்கள் மட்டுமே தடைசெய்யப்பட்ட பட்டியலில் உள்ளன.

**சுங்க கட்டண அமைப்பு மற்றும் அளவுக் கட்டுப்பாடுகளை நீக்குதல்:**

- செல்லையா குழு அறிக்கையானது, இறக்குமதிக்கான தீர்வைகளை பெருமளவு குறைக்கப் பரிந்துரை செய்துள்ளது. உச்ச அளவாக 50 சதவிகிதம் குறைக்க பரிந்துரைத்துள்ளது. இந்தத்தீர்வைகளைப் படிப்படியாகக் குறைப்பதன் முதல் முயற்சியாக 1991 – 92 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கையில் இறக்குமதி வரி 300 சதவீதத்திலிருந்து 150 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்த நிதி அறிக்கைகளில், சுங்க வரியைப் படிப்படியாகக் குறைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

**ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கை:**

- இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகம், 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 அன்று 2015 – 2020 வரையிலான காலத்திற்கான புதிய அயல்நாட்டு வாணிபக் கொள்கையை அறிவித்தது.

**ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை (2015 – 2020):**

- ஏற்றுமதி சூழல்களை மேம்படுத்துதல், உற்பத்தி அதிகரிப்பு மற்றும் "இந்தியாவில் தயாரிப்பு" (Make in India) மற்றும் "மின்னனு இந்தியா" (Digital India) போன்ற திட்டங்களுக்கு ஆதரவளித்தலே இக்கொள்கையின் முதன்மையான நோக்கமாகும்.

**சிறப்பம்சங்கள்:**

- ஏற்றுமதி உதவிகளை 25 சதவீத அளவு குறைக்கவும், இந்தியப் பொருட்களை ஊக்குவிக்கவும் " இந்திய தயாரிப்பு" என்ற கருத்த உருவாக்கப்பட்டது.

- டிஜிட்டல் இந்தியா முறைப்படி, வரித்தாக்கல், முத்திரைத்தாள் கட்டணம் செலுத்துதல் போன்றவற்றிற்கான கைபேசி செயலி மற்றும் பட்டயக் கணக்காளர், கணக்குக்காசாளர் போன்றோரால் (CA/CS/Cost Accountatant) மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது.

- போன்றோரால் மின்னணு முறையில் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படுகின்றது.

- ஏற்றுமதியாளர் / இறக்குமதியாளர் சுயவிவர ஆவணங்களின் அசல் நகல்களை மீண்டும் மீண்டும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

- பாதுகாப்பு, இராணுவக்கிடங்கு, விண்வெளி மற்றும் அணுசக்தி போன்றவை தொடர்பான ஏற்றுமதிக் கோரிக்கைகளுக்கு கால அளவு 24 மாதங்களாகும்.

- தற்போது உலக வர்த்தகத்தில் 3% மாக இருக்கிற இந்தியாவின் பங்கை 2020 – க்குள், ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கை (2015 – 2020) இரு மடங்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Special Economic Zones):**

- அனுமதி வழங்குவதில் பெருகியிருந்த கட்டுப்பாடுகள், உள்கட்டமைப்பு வசதியின்மை, குறைவான நிதி போன்ற குறைபாடுகளைச் சமாளிக்கவும், நேரடி முதலீட்டை ஈர்க்கவும் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சிறப்பு பொருளாதார மண்டலக் கொள்கை உருவாக்கப்பட்டது.

- பொருளாதாரச் சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக வணிக மற்றும் தொழில் காரணங்களுக்காக அரசாங்க நிலங்களை கையப்படுத்தும் நடவடிக்கை தொடங்கப்பட்டது. 2005-ம் ஆண்டின் சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கையின்படி 400 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அறிவிக்கப்பட்டன. இக்கொள்கையினால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் விளைநிலங்களையும் வாழ்வாதாரங்களையும் இழக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. உலகமயமாதலோடு உலகமயமாதலோடு கூடிய ஏற்றுமதி முன்னேற்றம் மற்றும் ஏற்றுமதி வளர்ச்சியை அடைவதற்காக பல நாடுகளில் ஏநுணு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**சிறப்பு பொருளாதார மண்டலம்:**

EPZ– அதிக அளவு வெளிநாட்டுமூலதனத்தை ஈர்த்ததன் விளைவாக, 2000ல் இந்திய அரசு புதிய கொள்கையின் மூலம் சிறப்பு பொருளாதார மண்டலம் என்பதை ஏற்படுத்தியது.

காண்ட்லாவில் ஏற்படுத்தப்பட்ட ஏற்றுமதி செயலாக்க மண்டல வெற்றியை அடுத்து 1980 ன் துவக்க காலத்தில் மேலும் ஏழு EPZ– கள் பம்பாய், நொய்டா, சூரத், சென்னை, ∴பால்டா, விசாகப்பட்டினம்

போன்ற இடங்களில் துவங்கப்பட்டது.

ஆசியாவின் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலத்தை 1965 ல் இந்திய அரசு காண்ட்லா என்னும் இடத்தில் துவங்கியது.

- ஏற்றுமதி செயலாக்க மண்டல மாதிரிகளின் (Export Processing Zone – EPZ) பயன்பாட்டை உணர்ந்த நாடுகளில் முதன்மையானது இந்தியாவாகும். 1965 ஆம் ஆண்டில் கண்ட்லாவில் முதல் ஏற்றுமதி செயலாக்க மண்டலம் அமைக்கப்பட்டது. சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் பல மண்டலங்களை உள்ளடக்கியுள்ளன. எடுத்துக்காட்டாக, சுதந்திர வர்த்தக மண்டலங்கள், ஏற்றுமதி செயலாக்க மண்டலங்கள், தொழில் பூங்காங்கள், பொருளாதார மற்றும் தொழில் நுட்ப முன்னேற்ற மண்டலங்கள், உயிர் தொழில் நுட்ப மண்டலங்கள், அறிவியல் மற்றும் புதுமைப் பூங்காக்கள், இலவசத் துறைமுகங்கள், நிறுவன மண்டலங்கள் போல இன்னும் பல.

**SEZ – ன் - முக்கிய நோக்கங்கள்:**

1. அந்நிய முதலீட்டை அதிகரிக்க, முக்கியமாக அந்நிய நேரடி முதலீட்டை ஈர்த்து, நம் நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) யை அதிகரித்தல்.
2. பன்னாட்டு வியாபாரத்தில் / உலக ஏற்றுமதியில் நமது பங்கினை அதிகரித்தல்
3. கூடுதல் பொருளாதார நடவடிக்கைகளை உருவாக்குதல்
4. வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்
5. கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்
6. உலக அங்காடித் தொழில் நுட்பங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்

**SEZ ன் முக்கிய இயல்புகள்:**

1. பாதுகாப்புடன் கூடிய நிலப்பகுதிகள்
2. தனி அமைப்பால் நிர்வகிக்கப்படுவது
3. நெறிமுறைப்படுத்தப்பட்ட நடைமுறைகள்
4. தனிப்பட்ட விருப்பப் பகுதியைக் கொண்டது
5. தாரளமய பொருளாதார சடடத்தால் நிர்வகிக்கப்படுகிறது.
6. இதில் அமையப்பெற்ற நிறுவனங்களுக்கு அதிக அளவு சுதந்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அரசின் சட்டதிட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை

இதனால் சமூக மற்றும் சுற்றுப்புறச் சூழல்கள் பாதிக்கப்படுகின்றன.

**நிதி சீர்திருத்தங்கள்:**

- நிதி ஒழுங்கு மிக முக்கியம் என்பதில் ஐயமில்லை. இந்த நிதிப் பற்றாக்குறை (குஜளுஊயுடு னுநுகுஐஊஐவு) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூன்று சதவீதத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்ற ஒரு வழிகாட்டுதலை பன்னாட்டு பண நிதியம் கொண்டு வந்தது. இந்த வழியில் அரசானது வரவு செலவுத் திட்டத்தில் செலவுகளை இலக்காகக் கொண்டு வருவாயைப் பெருக்கும். நேரடி வரி அளவை மாற்றியமைப்பதால் ஆடம்பர நுகர்வு குறையும். எனவே பொதுநிதியைக் கூட்டுவதிலும் பொதுச் செலவைக் குறைப்பதிலும் அரசாங்கம் மிகக் குறியாக

இருந்தது. செலவைக் குறைக்கும் முகத்தான் உர மானியம் மற்றும் சர்க்கரை மானியங்கள் குறைக்கப்பட்டன. வருவாயை அதிகப்படுத்த பொதுத்துறைச் சொத்துகள் விற்கப்பட்டன. அரசு நலத்திட்டங்களுக்கான நிதியை படிப்படியாக குறைத்தது. தொழில்துறை நிறுவனங்கள் மீதான வரியைக் குறைத்தது. இதனால் ஏழை மக்களின் மீதான வரி அதிகரித்தது.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (GOODS AND SERVICSE TAX : GST):**

- பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது நுகர்வோர் நுகரும் பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும். விரிவான மறைமுக வரியாக, உற்பத்தி, விற்பனை மற்றும் நுகர்வு மீது விதிக்க இது முன்மொழியப்பட்டது. இது மத்திய மற்றும் மாநில அரசுகள் விதிக்கும் அனைத்து மறைமுக வரிக்கு மாற்றாக கொண்டுவரப்பட்டது. இது உற்பத்தி மற்றும் பண்டங்கள் பணிகள் மீதான அடுக்குவரி பாதக விளைவை நீக்கும். இந்த வரி ஒரு முனை வரியாகும். மதிப்புக் கூட்டப்பட்ட வரி (VAT)– என்பது பலமுனை வரியாகும்.

- பண்டங்கள் மற்றும் சேவைகள் மீதான வரி 29.03.2017- அன்று பாராளுமன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு, 2017 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் முதல் நாளன்று நடைமுறைக்கு வந்தது.

**தற்போதைய வரி விகிதங்கள்:**

**GST– யின் நன்மைகள்**

- அடுக்குவரி விளைவுகளை நீக்கியது.
- ஒரு முனை வரியாக உள்ளது
- பதிக்கான வாசலாக உள்ளது
- சிறிய நிறுவனங்களுக்கான கலவை திட்டங்கள் உள்ளது
- எளிமைப்படுத்தப்பட்டுள்ளது.
- மின்னணு வணிகம் வரையறுக்கப்பட்டுள்ளது.
- தளவாடங்களின் திறன் அதிகப்படுத்தப்பட்டுள்ளது.
- அமைப்பு ரீதியற்ற துறையை ஒழுங்குபடுத்துகிறது.

**பணம் மற்றும் நிதித்துறைச் சீர்திருத்தங்கள்:**

- இச்சீர்திருத்தங்கள் வங்கியமைப்பை மிகுந்த திறனுடையதாய் மாற்ற முயற்சித்தன. வட்டி வீதங்களில் காணப்பட்ட வேறுபாடுகளைக் களைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**பணவியல் மற்றும் நிதித்துறை சீர்திருத்தங்கள்:**

- இச்சீர்திருத்தங்கள் வங்கியமைப்பை மிகுந்த திறனுடையதாய் மாற்ற முயற்சித்தன. வட்டி வீதங்களில் காணப்பட்ட வேறுபாடுகளைக் களைய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

**அவற்றுள் சில**

1. **ரொக்க இருப்பு வீதம்**:

- 1991 ஆம் ஆண்டு நரசிம்மம் குழு பரிந்துரைப்படி, சட்ட ரீதியான நீர்மை விகிதம் (Statutory Liquidity Ratio SLR) மற்றும் ரொக்க இருப்பு வீதம் (Cash Reserve Ratio) குறைக்கப்பட்டது.

1991 ஆம் ஆண்டின் மத்தியில் ஞடுசு மற்றும் CRR விகிதங்கள் மிக அதிகமாக இருந்தன. மூன்றாண்டு கால அளவில் ஞடுசு விகிதத்தை 38.5% லிருந்து 2.5% ஆகக் குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதே போன்று,CRR விகிதத்தையும் நான்கு ஆண்டுகளில் 3.5% ஆகக் குறைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

2. **வட்டி விகிதத் தளர்வு:**

முன்னர், 1. வைப்புகளுக்கான வட்டி வீதம் மற்றும்
2. வங்கிக் கடன்களுக்கான வட்டி

போன்றவற்றை இந்திய ரிசர்வ் வங்கி (RBI) கட்டுப்படுத்தி வந்தது. தற்போது தளர்த்தப்பட்டுள்ளது.

3. பொதுத்துறை, தனியார்துறை மற்றும் அயல்நாட்டு வங்கிகளுக்கிடையேயான அதிகப்படியான போட்டியை சமாளிக்க நிர்வாகத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டன.

4. செயல்பாட்டிலிருக்கும் வங்கிகளின் வலையமைப்பைப் பரவலாக்க வங்கிக் கிளைகளுக்கான உரிமம் வழங்குதல் தளர்த்தப்பட்டது.

5. பொதுத்துறை, தனியார்துறை மற்றும் அயல்நாட்டு வங்கிகளுக்கிடையேயான அதிகப்படியான போட்டியை சமாளிக்க நிர்வாகத்தில் இருந்த தடைகள் நீக்கப்பட்டன.

6. செயல்பாட்டிலிருக்கும் வங்கிகளின் வலையமைப்பைப் பரவலாக்க வங்கிக் கிளைகளுக்கான உரிமம் வழங்குதல் தளர்த்தப்பட்டது.

7. புதிய கிளைகளைக் கண்டறிய மற்றும் சிறப்புக் கிளைகளைத் திறக்க வங்கிகளுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது.

8. புதிய தனியார் துறை வங்கிகள் தொடங்குவதற்காக வழிமுறைகள் வழங்கப்பட்டன.

நரசிம்மம் குழு அறிக்கையின்படி வராக்கடன் மற்றும் சொத்து மதிப்பினைக் கணக்கிட புதிய விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

அலகு– 1

## பேரியல் பொருளாதாரம்

**அறிமுகம்:**

- பொருளாதார பாடமானது, நுண்ணியல் பொருளாதாரம் மற்றும் பேரியல் பொருளாதாரம் என்று இரண்டு கிளைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. நார்வேயைச் சேர்ந்த பொருளியல் வல்லுனரும், பொருளியல் அறிவியலுக்கான முதல் நோபல் பரிசைப் பெற்ற இணை பெறுநர் ரேக்னர்.்.பிர்ஸ்ச் (Ragnar Frisch)என்பவர், சிறிய என பொருள் கொண்ட மைக்ரோ (Micro) மற்றும் பெரிய என்று பொருள் கொண்ட மேக்ரோ (Macor) என்னும் பதங்களை 1933- ல் உருவாக்கினார். இருப்பினும், பேரியல் பொருளாதாரத்தின் நவீன வடிவமானது ஜான் மேனாட் கீன்ஸ் (துழாெ ஆயலயெசன முநலநௌ) ஆல் 1936 ம், ஆண்டு வெளியிட்ட "வேலைவாய்ப்பு, வட்டி மற்றும் பணம் பற்றிய பொதுக் கோட்பாடு" (The General Theory of Empoloyment, Interest and Money) - நூலிலிருந்து தோன்றியதாகும். உலக மகாமந்த (World Great Depression)காலத்தில், பொருள்கள் விற்பனையின்றி தேங்குதல் மற்றும் உழைப்பாளர்கள் வேலையில்லாமை நிலவியதிலிருந்து மீளும் விளக்கத்தை கீன்ஸ் வழங்கினார். எனவே, கீன்ஸ் ஐ நவீன பேரியல் பொருளாதாரத்தின் தந்தை என்பர்.

**பேரியல் பொருளாதாரத்தின் பொருள்:**

- கிரேக்க மொழியில் உள்ள 'Makros' என்ற சொல்லில் இருந்து 'Macro' என்ற சொல் பெறப்பட்டது. அதன் பொருள் "பெரிய" என்பது ஆகும். பேரியல் பொருளாதாரம் என்பது பொருளாதார அமைப்பு முழுமையையும் படிப்பது ஆகும். மாற்றாக கூறின், பேரியல் பொருளாதாரம் என்பது ஒட்டு மொத்தமாகிய தேசிய வருவாய், வேலைவாய்ப்பு மற்றும் நாட்டு உற்பத்தி போன்றவற்றை உள்ளடக்கியது. "பேரியல் பொருளாதாரத்தை வருவாய் கோட்பாடு" எனவும் அழைப்பர்.

- பேரிய பொருளாதாரத்தின் பாடப்பொருட்களாக உள்ளடங்கும் பகுதிகளாவன: வேலைவாய்ப்பு, தேசிய வருவாய், தேசிய வருவாய், பணவீக்கம், வணிகச் சுழற்சி, வறுமை, ஏற்றத்தாழ்வு வேறுபாடு, முதலீடு மற்றும் சேமிப்பு, மூலதன ஆக்கம், கட்டமைப்பு மேம்பாடு, பன்னாட்டு வாணிபம், பன்னாட்டு வாணிகச் சமநிலை மற்றும் பன்னாட்டு செலுத்துதலின் சமநிலை, மாற்று விகிதம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகும்.

**பேரியல் பொருளாதாரத்தின் முக்கியத்துவம்:**

ஒரு பொருளாதார அமைப்பில், பேரியல் பொருளாதார கண்ணோட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- ஒரு பொருளாதார அமைப்பின் ஒட்டு மொத்த செயல்பாடுகளை புரிந்து கொள்ளவும், அதற்குத் தேவையான சரியான யுக்திகளை மாற்றவும் மற்றும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

- எதிர்கால பிரச்சினைகளைப் புரிந்துக் கொள்ளவும், தேவைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதற்கும், தேவையான முன்னேச்சரிக்கை நடிவடிக்கைகளை எடுப்பதற்கும் பேரியல் பொருளாதாரம் பயன்படுகிறது.

- நடப்புப் பிரச்சினைகளை அறிவியல் பூர்வ விசாரணை மூலம் அறிய பேரியல் பொருளாதாரம் வாய்ப்பளிக்கிறது.

- பொருளாதாரக் குறியீடுகளை பகுத்தாயவும் அவைகளை ஒப்பிடவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

- பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காணவும், சரியான கொள்கைகளை உருவாக்கவும், எதிர்காலத்தில் நடப்பவைகளை முன்கணிக்கவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை (SCOPE):**

- பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை மிகப் பெரியதாகவும் பல முக்கிய பகுதிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

**தேசிய வருவாய் (National Income):**

- தேசிய வருவாயை கணக்கிடுதல் மற்றும் தேசிய வருவாயில் துறைகளின் பங்கு போன்றவை பேரியல் பொருளாதார பகுத்தாய்வின் அடிப்படை அம்சங்களாகும். தேசிய வருவாய் மற்றும் அதன் பங்குகளின் போக்கு ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி முறையின் நீண்ட கால அறிவைத் தருகிறது.

**பண வீக்கம் (Inflation):**

- பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதை குறிப்பதாகும். மொத்த விலை குறியீட்டெண், மற்றும் நுகர்வோர் விலை குறியீட்டெண் போன்ற விலை குறியீட்டெண்களைப் பயன்படுத்தி மொத்த விலை அளவை மதிப்பிடுவது அவசியமாக இருக்கிறது.

**வாணிபச் சுழற்சி (Business Cycle):**

- பொதுவாக எல்லா நாடுகளும் வாணிப ஏற்றத் தாழ்வு மற்றும் வாணிப சுழற்சியால் ஏற்படும் பிரச்சினைகளை சந்திக்கின்றன. மொத்த பொருளாதார காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வாணிபச் சுழற்சி மாற்றங்களைத் (செழிப்பு, பின்னிறக்கம், மந்தநிலை மற்றும் மீட்பு) தெரிந்துக் கொள்ள முடிகிறது.

**வறுமை மற்றும் வேலையின்மை (Poverty and Unemployment): :**

- வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமை மற்றும் வேலையின்மை மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும். இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண, வளங்களை ஒதுக்கீடு செய்யவும், சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது.

**பொருளாதார வளர்ச்சி (Economic Growth):**

- பேரியல் பகுத்தாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம், அதை தீர்மானிக்கும் காரணிகள் போன்றவற்றை புரிந்துகொள்ள முடியும்.

**பொருளாதார கொள்கைகள் (Economic Policies):**

- பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதற்கு பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. அடிப்படை பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், தடைகளை தகர்த்தெறியவும் மற்றும் வளர்ச்சியை அடைவதற்கும் பொருளாதாரக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

**குறைகள்:**

பேரியல் பொருளாதாரம் கீழ்க்காணும் குறைகளைக் கொண்டுள்ளது. அவையாவன.

1. பொருளாதாரம் முழுமைக்கும் மிகைப்படுத்தி பொதுமையாக்கும் ஆபத்து காணப்படுகிறது.

2. தனிப்பட்ட நிறுவனங்கள் அனைத்தும் ஓரினத் தன்மை வாய்ந்தது என்ற எடுகோளை பேரியல் பொருளாதாரம் கொண்டுள்ளது.

3. தொகுத்தலில் தவறுகள் காணப்படும். ஒரு தனி நபருக்கு சரியானவை, ஒரு நாட்டிற்கு சரியாக இருக்காது. ஒரு நாட்டிற்கு பொருந்துவது, மற்ற நாட்டிற்கும் மேலும் மற்றொரு காலத்திற்கும் பொருந்தாது.

4. பொருளாதார நடவடிக்கைகளை பல பொருளாதாரமற்ற காரணிகள் தீர்மானிக்கின்றன. ஆனால் பேரியல் பொருளாதார கோட்பாடுகளில் இக்காரணிகள் இடம் பெறவில்லை.

**பொருளாதார அமைப்பு மற்றும் அதன் வகைகளும்:**

- பொருளாதார அமைப்பு என்ற கருத்தினை ஏ.ஜே. பிரவுண் (A.J. Brown) என்பவர், "மக்கள் தங்கள் பிழைப்பை அமைத்துக் கொள்ளும் முறையை குறிப்பது" என்று வரையறுத்துள்ளார். ஜே.ஆர். ஹிக்ஸ் (J.R. Hicks) "நுகர்வோரின் விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கான பொருட்கள் மற்றும் சேவைகளை தயாரிக்கும் உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களுக்கிடையே உள்ள கூட்டுறவே பொருளாதார அமைப்பு" என கூறுகிறார்.

- சுருங்ககூறின், ஒரு பொருளாதார அமைப்பு என்பது பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எந்த முறையையோ அல்லது பகுதியையே குறிப்பதாகும். ஒவ்வொரு பொருளாதார அமைப்பும் அதனது தனி தன்மைகளை கொண்டு காணப்படும். அதன்படி, அதன் பணிகள் அல்லது நடவடிக்கைகளும் வேறுபடும். ஒரு பொருளாதார அமைப்பின் நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை கீழ்காணும் வரைபடம் மூலம் விளக்கலாம்.

- ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை நடவடிக்கைகள் உற்பத்தி (Production) மற்றும் நுகர்வு (Consumption) ஆகும். இந்த இரு நடவடிக்கைகளும் பல்வேறு பிற நடவடிக்கைகளால் உதவப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளின் தலையான நோக்கம் வளர்ச்சியை (Growth) அடைவதாகும். பகிர்வுப் பணி (Exchange Activity) யானது உற்பத்தி மற்றும் நுகர்வு பணிகளுக்கு உதவுகின்றன.

- இந்த நடவடிக்கைகள் பல்வேறு பொருளாதார மற்றும் பொருளாதார மற்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படுகின்றன. முக்கிய பொருளாதார நடவடிக்களாவன (Economic Activities): போக்குவரத்து, வங்கிப்பணி, விளம்பரம், திட்டமிடல், அரசின் கொள்கை மற்றும் பிற பணிகள். முக்கிய பொருளாதார மற்ற நவடிக்கைகளாவன (Non – Econoic Activities): சுற்றுச்சூழல், ஆரோக்கியம், கல்வி, பொழுதுபோக்கு, ஆட்சிமுறை, நெறிப்படுத்துதல் போன்றவை. இந்த உதவிப் பணிகளுக்கு மேலாக, பிற பொருளாதாரத்தின் வெளி நடவடிக்கைகளான இறக்குமதி, ஏற்றுமதி, பன்னாட்டு உறவுகள், குடியேற்றம், இடப்பெயர்ச்சி, பன்னாட்டு முதலீடு, பன்னாட்டு மாற்று வருவாய் போன்றவை பொருளாதார அமைப்பின் மொத்த செயல்பாட்டையும் பாதிக்கின்றன.

பொருளாதார அமைப்புகளை பல்வேறு அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

1. **வளர்ச்சி நிலை:** வளர்ந்த, வளராத, முன்னேறாத மற்றும் வளரும் பொருளாதார அமைப்புகள்
2. **நடவடிக்கைகளின் முறை:** முதலாளித்துவ, சமத்துவ மற்றும் கலப்பு பொருளாதார அமைப்புகள்
3. **நடவடிக்கைகள் அளவு:** சிறிய மற்றும் பெரிய பொருளாதார அமைப்புகள்
4. **செயல்படும் தன்மை**: நிலையான மற்றும் இயங்கும் பொருளாதார அமைப்புகள்
5. **செயல்பரப்பு தன்மை:** மூடிய மற்றும் திறந்த வெளி பொருளாதார அமைப்புகள்
6. **முன்னேற்ற தன்மை**: பழைமையான மற்றும் நவீன பொருளாதார அமைப்புகள்

7. **தேசிய வருவாய் அளவு:** குறைந்த வருவாய், இடைநிலை வருவாய் மற்றும் அதிக வருவாய் பொருளாதார அமைப்புகள்

### பொருளாதார அமைப்பு முறைகள் (Economic Systems):

- பொருளாதார அமைப்பு முறை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் மக்களையும் நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது ஆகும். இது சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ள உதவும் பொருளாதார நடவடிக்கைகளின் செய்யும் வழிமுறை ஆகும். பொருளாதார அமைப்பு முறை மூன்று முக்கிய வகைகளைக் கொண்டுள்ளது. அவையாவன.

1. முதலாளித்துவ பொருளாதார அமைப்பு (முதலாளித்துவம்)
2. சமத்துவ பொருளாதார அமைப்பு (சமத்துவம்) மற்றும்
3. கலப்பு பொருளாதார அமைப்பு (கலப்புத்துவம்)

**உலகத்துவம்:**
பன்னாட்டு வாணிபத்தால் நாடுகளை இணைப்பதன் மூலம் உலக முன்னேற்றத்தை எதிர்நோக்கம் உலகமயமாக்குதல் என்ற புதிய அங்காடி தத்துவத்தை குறிப்பிட்ட, உலகத்துவம் (Globalism) என்ற பதத்தை, மேன்பிரட்டிஸ்டீகர் (Manfred D steger) 2002 ம் ஆண்டு உருவாக்கினார். இந்த தத்துவம், விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவம் (Extended Capitalism) என்றும் குறிப்பிடப்படுகின்றது.

- முதலாளித்துவம் மற்றும் சமத்துவம் ஆகிய இரு அணுகுமுறைகளும் ஒன்றுக்கொன்று எதிரிடையானது. முதலாளித்துவ பொருளாதாரத்தில், தனியார் உற்பத்தி நிறுவனங்களுக்கு முழு சுதந்திரம் உள்ளது. சமத்துவ பொருளாதாரத்தில், தனியார் நிறுவனத்திற்கு சுதந்திரம் இல்லை. மாறாக உற்பத்தியில் அனைத்து செயல்பாடுகளும் பொதுவுடைமை ஆக்கப்படும். கலப்பு பொருளாதார அமைப்பு என்பது முதலாளித்துவம், சமத்துவம் ஆகிய இரண்டின் இயல்புகளையும் உள்ளடக்கியது. கீழ்கண்ட பகுதியில் பல்வேறு பொருளாதார அமைப்பு முறைகளின் இயல்புகள், நன்மைகள் மற்றும் குறைகள் விளக்கப்பட்டு உள்ளன.

### முதலாளித்துவ பொருளாதார அமைப்பு (முதலாளித்துவம்):

- “முதலாளித்துவத்தின் தந்தை“ ஆடம் ஸ்மித் ஆவார். முதலாளித்துவப் பொருளாதார அமைப்பை தடையில்லா பொருளாதாரம் (Laissez faire - லேசிபேர், லத்தீனில் - Free Economy) அல்லது சந்தைப் பொருளாதாரம் (Market Economy) என்றும் அழைக்கிறோம். இங்கு பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.

- முதலாளித்துவ பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருப்பார்கள். தனிநபர் தங்களுக்கான வேலையைத் தெரிந்தெடுப்பதிலும் மற்றும் திறமையை வளர்த்துக் கொள்வதிலும் சுதந்திரமாகச் செயல்படுவர். USA, மேற்கு ஜெர்மனி, ஆஸ்திரேலியா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு உதாரணங்கள் ஆகும்.

- மேலும், இவ்வமைப்புகளில் அங்காடிச் சக்திகளிடம் இருந்து (Market forces) அடித்தட்டு சாதாரண மக்களை பாதுகாக்க தேவையான சமூக நல நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர்.

**முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இயல்புகள்:**

1. **தனியார் சொத்துரிமை மற்றும் பரம்பரைச் சட்டம் (Private Ownership of Property and Law of Inheritance):**

- முதலாளித்துவத்தின் முக்கிய இயல்பு என்னவெனில், நிலம், உழைப்பு, மூலதனம், இயந்திரங்கள்,சுரங்கம் போன்ற அனைத்த வளங்களும் தனிநபர்களுக்கு சொந்தமாக இருக்கும். உரிமையாளர்கள் வளங்களை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு உரிமம் கொள்ள, வைத்துக்கொள்ள, விற்க மற்றும் பயன்படுத்த அதிகாரம் படைத்தவர்களாவர். உரிமையாளர்கள் இறந்த பிறகு சொத்துக்கள் அவர்கள் வாரிசுகளுக்கு மாற்றப்படும்.

2. **தெரிந்தெடுப்பதில் சுதந்திரம் (Freedom of Choice and Enterprise):**

- ஒவ்வொரு தனிநபரும் தங்களது வேலையைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி செய்யும் பொருட்களை தேர்ந்தெடுப்பதிலும் மற்றும் வியாபார இடத்தை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பர். அதே போன்று நுகர்வோர்கள் தங்களுக்கு விருப்பமான பொருட்களை தெரிவு செய்வதிலும் முழு சுதந்திரம் பெற்றிருப்பார்கள்.

3. **இலாப நோக்கம் (Profit Motive):**

- முதலாளித்துவ பொருளாதார அமைப்பில், அனைத்து பொருளாதார நடவடிக்கைகளிலும் இலாபம் பெறுவதே உந்து விசையாக காணப்படும். ஒவ்வொரு தனிநபர்களும்,அமைப்புகளும் அதிக இலாபம் தரக்கூடிய பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்வார்கள். இங்கு வேலை பகுப்பு, புதிய தொழில்நுட்பம் மற்றும் சிறப்புக் கவனம் போன்றவை பின்பற்றப்படும். முதலாளித்துவ பொருளாதார அமைப்பில் உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படுகின்ற தங்க விதி (Golden Rule) "உச்ச இலாபம்" அடைதல்.

4. **போட்டியில் சுதந்திரம் (Free competition):**

- பொருட்கள் சந்தை மற்றும் காரணிகள் சந்தை ஆகிய இரண்டிலும் முழு சுதந்திரம் உண்டு. அரசாங்கமோ வேறு எந்த அமைப்போ நிறுவனங்களின் வாங்குதல் மற்றும் விற்பதில் தலையிட முடியாது. வாங்குபவர் மற்றும் விற்பவர் இடையே போட்டி நிலவும்.

5. **விலை இயங்கு முறை (Price Mechanism):**

- விலை இயங்கு முறையானது முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் இதயமாகும். அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் விலை இயங்கும் முறை, தேவை மற்றும் அளிப்பு அங்காடி சக்திகளால் கட்டுப்படுத்தப்படுகிறது.

6. **அரசின் பங்கு (Role of Government):**

- முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் விலை இயங்கு முறையை கட்டுப்படுத்துவதால், அரசின் பங்கு மிகக் குறைவாக இருக்கும். அடிப்படை பணிகளான பாதுகாப்பு, பொதுநலம், கல்வி போன்றவற்றை அரசாங்கம் வழங்குகிறது.

7. **வருமான ஏற்றத்தாழ்வு (Inequalities of Income):**

- முதலாளித்துவ சமுதாயம் இரண்டு வகுப்பாகப் பிரிக்கப்படுகிறது. சொத்துக்களை வைத்திருப்பவர்கள் (Haves) மற்றும் சொத்துக்கள் இல்லாதவர்கள் (Have – nots) எனப் பிரிக்கப்பட்டுள்ளனர். இதன் விளைவாக, பணக்காரர்கள் இன்னும் பணக்காரர்களாகவும், ஏழைகள் இன்னும் ஏழைகளாகவும் இருக்கின்றனர். இதனால் பொருளாதார சமனற்ற நிலை அதிகரிக்கிறது.

## முதலாளித்துவத்தின் நன்மைகள் (Merits of Capitalism):

1. **தானாக இயங்குதல்:** முதலாளித்துவ பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் எந்த தலையீடும் இல்லாமல் பொருளாதாரம் தானாகவே செயல்படும்.

2. **வளங்களைத் திறமையாகப் பயன்படுத்துதல்:** இப்பொருளாதாரத்தில் அனைத்து வளங்களும் திறமையாக உத்தம அளவில் பயன்படுத்தப்படுகிறது.

3. **கடின உழைப்பிற்கு வெகுமதி:** கடின உழைப்பு ஊக்குவிக்கப்படுவதும். அதிக திறனால் தொழில் முனைவோர்கள் அதிக இலாபம் பெறுவதும் காணப்படும்.

4. **பொருளாதார முன்னேற்றம்:** முதலாளித்துவ பொருளாதார அமைப்பில், உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் அளவு மிக அதிகமாகும்.

5. **நுகர்வோர் இறையாண்மை:** அனைத்து உற்பத்தி நடவடிக்கைகளும் நுகர்வோர்களை திருப்தி செய்வதை முக்கிய நோக்கமாக கொண்டிருக்கின்றந.

6. **மூலதன ஆக்க வீதம் அதிகரித்தல்:** சேமிப்பும், முதலீடும் அதிகரிக்கும். மூலதன அக்க வீதத்தை உயர்த்த வழி வகுக்கும்.

7. **புதிய தொழில்நுட்ப முன்னேற்றம்:** இலாபம் பெறுவது நோக்கமாக இருப்பதால், உற்பத்தியாளர்கள் புதிய தொழில் நுட்பத்தில் முதலீடு செய்து, தரமான பொருட்களை உற்பத்தி செய்வர்.

## முதலாளித்துவத்தின் குறைகள்: (Demerits of Capitalism):

1. **வருமானம் மற்றும் செல்வச் செறிவு:**
முதலாளித்துவத்தில் வருமானம் மற்றும் செல்வம் சிலரது கைகளில் மட்டும் குவிகிறது. இதனால் வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கிறது.

2. **வளங்கள் வீணாக்கப்படுதல்**:
போட்டி விளம்பரங்களினாலும் பொருட்களின் பிரதிகளினாலும் வளங்கள் அதிக அளவில் வீணாக்கப்படுகின்றன.

3. **வகுப்புப் போராட்டம்:**
முதலாளித்துவமானது, சமுதாயத்தை முதலாளிகளாகவும், வேலைக்காரர்களாகவும் பிரிப்பதால் வகுப்பு போராட்டத்திற்கு வழிவகுக்கிறது.

4. **வாணிபச் சுழல்:**
தடையில்லாச் சந்தை முறை (Free Market system) அதிக அளவில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் பல்வேறு நெருக்கடிகளுக்கும் கொண்டு செல்கிறது.

5. **அத்தியாவசியமில்லா பொருட்களின் உற்பத்தி**:

இலாபத்தைப் பெறுவதற்காக வாய்ப்பு இருக்குமாயின், தீங்கு விளைவிக்கும் பொருட்கள் கூட உற்பத்தி செய்யப்படும்.

## சமத்துவப் பொருளாதார அமைப்பு (Socialism):

- கார்ல் மார்க்ஸ் சமத்துவத்தின் தந்தை ஆவர். சமத்துவம் என்பது மொத்த திட்டமிடுதல், பொது உடமை மற்றும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் கட்டுப்பாடு ஆகிய முறைகளை குறிப்பிடுவதாகும். அரசே பெரும்பான்மையான தொழில்களை உரிமம் கொண்டு மற்றும் கட்டுப்படுத்தி ஒரு சமுதாயத்தின் ஒழுங்குபடுத்தும் முறையை வரையறுப்பது சமத்துவம் ஆகும். ஒரு சமத்துவ பொருளாதார அமைப்பை, திட்டமிட்ட பொருளாதாரம் (Planned Economy) அல்லது கட்டளைப் பொருளாதாரம் (Command Economy) என்றும் அறியப்படுகிறது.

* ஒரு சமத்துவ பொருளாதார அமைப்பின் அனைத்து வளங்களையும் அரசே உரிமமாக்கி பயன்படுத்தும். பொதுநலமே (Public Welfare) அனைத்து பொருளாதார நடவடிக்கைகளின் பின்புல முக்கிய நோக்கமாகும். வருவாய் மற்றும் செல்வம் பகிர்வதில் சமத்துவம் மற்றும் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்குவதே இதன் குறிக்கோள். ரஷ்யா, சீனா, வியட்நாம், போலந்து மற்றும் க்யூபா ஆகியவை சமத்துவ பொருளாதார அமைப்புகளுக்கு உதாரணமாகும். ஆனால் தற்காலத்தில், முற்றிலும் பொருத்தமான சமமத்துவ பொருளாதார அமைப்புகள் எங்கும் இல்லை.

**சமத்துவ பொருளாதார அமைப்பின் இயல்புகள்:**

1. **உற்பத்தி மூலங்களின் பொது உரிமம் (Public Ownership):**
அனைத்து வளங்களுக்கும் அரசே உரிமம் கொண்டிருக்கும். இதன் பொருள் என்னவெனில், அனைத்து உற்பத்திக் காரணிகளும் பொது அதிகாரத்தால் (அரசால்) தேசிய மயமாக்கப்பட்டு நிர்வகிக்கப்படும்.

2. **மைய திட்டமிடல் (Central Planning):**

ஒரு சமத்துவ பொருளாதார அமைப்பில், திட்டமிடுதல் என்பது ஒருங்கிணைந்த ஒரு பகுதியாகும். இந்த அமைப்பு முறையில், மைய திட்ட அதிகாரமே அனைத்து முடிவுகளையும் மேற்கொள்ளும்.

3. **அதிக பட்ச சமூக நலன் Social Benefit):**

சமூக நலன் அனைத்து பொருளாதார நடவடிக்கையின் வழி காட்டுக்கொள்கையாகும். பெரும்பாலான பயன்கள் சமூகத்திற்கு சம அளவில் பகிரும்படியாக முதலீடுகள் திட்டமிடப்படுகின்றன.

4. **போட்டி இல்லாமை:**

சமத்துவ பொருளாதார அமைப்பு முறையில் போட்டி இல்லாத அங்காடி காணப்படும். பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தியையும், பகிர்வையும் அரசே முற்றிலும் கட்டுப்படுத்துகிறது. நுகர்வோருக்கு ஒரு வரையறுக்கப்பட்ட விருப்ப அளவே உண்டு.

5. **விலை இயங்கு முறை இல்லாமை (Price mechanism):**

மையதிட்ட அதிகாரத்தின் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குப்படுத்துதலின் அடிப்படையில் விலை நிர்ணய முறை காணப்படும்.

6. **வருவாயில் சமத்துவம் (Equality of Income):**

சமத்துவ பொருளாதார அமைப்பின் மற்றொரு அத்தியாவசிய தன்மையானதுபொருளாதார ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதும் மற்றும் குறைப்பதும் ஆகும். சமத்துவ பொருளாதாரத்தில், தனியார் சொத்துரிமை மற்றும் வாரிசு சொத்துரிமை நடைமுறையில் இல்லை.

7. **வாய்ப்புகளில் சமத்துவம் (Equality of Opportunity):**

இலவச மருத்துவம், கல்வி மற்றும் பயிற்சி ஆகியவை சமத்துவ பொருளாதாரத்தில் அனைவருக்கும் சம வாயப்பு வழங்கப்படும்.

8. **வகுப்பு பேதமில்லா சமூகம் (Classless Society):**

சமத்துவ பொருளாதாரத்தில், வகுப்பு பேதமில்லா சமூகம் மற்றும் வகுப்பு சண்டைகள் இல்லை. ஒரு உண்மையான சமத்துவ சமூகத்தில், பொருளாதார நிலையில் அனைவரும் சமம்.

**சமத்துவ பொருளாதார அமைப்பின் நன்மைகள்:**

1. **ஏற்றத்தாழ்வுகளில் குறைவு:**
எந்த நபராலும் தனியார் சொத்துக்களை உரிமம் கொண்டு மற்றும் பயன்படுத்துவதன் மூலம் மற்றவர்களை சுரண்ட அனுமதி இல்லை.

2. **வளங்கள் அறிவார்ந்த முறையில் ஒதுக்கீடு:**
மைய திட்ட அதிகாரத்தால் திட்டமிட்டபடி வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வளங்கள் விரயமாவது குறைக்கப்படுவதுடன் முன்திட்ட அடிப்படையில் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

3. **வகுப்பு சண்டைகள் இல்லாமை:**
ஏற்றத்தாழ்வுகள் குறைவாக இருப்பதால், பணக்காரர் மற்றும் ஏழைகளுக்கிடையேயான சண்டைகள் இருப்பதில்லை. சமூகம் சுமுகமான சூழலில் செயல்படும்.

4. **வாணிக சூழலுக்கு முடிவு:**
பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி மற்றும் பகிர்வை திட்ட அதிகாரமே முழு கட்டுக்குள் வைத்துக்கொள்ளும் அதனால், தவிர்க்க முடியும்.

5. **சமூக நலன் முன்னேற்றம்:**
சுரண்டல் இல்லாமை, மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்படுகிறது. ஏற்றத்தாழ்வுமிக்க வாணிகச் சுழல் தவிர்த்தல் மற்றும் உற்பத்தித்திறன் அதிகரித்தல் ஆகியவை சமூக நலன் வளர உதவுகிறது.

**சமத்துவ பொருளாதார அமைப்பின் தீமைகள்:**

1. **சிகப்பு நாடாக (Red Tapism) மற்றும் அதிகார வர்க்கம் (Bureaucracy):**
அனைத்து முடிவுகளையும் அரசு அமைப்புகளை எடுப்பதாலும், அநேக அலுவலர்களின் அனுமதி பெற வேண்டி, கோப்புகள் ஒரு மேஜையிலிருந்து மற்றொன்றுக்கு செல்ல எடுக்கும் கால அளவு அதிகமாவதாலும் ஒரு சிகப்பு நாடா நிலைக்கு கொண்டு செல்லப்படும்.

2. **ஊக்கமில்லாமை (Absence of Incentive):**

சமத்துவத்தின் மிகப்பெரிய குறை என்பது, இந்த முறையில் திறமைக்கு எந்த ஊக்கமும் அளிப்பதில்லை. எனவே, உற்பத்தி திறனும் பாதிக்கப்படும்.

3. **தெரிவு செய்வதில் சுதந்த குறைவு (Limited Freedom & Choice):**

பண்டங்கள் மற்றும் பணிகளை நுகர்வதில் தெரிவு செய்யும் சுதந்திரம் நுகர்வோரால் அனுபவிக்க முடியாது.

4. **அதிகாரம் குவிதல் (Concentration of Power):**

அரசே அனைத்து முடிவுகளையும் எடுக்கிறது. பொருளாதார தீர்மானங்களில் தனியார் எந்த முயற்ச்சியும் எடுப்பது இல்லை. எனவே, அரசே மிகவும் சக்தி வாய்ந்ததாகவும் மற்றும் அதிகார துஷ்பிரயோகத்திற்கு வாய்ப்பாகவும் அமைகிறது.

**கலப்புப் பொருளாதாரம் (கலப்புத்துவம்):**

**கலப்பு பொருளாதார அமைப்பின் தன்மைகள்**

1. **சொத்து, உற்பத்திச் சாதனங்களின் உரிமம்(Ownership of Property and Means of Production)**
உற்பத்திச் சாதனங்களும் சொத்துக்களும் தனியார் மற்றும் பொதுத்துறைக்குச் சொந்தமாக இருக்கும். பொதுத்துறையும் தனியார்துறையும் வளங்களைக் கொள்முதல் செய்யவும், பயன்படுத்தவும் அல்லது மாற்றவும் உரிமை கொண்டிருக்கும்.

2. **பொது மற்றும் தனியார் துறைகள் இணைந்திருக்கும் (Coexistence of Public and Private Sectors)**
கலப்புப் பொருளாதாரங்களில் தனியார், பொதுத்துறைகள் இரண்டும் இணைந்திருக்கும். தனியார் தொழிற்சாலைகள் இலாபத்திற்காகவே நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சமூகநலனை உச்சப்படுத்துவதற்காக பொதுத்துறை நிறுவனங்கள் அரசின் வசம் இருக்கும்.

3. **பொருளாதாரத் திட்டமிடல் (Economic Planning)**
மைய திட்டமிடல் அதிகாரம் பொருளாதாரத் திட்டங்களைத் தயாரிக்கும். அரசினால் தயாரிக்கப்படும் தேசிய திட்டங்களை. தனியார் துறையும் பொதுத்துறையும் மதித்து பின்பற்றும். பொதுவாக, திட்டத்தில் வரையறுக்கப்பட்ட நோக்கங்கள், முன்னுரிமைகள், இலக்குகள் அடிப்படையில்தான் எல்லாத்துறைகளும் இயங்கும்.

4. **பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு(Solution to Economic Problems)**
ஏதனை உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? எப்படி உற்பத்தி செய்வது? யாருக்காக உற்பத்தி செய்வது? மற்றும் எப்படிப் பகிர்ந்தளிப்பது போன்ற அடிப்படைப் பிரச்சினைகளை விலை இயக்க முறை (Price mechanism) மற்றும் அரசின் தலையீட்டின் (Government Intervention) மூலம் தீர்க்கப்படும்.

5. **சுதந்திரமும் கட்டுப்பாடும்(Freedom and Control)**
வளங்களை உரிமை கொண்டாடவும், பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்து பகிரவும் தனியாருக்குச் சுதந்திரம் இருந்தாலும்கூட, அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளின் ஒட்டுமொத்தக் கட்டுப்பாடும் அரசிடமே காணப்படும்.

**கலப்புத்துவத்தின் நன்மைகள்**

1. **அதிவேகப் பொருளாதார வளர்ச்சி(Rapid Economic Growth)**

கலப்புப் பொருளாதாரத்தின் சிறந்த நன்மை அதிக வேக பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதாகும். இவ்விதம், பொதுத் தேவைகளும், தனியாரின் தேவைகளும் சந்திக்கப்படுகின்றன.

2. **சமமான பொருளாதார வளர்ச்சி (Balanced Economic Growth)**

பொருளாதாரத்தின் சமநிலை வளர்ச்சியை கலப்புத்துவம் ஊக்குவிக்கிறது. இது வேளாண்மை மற்றும் தொழில், நுகர்வுப் பண்டங்கள் மற்றும் மூலதனப் பண்டங்கள், கிராமம் மற்றும் நகரம் ஆகியவற்றிடையே சமமான வளர்ச்சியை ஊக்குப்படுத்தும்.

3. **வளங்களைச் சரியாக பயன்படுத்துதல் (Proper Utilization of Resources)**
ஒரு கலப்புப் பொருளாதாரத்தில், வளங்களின் சரியான பயன்பாட்டை அரசு உறுதிப்படுத்தலாம். அரசு பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை நேரடியாகக் கட்டுப்படுத்தும். மேலும் தனியார் துறையை மறைமுகமாகக் கட்டுப்படுத்தும்.

4. **பொருளாதாரச் சமத்துவம்(Economic Equality)**

அரசு வருவாய் வரியை விதிப்பதற்கு வளர்வீத வரிமுறையைப் பயன்படுத்தி பொருளாதார சமத்துவத்தை கொண்டு வருகிறது.

5. **சமூகத்துக்கு சிறப்பு நன்மைகள் (Special Advantages to the Society)**
குறைந்தபட்சக் கூலிகள் மற்றும் பகிர்வு முறைச் சட்டங்கள், நியாயவிலைக் கடைகளை ஏற்படுத்துதல், மற்றும் சமூகநல நடவடிக்கைகளை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் தொழிலாளர்கள், நலிவடைந்த பிரிவினரின் ஆர்வங்களை அரசு பாதுகாக்கும்.

## கலப்பு பொருளாதார அமைப்பின் தீமைகள் (Demerits of Mixedism)

### 1. ஒருங்கிணைப்பு இல்லாமை(Lack of Coordination)

கலப்புத்துவத்தின் மிகப்பெரிய குறைபாடு பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளிடையே ஒருங்கிணைப்பு இல்லாததாகும். இவ்விரண்டு துறைகளும் வேறுபட்ட நோக்கங்களுடன் செயல்படுவதால் ஒருங்கிணைப்புத் தொடர்பான பிரச்சினைகள் உருவாகின்றன.

### 2. போட்டி மனப்பான்மை (Competitive Attitude)

அரசு மற்றும் தனியார் துறைகள் சமூகத்தின் நலனுக்காக இணைந்து செயலாற்றும் மனப்பான்மையுடன் இருக்க வேண்டும் என்பது எதிர்பார்ப்பு. ஆனால் நடைமுறையில் இவ்விரண்டு துறைகளுத் அவற்றின் நடவடிக்கைகளில் போட்டித் தன்மையுடனேயே நடந்துகொள்கின்றன.

### 3. திறமையின்மை (Inefficiency)

மந்தமான அதிகாரமுறை, சிவப்புநாடாமுறை, ஊக்கமின்மை ஆகியவற்றால் பொதுத்துறை நடவடிக்கைகளில் பெரும்பாலானவை திறனற்றவைகளாகவே இருக்கின்றன.

### 4. தேசியமாக்கல் பற்றிய பயம் (Fear of Nationalization)

கலப்புப் பொருளாதார அமைப்பில், தேசியமயமாக்குதல் பற்றிய பயம் தனியார்துறைகளில் காணப்படுவதால், தனியார் தொழில்முனைவோர்கள் அவர்களின் வாணிப நடவடிக்கைகளையும், புத்தாக்க முயற்சிகளையும் சுருக்கி விடுகின்றனர்.

### 5. விரிவடையும் சமத்துவமின்மை (Widening Inequality)

வளங்களின் உரிமை, பரம்பரைச்சட்டங்கள், மக்களின் இலாப நோக்கம் ஆகியவை பணக்காரர்,ஏழைகளிடையே இடைவெளியை விரிவடையச் செய்கின்றன.

இறுதியாக, முதலாளித்துவத்தின் சமத்துவமின்மையும், சமதர்மத்தின் திறமையின்மையும் கலப்புப் பொருளாதாரத்தில் காணப்படுகின்றன.

**பொருளாதார அமைப்புகளை ஒப்பிடுதல்**

| வ.எண் | தன்மைகள் | முதலாளித்துவம் | சமத்துவம் | கலப்புத்துவம் |
|---|---|---|---|---|
| 1. | உற்பத்தி மூலங்களின் உரிமை | தனியார் உரிமை | பொது (அரசு) உரிமை | தனியார் மற்றும் பொது உரிமை |
| 2. | பொருளாதார நோக்கம் | இலாபம் | சமூக லன் | சமூக நலன் மற்றும் இலாப நோக்கம் |
| 3. | மைய பிரச்சனைகளின திர்வு | தடையில்லா சந்தைமுறை | மத்திய திட்டமுறை | மத்திய திட்ட முறை மற்றும் தடையில்லா சந்தை |
| 4. | அரசின் பங்கு | உள்ளீடு கட்டுப்பாடு மட்டும் | முழு ஈடுபாடு | குறைந்த பங்கு |
| 5. | வருவாய் பங்கீடு | சமனற்றநிலை | சமநிலை | குறைந்த சமநிலைபற்ற நிலை |
| 6. | நிறுவன தன்மை | தனியார் நிறுவனம் | அரசு நிறுவனம் | தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் |
| 7. | பொருளாதார சுதந்திரம் | முழுமையான சுதந்திரம் | சுதந்திரமின்மை | கட்டுபாட்டுடன் சுதந்திரம் |
| 8. | முக்கிய பிரச்சனை | சமமின்மை | திறனின்மை | சமமின்மை மற்றும் திறனின்மை |

**பேரியல் பொருளாதாரத்தின் கருத்துக்கள்**

- பேரியல் பொருளாதாரத்தின் பயன்படுத்தும் முக்கிய கருத்துக்கள் கீழ்கண்டபடி விளக்கப்பட்டுள்ளன.

**இருப்பு (Stock) மற்றும் ஓட்டம் (Flow) மாறிலிகள்**

- பொருளாதார ஆய்வில் பயன்படுத்தும் மாறிலிகளை இருப்பு மற்றும் ஓடும் மாறிலிகள் என வகைப்படுத்தலாம். இந்த இரு இருப்பு மற்றும் ஓட்ட மாறிலிகளும் கால அடிப்படையில் அதிகரிக்கவோ அல்லது குறையவோ செய்யும்.

- **இருப்பு (Stock)** என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் (Point of Time) கணக்கிடப்படும் பொருட்களின் அளவினை குறிப்பதாகும். பேரியல் பொருளாதாரத்தில், பண அளிப்பு, வேலை இல்லாமை அளவு, வெளிநாட்டு மாற்று இருப்பு, மூலதனம் போன்றவை இருப்பு மாறிலிகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

- **ஓட்டம் (Flow)** மாறிலிகள் என்பவை ஒரு குறிப்பிட்ட காலகட்ட அளவில் (Period of Time) கணக்கிடப்படுபவையாகும். தேசிய வருவாய், ஏற்றுமதி, இறக்குமதி, நுகர்வு, உற்பத்தி, முதலீடு போன்றவை ஓட்ட மாறிலிகளுக்கு எடுத்துக்காட்டாகும்.

**பொருளாதார மாதிரிகள்**
**(Economic Models)**

- மாதிரி (Model) என்பது உண்மை சூழலை எளிமையாக பிரதிபலிப்பது ஆகும். பொருளாதார வல்லுநர்கள், பொருளாதார நடவடிக்கைகள், அவைகளுக்கிடையேயான உறவுகள், நடத்தைகள் பற்றி விவரிப்பதற்கு மாதிரிகளை பயன்படுத்துகின்றனர். மாதிரி என்பது, பொருளாதாரம் எவ்வாறு இயங்குகிறது என்பதை விளக்குகிறது. பெரும்பாலான பொருளாதார மாதிரிகள், கணிதம் (Mathematic) வரைபடங்கள் (Graphs) மற்றும் சமன்பாடுகளால் (Equations) அமைக்கப்பட்டு, பொருளாதார மாறிலிகளுக்கிடையேயான உறவுகளை விளக்க உதவுகின்றன. அளிப்பு – தேவை (Supply - Demand) மாதிரிகள் மற்றும் ஸ்மித் மாதிரிகள் ஆகும்.

**வருவாயின் வட்ட ஓட்டம்**

- ஒரு பொருளாதார அமைப்பின் வருவாயின் வட்ட ஓட்டம் மாதிரியானது அந்த பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கிடையே உள்ள தொடர்பினை விளக்குவதாகும். இது, பொருளாதார முகவர்களாகிய நிறுவனம், குடியிருப்பு, அரசாங்கம் மற்றும் நாடுகளிடையே வருவாய், பொருட்கள் மற்றும் பணிகள், மற்றும் உற்பத்தி காரணிகளின் ஓட்டத்தை காண்பிப்பதாகும். வருவாயின் வட்ட ஓட்டம் ஆய்வானது தேசிய கணக்குகள் மற்றும் பேரியல் பொருளாதாரத்தின் அடிப்படையாகும்.

- முக்கிய பொருளாதார அமைப்புகளை பிரதித்துவம் செய்யும் மூன்று வருவாயின் வட்ட ஓட்ட மாதிரிகள் உள்ளன.

1. **இரண்டு துறை மாதிரி (Two Sector Model)**
   இது இல்லத்துறை (Household sector) மற்றும் நிறுவனத்துறையை (Firm sector) யை கொண்ட எளிய பொருளாதாரம்.

2. **மூன்று துறை மாதிரி (Three Sector Model)**
   இது இல்லத்துறை, நிறுவனத்துறை மற்றும் அரசுத்துறை ஆகியவை அடங்கிய கலப்பு மற்றும் மூடிய பொருளாதாரதிற்குரியது.

3. **நான்கு துறை மாதிரி (Four Sector Model)**

இது இல்லத்துறை, நிறுவனத்துறை, அரசுதுறை மற்றும் வெளியுறவுத் துறை (External sector) ஆகியவை அடங்கிய திறந்த பொருளாதார அமைப்புக்குரியதாகும்.

**இரு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்**
**(Two Sector Economy)**

இல்லத்துறை மற்றும் நிறுவனத்துறை என்ற இரு துறைகள் மட்டுமே காணப்படும்.

### i. இல்லத்துறை (Household Sector)

- இல்லத்துறை தான் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்கும் ஒரே துறையும், நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்தி காரணிகளை அளிக்கும் ஒரே துறையும் ஆகும். இத்துறை, அதன் அனைத்து வருவாயையும் நிறுவனத்துறை தயாரிக்கும் பொருட்கள் மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்துகிறது. இல்லத்துறையானது அதற்கு சொந்தமான உற்பத்திக் காரணிகளை அளிப்பதன் மூலம் வருவாயை பெறுகிறது.

### ii.நிறுவனத் துறை (Firm Sector)

- நிறுவனத்துறையானது பொருள் மற்றும் பணிகளை இல்லத்துறைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருவாயை ஈட்டுகின்றது. இல்லத்துறைக்கு சொந்தமான நிலம், உழைப்பு, மூலதனம் மற்றும் அமைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளை, பணியமர்த்துகிறது. நிறுவனத்துறை அதன் அனைத்து உற்பத்தியையும் இல்லத்துறைக்கு விற்பனை செய்கின்றது.

- இருதுறை பொருளாதாரத்தில், உற்பத்தி மற்றும் விற்பனை சமமாகவும் வருவாய் மற்றும் பொருட்கள் வட்ட ஓட்டமாகவும் காணப்படும். வெளி வட்டமானது. உற்பத்திக்காரணிகள் மற்றும் பொருட்கள் பிரதிபலிக்கும் உண்மை ஓட்டம் (real Flow) மாகவும், உள் வட்டமானது காரணி விலை மற்றும் பொருள் விலையை குறிக்கும் பண ஓட்ட (Monetary Flow) மாகவும் காணப்படும். உண்மை ஓட்டம் (Real Flow) என்பது இல்லத்துறையிலிருந்து நிறுவனத்துறைக்கு மாறும் உற்பத்தி காரணிபணிகளையும், நிறுவனத்துறையிலிருந்து இல்லத்துறைக்கு மாறும் பொருட்கள் மற்றும் பணிகளையும் குறிப்பதாகும். ஒரு இருதுறை பொருளாதாரத்தின் அடிப்படை அடையாளத்தை கீழ்கண்டவாறு குறிப்பிடலாம்.

$$Y = C + I$$

- இங்கு Y என்பது வருவாய் (Income); C என்பது நுகர்வு (Consumption); I என்பது முதலீடு (Investment)

- இல்லம் மற்றும் நிறுவனத்துறைக்கு மேலாக அரசுத்துறை சேரும்போது மூன்று துறை மாதிரி (Three Sector Model) அமைகிறது. அரசானது இல்லத்துறை மற்றும் நிறுவனங்களில் வரி விதிக்கின்றனர் நிறுவனங்களிலிருந்து பொருள் மற்றும் பணிகளை வாங்குகின்றன. மேலும், இல்லத்துறையிலிருந்து உற்பத்தி காரணிகளையும் பெறுகின்றன. இதற்கு மாறாக, அரசானது ஓய்வு ஊதியம், நஷ்ட ஈடு, மானியம் ஆகிய சமூக பரிவர்த்தனைகளை இல்லங்களுக்கு வழங்குகிறது. அதுபோல, நிறுவனங்களிடமிருந்து வாங்கும் பொருள் மற்றும் பணிகளுக்கு பணமளிக்கிறது. மூன்று துறை பொருளாதார மாதிரியை வரைபடம் விளக்குகிறது.

- மூன்று துறை மாதிரியில், தேசிய வருமானம் (National Income) என்பது நுகர்வுச் செலவு (Consumption Expenditure) முதலீட்டு செலவு (Investment Expenditure) மற்றும் அரசின் செலவு (Government Expenditure) ஆகியவற்றை கூட்டுவதால் அடையலாம்.

$$Y = C + I + G$$

இங்கு

Y = வருவாய் ; C = நுகர்வுச் செலவு; I = முதலீட்டுச் செலவு;G = அரசின் செலவு.

**நான்கு துறை பொருளாதாரத்தின் வருவாயின் வட்ட ஓட்டம்**

- நான்கு துறை பொருளாதாரத்தில், இல்லம், நிறுவனம் மற்றும் அரசு இவற்றோடு வெளியுறவுத்துறையும் இணைக்கப்படுகிறது. நிஜவாழ்க்கையில், நான்கு துறை பொருளாதாரம் காணப்படுகிறது.

இந்த மாதிரியில் அமைந்துள்ள நான்கு துறைகளாவன.

i. இல்லங்கள் (House hold)
ii. நிறுவனங்கள் (Firms)
iii. அரசு (Government)
iv. வெளியுறவுத் துறை (External Sector)

வெளியுறவு துறையில் அதிகமாக அடங்குவது ஏற்றுமதிகள் (Exports) மற்றும் இறக்குமதிகள் (Imports) இதை வரைபடம் விளக்குகிறது.

நான்கு துறை பொருளாதாரத்தில், ஒட்டு மொத்த செலவானது, உள்நாட்டு செலவுகள்

(C + I + G) மற்றும் நிகர ஏற்றுமதி (X - M)ஐ உள்ளடக்கும்.

$$Y = C + I + G + (X - M)$$

# 12th பொருளாதாரம்

## அலகு– 11

## பொருளாதார மேம்பாடு மற்றும் திட்டமிடல்

**முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் - பொருள்:**

**அறிமுகம்:**

- பொருளாதார "மேம்பாடு" மற்றும் முன்னேற்றம் ஆகிய இரண்டு சொற்களும் ஒரே பொருளைக் குறிக்கக்கூடியவை. பொருளாதார வளர்ச்சி நாட்டு வருமானம் அதிகரித்தலைக் குறிக்கப் பயன்படும் சொல். நாட்டின் பொருளாதார கட்டமைப்பில் நிகழும் நல்ல மாற்றங்களை முன்னேற்றம் எனக் கருதலாம். இரண்டாம் உலகப்போர் வரையில் மூன்றாம் உலக நாடுகள் என்றழைக்கப்படும் ஏழை நாடுகளின் பிரச்சினைகளைப் பற்றி படிக்க யாரும் ஆர்வம் காட்டவில்லை. அதன் பிறகே பொருளியல் வல்லுநர்கள் நாடுகளின் பிரச்சினைகளை ஆய்வு செய்து புதிய முன்னேற்ற மற்றும் வளர்ச்சிக் கோட்பாடுகளையும், மாதிரிகளையும் (Models) உருவாக்க ஆரம்பித்தனர். இன்றைய வளரும் நாடுகள் அனைத்தும் இங்கிலாந்து மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளிடம் அடிமைப்படுத்தப்பட்டிருந்த நாடுகள். விடுதலைக்குப் பிறகு இந்த நாடுகள் துரிதமான பொருளாதார முன்னேற்றமடைவதையே விருப்பமாக கொண்டிருந்தன.

**பொருளாதார முன்னேற்றத்தின் அணுகுமுறைகள்:**

- பொருளாதார முன்னேற்றம் இருவகையான அணுகுமுறையை கொண்டு விளக்கப்படுகிறது முறையே

  1. பழமையான அணுகுமுறை மற்றும்
  2. நலம் சார்ந்த புதிய அணுகுமுறை

**1. பழமையான அணுகுமுறை:**

- இந்த அணுகுமுறை பொருளாதார அடிப்படைகளைக் கொண்டு மட்டுமே முன்னேற்றத்துக்கு விளக்கமளிக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்புடன் உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பில் விவசாயத்தின் பங்கு குறைந்து தொழில் மற்றும் பணித்துறையின் பங்கு உயர்வடைதலையே பழைய அணுகுமுறையில் பொருளாதார முன்னேற்றம் என்கிறது. இது தொழில் துறை வளர்ச்சியை வலியுறுத்தும் அணுகுமுறையாக உள்ளது. தனிநபர் வருமான உயர்வு அடித்தட்டு மக்களின் வருவாயையும் அதிகப்படுத்தும் என்ற எடுகோளின் அடிப்படையில் முன்னேற்றத்துக்கு விளக்கமளிக்கிறது.

**2. நலம் சார்ந்த புதிய அணுகுமுறை:**

- பொருளாதார முன்னேற்றம் 1970 – களில் மறுவரையறை செய்யப்பட்டது. இதன்படி வறுமை, வருமான ஏற்றத்தாழ்வு மற்றும் வேலையின்மை குறைத்தல் மற்றும் நாட்டின் உள்நாட்டு உற்பத்தி அதிகப்படுத்துதல் ஆகியவை ஒருசேர நிகழ்வதே பொருளாதார முன்னேற்றமாகும். அந்த காலக்கட்டத்தில் "வளர்ச்சியுடன் கூடிய பங்கீடு" என்பதே புகழ்பெற்ற முழக்கங்களாயின.

- மைக்கேல் பி.டொடாரோவின் கருத்தின்படி, "முன்னேற்றத்தை சமூக அமைப்பு, பொது மக்களின் மனநிலை மற்றும் நாட்டின் நிறுவன அமைப்புகள் ஆகியவற்றில் நிகழும் பெரிய மாற்றங்கள் மற்றும் விரைவான வளர்ச்சி, வருவாய் ஏற்றத்தாழ்வினை குறைத்தல் மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய அனைத்தையுமே பொருளாதார முன்னேற்றமாக கருத வேண்டும்" என்கிறார்.

**பொருளாதார வளர்ச்சிகுன்றிய நாடுகளின் சிறப்பியல்புகள்:**

**அறிமுகம்:**

❖ வளர்ச்சி குன்றிய நாடுகளை ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி அறியலாம்.

❖ உலக வங்கியின் வளர்ச்சி அறிக்கையின்படி தலாவீத மொத்த நாட்டு வருமானத்தின் அடிப்படையில் நாடுகளை வகைப்படுத்துகிறது.

**உலக வங்கி அறிக்கை:**

| குறைந்த வருமானமுடைய நாடுகள் | நடுத்தர வருமானம் உடைய நாடுகள் | அதிக வருமான உடைய நாடுகள் |
|---|---|---|
| தலா வீத மொத்த நாட்டு உற்பத்தி $ 906 மற்றும் அதற்கு குறைவு | தலா வீத மொத்த நாட்டு உற்பத்தி $906 - $11,115 இடையே உள்ள நாடுகள் | தலா வீத மொத்த நாட்டு உற்பத்தி $11,116 மேல் உள்ள நாடுகள் |

**வளர்ச்சி குன்றிய பொருளாதாரம்:**

- வளர்ச்சி குறைந்த பொருளாதாரம் என்பது ஒரு நாட்டில் குறைவான தலா வருமானம், பரவலான வறுமை, வருவாய் மற்றும் செல்வ பகிர்வில் கடுமையான ஏற்றத்தாழ்வு, அதிக மக்கள் தொகை, குறைவான மூலதன ஆக்கம், அதிக அளவு வேலையின்மை, பழமையான உற்பத்தி முறை, எதிரும் புதிருமான பண்புகள் ஒரு சேர நிலவுதல் (Dualism) போன்றவற்றை பண்புகளாகக் கொண்டதாகும்.

**வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் பொருள்:**

வளர்ச்சி குன்றிய பொருளாதாரம் என்பது ஒரு நாட்டில், அதிக மக்கள் தொகையினால் உற்பத்தி குறைந்து, அவற்றின் விளைவாக குறைந்த தலா வருமானம் உடைய அதிக மக்களைக் கொண்ட பொருளாதாரமாகும்.

**பொருளாதார வளர்ச்சி மற்றும் பொருளாதார முன்னேற்றம்:**

1. **பொருளாதார முன்னேற்றம்:**

   பொதுவாக பார்த்தால், முன்னேற்றம் என்பது பின்தங்கிய நாடுகளின் பிரச்சனைகளையும், வளர்ச்சி என்பது முன்னேறிய நாடுகளின் பிரச்சனைகளையும் கொண்டதாக உள்ளது.

2. **வளர்ச்சியின் இயல்பும் அளவும்:**

   முன்னேற்றம் என்பது தொடர்ச்சியற்றதாகவும் மற்றும் தன்னிச்சையாகவும் நிகழக்கூடிய மாற்றம், வளர்ச்சி என்பது நீண்ட காலத்துக்கும், படிப்படியாகவும், நிதானமாகவும் நடைபெறும் மாற்றமாகும்.

3. **மாற்றத்தின் நோக்கம்:**

   வளர்ச்சி என்பது அதிகமான வெளியீட்டைக் குறிக்கிறது. ஆனால் முன்னேற்றம் என்பது உற்பத்தியில் அதன் செயல்திறனைக் குறிக்கிறது. அதாவது, உற்பத்தியில் ஒரு அலகு உள்ளீட்டிற்கான வெளியீட்டின் அளவைக் குறிக்கும். இது வெளியீடு, வளங்களுக்கான ஒதுக்கீடு, வறுமை, சமத்துவமின்மை மற்றும் வேலையின்மை ஆகியவற்றின் கலவை மாற்றங்களை குறிக்கிறது.

4. **மாற்றத்தின் விரிவு**:

   பொருளாதார முன்னேற்றம் (பொருளாதார வளர்ச்சியை விடபெரிய கருத்து) என்பது வளர்ச்சி மற்றும் கட்டமைப்பில் ஏற்படும் மாறுதல்களை உள்ளடக்கியது.

**பொருளாதார வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமிடையேயான வேற்றுமைகள்:**

| பொருளாதார வளர்ச்சி | பொருளாதார முன்னேற்றம் |
|---|---|
| வளர்ந்த நாடுகளின் பொருளாதார பிரச்சனைகளை கையாளுகிறது | வளரும் நாடுகளின் பிரச்சனைகளைக் கையாளுகிறது. |

| | |
|---|---|
| மாற்றங்கள் படிப்படியாகவும் நிதானமாகவும் நிகழ்கிறது. | தொடர்ச்சியற்ற தன்னிச்சையான மாற்றங்கள் நிகழ்கிறது |
| அதிக அளவான உற்பத்தியைக் குறிக்கிறது. | உற்பத்தி அதிகரிப்பது மட்டுமல்லாமல் உற்பத்தியாகும் பொருட்களின் வகைகளும் மாறுகிறது |
| எண்ணிக்கை அடிப்படையிலானது (அதாவது) தலா வருமான அதிகரிப்பைக் குறிக்கும். | எண்ணிக்கை மற்றும் தர அடிப்படையிலானது |
| குறுகிய எல்லையுடையது | விரிவான பொருள் கொண்ட சொல் முன்னேற்றம் = வளர்ச்சி + மாற்றம் |

**பொருளாதார முன்னேற்றத்தை அளவிடுதல்:**

பொருளாதார முன்னேற்றத்தை நான்கு முறைகளில் அளவிடலாம்.

**நாட்டின் மொத்த உற்பத்தி(Gross National Product GNP):**

- ஒரு நாட்டின் புவி எல்லைக்குள் ஒரு குறிப்பிட்ட ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளின் சந்தை மதிப்புடன் அந்த நாட்டு மக்கள் வெளிநாடுகளில் ஈட்டிய வருமானத்திற்கும், வெளிநாட்டினர் சம்பாதித்து அவர்கள் நாட்டுக்கு அனுப்பிய வருமானத்திற்குமிடையிலான வேறுபாடுத்தொகையை கூட்டினால் கிடைக்கும் மொத்த மதிப்பே மொத்த நாட்டு உற்பத்தி எனலாம். இந்த கருத்தினைக்கொண்டு ஒரு நாட்டின் பொருளாதார நிலையை மதிப்பிடலாம். மற்றவை மாறாதிருக்கும் போது நாட்டின் மொத்த நாட்டு உற்பத்தி அதிகமாக இருந்தால் அந்நாட்டு மக்களின் உயர்வான வாழ்க்கைத்தரத்துக்கு வழிகுக்கும் என கருதப்படுகிறது.

**தலாவீத மொத்த நாட்டு உற்பத்தி (GNP Per Capita):**

- ஒரு நாட்டில் ஒரு குறிப்பிட்ட ஆண்டின் மொத்த உற்பத்தி மதிப்பை அந்த ஆண்டின் மக்கள் தொகையால் வகுக்கக் கிடைக்கும் ஈவுத் தொகையே தலாவீத மொத்த நாட்டு உற்பத்தியாகும்.

- இந்த அளவிடும் முறை நீண்டகாலத்தில் தலா உற்பத்தி மதிப்பு அதிகரித்தலைக் குறிப்பிடுகிறது. தலா வருமானம் அதிகரிக்கும் வேகம் மக்கள் தொகை அதிகரிக்கும் வேகத்தைவிட உயர்வாக இருக்க வேண்டும் என இந்த அளவிடும் முறை வலியுறுத்துகிறது.

**நலன்:**

- பண்டங்கள் மற்றும் பணிகளை மக்கள் வாங்கி பயன்படுத்துவது அதிகரிப்பதையே பொருளாதார முன்னேற்றமாக கருதுப்படுகிறது. மக்கள் நலன் என்ற கண்ணோட்டத்தில் பொருளாதார முன்னேற்றத்தை மக்களின் சுகாதாரம், கல்வி மற்றும் வாழ்க்கைத்தரத்தில் குறிப்பிடத்தகுந்த அளவு மேம்படுவதாக சார்ந்து வரையறுக்கலாம்.

**சமூகக் குறியீடுகள் (Social Indicators):**

- மக்களின் அடிப்படை மற்றும் கூட்டுத் தேவையை நிவர்த்தி செய்வதை சமூக குறியீடுகள் என அழைக்கப்படுகிறது. நேரடியாக வழங்கப்படும் அடிப்படைத் தேவை என்பது மக்களின் சுகாதாரம், கல்வி, உணவு, குடிநீர், துப்புரவு மற்றும் வீட்டு வசதி ஆகியவையாகும். இவற்றைக் கொண்டு சமூக பின்னடைவு தவிர்க்கப்படுகிறது.

**பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணிகள்:**

- பல காரணிகள் பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயம் செய்கின்றன. அவற்றை நான்கு வகையாக பிரிக்கலாம். அவையாவன பொருளாதாரம், சமூகம், அரசியல் மற்றும் மதம் சார்ந்த காரணிகள். இவற்றை பொருளாதாரம் மற்றும் பொருளாதாரம் சாராத பிற காரணிகள் என எளிமையாக இரண்டே வகையாகவும் பிரித்து விடலாம்.

## பொருளாதாரம் மற்றும் பொருளாதாரம் சாராத காரணிகள்:

கீழ்கண்ட வரைபடம் பொருளாதாரம் மற்றும் பொருளாதார காரணிகளை எளிமையாக பட்டியலிடுகிறது.

## பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணிகள்:

| | பொருளாதார காரணிகள் | | பொருளாதாரம் சாராத காரணிகள் |
|---|---|---|---|
| 1. | இயற்கை வளங்கள் | 1. | மனித வளம் |
| 2. | மூலதன ஆக்கம் | 2. | தொழில்நுட்ப அறிவு |
| 3. | சந்தையின் அளவு | 3. | அரசியல் சுதந்திரம் |
| 4. | கட்டமைப்பு மாற்றம் | 4. | சமூக அமைப்பு |
| 5. | நிதியியல் அமைப்பு | 5. | ஊழலற்ற நிர்வாகம் |
| 6. | சந்தையிடத்தக்க உபரி | 6. | முன்னேற்றம் அடைவதற்கான விருப்பம் |
| 7. | பன்னாட்டு வாணிகம் | 7. | நீதி போதனை, அறநெறி மற்றும் சமூக விழுமியங்கள் |
| 8. | பொருளாதார அமைப்பு | 8. | சூதாட்ட முதலாளித்துவம் |
| | | 9. | பரம்பரை சொத்துரிமை முதலாளித்துவம் |

## பொருளாதாரம் சார்ந்த காரணிகள்:

பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் எட்டு முக்கியமான காரணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. **இயற்கை வளங்கள்:**

- ஒரு நாடு பெற்றுள்ள இயற்கை வளங்களின் அளவு அந்நாட்டின் பொருளாதாரமுன்னேற்றத்தை நிர்ணயிக்கும் காரணியாகும். முன்னேற்றத்துக்கு தேவைப்படும் அளவுக்கு ஒரு நாடு இயற்கை வளங்களை பெற்றிருக்க வேண்டும். வளங்கள் பற்றாக்குறையாக உள்ள நாடு விரைவாக முன்னேற இயலாது. ஆனால், ஜப்பான் நாட்டில் வளங்கள் பற்றாக்குறையாக இருந்தாலும் முன்னேறிய நாடாக உள்ளது. ஏனென்றால் தேவையான வளங்களை இறக்குமதி செய்து கொள்ளுகிறது. இந்தியா அதிக அளவில் வளங்களைப் பெற்றிருந்தாலும் முன்னேற்றம் குறைந்த நாடாக உள்ளது.

2. **மூலதன உருவாக்கம்:**

- மூலதனம் பொருளாதாரத்தின் அனைத்துச் செயல்பாட்டிற்கும் அடிப்படையானதாகும். ஏற்கனவே உள்ள இருப்புடன் தற்போது கூடும் நிகர அளவு மூலதனமே மூலதன உருவாக்கம் என்பர். இதில் கண்ணுக்கு புலனாகக் கூடிய தொழிற்சாலைகள், இயந்திரங்களும், கண்ணுக்கு புலனாகாத உடல்நலம், கல்வி மற்றும் ஆராய்ச்சி போன்ற இரண்டு இனங்களுமே இதில் உள்ளடங்கும். தொழிலாளர்களின் உற்பத்தி திறனை உயர்த்தி வருமானத்தை அதிகரிக்க மூலதன ஆக்கம் உதவுகிறது. புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதால் இயற்கை வளங்களை நன்முறையில் பயன்படுத்தவும். தொழில்மயமாதலுக்கும், மற்றும் அங்காடி விரிவாக்கத்திற்கும் உதவுகிறது. இதனால் பொருளாதாரம் வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

3. **சந்தையின் அளவு:**

- சந்தை அளவானது பெரிய அளவில் இருந்தால் கூடுதலான உற்பத்தி, அதிக வேலைவாய்ப்பு மற்றும் தேசிய தலா வருமான உயர்வு ஆகியவற்றைத் தூண்டும். இவ்வாறு வளர்ந்த நாடுகள் உலக வர்த்தக மையத்தின் வழியாக சந்தை அளவை வெளிநாடுகளுக்கு கொண்டு செல்வதன் மூலம் பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவுகிறது.

4. **கட்டமைப்பு மாற்றம்:**

- கட்டமைப்பு மாற்றம் என்பது பொருளாதாரத்தில் தொழில் கட்மைப்பில் ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கும். நாட்டின் பொருளாதாரத்தின் மூன்று துறைகளான பிரிக்கப்படுகின்றன. அதில் முதன்மைக் துறையானது வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, காடுகள் போன்றவற்றை

உள்ளடக்கியும், இரண்டாம் துறையானது தொழிற்சாலை உற்பத்தி, கட்டுமானப்பணிகள் போன்வற்றை உள்ளடக்கியும் மற்றும் சார்புத் துறைகளான வாணிபம், வங்கி மற்றும் வர்த்தகம் போன்றவற்றையும் உள்ளடக்கியிருக்கும். எந்த ஒரு பொருளாதாரமும் முழுக்க வேளாண்மையை மட்டும் சார்ந்து இருந்தால் பின்தங்கிய நிலையிலேயே இருக்கும்.

5. **நிதியியல் முறை:**

- நிதியியல் முறை என்பது ஒரு நாட்டில் திறமையான மற்றும் சிறந்த முறையில் கட்டமைக்கப்பட்ட வங்கி முறையினைக் கொண்டதாகும். ஒழுங்குற அமைக்கப்பட்ட பண அங்காடியானது தேவையான மூலதனத்தை வழங்குகிறது.

6. **விற்பனைக்குரிய உபரி:**

- வேளாண் துறையில் குடும்பத்திற்கான நுகர்வுத் தேவையைவிட கூடுதலாக செய்யப்படும் உற்பத்தியை விற்பனைக்குரிய உபரி என்கிறோம். இந்தக் கூடுதல் விளைப்பொருட்களை விவசாயிகள் சந்தையில் விற்று வருமானம் ஈட்டலாம். இது அவர்களுடைய வாங்கும் திறன் அதிகரிப்பதும், இதனால் நாட்டில் பொருள் உற்பத்தி அதிகரித்து வேலைவாய்ப்பும், நாடு வருமானமும் உயர்ந்து நாடு முன்னேற்றமடையும்.

7. **பன்னாட்டு வாணிகம்:**

- பன்னாட்டு வாணிகத்தில் சாதகமான சூழ்நிலை இருந்தால் ஒரு நாடு போதுமான சூழ்நிலை இருந்தால் ஒரு நாடு போதுமான அளவு அந்நிய செலாவணியை கையிருப்பில் வைக்க முடியும். அந்நிய செலாவணியை கையிருப்பு போதுமானதாக இருந்தால் அந்த நாட்டின் பணமாற்று வீதம் ஏற்ற இறக்கமின்றி நிலைத்திருக்கும்.

8. **பொருளாதார அமைப்பு முறை:**

- ஒரு நாடு தடையில்லா பொருளாதாரக் கொள்கையை கடைப்பிடித்தால் கட்டளைப் பொருளாதாரத்தைவிட வேகமான வளர்ச்சி பெறும். இது சில நாடுகளுக்கு மட்டும் பொருந்தும்.

**பொருளதாரம் சாராத காரணிகள்:**

- ”மனித வளம் சமுதாயத்தின் மனப்பான்மை, அரசியல் சூழ்நிலைகள் மற்றும் வரலாற்று நிகழ்வுகள் பொருளாதார முன்னேற்றத்தின் மிக அதிக அளவு ஆதிக்கம் செய்கின்றன. முன்னேற்றமடைவதற்கு மூலதனம் அடிப்படையானதே ஒழிய அதுமட்டுமே போதுமானதல்ல” என ராகனர் நர்கஸ் தெளிவுபடுத்துகிறார்

1. **மனித வளம்:**

- மனித வளம் மனித மூலதனம் எனக் கூறப்படுகிறது. ஏனென்றால், இது உற்பத்தி திறனை அதிகப்படுத்தி நாட்டு வருமானத்தையும் உயர்த்தும் ஆற்றல் பெற்றுள்ளது. மக்களின் முன்னேற்றத்துக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் சுழற்சியான உறவு நிலவுகிறது. ஒரு நாட்டுக்கு கல்வியறிவுள்ள, உடல் நலமுள்ள மற்றும் திறமையான தொழிலாளர்கள் உற்பத்தித் திறன்மிக்க சொத்தாக கருதப்படுகிறார்கள். மக்களின் அறிவு, திறன்கள் மற்றும் உற்பத்தி செய்யும் தகுதி ஆகியவற்றை அதிகரிக்கும் செயலை மனித மூலதன ஆக்கம் எனலாம்.

- பொது சுகாதாரம், கல்வி மற்றும் மக்களுக்கான வசதிகள் மீது செய்யப்படும் செலவுகள் மனித மூலதன ஆக்கத்தை அதிகரிக்கும். திறமைமிக்க மனிதர்கள் உற்பத்திக்கு பங்களித்து முன்னேற்றத்தைத் தீர்மானிக்கிறார்கள். உதாரணம் ஜப்பான் மற்றும் சீனா போன்ற நாடுகள்.

2. **தொழில் நுட்ப அறிவு:**

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அறிவு வளரும் பொழுது உயர்வதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் பிறக்கும். புதிய தொழில் நுட்ப முறைகள் உற்பத்தி திறனை அதிகப்படுத்தும். இது பொருளாதாரம் முன்னேற்றத்துக்கு காரணமாகிவிடும் என ஜோசப் சும்பீட்டர் கூறுகிறார்.

**3. அரசியல் சுதுந்திரம்:**

- பொருளாதார முன்னேற்றத்திற்கும் அரசியல் சுதந்திரத்திற்கும் நெருங்கிய தொடர்புடையது. இந்தியாவின் வறுமைக்குஇந்தியாவின் செல்வம் ஆங்கிலேயர்கள் ஆட்சியில் எடுத்து செல்லப்பட்டதே காரணம் என தாதாபாய் நவ்ரோஜி தனது "வறுமையும் - இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி முறையும்" (Poverty and un – British Rule in India) என்ற நூலில் எழுதியுள்ளார். பிரிட்டிஷ் ஆட்சி முறைதான் இந்தியாவில் வறுமை அதிகரிக்க முக்கிய காரணமாக இருந்தது.

**4. சமூக அமைப்பு:**

- முன்னேற்றத்தின் பலன்கள் சமமாக அனைத்துத் தரப்பினருக்கிடையில் பகிர்ந்தளிக்கப்படும் என்ற நம்பிக்கை இருந்தால் தான், நாடு முன்னேற தூண்டும் செயல்களை செய்ய மக்கள் முன்வருவார்கள். பொருளாதார முன்னேற்றம் துரிதமாக நடைபெற மக்களின் பங்கெடுப்பது என்பது மிகவும் அவசியமானதாகும். குறைபாடுள்ள சமூக அமைப்பு முறையில் ஒரு சில பிரிவினர் மட்டும் முன்னேற்றத்தின் பலன்களை கூடுதலாக பெறுவதை அனுமதித்தால் பெரும்பான்மையான மக்கள் பொருளாதார முன்னேற்ற செயல்பாடுகளில் கலந்து கொள்ளமாட்டார்கள். முன்னேற்றத்தின் பலன் ஒரு சிலர் கொண்டு செல்வதை முதலாளித்துவத்தின் தோழமை பொருளாதார அமைப்பு என்கிறார்.

5. **ஊழலற்ற அரசு நிர்வாகம்**:

- பொருளாதாரம் முன்னேற்றமடைதலில் ஊழலும் பொருளாதார நேர்மையின்மையும் எதிர்மறை விளைவை உருவாக்கும் காரணிகளாகும். நாட்டு நிர்வாகத்தில் ஊழலை அகற்றாவிட்டால் முதலாளிகளும், வணிகர்களும் நாட்டின் வளங்களை சுரண்டி விடுவார்கள். இதனால் வரி ஏய்ப்பு அதிகரித்து ஊழல் பெருகி முன்னேற்றமே தடைபடும் நிலை உருவாகிவிடும்.

**6. முன்னேற்றம் அடைதவற்கான விருப்பம்:**

- விருப்பமிருந்தால்தான் மக்கள் எந்த ஒரு செயலையும் செய்து முடிப்பார்கள் பொருளாதார முன்னேற்றத்துக்கும் மக்களின் விருப்பம் அவசியம். விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்பதை பெரும்பாலான மக்கள் நம்புவதும், வறுமையை தலைவிதியின் விளைவு என்றும் ஏற்றுக் கொண்டுவிட்டால் அந்த நாட்டில் பொருளாதார முன்னேற்றத்துக்கான வாய்ப்புக் குறைவாக இருக்கும்.

**7. நீதிபோதனை, அறநெறி மற்றும் சமூக மதிப்புகள்:**

- ஒழுக்க நெறிகளும் அறநெறி பற்றுதலும் சந்தையின் திறன்மிக்க செயல்பாட்டுக்கு அடிப்படைகளாகும். டக்ளஸ் சி. நார்த் "மக்கள் நேர்மையற்றவர்களாக இருந்தால் சந்தை செயல்படாது" என்கிறார்.

**8. சூதாட்ட முதலாளித்துவம்:**

- மக்கள் தங்களின் வருமானம் மற்றும் நேரத்தின் பெரும்பகுதியை பொழுது போக்கு நிகழ்ச்சிகளில், மது அருந்துவதில், சூதாடுவதில் செலவழித்தால் உற்பத்தி நடவடிக்கை பாதிக்கப்பட்டு பொருளாதார முன்னேற்றம் தடைபடும் என தாமஸ் பிக்கெட்டி எடுத்துரைக்கிறார்.

**9. பரம்பரை சொத்துரிமை முதலாளித்துவம்:**

- நிலம் உள்ளிட்ட சொத்து பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கு பரம்பரையாக வந்து சேர்ந்தால் குழந்தைகள் கடின உழைப்பை விரும்பமாட்டார்கள். இது உற்பத்தித்திறனை குறைத்துவிடும் என தாமஸ் பிக்கெட்டி கூறுகிறார்.

**வறுமையின் நச்சு சுழற்சி:**

- முன்னேற்றம் குறைவாக உள்ள நாடுகளில் குறைவான முன்னேற்றமே முன்னேற்றத்தைக் குறைவான அளவிலே தொடர்ந்து நீடிக்க செய்யும் சுழற்சியினை உருவாக்குகிறது. நச்சுச் சுழலானது ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று ஏழைநாடுகளை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும் விதத்தில் செயல்படுவதைக் குறிப்பதாக ராகனார் நர்க்ஸ் கூறுகிறார்.

- உதாரணமாக ஒரு ஏழையிடம் உண்பதற்கு போதுமான உணவு இல்லை – குறைவான உணவு அவருடைய உடல் நிலையை பலவீனப்படுத்திவிடும். பலவீனமாக இருப்பவரின் உழைக்கும் தகுதி குறைவாக இருக்கும். உழைக்கும் திறன் குறைவாக இருந்தால் குறைவான வருமானம் ஈட்டுவார் வருமானம் குறைவாக இருப்பதால் அவர் ஏழை. அவர் உண்பதற்கு போதுமான உணவு இருக்காது. இந்த சூழல் தொடர்ந்து கொண்டே செல்லும். இந்த வகையான சூழ்நிலையை ஒரு நாட்டுக்கு ஒப்பிட்டுப் பார்த்தால் கீழ்கண்ட கருத்துரையாக சுருக்கலாம் ”ஒரு நாடு ஏழை ஏனென்றால் அது ஏழைகளின் நாடு”.

  வறுமையின் நச்சு சுழற்சி தேவைப் பக்கத்திலிருந்தும் அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.

- அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது. இது முதலீட்டு அளவைக் குறையச் செய்து மூலதன பற்றாக்குறையை உருவாக்குகிறது. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து வருமானமும் குறைகிறது. இவ்வாறு அளிப்பு பக்கத்தில் வறுமை நச்சு சுழற்சி செயல்படுகிறது.

- தேவைப் பக்கத்திலிருந்து பாரத்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும். இது முதலீட்டைக் குறைக்கச் செய்யும், இதனால் மூலதன பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி குறைந்து வருமானத்தை குறைக்கும்.

**வறுமையின் நச்சு சுழற்சியை உடைத்தல்:**

- அளிப்பு பக்கத்தில் வறுமையின் நச்சு சுழற்சி குறைவான சேமிப்பு மற்றும் குறைவான முதலீட்டினால் இயங்கத் துவங்குகிறது. ஆகவே பின்தங்கிய நாடுகளில் முதலீட்டையும் மூலதன ஆக்கத்தையும் அதிகரிக்கும் போது நுகர்வு அளவு குறையாமல் இருக்க வேண்டும். இதற்கு கடந்த கால சராசரி சேமிப்பு விகிதத்தை விட இறுதிநிலை சேமிப்பு அளவை அதிகமாக இருக்குமாறு செய்ய வேண்டும்.

- தேவைப் பக்கத்தில் வறுமை நச்சு சுழற்சியை உடைத்தெரிய, நர்க்ஸ் சரிசம வளர்ச்சி உத்தியை பரிந்துரை செய்கிறார். ஒரே நேரத்தில் பலவகைத் தொழில்களில் ஒரு நாடு முதலீடு செய்தால் தொழிலாளர்களுக்கு அந்தத் தொழில்களில் வேலை கிடைக்கும். அவர்கள் மற்றத் தொழில்களில் உற்பத்தி செய்த பொருட்களுக்கு நுகர்வோர்களாக மாறுவார்கள். இவ்வாறு ஒவ்வொரு தொழிலிலும் வேலை கிடைத்த தொழிலாளர்கள் தங்களின் வருமானத்தை வேறு தொழிலிலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை வாங்கும்போது சரிநிகர் சமமான முன்னேற்றம் நடைபெறும் என நார்க்ஸ் கூறுகிறார். எனவே அனைத்துத் தொழில்களின் சரிநிகர் சமமான வளர்ச்சியின் மூலம் தேவையின் பக்கத்தில் இயங்கும் வறுமையின் நச்சு சுழற்சியைத் தடுக்க முடியும்.

**திட்டமிடல்:**

**திட்டமிடலின் பொருள்:**

- மைய திட்டமிடல் ஆணையத்தால் நன்கு வடிவமைக்கப்பட்ட, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள்களையும், நோக்கங்களையும் அடைவதற்கான வழிமுறையே திட்டமிடல் ஆகும். பொருளாதாரம், அரசியல், சமூக அல்லது ராணுவ நோக்கங்களை திட்டமிடல் மூலம் அடைவதற்கான இலக்குகளாக இருக்கலாம்.

**திட்டமிடலின் இலக்கணங்கள்:**

- பொருளாதாரத் திட்டமிடல் என்பது "தனியார் உற்பத்தி மற்றும் விநியோக நடவடிக்கைகளை கூட்டாக கட்டுப்படுத்துவது அல்லது ஒடுக்குவதை குறிப்பதாகும்".

- ராபின்ஸ்

"பொருளாதாரத் திட்டமிடல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகளை அடைய உரிய பொறுப்பில் உள்ளவர்கள் நிதானமாக சிந்தித்து, இருக்கக்கூடிய பொருளாதார வளங்களை அதிக அளவில் பயன்படுத்த சுட்டிக்காட்டும் வழிமுறைகளே ஆகும்".

- டால்ட்டன்

**இந்தியாவில் திட்டமிடல்:**

- ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அடைய வேண்டிய இலக்குகளை, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார நோக்கங்களையும், வழிகாட்டுதல்களையும் அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட முடிவுகளையும் திட்டங்களையும் உள்ளடக்கிய வரைபடமே பொருளாதார திட்டமிடல் ஆகும். தற்போதைய பொருளாதார திட்டமிடல் சிந்தனை மிகவும் புதியது. ஆனால் மார்க்சிச சோசலிசத்தில் அடிப்படையில் ஓரளவு வேரூன்றியுள்ளது. 20 ஆம் நூற்றாண்டில், அறிஞர்கள், கோட்பாட்டாளர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் ஐரோப்பாவின் நிலையை முன்னிருத்தி, முதலாளித்துவத்தையும், சமூகத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வினையும் நிறுத்த அரசின் தலையிடுதல் அவசியம் என்றனர்.

- சோவியத் ஒன்றியம் திட்டமிடலை 1928-ல் செயல்படுத்தத் துவங்கியது. பொருளாதாரத் திட்டமிடலே சோவியத் நாட்டை வல்லரசு நாடாக மாற்ற உதவியது. 1930-களில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம் அமெரிக்காவில் மக்களின் வாங்கும் திறனைக் குறைத்து சிக்கலான சூழ்நிலையை உருவாக்கியதால், பொருளாதாரத் திட்டமிடலின் அவசியம் என்னும் கருத்து வலுவடைந்தது. நாட்டின் வளங்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் சிறப்பாக ஒதுக்கீடு செய்ய இரண்டாம் உலகப்போரினால் ஏற்பட்ட சூழல் நிர்பந்தத்தை உருவாக்கியது. போரின் விளைவுகளை சமாளிக்க திட்டமிடல்தான் சரியான தீர்வு என்ற சிந்தனை பரவத் தொடங்கியது.

- இந்திய விடுதலைக்குப்பிறகு 1948 –ல் தொழில் கொள்கை அறிவிக்கப்பட்டது. இதில் மையத் திட்டக்குழு மற்றும் கலப்புப் பொருளாதார அமைப்பு முறை ஆகிய இரண்டையும் அமைக்க பரிந்துரைக்கப்பட்டிருந்தது. இந்திய அரசியமைப்பு சட்டம் ஜனவரி 26, 1950 அன்று நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. திட்டக்குழு மார்ச் 15, 1950-ல் அமைக்கப்பட்டது. ஏப்ரல் 1, 1951 ல் முதல் திட்ட காலம் துவங்கியது. இதில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் காலமாக 1951 முதுல் 1956 வரை ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவில் கீழ்கண்ட நிகழ்வுகளிலிருந்து புரிந்துக்கொள்ளலாம்.

- **உயர் திரு. எம்.விஸ்வேஸ்வரய்யா (1934)**
  புகழ்பெற்ற பொறியியல் வல்லுநரும்அரசியல்வாதியுமான எம். விஸ்வேஸ்வரய்யா 1934-ல் இந்தியாவில் திட்டமிடுதலுக்கான அடித்தளத்தை அமைத்தார். அவர் தனது ஆலோசனையாக பத்தாண்டுத் திட்டமொன்றை அவர் எழுதிய "இந்திய பொருளாதார திட்டமிடல்" என்ற புத்தகத்தில் விளக்கியுள்ளார்.

**10. ஜவஹர்லால் நேரு (1938):**

- "தேசியத் திட்டக் குழு" ஒன்றை அமைத்தார். அன்றைய அரசியல் சூழ்நிலை காரணமாகவும், இரண்டாம் உலகப் போர் ஆரம்பித்ததாலும் நேருவின் முயற்சிகள் நின்று விட்டன.

**11. பாம்பே திட்டம் (1940):**

- மும்பையின் முன்னனி தொழிலதிபர்கள் பாம்பே திட்டம் என்ற திட்டத்தை1938-ல் முன்மொழிந்தனர். இது பதினைந்து ஆண்டுகளுக்கான தொழில் முதலீட்டுத் திட்டமாகும்.

12. **எஸ்.என். அகர்வால் (1944)**

- என்பவர் "காந்தியத் திட்டம்" என்ற திட்டத்தை 1944-ல் வழங்கினார். இது வேளாண்மை மற்றும் கிராமியப் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டமாகும்.

13. **எம்.என்.ராய் (1945):**

- என்பதை வடிவமைத்தார். இது வேளாண்மை உற்பத்தி மற்றும் விநியோகத்தை இயந்திர மயமாக்குவதையும் நுகர்வுப் பொருட்களை அரசே விநியோகம் செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது.

**ஜெயப்பிரகாஷ் நாராயணன் (1950):**

- "சர்வோதயத் திட்டம்" ஒன்றை முன்மொழிந்தார். இது காந்தி மற்றும் வினோபா பாவே ஆகியோரின் கருத்துக்களின் உத்வேகத்தால் தயாரிக்கப்பட்டத் திட்டமாகும். விவசாயம் மட்டுமல்லாமல் சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ஊக்கமளிக்கும் கூறுகளைக் கொண்டத் திட்டமாகும்.

- இந்த ஆறுத் திட்டங்களையும் கவனமாக ஆராய்ந்து திட்டக்குழுவை அமைத்து ஐந்தாண்டுத் திட்டங்களாக செயல்படுத்த ஜவஹர்லால் நேரு முடிவெடுத்தார். அவரே இந்திய அரசின் திட்டக் குழுவின் முதல் தலைவராவார்.

**திட்டமிடலுக்கு ஆதரவான கருத்துக்கள்:**

கீழ்க்கண்ட வகைகளின் திட்டமிடல் வலியுறுத்தப்படுகிறது

14. **நாட்டின் சந்தைகளின் இயக்கத்தை முடுக்கிவிடுதலும் உறுதியாக்குதலும்:**

- பின்தங்கிய நாடுகளில் சந்தை சக்திகள் சரிவர இயங்காததற்கு அறியாமையும், பிரபலமும் இல்லாததே ஆகும். நாட்டில் பெரும்பாலான பகுதியில் பணமாற்ற பறிமாற்றம் நடைபெறுகிறது. பொருட்கள். உற்பத்திக் காரணிகள், பணம் மற்றும் மூலதன அங்காடிகள் அமைப்புமுறை ஆகியவை ஒழுங்குற அமைக்கப்படவில்லை. எனவே, திட்டமிட்ட பொருளாதாரமே அங்காடிப் பொருளாதாரத்திற்கு சிறந்த மாற்றாக கருதப்படுகிறது.

15. **வேலையின்மையை அகற்றுதல்:**

- மூலதன குறைவும். தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஏற்படுவதால் அதிகரித்துவரும் தொழிலாளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வேலை வாய்ப்பை உருவாக்குவது அரசுகளுக்கு சவாலாக உள்ளது. பின்தங்கிய நாடுகளில் வேலையின்மை மற்றும் மறைமுக வேலையின்மையை அகற்ற திட்டமிடுதல் அவசியமாகும்.

16. **சமமான முன்னேற்றம் ஏற்படுத்துதல்:**

- பொருளாதாரத்தின் பல துறை சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள போதுமான பெரிய நிறுவனங்கள் இல்லாத சூழ்நிலையில் திட்டக்குழுவே சரிசம முன்னேற்றத்தை ஏற்படுத்த உதவும். பின்தங்கிய நாடுகளில் வேளாண்மை, தொழில், சமூகப் கட்டமைப்பு, உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வாணிகம் ஆகியத் துறைகளின் முன்னேற்றம் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவாக நடைபெறத் தேவைப்படுகிறது.

17. **வேளாண் துறை மற்றும் தொழில்துறை முன்னேற்றம்:**

- வேளாண்துறையும் தொழில்துறையும் ஒன்றுடன் ஒன்று இணைந்திருப்பதால் வேளாண் துறையும், தொழில் துறையும் சேர்ந்து முன்னேற்றமடைய வேண்டியுள்ளது. வேளாண்துறையை சீர்படுத்தும்போது அதில் உள்ள உபரியான தொழிலாளர்களை தொழில் துறை ஈர்த்துக்

கொள்ளும். வேளாண் துறையின் வளர்ச்சியினால் தொழில் துறைக்கு தேவையான இடுபொருள் கிடைக்கும். இதனால் வேளாண்மையுடன் தொழில்துறையும் வளரும்.

**18. கட்டமைப்பு முன்னேற்றம்:**

- வேளாண்மை துறை மற்றும் தொழில்துறையின் முன்னேற்றம் என்பது பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பு இல்லாமல் முன்னேற்றம் பெறமுடியாது. பாசனக் கால்வாய்கள், சாலைகள், தொடர்வண்டிப்பாதைகள், ஆற்றல் வளம் போன்றவற்றை ஏற்படுத்துதல் என்பது வேளாண் மற்றும் தொழில் துறைக்கு மிக முக்கியமானதாகும். கட்டமைப்பு அமைக்க அதிகமான மூலதனம் மற்றும் நீண்ட பலன்தரும் சில காலங்கள் எடுக்கும், மேலும் குறைவான வெளியீடுகளைத் தரக்கூடியவை. அரசு மட்டுமே வலிமையான கட்டமைப்பை திட்டமிடல் மூலம் ஏற்படுத்த முடியும்.

**19. பண மற்றும் மூலதன அங்காடியின் முன்னேற்றம்:**

- உள்நாட்டு மற்றும் பன்னாட்டு வாணிபங்கள் வளர்ச்சி பெற வேளாண்துறை, தொழில் துறை, சமூக, பொருளாதார கட்டமைப்புகளில் பங்களிப்பும் மட்டுமல்லாது நிதி நிறுவனங்களின் பங்களிப்பு அவசியமானதாகும். பண மற்றும் மூலதன அங்காடி பின்தங்கிய நாடுகளில் குறைவாக உள்ளது. இது தொழில் மற்றும் வாணிப வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. எனவே உறுதியான பணம் மற்றும் மூலதன அங்காடியை உருவாக்க திட்டமிடல் என்பது அவசியமாகும்.

**20. திட்டமிடல் வறுமையையும் ஏற்றத்தாழ்வையும் குறைக்கும்:**

- திட்டமிடல் என்பது மட்டுமே பின்தங்கிய நாடுகள், நாட்டு வருமானம் மற்றும் தலா வருமானத்தை அதிகரிக்கவும், வறுமையும் ஏற்றத்தாழ்வுகளை குறைக்கவும் வேலைவாய்ப்பினை அதிகரிக்கவும் செய்கிறது. இந்த 65 ஆண்டுகளில் இவை நடந்ததா?

  எனவே ஆர்தர் லூயிஸ், "பின்தங்கிய நாடுகளில் தேசிய வருவாயை உயர்த்துவதற்கான ஒருங்கிணைந்த முயற்சிகள் மிகவும் அவசியம், இதற்கு திட்டமிடல் என்பது வழிகளையும், வழிமுறையையும் கொண்ட ஒரு சாதனமாக திகழ்கிறது".

**திட்டமிடலுக்கு எதிரான வாதங்கள்:**

- சந்தை இயங்காமல் தோல்வியடைந்ததால் அரசு திட்டமிடல் மூலம் தலையிடும் அவசியம் உருவானது. பொருளாதாரத் திட்டமிடுதலின் முக்கிய நோக்கம் வளர்ந்த நாடுகளில் பொருளாதார நிலைத்தன்மையை அடைவது, பின்தங்கிய நாடுகளில் வளர்ச்சியைப் பெறுவதாகும். திட்டமிடுதல் குறைகளற்ற பொருளாதாரக் கொள்கை எனவும் கருதிவிட முடியாது. இவை தனியார் முயற்சியை தடுக்கும், தேர்ந்தெடுத்தலின் உரிமையை முடக்கவும், நிர்வாகச் செலவு அதிகரிக்கவும், தானாகவே விலை நிர்ணய முறையை சரிசெய்வதை நிறுத்தவும் செய்கிறது. திட்டமிடலுக்கு எதிரான வாதங்களையும் குறைகளையும் கீழே புரிந்து கொள்வோம்.

**1. தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை:**

- தன் விருப்பம் போல் செயல்பட இயலாததால் பொருளாதார வளர்ச்சிக்கு தடையாக இருக்கிறது. திட்டமிடல் கட்டுப்பாடுகளையும் வழிமுறைகளையும் விதித்து நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ளது. தலையிடா பொருளாதாரத்தில் நுகர்வு, பணியை தேர்வு செய்தல், உற்பத்தி செய்தல், மற்றும் வலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் தன்விருப்பம் போல் முடிவெடுக்க உள்ள அனுமதி உள்ளது. ஆனால் திட்டமிட்ட பொருளாதாரத்தில் சிக்கலான முடிவுகளை மத்திய திட்டக்குழு எடுக்கிறது. இது நுகர்வோர், உற்பத்தியாளர் மற்றும் பணியாளர்களின் கட்டுப்படுத்துகிறது. ஹேயக் எழுதிய "அடிமைத்தனத்திற்கான பாதை" என்னும் நூலில் மையப்படுத்தப்பட் திட்டமிடலில் மக்களின் பொருளாதார விடுதலைக் கட்டுப்படுத்தி நாட்டை மந்தநிலைக்கு இட்டுச் செல்லும், என கருத்து தெரிவிக்கிறார். அரசின் முடிவுகள் அனைத்தும் எப்பொழுதும் சரியாக இருப்பதில்லை. ஆனால் தனியார் உற்பத்தியாளர்களுக்கு சுதந்திரம் வழங்கும்போது, அதனை தவறாக பயன்படுத்தப்பட்டு, மக்களின் நலன் புறக்கணிக்கப்பட்டு, இலாபம் ஒன்றுக்கே மிக முக்கியத்துவம் வழங்கப்படும்.

**2. தன் முனைப்புக் குறைதல்:**

- மையப்படுத்தப்பட்டத் திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல் மற்றும் புதுமைகளை புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது. திட்டமிடுதலானது வழக்கமான செயல்முறைகளைப் பின்பற்றி வளர்ச்சியில் தேக்கத்தை உண்டுபண்ணும். இது வளர்ச்சியைக் கீழ் கண்ட வழிகளில் தடுக்கிறது.

1. தனியார் உரிமை இல்லாதது, இலாப நோக்கை குறைத்து தொழில் முனைவோர் திறம்பட முடிவு எடுப்பதையும், இடர் எதிர்நோக்குதலையும் குறைக்கிறது. அபரிதமான இலாபமே புதிய வழிமுறைகளைத் தேடவும், அதனை செயல்படுத்தவும், அதில் வரும் இடர் தாங்கி புதுமையை புகுத்தி இலாபத்தை பெற தூண்டும். ஆனால் திட்டமிடுதலில் இந்தத் தூண்டுதல் இல்லை.

2. திட்டமிடல் பொருளாதாரத்தில் அனைவருக்கும் அவர்களது முயற்சி, திறமை மற்றும் உற்பத்தி திறன் ஆகியவற்றை கணக்கில் கொள்ளாமல் சமமான பலன்கள் வழங்கப்படுவதால், எவரும் இடர்பாடுகளை ஏற்று புதிய நிறுவனத்தை துவக்க முன் வர மாட்டார்கள்.

3. உயர் பதவியில் உள்ள அலுவலர்கள் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தும் போக்கு திட்டமிடலில் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது. சமவுடைமை பொருளாதார நாடுகள் திட்டமிடலில் சந்திக்கும் பிரச்சனை இது. அரசுப் பணிகளைப் பயன்படுத்துவதில் கால விரயமாகிறது. இது பொருளீட்டும் நடவடிக்கையையே சீர்குலைக்கிறது.

**அதிகமான நிர்வாக செலவு:**

- திட்டமிடலின் நோக்கமென்னவோ தொழில்மயமாக்கல், சமூக நீதி, நாட்டு நிலைமையை சமப்படுத்துதல் போன்ற உயர்வானவை ஆனால் அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகமாக இருக்கும். புள்ளிவிவரங்களை சேகரித்து, தொகுத்து திட்டங்களைத் தயாரித்து செயல்படுத்தி நிர்வகிப்பதில் தேவைப்படும் பணியாளர் எண்ணிக்கை மிக அதிகம். லூயிஸ் இதைப்பற்றி குறிப்பிடும்பொழுது "திட்டமிடல் சிறப்பாக அமைய வேண்டுமானால் கூடுதலான திட்டமிடல் நிபுணர்கள் தேவை என்கிறார். "சரியான புள்ளவிவரம் இல்லாமை, தவறாக கணிப்பது, திட்டமிடுதலை சரிவர செயல்படுத்தாது போன்றவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்குறை நிலைக்கு கொண்டு செல்லும்.

3. **முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள்:**

- அரசு தடையில்லாத நாட்டில், விலை இயக்க முறையில், விலை, தேவை மற்றும் அளிப்பு ஆகியவை தானாக இயங்கி ஒன்றையொன்று சரி செய்து கொள்கிறது. உற்பத்தியாளர்கள் தங்களது அளிப்பையும், நுகர்வோர்கள் தங்களது தேவைகளையும் விலை மாற்றத்துக்கேற்றவாறு சரிசெய்து கொள்வார்கள். திட்டமிடல் நாடுகளில் இப்படி ஒரு வசதி இல்லை. நுகர்வு மற்றும் உற்பத்தி அளவுகளை துல்லியமாக முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினம். உபரி அளிப்போ, உபரித் தேவையோ அங்காடிப் பொருளாதாரத்தில் ஏற்படலாம். அமெரிக்கா போன்ற முதலாளித்துவ நாடுகளில் இது போன்று ஏற்பட்டுள்ளது.

- திட்டமிடலின் குறைகளனைத்தும் மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் முறையின் குறைகளாகும். பரவலாக்கப்பட்டத் திட்டமிடல் முறை மற்றும் கலப்பு பொருளாதார நாடுகளில் தனியார் மற்றும் அரசுத்துறைகளுக்கு சமமான இடம் கொடுத்து சிறப்பாக செயல்படுகிறது. திட்டமிட்டப் பொருளாதாரம் சந்தைப் பொருளாதாரத்தைவிட திறம்பட செயல்படுவதாகவே தோன்றுகிறது. எனவே பொருளாதார முன்னேற்றத்துக்காகத் திட்டமிடுவதா வேண்டாமா என்பதல்ல பிரச்சனை. அரசு தலையிடுதலையும், சந்தை இயங்குதலையும் சரியான விகிதத்தில் கலந்து அனுமதிப்பதால் துரிதமான அதேநேரத்தில் நிலையான பொருளாதார முன்னேற்றத்தையும், சமூக சமத்துவத்தையும் திட்டமிடுதல் மூலம் சாதிக்க முடியும் என்பதைப் புரிந்துக்கொள்ள வேண்டும்.

**திட்டமிடலின் வகைகள்:**

**திட்டமிடலின் வகைகள்**

| மக்களாட்சி மற்றும் | வழிகாட்டுதல் படி | குறுகிய நடுத்தர | செயல்பாட்டு மற்றும் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| சர்வாதிகாரம் | திட்டமிடல் மற்றும் தூண்டும் திட்டமிடல் | மற்றும் நீண்ட கால திட்டமிடல் | கட்டமைப்பு திட்டமிடல் |
| மையப்படுத்தப்பட்ட மற்றும் பரவலாக்கப்பட்ட | சுட்டிக் காட்டும் மற்றும் கட்டாயதிட்டமிடல் | நிதித்திட்டமிடல் மற்றும் நாணய திட்டமிடல் | பொது மற்றும் பகுதித்திட்டமிடல் |

பொருளாதார முன்னேற்ற இலக்குகளை ஒரு குறிப்பிட்டக்கால வரம்புக்குள் அடைய மேற்கொள்ளப்படும் முயற்சிகளைக் குறிக்கும் செயல்பாடே பொருளாதாரத் திட்டமிடலாகும். திட்டமிடல். கோட்பாடு மற்றும் செயல்படுத்தப்படும் விதங்களின் அடிப்படையில் பலவகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

### 1. மக்களாட்சி மற்றும் சர்வாதிகாரத் திட்டமிடல் (Democratic Vs Totalitarian Planning):

- திட்டங்களைத் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துதலில் உள்ள அனைத்து நிலைகளிலும் மக்கள் பங்கெடுத்துக்கொள்ளும் திட்டமிடலே மக்களாட்சித் திட்டமிடல். அரசு, தனியார் மற்றும் பொது மக்களை உள்ளடக்கிய மிகப்பரவலான ஆலோசனைகளை பெற்றுத் தயாரிக்கப்பட்டு, அவர்களாலேயே செயல்படுத்தப்படும் திட்டமிடல் முறையாகும். திட்டக்குழுவினால் தயாரிக்கப்பட்ட திட்ட வழிமுறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதனை அந்நாட்டின் பாராளுமன்றம் ஏற்பகோ அல்லது மறுக்கவோ அல்லது மாற்றியக்கவோ செய்யும்.

**சர்வாதிகார திட்டமிடல்:**
மையத் திட்டக் குழு ஒரு திட்டத்தை கையில் வைத்துக்கொண்டு நாட்டின் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தி, விரும்பிய திசையில் நடைபெற வைப்பதே சர்வாதிகாரத் திட்டமிடல்.

- சர்வாதிகாரத் திட்டமிடலில் பொருளாதார நடவடிக்கைகள் மத்திய கட்டுப்பாடு மற்றும் வழிகாட்டுதலின் படி ஒரே ஒரு திட்டமாக இருக்கும். நுகர்வு, பரிவர்த்தனை மற்றும் விநியோகம் ஆகிய அனைத்துமே அரசு கட்டுப்பாட்டிலிருக்கும். திட்டக் குழுவே அதிகாரமிக்க அங்கமாகும். இலக்குகள், செயல் முறைகள், ஒதுக்கீடுகள் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவை திட்டக் குழுவால் முடிவு செய்யப்படும்.

### 2. மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் பரவலாக்கப்பட்ட திட்டமிடல் (Centralized Vs Decentralized Planning):

- மையபடுத்தப்பட்ட திட்டமிடலில், அனைத்து நிலைகளிலும் திட்டம் தொடர்புடைய நடவடிக்கைகள் மையத் திட்டக்குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும். திட்டக்குழுவே திட்டம் தீட்டுதல், நோக்கங்களை நிர்ணயித்தல், இலக்குகளைக் கண்டறிதல் மற்றும் தீர்மானித்தல் ஆகியவற்றை செய்கிறது. "மேலிருந்து திட்டமிடல்" என்றும் இதைக் கூறலாம். பரவலாக்கப்பட்ட திட்டமிடுதலில் மைய அமைப்புகளின் கட்டுபாடுகளின்றி, உள்ளூர் அமைப்புகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள், திட்டங்களைத் தீட்டுதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றை செய்யும். எனவே இதை "கீழிருந்து திட்டமிடல்" எனவும் அழைக்கலாம்.

### 3. வழிகாட்டும் திட்டமிடல் மற்றும் தூண்டும் திட்டமிடல்:

- திட்டக்குழு வழிகாட்டுதல் வழங்கி, திட்டம் தயாரித்து மேலும் திட்டத்தை ஆணையிடுதல் மூலம் செயல்படுத்தினால் அது வழிகாட்டுதல் திட்டமிடல் ஆகும். முன்பே முடிவு செய்யப்பட்ட இலக்குகள் மற்றும் முன்னுரிமைகள் அடிப்படையில் திட்டம் செயல்படுத்தப்படும்.

- திட்டக்குழு நிர்ணயம் செய்த இலக்குகளை பல்வேறு நிதியியல் மற்றும் பணவியல் வழிமுறைகள் மூலம் ஊக்கங்கள் அளித்து, அதன் நடவடிக்கைகளை மக்களால் மேற்கொள்ளப்படுவதே தூண்டும் திட்டமிடல் என்கிறோம். மானியம் போன்ற சலுகைகள் கொடுத்து ஒரு பொருளை உற்பத்தி செய்ய வைக்க முடியும். தூண்டும் திட்டமிடுதலில் தனிமனித விடுதலையைக் குறைக்காமல் அதே பலனை பெற வைக்கும் தன்மைக் கொண்டது.

4. **சுட்டிக்காட்டும் திட்டமிடலும் கட்டாயமானத் திட்டமிடலும் (Indiacative Vs Imperative Planning)**

- கலப்பினப் பொருளாதார நாடுகளுக்கு பொருத்தமான திட்டமிடல் முறையாக ”மோனட் திட்டம்” என்ற பெயரில் பிரான்ஸ் நாடானது 1947 லிருந்து 1950 வரை செயல்படுத்தியது. திட்டக்குழு இலக்குகளை அடையும் வழிமுறைகளை குறிப்புரைகளாக தயாரித்தது, தனியார் நிறுவுனங்களின் பிரதிநிதிகள் தொழிற்சங்கத் தலைவர்கள், நுகர்வோர் குழுக்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் பிற துறை நிபுணர்களிடம் கலந்து ஆலோசித்து செயல்படுத்தும் திட்டமிடலே சுட்டிக்காட்டும் திட்டமிடல் ஆகும். அரசு பொருளாதார நடவடிக்கைகளை செயல்படுத்த, இலக்குகளை நிர்ணயம் செய்து, அவற்றை தனியார் நிறுவனங்கள் அடைவதற்கு தேவையான வசதிகளை அமைத்துக்கொடுத்து, ஒருங்கிணைக்கும் பணியை மட்டும் மேற்கொள்ளும் வகையில் திட்டமிடல் அமைந்திருக்கும்.

- கண்டிப்பானத் திட்டமிடல் முறையில், திட்டம் தயாரித்தல் மற்றும் செயல்படுத்துகளில் அரசு அதிகாரமிக்கது. திட்டம் தயாரித்து முடித்துவிட்டால் எவ்வித தடைகளுமின்றி திட்டங்கள் செயல்படுத்தப்படும். ரஷ்யாவின் அப்போதைய குடியரசுத் தலைவர் ஸ்டாலின் ”நமது திட்டம் நமக்கான அறிவுரைகளாகும்” என்பதை பயன்படுத்தினார். அனைத்து வளங்களும் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும். இங்கு நுகர்வோர் இறையான்மை இருக்காது. அரசின் கொள்கைகளும் வழிமுறைகளும் மாறாது நிலையாக இருக்கும். சீனாவும், ரஷ்யாவும் இந்த திட்டமுறைகளை கடைப்பிடிக்கும் நாடுகளாகும்.

5. **குறுகிய கால, நடுத்தரக் கால மற்றும் நீண்டகாலத் திட்டமிடல்:**

- ஓராண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறுகியகாலத் திட்டங்களாகும். ”கட்டுப்படுத்தும் திட்டம்”, ”ஆண்டுத் திட்டம்” எனவும் அறியப்படுகிறது.

- மூன்றிலிருந்து ஏழு ஆண்டு காலத்தில் முடிவடையும் திட்டங்கள் நடுத்தரக் காலத்திட்டங்கள் ஆகும். பொதுவாக ஐந்தாண்டுத் திட்டங்களாகவே செயல்படுத்தப்படுகின்றன. நிதி மட்டுமல்லாமல் கட்டமைப்பு வளங்களும் இத்திட்டமிடல் முறையில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பத்திலிருந்து முப்பது ஆண்டுகளுக்கு தீட்டப்படும் திட்டங்கள் நீண்டகாலத் திட்டமிடல். இவை “முன்னோக்குத் திட்டங்கள்“ எனவும் அழைக்கப்படுகிறது. பொருளாதாரக் கட்டமைப்பு மாற்றங்களை கொண்டுவருவதே நீண்டகால திட்டத்தின் அடிப்படையாகும்.

1. **நிதித்திட்டமிடல் மற்றும் உருவப் பொருள் திட்டமிடல் (Finacial Vs physical planning):**

  - திட்டத்தை செயல்படுத்தத் தேவையான நிதியை பண மதிப்பில் ஒதுக்கீடு செய்யும் திட்டமிடலே நிதித்திட்டமிடலாகும். உருவப்பொருள் திட்டமிடல் என்பது மனித வளம், இயற்கை வளம் மற்றும் இயந்திரங்கள் போன்ற பருமப் பொருட்களை ஒதுக்கீடு செய்யும் திட்டமிடல் முறையாகும்.

2. **பணிகள் திட்டமிடல் மற்றும் கட்மைப்புத் திட்டமிடல் (Functional Vs Structural Planning):**

  - ஒரு நாடு பெற்றுள்ள பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறையை மாற்றாமல்பொருளாதார சீர்கேடுகளை நீக்குவதற்கு வழிகாட்டுதல்கள் மட்டுமே செய்யும் திட்டமிடல், பணிகள் திட்டமிடலாகும்.

  - பொருளாதார அமைப்பு முறையில் பொருத்தமான மாற்றங்களை செய்து இலக்குகளை அடையும் திட்டமிடலே கட்டமைப்புத் திட்டமிடலாகும். இவ்வகையான திட்டமிடல் பெரும்பாலும் பின்தங்கிய நாடுகளில் இது காணப்படுகிறது.

3. **விரிவான மற்றும் பகுதித் திட்டமிடல்:**

- நாட்டின் அனைத்துப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டமிடல் விரிவான திட்டமிடலாகும். ஒரு சில துறைகளுக்கு மட்டுமே இலக்கு நிர்ணயம் செய்து அதை அடைய தீட்டப்படும் திட்டம் பகுதித் திட்டமாகும்.

**திட்டமிடல்:**

| நீண்டகாலம் 10 ஆண்டுகளுக்கு மேல் | நடுத்தர காலம் 3 – 7 ஆண்டுகள் | குறுகிய காலம் 1 – ஆண்டு வரை |
|---|---|---|
| நீண்ட கால திட்டமிடல் 10 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாகக் கருதப்படுகிறது. – வியூ கத்திட்டமிடல் | நடுத்தர கால திட்டமிடல் 5 ஆண்டுகளுக்கு மேல் ஒரு காலப்பகுதியாக கருதப்படுகிறது – தந்திரமான திட்டமிடல் | குறுகிய கால திட்டமிடல் ஆண்டு வரை ஒரு காலப்பகுதியாக கருதப்படுகிறது – செயல்பாட்டு திட்டமிடல் |

## நிதி ஆயோக் (NITI Aayog):

- National Institution for Transforming India என்பதன் சுருக்கமே நிதி ஆயோக் என்பதாகும். இதனை இந்தியாவை உருமாற்றம் செய்வதற்கான தேசிய நிறுவனம் என புரிந்துக் கொள்ளலாம்.

- இதனை ஆகஸ்டு 13, 2014-ல் திட்டக்குழுவுக்கு பதிலாக இந்த நிறுவனத்தை உருவாக்கும் முடிவை இந்திய அரசு எடுத்தது. இதன்படி ஜனவரி 1, 2015 அன்று அமைச்சரவைக் குழுவின் தீர்மானத்தின் மூலமாக நிதி ஆயோக் அமைக்கப்பட்டது. இந்தியப் பிரதமரே நிதி ஆயோக்கின் தலைவர் மத்திய அமைச்சர்கள் உறுப்பினர்கள் ஆவர். இதன் துணைத்தலைவரே நிர்வாகத் தலைவராவார். அரவிந்த் பனகரியா இதன் முதலாவது துணைத்தலைவராக செயல்பட்டு வருகிறார்.

**நிதி ஆயோக்கின் பணிகள்:**

நிதி ஆயோக்கின் பணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

1. **கூட்டுறவு மற்றும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சி:**

- மாநிலங்கள் நாட்டின் கொள்கை வடிவமைப்பதில் துடிப்புடன் பங்கெடுக்கத் தேவையானவற்றை செய்வது.

2. **நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்:**

- நாட்டின் முன்னேற்றத்திற்கான முன்னுரிமைகள் மற்றும் உத்திகளில் மாநிலங்களையும் இணைத்துக் கொள்ளுதல்.

3. **பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்:**

- திட்டமிடல் நடைமுறையை கீழிருந்து மேல் என்ற முறையில் மாற்றம் கொண்டுவருதல்.

4. **தொலைநோக்கு மற்றும் காட்சித் திட்டமிடல்:**

- நாட்டின் எதிர்காலத்தை கவனத்தில் கொண்டு இடைக்கால மற்றும் நீண்டகால தொலை நோக்கு கட்டமைப்பை வடிவமைத்தல்.

5. **நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்:**

- அரசின் கொள்கைகள் வடிவமைப்பதிலும், திட்டங்களை செயல்படுத்துவதிலும் அரசுக்கு வெளியில் உள்ள நிபுணர்கள் ஒன்றிணைந்து பங்குபெற வைத்தல்.

6. **உகந்ததாக்குதல்:**

- அரசின் பல படிநிலைகளில் பணியாற்றுபவர்களை குறிப்பாக பலதுறைகள் ஒன்றிணைந்து செயல்படுமிடங்களில் ஏற்படும் பிரச்சனைகளை களைய தொடர்பு கொள்ளுதல், ஒருங்கிணைத்தல், கைகோர்த்தல் மற்றும் கூட்டிணைத்தல் மூலம் உகந்த பணியை நிதி ஆயோக் செய்கிறது.

7. **சச்சரவுத் தீர்த்தல்:**

- அரசுத் திட்டங்களை வேகமாக செயல்படுத்த மாநில மைய அரசுகளுக்கு இடையில், மாநிலங்களுக்கிடையில், அரசுத் துறைகளுக்கிடையில் மற்றும் பிற துறைகளுக்கிடையில் நிலவும் சச்சரவுகளுக்குத் தீர்வுகான ஒரு தளத்தை அமைத்துக் கொடுக்கிறது.

8. **வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்:**

- வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைகளையும் பன்னாட்டு நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் நிதி வளங்களையும் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன்படும் வகையில் பெற்றுத்தரும் பொறுப்பு அலுவலகமாக நிதி ஆயோக் செயல்படும்.

9. **உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்:**

- கொள்கைகள் மற்றும் திட்டங்கள் வகுக்க மாநில மற்றும் மைய அரசுகளுக்கு ஆலோசனைகளை வழங்குகிறது.

10. **திறன் உருவாக்குதல்:**

- அரசுத் துறைகளில் திறனை வளர்க்கவும் தொழில் நுட்பத்தை மேம்படுத்தவும், உலக அளவில் தற்போது நடைமுறையில் உள்ள தர அளவுகோள்களை கொண்டும், மேலாண்மை நுட்பங்கள் வழியாகவும் திறன் உருவாக்கும் பணியையும் நிதி ஆயோக் செய்கிறது.

11. **கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல்:**

- அரசு செயல்படுத்தும் திட்டங்களை நிதி ஆயோக் கண்காணித்து அதன் விளைகளை மதிப்பீடும் செய்கிறது.

- அடல் புத்தாக்க கொள்கை, ஆயுஸ்மான் பாரத் அணுகுமுறை ஆகியவை தண்ணீர் வளங்களை பாதுகாக்கும் விதமாகவும், இந்திய மருத்துவ கழகத்திற்கு தேசிய மருத்துவ வாரியம் என பெயர் மாற்றம் செய்வதற்கும் நாடாளுமன்றத்தில் அறிக்கையை தாக்கல் செய்தது நிதி ஆயோக். நிதி ஆயோக் பொறுப்புணர்வையும் உருவாக்குகிறது. இதன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு அலுவலகம் அரசின் பல்வேறு துறைகளின் அலுவலகங்களில் புள்ளி விவரத்தை சேகரித்து அவற்றின் செயல்பாட்டை கண்காணிக்கிறது. மாநிலங்களையும் வரிசைப்படுத்தி போட்டியடிப்படையிலான கூட்டாட்சி உணர்வை வளர்க்கிறது. நிதி ஆயோக்கின் வெற்றியை குறிப்பிட்ட காலங்களுக்குப் பிறகே கணிக்க முடியும்.

- சர்வாதிகார முறையும், பிரான்ஸ் போன்ற நாடுகளில் மக்களாட்சி மற்றும் சுட்டிக்காட்டும் திட்டமிடலும் உள்ளது. இந்தியத் திட்டக்குழுவை நீக்கிவிட்டு நிதி ஆயோக் என்ற புதிய நிறுவனம் துவங்கப்பட்டதையும் இந்த பாடத்தில் கற்றுக் கொண்டோம்.

# MONETARY POLICY, FISCAL POLICY, FINANCE COMMISSION, GST& TAXES

## அலகு – 1

## பணம், சேமிப்பு மற்றும் முதலீடுகள்

**அறிமுகம்:**
பணம் ஒரு கண்கவர் பொருள் மட்டுமல்லாமல், ஆர்வத்தை தூண்டக்கூடியதாகும். இது மாணர்களுக்கு பிடித்தமான முக்கிய கூறு. பணத்தின் வரலாறு மற்றும் பணத்தை பல்வேறு காலங்களில் எவ்வாறு வெவ்வேறு வகைகளாகப் பயன்படுத்தப்பட்ட முறை ஒரு சுவாரஸ்யமான கதை, நவீன வடிவங்களில் பணம், வங்கி அமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

பணம் ஒரு அடிப்படை கண்டுபிடிப்பு. அன்றாட பரிவர்த்தனைகளுக்கு இது எளிதானது. மதிப்பு மிக்க பொருட்கள் மற்றும் சேவைகளை சேமித்து வைத்து எதிர்காலத்தில் செல்வத்தையும், வர்த்தகத்தையும் நாம் பெற முடியும். "பொது ஏற்புத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு பண்டங்கள் வாங்கும் போது அதற்கான செலுத்துத் தொகையாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய எதனையும் பணம் என்று கூறலாம்" - இராபர்ட்சன்.

**பணத்தின் பரிணாம வளர்ச்சி:**
பணம் என்ற வார்த்தை ரோம் வார்த்தையான "மொனேட்டா ஜுனோ" விலிருந்து பெறப்பட்டது. இது ரோமின் பெண் கடவுள் மற்றும் ரோம் பேரரசின் குடியரசு பணமாகும். இந்தியாவின் "ரூபாய்" என்ற சொல் சமஸ்கிருத வார்த்தையிலிருந்து பெறப்பட்டது. "ரூபியா என்றால் வெள்ளி நாணயம் என்று பொருள். இன்று நாம் காகித பணமாகவும், நாணங்களாகவும் பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த பரிணாம நிலைகள் ஒரே இரவில் நடைபெறவில்லை. இந்த நிலைகளை அடைய ஆயிரக்கணக்கான ஆண்டுகள் ஆனது.

பணத்தின் பரிணாமம் பல நிலைகளை கடந்துள்ளது. ஆரம்ப மற்றும் பழங்கால நிலைதான் பண்டமாற்று முறையாகும்.

**பண்டமாற்று முறை:**

பண்டைய காலத்தில் பணம் பயன்படுத்தபடாமல் பண்டத்திற்கு பண்டம் பரிமாற்றம் நடைபெற்றதை பண்டமாற்று முறை என்றனர். பண்டமாற்று முறை ஒரு பழைய பரிமாற்ற முறையாகும். பணம் கண்டுபிடிப்பதற்கு முன்பாக இந்த முறை பல நூற்றாண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டது. மக்கள் பண்டங்கள் மற்றும் பணிகளை மற்றொரு பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு பரிமாற்றம் செய்திருக்கிறார்கள். பண்டமாற்று பொருட்களின் மதிப்புப் பற்றி மற்ற குழுக்களுடன் விவாதம் செய்தனர். பண்டமாற்று செயலில் பணத்தின் ஈடுபாடு இல்லாமல் இருப்பது ஒரு நன்மையாகும்.

**பண்டமாற்று முறையில் சில குறைபாடுகளாவன**
1. இருமுகத் தேவை பொருத்தமின்மை
2. பொதுவான மதிப்பின் அளவுகோல்
3. பொருட்களின் பகுபடாமை
4. செல்வத்தை சேமிப்பதற்கான சிரமங்கள்

**பணத்தின் பல நிலைகள் பின்வருமாறு:**
பண்டப் பணம், உலோக பணம், காகித பணம், கடன் பணம், நிகர் பணம் போன்றவைகள் சமீப கால பணத்தின் வடிவங்கள் ஆகும். காலம், இடம் மற்றும் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு பணம் பல நிலைகளில் உருவானது.

**பண்டப் பணம் :**
பொதுவாக நாகரீகத்தின் தொடக்க காலத்தில் அனைவராலும் ஏற்கக்கூடிய எந்த பண்டம் பொதுவாக தேவைப்படுகிறதோ அந்தப் பண்டம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றை பணமாக பயன்படுத்தினர். உரோமம், தோல், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள் போன்ற

பண்டங்கள் பொதுவாக பணமாக பயன்படுத்தினர். அந்த வகையான பண்டங்களைக் கொடுத்து பண்டங்களை வாங்குதலை ”பண்டமாற்று முறை” என அழைத்தனர்.

**உலோக பணத்தின் வரலாறு:**
தங்கம், வெள்ளி, வெண்கலம் போன்ற விலை மதிப்பற்ற உலோகங்கள் உலோக பணமாக பயன்படுத்தப்பட்டன. உலோகத்தின் நிலையான எடை மற்றும் துல்லியம் குறிப்பாக தங்கம், வெள்ளி ஆகியவை முத்திரையுடன் பரிமாற்ற கருவியாக செய்யப்பட்டது. அவைகள் வெவ்வேறு பிரிவுகளாக,எளிதாக பரிப்பதற்கும், எடுத்து செல்வதற்கும், செலுத்துவதற்கும் வசதியாக இருந்தன.

பண்டைய வரலாற்று ஆசிரியரான ஹெரோடோடஸ் கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் லிடியாவின் பேரரசர் மிடாஸ் உலோக நாணயத்தை கண்டு பிடித்தார். ஆனால் லிடியாவை விட பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் தங்க நாணயங்கள் பயன்படுத்தப்பட்டன.

உலக நாணயங்கள் வெளியீட்டார்களில் சீனா மற்றும் மத்திய கிழக்கு லிடியாவுடன் பண்டைய இந்தியாவும் உள்ளன. இந்தியாவில் கி.மு 6ம் நூற்றாண்டில் முதன் முறையாக மஹாஜனபதங்கள் ஆட்சியில் பூரணாஸ், கர்ஷபணம், பனாஸ் போன்ற நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன.

தங்கம், வெள்ளி, தாமிரம் அல்லது ஈயம் போன்ற நாணயங்களை மௌரியர்கள் துளையிட்டு வெளியிட்டனர். இந்திய கிரேக்க குஷாண அரசர்கள் கிரேக்க மரபுப்படி சித்திரங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை அறிமுகப்படுத்தினர். 12வது நூற்றாண்டில் டெல்லி துருக்கி சுல்தான்கள் தங்கள் நாணங்களில் இந்திய அரசர்களின் உருவத்தை நீக்கி இஸ்லாமிய எழுத்துக்களை பொறித்து வெளிட்டனர். தங்கம், வெள்ளி மற்றும் தாமிரத்தால் ஆன நாணயங்களை டாங்கா என்றும், மதிப்பு குறைந்த நாணங்களை ஜிட்டால் என்றும் அழைத்தனர்.

1526 யில் இருந்து முகலாய சாம்ராஜ்யம் முழு சாம்ராஜய்த்திற்கான பணவியல் முறையை ஒருங்கிணைத்தும், இந்த சகாப்த பரிணாம பண வளர்ச்சியில் செர்ஷா சூரி, ஹுமாயூனை தோற்கடித்து ஆட்சியில் இருந்த போது 178 கிராம் எடையுள்ள வெள்ளி நாணயத்தை வெளியிட்டார். அது “ரூபியா” என அழைக்கப்பட்டது மற்றும் 40 தாமிர துண்டுகள் அல்லது பைசா போன்றவற்றை பயன்படுத்தினர். முகலாய காலம் முழுவதும் வெள்ளி நாணயம் பயன்பாட்டில் இருந்தது. ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி 1600 ஆம் ஆண்டில் முகலாய நாணயத்தை பிரபலப்படுதியது. ஆனால் 1717 ல் முகலாய பேரரசர் பாருக்ஷாயர், ஆங்கிலேயர்களுக்கு முகலாய பண நாணயத்தை பம்பாய் அச்சகத்தில் அச்சடிக்க அனுமதி அளித்தனர். ஆங்கில தங்க நாணங்கள் கரோலினா என்றும், வெள்ளி நாணயங்களை ஏஞ்ஜேலினா என்றும், செம்பு நாணயங்களை கப்ரூன் என்றும் மற்றும் வெண்கல நாணயத்தை டின்னி எனவும் அழைத்தனர்.

**உலோக பணம்**
மனித நாகரிகத்தின் முன்னேற்றத்தில் பண்ட பணம், உலோக பணமாக மாறியது. தங்கம், வெள்ளி, தாமிரம் போன்ற உலோகங்களை எளிமையாக கையாளப்பட்டதால் அவற்றின் அளவு எளிதாக அறிந்துக் கொள்ளப்பட்டது. பதிவு செய்யப்பட்ட வரலாற்றின் பெரும் பகுதியில், இவ்வகையான பணம் முக்கிய பங்கு வகுத்தது.

**காகித பணம்**
தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு கொண்டு செல்வது சிரமமாகவும், ஆபத்தானதாகவுமாக இருந்தது. ஆகையால், காகித பணம் கண்டுபிடிப்பு பணத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய நிலையாக கருதப்பட்டது. தங்கத்தை சேமிப்பதன் அடிப்படையில் ஆரம்பித்த காகித பணத்தின் வளர்ச்சி அந்த சேமிப்புக்கு பொற்கொல்லர்கள் “இரசீது“களை வழங்கினர். பொற்கொல்லர்களின் “இரசீது“ பணத்தின் பொற்கொல்லர்களின் “இரசீது“ பணத்தின் பதிலியாகவும் மேலும் காகித பணமாகவும் மாறியது. காகிதப் பணத்தை கட்டுப்படுத்துவதும், ஒழுங்குபடுத்துவதும் அந்நாட்டின் மைய வங்கியாகும். (இந்திய ரிசர்வ் வங்கி) தற்போது பணத்தின் பெரும்பகுதி முக்கியமாக செலாவணிப் பணம் அல்லது காகிதப் பணம் மத்திய மைய வங்கியால் வெளியிடப்பட்டதாகும்.

**கடன் பணம் அல்லது வங்கிப்பணம்**
காகித பணமும், கடன் பணமும் கிட்டதட்ட ஒரே நேரத்தில் வளர்ந்தது. மக்கள் தங்கள் பணத்தின் ஒரு பகுதியை வங்கியில் வைப்பு தொகையாக வைத்து அந்த தொகையை வசதியாக காசோலை மூலம் திரும்ப பெறலாம். காசோலை (கடன் பணம் அல்லது வங்கிப் பணம்) என்று அழைக்கப்படுகிறது. காசோலை என்பது பணத்தைக் குறிப்பதல்ல. ஆனால் பணத்தின் பணிகளை மேற்கொள்ளும்.

**நிகர் பணம்:**
உண்டியல், கருவூலக பட்டியல், பத்திரம், கடன் பத்திரங்கள், சேமிப்பு பத்திரங்கள் ஆகியவற்றின் பயன்பாடுகள் பண பரிணாம வளர்ச்சியின் இறுதி நிலையாகும்.

**பணத்தின் சமீபத்திய வடிவங்கள் நெகிழிப் பணம்:**
கடன் அட்டைகள் மற்றும் பற்று அட்டைகள் சமீபத்திய நெகிழிப் பணமாகும். பணமில்லா பரிவர்த்தனை இதன் நோக்கமாகும்.

**மின்னணு பணம்:**
மின்னனுப் பணம் என்பது வங்கியில் கணினி அமைப்புகளில் உள்ள மின்னனு முறையின் மூலம் பணப் பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுவதாகும்.

**நிகழ்நிலை வங்கி (இணைய வங்கி):**
நிகழ்நிலை வங்கி அல்லது இணைய வங்கி என்பது வாடிக்கையாளர் அல்லது பிற நிதிநிறுவனங்கள் வலைதளத்தின் மூலம் ஒரு பரந்த நிதிப் பரிவர்த்தனைகளை நடத்தும் ஒரு மின்னனு முறையாகும்.

**மின்வங்கி:**
மின்னணு வங்கியை தேசிய மின்னணு நிதி பரிமாற்றம் (நேகுவு) என்றும் அழைக்கலாம். காசோலை அல்லது ரொக்கத்தை விட ஒரு கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு நிதியை மாற்றுவதற்கு மின்னணு வழிமுறை பயன்படுகிறது.

**பணத்தின் மதிப்பு:**
பணத்தின் மதிப்பு என்பது பணத்தால் ஒரு நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியை குறிக்கும். ஆகையால், இது பண்ட பணிகளின் விலை அளவை சார்ந்திருக்கும். ஆனால் பணத்தின் மதிப்பும் விலையின் அளவும் எதிர்மறை தொடர்புடையது. பணத்தின் மதிப்பு இரு வகைகள்.

பணத்தின் மதிப்பு இரு வகைகள்
1. பணத்தின் அக மதிப்பு
2. பணத்தின் புற மதிப்பு

பணத்தின் அக மதிப்பு என்பது உள் நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளின் வாங்கும் சக்தியை குறிக்கும். பணத்தின் புற மதிப்பு என்பது வெளி நாட்டிலுள்ள பண்ட மற்றும் பணிகளை வாங்கும் சக்தியை குறிக்கும்.

**பணத்தின் (ரூபாய்) குறியீடு:**
இந்தியா ரூபாய் தமிழ்நாட்டில் உள்ள விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த திரு. உதயகுமார் என்பவரால் வடிவமைக்கப்பட்டது. இது 15- ஜுலை – 2010 அன்று இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டது.

**பணத்தின் தன்மை:**
பணத்தின் பொருள் மற்றும் தன்மை குறித்து அதிகப்படியான சர்ச்சைகள் மற்றும் குழப்பங்கள் நிலவுகின்றன. ஸ்டோவ்ஸ்கி (Scitovsky)வின் கருத்து படி "பணம்" என்பது ஒரு கடினமான கருத்தாகும். ஏனெனில் அது வேறுபட்ட துறைகளில் ஒன்றல்ல,மூன்று பணிகளை குறிப்படுகிறது. அவை, ஒவ்வொன்றும் கணக்கீடின் அலகு, மதிப்பின் நிலைகலன்களை குறிக்கிறது. சர்ஜான் ஹிக்ஸ் கூற்றுப்படி,"பணம் அதன் பணிகளால் வரையறுக்கப்படுகிறது. எதுவெல்லாம் பணமாக

கருதப்படுகிறதோ அவை பணமாக பயன்படுத்தப்படுகிறது''. பேராசிரியர்இ வாக்கர் ''எதையெல்லாம் செய்யவல்லதோ. அதுவே பணம்'' என கூறுகிறார்.

பணத்தின் வரையறைகள் அனைத்தும் அதனுடைய செயல்பாட்டைப் பொறுத்தே வரையறுக்கப்பட்டுள்து. சில வல்லுநர்கள்,''பணமாக பிரகடனம் செய்யப்படும் எவையும் பணமாகும்'' என்று பணத்தை சட்டபூர்வமான சொற்களால் வரையறுத்துள்ளனர் பணம் அனைவரிடமும் பொதுவான ஏற்புத்திறனை பெற்றுள்ளது மற்றும் அவை கடன்களை திருப்பித் தருவதற்கான சட்டபூர்டவமான அதிகாரத்தையும் கொண்டுள்ளது. ஆனால் சட்டரீதியான ஒப்பந்தப் பணத்தை செலுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளை விற்க மறுத்தால், சட்ட ரீதியான பணத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மற்றொன்று, கடன்களை தீர்ப்பதற்கு பணத்தை போல சட்ட பூர்வமான வரையறுக்கப்படாத வேறு சிலவற்றையும் மக்கள் பணமாக ஏற்றுக்கொள்கின்றனர். ஏனெனில் பணம் சுதந்திரமாக பரவக்கூடியதாகும்.

**பணத்தின் பணிகள்:**
பணத்தின் பணிகளை முதன்மை பணிகள், இரண்டாம் நிலை பணிகள் என வகைப்டுத்தப்படுகின்றன.

**முதன்மை அல்லது முக்கிய பணிகள்:**
பணத்தின் முக்கிய பணிகள் பொருளாதாரத்தில் செயல்பட்டு அவை பிரதான பணிகளின் கீழ் வகைப்படுத்தபமுகிறது.

**1. பரிமாற்ற கருவி அல்லது பண செலுத்துகை:**
பணம், பண்ட மற்றும் பணிகளை வாங்க பயன்படுத்தபடுகிறது.

**2. மதிப்பின் அளவுகோல்:**
அனைத்து மதிப்பையும் பணத்தால் அளவிடலாம். பலவகையான பண்டங்கள் மற்றும் இடையில் பரிமாற்ற விகிதத்தை எளிது.

**இரண்டாம் நிலை பணிகள்:**

1. **எதிர்கால செலுத்துகைக்கான நிலை மதிப்பு:**
   ஏதிர்கால செலுத்துகைக்கு பணம் ஒரு கருவியாகப் பயன்படுகிறது. இன்று ஒரு கடனாளி கடன் வாங்குகிறார். குறிப்பிட்ட தொகையை கூறிய படி, குறிப்பிட்ட காலத்தில் செலுத்துவது கடமையாகும்.

2. **மதிப்பின் நிலை கலன் அல்லது வாங்கும் சக்தியின் நிலைகலன்:**
   சில பண்டங்கள் அழிந்து போகக்கூடியதால், பண்டமாற்று முறையில் சேமிப்பை ஊக்குவிப்பதில்லை. பணத்தின் அறிமுகத்திற்கு பிறகு எதிர்காலத்திற்காகப் பணத்தை சேமித்தார்கள். அது அழிய கூடியதில்லை.

3. **மாற்று மதிப்பு அல்லது மாற்று வாங்கும் சக்தி:**
   பணத்தால் தொலைதூர இடங்களுக்கும், வெளி நாட்டிற்கும் பண்டங்களை பரிமாற்றம் செய்ய முடியும். ஆகவே, வாங்கும் சக்தியை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றுவதற்கு அவசியம் என உணரப்பட்டது.

**வரையறுக்கப்பட்ட பணிகள்**

1. கடன் அடிப்படையில் இயக்கப்படுகிறது.
2. மூலதனத்தின் உற்பத்திறன் அதிகரிப்பு
3. நாட்டு வருவாயின் அளவீடு மற்றும் விநியோகம்

பணம் ஒன்று கண்டறியப்படவில்லையெனில் - கற்பனை செய.

**பணவீக்கம் மற்றும்**
**பணவாட்டம்**

- பணவீக்கம் என்பது விலைகள் உயர்ந்து. பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடைவதையும் குறிக்கும்
- பணவாட்டம் என்பது விலைகள் குறைந்து பணத்தின் மதிப்பு உயர்வதைக் குறிக்கும்.

**வங்கியில் சேமிப்பு மற்றும் முதலீடுகள்:**

**சேமிப்புகள்:**

வருவாயில் நடப்பு நுகர்வுக்கு பயன்படாத ஒரு பகுதி சேமிப்பு என வரையறுக்கப்படுகிறது. அவை தற்போதைய நுகர்வுக்காக பயன்படுத்தப்படாமல் எதிர்கால பயன்பாட்டிற்கு ஒதுக்கி வைக்கப்படுகிறது. ஒரு நபர் பணத்தை சேமிக்க பல வழிகள் உள்ளன. வங்கியில் வெவ்வேறு வகையான கணக்குகளின் மூலம் பணத்தை சேமிக்கலாம்.

**மாணவர்கள் சேமிப்பு கணக்கு**

சில வங்கிகள் குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கிற மாணவர்களுக்கான சேமிப்பு கணக்குகள் துவக்கியுள்ளனர். இவை நெகிழ்வான விதிமுறைகளுடன் பூஜ்ஜிய இருப்புத் தொகையில் கொண்டது. இதன் முக்கிய அம்சமாகும்.

**சேமிப்பு வைப்பு**

வாடிக்கையாளர்கள் தன்னுடைய நடப்பு வருமானத்தில் ஒரு பகுதியை சேமிக்க ஆரம்பிக்கும் கணக்கிற்கு சேமிப்பு கணக்கு எனப்படும். நுகர்வோர், பணம் தேவைப்படும் போது அவர்கள் கணக்கிலிருந்து எடுத்துக் கொள்ளலாம். அந்த வைப்பு தொகைக்கு வங்கி பெயரளவு வட்டி அளிக்கிறது.

**நடப்பு கணக்கு வைப்பு**

நடப்பு கணக்குகள் பொதுவாக வர்த்தக நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் பொது அதிகாரிகளால் ஆரம்பிக்கப்படுகிறது. தேவைக்கேற்ப வங்கி பரிவர்த்தனை மேற்கொள்ள நடப்பு கணக்கு உதவுகின்றது.

**நிரந்தர வைப்பு**

நிரந்தர வைப்பு கணக்கு என்பது முதலீட்டாளர்கள் தங்கள் பணத்திற்கு பாதுகாப்பும், நிலையான வருவாயும், வரும்புவார்கள் நிரந்தர வைப்பை “காலவைப்பு எனவும் அழைக்கலாம். அவை குறிப்பிட்ட காலத்திற்கு நிரந்தரமாக வங்கியில் இருக்கும்.

**சேமிப்பின் நன்மைகள்:**

- நீங்கள் விரைவில் நிதி ரீதியாக தனித்து இருக்கலாம்.
- நீங்கள் எந்த எதிர்பாராத செலவுகளைப் பற்றியும் கவலைபட வேண்டியதில்லை.
- நீங்கள் உங்கள் வேலையை இழந்தால், எதிர்காலத்தில் நிதியுதவியாக இருக்கும்.
- உங்கள் சூழ்நிலை மாறினாலும், நீங்கள் தயாராக இருப்பீர்கள்
- நீங்கள் பணி ஓய்வில் வசதியாக இருப்பீர்கள்
- இன்றைய சேமிப்பு, நாளைய பாதுகாப்பு

**மாணவர்களுக்கிடையே சேமிப்பினை ஊக்குவித்தல்:**

- வரி மற்றும் கணக்கியல் பற்றி கற்று கொடுத்தல்.
- வளர்ந்து வரும் பணம் சார்ந்த முடிவுகளில் ஈடுபடுத்துதல்
- உதவித்தொகை விண்ணப்பிக்க ஊக்கப்படுத்துதல்
- வரவு செலவு திட்டம் போடவும், மாணவ கடன்களுக்கு விண்ணப்பிக்கவும் உதவி செய்தல்
- தனிப்பட்ட சேமிப்புக்கு கற்றுக் கொடுத்தல்
- மாணவர்களை சஞ்சாயிகா திட்டத்தை ஆரம்பிக்க ஊக்குவித்தல்

**முதலீடுகள்:**

பல்வேறு முறைகளில் முதலீடு செய்யும் முறைக்கு முதலீடுகள் என அழைக்கப்படுகிறது. அதாவது பணம், நேரம், முயற்சிகள் அல்லது பிற மூலங்களில் ஏதேனும் ஒன்றினைப் பயன்படுத்தி முதலீடு செய்து அதற்கு மாற்றாக எதிர்காலத்தில் வருமானமாக திரும்பப்பெறுவதாகும்.

பல்வேறு முதலீட்டுக் கருவிகளில் முதலீடு செய்யலாம். அவைகள்

1. பங்கு வர்த்தகம்
2. பத்திரங்கள்
3. பரஸ்பர நிதி

4. பண்டங்களின் எதிர்காலம்
5. காப்பீடு
6. ஆண்டுத்தொகை
7. வைப்பு கணக்கு அல்லது வேறு பல பத்திரங்கள் அல்லது சொத்துக்கள்

எந்த ஒரு முதலீட்டுக் கருவிகளிலும் முதலீடு செய்யும் பொழுது சில இடர்பாடுகள் ஏற்பட்டு பணத்தை இழக்கும் நிலை ஏற்பட்டாலும், அதே முதலீட்டின் மூலம் அதிகப் பணத்தை மீளவும் பெறமுடியும் என்பது உண்மையேயாகும். முதலீடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும் இயல்புடையது.

**பணம் மதிப்பிழப்பு:**
2016 நவம்பர் 8 ஆம் தேதி இந்தியாவில் இந்திய அரசாங்கம் கருப்பு பணத்திற்கு எதிராக அனைத்து ரூ 500 மற்றும் ரூ 1000 நோட்டுக்களை பண மதிப்பிழப்பு செய்வதாக அறிவித்தது.

**சேமிப்பு மற்றும் முதலீடுகள் - ஒப்பீடு:**

| ஒப்பீட்டின் அடிப்படை | சேமிப்பு | முதலீடு |
|---|---|---|
| பொருள் | சேமிப்பு என்பது தனிநபர் வருமானத்தில் நுகர்விற்காக பயன்படுத்தப்படாத ஒரு பகுதியேயாகும். | முதலீடு என்பது மூலதன சொத்துக்களில் நிதி முதலீடு செய்யும் செயல்முறையை குறிக்கிறது. |
| நோக்கம் | சேமிப்பு குறுகிய கால அல்லது அவசரகால தேவைகளை நிறைவேற்றும் | மூலதன உருவாக்கத்திற்கும், வருவாய்க்கும் முதலீடு உதவுகிறது. |
| இடர்பாடு | குறைந்த அல்லது புறக்கணிக்கப்பட்ட அளவு | மிக அதிகம் |
| வருவாய் | இல்லை அல்லது குறைவு | ஒப்பீட்டளவில் அதிகம் |
| நீர்மை நன்மை | அதிக நீர்மை | குறைந்த நீர்மை |

**கருப்பு பணம்:**
கருப்பு பணம் என்பது அரசாங்கத்திற்கு செலுத்தாத எந்தவொரு பணத்தையும் குறிக்கும். நாட்டின் ஒழுங்கு கட்டுபடுத்துகையில் சட்ட விரோதமாக சம்பாதிக்கும் பணம் அனைத்தும் கருப்பு பணமாகும். கருப்பு பண வருவாய்கள் வழக்கமாக மறைமுக பொருளாதார நடவடிக்கை மூலம் பணமாக பெறப்படுவதால் அதற்கு வரியில்லை.

குற்றவாளிகள், கடத்தல்காரர்கள், பதுக்குபவர்கள், வரி ஏய்ப்பவர்கள் மற்றும் சமுதாயத்தில் மற்ற சமூக விரோதிகள் மூலம் கருப்பு பணம் சேர்க்கப்படுகிறது. இந்தியாவில் சட்ட விரோதமாக சந்தையில் கருப்பு பணம் சம்பாதித்து அந்த வருமானத்திற்கு எந்த வரியும் செலுத்துவதில்லை. வெளிநாட்டு வங்கியில் இந்தியர்கள் வைப்புகளாக வைத்துள்ள மொத்த கருப்புப்பணத்தின் இருப்பைக் கண்டறிய முடியாது. நாட்டில் கருப்பு பணம் அதிகரித்து வருவதற்கான அடிப்படை காரணம் குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை இங்கு வழங்கப்படுவதில்லை.

**பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள்:**

1. இரட்டை பொருளாதாரம்
2. உண்மை அளவை குறைத்து மதிப்பீட செய்வது
3. வரி ஏமாற்றுதல் மூலம் அரசுக்கு வருவாய் இழப்பு
4. சமத்துவம் வலுவிழத்தல்
5. பணக்காரர் மற்றும் ஏழைகளிடையே இடைவெளி அதிகரித்தல்
6. ஆடம்பர நுகர்வு செலவு
7. உற்பத்தி முறையில் விலகல்
8. பற்றாக்குறை பணத்தை விநியோகித்தல்
9. சமுதாயத்தில் பொது ஒழுக்க நிலைகளின் வீழ்ச்சிகள்
10. உற்பத்தி மீதான விளைவுகள்

**கருப்பு பணத்திற்கு எதிராக சமீபத்திய நடவடிக்கைகள்**

1. இந்தியா மற்றும் பிற நாடுகளின் அழுத்தத்தினால் சுவிட்சர்லாந்து உள்ளூர் சட்டங்களில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தி சுவிஸ் வங்கி வெளிநாடுகளுக்கு உதவுகிறது.

2. உச்ச நீதி மன்றத்தின் வழிகாட்டுதலின் பேரில் கருப்பு பணத்தை கண்காணிக்க சிறப்பு விசாரணை குழு நியமிக்கப்பட்டது.

3. பண மதிப்பிழப்பு செய்யப்பட்டது.

**கருப்பு பணத்திற்கு எதிராக சில சட்டரீதியான கூட்டமைப்பு**

1. பண மோசடி நடவடிக்கை தடுப்புச் சட்டம் 2002.
2. லோக்பால் மற்றும் லோகாயுக்டா சட்டம்
3. ஊழல் தடுப்புச் சட்டம் 1988.
4. வெளிக் கொணரப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்து மசோதா (வரி விதித்தல்) – 2015.
5. பினாமி பரிவர்த்தனை தடுப்புச் சட்டம் 1988, 2016 ல் திருத்தப்பட்டது

ரியல் எஸ்டேட் (ஒழுங்குமுறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016.

9th Book

**அலகு – 3**

**பணம் மற்றும் கடன்**

**அறிமுகம்:**
இப்பாடம் பணத்தின் வரலாறு பற்றியும் அதன் செயல்பாடுகளைப் பற்றியும் கூறுகிறது. நம் நாட்டின் இந்திய ரிசர்வ் வங்கியின் பங்கினைப் பற்றி எடுத்துரைக்கிறது. அந்நியச் செலாவணி, பண விநியோகம், பல்வகைான கடனுதவிகள் போன்றவற்றையும், விளக்குகிறது. இவை மட்டுமின்றி, இக்காலத்தில் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம், வங்கிச் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் நடைபெற எவ்வாறு துணைபுரிகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறது.

மனிதர்களாகிய நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்களில் பெரும்பான்மையான பொருள்கள் பணத்தால் மதிப்பிடப்படுகின்றன. மக்களின் உழைப்பிற்கான ஊதியம், கூலி, சேவைக் கட்டணங்கள் முதலியன பணத்தின் மதிப்பில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் நாம் செலுத்தும் வரிகள், தீர்வைகள் ஆகியவையும் பணத்தின் மதிப்பிலேயே செலுத்தப்படுகின்றன. நம் வீட்டில் ஒவ்வொரு மாதமும் நமது பெற்றோர் அந்த மாதத்துக்கான செலவுகளை மதிப்பிடுவதைப் பார்த்திருப்போம். அப்போது இந்த மாத வருமானம் எவ்வளவு? எதிர்பார்க்கப்படும் செலவுகள் எவை? சேமிப்பு, வட்டி செலுத்த வேண்டியது எவ்வளவு? என்பதைப் பணத்தின் அடிப்படையில் கணக்கிடுவதைக் காணலாம்.

வீடு மட்டுமல்லாமல் ஒரு நாட்டின், மாநிலத்தின் நிதிநிலை அறிக்கைகள்கூட பணத்தின் அடிப்படையில்தான் தயாரிக்கப்படுகின்றன. அரசு மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், போன்றவைகூட தமது நிதிநிலையைப் பணத்தின் அடிப்படையில் கணக்கிடுகின்றன. இவ்வாறு பணம் என்பது நமது வாழ்வில் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது.

**பண்டமாற்று முறை:**
மனிதர்கள் எப்போதுமே பணத்தினைப் பயனப்படுத்தி வந்தார்களா என்று கேட்டால், இல்லை என்பதே பதில் ஆகும். அப்படியானால் மனித வாழ்வில் பணம் எப்போது எந்த வடிவில் அறிமுகமானது? அது எவ்வாறு காலப்போக்கில் புதிய வடிவங்கள் பெற்றது? என்பன குறித்து இப்பாடத்தில் அறிந்து கொள்ளலாம்.

பண்டைக் காலத்தில் மனிதர்கள் வேட்டையாடுபவர்களாகவும் உணவு சேகரிப்பவர்களாகவும் தமக்கான உணவைப் பெற்றனர். அவர்கள் குகைகள், காடுகளில் வாழ்ந்தனர். படிப்படியாக வேட்டையாடுவதற்காகவும் உணவு சேகரிப்பதற்காகவும் கருவிகளைக் கண்டுபிடித்தனர். தொடர்ந்து நெருப்பின் பயனையும் வேளாண்மை செய்யவும் கற்றுக்கொண்டனர். மண்ணைப் பயன்படுத்தித் தமக்கான வீடுகளைக் கட்டிக்கொண்டு, ஒரே இடத்தில் வாழத் தொடங்கினர். மேலும் மண்ணைப் பயன்படுத்தி மட்பாண்டங்களையும் தயாரித்தனர்.

வேளாண்மை மூலம் உற்பத்தி அதிகரித்ததால் கைவினைப் பொருள் தயாரிப்பதிலும் ஈடுபட்டனர். இவ்வாறு உபரியாக மீதமாகும் உணவுப்பொருள்களையும் தாங்கள் தயாரித்த மண்பாண்டம் போன்ற பொருள்களையும் அவை தேவைப்படும் மனிதர்களுக்குப் பரிமாற்றம் செய்தனர். எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயத்திடம் அதிக உணவுப்பொருட்கள் இருந்தால், அவற்றை மண்பாண்டங்கள் உபரியாக வைத்திருப்பவர்களிடம் பண்ட மாற்றம் செய்தனர். அதேபோல, ஒரு பகுதியில் அதிகம் உற்பத்தியாகும் தானியம் இன்னொரு பகுதியில் அதிகம் காணப்படும் விளைபொருளுக்குப் பண்டமாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு மண்டமாற்றம் செய்யப்பட்ட பொருள்களே வணிகத்தின் முதல் வடிவம் என்று கூறலாம்.

**நாணங்கள்:**
நாகரிகங்கள் உருவான அனைத்துப் பகுதிகளிலும் பண்டமாற்று முறை செல்வாக்குப் பெற்றிருந்தது. ஒரே நாகரிகத்திற்குள் மட்டுமல்லாமல் வேறு வெறு நாகரிகங்களுக்கு இடையிலும் பண்டமாற்று முறையில் பரிமாற்றம் நிகழ்ந்துள்ளது. இதுவே பன்னாட்டு வணிகத்தின் முதல் வடிவம் எனலாம்.

சிந்து வெளி நாகரிகக் காலகட்டத்தில காணப்பட்ட பொருள்கள் எகிப்து,ஈராக் (மெசபடோமியா) பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்டன.

இவ்வாறு பொருள்களைப் பண்டமாற்றம் செய்வதிலும் காலப்போக்கில் சிக்கல்கள் உருவாகின. எடுத்துக்காட்டாக, தமக்குத் தேவையான பொருளுக்குப் பண்டமாற்றம் செய்வதில் சிக்கல் ஏற்பட்டது. ஒருவரிடம் நெல் உள்ளது. அவருக்கு மண்பாண்டம் தேவை. ஆனால் மண்பாண்டம் வைத்திருந்திருந்தவருக்கு நெல் தேவையில்லை. இவ்வாறு பலருக்கும் தமது தேவைகள் நிறைவேறவில்லை. பண்டமாற்றுப் பொருள்களின் அளவு மற்றும் மதிப்பை கணக்கிடுவதில் பிரச்சனைகள் இருந்தன.

இப்பிரச்சனைகளுக்கு விடை காண பண்டங்களை மாற்றிக்கொள்ளப் பொதுவான மதிப்புள்ள ஒரு பொருளை நிர்ணயம் செய்தனர். இது பெரும்பாலும் உலோகமாக இருந்தது. ஆகவே இந்த உலோகங்களே முதன் முதலில் பயன்படுத்தப்பட்ட பணம் எனலாம். உலோகம் அப்போது அரிய பொருளாகவும் நீண்ட காலம் பராமரிக்கக்கூடியதாகவும் மதிப்பு மாறாததாகவும் இருந்தது, இதற்குக் காரணமாக இருக்கலாம்.

| |
|---|
| தனது அரசாட்சியில், ஷெர்ஷா சூரி (1540 – 1546) குடிமக்களுக்கும், இராணுவத்திற்குமான ஒரு புதிய நிர்வாக முறையை அமைத்தார். அவர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 178 கிராம் எடை கொண்ட வெள்ளி நாணயம் ‘ருபியா’ என்றழைக்கப்பட்டது. அந்நாணயம் முகலாயர், மராத்தியர் மற்றும் ஆங்கிலேயர் காலம் வரை புழக்கத்தில் இருந்தது. |

தங்கம், வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் இவ்வாறு பண்டமாற்று முறைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டன. இவை புராதன பணம் என்றும் அனுமதிக்கப்பட்டனர். மேலும், பிற்காலச் சோழர்கள் ஆட்சியின்போது தமிழக வணிகர்களின் ஏற்றுமதித் தேவையை ஈடுசெய்ய சிறு வணிகர்களுக்கும் உற்பத்தியாளர்களுக்கும் கடன் உதவி அளித்ததற்கான வரலாற்றுச் சான்றுகளும் காணப்படுகின்றன.

**இயற்கையான பணம்:**
படிப்படியாகத் தங்கம், வெள்ளி ஆகிய உலோகங்கள் உலகம் முழுவதும் மதிக்கப்படும் உலோகங்களாக ஏற்கப்பட்டன. இதையொட்டி, இந்த ஒரு உலோகங்கள் நாடுகளுக்கு இடையிலான பண்டமாற்றத்தில் பொது மதிப்பீடாகப் பயன்படுத்தப்பட்டன. இவையே இயற்கையான பணம் என்றும் அழைக்கப்பட்டன.

**காகிதப்பணம்:**
நாளடைவில் இயற்கையான பணத்திலும் சிக்கல்கள் உருவாயின. வணிகத்தின் விரிவாக்கத்துக்கு எற்ப தங்கம் மற்றும் வெள்ளி இருப்பு இருப்பதில்லை. அதே நேரத்தில் சுரங்கங்களிலும் தங்கம், வெள்ளி வரம்புக்குள் தான் இருந்தன. இதனால் குறைந்த மதிப்பு கொண்ட உலோகங்களைக் கொண்டு நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. இவை சிறிய மதிப்பிலான பொருள்கள் வாங்கவும் விற்கவும் பயன்படுத்தப்பட்டன. ஏழை மக்களின் பணமாக இவை பயன்படுத்தப்பட்டன.

இதனால், இந்தக் குறைந்த மதிப்பு நாணயங்கள் அதிகமாகத் தயாரிக்கப்பட்டன. இதன் அடுத்த கட்டமாகத்தான் காகிதப் பணம் புழக்கத்துக்கு வந்து. இந்த உருவமற்ற பணமும் வங்கிகளில் அதனைச் சேமிக்கும் வழக்கமும் வெகுவாகப் புழக்கத்திற்கு வந்தன. அப்போது உலகம் முழுவதும் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் இதற்கான காரணங்களில் ஒன்று.

பணம் என்பது ஒவ்வொருவரின் வாழ்விலும் பிரிக்க முடியாத பகுதியாக மாறிவிட்டது. உலகப் பொருளாதாரச் சூழலில் பணம் பல வடிவங்களில் மாறியுள்ளது. மின்னணு உலகில் பணப்பரிமாற்றங்கள் பல முறைகளில் நடைபெறுகின்றன.

**மின்னணுப் பரிமாற்றங்கள்:**
வங்கிச் சேமிப்பில் உள்ள பணத்தை எடுப்பதற்கு நேரடியாக வங்கிக்குச் சென்று படிவம் நிரப்பி அல்லது காசோலை வழங்கி, பெறுவதற்குப்பதிலாக, பணம் எடுக்கும் இயந்திரம் மூலம் தேவையான பணத்தை எடுக்க தானியங்கி பணம் வழங்கும் அட்டை பயன்படுகிறது. இதன் மூலம் ஆங்காங்கு நிறுவப்பட்டுள்ள பணம் எடுக்கும் இயந்திரம் மூலம் எந்த நேரமும் நமக்குத் தேவையான பணத்தினை நமது கணக்கிலிருந்து நாம் எடுத்துக்கொள்ளலாம். இதேபோல வங்கிக்குச் செல்லாமலேயே நமது கணக்கில் பணம் செலுத்தும் வசதி சில வங்கிகளில் உள்ளது.

இதேபோல முன்னதாகப் பணம் பெற்று, பின்னர் செலுத்தும் வகையில் கடன் அட்டை (Credit card) பயன்படுத்தப்படுகிறது.

**ரிசர்வ் வங்கியின் பங்கு:**
பணப்பரிமாற்றத்தைப் பராமரிக்கும பொறுப்பும் கண்காணிக்கும் கடமையும் ஓர் அரசுக்கு இருக்கிறது. பொதுவாகப் பணம் பதுக்கி வைக்கப்படுவது பொருளியலில் தவிர்க்கப்பட வேண்டும். இதனால் வங்கிகளில் பணம் சேமிக்கப்படுகிறது.

பணப்பரிமாற்றம் செய்வதற்குக் காசோலை (Cheque) அல்லது கேட்பு வரைவோலை (Demand Draft) போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கு மாற்றாக இணைய வழி பரிமாற்றங்கள் தற்போது நடைமுறையில் உள்ளன. இதன் மூலம் நினைத்த நேரத்தில் உலகின் எந்த மூலையில் இருப்பவருக்கும் நொடியில் பணப்பரிமாற்றம் செய்யலாம்.

இதேபோல அலைபேசிமூலமும் மின்னணு பரிமாற்றம் செய்யும் தொழில்நுட்பம் பரவலாகப் பயன்பாட்டில் உள்ளது.

வங்கிகளில் சேமிக்கப்படும் பணத்தில் பெரும் பங்கு தொழில் வளர்ச்சிக்கும் பொருளியல் வளர்ச்சிக்கும் ஏழைகளின் நலனுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

இந்தியாவில் அனைத்து வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளதை (1969) அறிவோம். இந்தியாவில் பணப்புழக்கத்தை ஒழுங்குபடுத்தும் பணியினை இந்திய ரிசர்வ் வங்கி மேற்கொள்கிறது.

**பணத்தின் வரலாறு:**

இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1, 1935 முதல் செயல்பட தொடங்கியது. 1937 லிருந்து நிரந்தரமாக மும்பையில் இயங்கி வருகிறது. இது 1949 இல் நாட்டுடைமையாக்கப்பட்டது. அச்சடிக்கப்பட்டப் பணத்தில் 85% புழக்கத்தில் விடப்படுகிறது. ஆகஸ்ட் 2018 நிலவரப்படி இந்தியாவில் ரூபாய் 19 லட்சம் கோடி மதிப்பிலான பணம் புழக்கத்தில் உள்ளது.

டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் ‘பணத்தின் சிக்கலும் அதன் தீர்வும்’(The problem of the rupee and its solution) என்ற ஆராய்ச்சிக் கட்டுரையின் அடிப்படையில் தான் இந்திய ரிசர்வ் வங்கியின் அடிப்படைச் சட்டம் 1934 ல் உருவாக்கப்பட்டது.

**பணம் - விலைத் தொடர்பு:**
பணத்துக்கும் பொருள்களின் விலைக்கும் நெருக்கமான தொடர்பு உள்ளது. ஏனெனில் தற்போது உலகில் தயாரிக்கப்படும் பொருள்களில் 90 விழுக்காடு விற்பனை அல்லது சேவைத்தொழிலை இலக்காகக் கொண்டே தயாரிக்கப்டுகின்றன. வேளாண்மையிலும் சொந்தத் தேவைக்காக விளைவிப்பதை விட பணப் பயிர்களை அதிகம் உற்பத்தி செய்யப்படுவது சந்தை மற்றும் பணத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துவதாக உள்ளது.

பணத்துக்கும் விலைக்கும் உள்ள தொடர்பு பணவியல் கொள்கையோடு தொடர்புடையது.
பண விநியோக வளர்ச்சிக்கும் நீண்ட கால விலை வீழ்ச்சிக்கும் இடையிலான நெருங்கிய உறவினை நாம் காணமுடியும். ஒரு நாட்டின் பொருளாதார நிலைத்தன்மையில் விலைக் கட்டுப்பாட்டுக்கு முக்கியப் பங்களிப்பு உள்ளது. இந்தியாவில் ரிசர்வ் வங்கி இதனைக் கண்காணித்து வருகிறது.
நாடுகளுக்கு இடையிலான பணம் செலாவணி என அழைக்கப்படுகிறது. இந்தியாவின் செலாவணி ரூபாய் என்று அழைக்கப்படுகிறது. உள்ளநாட்டில் அன்னிய நாட்டுச் செலாவணி வெளிநாட்டுச் செலாவணி என அழைக்கப்படுகிறது.

உலக நாடுகளுக்கு இடையிலான செலாவணி அமெரிக்க டாலர் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. இந்த மதிப்பு நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. உலக வணிகத்தின் பெரும்பகுதி அமெரிக்க டாலர் மதிப்பிலேயே நடைபெறுகிறது.

**பணத்தின் செயல்பாடுகள்:**
பண்டமாற்று முறையினால் உருவாகும் சிக்கல்களுக்கு மாற்றாக பணத்தின் வரவு பெரிதும் உதவி வருகிறது. பணம் என்பது ஒரு பரிமாற்ற ஊடகமாகவும், ஒரு கணக்கின் அலகாகவும் மதிப்புச்

சேமிப்பாகவும் மாறுபடும் பண வழங்கீடுக்கான தரப்படுத்தலாகவும் செயல்பட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| நாடு | செலாவணியின் பெயர் |
|---|---|
| இந்தியா | ரூபாய் |
| இங்கிலாந்து | பவுண்டு |
| ஐரோப்பிய ஒன்றியம் | யூரோ |
| கனடா | டாலர் |
| ஜப்பான் | யென் |
| சீனா | யுவான் |
| சவுதி அரேபியா | ரியால் |
| ஆஸ்திரேலியா | டாலர் |
| மலேசியா | ரிங்கிட் |
| பாகிஸ்தான் | ரூபாய் |
| இலங்கை | ரூபாய் |

**பரிமாற்ற ஊடகம்:**
ஒரு நாட்டில் அனைத்துப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்குப் பணம் தடையின்றி ஏற்கப்பட வேண்டும்.

**கணக்கு அலகு:**
ஒரு நாட்டில் அனைத்து நுகர்பொருள்கள், தயாரிப்புகள், சேவைகள் என அனைத்துக்குமான மதிப்பினைக் கணக்கிடுவதில் பணம் பொதுவான, தரப்படுத்தப்பட்ட அலகாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு புத்தகத்தின் விலை 50 என்றால் அப்புத்தகத்தின் விலை 50 பண அலகுகளுக்கு இணையானது என்று பொருள். ஒரு நாட்டில் நடைபெறும் நிதி பரிவர்த்தனைகளை அளவிடவும் கணக்குகளாக பராமரிக்கவும் பணம் பயன்படுகிறது.

**மதிப்பீட்டினைச் சேமித்தல்:**
பணத்தினைச் சேமிப்பதன் மூலம் எதிர்காலத்துக்கான வாங்கும் ஆற்றலைச் சேமிப்பதாகும்.

**கடன்:**
விவசாயிகள் தங்களுக்குத் தேவையான விதை, இடுபொருள்கள் மற்றும் செலவுகளுக்காக பருவகாலங்களின் போது கடன் பெறுவதைக் காணலாம். அதேபோல சிறு தொழில்களில் ஈடுபடுபவர்கள், வணிகர்கள் தங்கள் தேவைகளுக்குக் கடன் பெறுகின்றார்கள். பெரிய தொழில் நிறுவனங்கள் கூட தங்கள் புதிய திட்டங்களுக்காகக் கடன் பெறுகின்றன.

**கடன் கிடைக்கப்பெறும் நிறுவனங்கள்:**

- முறைப்படி நிதி நிறுவனங்களான நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், தனியார் வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள்.
- முறைசாரா நிதி நிறுவனங்கள்.
- சுய உதவிக்குழுக்கள் மூலம் பெறப்படும் நுண்கடன்கள் என மூன்று வழிகளில் கடன் பெறப்படுகின்றன.

நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரை கடனுக்காக வட்டி குறைவு. ஈடு வைக்கப்படும் பொருளுக்கான பாதுகாப்பு அதிகம்.

**முறைசாரா நிதி நிறுவனங்கள்:**
முறைசாரா தனியார் நிறுவனங்களை வாடிக்கையாளர்கள் அணுக எளிதாக இருப்பதும் ஏதுவாக உள்ளதும் சாதகமான அம்சங்களாகக் கருதப்படுகிறது. அதே சமயத்தில் அதிக வட்டி,ஈடு வைக்கப்படும் பொருளின் பாதுகாப்பு மற்றும் வசூலிக்கும் முறைகள் ஆகியவற்றில் பல சிக்கல்கள் காணப்படுகின்றன.

குறிப்பிட்ட பகுதியில் வாழ்பவர்கள் அல்லது குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடுபவர்கள் குழுவாக அமைந்து சிறு சேமிப்பில் ஈடுபடுகின்றனர் இவர்கள் சுய உதவி குழுக்கள் எனப்படுகின்றனர்.

இவ்வாறு செயல்படும் சுய உதவிக் குழுக்களுக்கு அரசு வங்கிகள் கடனுதவி அளிக்கின்றன. சுய உதவிக்குழுக்கள் நடைபாதை வியாபாரிகள், மீனவர்கள், குறிப்பாகப் பெண்கள் மற்றும் விளிம்பு நிலை மக்களுக்குப் பயன் அளிப்பதாக உள்ளது.

தமிழ்நாட்டில் 10,612 வங்கிக் கிளைகள் உள்ளன. 2017 – 2018 நிதியாண்டில் ஏறத்தாழ 15 லட்சம் கோடி ரூபாய் பணப்பரிமாற்றம் நடைபெறுகிறது.

**இந்தியாவில் பணம் எவ்வாறு அச்சிடப்படுகிறது?**

இந்தியாவில் 1917-ல் தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935-ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்து. அதன்பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940-ல் மீண்டும் இந்தியாவில் 1917-ல்தான் முதன் முதலில் ஒரு ரூபாய் மற்றும் இரண்டு ரூபாய் நோட்டுகள் தயாரித்து வெளியிடப்பட்டன. 1935-ல் பணப் பொறுப்பு அனைத்தும் இந்திய ரிசர்வ் வங்கி கைக்கு வந்தது. அதன்பிறகு 500 ரூபாய் நோட்டு பணத்தை அறிமுகப்படுத்தியது. 1940-ல் மீண்டும் ஒரு ரூபாய் நோட்டுளை வெளியிட்டது. 1947-ம் ஆண்டுவரை ஆறாம் ஜார்ஜின் உருவம் பொறித்த பணமே புழக்கத்தில் இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு இந்திய அரசால் நோட்டுகள் வெளியிடப்பட்டன.

ஆங்கிலேய அரசு, 1925ல் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள நாசிக்கில் ஒரு அச்சகத்தை அமைத்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ரூபாய் நோட்டுகளை அச்சடிக்க தொடங்கியது. மத்தியப்பிரதேசத்திலுள்ள தேவாஸில் 1974-ல் ஓர் அச்சகம் தொடங்கப்பட்டது. இந்த இரு அச்சகங்களைத் (Security Printing and Minting Corporation of India Ltd),) தவிர, 1990 களில் கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூரிலும், மேற்கு வங்காளத்திலுள்ள சல்பானியிலும் ரூபாய் மற்றும் வங்கிகள் சம்பந்தப்பட்ட ஆவணங்களை அச்சடிக்க மேலும் இரு அச்சகங்களை இந்திய ரிசர்வ் வங்கி தொடங்கியது.

எவ்வளவு பணம் அச்சடிக்க வேண்டும் என்பதையும், எப்படிப் பாதுகாப்பாக உாயி இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் இந்திய ரிசர்வ் வங்கியே முடிவு செய்கிறது. இங்கு சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். இலங்கை, பூடான்,ஈராக், ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த நாட்டுப் பணம் இந்த அச்சகங்களில் அச்சடிக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன.

பத்தாயிரம் ரூபாய் மதிப்புடைய நோட்டுகள் அச்சடிக்க இந்திய ரிசர்வ் வங்கிக்கு அதிகாரம் இருந்தாலும், தற்போது அதிகபட்சம் இரண்டாயிரம் ரூபாய் மதிப்பு வரையிலான பணத்தை மட்டுமே அச்சடிக்கிறது.

**10th Book**

**அலகு – 1**

## மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் அதன் வளர்ச்சி : ஓர் அறிமுகம்

**அறிமுகம்:**

நீங்கள் நீண்ட காலத்திற்க்கு பிறகு, வெளி நாட்டில் வசிக்கும் ஒரு நல்ல நண்பருடன் மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்கிறீர்கள். அப்போது நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்கிறார். "என்னுடைய உடல் ஆரோக்கியமாக உள்ளது, மேலும் நான் படிப்பில் முன்னேறிக் கொண்டு இருக்கிறேன், அதனால் நான் நன்றாக இருக்கிறேன் நன்றி" என்று பதில் அளிக்கலாம். அல்லது "மிக நன்றாக இல்லை. என்னுடைய ஆரோக்கிய பிச்சனைகளுக்கு சிகிச்சைப் பெற வேண்டியுள்ளது. மேலும் என்னுடைய படிப்பை அது மிகவும் பாதித்துள்ளது" என உங்கள் பதில் இருக்கலாம்.

"இந்தியா எப்படி செயல்படுகிறது? இந்த கேள்விக்கு உங்கள் பதில் மிகுந்த சவாலாக இருக்கும். ஏனென்றால், நாட்டின் மொத்த நிலைமையை அவர் கேட்கிறார். அதிர்ஷ்டவசமாக, பொருளாதார வல்லுநர்கள் உங்களுடைய நண்பருடைய கேள்விக்கு பதிலளிக்க பல்வேறு நடவடிக்கைகளை வழங்கியுள்ளனர். இது GDP அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தி மிக பரவலாக பயன்படுத்தக் கூடிய ஒன்றாகும். "இந்தியா நன்கு செயல்படுகிறது" அல்லது "நாம் விரும்புவது போல் இந்தியா நன்றாக செயல்படவில்லை" என மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பற்றி தெரிந்துக் கொள்ளவும் ஒரு வழியாகும்.

### GDP யின் வரையறை / இலக்கணம்:

இந்திய எவ்வாறு செயல்படுகிறது என்பதனை GDP விளக்குகிறது அதனால்,GDP என்றால் என்ன என்பதைப் பற்றி முதலில் நீங்கள் புரிந்துக் கெள்ள வேண்டும்.

ஹோட்டலில் இரண்டு வகையான பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கலாம். என்று ஒரு பொருளியல் வல்லுநர் கூறலாம். வெளிப்படையாக இட்லி மற்றும் தேனீர் உற்பத்தி செய்யப்பட்டு இருக்கிறது. அவைகளை நீங்கள் தொடக்கூடியவை, பார்க்கக்கூடியவை மற்றும் தொட்ட உணரக்கூடியவைகளாகும். தொடக்கூடிய பொருள்களை "பண்டங்கள்" என்று பொருளியல் அறிஞர்கள் அழைக்கின்றனர். இந்த பண்டங்கள் இலவசம் அல்ல, ஏனெனில் அதற்கு பணம் செலுத்த வேண்டும்.

தொடக்கூடிய பொருட்களை. பண்டங்கள் என்று அழைத்தாலும், ஏதேனும் உற்பத்தி செய்யப்பட்டு இருந்தாலும் நீங்கள் அதை உணர முடியாது. சமையல்காரர்கள் செய்து முடித்த வேலை மற்றும் அந்த உணவைப் பரிமாறும் மக்கள், சமையல் மற்றும் சேவை நடவடிக்கைகளை பண்டங்கள் போல் யாரும் தொட்டு உணரக் கூடியது அல்ல. ஆனால், நீங்கள் உணவினை உண்டு அனுபவிக்கலாம். பொருளியல் வல்லுநர்கள் இந்த நடவடிக்கையை "பணிகள்" என்று அழைக்கின்றனர். பண்டங்கள் பொருத்தவரை, இவைகளும் மற்றும் பிற பணிகளும் இலவசம் அல்ல, ஏனெனில் அதற்கு பணம் செலுத்த வேண்டும்.

ஒவ்வொரு நாளும் ஹோட்டலில் என்ன நடக்கிறதோ அதே போல் நாடு முழுவதும் நடக்கிறது. பண்டங்கள் மற்றும் பணிகள் உற்பத்தி செய்யப்பட்டு அதனை நாம் பணம் செலுத்தி பெறுகின்றோம். இவற்றையே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவிடுகிறது.

**மொத்த உள்நாட்டு உற்பத்தியை கீழ்க்கண்டவாறு வரையறுக்கலாம்:**

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) என்கிறோம்.

இந்த வரையறையில் ஒவ்வொரு பகுதியும் முக்கியமானதாகும்.

பண்டங்கள் மற்றும் பணிகள்: பண்டங்கள் என்பது தொடக் கூடிய பொருளும், பணிகள் என்பது தொட்டு உணர முடியாததுமான நடவடிக்கைகள் என்று இப்போது உங்களுக்கு தெரியும்.

அங்காடி மதிப்பு: அங்காடியில் விற்கக் கூடிய பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை.

ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் பணிகளை அளவிடுவது மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும் (GDP). இதற்கான உற்பத்தி செய்கின்ற அனைத்து பண்ட பணிகளையும் சேர்க்க வேண்டும். எனினும், ஒரு நாடு அரிசி, காலணிகள், ரயில்கள், பால், கடிகாரம், புத்தகம் மற்றும் மிதிவண்டி போன்ற பரந்தபட்ட பொருட்களை உற்பத்தி செய்கிறது. அளவை மட்டுமட கணக்கில் எடுத்துக் கொண்டால் இதை சேர்க்க அர்த்தமுள்ள வழிகள் ஏதுமில்லை. எடுத்துக்காட்டாக, எவ்வாறு 1000 லிட்டர் பாலுடன் 500 கடிகாரத்தை சேர்க்க முடியும்? இதைப்போல பணிகளின் அளவை சோக்க அர்த்தமுள்ள வழிகள் இல்லை. மருத்துவர்களின் பணிகள், காவலர்கள், தீயாணைப்பு படை, ஆசிரியர்கள், பேருந்து ஒட்டுநர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்கள் போன்ற பரந்த பணிகள் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஒரு வகைப் பண்டத்தின் அளவை மற்றொரு வகையான பண்டத்தின் அளவுடனோ அல்லது ஒரு வகை பணியை மற்றொரு வகையான பணிவுடனோ சேர்க்க முடியாது. கட்டாயமாக பண்டங்கள் உற்பத்தியையும், பணிகள் உற்பத்தியையும் கூட்டுவதற்கு எந்த ஒரு விவேகமான வழியுமில்லை. எப்படி ஒரு நாட்டில் உற்பத்தி செய்த பாலுடன், ஆசிரியர் பணியை சேர்க்க முடியும்.

நம் நாட்டில் இந்திய செலாவணியான ருபாயில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளை அளவிடுவதற்கு மொத்த உள்நாட் உற்பத்தியை பயன்படுத்தி இம்மாதிரியான பிரச்சனைகள் தீர்க்கப்படுகிறது. அங்காடியில் விற்கும் பண்டங்கள் மற்றும் பணிகளை பண மதிப்பால் அளவிடலாம். எந்த ஒரு பண்ட, பணிகள் அங்காடியின் மதிப்பில் சேர்க்கப்படுகிறதோ அது மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும். (GDP).

இது எதைக் குறிக்கிறது என்றால், ஒரு பண்டத்தையோ அல்லது பணியையோ அங்காடியில் விற்கவில்லையெனில் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்ப்பதில்லை. எடுத்துக்காட்டாக ஒரு கணினி மையத்தில் ஒரு கையெழுத்து பிரதியை தட்டச்சு செய்ய நீங்கள் ரூ 50 கொடுக்கிறீர்கள் என வைத்துக் கொண்டால், அதன் பணியை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்திடலாம். ஏனெனில் அது அங்காடியில் விற்கப்படுகிறது. நீங்களே அந்த கையெழுத்து பிரதியை தட்டச்சு செய்தால், அந்த தட்டச்சு செய்யும் பணியை மொத் உள்நாட்டு உற்பத்தியில் சேர்ப்பதில்லை. ஏன் எனில் நீங்கள் அங்காடியில் விலை கொடுத்து அதை வாங்கவில்லை என்பதேயாகும்.

**இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்:**

"இறுதி நிலை பண்டங்கள் மற்றும் பணிகள்" என்பது நுகர்வுக்காக அல்லது பயன்பாட்டுக்காக உள்ள பண்டங்கள் மற்றும் பணிகள் ஆகும். இது மற்ற பண்ட பணிகளின் ஒரு பகுதியாக அமையாது. எந்த பண்டங்கள் மற்றும் பணிகள் மற்றொரு பண்ட பணிகளை உற்பத்தி செய்ய பயன்படுகிறதோ மற்றும் மற்ற பண்ட பணிகளை உற்பத்தி செய்ய ஒரு பகுதியாகிறதோ அதை "இடை நிலை பண்டங்கள்" என்று டைலர் கோவன் மற்றும் அலெக்ஸ் டாபர்ராக் போன்ற பொருளியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இறுதிநிலை பண்டங்கள் மட்டும் சேர்க்கப்படுகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தி கணக்கிட இடைநிலை பண்டங்களை கணக்கில் எடுப்பதில்லை. ஏனெனில் அவற்றின் மதிப்பு இறுதிநிலை பண்டத்தில் சேர்க்கப்படுகிறது. ஆகவே இடை நிலை பண்டத்தின் மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்தால், அதன் விளைவை "இரு முறை கணக்கிடுதல்" என அழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஹோட்டலில் வாங்கும் ஒரு கோப்பை தேனீர் (Tea) இறுதிநிலை பண்டமாகும். ஏனெனில் இது நுகரப்படக்கூடியது. வேறு எந்த பொருளின் பகுதியாக இருக்காது. ஆகவே ஒரு கோப்பை தேனீரின் அங்காடி மதிப்பை இறுதிப் பண்டமாக இருப்பதால் அதை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்த்துள்ளனர். தேனீரில் கலக்கப்பட்ட சர்க்கரை ஒரு இறுதிநிலை பண்டம் இது தேனீர் உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்டு தேனீரின் ஒரு பகுதியாக இருக்கிறது. ஒரு கோப்பை

தேனீரின் விலை 10 என்றால் அதில் சர்க்கரையின் மதிப்பு 2 – ஆகவே ஒரு கோப்பை தேனீரின் விலையில், ஒரு தேக்கரண்டி சர்க்கரையின் விலை 2- சேர்க்கப்பட்டுள்ளது. சர்க்கரையின் மதிப்பை GDP –யில் கூட்டினால் ஒரு தேக்கரண்டி சர்க்கரை, மீண்டும் ஒரு கோப்பை தேனீர் என இருமுறை கணக்கிடப்படும். இதை "இரு முறை கணக்கிடுதல்" என்பர். இதை தவிர்ப்பதற்கு இடைநிலை பண்டமான சர்க்கரையை GDP யில் சேர்ப்பதில்லை.

கடைகளில் தேனீர் தயாரிக்கபயன்படுத்தப்படும் பாத்திரங்களின் சந்தை மதிப்பை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சேர்க்கப்பட வேண்டுமா? பாத்திரங்கள் இறுதிநிலைப் பண்டங்கள் அல்ல, ஆனால் தேனீர் தயாரிக்க இது ஒரு இடைநிலை பண்டமாக கருதப்பட்டு GDP யில் சேர்க்கக் கூடாது. ஒரு கோப்பை தேனீரில் பாத்திரங்கள் இறுதி நிலை பண்டத்தின் ஒரு பகுதியாக அமையாது. அதன் காரணமாக சர்க்கரையை மட்டும் GDP யில் சேர்க்க வேண்டும்.

**நாட்டு வருமானம்:**

நாட்டு வருமானம் என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பாகும். பொதுவாக நாட்டு வருமானத்தை மொத்த நாட்டு உற்பத்தி (GNP) அல்லது நாட்டு வருமான ஈவு எனப்படுகிறது.

**நாட்டு வருமானத்தை அளவிட தொடர்புடைய பல்வேறு கருத்துகள்:**

1. **மொத்த நாட்டு உற்பத்தி (GNP):**
   மொத்த நாட்டு உற்பத்தி என்பது அந்தநாட்டு மக்களால் ஒரு வருடத்தில் (ஈட்டிய வருமானம்) உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடுகளின் (பண்டங்கள் + பணிகள் மதிப்பைக் குறிக்கும். வெளிநாட்டு முதலீடு மூலம் ஈட்டிய இலாபமும் இதில் அடங்கும்.

   GMP = C + I + G + (X – M) + NFIA

   C -

   I -

   G -

   X – M –

   NFIA -

2. **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP):**
   ஒரு ஆண்டில் நாட்டின் புவியியல் எல்லைக்குள் உள்ள உற்பத்தி காரணிகளினால் உற்பத்தி செய்யப்பட்ட வெளியீடு (பண்டங்கள் + பணிகள்) களின் மொத்த மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தியாகும்.

3. **நிகர நாட்டு உற்பத்தி (NNP):**
   மொத்த நாட்டு உற்பத்தியிலிருந்து மூலதன தேய்மானத்தின் மதிப்பை நீக்கிய பின் கிடைக்கும் பண மதிப்பு நிகர நாட்டு உற்பத்தியாகும்.

நிகர நாட்டு உற்பத்தி (NNP) = மொத்த நாட்டு உற்பத்தி (GNP)– தேய்மானம்.

# அலகு-4

## அரசாங்கமும் வரிகளும்

**அறிமுகம்:**

ஒரு நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அரசாங்கத்தால் வரி விதிக்கப்படுகிறது. அரசின் வருமானம் நேர்முக மற்றும் மறைமுக வரிகளைச் சார்ந்து உள்ளது. நேர்முக வரி தனி நபரின் வருமானத்திலும், மற்றும் மறைமுக வரி பண்டங்கள் மற்றும் பணிகள் மீதும் விதிக்கப்படுகின்றன. இதன் மூலம் அரசாங்கம் அதன் "நிதி ஆதாரங்களை" திரட்டுகிறது.

**வளர்ச்சிக் கொள்கைகளில் அரசாங்கத்தின் பங்கு:**

இந்தியாவில் மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி ஆகிய மூன்று நிலையிலான அரசாங்கங்கள் மக்கள் மற்றும் சமூகத்தின் நலனுக்காக பல்வேறு செயல்பாடுகளைச் செய்து வருகின்றன. இவற்றின் பணிகள் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் ஏழு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. **பாதுகாப்பு (அ) இராணுவம்:**

எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாப்பது இராணுவத்தின் அத்தியாவசியப் பணியாகக் கருதப்படுகிறது. பாதுகாப்பு முறைகளில் தரைப்படை, கப்பல்படை மற்றும் விமானப்படை ஆகிய மூன்று சேவைகள் உள்ளது. நம் அனைவரக்கும் தெரிந்த ஒன்றாகும். பாதுகாப்புப் படைகளை உருவாக்குவதற்கும், பராமரிப்பதற்கும் மத்திய அரசாங்கமே பொறுப்பானதாகும்.

2. **அயல்நாட்டுக் கொள்கை:**

இன்றைய உலகில், நாம் அனைத்து உலக நாடுகளுடன் நட்பான உறவைப் பராமரித்தல் அவசியமானதாகும். உலக அமைதிக்காக இந்தியா உறுதி ஏற்றுள்ளது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்வதன் மூலமும், மூலதனம் மற்றம் உழைப்பைப் பரிமாற்றம் செய்வதன் மூலமும் நாம் நல்ல பொருளாதார உறவினை பராமரிக்க முடியும். இந்த சேவையை மத்திய அரசாங்கம் வழி வழங்குகிறது.

3. **அவ்வப்போது தேர்தல்களை நடத்துதல்:**

இந்தியா ஒரு ஜனநாயக நாடு, நாம் நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத்திற்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றோம். மத்திய அரசு சட்டங்களையும், நிர்வாக அமைப்புகளையும் உருவாக்கி இந்த இரண்டு சட்ட அமைப்புகளுக்கும் தேர்தல்களை நடத்துகிறது. இதேபோல், மாநில அரசுகள் உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை மாநிலத்திற்குள் நடத்துகிறது.

4. **சட்டம் மற்றும் ஒழுங்கு**:

மத்திய மற்றும் மாநில அரசுகள் நமது உரிமைகள், சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், நமது பொருளாதாரம் மற்றும் சமூகத்தை ஒழுங்குபடுத்துவதற்கும் ஏராளமான சட்டங்களை இயற்றுகின்றன. மத்திய அரசு தேசிய, மாநில மற்றும் கீழ் நிலைகளில் உள்ள நீதிமன்றங்களை உள்ளடக்கிய ஒரு துடிப்பான நீதி அமைப்பின் மூலம் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக அமைத்துள்ளது. மேலும், அந்தந்த மாநிலங்களில் காவல் துறையை நிர்வகிக்கும் பொறுப்பை மாநில அரசுகள் ஏற்றுக் கொள்கின்றன.

5. **பொது நிர்வாகம் மற்றும் பொதுப்பண்டங்களை வழங்குதல்:**

அரசாங்கம் பொதுவாக பல்வேறு துறைகள் மூலம் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் நிர்வகிக்கிறது. வருவாய் துறை, பள்ளிகள், மருத்துவமனைகள், கிராம வளர்ச்சி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி போன்றவைகள் எடுத்துக்காட்டுகளாகும். மத்திய மற்றும் மாநில அரசாங்கத் துறைகளின் அதிகார வரம்புகளின் பட்டியல் பொதுத் தளத்தில் கிடைக்கிறது. உள்ளூர்

சாலைகள், வடிகால், குடிநீர், குப்பை சேகரிப்பு மற்றும் அகற்றல் போன்ற பொதுப்பண்டங்களை வழங்குகின்றன.

**6. வருமான மறுபகிர்வு மற்றும் வறுமை ஒழிப்பு:**

முன்னதாக குறிப்பிடப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு நிதியளிக்க அரசாங்கங்கள் பல்வேறான வரிகளை வசூலிக்கின்றன. அதிக வருமானம் உடையவர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிகவரி செலுத்தக்கூடிய வகையில் வரி வசூலிக்கப்படுகிறது. சில அடிப்படைத் தேவைகளான உணவு, தங்குமிடம், உடை, கல்வி, சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் மாத வருமானம் போன்றவற்றினை ஏழைகளுக்கு வழங்குவதற்காக அரசாங்கம் பணத்தைச் செலவிடுகின்றது. மேலும், அரசு வரிகளை வசூலிப்பது மற்றும் ஏழைகளுக்கான செலவினைச் செய்வது, அரசு எவ்வாறு வருமானத்தை மறுபகிர்வு செய்கிறது மற்றும் வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றினை செயல்படுத்துகிறது.

**7. பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்துதல்:**

மத்திய அரசு, பணத்தின் அளிப்பு, வட்டி வீதம், பணவீக்கம் மற்றும் அந்நிய செலாவணி ஆகியவற்றை இந்திய மையவங்கி மூலம் கட்டுப்படுத்துகிறது. இதன் விகிதங்களில் அதிக ஏற்ற இறக்கங்களை களைவதே மையவங்கியின் முக்கிய நோக்கமாகும். இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்(SEBI) மற்றும் இந்திய போட்டி ஆணையம்(CCI) போன்ற பல்வேறு முகவர்கள் மூலமாகவும் மத்திய அரசு பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துகிறது. இந்தியாவில் உள்ள அனைத்து அரசாங்கங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் மலிவுவிலையில் அத்தியாவசியமான பொருட்கள் மற்றும் சேவைகளை மக்களுக்கு வழங்குகின்றன.

**வரி:**

‘‘வரி’’ என்ற சொல் ‘‘வரிவிதிப்பு’’ என்பதிலிருந்து உருவானது. இதன் பொருள் மதிப்பீடு என்பதாகும்.

வரி விதிப்பு என்பது அரசாங்கம் தனது செலவினங்களுக்காகப் பொது மக்களிடமும், பெரு நிறுவனங்களிடமும் வரிகளை விதித்து வருவாயை உருவாக்கும் ஒரு வழிமுறையாகும். அரசு இயந்திரங்களின் செயல்பாட்டிற்காக வரியின் மூலம் நிதி திரட்டுவது வரிவிதிப்பின் முக்கிய நோக்கமாகும். வரிவிதிப்பு முறை ‘‘நல அரசு’’ என்ற கருத்தை மையமாகக் கொண்டு செயல்படுகிறது. தற்கால அரசாங்கங்கள் அதன் எல்லைக்குட்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்குக்கு மட்டுமே கட்டுப்படுவதில்லை. சமீபத்திய ஆண்டுகளில் பொது நிதிக்கு(வரி) முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பெருமளவில் வருவாய் அதிகரித்துள்ளது.

வரிகள் என்பது எந்த வித எதிர்பார்ப்பும் இன்றி நேரடியாக அரசாங்கத்திற்கு செலுத்துகின்ற கட்டாய கட்டணமேயாகும். பேராசிரியர் செலிக்மேன் கருத்துப்படி,‘‘வரி என்பது ஒரு குடிமகன் அரசுக்கு கட்டாயமாக செலுத்தும் செலுத்துவகையாகும். அரசிடமிருந்து எந்தவித நேரடி நன்மையும் எதிர்பார்க்காமல் கட்டாயமாகச் செலுத்த வேண்டியதே வரி’’ என வரையறை கூறுகிறார்.

**வரிகள் ஏன் விதிக்கப்படுகிறது?**

வரி விதிப்பு என்பது அரசுக்கு நிதியளிப்பதற்காக வருவாயை உயர்த்துவதையோ அல்லது தேவையை பாதிக்கும் பொருட்டு விலைகளை மாற்றுவதையோ நோக்கமாகக் கொண்டுள்ளது. வரலாற்று காலத்திலிருந்தே நாடுகளும் அதற்கு இணையாக செயல்படும் அரசுகளும் வரிவிதிப்பின் மூலம் பெற்ற நிதியிலிருந்தே பல செயல்களை நிறைவேற்றயிருக்கின்றது. அவைகளில் சில பொருளாதார உள்கட்டமைப்புச் செலவுகள், (போக்குவரத்து, துப்புரவு, பொது பாதுகாப்பு, கல்வி, உடல்நலம்) இராணுவம், அறிவியல் ஆராய்ச்சி, கலாச்சாரம், கலைகள், பொதுப்பணிகள், பொதுக் காப்பீடுகள் மற்றும் அரசாங்க செயல்பாடுகள் பொன்றவைகளாகும். வரிகளை உயர்த்துவதற்கான அரசாங்கத்தின் திறனை ‘நிதித்திறன்’ என்று கூறப்படுகிறது.

இந்தியாவில் வரி விதிப்பின் வேர்கள் மனு ஸ்மிருதி மற்றும் அர்த்தசாஸ்திர காலத்திலிருந்தே பின்பற்றப்பட்டது. தற்கால இந்திய வரி முறையானது பண்டை கால வரி முறையை

அடிப்படையாகக் கொண்டது.

**வரி அமைப்பு**

ஒவ்வொரு வகையான வரியும் சில நன்மைகள் மற்றும் தீமைகளைப் பெற்றுள்ளன. எனவே நாம் கொண்டுள்ள வரி அமைப்பு, பல்வேறு வகையான வரிகளின் தொகுப்பாகும். அனைத்து நாடுகளும் பல விதமான வரிகளைப் பயன்படுத்துகின்றன. வரிமுறையை வடிவமைக்கும் போது எவ்வாறு பின்பற்றப்பட வேண்டும் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதும் வரிமுறைகளில் சில பண்புகள் உள்ளன. இந்த பண்புகள் வரி விதிப்பு கொள்கைகள் என அழைக்கப்படுகின்றன. ஆடம் ஸ்மித் முதல் பல பொருளாதார வல்லுநர்கள் வரி விதிப்புக் கொள்கைகளைக் கொடுத்துள்ளனர். அவைகளில் பொதுவான வகைகள்.

1. **சமத்துவ விதி:**

வரி ஒரு கட்டாயக் கட்டணம் என்பதால், வரி முறையை வடிவமைப்பதில் சமத்துவம் என்பது முதன்மை என்பதை அனைத்து பொருளாதார வல்லுநர்களும் ஒப்புக்கொள்கிறார்கள். சமத்துவ கோட்பாடு கூறுகையில், பணக்காரர்கள் ஏழைகளை விட அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயை செலுத்த வேண்டும். ஏனென்றால் ஏழைகளை விட பணக்காரர்களுக்கு அதிக வரி செலுத்தும் திறன் உள்ளது. மேலும் வரி செலுத்திய பிறகு பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான பொருளாதார வேறுபாடு குறைக்கப்படுவதை நாம் காண்போம். எந்த வரி சமத்துவ வரிக்கு ஒத்துப்போகிறது என்பதை அறிய நீங்கள் ஒரு பயிற்சியை செய்யலாம்.

2. **உறுதி விதி:**

ஒவ்வொரு வரி செலுத்துவோரும் ஒரு வருடத்தில் எவ்வுளவு வரித்தொகையை அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டும் என்பதைக் கணக்கிட ஒவ்வொரு அரசாங்கமும் வரி முறையை முன் கூட்டியே அறிவிக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், அரசாங்கம் வரி முறையை அடிக்கடி மாற்றக்கூடாது மற்றும் வரி அமைப்பில் திடீர் மாற்றங்களை அறிவிக்கக் கூடாது.

3. **சிக்கன மற்றும் வசதி வீதி:**

இந்த இரண்டு விதிகளும் தொடர்பானவை. வரி செலுத்துவோர் என்ற வகையில், நமது கணக்குகளைச் செயலாக்குவதற்கும் வரி செலுத்துவதற்கும் ஒரு செலவு செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக கணக்காளர்கள் மற்றும் தணிக்கையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதாகும். இதே போல் அரசாங்கம் தனக்கு வரி செலுத்துவோருக்கு ஊதியத்தினை வழங்கி பெரிய நிறுவனங்களையும் நடத்துகிறது. வரி எளிமையானதாக இருந்தால், வரி வசூலிப்பதற்கான செலவு (வரிசெலுத்துவோர் செலவு + வரி வசூலிப்போர் செலவு) மிகக் குறைவாக இருக்கும். மேலும், ஒரு நபருக்கு வரி செலுத்தப் போதுமான பணம் கிடைக்கும் நேரத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும். இது வசதிக்கான வரி என்று அழைக்கப்படுகிறது. ஒரு வசதியான வரி, வரி வசூலிக்கும் செலவை குறைக்கிறது.

4. **உற்பத்தித் திறன் மற்றும் நெகிழ்ச்சி வரி:**

அரசாங்கம் போதுமான வரி வருவாயைப் பெறக்கூடிய வரிகளை தேர்வு செய்ய வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதனால், இது நிறைய வரிகளுக்குப் பதிலாக அதிக வரி அதிக வருவாயைப் பெறக் கூடிய சில வரிகளைத் தேர்வு செய்ய வேண்டும். மேலும் அவை ஒவ்வொன்றும் ஒரு சிறிய வரி வருவாயைப் பெறுகின்றன. இது உற்பத்தித் திறன் வரியாகும். மக்கள் தங்கள் வருமானத்திலிருந்து வரி செலுத்துகிறார்கள். எனவே, மக்கள் வருமானம் அதிகரித்தால் தானாகவே அதிக வரி வருவாயை செலுத்தும் வகையில் வரி அமைப்பு வடிவமைக்கப்பட்ட வேண்டும். இது நெகிழ்ச்சி வரி எனப்படுகிறது. ஒரு பரந்த பொருளில், பொருளாதாரம் வளர்ந்து வருவதால் மக்களுக்கு அதிக வருமானம் கிடைப்பதன் விளைவாக வரி முறை நெகிழ்ச்சியாக இருந்தால் அரசாங்கத்திற்கு அதிக வரி வருவாயையும் செலுத்துவார்கள்.

செலவு, வரி வருவாயை விட அதிகமாக இருக்கும்போது ஒரு அரசாங்கம் கடனை திரட்டுகிறது. வரிகளின் ஒரு பகுதி கடந்த காலப் பணிகளுக்கான கடன்களுக்குப் பயன்படுத்தபடலாம். அரசாங்கம் மக்களின் நலனிற்கும் பொது சேவைகளுக்கும் வரிகளைப் பயன்படுத்தினர். இந்த சேவைகளில் கல்வி முறைகள், முதியோருக்கான ஒய்வூதியம், வேலையின்மை சலுகைகள் மற்றும் பொது போக்குவரத்து ஆகியவை அடங்கும். ஆற்றல், நீர் மற்றும் கழிவு மேலாண்மை ஆகியவை மக்களுக்கான பயன்பாடுகளாகும்.

பணத்தை உருவாக்கும் கோட்பாட்டின் ஆதரவாளர்களின் கூற்றுப்படி, கேள்விக்குரிய அரசாங்கத்தால் ஒப்புறுதியளிக்கப்பட்ட பணத்தை வழங்க முடியும்வரை அரசாங்க வருவாய்க்கு வரி தேவையில்லை. வரி விதிப்பின் நோக்கம், நாணயத்தின் நிலைத்த தன்மையைப் பேணுதல், செல்வத்தைப் பகிர்வது தொடர்பான பொதுக் கொள்கையை வெளிப்படுத்துவது, சில தொழில்கள் அல்லது நெடுஞ்சாலைகள் அல்லது சமூகப் பாதுகாப்பு போன்ற சில பயன்களின் செலவுகளைத் தனிமைப்படுத்துதல் போன்றதாகும்.

**வரிகளின் வகைகள்:**

**நேர்முக வரிகள்:**

நேர்முக வரி என்பது ஒரு தனிநபர் அல்லது நிறுவனத்தின் மீது நேரடியாக விதிக்கப்படுவதாகும். இவ்வரியை மற்றவர் மீது புரட்டிவிட முடியாது. பேராசிரியர் ஜே.எஸ்.மில்லின் கருத்துப்படி, நேர்முக வரி என்பது "யார் மீது வரி விதிக்கப்பட்டதோ அவரே அவ்வரியை செலுத்துவதாகும். வரி செலுத்துபவரே வரிச்சுமையை ஏற்க வேண்டும்". சில நேர்முக வரிகள்: வருமான வரி, சொத்து வரி மற்றும் நிறுவன வரி ஆகியனவாகும்.

**வருமான வரி:**

வருமான வரி இந்தியாவில் விதிக்கப்படுகின்ற நேர்முக வரி முறையில் மிக முக்கியமான வரியாகும். இவ்வரி தனிநபர் பெறுகின்ற வருமானத்தின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றது. இவ்வரி வசூலிக்கப்படும் விகிதம் வருமான அளவைப் பொறுத்து மாறுபடக்கூடியதாகும்.

இந்தியாவில் முதன் முதலாக வருமானவரி 1860ஆம் ஆண்டு சர் ஜேம்ஸ் வில்சன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1857ஆம் ஆண்டு கலகத்தின் மூலம் ஏற்பட்ட இழப்புகளை ஈடுகட்ட அரசாங்கத்தின் மூலம் போடப்பட்ட ஆணையே வரி விதிப்பாகும்.

இந்தியாவில் அரசாங்கத்தினால் மூன்று அடுக்குகள் வரி வசூலிக்கப்படுகிறது. மத்திய அரசால் எளிதில் வசூலிக்கக்கூடிய வரிகள் உள்ளன. இந்தியாவில் கிட்டத்தட்ட அனைத்து நேரடி வரிகளும் மத்திய அரசால் வசூலிக்கப்படுகின்றன. பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வரி மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது. சொத்துக்களுக்கான வரி உள்ளூர் அரசாங்கங்களால் வசூலிக்கப்படுகிறது.

இந்தியாவில் நேரடி வரிகளை விட மறைமுக வரி மூலம் அதிக வரி வருவாயை வசூலிக்கின்றோம். இந்தியாவின் முக்கிய மறைமுக வரி சுங்க வரி மற்றும் GST ஆகும். இந்த இரண்டு வரிகளும் வெவ்வேறு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொண்டுள்ளன. பணக்கார நுகர்வோர் ஏழைகளை விட அதிக வரி செலுத்தும் வகையில் அரசாங்கங்கள் வடிவமைக்க முயற்சிக்கின்றன. இருப்பினும் ஏழைகள் இன்னும் இந்த வரிகளின் மூலம் அதிக பணம் செலுத்துகிறார்கள் எனவே, நாம் மறைமுக வரிகளைக் குறைத்து நேரடி வரி மூலம் வசூலை அதிகரிக்க வேண்டும் என்று பலர் வாதிடுகின்றனர்.

இந்திய வரிமுறை வரிவிதிப்புகளுக்கான அனைத்து நியதிகளையும் பின்பற்றுகிறது. ஆனால் பெரும்பாலும் சமத்துவக் கொள்கை சமரசம் செய்யப்படுவதாகவும், ஒரு சிலரின் நன்மைக்காக வரி முறையுடன் நாம் சரி செய்யும் போது உற்பத்தித்திறன் இழக்கப்படும் என்றும் வாதங்கள் உள்ளன. வருடாந்திர வரவு செலவுத் திட்டத்தில் வருடத்திற்கு ஒரு முறை வரி முறையை அறிவிக்கிறோம். ஆண்டு நடுப்பகுதியில் வரி மாற்றங்களை அறிவிப்பதன் மூலம் இது மிகவும் அரிதாகவே மீறப்படுகிறது. எனவே, இந்திய வரி முறை எல்லாவற்றையும் விட உறுதியான நியதியை கடைபிடிக்கிறது,

**நிறுவனவரி:**

இந்த வரி தங்கள் பங்குதாரர்களிடமிருந்து தனி நிறுவனங்களாக இருக்கும் நிறுவனங்களுக்கு விதிக்கப்படுகிறது. இது இந்தியாவில் அமைந்துள்ள சிறப்பு உரிமைகளில், மூலதான சொத்துகளின் விற்பனையிலிருந்து வரும் வட்டி இலாபங்கள், தொழில் நுட்ப சேவைகள் மற்றும் ஈவுத் தொகைகளுக்கான கட்டணம் போன்றவற்றிலிருந்து வசூலிக்கப்படுகிறது.

இந்த வரி வெளிநாட்டு நிறுவனங்கள் பெரும் வருமானத்தின் மீது விதிக்கப்படுகிறது அல்லது இவ்வரியானது இந்தியாவில் தோன்றுவதாக கருதப்படுகிறது.

| வருமானம் | இந்திய நிறுவனங்கள் | அயல்நாட்டு நிறுவனங்கள் |
|---|---|---|
| ரூ.50 கோடிக்குள் | 25% | 40% |
| ரூ.50 கோடிக்கு மேல் | 30% | 40% |

**சொத்துவரி (அ) செல்வ வரி:**

சொத்து வரி (அ) செல்வ வரி என்பது தனது சொத்திலிருந்து பெறப்பட்ட நன்மைகளுக்காக சொத்தின் உரிமையாளருக்கு விதிக்கப்படுகின்ற வரியாகும். ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

**மறைமுக வரிகள்:**

ஒருவர் மீது விதிக்கப்பட்ட வரிச்சுமை மற்றொருவருக்கு மாற்றப்பட்டால் அது ‘‘மறைமுகவரி’’ எனப்படும். வரி விதிக்கப்படுகின்ற வரியாகும். ஒவ்வொரு ஆண்டும் சொத்தின் நடப்பு சந்தை மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகிறது. இவ்வரி தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது விதிக்கப்படும் வரியாகும்.

**சில மறைமுக வரிகளாவன**: முத்திரைக் தாள் வரி, பொழுது போக்கு வரி, சுங்கத் தீர்வை மற்றும் பண்டங்கள் மற்றும் பணிகள் (GST) மீதான வரிகளாகும்.

**முத்திரைத்தாள் வரி:**

முத்திரைத்தாள் வரி என்பது அரசாங்க ஆவணங்கள் மீது விதிக்கப்படுகின்ற வரிகளான திருமண பதிவு அல்லது சொத்து தொடர்பான ஆவணங்கள் மற்றும் சில ஒப்பந்தப் பத்திரங்கள் போன்றவைகள் மீது விதிக்கப்படுவதாகும்.

**பொழுதுபோக்கு வரி:**

எந்தவொரு பொழுதுபோக்கு மூலங்களாக இருந்தாலும், அரசாங்கத்தால் விதிக்கப்படுகின்ற வரி பொழுதுபோக்கு வரியாகும். உதாரணமாக திரைப்படங்கள் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற கட்டணம், பொழுது போக்கு பூங்காக்கள், கண்காட்சிகள், விளையாட்டு அரங்கம், விளையாட்டு நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் பார்ப்பதற்காக விதிக்கப்படுகின்ற வரியாகும்.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரி:(GsT – Goods and Service Tax)**

பண்டங்கள் மற்றும் பணிகள் வரி என்பது மறைமுக வரிகளில் ஒன்றாகும். இவ்வரி இந்தியப் பாராளுமன்றத்தில் மார்ச்29, 2017ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் ஜூலை-1 2017 முதல் அமுல்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இதன் குறிக்கோள் ‘‘ஒரு நாடு-ஒரு அங்காடி-ஒரு வரி’’ என்பதாகும்.

GST என்பது, நுகர்வோர் பண்டங்கள் அல்லது பணிகளை வாங்கும் போது விதிக்கப்படும் வரியாகும். இவ்வரி மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களால் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் அனைத்து மறைமுக வரிகளையும் மாற்றுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பண்டங்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி வழங்குதல் மீதான வரிகளின் அடுக்கு விளைவுகளை

GSTநீக்குகிறது. இது மதிப்பு கூட்டப்பட்ட வரி(VAT) போன்று 'பல முனை வரி' இல்லாமல் இது 'ஒரு முறை வரி' ஆகும்.

| |
|---|
| 1954ஆம் ஆண்டு முதன் முதலில் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அமுல்படுத்திய நாடு பிரான்ஸ் ஆகும். 1970-80களில் பல ஐரோப்பிய நாடுகள் பண்டங்கள் மற்றும் பணிகள் வரியை அறிமுகப்படுத்தியது. |

**வரி எவ்வாறு விதிக்கப்படுகிறது?**

வளர்வீத வரி விதிப்பு முறை, விகித வரி விதிப்பு முறை மற்றும் தேய்வுவீத வரி விதிப்பு முறை என அரசாங்கம் வரிகளை விதிக்கின்றன.

**வளர்வீத வரி விதிப்பு முறை:**

வளர்வீத வரி விதிப்பு முறையில் வரியின் அடிப்படைத் தளம் அதிகரிக்கும்போது (பெருக்கப்படும்) வரி விகிதமும் (பெருகி) அதிகரிக்கிறது. வரி விகிதத்தை வரி அளவுடன் பெருக்குவதன் மூலம் செலுத்த வேண்டிய வரியின் அளவு கணக்கிடப்படுகிறது. ஒரு வளர்வீத வரியைப் பொறுத்த வரையில் பெருக்கல் (வருமானம்) அதிகரிக்கிறது. வருமானம் அதிகரிக்கும்போது, வரி விகிதமும் அதிகரிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறை என்று அழைக்கப்படுகிறது.

**பண்டங்கள் மற்றும் பணிகள் வரியின் அமைப்பு:**

**மாநில பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (SGST): (மாநிலத்திற்குள்)**
மதிப்பு கூட்டு வரி (VAT)∵விற்பனை வரி, கொள்முதல் வரி, பொழுதுபோக்கு வரி, ஆடம்பரவரி, பரிசுச்சீட்டு வரி, மற்றும் மாநில கூடுதல் கட்டணம் மற்றும் வரிகள்.

**மத்திய பண்டங்கள் மற்றும் பணிகள் வரி:**
மத்திய சுங்கத்தீர்வை, சேவை வரி,ஈடு செய்வரி, கூடுதல் ஆயத்தீர்வை, கூடுதல் கட்டணம், கல்வி கட்டணம் (இடைநிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வி வரி)

**ஒருங்கிணைந்த பண்டங்கள் மற்றும் பணிகள் வரி (IGST): (மாநிலங்களுக்கு இடையே)**
நான்கு முக்கிய GST விகிதங்கள் உள்ளன. 5%,12% மற்றும் 28% காய்கறிகள் மற்றும் உணவு தானியங்கள் போன்ற வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசிய தேவைகளுக்கான அனைத்து பண்டங்களுக்கும் இந்த வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றன.

| வரி அடிப்படை | வரிவிகிதம் | வரி அளவு |
|---|---|---|
| ரூ.10,000 | 10% | ரூ.1000 |
| ரூ.20,000 | 15% | ரூ.3000 |
| ரூ.30,000 | 25% | ரூ.7500 |
| ரூ.40,000 | 40% | ரூ.16000 |

**விகித வரி விதிப்பு முறை அல்லது விகிதாச்சார வரி விதிப்பு முறை:**

**வரி விதிப்பு முறை:**

ஒரு நிலையான அளவில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு விதிக்கப்படும் வரி, விகித வரி விதிப்பு முறை எனப்படுகிறது. அனைத்து வரி செலுத்துவோரும், தங்கள் வருமானத்தில் அதே விகிதத்தில் பங்களிப்பு செய்கின்றனர். இந்த முறையில் வருமானத்தின் அளவைப் பொருட்படுத்தாமல் வரி விதிப்பு விகிதம் ஒரே மாதிரியானதாகும். பெறப்பட்ட வரித் தொகை வருமானத்தின் அதே விகிதத்தில் மாறுபடும்.

எடுத்துக்காட்டு:

| வரி அடிப்படை | வரிவிகிதம் | வரி அளவு |
|---|---|---|
| ரூ.10,000 | 10% | ரூ.1000 |
| ரூ.20,000 | 10% | ரூ.2000 |
| ரூ.30,000 | 10% | ரூ.3000 |
| ரூ.40,000 | 10% | ரூ.4000 |

**தேய்வுவீத வரி விதிப்பு முறை:**

இது அதிக வருமானம் ஈட்டுபவர்களை விட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிகவரி விகிதம் விதிப்பதைக் குறிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர் மாறானதாகும்.

**தேய்வுவீத வரிவிதிப்பு முறை:**

இது அதிக வருமானம் ஈட்டுபவர்களை விட, குறைந்த வருமானம் ஈட்டுபவர்களிடம் அதிகவரி விகிதம் விதிப்பதைக் குறிக்கிறது. இது வளர்வீத வரி விதிப்பு முறைக்கு நேர் எதிர் மாறானதாகும்.

| | | | |
|---|---|---|---|
| **வளர்வீத வரி விதிப்பு** | வருமான அதிகரிப்பு | வரியும் அதிகரிக்கும் | எ.கா.வருமான வரி |
| **விகித வரி விதிப்பு** | வருமான அதிகரிப்பு | வரி குறையும் | எ.கா.நிறுவன வரி |
| **தேய்வுவீத வரி விதிப்பு** | வருமான மாற்றம் | எப்போதும் ஒரே வரி | எ.கா.விற்பனை வரி |

**கருப்பு பணம்:**

கருப்பு பணம் என்பது, கருப்பு சந்தையில் ஈட்டப்பட்ட வருமானம் மற்றும் செலுத்தப்படாத வரிப் பணமாகும். வரி நிர்வாகியிடமிருந்து மறைக்கப்பட்ட, கணக்கிடப்படாத பணம் "கருப்பு பணம்' என்று அழைக்கப்படுகிறது.

**கருப்பு பணத்திற்கான காரணங்கள்:**

கருப்பு பணத்திற்கு பல ஆதாரங்கள் காரணங்களாக அடையாளம் காணப்படுகின்றன.

**1. பண்டங்கள் பற்றாக்குறை:**

கருப்பு பணம் இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ பண்டங்கள் பற்றாக்குறை ஏற்படுவதற்கு மூலகாரணமாக உள்ளது. கருப்பு பணத்தை கட்டுப்படுத்துவதற்கு அடுத்தடுத்து தடைகள் அறிமுகப்படுத்தப்படுகிறது.

**2. உரிமம் பெறும் முறை:**

கட்டுப்பாட்டு அனுமதி, ஒதுக்கீடு மற்றும் உரிமங்களின் அமைப்பு, பொருட்களின் குறைவான அளிப்பினால் தவறான விநியோகத்துடன் தொடர்புடையது என்று உறுதியாக நம்பப்படுகிறது. இதன் விளைவாக கருப்பு பணம் உருவாகிறது.

**3. தொழில்துறையின் பங்கு:**

கருப்பு பணம் தோன்றுவதற்கு மிக முக்கியமான பங்கு வகிப்பது தொழில் துறையாகும். உதாரணமாக வரையறுக்கப்பட்ட பொதுத் துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டாளர் பண்டங்களை மிகவும் குறைவான விலைக்கு வாங்க முயற்சி செய்வதுடன், அப்பொருளுக்கு அதிக கட்டணம் வசூலிப்பதுடன், அவ்வித்தியாசத்தை தனிப்பட்ட முறையில் காண்பிப்பதில்லை.

**இந்தியாவில் கருப்பு பணத்தைக் கட்டுப்படுத்த சமீபத்திய சட்ட முயற்சிகள்:**

1. மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் இரண்டு முன்னாள் நீதிபதிகளின் தலைவர் மற்றும் துணை தலைவரின் கீழ் கருப்பு (Special Investigation Team) அமைக்கப்பட்டது.

2. ஒரு விரிவான சட்டத்தை இயற்றுவது – கருப்பு பணம் (வெளியிடப்படாத வெளிநாட்டு வருமானம் மற்றும் சொத்துகள்) மற்றும் வரி விதித்தல் சட்டம்,2015)
3. பனாமாவில் சமீபத்திய காகித கசிவுகளின் வெளிப்பாடுகளை விசாரிப்பதற்காக மத்திய நேரடி வரி வாரியம் (CBDT), இந்திய ரிசர்வ் வங்கி(RBI), அமலாக்க இயக்குநரகம்(ED) மற்றும் நிதி புலனாய்வு பிரிவு(FIU) ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியலமைப்பு அதிகாரிகளைக் கொண்ட பல நிறுவனக்குழு(MAG) அமைக்கப்பட்டது.
4. இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்கள் (DYAAs)/வரித் தகவல் பரிமாற்ற ஒப்பந்தங்கள் (TIEAs)/பலதரப்பு மாநாடு
5. வெளி நாட்டு கணக்கு வரி இணக்கச் சட்டம் (FATCA).
6. பண மோசடி சட்டம் 2002 மூலம் நிதிச் சட்டம்-2015
7. பினாமி பரிவர்த்தனைகள் (தடை) திருத்தச்சட்டம்-2016 தொடக்கம்.
8. “சுத்தமான பணச்செயல்பாடு “(Operation of money) ஜனவரி-31,2017ல் தொடங்கியது.
9. லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம்
10. ரியல் எஸ்டேட்(ஒழுங்கு முறை மற்றும் மேம்பாடு) சட்டம் 2016.

**கடத்தல்**

கருப்பு பணத்திற்கு கடத்தல் ஒரு முக்கிய ஆதாரமாகும். இந்தியா கடுமையான பரிமாற்ற முறைகளைக் கொண்டிருந்தபோது விலை உயர்ந்த பொருட்களான தங்கம், வெள்ளி, ஜவுளிகள், மின்னனுப்பொருட்கள் ஆகியவற்றுக்கு சுங்கத்தீர்வை அதிகமாக விதிக்கப்பட்டது. அதிகாரிகளை மீறி இந்தப் பொருட்களைக் கொண்டுவருவது கடத்தலாகும்.

**வரிஅமைப்பு:**

தனி நபர்கள், நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகள் ஆகியவை சட்ட விரோதமாக வரி செலுத்தாமல் இருப்பது வரி ஏய்ப்பு வரி ஏய்ப்பு எனப்படும். வரி ஏய்ப்பு பெரும்பாலும் வரி செலுத்துவோர் தங்கள் வரி பொறுப்பைக் குறைக்க வரி அதிகாரிகளிடம் தங்களின் உண்மையான விவகாரங்களை வேண்டுமென்றே தவறாக சித்தரிப்பதை உட்படுத்துகிறது. மேலும், குறைந்த வருமானம், இலாபங்கள் அல்லது ஆதாயங்களை உண்மையில் சம்பாதித்த தொகையை விட அறிவித்தல் அல்லது விலக்குகளை மிகைப்படுத்துதல் போன்ற நேர்மையற்ற வரி அறிக்கையையும் உள்ளடக்கியது. என்பது பொதுவாக முறைசாரா பொருளாதாரத்துடன் தொடர்புடைய ஒரு செயலாகும். வரி ஏய்ப்பு அளவின் ஒரு நடவடிக்கை, பதிவு செய்யப்படாத வருமானத்தின் அளவு, வரி அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்பட்ட தொகைக்கும் உள்ள வித்தியாசமாகும்.

வரி ஏய்ப்பு நடவடிக்கைகளில் சேர்க்கப்பட்டுள்ளவை:

- வருமானத்தை குறைத்து மதிப்பிடுதல்
- விலக்குகள் அல்லது செலவுகளை உயர்த்துவது,
- மறைக்கப்பட்ட பணம்.
- கடல் கடந்த கணக்குகளில் விவரங்களை மறைத்தல்.

**வரி ஏய்ப்பிற்கான காரணங்கள்:**

1. கருப்ப பணத்தின் விளைவாக வரி ஏய்ப்பு மத்திய அரசின் வரி திரட்டல் முயற்சிகளைத் தடுக்கிறது. நிதிப் பற்றாக்குறை வளர்ச்சி திட்டங்கள் செயல்படுத்துவதை சிதைக்கிறது. மற்றும் பொதுச் செலவுகள் தவிர்க்க முடியாததாக இருந்தால், பற்றாக்குறை நிதியுதவியை நாடும்படி அரசாங்கத்தை கட்டாயப்படுத்துகிறது.

2. இது சேமிப்பு மற்றும் முதலீட்டு முறைகளை சிதைப்பதன் மூலமும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கான வளங்களின் கிடைக்கும் தன்மையினாலும், அரசாங்கத்தின் அறிவிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளில் தலையிடுகிறது.
3. வரி ஏய்ப்பு, வரி அமைப்பின் சமத்துவப் பண்புகளை குறை மதிப்பிற்கு உட்படுத்துகிறது. நேர்மையான வரி செலுத்துவோர் விகிதாசார வரிச்சுமையை விருப்பத்துடன் சுமக்கிறார்கள். அவர்களை மனச் சோர்வடையச் செய்து வரி ஏய்ப்பு செய்பவர்களின் முகாமில் சேர ஈர்க்கப்படுகிறார்கள்
4. வரி ஏய்ப்பு மற்றும் கருப்பு பணம் ஆகியவை நாட்டில் தகுதியற்ற குழுக்களின் கைகளில் பொருளாதார சக்தியைக் குவிப்பதை ஊக்கவிக்கின்றன. இது பொருளாதாரத்தை அதன் வழியில் அச்சுறுத்துதலாகும்.
5. வரி ஏய்ப்பு, வரி நிர்வாகத்தின் நேரத்தினையும், சக்தியினையும் பயன்படுத்தி, வரி ஏமாற்றுக்காரர்களின் சிக்கலான கையாளுதல்களைத் தடுக்கிறது.

**வரி ஏய்ப்பும், அபராதமும்:**

1. ஒரு நபர் வரி ஏய்ப்பு செயலை முழுமையாகச் செய்தால், அவர் மோசமான குற்றச்சாட்டுகளை சந்திக்க நேரிடும். வரி ஏய்ப்பு அபராதங்களில் ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையும், அதிக அளவு அபராதமும் அடங்கும்.
2. பிரதிநிதிகள், வழக்கு விசாரனைக்கான செலவுகளைச் செலுத்த உத்தரவிடப்படலாம்.
3. பிற வரி ஏய்ப்பு அபாராதங்களில் சமூக சேவை, நன்னடத்தை மற்றும் வழக்கின் சூழ்நிலைகளைப் பொறுத்து மறுசீரமைத்தல் ஆகயவை அடங்கும்.
4. வரி ஏய்ப்பு அபராதம், குற்றத்தின் தன்மை, மற்றும் அதன் தீவிரத்தினைப் பொறுத்து கடுமையானதாக இருக்கும்.

**வரி மற்றும் கட்டணங்கள்:**

வரி என்பது வரி செலுத்துவோர் நேரடி வருவாய் அல்லது நன்மை என்று எதையும் எதிர்பாராமல் அரசாங்கத்திற்குக் கட்டாயமாக செலுத்திடும் கட்டணமேயாகும்.

| வ.எண் | வரி(Tax) | கட்டணம் (Payments) |
|---|---|---|
| 1 | வரி என்பது எந்தவித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் அரசாங்கத்திற்கு செலுத்துகையாகும். | கட்டணம் என்பது பணிகளை பயன்படுத்துவதற்காக செலுத்துவதாகும். |
| 2 | பொதுவாக அரசாங்கத்தின் வருமான இனங்களில் ஒன்றாக வரி மேலோங்கியுள்ளது. | கட்டணம் என்பது ஒரு குறிப்பிட்ட நன்மைகளுக்கான தனிச் கலுகைகளைப் பெற்றிருந்தாலும், பொது நல ஒழுங்கு முறையின் சிறப்பான முதன்மை நோக்கமாகும். |
| 3 | வரி என்பது கட்டாய செலுத்துகை ஆகும். | கட்டணம் (Fee) என்பது தன்னார்வக் கட்டணமாகும். |
| 4 | ஒரு தனிப்பட்ட நபரின் மீது வரி விதிக்கப்பட்டால், அதனை அவர் செலுத்த வேண்டும். இல்லையெனில் அவர் தண்டிக்கப்படுவார் | மாறாக, பணிகளை பெற விருப்பமில்லை எனில் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. |
| 5 | வரி செலுத்துபவர்கள் நேரடியாக எவ்வித சலுகைகளையும் எதிர்பார்க்க முடியாது.<br>உதாரணம்: வருமான வரி, அன்பளிப்பு வரி, சொத்து வரி மற்றும் மதிப்புக் கூட்டு வரி(VAT) | கட்டணம் செலுத்துவதன் மூலம் நுகர்கள், நேரடியாக சலுகைகளைப் பெறுகின்றனர்.<br>உதாரணம்: முத்திரை வரி, ஓட்டுநர் உரிமக் கட்டணம், அரசாங்க பதிவுக் கட்டணம். |

பொது நிறுவனங்களின் பொருட்கள் மற்றும் பணிகளின் உற்பத்தி மற்றும் பங்கீடு செய்தல் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானம், நிர்வாக நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட வருவாய் ஆகியவை கட்டணங்களில் அடங்கும். வரி வருமானம் தவிர்த்து, வரி அல்லாத மூலங்களிலிருந்து பெறக்கூடியவை கட்டணங்கள் ஆகும்.

சில செலுத்துதல்கள், கட்டணங்கள் (Fees), அபராதங்கள், தண்டனைகள் மற்றும் பறிமுதல்கள் ஆகும்.

**வரிகளும் முன்னேற்றமும்:**

பொருளாதாரத்தை முன்னேற்றுவதில் வரி விதிப்பின் பங்கு பின்வருமாறு:

**1. வளங்களைத் திரட்டுதல்:**

வரிவிதிப்பு அரசாங்கத்திற்கு கணிசமான அளவிற்கு வருவாய் திரட்டுவதற்கு உதவுகிறது. உதவுகிறது. குறிப்பாக நேர்முக வரிமுறையான தனிநபர் வருமானவரி, நிறுவன வரி மற்றும் மறைமுக வரிகளான ஆயத்தீர்வை, சுங்கவரி ஆகியவற்றின் மூலமாக வரி வருவாய் திரட்டப்படுகிறது.

**2. வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல்:**

வரியின் மூலம் சமத்துவமுறையை உருவாக்கலாம். குறிப்பாக, நேர்முக வரியில் வளர்வீத வரி முறை பின்பற்றப்படுகிறது. அதேபோல் சில மறைமுக வரியான ஆடம்பரப் பண்டங்களின் மீது விதிக்கப்படும் வரி வளர்வீத வரியின் தன்மையுடையதாகும்.

**3. சமூக நலன்:**

வரி விதிப்பு சமூக நலநன உருவாக்குகிறது. சில விரும்பத்தகாத பொருட்களான மதுபானங்கள் போன்ற பொருட்களின் மீது அதிகமாக வரி விதிப்பதன் மூலம் சமூக நலன் பாதுகாக்கப்படுகிறது.

**4. அந்நியச் செலாவணி:**

வரிவிதிப்பு ஏற்றுமதியை ஊக்கவிப்பதுடன் இறக்குமதியைத் தடுக்கிறது. பொதுவாக, வளரும் நாடுகள் மற்றும் வளர்ந்த நாடுகளும் ஏற்றுமதி பொருட்களுக்கு வரிகளை விதிப்பதில்லை.

**5. வட்டார முன்னேற்றம்:**

வட்டார வளர்ச்சியில் வரி விதிப்பு முக்கியப் பங்கினை வகிக்கிறது. பின் தங்கிய பகுதிகளில் தொழில் நிறுவனங்களை அமைப்பதற்காக வரிச் சலுகையையும், வரி விலக்குகளையும் அளிப்பதன் மூலம், அப்பகுதிகளில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு வணிக நிறுவனங்களைத் தூண்டுகிறது,

**பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்:**

வரி என்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கருவிகளுள் ஒன்றாக பயன்படுத்தப்படுகிறது, அரசாங்கம் பண்டங்கள் மீதான வரி விகிதத்தை குறைப்பதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

12th Economics

**அலகு – 2 - தேசிய வருவாய்**

**அறிமுகம்:**

ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை அளவிடும் ஒரு முழுமையான அளவு கோலை தேசிய வருவாய் தருகிறது. ஒரு நாட்டின் வாங்கும் சக்தியை குறிப்பிடும் காரணியாக இருக்கிறது. உண்மை தேசிய வருவாயின் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் மாறும் வகிதத்தைப் பொருத்தே பொருளாதாரத்தின் வளர்ச்சி அளவிடப்படுகிறது. பொருளாதாரத் திட்டமிடுதலுக்கான ஒரு கருவியாக இது திகழ்கிறது. மேலும் இது ஒரு மிக முக்கிய பேரினப் பொருளியல் மாறியாகவும் இருக்கிறது. எனவே தேசிய வருவாயின் பொருள், பல்வேறு கருத்துருக்கள், அளவிடும் முறைகள் மற்றும் பயன்களை தெளிவாக புரிந்து கொள்ளுதல் அவசியம் ஆகும்.

நோபல் பரிசு பெற்றுள்ள சைமன் குஷ்நெட்ஸ் (Simon Kuznets) இந்தக் கருத்துருவை முதலில் அறிமுகப்படுத்தினார்.

பொதுவாகக் கூறப்போனால், தேசிய வருவாய் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பண்டங்கள் மற்றும் பணிகளின் பண மதிப்பாகும்.

**இலக்கணம்:**
"ஒரு நாட்டில் உள்ள உழைப்பும் முதலும் சேர்ந்து அங்குள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி பண்டங்கள் மற்றும் பணிகளைப் பயன்படுத்துகின்றன. இதுவே அந்நாட்டின் நிகர ஆண்டு வருமானம், தேசிய வருவாய் அல்லது தேசிய ஈவுத்தொகை ஆகும்"

ஒரு நாட்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) யில் வரையறுக்கப்பட்ட நிலையில் தேசிய வருமானம் அளவிடப்படுவதின் மூலம் அந்நாட்டின் நலத்தை அறிய முடியும். அதிக வளர்ச்சிக்கான இலக்குகள் எதற்காக எப்படி என்பதை வரையறுக்க வேண்டும்.

"ஓர் ஆண்டில் பொருளாதாரத்தின் உற்பத்தி அமைப்பில் இருந்து பண்டங்களும் பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நிகர வெளியீடாக அவை இறுதி நிலை நுகர்வோரின் கைகளுக்கு செல்கின்றன அல்லது அந்த நாட்டில் இருக்கக்கூடிய மூலதனப் பொருட்களின் இருப்போடு நிகர கூடுதலாகச் சேர்கிறது".

**தேசிய வருவாயின் அடிப்படைக் கருத்துருக்கள்:**

தேசிய வருவாயை அளவிடுவதற்கு கீழ்கண்ட கருத்துக்கள் பயன்படுகின்றன.

**மொத்த உள்நாட்டு உற்பத்தி (Gross Domestic Product: GDP):**

ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட இறுதிநிலைப் பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த சந்தை மதிப்பே மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) ஆகும். இதற்கு சந்தையில் நிலவும் விலை பயன்படுத்தப்பட்டால் இது சந்தைவிலையின் GDP என அழைக்கப்படுகிறது.

செலவு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படும்
GDP = C + I + G + (X – M)

இதில் C = நுகர்வு பண்டங்கள்
I = முதலீட்டு பண்டங்கள்,
G = அரசின் வாக்குதல்கள்

(X – M) = நிகர ஏற்றுமதி (இது நேர்மறையாகவோ, எதிர்மறையாகவோ இருக்கலாம்.

1. **நிகர உள்நாட்டு உற்பத்தி (Net Domestic Product: NDP):**

நிகர உள்நாட்டு உற்பத்தி (NDP) என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் ஏற்படும் தேய்மானத்தை கழித்த பிறகு கிடைக்கும் நிகர உற்பத்தி ஆகும். ஒரு நாட்டில் உள்ள சில முதலீட்டுக் கருவிகள் உற்பத்தி செய்யும் போது தேய்மானம் அடையலாம். பழுதாகிப் போகலாம் அல்லது பயனற்று போகலாம். தேய்மானத்தின் மதிப்பை GDP யிலிருந்து கழித்துவிட்டால் கிடைப்பது NDP ஆகும்.

நிகர உள்நாட்டு உற்பத்தி = GDP– தேய்மானம்

**மொத்த தேசிய உற்பத்தி (Gross National Product) (GNP):**

மொத்த தேசிய உற்பத்தி (GNP) என்பது ஒரு நாட்டில் ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகளின் அங்காடி மதிப்பின் மொத்த கணக்கிடுதல் ஆகும். இதில் நிகர வெளிநாட்டு வருமானமும் (நிகர ஏற்றுமதி) சேர்க்கப்படும். GNP – ல் கீழ்கண்ட ஐந்து வகையான முடிவடைந்த பொருட்கள் மற்றும் பணிகள் உள்ளன.

1. ஓர் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவடைந்த பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பு. இவை மக்களின் நுகர்வுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட்டவை. இதனை நுகர்வு (Consumption : C) என்கிறோம்.
2. மொத்த உள்நாட்டு மூலதனப் பொருட்களின் தனியார் முதலீடுகளில் இதில் மூலதனத் திரட்சி, வீடுகட்டுதல், உற்பத்திக்காக வைப்பில் உள்ள முடிந்த மற்றும் முடியாத பொருள்கள் ஆகியவை அடங்கும். இதனை முதலீடு (I) எனக் குறிக்கிறோம்.
3. அரசால் வாங்கப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் மற்றும் பணிகள் G எனக் குறிப்பிடப்படுகிறது.
4. உள்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதியிலிருந்து (X) வெளிநாட்டிலிருந்து வருவிக்கப்பட்ட இறக்குமதியை (M) கழித்தால் கிடைக்கும் (X – M) நிகர ஏற்றுமதி. இத நேர்மறையாகவோ (+) எதிர்மறையாகவோ (-) இருக்கலாம்.
5. நிகர ஏற்றுமதி என்பது வெளிநாடுகளில் இருந்து பெற்ற காரணிகளின் வருவாய்க்கும் (கூலி, வட்டி, இலாபம்) நம் நாட்டில் குடியிருக்கும் வெளிநாட்டுகாரர்களுக்கு கொடுக்கப்பட்ட காரணிகளின் வருவாய்க்கும் இடையே உள்ள வேறுபாடு (R – P) ஆகும். சந்தை விலையில் GNP என்பது (C + I + G + (X – M) + (R – P)

| |
|---|
| சந்தை விலையில் GNP = சந்தை விலையில் GDP + வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் நிகர வருமானம் |

**நிகர தேசிய உற்பத்தி (NNP at Market Prices):**

நிகர தேசிய உற்பத்தி என்பது ஒரு ஆண்டின், பொருளாதாரத்தின் நிகர உற்பத்தியின் மதிப்பு ஆகும். GNP யிலிருந்து தேய்மானத்தின் மதிப்பு, முதலீட்டு சொத்தின் மாற்று கழிவு ஆகியவற்றை கழித்த பின் கிடைப்பது நிகர தேசிய உற்பத்தி ஆகும்.

| |
|---|
| NNP = GNP - தேய்மான கழிவு |

தேய்மானத்தை மூலதன நுகர்வு கழிவு (Capital Consumption Allowance) என்றும் கூறலாம்.

**காரணி செலவில் நிகர தேசிய உற்பத்தி (NNP at Factor Cost):**

NNP என்பது உற்பத்தியின் சந்தை மதிப்பு ஆகும். காரணி செலவில் NNP என்பது உற்பத்தி காரணிகளுக்கு வழங்கப்பட்ட மொத்த வருமான செலுத்துதல் ஆகும். காரணி செலவில் நிகர தேசிய வருவாயை பெறுவதற்கு, சந்தை விலையில் NNP யின் பண மதிப்பிலிருந்து மறைமுக வரியை கழிக்க வேண்டும். மேலும் மானியங்களை கூட்ட வேண்டும்.

| |
|---|
| காரணிசெலவில் NNP = சந்தை விலையில் NNP – மறைமுகவரி மானியம் |

### தனிநபர் வருமானம் (Personal Income):

தனிநபர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒவ்வொரு தனி நபருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்க பெறும் மொத்த வருமானம் ஆகும். அவை வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். அவை அனைத்தையும் ஒவ்வொரு தனி நபருக்கும் கூட்டினால் அது தனிநபர் வருமானம் ஆகும். தனிநபர் வருமானம் தேசியவருமானத்திற்கு சமமாக இருக்காது. ஏனெனில் மாற்று செலுத்துதல்கள் (Transfer Payment) தனிநபர் வருமானத்தோடு சேர்க்கப்படுகிறது. அரசிடம் இருந்து கிடைத்த ஒய்வூதியம் (Pension) தனிநபர் வருமானத்துடன் சேர்க்கப்படுகிறது. எனவே, தேசிய வருவாயிலிருந்து பங்களிக்கப்படாத கார்பரேட் இலாபம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டங்களில் உழைப்பாளர்களின் பங்களிப்பு ஆகியவற்றை கழித்துவிட்டு, மாற்று செலுத்துதல்களை கூட்டி தனிநபர் வருமானம் கணக்கிடப்படுகிறது.

| |
|---|
| தனி நபர் வருமானம் = தேசிய வருமானம் - (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம் + மாற்று செலுத்துதல்கள் |

### செலவிடக்கூடிய வருமானம் (Disposable Income):

செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிநபர் செலவிடக்கூடிய வருமானத்தை குறிக்கிறது. தனிநபர் வருமானத்திலிருந்து நேர்முகவரிகளைக் கழித்தால் கிடைப்பது செலவிடக்கூடிய வருமானம். இந்த வருமானம் தான் தனிநபர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும்.

| |
|---|
| செலவிடக்கூடிய வருமானம் = தனிநபர் வருமானம் - நேர்முக வரிகள் |

### தலா வருமானம் (Per capita Income):

தலா வருமானம் என்பது ஓர் ஆண்டில் ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு நபரின் சராசரி ஆண்டு வருமானம் ஆகும். தேசிய வருமானத்தை மக்கள் தொகையால் வகுக்கக்கிடைப்பது தலா வருமானம்.

### உண்மை வருமானம் (Real Income)

பண வருவாய் என்பது தேசிய வருமானத்தை ஒரு ஆண்டில் உள்ள பொது விலை அளவுகளின் அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது. மாறாக தேசிய வருவாய் என்பது ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட முடிவுற்ற பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பை பண அளவுகளில் குறிப்பிடப்படுகிறது. உண்மை வருவாயை கீழ்கண்ட முறையில் கணக்கிடலாம்.

| |
|---|
| நிலையான விலையில் தேசிய வருமானம் = நடப்பு விலையில் தேசிய வருவாய் $\div P_1 / P_0$ |

$P_1$= நடப்பு ஆண்டு விலைக் குறியிடு

$P_0$ = அடிப்படை ஆண்டின் விலைக்குறியீடு

### GDP குறைப்பான் (GDP Deflator):

GDP குறைப்பான் என்பது GDP யில் குறிப்பிட்டுள்ள பண்டங்கள் மற்றும் பணிகளின் விலை மாற்ற குறியீட்டெண் ஆகும். இதுவும் ஒரு விலை குறியீட்டெண் ஆகும். கொடுக்கப்பட்ட ஆண்டில் பணமதிப்பு அடிப்படையில் கணக்கிடப்பட்ட GDP யை உண்மை GDP யால் வகுத்து, 100 ஆல் பெருக்கினால்,GDP குறைப்பானை கணக்கிடலாம்.

$$\text{GDP குறைப்பான்} = \frac{\text{பணமதிப்பு GDP}}{\text{உண்மை GDP}} \times 100$$

**தேசிய வருவாயை அளவிடும் முறைகள்:**

ஓர் ஆண்டில் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து பண்டங்கள் மற்றும் பணிகளின் மதிப்பை கணக்கிட்டு, அதனை பணமதிப்பில் மதிப்பிடப்படவேண்டும். அதாவது நமது சுய நுகர்வுக்காவோ அல்லது சேமிப்பிற்காகவோ பண்டங்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும் அதன் பண மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்க வேண்டும்.

தேசிய வருவாயை மூன்று முறைகளை பயன்படுத்தி அளவிடலாம். அவை: உற்பத்தி முறை, வருவாய் முறை மற்றும் செலவு முறை இவற்றை:

1. உற்பத்தி அல்லது மதிப்புக் கூடுதல் (Value added) முறை
2. வருமானம் அல்லது காரணிகளின் ஊதிய முறை மற்றும்
3. செலவு முறை

   இம்மூன்று முறைகளை சரியாக பயன்படுத்தி கணக்கிட்டால் உற்பத்தி வருமானம், செலவு இம்மூன்றின் மதிப்பும் சமமாக இருக்கும்.

| உற்பத்தி = வருமானம் = செலவு |
|---|

ஏனென்றால் இவ்மூன்று முறைகளும் இயல்பாகவே ஒரு சுழற்சியாக இருக்கும். நுகர்வை பூர்த்தி செய்ய உற்பத்தி தொடங்கப்படுகிறது. உற்பத்தி செய்ய உற்பத்திகாரணிகளை வேலைக்கு அமர்த்தி உற்பத்தி முடிந்த பிறகு வருமானம் பெருகும். பிறகு உற்பத்தி காரணிகளுக்கு ஊதியத்தை அளித்து அதன் மூலம் நுகர்வு செலவு செய்யப்படும்.

<table>
<tr><th colspan="3">மொத்த உள்நாட்டு உற்பத்தி – செலவுகள், காரணி வருவாய், உற்பத்தி கூட்டு முறை</th></tr>
<tr><th>GDP<br>(செலவு கூட்டுமுறை)</th><th>GDP<br>(காரணி வருவாய் முறை)</th><th>GDP<br>(உற்பத்தி முறை)</th></tr>
<tr><td>• நுகர்ச்சி<br>• அரசு செலவினங்கள்<br>• முதலீட்டுச் செலவினங்கள்<br>• இருப்புகளின் மதிப்பு மாறல்<br>• ஏற்றுமதி<br>• - இறக்குமதி<br>• = மொத்த உள்நாட்டு உற்பத்தி</td><td>• மக்களின் சம்பளம், கூலி, சுய வேலை செய்வோருக்கான சம்பளம்<br>• தனியார் துறை வியாபாரம் மூலம் கிடைக்கும் இலாபம்<br>• நில உரிமையாளர்கள் பெறும் வாடகை</td><td>• பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் கூட்டப்பட்ட மதிப்பு<br>• இத்துறைகள்<br>➢ முதன்மை<br>➢ இரண்டாம்நிலை<br>➢ தயாரிப்பு<br>➢ துணை நிறுவனங்கள்</td></tr>
</table>

**உற்பத்தி முறை (Product method):**

உற்பத்தி முறை என்பது ஒரு நாட்டின் உற்பத்தியை கணக்கிடுவது ஆகும். இம்முறை சரக்கு முறை என்றும் அழைக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஆண்டில் விவசாயம், தொழில், வணிகம் போன்ற துறைகளின் உற்பத்தியின் மொத்தமே தேசிய உற்பத்தி ஆகும். ஒரு துறையின் வெளியீடு (Output) மற்றொரு துறையின் உள்ளீடு (input) ஆகச் செல்ல வாய்ப்பு இருப்பதால் ஒரே பொருள் இரு முறை அல்லது பல முறை கணக்கில் வர வாய்ப்பு உள்ளது. இதற்கு இருமுறை

கணக்கிடல் என்று பெயர். இதனை தவிர்க்க இறுதி பொருட்களின் மதிப்பையோ அல்லது ஒவ்வொரு துறையிலும் ஏற்பட்ட மதிப்புக் கூட்டலையோ கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தியாவில் பண்ணை உற்பத்தியின் மொத்த மதிப்பு கீழ்க்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

1. 64 வகை விவசாயப் பொருள்களின் மொத்த உற்பத்தி மதிப்பிடப்படுகிறது. ஒவ்வொரு பயிரின் அதன் ஒரு ஹெக்டேருக்கான சராசரி (ீநச யஉநச) உற்பத்தியை கணக்கிட்டு அந்தந்தப் பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலப்பரப்பால் பெருக்கி பயிரின் உற்பத்தி கணக்கிடப்படுகிறது.

2. ஒவ்வொரு பொருளின் மொத்த உற்பத்தியும் சந்தை விலையால் மதிப்பிடப்படுகிறது.

3. இந்த 64 வகை பயிர்களின் மொத்த உற்பத்தி மதிப்பை எடுத்துக் கொண்டு விவசாயத்துறையின் மொத்த உற்பத்தியின் மதிப்பு கணக்கிடப்படுகிறது.

4. விவசாய உற்பத்தியின் நிகர மதிப்பு கணக்கிடுவதற்கு, மொத்த விவசாய உற்பத்தி மதிப்பிலிருந்து விதை, உரம், அங்காடி கட்டணம், சரிசெய்தல் மற்றும் தேய்மானம் போன்ற செலவுகள் கழிக்கப்படுகின்றன.

இதுபோல, மற்ற துறைகளுக்கும் (உதாரணம் கால்நடை, காடுகள், மீன், சுரங்கம், தொழிற்சாலை) மொத்த உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் சந்தை விலையால் பெருக்கி உற்பத்தியின் மொத்த மதிப்பு பெறப்படுகிறது. மேற்குறிப்பிட்ட விவசாயம் சார்ந்த பிற துறைகளின் மொத்த மதிப்பில் இருந்து இடு பொருட்களின் செலவு, தேய்மானம் ஆகியவற்றைக் கழித்து நிகர மதிப்பு கணக்கிடப்படுகிறது.

இவ்வாறுதான், பிற துறைகளின் உற்பத்தி நிகர பங்களிப்பின் மதிப்பு தேசிய வருவாயில் எவ்வளவு இருக்கிறது என கணக்கிடப்படுகிறது.

**முன்னேச்சரிக்கைகள்:**

பின்தங்கிய மற்றும் வளர்ந்து வரும் நாடுகளில் உற்பத்தி கையாளப்படுகிறது. இதில் பிழைகள் அதிகம் வர வாய்ப்புண்டு. இந்தியாவில் இம்முறை விவசாயம், சுரங்கம், தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருள்கள் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

1. ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது. உதாரணத்திற்கு, ஜவுளியின் விலைக்குள் நூலின் விலையும் நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே, பஞ்சு, நூல், துணி ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது ”பல முறை கணக்கில் சேர்த்தல்” என்ற பிழைக்கு வழிவகுக்கும்.

2. சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த பலவற்றை சந்தைப்படுத்தாமல் தனிப்பட்ட சொந்த நுகர்வுக்காக வைத்துக்கொள்ளலாம். அவற்றின் அளவையும் சந்தை விலையுடன் பெருக்கி மதிப்பைக் கண்டு தேசிய வருவாய் கணக்கில் சேர்க்க வேண்டும்.

3. இரண்டாம் முறையாக கைமாற்றப்பட்ட நீடித்த (Durable) பொருள்களின் வாங்குதல் மற்றும் விற்றல் ஆகியவற்றின பணமதிப்பை தேசிய வருவாயில் சேர்க்கக் கூடாது. உதாரணம் கைப்பேசி, கார், போன்ற பொருட்கள் இருமுறைகள் அல்லது அதற்கு மேல் விற்கப்படுகின்றன.

**வருமான முறை (Income Method):**

வருமான முறை என்பது தேசிய வருவாய் கணக்கிடல் பகிர்வு பகுதியிலிருந்து அணுகப்படுகிறது. உற்பத்தி நிலைகளில் உற்பத்திக் காரணிகள் பெற்ற அனைத்து வித ஊதியங்களையும் கூட்டி தேசிய வருமானத்தைக் கணக்கிடலாம். வருமான முறை, காரணிகள் சம்பாதிக்கும் முறை என்றும் அழைக்கப்படுகிறது.

**கணக்கிடுவதன் நிலைகள்:**

1. மொத்த நிறுவனங்களும் வெவ்வேறு தொழில் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றன.

2. காரணிகளின் வருவாய் மூன்று வகையான இனங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது உழைப்பாளர் வருமானம், மூலதன வருமானம் மற்றும் கலப்பு வருமானம்.

    1. உழைப்பாளர் வருமானம் - கூலி மற்றும் சம்பளம், சமூக பாதுகாப்புக்கு முதலாளியின் பங்கு, உற்பத்தி திறன் ஊக்கு (குசபைெந) ஊதியங்கள்.

    2. மூலதன வருமானம் - இலாபம், வட்டி, இலாப ஈவு மற்றும் இராயல்டி.

    3. கலப்பு வருமானம் - விவசாயம் மற்றும் பண்ணை சிறு தொழில் செய்வோர் மற்றும் பிற வேலைகளிலிருந்து கிடைக்கும் வருமானம்

3. உள்நாட்டு காரணி வருவாய்களுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் நிகர வருவாயை கூட்டுவதன் மூலம் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

$$Y = W + r + i + \pi + (R - P)$$

இதில்

W = கூலி, r = வாடகை, i = வட்டி, $\pi$ = இலாபம்

R = ஏற்றுமதி P = இறக்குமதி

மொத்த தேசிய வருவாய் கணக்கிடுவதில் பிற துறைகளான சிறு நிறுவனங்கள், வங்கி மற்றும் காப்பீடு, வாணிபம் மற்றும் போக்குவரத்து, கலை, வீட்டுவேலை செய்பவர்கள், பொது நிறுவனங்கள், வீட்டுச் சொத்த வருமானம் மற்றும் அயல்நாட்டு வாணிப பரிமாற்றம் போன்றவைகளின் வருவமானம் மதிப்பிடப்படுகிறது.

செலுத்துநிலைக் கணக்கில் (Balance of Payments), வெளிநாடுகளில் இருந்து வந்த அல்லது வெளிநாடுகளுக்குச் சென்ற தொகை தொடர்பான புள்ளி விவரங்கள் பெறப்படுகின்றன.

**முன்னேச்சரிக்கைகள்:**

பின்தங்கிய மற்றும் வளர்ந்துவரும் நாடுகளில் உற்பத்தி கையாளப்படுகிறது. இதில் பிழைகள் அதிகம் வர வாய்ப்புண்டு. இந்தியாவில் இம்முறை விவசாயம், சுரங்கம், தயாரிப்பு மற்றும் கைவினைப் பொருள்கள் துறைகளில் பயன்படுத்தப்படுகிறது.

1. இறுதி உற்பத்திக்கு எந்த ஒரு பொருள் மூலப் பொருளாகவோ அல்லது இடைநிலைப் பொருளாகவோ இருந்தால் அப்பொருளின் உற்பத்தியை கணக்கில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

2. ஒரே பொருள் பல இடங்களில் மதிப்பிடப்படும் வாய்ப்பு இம்முறையில் இருக்கிறது. உதாரணத்திற்கு, ஜவுளியின் விலைக்குள் துணியின் விலையும், துணியின் விலைக்குள் நூலின் விலையும், நூலின் விலைக்குள் பஞ்சின் விலையும் உள்ளது. எனவே, பஞ்சு, நூல், துணி ஆடைகள் ஆகியவற்றின் மொத்த மதிப்பினைக் கூட்டுவது ”பல முறை கணக்கில் சேர்த்தல்” என்ற பிழைக்கு வழிவகுக்கும்.

3. சொந்த நுகர்வுக்குப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் மதிப்பையும் தேசிய வருவாய் கணக்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும். உதாரணத்திற்கு விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த பலவற்றை சந்தைப்படுத்தாமல் தனிப்பட்ட சொந்த நுகர்வுக்காக வைத்துக்கொள்ளலாம். அவற்றின் அளவையும் சந்தை விலையுடன் பெருக்கி மதிப்பைக் கண்டு தேசிய வருவாய் கணக்கில் சேர்க்க வேண்டும்.

4. இரண்டாம் முறையாக கைமாற்றப்பட்ட நீடித்த (Durable) பொருள்களின் வாங்குதல் மற்றும் விற்றல் ஆகியவற்றின் பணமதிப்பை தேசிய வருவாயில் சேர்க்கக் கூடாது. உதாரணம். கைபேசி, கார், போன்ற பொருட்கள் இருமுறைகள் அல்லது அதற்கு மேல் விற்கப்படுகின்றன.

### செலவு முறை (Expenditure of outlay method):

இம்முறையில், ஓர் ஆண்டில் சமுதாயத்தில் உள்ளவர்களால் மேற்கொள்ளப்படும் மொத்த செலவுகள் அனைத்தையும் கூட்டி தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. தனிநபர் சுய நுகர்வு செலவுகள், நிகர உள்நாட்டு முதலீடு, அரசின் கொள்முதல் செலவு, முதலீட்டு பொருள் வாங்கும் செலவு மற்றும் நிகர ஏற்றுமதி போன்ற அனைத்து செலவுகளையும் கூட்டி செலவு முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

மொத்தச் செலவும் கீழ்க்கண்ட முறையில் சமன்பாட்டின் மூலம் கணக்கிடப்படுகிறது.

$$GNP = C + I + G + (X - M)$$

C– தனியார் நுகர்வுச் செலவு

I – தனியார் முதலீட்டு செலவு

G – அரசின் கொள்முதல் செலவு

X – M = நிகர ஏற்றுமதி

**முன்னேச்சரிக்கைகள்:**

1. **ஏற்கனவே வாங்கிய பொருளை மீண்டும் வாங்குதல்**

   ஏற்கனவே வாங்கப்பட்ட கார், இரு சக்கர வாகனம், கைபேசி மற்றும் இயந்திரம் போன்ற பொருள்களை இரண்டாம் முறை வாங்கும் போது மேற்கொள்ளப்படும் செலவுகளை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது.

2. **பங்கு மற்றும் பத்திரங்கள் வாங்குதல்:**

   பழைய பங்கு, பத்திரங்களை இரண்டாம் நிலை அங்காடிகளில் வாங்கும் போது ஏற்படும் செலவுகளை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது.

3. **மாற்று செலுத்துநிலை**: அரசாங்கம் செய்யும் மாற்றுச் செலுத்துதல்களான முதியோர் ஓய்வூதியம் போன்றவற்றிற்கு செய்யும் செலவுகளை சேர்க்கக்கூடாது.

4. **இடைநிலை பொருள்களுக்கு செய்யும் செலவுகள்**: விவசாயிகள் விதை மற்றும் உரம் வாங்க செய்யும் செலவுகள், துணி தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் பருத்தி மற்றும் நூல்களுக்கு செய்யும் செலவுகள் போன்றவற்றை தேசிய வருவாய் கணக்கிடலில் சேர்க்கக் கூடாது. முடிவடைந்த பொருட்களின் செலவுகளை மட்டுமே சேர்க்க வேண்டும்.

**காரணி செலவு (FC)**

- பொருள்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும் துறைகளில் பலவகையான உள்ளீடுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த உள்ளீடுகள் உற்பத்தி காரணிகள் என அழைக்கப்படுகிறது. அவையாவன, நிலம், உழைப்பு, முதல் மற்றும் தொழில் முனைவு.
- உற்பத்தியாளர்கள் மேற்கூறிய உற்பத்தி காரணிகளுக்கு, பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்ய செலவு செய்கின்றன. இந்த செலவுகள் பொருளின் விலையில் சேர்க்கப்படுகிறது.
- காரணி செலவு என்பது ஒரு நிறுவனம் பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்யும் போது உற்பத்தி காரணிகளுக்கு செய்யும் செலவை குறிப்பது ஆகும்.
- இயந்திரங்களை வாடகைக்கு எடுத்தல், நிலம் மற்றும் இயந்திரம் வாங்குதல், கூலி மற்றும் சம்பளம் கொடுத்தல், மூலதனத்தை பெற செய்யும் செலவு (வட்டி) மற்றும் தொழில் முனைவோருக்கு கிடைக்கும் இலாபம் போன்றவை உற்பத்தி செலவிற்கான உதாரணங்கள்

ஆகும்.

- அரசிற்கு செலுத்தும் வரிகள் உற்பத்தி செலவில் சேர்ப்பது இல்லை. ஏனெனில் வரிகள் நேரடியாக உற்பத்தி நடவடிக்கைகளில் பங்கு பெறுவது இல்லை.

- உற்பத்தியில் உதவித்தொகைகள் (Subsidies) நேரடியான விளைவை ஏற்படுத்துவதால், இத்தொகைகள் காரணி செலவில் சேர்க்கப்படுகின்றன.

**சந்தை விலை (Market Price (MP)**

- உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் சந்தையில் விலைக்கு விற்க்கப்படுவதை குறிக்கிறது.
- சந்தை விலை என்பது நுகர்வோர்கள் பொருளுக்கான விலையை விற்பனையாளர்களிடம் செலுத்தி பொருளை பெறுவது ஆகும்.
- சந்தை விலை நிர்ணயிக்கின்ற போது, காரணி விலையில் (Factor Price) அரசு விதித்த வரி சேர்க்கப்படுகிறது. மாறாக அரசு வழங்கிய உதவித் தொகைகள் காரணிவிலையில் குறைக்கப்படுகிறது.
- அரசு விதிக்கும் வரிகள் உற்பத்தியாளர்களுக்கு செலவாக இருப்பதால், அவைகள் விலையில் சேர்க்கப்படுகின்றன. மாறாக, அரசு செலுத்திய உதவி தொகைகள் ஏற்கனவே காரணிச் செலவில் சேர்க்கப்பட்டுள்ளதால், இத்தொகைகள் விலையில் சேர்க்கப்படுவது இல்லை.
- ஆகவே சந்தை விலை (MP) = காரணி செலவு (FC) = உதவித்தொகை
- அல்லது காரணி செலவு = சந்தை விலை (MP)– மறைமுகவரி + உதவித்தொகைகள்

தேசிய வருவாய் (NNPfc) = ஒரு நாட்டில் இருக்கும் அனைத்து உற்பத்தி துறைகளும் உற்பத்தி செய்த மொத்த மதிப்பு – தேய்மானம் - நிகர மறைமுகவரி நிகர வெளிநாட்டு காரணிகளின் வருமானம்

நிகர மறைமுகவரிகள் = மறைமுகவரி – உதவித்தொகைகள்

மொத்த மதிப்பு கூட்டல் = உற்பத்தியின் மதிப்பு - இடைநிலை நுகர்வு

உற்பத்தியின் மதிப்பு = விற்பனை + இருப்பில் மாற்றம்

இருப்பில் மாற்றம் = முடியும் இருப்பு (Closing Stock) - தொடக்க இருப்பு (opening stock)

**குறிப்பு:** ஒரு ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த பொருள்களும் விற்க்கப்பட்டால், மொத்த உற்பத்தி, விற்பனைக்கு சமமாக இருக்கும்.

உற்பத்தியின் மதிப்பு = விலை × விற்பனை அளவு

$GDP_{MP}$ = தனியார் இறுதி நுகர்வு செலவு + அரசின் இறுதி நுகர்வு செலவு + மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் + நிகர ஏற்றுமதி (ஏற்றுமதி - இறக்குமதி)

**தேசிய வருவாய் பகுத்தாய்வின் முக்கியத்துவம்:**

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தேசிய வருவாய் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. தேசிய வருவாய் பொருளாதாரத்தின் கணக்கு அல்லது ”சமூகக் கணக்கு” (Social Accounting) எனச் சொல்லப்படுகிறது. தேசிய வருவாய் பகுத்தாய்வின் முக்கியத்துவம் பின்வருமாறு.

1. தேசிய வருவாய் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் தேசிய வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது. மேலும் பொருள்கள் மற்றும் பணிகள் எவ்வாறு உற்பத்தி செய்யப்படுகின்றன. பகிரப்படுகின்றன. செலவு செய்யப்படுகின்றன. சேமிக்கப்படுகின்றன. மற்றும் விரிவிதிக்கப்படுகின்றன போன்றவைகளை அறிய இயலும்.

2. தேசிய அளவிலான பணவியல் மற்றும் பொதுநிதிக் கொள்கைகளை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்ல கடைபிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் தேசிய வருவாய் ஆய்வு உதவுகிறது.

3. திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை தேசிய வருவாய் கணக்கீடு அளிக்கின்றது.

4. துறைவாரியான பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், தேசிய வருவாய் விவரங்கள் பயன்படுகின்றன.

5. தேசிய வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது. தலா வருமானம் ஒரு நாட்டின் பொருளாதார நலனை அறிய பயன்படுகிறது.

6. ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளின் வருமானப் பகிர்வை தெரிந்து கொள்ள தேசிய வருவாய் பயன்படுகிறது.

7. பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி –GDP விகிதம், நடப்புக் கணக்கு பற்றாக்குறை –GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை –GDP விகிதம், கடன் - GDP விகிதம் போன்றவற்றை கண்டறிய உதவுகிறது.

**தேசிய வருவாய் கணக்கீட்டில் உள்ள சிரமங்கள்:**

தேசிய வருவாய் கணக்கீடு செய்யும் போது இந்தியாவின் சிறப்புக் இயல்புகளை மனதில் கொள்ள வேண்டும். இந்தியா ஒரு ஒழுங்குபடுத்தப்படாத, அன்றாட பிழைப்பை நடத்தும் சிறு தொழில்களையும் பண்ட மாற்று அங்காடிகளையும் உள்ளடக்கிய நாடு. எனவே ஒரு சரியான தேசிய வருமான மதிப்பீடு தருவதில் சிரமங்கள் இருக்கின்றன. சில சிரமங்கள் கீழே வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

**மாற்றுச் செலுத்துதல்கள் (Transfer Payments):**

ஓய்வூதியம், வேலையின்மைக்கான உதவித்தொகை, மானியங்கள் போன்றவற்றை அரசு அளிக்கிறது. இவைகள் அரசின் செலவுகள் ஆகும். ஆனால் இவைகளை தேசிய வருவாயில் சேர்ப்பதில்லை. தேசியக்கடனுக்காக செலுத்தப்படும் வட்டியும் இது போன்றதே.

**தேய்மானங்கள் கொடுப்பனவு மதிப்பிடுவதில் சிக்கல் (Difficulties in assessing depreciation allowance):**

தேய்மானம் கொடுப்பளவு, விபத்து இழப்பீடு மற்றும் பழுது கட்டணங்கள் போன்றவற்றை தேசிய வருவாயிலிருந்து கழிப்பது என்பது மிக எளிதானது அல்ல. இவைகளை அதிக கவனத்துடன் சரியாக மதிப்பீடு செய்து கழிக்க வேண்டும்.

**பணம் செலுத்தப்படாத சேவைகள் (Unpaid Services):**

இந்தியாவில் அதிகமான பெண்கள் வீட்டிலேயே அதிக வேலை செய்கின்றனர். உணவு தயாரித்தல், தையல், பழுது பார்த்தல், துவைத்தல், சுத்தம் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் போன்ற வேலைகளையும் எந்தவித பண வருமானமும் இன்றியும் நட்பு, பாசம், அன்பு, வருமானமும் இன்றியும் நட்பு, பாசம், அன்பு, மரியாதை போன்ற பணத்தால் மதிப்பிட முடியாத காரணங்களுக்காகவும் வேலை செய்கிறார்கள். ஆனால் அவர்களுடைய அர்ப்பணிப்பு தேசிய உற்பத்தியில் சேர்க்கப்படுவதில்லை.

**சட்டவிரோத நடவடிக்கையிலிருந்து பெறும் வருமானம் (Income from illegal Activities):**

சூதாட்டம், கடத்தல் மற்றும் சட்ட விரோதமாக மதுவை தயாரித்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் பெறப்படும் வருமானம் தேசிய வருமானத்தில் சேர்க்கப்படுவது இல்லை.

இந்த நடவடிக்கைகள் மக்களின் விருப்பத்தை நிறைவு செய்தாலும் சமுதாய ரீதியில் உற்பத்தியைச் சார்ந்தது என்று எடுத்துக் கொள்ள முடியாது.

### சுய நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் (Production for self – consumption and changing price):

விவசாயிகள் தங்களின் சுய நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர். சந்தையில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி தேசிய வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.

உற்பத்தி முறையில் தேசிய வருவாய் கணக்கிடுதல் என்பது நடப்பு சந்தை விலையில் முடிவடைந்த பொருள்கள் மற்றும் பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும். ஆனால் விலைகள் ஒரே மாதிரி நிலையாக இருப்பது இல்லை. இந்த பிரச்சனைக்கு தீர்வுகான, பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணை பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை தேசியவருவாயை கணக்கிடுகின்றனர்.

### மூலதன இலாபம்(Capital Gains):

மூலதன சொத்துக்களான வீடு மற்றும் பிற சொத்துக்கள், பங்குகள் போன்றவற்றை அதிக விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் மூலதன இலாபம் கிடைக்கிறது. தேசிய வருவாய் கணக்கீட்டில் மூலதன இலாபம் சேர்க்கப்படுவது இல்லை.

### புள்ளி விவர சிக்கல் (Statistical Problems):

புள்ளிவிவரங்களை சேகரிப்பதில் பல பிரச்சினைகள் உள்ளன. ஒரே விவரத்தை பல முறை கணக்கில் சேர்ப்பது, நம்பகத்தன்மை, புள்ளி விவரங்கள் கிடைக்காமை, சேகரிப்பவர்களின் திறன் குறைவு, அர்ப்பணிப்பு இன்மை ஆகியவை தேசிய வருவாய் கணக்கிடுதலில் பிரச்சனைகளைத் தரலாம்.

1. விவசாயத்துறையில் உற்பத்தி அளவை கணக்கிடுவது சிரமம். மேலும் கால்நடைத்துறையின் உற்பத்தி போன்றவை பற்றிய புள்ளிவிவரங்கள் சரியாகவும் முழுமையாகவும் கிடைக்காது.

2. பல்வேறு மொழி மற்றும் கலாச்சாரம் போன்ற காரணத்தினாலும் புள்ளி விவரங்களை மதிப்பிடுவதில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

3. அரசு அலுவலர்கள் - மக்கள் உறவு நம் நாட்டில் சுமூகமாக இல்லாத நிலையில் பள்ளி விவரங்கள் சேகரிப்பதில் பிரச்சனைகள் வருகின்றன. மக்கள் உண்மையான புள்ளிவிவரங்கள் தருவதில்லை.

4. புள்ளி விவரங்களை சேகரிக்கும் பெரும்பான்மையான அலுவலர்கள் பயிற்சி அற்றவர்களாகவும், திறமையற்றவர்களாகவும் உள்ளனர்.

   ஆகையினால் தேசிய வருவாய் மதிப்பீட்டில் துல்லிய தன்மை இல்லாமலும், புள்ளி விவரங்கள் போதுமானதாக இல்லாமலும் இருக்கின்றன. 10 சதவிகிதம் அதிகமாகவோ அல்லது குறைத்தோ மதிப்பிடப்படுகின்றது. இத்தகைய காரணங்களினால் இந்தியாவின் GDP யின் மதிப்பு அமெரிக்க டாலருக்கு ஏறக்குறைய 2 டிரில்லியன் US$ யிலிருந்து 5 டிரில்லியன் US$ வரை வேறுபடுகிறது.

### தேசிய வருவாய் மற்றும் சமூகக் கணக்கிடுதல் (National Income and Social Accounting):

சமூகக் கணக்கிடுதல் மூலமாகவும் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. சமூகக் கணக்கிடுதல் முறையில் நிறுவனங்கள், குடும்பங்கள், அரசு மற்றும் இதுபோன்ற அமைப்புகளின் பரிமாற்றங்கள் பதியப்பட்டு இவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளும் கண்டறியப்படுகின்றன. சமூகக் கணக்கிடுதலை தயாரிப்பது பொருளியல் அறிஞர்களுக்கு கொள்கைகளை உருவாக்க பயன் உள்ளதாக இருக்கும். ஏனெனில் இது பொருளாதார அமைப்பின் பல்வேறு துறைகளுக்கு இடையே

உள்ள புள்ளியியல் மற்றும் பொருளாதார காரணிகளுக்கு இடையேயுள்ள தொடர்புகளை விளக்குகிறது. மேலும் எதிர்கால பொருளாதார நிலையை துல்லியமாக கணிப்பதற்கும் உதவுகிறது.

**சமூக கணக்கிடுதல் மற்றும் துறைகள்: (Social Accounting and Sector):**

இம்முறையில் ஒரு நாட்டின் பொருளாதாரம் பல்வேறு துறைகளாக பிரிக்கப்படுகிறது.தனிநபர்கள் உள்ளடக்கிய ஒரு குழு அல்லது பல நிறுவனங்கள் சேர்ந்த ஒரு குழு போன்றவைகளுக்கு இடையே நடைபெறும் பொருளாதாரப் பரிமாற்றங்களை ஒரு துறை என்கிறோம். ஒரு நாட்டின் பொருளாதாரம் கீழ்கண்ட துறைகளாக பிரிக்கப்படுகிறது.

1. நிறுவனங்கள்
2. குடும்பங்கள்
3. அரசு
4. வெளிநாட்டு வாணிபம்
5. மூலதன துறை

❖ **நிறுவனங்கள்:**

நிறுவனங்கள் உற்பத்திக் காரணிகளைப் பணியில் அமர்த்தி பண்டங்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்கின்றன.

❖ **குடும்பங்கள்:**

குடும்பங்கள் தங்கள் உழைப்பினை அளித்து கூலியை பெற்று, அதன் மூலம் பண்டங்கள் மற்றும் பணிகளைப் வாங்குகின்றன. அதாவது ஊதியத்தினைப் பெற்று பொருட்களை வாங்குகின்றது. நிறுவனங்கள் குடும்பங்களின் பணியை பெற்று கூலியை தருகின்றன. குடும்பங்கள் கூலியை பெற்று நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள் மற்றும் பணிகளை வாங்குகின்றன.

❖ **அரசு :**

அரசுத் துறையில் பல நிலைகள் உள்ளன. கிராமம், வட்டம், மாவட்டம், மாநிலம், மத்திய அரசு என பல நிலைகள் உள்ளன. எடி மற்றும் பீகாக் (Edey and Peacock) கூற்றுப்படி, அரசு என்பது "ஒன்று சேர்க்கப்பட்ட நபர்கள்" எனக் குறிப்பிடுகின்றனர். வரி, தண்டனை, கட்டணம் மற்றும் கடன் மூலமாக அரசு நிதியைத் திரட்டி பண்டங்களையும் பணிகளையும் வாங்குகிறது. பாதுகாப்பு, பொது சுகாதாரம், கல்வி ஆகியவற்றை மக்களுக்கு வழங்குவதுதான் அரசின் முக்கிய பணி ஆகும். பொது நிறுவனங்களான அஞ்சல் அலுவலகம் மற்றும் இரயில்வே துறைகள் அரசுத்துறையாக சேர்க்கப்படாமல் நிறுவனங்களாக கருதப்படுகின்றன.

❖ **வெளிநாட்டு வாணிகம்**

ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகள் மூலம் கிடைக்கும் வருமானம், வெளிநாட்டு கடன்கள். வெளிநாட்டு மூலதன வருமானம் மற்றும் செலுத்துதல்கள் போன்றவை வெளிநாட்டுத் துறையாகக் கருதப்படுகிறது.

❖ **மூலதன துறை:**

மூலதனத்துறை சேமிப்பையும் முதலீட்டையும் உள்ளடக்கியது. காப்பீட்டு நிறுவனம், வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஆகியவற்றின் பண பரிமாற்றங்கள் இதில் அடங்கும். மூலதனத்துறை, நிறுவனங்களாக கருதப்படுவது இல்லை. மாறாக தொழில் நிறுவனங்களுக்கு நிதி உதவி செய்து வருகின்றன.

GDP யில் துறைகளின் பங்கை மதிப்பிடுவதற்கு ஒரு நாட்டின் பொருளாதாரம் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் துறை என பிரிக்கப்படுகிறது.

**தேசிய வருவாயும் பொது நலனும் (National Income and Welfare):**

ஒரு நாட்டின் வளர்ச்சியும் பொருளாதார அந்தஸ்தும் அந்நாட்டின் தேசிய வருவாயைப் பொறுத்தே அமைகிறது. புனீ யில் தலைவீத வருமானம் மற்றும் அதன் ஆண்டு வளர்ச்சி வீதம் அடிப்படையில் நாடுகளின் பொருளாதார முன்னேற்றம் அளவிடப்படுகிறது. அதிக தலைவீத வருமானம் உடைய நாடு, நல்ல வாழ்க்கைத்தரத்துடன் அதிக பொருளாதார நலனையும் பெற்றதாக இருக்கும்.

ஆனால் GDP அல்லது தலைவீத வருமானம் அதிகரித்தால் பொருளாதார நலனும் அதிகரிக்க வேண்டும் என்பது இல்லை. பொருளாதார நலன் குறியீட்டெண்ணாக தலைவீத வருமானம் உள்ள போதிலும் கீழ்க்கண்ட குறைகளை கொண்டுள்ளது.

1. பொருட்கள் மற்றும் பணிகளின் அளிப்பை பொது நலன் சார்ந்து உள்ளது. நுகர்வு பொருட்களை காட்டிலும் மூலதன பொருட்கள் அதிகமாக இருந்தால், பொருளாதார நலனின் முன்னேற்ற குறைவாக இருக்கும். அதே போன்று ஆடம்பர பொருட்களின் உற்பத்தி பணக்காரர்களுக்காக மட்டுமே இருக்கும்.

2. இயற்கை வளங்களான காற்று, நீர் மற்றும் மண் போன்றவற்றை மாசுபடுத்தி அதிகமான GDP யை பெற்றால் பொருளாதார நலன் குறையும்.

3. இராணுவ தளவாடங்கள் உற்பத்தி அதிகரிப்பதினால் தேசிய உற்பத்தி அதிகரித்தாலும் பொருளாதார நலன் குறையும்.

4. பெண்களுக்கு வேலைவாய்ப்பை தருதல் மற்றும் உழைப்பாளர்களை அதிக நேரம் வேலை செய்ய வைத்தல் போன்றவற்றின் மூலமாக தலைவீத வருமானத்தை அதிகரிக்கலாம். ஆனால் பொருளாதார நலனில் முன்னேற்றம் இருக்காது.

ஆகவே PQLI என்பது பொருளாதார நலனை கணக்கிடுவதில் முக்கிய குறியீடடெண்ணாக உள்ளது. மக்களின் வாழ்க்கை தரம், வாழும் காலம் மற்றும் கல்வியறிவு போன்றவை PQLI (Physical Quality of Life Index) உள்ளடங்கி இருக்கிறது.

**தேசிய வருவாய் மற்றும் நாட்டின் செல்வம் அரிக்கப்படுதல்** (National Income & Erosion of National wealth):

அதிகமான GDP யை அடையவேண்டும் என்பதற்காக நாட்டின் இயற்கை வளங்கள் அதிக அளவில் அரிக்கப்படுகின்றன அல்லது சேதப்படுத்தப்படுகின்றன. இதனால் எதிர்கால வளர்ச்சி குறைகிறது. ஆகையால் தேசிய வருவாயை கணக்கிடும் போது, இயற்கை வளங்களின் இழப்பை தேசிய வருவாயிலிருந்து கழிக்க வேண்டும்.

**US$ அடிப்படையில் தேசிய வருமானம் (National income in terms of US$):**

தேசிய வருவாயைக் குறிப்பிடும் பணத்தின் மதிப்பை வைத்தும் ஒரு நாட்டின் பொருளாதார நிலைமையை அறியலாம். உதாரணத்திற்கு இந்திய தேசிய வருவாயை அமெரிக்க பணமான டாலரில் சொல்ல வேண்டும். இதன் விளைவாக இந்திய தேசிய வருமானம் மிகக் குறைவாகத் தோன்றலாம். ஆனால் வாங்கும் சக்தியின் அடிப்படையில் அளவிட்டால் இந்தியத் தேசிய வருமானம் அதிகமாகத் தோன்றும்.

**சமூக மற்றும் சுற்றுச்சூழல் செலவு (Social and Environmental Cost):**

பொருளாதார நுகர்வு பண்டங்களை உற்பத்தி செய்யும் போது, பல சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயக் கேடுகள் உருவாக்கப்படுகின்றன. தேசிய வருவாய் கணக்கிடும் போது இவைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

**தொகுப்புரை:**

ஒரு நாட்டின் பொருளாதார செயல்திறன் அல்லது உற்பத்தி செயல்திறனை தேசிய வருவாய் விளக்குகிறது. பொருளாதார வல்லுநர்கள், திட்டமிடுபவர்கள், அரசு, வியாபாரிகள் மற்றும் IMF, உலக வங்கி போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் தேசிய வருவாய் பற்றிய புள்ளி விவரத்தை பயன்படுத்துகின்றன. நாட்டின் பல்வேறு நோக்கங்களுக்காக இந்த புள்ளி விபரங்களை பகுத்தாய்வு செய்கின்றன. மக்களின் வாழ்க்கைத்தரம் அதிகரித்துள்ளதா என்பதை கண்டறிய தேசிய வருவாய் உதவுகிறது. மேலும் பிற நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரத்தோடு ஒப்பிட்டு பார்க்கவும் தேசிய வருவாய் பற்றிய புள்ளி விவரம் பயன்படுகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சியின் அளவை கணக்கிட தேசிய வருவாய் பயன்படுத்தப்படுகின்றது.

12 வது பொருளியல்

## அலகு 4

## நுகர்வு மற்றும் முதலீடு சார்புகள்


**அறிமுகம்**

இரண்டாம் அத்தியாயத்தில் நாட்டு வருமானம் மற்றும் அதன் அளவீடு, முக்கியத்துவம் மற்றும் சிக்கல்களைப் பற்றி பார்த்தோம். இந்த அத்தியாயம் நுகர்வுச் சார்பு மற்றும் முதலீட்டுச் சார்பு பற்றி விளக்குகிறது. இது நாட்டு வருமானத்தை பாதிக்கும் முக்கிய காரணியாக செயலாற்றுகிறது.

நாட்டு வருமான வளர்ச்சியை முடுக்கி விடுவதுதான் பேரியல் பொருளாதாரத்தின் முக்கிய நோக்கமாகும். தேசிய வருவாயானது நுகர்வு பண்டங்கள் (C) மற்றும் முதலீட்டுப் பண்டங்களை (I) உள்ளடக்கி இருப்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். முதலீட்டுக்கும் தேசிய வருவாய்க்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. முதலீட்டை அதிகரிப்பதால் எந்த அளவுக்கு தேசிய வருவாய் அதிகரிக்கும் என்பதை ''பெருக்கி'' காட்டுகிறது. அந்த 'பெருக்கியின்' மதிப்பு நுகர்வுச் சார்பு அல்லது இறுதிநிலை நுகர்வு நாட்டத்தைப் பொறுத்தே அமைகிறது. நுகர்வுச் சார்பு என்பது நுகர்வுச் செலவுக்கும் தேசிய வருவாய்க்கும் உள்ள தொடர்பாகும். தேசிய வருவாயில் செலவிடப்படாமல் உள்ள தொகை முதலீடு ஆகும். இது பின் மூலதனமாக மாறுகிறது. நுகர்வுச் செலவிற்கும் மூலதனச் செலவிற்கும் உள்ள தொடர்பை முடுக்கி கோட்பாடு விளக்குகிறது. இவை அனைத்தும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை.

இந்த அத்தியாயத்தில் நுகர்வுச் சார்பு, நுகர்வு சார்ந்த உளவியல் கோட்பாடு, முதலீட்டுச் சார்பு, பெருக்கி, முடுக்கி போன்றவற்றை அறியலாம்.

**நுகர்வுச் சார்பு**
**நுகர்வுச் சார்பின் பொருள்**




நுகர்வுச் சார்பு

வருவாய்க்கும் நுகர்வுக்கும் உள்ள தொடர்பையே ''நுகர்வு சார்பு'' அல்லது ''நுகர்வு நாட்டம்'' என்கிறோம். இது ''மொத்த நுகர்வு மற்றும் மொத்த நாட்டு வருமானம் ஆகிய இரு ஒட்டுமொத்தத்திற்கிடையேயான சார்பு தொடர்பாகும்''.

இதனை $C= f(Y)$ எனலாம்.
இதில் $C =$ நுகர்வு
$Y =$ வருமானம்
$f =$ சார்பு

எனவே நுகர்வுச் சார்பு நுகர்வு மற்றும் வருமானத்திற்கிடையேயான சார்புத் தொடர்பை விளக்குகிறது. $C =$ சார்பு மாறி, $Y =$ சாரா மாறியாகவும் உள்ளது.

இங்கு வருவாய் மற்றும் நுகர்வு மட்டுமே பேசப்படுகின்றன. இவற்றைப் பாதிக்கக்கூடிய எத்தனையோ மாறிகள் இருக்கலாம். அவை அனைத்திலும் மாற்றம் இல்லை என அனுமானித்தே இந்த சார்பு விளக்கப்படுகிறது.

நுகர்வுச் சார்பு அட்டவணை பல்வேறு வருமான நிலைகளில் உள்ள பல்வேறு நுகர்வுச் செலவினைக் காட்டுவதாகும். கீழ்க்காணும் ஒரு கற்பனை அட்டவணை நுகர்வுச் சார்பை விளக்குகிறது.

அட்டவணை 1: வருமானம் - நுகர்வு அட்டவணை (ரூ. கோடிகளில்)

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S |
|---|---|---|
| 0 | 20 | -20 |
| 60 | 70 | -10 |
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |
| 300 | 270 | 30 |
| 360 | 320 | 40 |

$$C = 100 + 0.8\,Y$$

என்று கொள்ளும் போது MPC = 0.8

வருமானம் பூஜ்யம் (Y=0) ஆனாலும் நுகர்வுச் செலவு 100 ஆக (C=100) இருக்கும். வருமானம் 100 (Y=100) எனில் நுகர்வுச் செலவு 180 (C=180) ஆகவும். வருமானம் 200 (Y=200) எனில் நுகர்வுச் செலவு 260 (C=260) ஆகவும், வருமானம் 300 (Y=300) எனில் நுகர்வுச் செலவு 340 (C= 340) ஆகவும் இருக்கும்.

Y= 300 எனில்

C= 340 ஆக இருக்கும் போது

$(MPC = \frac{\Delta c}{\Delta y} = 0.8)$

கணிதரீதியாக

C = a+b Y or C= 20 + 0.8 Y

இதில் a > o மற்றும் b < 1


C= நுகர்வு, a=20 = நிலையானது

லு ஶ்ரீ வருமானம்

b= MPC ( இறுதிநிலை நுகர்வு நாட்டம்)

$= 0.8 = \frac{\Delta c}{\Delta y}$

மேற்காணும் அட்டவணையில் நுகர்வு செலவு அதிகரிப்பதானது என்பது அதிகரிக்கும் வருமானத்தைச் சார்ந்து உள்ளது. இங்கு வருமானம் பூஜ்யமாக இருந்தாலும் மக்கள் ஏற்கனவே உள்ள சேமிப்பை சாப்பிடுவதற்கு செலவு செய்பவர் அப்பொழுதுதான் உயிர்வாழ முடியும் (தன்னாட்சி நுகர்வு)




இந்த வரைபடத்தில் வருமானம் M =120 ஆக இருக்கும் போது நுகர்வும் (C) 120 ஆக உள்ளது ( B–என்னும் புள்ளியில்)

வருவாய் Y=180 ஆக அதிகரிக்கும் போது நுகர்வு C =170 ஆக உயர்கிறது. (S என்னும் புள்ளியில்) Y 360 ஆக உயர்ந்தால், C=320, S=40.

மேற்காண் வரைபடத்தில் வருமானம் படுகிடைக் கோட்டிலும், நுகர்வு செங்குத்துக் கோட்டிலும் விளக்கப்படுகிறது. 45-டிகிரி கோட்டின் எல்லா புள்ளியிலும் நுகர்வும் வருமானமும் சமமாக உள்ளது. வருமான மாற்றத்திற்கு சமமான அளவில் நுகர்வும் மாறும் என்ற எடுகோளைக் கொண்டுள்ளதால் நேர்கோட்டு நுகர்வுச் சார்பாக உள்ளது.

நுகர்வுச் சார்பானது நுகர்வுக்காக செலவிடும் தொகையை மட்டும் அளவிடாமல், சேமிக்கப்பட்ட தொகையையும் சேர்த்து மதிப்பிடுகிறது. 45° கோடு என்பது பூஜ்ய சேமிப்பையும், C என்னும் கோடு நுகர்வு மற்றும் சேமிப்பின் பகிர்வைக் காட்டுகிறது.

**முக்கிய கருத்துருக்கள்**

i. சராசரி நுகர்வு நாட்டம் $= \frac{c}{y}$ = நுகர்வு/வருவாய்

ii. இறுதி நிலை நுகர்வு நாட்டம்

$= \frac{\Delta c}{\Delta y}$ =நுகர்வு நாட்டம்/வருவாய் மாற்றம்

iii. சராசரி சேமிப்பு நாட்டம் = $\frac{s}{y}$ = சேமிப்பு/வருவாய்

iv. இறுதிநிலை சேமிப்பு நாட்டம்

$= \frac{\Delta s}{\Delta y}$ = சேமிப்பு மாற்றம்/வருவாய் மாற்றம்

1. **சராசரி நுகர்வு நாட்டம்**

வருமானத்திற்கும் நுகர்வுக்குமான வீதமே சராசரி நுகர்வு நாட்டமாகும். கணித ரீதியாக

$$APC = \frac{c}{y}$$

இங்கு

C- நுகர்வு
Y- வருமானம்

**2. இறுதி நிலை நுகர்வு நாட்டம்**

வருமான மாற்றத்திற்கும் நுகர்வு மாற்றத்திற்கிடையேயான வீதமே இறுதிநிலை நுகர்வு நாட்டம் என வரையறை செய்யப்படுகிறது. கணித ரீதியாக

$$MPC = \frac{\Delta C}{\Delta Y}$$

இங்கு

$\Delta C$= நுகர்வு மாற்றம்
$\Delta Y$= வருமான மாற்றம்
MPC – நேர்மறை எண் ஆனால் ஒன்றுக்கும் குறைவானது

$$0 < \frac{\Delta C}{\Delta Y} < 1$$

**3. சராசரி சேமிப்பு நாட்டம் (APS)**

வருமானத்திற்கு, சேமிப்பிற்குமிடையேயான வீதமே சராசரி சேமிப்பு நாட்டம் எனப்படும். சராசரி சேமிப்பு நாட்டம் என்பது மொத்த சேமிப்பை மொத்த வருவாய் வகுத்தால் கிடைக்கக்கூடியதாகும். வேறுவகையில் கூறினால் மொத்த வருவாய்க்கும், மொத்த சேமிப்பிற்கிடையேயான வீதமாகும். கணித ரீதியாக

$$APS = \frac{S}{Y}$$

இங்கு

S = சேமிப்பு
Y = வருமானம்

**4. இறுதி நிலை சேமிப்பு நாட்டம்**

வருமான மாற்றத்திற்கும் சேமிப்பு மாற்றத்திற்கும் இடையேயுள்ள வீதமே இறுதிநிலை சேமிப்பு நாட்டமாகும்.

இறுதி நிலை சேமிப்பு நாட்டத்தை அறிய சேமிப்பு மாற்றத்தை, வருமான மாற்றத்தினால் வகுத்தால் கிடைக்கும். கணித ரீதியாக

$$MPS = \frac{\Delta S}{\Delta Y}$$

இங்கு

= சேமிப்பு மாற்றம்
= வருமான மாற்றம்

மேலும் MPC + MPS = 1
MPS = 1- MPC மற்றும் MPC= 1-MPS

பொதுவாக சராசரி நுகர்வு நாட்டம் சதவீதமாகவும், இறுதிநிலை நுகர்வு நாட்டம் பின்னமாகவும் இருக்கும்.

**அட்டவணை 2 APC, MPC, APS மற்றும் MPS யை கணக்கிடுதல்**

| வருமானம் Y | நுகர்வு C | APC % C/Y | APS % S/Y | MPC ΔC/ΔY | MPS ΔS/ΔY |
|---|---|---|---|---|---|
| 120 | 120 | (120/120)100=100 | (0/120) 0 | - | - |
| 180 | 170 | (170/180)100 =94 | 10/180)100 | 50/60= 0.83 | 0.17 |

**கீன்ஸின் நுகர்வு பற்றிய உளவியல் விதி**
**(Keyne's Psychological Law of Consumption)**

கீன்ஸ் நுகர்வு பற்றிய உளவியல் (மனஇயல்) விதி ஒன்றை முன்மொழிந்தார். அதனடிப்படையில் நுகர்வுச் சார்பை உருவாக்கினார். ''உளவியல் விதியின் அடிப்படையாக மனிதன் தன் முன் அறிவு அனுபவம் மற்றும் விரிவான உண்மை ஆகியவற்றின் அடிப்படையில் பெரும் நம்பிக்கையுடன் வருவாய் உயரும்போது நுகர்வை அதிகமாக்குவார்கள்: ஆனால் வருவாய் கூடிய அளவுக்கு நுகர்வு அதிகரிக்காது''. இந்த விதி மனிதன் வருமானம் உயர்ந்த முழு அளவிற்கும் செலவு செய்யமாட்டார்கள் என எடுத்துரைக்கிறது.

**அனுமானங்கள்**

கீன்ஸின் விதி கீழ்க்காணும் அனுமானங்களை உள்ளடக்கியது.

i. **மற்றவை மாறாது**

வருமான பகிர்வு, சுவை, பழக்கவழக்கம், சமூக காரணிகள், விலை மாற்றம், மக்கள் தொகை பெருக்கம் போன்றவை மாறாமல் நிலையாக உள்ளது என்ற அனுமானத்தின் அடிப்படையில் நுகர்வு வருமானத்தை மட்டும் சார்ந்ததாகும்.

**2. சுமூகமான சூழல் நிலவுகிறது**

இந்த விதி நாட்டில் இயல்பான நிலை நிலவும்போது மட்டும் பொருத்தமானதாக அமையும். அபரிமிதமான மற்றும் அசாதாராண சூழ்நிலைகளான போர், புரட்சி, மிக வேக பணவீக்கம் போன்றவற்றின் போது இந்த விதி செயல்படாது. மக்கள் அதிகரித்த மொத்த பணத்தையும் நுகர்விற்கே செலவிடுவர்.

**3. முதலாளித்துவ பொருளாதாரத்தில் தலையிடாக் கொள்கை கடைப்பிடிக்கப்படுகிறது.**

அரசு தலையிடாது. மக்கள் சுதந்திரமாக நுகர்வு பற்றிய முடிவினை எடுப்பார்கள். நாடு செல்வமிக்கது: முதலாளித்துவம் நிலவுகிறது.

**விதியின் கருத்துக்கள்**

இவ்விதி மூன்று கருத்துக்களைக் கொண்டது.

1. வருமானம் உயரும் போது, நுகர்வு செலவும் அதிகரிக்கும். ஆனால் சிறிய அளவாக இருக்கும். காரணம் வருமானம் அதிகரிக்கும் போது, பகுதி பகுதியாக நம் விருப்பமும் நிறைவேறும், ஆதலால் நுகர்வு பொருட்களின் மீது செய்கின்ற செலவு குறைகிறது. எனவே நுகர்வு செலவு ஆனது வருமானம் அதிகரிக்கும் போது அதிகரிக்கும், ஆனால் குறைந்த அளவே அதிகரிக்கும்.

2. அதிகரித்த வருமானம் நுகர்வு செலவிற்கும், சேமிப்பிற்கும் இடையே சில விகிதத்தில் பிரிக்கப்படுகின்றது. இது முதல் கருத்துரையின் படி தொடர்கிறது. ஏனெனில் முழுவதுமான அதிகரித்த வருமானம் நுகர்வில் முழுவதுமாக செயல்படவில்லை, மீதம் சேமிக்கப்படும் இதன் வழியில் நுகர்வும், சேமிப்பும் ஒன்றோடு ஒன்று நகர்கின்றது.

3. அதிகரிக்கின்ற வருமானம் எப்பொழுதும் நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டை அதிகரிக்க செய்யும். இது அதிகரித்த வருமானம் ஒன்று நுகர்வுகோ அல்லது சேமிப்பிற்கோ கொண்டு செல்லும். ஆதலால் அதிகரிக்கின்ற வருமானம், நுகர்வு மற்றும் சேமிப்பை இரண்டையும் அதிகரிக்கும்.

**அட்டவணை 3**
**விதியின் மூன்று கருத்துரைகள்**

| வருமானம் Y | நுகர்வு C | சேமிப்பு S=Y-C |
|---|---|---|
| 120 | 120 | 0 |
| 180 | 170 | 10 |
| 240 | 220 | 20 |

**கருத்துரை (1)**

வருமானம் ரூ.60 கோடிகளாக அதிகரிக்கின்றது மற்றும் நுகர்வு ரூ.50 கோடிகளாக அதிகரிக்கின்றது.

**கருத்துரை(2)**

அதிகரித்த ரூ.60 கோடி வருமானம் இரண்டாக, நுகர்விற்கும், சேமிப்பிற்கும் இடையே முறையே பிரிக்கின்றது. (அதாவது ரூ.50 கோடிகளில் மற்றும் ரூ.10 கோடிகளில்)

**கருத்துரை (3)**

வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வு மற்றும் சேமிப்பு அதிகரிக்கின்றது. நுகர்வோ அல்லது சேமிப்போ குறையவில்லை.

இந்த மூன்று கருத்துரைகளும் வரைபடமாக விளக்கப்பட்டுள்ளது. இங்கே வருமானம் படுகிடையாகவும் மற்றும் நுகர்வு சேமிப்பு செங்குத்து அச்சிலும் அளவிடப்படுகிறது. C – என்பது நுகர்வு சார்வு வளைகோடு, 45-டிகிரி கோடு வருமானம் மற்றும் நுகர்வை அளவு சமமாக இருப்பதைக் காட்டுகிறது.

**கருத்துரை (1)**

120 லிருந்து 180 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது நுகர்வும் 120லிருந்து 170 ஆக அதிகரிக்கின்றது. ஆனால் அதிகரித்த நுகர்வு வருமானத்தை காட்டிலும் 10 குறைவு. அது சேமிக்கப்படுகிறது.

**கருத்துரை (2)**

180 லிருந்து 240 ஆக வருமானம் அதிகரிக்கும் பொழுது இது இரண்டு பகுதிகளாக நுகர்வு 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பாக 10 லிருந்து 20 ஆகவும் முறையே பிரிகின்றது.

**கருத்துரை (3)**

வருமானம் 180 லிருந்து 240 உயரும்போது நுகர்வை 170 லிருந்து 220 ஆகவும், சேமிப்பை 10 லிருந்து 20 ஆகவும் அதிகரிக்க செய்கிறது. C கோட்டிற்கும் 45° கோட்டிற்கும் இடையேயுள்ள அகன்ற பகுதி சேமிப்பைப் காட்டுகிறது.

**நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற காரணிகள் (அகவய மற்றும் புறவய காரணிகள்)**

நுகர்வு சார்பை தூண்டுகின்ற காரணிகளை ஜே.எம்.கீன்ஸ் இரண்டாக பிரிக்கின்றனர். அதாவது அகவய காரணிகள் மற்றும் புறவய காரணிகள்.

**அ. அகவய காரணிகள்**

அகவய காரணிகள் உளவியல் சிந்தனைகளுடன் தொடர்புடையது. நுகர்வு சார்பை தூண்டுகின்ற முக்கிய அகவய காரணிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

கீன்ஸ் எட்டு நோக்கங்களை பட்டியலிட்டு உள்ளார். இவை தனி நபர்களை செலவு செய்வது இருந்து விலக்களிக்கிறது. அவையாவன.

1. **முன்னெச்சரிக்கை நோக்கம்:** எதிர்பாராமல் ஏற்படும் நிகழ்விற்காக கையில் ரொக்கமாக வைப்பது எ.கா. விபத்து, உடல் நலனின்மை

2. எதிர்பார்க்கும் நோக்கம்: எதிர்கால தேவைக்கான விருப்பம். எ.கா. வயதான காலம்

3. கணிக்கும் நோக்கம்: விருப்பம் மற்றும் பாராட்டை அனுபவிப்பதற்கான விருப்பம்.

4. முன்னேறும் நோக்கம்: வாழ்க்கைத் தரத்தை முன்னேற்ற விரும்புதல் சார்ந்த விருப்பம்

5. பணவியல் சுதந்திர நோக்கம்

6. வாணிப நோக்கம் (வியாபாரத்தை முன்னேற்றுவதற்கான நோக்கம்)

7. கர்வ நோக்கம் (விட்டுச் செல்வதற்கான விருப்பம்)

8. பேராசை நோக்கம் (முற்றிலும் மோசமான உள்ளுணர்வு)

கீன்ஸ் : முன்னெச்சரிக்கை, எதிர்பார்த்தல் கணித்தல், முன்னேறுதல், பணவியல் சுதந்திரம், வாணிபம், கர்வம், பேராசை ஆகியவை நுகர்ச்சியைப் புறக்கணிக்கும் நோக்கங்களாகக் கூறியுள்ளார்.

அரசாங்கம், நிறுவனங்கள் மற்றும் வாணிப கழகங்கள், தொழிற்சாலைகளும் பின்வரும் நான்கு நோக்கங்களுக்காக முக்கியமாக சேமிக்கும்.

1. வாணிப நோக்கம்: கடன் இல்லாமல் மூலதன முதலீடு மேற்கொள்வதற்காக வளங்களை பெறும் விருப்பம்.
2. நீர்மைதன்மை நோக்கம்: அவசரகாலம், சிக்கல்களை சந்திப்பதற்காக நீர்மை வளங்களை பாதுகாக்கும் நோக்கம்.
3. முன்னேறும் நோக்கம்: வருமானத்தை அதிகரிப்பதற்காகவும், வெற்றி பெறும் மேலாண்மையை நிரூபிக்க வேண்டியதற்கான நோக்கம்.
4. நிதி விவேக நோக்கம்: கடனை செலுத்த, தேய்மானம் மற்றும் பழங்கால தொழில் நுட்பத்தை மாற்றும் நோக்கம் போன்றவற்றிற்கு தேவையான நிதி ஆதாரங்களை உறுததிப் படுத்தும் விருப்பம்.

கீன்ஸ் அகவயக் காரணிகள் குறுகிய காலத்தில் மாறாது என்றும் எனவே, நுகர்வுச் சார்பு குறுகிய காலத்தில் நிலையானது என்கிறார்.

**ஆ. புறவயக் காரணிகள்**

புறவயக்காரணிகள் உண்மையான மற்றும் அளவிடக் கூடியது. நீண்ட காலங்களில் இந்த காரணிகள் எளிதாக மாற்றம் அடையும். பெரும்பான்மையான புறகாரணிகள் நுகர்வு சார்பை தீர்மானிக்கின்றவைகளாகும்.

**1. வருமான பகிர்வு**

செல்வந்தர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால், நுகர்வு குறைவாக இருக்கும். காரணம் செல்வந்தர்கள் குறைவான நுகர்வு விருப்பமும் அதிகப்படியான சேமிப்பு விருப்பமும் கொண்டு இருப்பர். சமநிலை வருமான பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும். V.K.R.V. ராவ் அவர்களால் இக்கருத்து வலியுறுத்தப்பட்டது.

**2. விலை அளவு**

நுகர்வு சார்பை மிக முக்கியமான தீர்மானிக்கின்ற காரணியாக இருப்பது விலை அளவே ஆகும். விலை வீழ்ச்சி அடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.

**3. கூலி அளவு**

நுகர்வு சார்பை தீர்மானிக்கின்ற முக்கியமானதாக கூலி அளவு இருக்கின்றது. நுகர்விற்கும், கூலிக்கும் இடையே நேர்மறையான தொடர்பை கொண்டு இருக்கும். கூலி அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும். மேலும் எதிர்பாராத லாபம் ஏற்படும் போது இதே மாதிரி விளைவு ஏற்படும்.

**4. வட்டி விகிதம்**

வட்டி விகிதமும் நுகர்வுச் சார்பை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியாகும். அதிக வட்டி விகிதம்மக்களை அதிக அளவில் பணத்தை சேமிக்க ஊக்கம் அளிக்கும் மற்றும் நுகர்வை குறைக்கும்.

5. **நிதி கொள்கை**

அரசாங்கம் வரியை குறைக்கும் போது, செலவிடத்தக்க வருமானம் அதிகரிக்கும் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும். வளர்வீத வரிக் கொள்கையானது ஏழைகளுக்கு சாதகமான வருமான பகிர்வை தருவதால், ஏழைகளின் நுகர்வு விருப்பம் மாறும்.

6. **நுகர்வோர் கடன்**

சுலப தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது அவர்கள் நுகர்வோர் பொருட்களான கனரக வாகனங்கள், பிரிட்ஜ், கம்யூட்டர் போன்றவற்றினை வாங்குவார்கள். இது நுகர்வை அதிகப்படுத்தும்.

7. **மக்கள் தொகை காரணிகள்**

மற்றவை மாறாமல் இருக்கும் போது குடும்ப அளவு அதிகமாக இருந்தால், நுகர்வு அதிகமாக இருக்கும். மேலும் குடும்ப அளவு, குடும்ப வாழ்க்கை சுழற்சி நிலை, இருப்பிடம் மற்றும் வேலைவாய்ப்பு நுகர்வுச் சார்பை பாதிக்கும். ஆரம்பநிலை கல்வி பயிலும் மாணவர்களைவிட குடும்பத்தில் கல்லூரி கல்வி பயிலும் மாணவர்கள் அதிகமாக செலவு செய்வார்கள் கிராமப்புற குடும்பங்களை விட நகர்ப்புற குடும்பங்கள் அதிகமாக செலவு செய்யும்.

8. **டூசன் பெரியின் அனுமானம்**

நுகர்வு சார்பை பாதிக்கும் இரண்டு உற்று நோக்குதலை டூசன் பெரி ஏற்படுத்தியுள்ளார்.

அ. நுகர்வு செலவானது தற்போதைய வருமானத்தை மட்டும் சார்ந்து இல்லாமல் முந்தைய வருமானத்தையும், வாழ்க்கை தரத்தையும் சார்ந்து இருக்கும். தனி நபர்கள் குறிப்பிட்ட வாழ்க்கை தரத்துடன் வாழ்ந்து பழக்கப்பட்டு இருப்பதால், தற்போதைய வருமானம் குறைந்தாலும் தொடர்ந்து ஒரே மாதிரியாக நுகர்வு செலவு மேற்கொள்வார்கள்.

ஆ. வெளிக்காட்டும் விளைவின் காரணமாகவும் நுகர்வு தீர்மானிக்கப்படுகிறது. குறைவான வருமான உடைய மக்களும், அதிக வருமான உடைய மக்களின் நுகர்வு தரத்தால் தூண்டப்படுவார்கள். மற்றொரு வகையில் ஏழை மக்கள் செல்வந்தர்களின் நுகர்வே போன்றே செலவு செய்வார்கள். இது அவர்களின் வருமானத்தையும் தாண்டி செலவு செய்ய வைக்கும்.

9. **எதிர்பாராத லாபம் அல்லது நஷ்டம்**

பங்குச் சந்தையில் ஏற்படும் எதிர்பாராத மாற்றம் லாபத்தையோ அல்லது நஷ்டத்தையே ஏற்படச் செய்து நுகர்வு சார்பை மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ நகரச் செய்யும்.

**முதலீட்டு சார்பு**

முதலீட்டு சார்பு என்பது முதலீடு மற்றும் வட்டி வீதத்திற்கிடையேயான தொடர்பைக் குறிப்பிடுகிறது. முதலீட்டிற்கும் வட்டி வீதத்திற்கும் உள்ள சார்பு தலைகீழ் தொடர்பு உள்ளது. முதலீட்டுச் சார்பானது கீழ்நோக்கிச் செல்லும்.

$I = f(r)$

$I =$ முதலீடு (சார்பு மாறிகள்)

$r =$ வட்டி வீதம் (சார்பற்ற மாறிகள்)

**முதலீடு – பொருள்**

முதலீடு என்பது பங்குகள், கடன் பத்திரங்கள், அரசாங்க பங்கு மற்றும் பத்திரங்கள் வாங்குவது ஆகும். கீன்ஸின் கூற்றுப்படி, முதலீடு என்பது நிதி முதலீட்டை மட்டும் குறிக்கும். உண்மையான முதலீட்டைக் குறிக்காது. இது மாதிரியான முதலீடு நாட்டின் உண்மையான மூலதன இருப்பில் சேர்ப்பதில்லை.

கீன்ஸின் பார்வையில் முதலீடு மூலதன முதலீட்டுச் செலவை உள்ளடக்கியது ஆகும்.

**முதலீட்டின் வகைகள்**

தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு

### i. தன்னிச்சையான முதலீடு

தன்னிச்சையான முதலீடு என்பது மூலதனத் திரட்சியின் மீது ஆகும் செலவு ஆகும். மாறுகின்ற வருமானம், வட்டி விகிதம், இலாப வீதத்தை சார்ந்து இருக்காது.

பொருளாதார நடவடிக்கைகளில் சுதந்திரமான எதையும் சாராத முதலீடு இது. தன்னிச்சையான முதலீடு வருமானம் நெகிழ்ச்சியற்றது, தன்னிச்சையான முதலீடு அளவு எல்லா நிலைகளிலும் ஒரே மாதிரியாக இருக்கும்.

தன்னிச்சை முதலீட்டு வரை கோடு X அச்சுக்கு படிக்கிடை இணைக்கோடாக இருக்கும்.

பொருளாதார மந்த காலத்தில் அரசு தன்னிச்சை முதலீட்டிற்கு ஊக்கமளிக்கும். நலப் பொருளாதாரத்தின் முக்கிய பகுதி தன்னிச்சையான முதலீடு ஆகும்.

பொதுவாக, அரசு நலத்தினை கருத்தில் கொண்டு தன்னிச்சையான முதலீட்டை மேற்கொள்ளும்.

### ii. தூண்டப்பட்ட முதலீடு

பொருளாதாரம் வளர்ச்சி அடையும் போது அதிகரிக்கின்ற வருமானம் மற்றும் தேவை உயர்வினால் ஏற்படும நிலையான சொத்து மற்றும் பங்குகள் மீதான செலவே தூண்டப்பட்ட முதலீடு ஆகும்.

தூண்டப்பட்ட முதலீடு லாப நோக்கம் உடையது. தேசிய வருமானத்தில் ஏற்படும் மாற்றத்தோடு தொடர்புடையது. தேசிய வருமானத்திற்கும், தூண்டப்பட்ட முதலீட்டிற்கும் நேரிடையான தொடர்பு இருக்கிறது. தேசிய வருமானம் குறைந்தால் தூண்டப்பட்ட முதலீடும் குறையும் மற்றும் தூண்டப்பட்ட முதலீடு வருமான நெகிழ்ச்சியுடையது. பின்வருமாறு நேர்மறை சாய்வு கோடாக இருக்கும்.

| **தொ எண்** | **தன்னிச்சையான முதலீடு** | **ஊக்குவிக்கப்பட்ட முதலீடு** |
|---|---|---|
| 1 | தன்னிச்சையானது | திட்டமிடப்பட்டது |
| 2 | வருவாயைப் பொறுத்து நெகிழாதது | வருவாளைப் பொறுத்து நெகிழ்வது |
| 3 | நல நோக்கமுடையது | இலாப நோக்கமுடையது |

### முதலீட்டுச் சார்பின் காரணிகள் (Determinants of Investment Function)

தொன்மைப் பொருளியல் அறிஞர்கள் முதலீடு வட்டிவீதத்தை மட்டுமே சார்ந்தது என்று கூறினார்கள். ஆனால் உண்மையில் முதலீடு பல காரணிகளைப் பொறுத்து அமைகிறது. அவை கீழ்வருமாறு:

1. வட்டி வீதம்
2. நிலையற்ற தன்மை
3. அரசியல் சூழல்
4. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம்
5. மூலதனப் பொருட்களின் இருப்பு

6. புதிய பொருடகளின் தேவை
7. முதலீட்டாளர்களின் வருமான அளவு
8. கண்டுபிடிப்புகளும், புத்தாக்கமும்
9. நுகர்வுத் தேவை
10. அரசுக் கொள்கை
11. மூலதனம் கிடைத்தல்
12. முதலீட்டாளர்களின் சொத்துக்களின் ரொக்கத்தன்மை

ஆகிய காரணிகள் முதலீட்டளவை நிர்ணயிக்கின்றன.

கீன்ஸின் கருத்துப்படி, வாணிப எதிர்பார்ப்பு மற்றும் இலாபம் ஆகியவை முதலீட்டு அளவை முடிவு செய்வதில் முக்கிய காரணிகளாக விளங்குகின்றது. மேலும் அவர் முதலீடு மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் மற்றும் வட்டி வீதத்தைப் பொருத்து அமையும் என்கிறார்.

i. தனியார் முதலீடு என்பது மூலதன இருப்பை அதாவது தொழிற்சாலை அல்லது இயந்திரங்களை அதிகரிக்க செய்வது.

ii. மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்தின் (MEC) என்பது முதலீட்டுத் திட்டத்தில் கிடைக்கும் எதிர்பார்க்கப்படும் வருமானம் ஆகும். குறிப்பாக இருக்கின்ற ஆண்டு உற்பத்தியில் ஏற்படும் இறுதியாக அதிகரிக்கப்பட்ட ஒரு அலகு மூலதனத்தினால் ஏற்பட்ட உற்பத்தியாகும்.

iii. மூலதன இறுதிநிலை ஆக்கத்தின் 5 சதவீதமாகவும், வட்டி வீதம் 4 சதவீதமாக இருக்கும்போது 4 சதவீத வட்டியில் கடன் வாங்கினால் 5 சதவீத உற்பத்தி எதிர்பார்க்கப்படுவதால் வாங்கலாம்.

வட்டிவீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள உறவு

வட்டி வீதத்திற்கும் முதலீட்டிற்கும் இடையே உள்ள உறவு எவ்வாறு பொருளாதாரத்தை பாதிக்கிறது என்பதை விளக்கப்படுகிறது. கடன்களின் மீதான வட்டி வீதம் உயரும்போது, குறைவான முதலீடே நடைபெறும். ஏனெனில் வட்டி வீதம் அதிகரிக்கும் போது கடன் பெறுவதற்கான செலவு அதிகரிக்கும். இதனால் அதிக வருவாய் தரக்கூடிய இனங்களில் மட்டும் முதலீடு செய்யப்படும்.

**வட்டி வீதமும் முதலீட்டு அளவும்**

கடனுக்காக செலவு உண்மையாக உயரும்போது குறைந்த அளவு முதலீட்டில் இலாபம் தரக்கூடிய இனங்களில் முதலீடு செய்வர்.

5 சதவீதத்திலிருந்து 7 சதவீதமாக வட்டி வீதம் அதிகரித்தால், முதலீட்டின் அளவு ரூ.100 கோடியிலிருந்து ரூ.80 கோடியாக குறைவதைக் காணலாம்.

முதலீட்டிற்கான செலவு அதிகளவு வாய்ப்புச் செலவாக இருப்பதால் வட்டி வீதம் குறையும் போது, முதலீட்டை குறைக்கும் போக்கு ஏற்பட்டு விடும்.

1. அதிக வட்டியோடு வங்கியில் இருந்து பணம் பெறுவது அதிக செலவிற்கு வழி வகுக்கும்.

2. வங்கியில் பணத்தை சேமிப்பதினால் அதிகப்படியான ஈவு வீதம் கிடைக்கும். ஆதலால் சேமிப்பை நிதி முதலீட்டிற்கு பயன்படுத்துவதில் குறைந்த வட்டி செலுத்துவதற்கான வாய்ப்புச் செலவாக அமையும்.

வட்டி வீதம் அதிகரித்தால், நிறுவனம் ஆதாயத்தை அதிகரிப்பதற்கான தேவை ஏற்படும்.

**மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன்**

தன்னிச்சையான முதலீட்டை தீர்மானிக்கின்ற முக்கிய காரணியான மூலதன இறுதிநிலை ஆக்கம் என்ற கருத்தினை ஜே.என்.கீன்ஸ் 1936 -ல் அறிமுகப்படுத்தினார். கூடுதலான மூலதன அலகிலிருந்து எதிர்பார்க்கப்படும் இலாபமே மூலதன ஆக்கத்திறன் (MEC) என்று வரையறுக்கலாம்.

எதிர்பார்க்கப்டும் வருவாய்க்கும் மூலதனத்திற்கான செலவிற்கும் உள்ள வீதமே மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் ஆகும்.

## MEC இரண்டு காரணிகளை சார்ந்து இருக்கும்

1. மூலதன சொத்தின் மூலம் கிடைக்கும் வருங்கால லாபம்
2. மூலதன சொத்தின் அளிப்பு விலை

## MEC -யை பாதிக்கும் காரணிகள்

முதலீட்டு முடிவை மேற்கொள்ளும் போது கீழ்க்கண்ட மூன்று காரணிகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றது.

- மூலதனத்தின் செலவு
- அதன் வாழ்நாளில் எதிர்பார்க்கப்படும் விளைவு விகிதம்
- அங்காடியில் உள்ள வட்டிவிகிதம்

மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் குறுகிய கால மற்றும் நீண்ட கால காரணிகளால் தூண்டப்படுகிறது. இந்த காரணிகளை சுருக்கமாக காணலாம்.

### அ. குறுகிய கால காரணிகள்

### i. பொருளுக்கான தேவை

ஒரு குறிப்பிட்ட பொருளின் சந்தை விலை உயரும் என்ற எதிர்பார்ப்பும், அதன் செலவு குறைந்தும் காணப்படும்போது முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கும் வருவாய் அதிகரிக்கும். தொழில் முனைவோர்கள் பொருட்களுக்கான தேவை குறையும் என்றும் செலவு கூடும் என்று எதிர்பார்த்தால் முதலீடு குறையும்.

### ii. நீர்மை தீன்மையுள்ள சொத்துக்கள்

செயல்திறன் மூலதனத்தை அதிக அளவில் தொழில் முனைவோர் வைத்திருந்தால், தன் வழியே வரும் முதலீட்டு வாய்ப்புகளின் நன்மையை ஏற்றுக் கொள்வர். இது மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனை அதிகரிக்கும்.

### iii. வருமானத்தில் ஏற்படும் திடீர் மாற்றம்

தொழில் முனைவோரின் திடீர் வருமான மாற்றமும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப்பாதிக்கும். வணிக சமூகம் எதிர்பாராமல் இலாபமோ அல்லது வரி சலுகைகளோ பெற்றால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்தின் அதிகரிக்கும். ஆதலால் நாட்டில் முதலீடு அதிகரிக்கும். மாறாக, வருமானம் குறைந்தால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் குறையும்.

### iv. நடைமுறை முதலீட்டு வீதம்

குறிப்பிட்ட தொழில்களில் உள்ள நடைமுறை முதலீட்டு வீதமும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கின்ற மற்றொரு காரணி ஆகும். குறிப்பிட்ட தொழில்கள் ஏற்கனவே அதிக அளவில் முதலீடு செய்யப்பட்ட நிலையில் அதே தொழிலில் மேலும் முதலீடு செய்தால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைக் குறைக்கும்.

### v. நம்பிக்கை மற்றும் நம்பிக்கையற்ற அலைகள்

வணிகச் சூழ்நிலையில் ஏற்படும் நம்பிக்கை மற்றம் நம்பிக்கையற்ற நிலைகள் மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனைப் பாதிக்கும். தொழில் செய்பவர் எதிர்கால நம்பிக்கை கொண்டிருந்தால் இறுதிநிலை உற்பத்தித் திறன் அதிகமாகவும், மாறாக நம்பிக்கையற்று இருந்தால் இறுதிநிலை உற்பத்தித் திறன் குறைவாகவும் இருக்கும்.

## ஆ. நீண்ட கால காரணிகள்

மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனை பாதிக்கின்ற நீண்ட காலக் காரணிகள் பின்வருமாறு:

### i. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம்

மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனை பாதிக்கின்றது. மக்கள் தொகை வளர்ச்சி மிக அதிகமாக இருந்தால், வெவ்வேறு வகையான பொருட்களுக்கு தேவை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விரைவான மக்கள் தொகை வளர்ச்சி மூலதன ஆக்கத்திறனை அதிகரிக்கும், குறைவான வளர்ச்சி முதலீட்டை குறைத்து, அதன் மூலம் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனையும் குறைக்கும்.

### ii. தொழில் நுட்ப முன்னேற்றம்

தொழில்களில் முதலீடும், தொழிலநுட்ப முன்னேற்றமும் ஏற்பட்டால் நிகர இலாபத்தில் சுபிட்சமான ஏற்றத்தை கொண்டு வரும். எடுத்துக்காட்டாக 20 ம் நூற்றாண்டில் ஆட்டோ மொபைல்ஸ் துறையில் ஏற்பட்ட முன்னேற்றத்தினால் ரப்பர் தொழிற்சாலை, எ.்.கு மற்றும் எண்ணெய் தொழிற்சாலை முதலியவற்றில் பெரிய அளவில் உந்துதல் ஏற்படச் செய்தது. ஆதலால் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றம் பலவகையான திட்டங்களுக்கு முதலீடு செய்வதற்கு ஊக்கம் அளித்து மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனையும் அதிகரிக்கும்.

### iii. பண மற்றும் நிதி கொள்கை

மலிவுப் பண கொள்கை மற்றும் தளர்வான வரிக் கொள்கை அதிகப்படியான இலாபத்தை ஈட்ட வழி செய்து, அதனால் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனையும் உயர்த்துகிறது.

### iv. அரசியல் சூழ்நிலை

அரசியல் நிலைபெற்ற தன்மை, சுமூகமான நிர்வாகம், சட்ட ஒழுங்கு பாதுகாப்பு ஆகியவையும் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனை அதிகரிக்கிறது.

### v. வளங்கள் கிடைப்பது

மலிவான மற்றும் மிகுதியான இயற்கை வளங்கள், திறன்மிக்க உழைப்பாளர்கள், மூலதன இருப்பு போன்றவையும் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனை அதிகரிக்கின்றது.

## முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI)

ஒரு குறிப்பிட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கூடுதல் முதலீட்டில் இருந்து எதிர்ப்பார்க்கப்படுகிற விளைவின் விகிதம் முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறன் ஆகும். கடனுக்கான வட்டி வீதம் அதிகமாக இருந்தால், பல்வேறு திட்டங்களில் தொழில் செய்வதற்கான ஆர்வம் குறையும். இதனால் நிறுவனங்களின் இலாப விகிதம் குறையும்.

| மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறன் (MEC) | முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தித் திறன் (MEI) |
|---|---|
| 1. இது மூலதனத்தின் அளிப்பு விலையைப் பொறுத்து அமைகிறது | மூலதனத்தின் தேவையில் ஏற்பட்ட மாற்றங்கள், விலையை தூண்டும் மாற்றத்தைப் பொறுத்து அமைகிறது. |
| 2. ஆரம்பத்தில் உள்ள மூலதனத்தை கணக்கில் கொள்ளாமல் ஒவ்வொரு மூலதன அலகிலிந்து கிடைக்கும் விளைவைக் குறிக்கிறது. | ஆரம்ப மூலதனத்திற்குப் பின்னர் வந்த மூலதனத்தின் விளைவு விகிதத்தைக் காட்டுகிறது. |

| | |
|---|---|
| 3. வரைபடத்தில் படுக்கை அச்சில் மூலதன இருப்பு அளக்கப்படுகிறது | வரைபடத்தில் படுக்கை அச்சில் முதலீடு அளவு அளக்கப்படுகிறது. |
| 4. இது ஒரு “இருப்பு” கருத்துரு (stock) | இது ஒரு ஓட்டக் (FLOW) கருத்துரு |
| 5. ஒவ்வொரு வட்டிவீத அளவிலுமான உத்தம மூலதன இருப்பை இது நிர்ணயிக்கிறது | கொடுக்கப்பட்ட மூலதன இருப்பில, ஒவ்வொரு வட்டிவீத அளவிலும் நிகர முதலீடு எவ்வளவு என்பதை நிர்ணயிக்கிறது. |

**பெருக்கி (Multiplier)**

பெருக்கிக் கோட்பாட்டை முதலில் எப்.ஏ.கான் வேலை வாய்ப்பின் அடிப்படையில் உருவாக்கினார். ஜே.எம்.கீன்ஸ் இதனை வருமானம் அல்லது முதலீட்டுப் பெருக்கியாக மாற்றி அமைத்தார்.

தேசிய வருமானத்தின் மாற்றத்திற்கும் முதலீட்டில் ஏற்படும் மாற்றத்திற்கும் உள்ள வீதத்தை பெருக்கி என்று வரையறுக்கலாம். $\Delta I$ என்பது முதலீட்டில் அதிகரிப்பையும், மற்றும் $\Delta Y$ என்பது வருமானத்தில் அதிகரிப்பையும் குறிக்கின்றது. எனவே பெருக்கி $K=\Delta Y/\Delta I$ என உள்ளது. முதலீடு மாற்றத்தினால் வருமானம் மாறுவதால் பெருக்கியை முதலீட்டு பெருக்கி என அழைக்கப்படுகிறது.

4.4.1. பெருக்கியின் எடுகோள்கள்

கீன்ஸின் பெருக்கியின் கோட்பாடு சில எடுக்கோள்களின் அடிப்படையினல் செயல்படுகிறது. அவை:

1. தன்னிச்சையான முதலீட்டில் மாற்றம் உண்டு.
2. தூண்டப்பட்ட முதலீடு இல்லை.
3. இறுதிநிலை நுகா்வ நாட்டம் நிலையாக இருக்கும்.
4. நுகர்வு நடப்பு வருமானத்தைச் சார்ந்தே அமையும்.
5. பெருக்கியின் செயல்பாட்டில் கால இடைவெளி இல்லை.
6. உறுதித் தேவைக்கேற்ப நுகர்வு பொருள்கள் கிடைக்கும்.
7. நாடு மூடிய பொருளாதாரமாகும், அந்நிய நாட்டின் செயல்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தாது.
8. விலையில் மாற்றம் இல்லை.
9. முழு நிலை வேலைவாய்ப்பு நிலைக்கு கீழ் பொருளாதாரம் செயல்படுகிறது.

**இறுதிநிலை நுகர்வு நாட்டமும் பெருக்கியும்**

இறுதி நிலை நுகர்வு நாட்டம் என்பது வருமானத்தில் நுகர்வுக்காக செலவிடும் பங்கைக் குறிப்பதாகும். இறுதிநிலை நுகர்வு நாட்டம் வருவாய் (Y) மாற்றத்திற்கும், நுகர்வு (C) மாற்றத்திற்கிடையேயான தொடர்பினைக் குறிப்பிடுகிறது.

குறியீடாக $MPC = \Delta C/\Delta Y$

பெருக்கியின் மதிப்பு MPC யைப் பொறுத்து அமையும் பெருக்கி

$(K) = 1/1 - MPC$

ஒன்றிலிருந்து இறுதிநிலை நுகர்வு நாட்ட மதிப்பைக் கழித்து பெறப்படும் மதிப்பின் தலைகீழ் விகிதமே பெருக்கி ஆகும். இறுதிநிலை சேமிப்பு நாட்டத்தின் மதிப்பு 1-MPC. ($MPC + MPS = 1$) என்பதால் பெருக்கியின் மதிப்பு $1/MPS$ ஆகும். எனவே பெருக்கி என்பது MPS இன் தலைகீழ் விகிதம் ஆகும். பெருக்கி MPS க்கு தலைகீழ் விகிதத்திலும் MPC க்கு நேர்விகிதத்திலும் தொடாபுடையது.

எண் வடிவில் MPC யின் மதிப்பு 0.75 என்றால் MPS இன் மதிப்பு 0.25 ஆகவும K மதிப்பு 4 ஆகவும் இருக்கும்.

சூத்திரத்தைப் பயன்படுத்தி K= 1/1-MPC

k 1/1 – 0.75 = 1/0.25= 4

**அட்டவணை 4**

கீழ்காணும் மதிப்புகளைக் கொண்டு பெருக்கி செயல்படும் விதத்தை விளக்கப்படுகின்றது.

| MPC | MPS | K |
|---|---|---|
| 0.00 | 1.00 | 1 |
| 0.10 | 0.90 | 1.11 |
| 0.50 | 0.50 | 2.00 |
| 0.75 | 0.25 | 4.00 |
| 0.90 | 0.10 | 10.00 |
| 1.00 | 0.00 | $\alpha$ |

C= 100+0.8 y; I = 100 I =10
Y= C+1
= 100 +0.8y +100
0.2 y = 200 ; Y = 1000
இங்கு C = 100 +0.8 y = 100 + 0.8 (1000)
= 900;
S = 100 = I

முதலீடு 10 அதிகரித்தால் I = 110,
Y = 100 + 0.8 y +110
0.2 y = 210

$$Y = \frac{210}{0.2} = 1050$$

இங்கு C= 100 = 0.8 (1050) = 940 ; S = 110 = I

**வரைபட விளக்கம்**

45 கோடு y = C+S

இது இரண்டு அச்சுக்களுக்கும் இணையாகச் செல்வதைக் குறிக்கிறது. இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 என அனுமானிக்கப்படுகிறது (C= 100 +0.8 y)

ஒட்டு மொத்த தேவை (C+1) தேவைக்கோடு 45° கோட்டை B என்ற புள்ளியில் வெட்டிச் செல்கிறது.

Y = 500 ஆக இருக்கும்போது C = 100 + 0.8 y
= 100+0.8(500)
=100+400 = 500 (புள்ளி A)
I = 100

$Y = 1000, C = 900$

$S = 100 = I$

புதிய ஒட்டுமொத்த தேவை கோடு,

$$C+I = 100 + 0.8\,Y + 100 + 10$$

$$Y = \frac{210}{0.2} = 1050$$

$$C = 940 : S = 110 = I$$

**பெருக்கி செயல்படும் விதம்**

அரசு ரூ.100 கோடி பொதுப்பணிக்காக கூலி, இதர பொருட்கள் வாங்குவதற்காக செலவிடுகிறது எனக் கொள்வோம். இந்த ரூ. 100 கோடி உழைப்பாளர்களுக்கும் பொருட்களை அளித்தவர்களுக்கும் வருமானமாக அமையும். இங்கு இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 (80%) எனக் கொண்டால் ரூ.80 கோடியை நுகர்வுச் செலவுக்கும், மீதம் ரூ. 20 கோடியை சேமிக்கவும் செய்வர். இதில் மேற்காண் வருமானம் பெற்றவர்களின் இறுதிநிலை நுகர்வு நாட்டம் 0.8 எனில் ரூ.80 கோடியில் ரூ.64 கோடி நுகர்வுச் செலவுக்கும் மீதம் ரூ.16 கோடியை சேமிக்கவும் செய்வர். இந்த வழியில் நுகர்வுச் செலவானது ஒரு சங்கிலித் தொடர் போன்று சென்று கொண்டே செல்லும்.

| **நேர்மறை மற்றும் எதிர்மறைப் பெருக்கியின் விளைவுகள்** | |
|---|---|
| **நேர்மறை பெருக்கி** | **எதிர்மறைப் பெருக்கி** |
| உட்செலுத்தலில் துவக்க நிலையில் ஏற்படும் அதிகரிப்பானது (கசிவு குறையும் போது) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதிநிலை உயர்வை ஏற்படுத்தும். | உட்செலுத்துதலில் துவக்க நிலையில் ஏற்படும் குறைவானது ( கசிவு அதிகரிக்கும் போது) மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப்பெரிய இறுதிநிலைக் குறைவை ஏற்படுத்தும் |

எனவே இறுதி முடிவுகள்

$\Delta Y = 100 + 100 \times 4/5 + 100 \times [4/5]^2 + 100 \times [4/5]^3$

அல்லது

$\Delta Y = 100 + 100 \times 0.8 + 100 \times (0.8)^2 + 100 \times (0.8)^3$

$= 100 + 80 + 64 + 51.2….$

$= 500$

அதாவது $100 \times 1/1\text{-}4/5$

$100 \times 1/1/5$

$100 \times 5 =$ ரூ. 500 கோடிகள்

உதாரணமாக $C = 100 + 0.8\,Y, I = 100,$

என்றால் $Y = 100 + 0.8\,Y + 100$

$0.2\,Y = 200$

$Y = 200/0.2 = 1000 \rightarrow$ புள்ளி B

I இன் மதிப்பு 110, ஆக அதிகரிக்கப்பட்டால்

$0.2\,Y = 210$

$Y = 210/0.2 = 1050 \rightarrow$ புள்ளி D

I, ரூ.10 அதிகரித்தால், Y ரூ.50 அதிகரிக்கும்.

இது பெருக்கியின் விளைவு.

புள்ளி A யில், Y = C= 500

C= 100 +0.8 (500) = 500 ; S= 0

புள்ளி B யில், Y = 1000

C= 100 +0.8 (1000) = 900 ; S= 100 = 1

புள்ளி D யில், Y = 1050

C= 100 +0.8 (1050) = 940 ; S= 110 = I

I மதிப்பு 10 அதிகரிக்கும் போது லு மதிப்பு 50 அதிகரிக்கும். இதுவே பெருக்கி விளைவாகும்.

$$K= \frac{1}{0.2} = 5$$

**பெருக்கியின் வகைகள்**

இயங்கா மற்றும் இயங்கும் பெருக்கி

1. இயங்கா பெருக்கி

இது உடன்நிகழ் (Simultaneous) பெருக்கியெனவும், காலமில்லா பெருக்கி, தர்க்க ரீதி பெருக்கி எனவும் அழைக்கப்படுகிறது. இதில் முதலீடு மாற்றமும் வருமான மாற்றமும் உடன் நிகழ்பவை. காலதாமதம் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. பொருளாதாரம் ஒரு சமநிலையில் இருந்து மறு சமநிலை வருமானத்திற்குப் போகும்போது MPC மாறாது என கருதப்படுகிறது.

**ii. இயங்கும் பெருக்கி**

இது தொடர் நிகழ் (SEQUENCE) பெருக்கி எனவும் அழைக்கப்படுகிறது. உண்மையில் முதலீடு செய்த உடனே வருவாய் கூடிவிடுவதில்லை. ஒருவரிடம் இருந்து மற்றவரிடம் பணம் செல்ல காலதாமதம் ஆகலாம். வருமானம் கூடுவதற்கும் நுகர்வு கூடுவதற்கும் இடையில் கால இடைவெளி இருக்கலாம். அந்தக் கால இடைவெளியையும் கருத்தில் கொள்கிறது இயங்கும் பெருக்கி.

**பெருக்கியின் கசிவுகள் (LEAKAGES)**

பெருக்கியின் எடுகோளானது அதிகரித்த வருமானத்தின் ஒரு பகுதி நுகர்விற்காக செலவிடப்படுகின்றது என்பதே. ஆனால் நடைமுறையில் மக்கள் அதிகரித்த வருமானத்தை வேறு ஒரு பொருட்களின் மீதும் செலவு செய்வார்கள். இவ்வகைச் செலவுகளே கசிவுகள் எனப்படும்.

பழைய கடன்களை திரும்ப செலுத்துதல்

பழைய கடன்களை திரும்ப செலுத்துவதற்காக அதிகரித்த வருமானம் பயன்படுமானால், MPC குறைந்து அதன் காரணமாக பெருக்கியின் மதிப்பு தடைப்படும்.

**செல்வத்தை வாங்குதல்**

அதிகரித்த வருமானம் நடைமுறையில் உள்ள செல்வங்களாக நிலம், கட்டிடம் மற்றும் பங்குகளை வாங்குவதற்காக பயன்படுத்தினால் பணம் மக்களிடையே சுழன்றுக் கொண்டு இருக்கும். நுகர்வுக்குள் வராது. இதன் விளைவாக பெருக்கியின் மதிப்பு பாதிக்கும்.

**பண்டங்களையும், பணிகளையும் இறக்குமதி செய்தல்**

இறக்குமதி செய்யப்படுகின்ற பண்டங்களுக்காகவும், பணிகளுக்காகவும் வருமானத்தை செலவு செய்தால் நாட்டை விட்டு பணம் வெளியேறும். இது நாட்டின் குறிப்பிட்ட அளவு வருவாய் ஓட்டத்தில் திரும்பி வரும் வாய்ப்பு மிகக் குறைவு. ஆதலால் இறக்குமதி பெருக்கியின் மதிப்பை குறைக்கும்.

**நுகர்வு பொருட்களின் கிடைக்காமை**

பெருக்கி கோட்பாடு தேவை ஏற்பட்டவுடன் நுகர்வதற்கு பொருட்கள் அளிக்கப்படுவதாக அனுமானம் கொண்டுள்ளது. சில நேரங்களில் கால இடைவெளி ஏற்படும். இந்த இடைவெளியில் தேவைக்கேற்ப அளிப்பு இருக்காது. அதனால் பணவீக்கம் ஏற்படும். இது நுகர்வுச் செலவையையும், பெருக்கியின் மதிப்பையும் குறைத்துவிடும்.

**முழு வேலை வாய்ப்பு நிலை**

முழு வேலை வாய்ப்பு நிலையில், பெரும்பாலும் எல்லா வளங்களும் பயன்படுத்தப்பட்டு இருக்கும். ஆதலால் அதிகரிக்கின்ற வருமானம் பணவீக்கத்திற்கு வழி வகுத்து உண்மை வருமானம் ஏற்படாமல் செய்து விடும்.

**பெருக்கியின் பயன்கள்**

1. வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு கோட்பாட்டில் முதலீட்டின் முக்கியத்துவத்தை பெருக்கி சுட்டிக்காட்டுகிறது.

2. வாணிப சுழற்சியின் பல்வேறு நிலைகளுக்கான காரணங்களை விளக்குகின்றது.

3. சேமிப்பு (S) மற்றும முதலீடு (I) இடையே சமநிலை ஏற்பட உதவுகிறது.

4. அரசாங்க கொள்கைகளை வழிவகுக்க உதவி புரிகிறது.

5. வேலையில்லா நிலையை போக்கவும், முழு வேலைவாய்ப்பு நிலையை அடையவும் உதவுகின்றது.

பெருக்கியின் வகைகள்

1. வரி பெருக்கி
2. வேலைவாய்ப்பு பெருக்கி
3. வெளி நாட்டு வர்த்தக பெருக்கி
4. முதலீடு பெருக்கி

**முடுக்கி கோட்பாடு**

தோற்றம் அ.ஃ.டாலியின் (1909), ஹாட்ரி (1913) மற்றும் பிக்கர் டைக் (1914) போன்றவர்களின் கருத்துக்களை ஆராய்ந்து பெறப்பட்டது. இருந்த போதிலும், இந்த கருத்தை செம்மைப்படுத்தி மேம்படுத்தி எளிமையான முடுக்கி மாதிரியாக 1917 லில் தந்தவர் ஜே.எம். கிளார்க் ஆவார். பின்னர் இதனை வணிகச் சூழலுடன் தொடர்பு படுத்தி மேம்படுத்தியவர்கள் ஹிக்ஸ், சாமுவேல்சன் மற்றும் ஹராடு போன்றவர்களாவர்கள்.

**பொருள்**

பொருளாதாரத்தில் நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிக்கின்ற போது பொதுவாக இயந்திரங்களின் (முதலீட்டு பொருட்கள்) தேவையை முடுக்கிவிட்டு அதிகரிக்க வழி செய்யும். முடுக்கி என்பது அதிகரித்த நுகர்வு மற்றும் அதன் விளைவினால் ஏற்படும் அதிகரிக்கும் முதலீட்டுக்கான தொடர்பை குறிக்கும் எண் மதிப்பு ஆகும்.

**முடுக்கி விளைவுகள்**

| | | |
|---|---|---|
| நுகர்வுத் தேவையின் - அதிகரிப்பு | நிறுவனங்கள் முழு உற்பத்தித் - திறனை நெருங்குதல் | அதிகரித்த நுகர்வுத் தேவையை ஈடுசெய்ய நிறுவனங்கள் முதலீட்டை அதிகரித்தல் |

முடுக்கி $(\beta) = \frac{\Delta I}{\Delta C}$

இதில் $\beta$ = முடுக்கி

$\Delta I$ = முதலீட்டுச் செலவில் மாற்றம் (100 என்போம்)

$\Delta C$ = நுகர்வுத் தேவையில் மாற்றம் (50 என்போம்)

முடுக்கியானது முதலீட்டு மாற்றத்திற்கும் நுகர்வின் மாற்றத்திற்கும் உள்ள விகிதத்தை வெளிப்படுத்துகின்றது.

**வரைவிலக்கணம்**

“தூண்டப்பெற்ற முதலீட்டிற்கும் தொடக்கத்தில் நுகர்வுச் செலவில் ஏற்படும் மாற்றத்திற்கும் இடையேயுள்ள விகிதம்”

- கே.கே. குரிஹாரா

அனுமானமாக ரூ.50 கோடி நுகர்வுப் பொருட்களின் தொழில்களில் செலவு செய்யும் போது, ரூ.100 கோடி முதலீட்டு பொருட்கள் தொழில்களில் முதலீடு செய்ய வழி வகுக்கிறது. அப்படியானால் முடுக்கி 2 ஆகும்.

$$\text{முடுக்கி} = \frac{100}{50} = 2$$

**எடுகோள்கள்**

1. நுகர்வு பொருட்கள் தொழில் துறையில் எச்ச சக்தியின்மை.
2. நிலையான மூலதனம் - வெளியீடு விகிதம்
3. தேவையின் அதிகரிக்கும் தன்மை நிலையாக இருக்கும் என்று அனுமானித்தல்.
4. நிதி அளிப்பு மற்றும் மற்ற உள்ளீடுகள் நெகிழ்ச்சியுடையது.
5. மூலதனப் பொருட்கள் தேவைப்படும் அளவுக்கு பகுக்க முடியும்.

**முடுக்கி கோட்பாடு செயல்படும் விதம்**

ஒரு எளிமையான எடுத்துக்காட்டின் மூலம் முடுக்கியின் செயல்பாட்டை பின்வருமாறு விளக்கலாம்.

1000 நுகர்வு பொருட்களை தயாரிப்பதற்கு 100 இயந்திரங்கள் தேவைப்படுவதாக எடுத்துக் கொள்வோம். 10 வருடங்கள் அந்த இயந்திரங்களின் வாழ்நாள் என்று கொள்வோம். அதாவது ஒவ்வொரு வருடமும் 10 எந்திரங்களை மாற்றியமைக்கப்படுகிறது. காரணம் நிலையான 1000 நுகர்வு பொருட்களை தயாரிப்பதற்காக இதனை மாற்றியமைக்கும் தேவை எனப்படுகிறது.

10 சதவீதம் அளவிற்கு (அதாவது 1000 லிருந்து 1100 ஆக) நுகர்வு பொருட்களின் தேவை அதிகரிக்கிறத என்று வைத்துக் கொள்வோம். இதன் விளைவாக மேலும் 10 இயந்திரங்களின் தேவை அதிகரிக்கும். எனவே மொத்த இயந்திர தேவை 20 ஆகும். (10 மாற்றமைப்பதற்காக மற்றும் 10 அதிகரித்த தேவையை சந்திப்பதற்காக) இங்கே 10 சதவீதம் நுகர்வு பொருட்கள் தேவையானது 100 சதவீதத்திற்கு இயந்திரத்தின் தேவை அதிகரிக்கின்றது என்பது குறிக்கின்றது (10 லிருந்து 20 வரை) ஆதலால் இறுதியாக ஒரு சிறிய நுகர்வு பொருட்களின் தேவையில் மாற்றம் அதிகப்படியான முதலீட்டு மாற்றத்திற்கு வழிவகுக்கிறது.

**முடுக்கியின் செயல்பாடு**

**வரைப்பட விளக்கம்**

SS என்பது சேமிப்பு கோடு. II என்பது முதலீட்டு கோடு $E_1$ புள்ளியில் பொருளாதாரம் $OY_1$ வருமானத்துடன் சமநிலையில் இருக்கிறது. சேமிப்பும் முதலீடும் $OI_2$ ல் சமநிலையாக உள்ளது. இப்பொழுது முதலீடு $OI_2$ லிருந்து $OI_4$ ஆக அதிகரிக்கிறது. இது வருமானத்தை $OY_1$ லிருந்து $OY_3$ ஆக அதிகரிக்கிறது. $E_3$ சமநிலைப் புள்ளியில் முதலீடு $I_2$ $I_4$ ஆக முழுவதுமாக வெளிப்புற காரணியில் அதிகரிக்கின்றது என்றால், வருமானமும் $Y_1Y_3$ ஆக முடுக்கியின் விளைவாக அதிகரிக்கும். ஆனால் இவ்வரைபடத்தில் வெளிபுற முதலீடு $I_2I_3$ ஆகவும், தூண்டப்பட்ட முதலீடு $I_3I_4$ ஆகவும் இருக்கிறது என்று அனுமானித்துக் கொள்வோம். ஆதலால் அதிகரித்த வருமானம்

$Y_1Y_2$ ஆனது பெருக்கியின் விளைவாலும் மற்றும் அதிகரித்த வருமானம் $Y_2Y_3$ ஆனது முடுக்கியின் விளைவாலும் ஏற்படுகின்றது.

**வரையறைகள்**

1.நிலையான மூலதனம் - வெளியீடு விகிதம் என்ற எடுகோள் உண்மையானது அல்ல.
2.முழு நிலை வேலைவாய்ப்பிற்கு முன்பு வரை மட்டுமே வளங்கள் கிடைக்கும்.
3.மூலதன பொருட்கள் தொழிற்சாலையில் உபரி சக்தி உள்ளதாக அனுமானிக்கப்படுகிறது.
4.முடுக்கியானது தேவை அதிகரித்தல் நிலையானது என்ற நிலையில் மட்டுமே வேலை செய்யும்.
5.கடன் எளிதாக கிடைத்தால் மட்டுமே முடுக்கி செயல்படும்.
6.நுகர்வு பொருட்கள் தொழிலில் பயன்படுத்தாத அல்லது மிகுதியான திறன் இருந்தால், முடுக்கி கோட்பாடு செயல்படாது.

**மிகைப் பெருக்கி ( K மற்றும் β ஐ இணைத்து)**

மிகைப் பெருக்கி எளிய பெருக்கியைவிட சிறந்ததாகும், ஏனெனில் எளிய பெருக்கி தன்னிச்சை முதலீட்டை மட்டும் உள்ளடக்கி இருக்கும், ஆனால் மிகைப் பெருக்கி தன்னிச்சை முதலீடு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்.

ஆரம்ப முதலீட்டினால் வருமானத்தில் ஏற்படும் மொத்த விளைவை அறிய ஹிக்ஸ் K மற்றும் βஐ இணைத்து மிகைப் பெருக்கி என்பதை கணித ரீதியில் உருவாக்கினார். மிகைப் பெருக்கியானது தூண்டப்பட்ட நுகர்வு மற்றும் தூண்டப்பட்ட முதலீடு ஆகியவை இணைந்து செயல்படுவதாகும்.

**நெம்புகோல் இயக்க விளைவு**

பெருக்கியின் தாக்கமும், முடுக்கியின் தாக்கமும் ஒருங்கிணைந்து செயல்படும் தாக்கம் நெம்புகோல் இயக்க விளைவு எனப்படும். இது பொருளாதாரத்தில் அதிகமான அல்லது குறைவான வருமானம் பெருக்குவதை கூறுகின்றது.

குறியீடாகக் கூறினால்

$Y= C+I_A +I_P$
Y = மொத்த வருவாய்
C= நுகர்வுச் செலவு
$I_A$=தன்னிச்சையான முதலீடு
$I_p$=தூண்டப்பட்ட தனியார் முதலீடு

தொகுப்புரை:

நுகர்வுச் சார்பானது தேசிய வருவாய் மற்றும் நுகர்வுச் செலவுக்கிடையேயான தொடர்பினை சராசரி நுகர்வு விருப்பு (APC) இறுதி நிலை நுகர்வு விருப்பு (MPC), சராசரி சேமிப்பு விருப்பு (APC) மற்றும் இறுதிநிலை சேமிப்பு விருப்பு (MPS) என்பதன் வாயிலாக எடுத்துரைக்கிறது. உள்ளார்ந்த மற்றும் வெளிப்புறக் காரணிகள் நுகர்வுச் சார்பை தீர்மானிக்கிறன்றன.

முதலீடு சார்பு தன்னிச்சையான முதலீட்டையும், தூண்டப்பட்ட முதலீட்டையும் உள்ளடக்கியது. முதலீட்டுச் சார்பான முதலீட்டிற்கும் வட்டி வீதத்திற்கும் உள்ள சார்பு தொடர்பாகும். மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனும், வட்டி வீதமும் முதலீட்டைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாகும்.

பெருக்கி இறுதிநிலை நுகர்வு விருப்பு (MPC) க்கு நேரடியாகவும் மற்றும் இறுதி நிலை சேமிப்பு விருப்பு (MPS) க்கு தலைகீழ் தொடர்பாகவும் உள்ளது. முடுக்கி கோட்பாடானது நுகர்வுச்

செலவில் ஏற்படும் மாற்றம் முதலீட்டின் அளவை எவ்வளவு மாற்றுகிறது என்பதை விளக்குகிறது. பெருக்கி, முடுக்கி ஒருங்கிணைப்பை மிகைப் பெருக்கி எனவும் கூறலாம்.

அருஞ்சொற்பொருள்:

**நுகர்வுச்சார்பு**: நுகர்வுக்கும் வருவாய்க்கும் உள்ள தொடர்பு

**தன்னிச்சையான நுகர்வு:** அடிப்படையான தேவைகளை நிறைவேற்ற, வருமானம் இல்லாத நிலையிலும் மேற்கொள்ளப்படும் நுகர்வு வருமானத்தைச் சாரா நுகர்வு

**தன்னிச்சையான முதலீடு**: வருமானத்தைச் சார்ந்திராத முதலீடு

**சராசரி நுகர்வு விருப்பு (APC):** நுகர்வுச் செலவை வருவாயால் வகுக்கக் கிடைப்பது (c/y)

**இறுதி நிலை நுகர்வு விருப்பு (MPC)** : நுகர்வுச் செலவு மாற்றத்தை வருவாய் மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது $(\Delta c/\Delta y)$

**சராசரி சேமிப்பு விருப்பு (APS)** : சேமிப்பை வருவாயால் வகுக்கக் கிடைப்பது (s/y)

**இறுதி நிலை சேமிப்பு விருப்பு (MPS)** : சேமிப்பு மாற்றத்தை வருவாய் மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது $(\Delta s/\Delta y)$

**உளவியல் காரணிகள்:** அவரவர் மனநிலை தொடர்பான உணர்வுகள்.

**பாரபட்சமற்ற காரணிகள்:** உளவியல் சார்ந்து அமையாமல் வெளியிலிருந்து ஏற்படுத்தப்படக்கூடிய மாற்றங்கள்

**வெளிக்காட்டும் விளைவு**: மற்றவர்களைப் பார்த்து மாறுகின்ற போக்கு

**தூண்டப்பட்ட முதலீடு:** வருவாய் உயர்ந்ததால் உயருகின்ற முதலீடு

**பெருக்கி:** வருமான மாற்றததை முதலீடு மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது $(\Delta y/\Delta I)$
**முடுக்கி:** தூண்டப்படுகின்ற முதலீடு மாற்றத்தை நுகர்வு மாற்றத்தால் வகுக்கக் கிடைப்பது.

**மேம்பட்ட பெருக்கி:** பெருக்கி மற்றும் முடுக்கியின் மொத்த விளைவு.

---

## அலகு – 5

## பணவியல் பொருளியல்

பொருளியலின் ஒரு பகுதியாக பணவியல் பொருளியல் பாடம் அமைந்துள்ளது. இதில் பணம், அவற்றின் பணிகளான பரிவர்த்தனை, மதிப்புகளின் இருப்பு வைத்தல், மதிப்பீட்டு அலகு ஆகியவற்றினை பகுப்பாய்வு செய்வதற்கான கட்டமைப்பை ஏற்படுத்தி தருகின்றது. மேலும், இது பணம் மற்றும் பணத்தை நிர்வகிக்கும் நிறுவனங்களை உள்ளடக்கிய பண அமைப்பு முறையின் செயல்விளைவுகளையும் ஆராய்கிறது.

**பணம் :**

**பொருள்:**

பொருட்கள் மற்றும் பணிகளை வாங்குவதற்கும், கடன்களை திரும்பச் செலுத்துவதற்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒரு இடையீட்டு கருவியே பணம் ஆகும். பொது இடையீட்டுக் கருவி என்பது மேற்கண்ட பரிமாணங்களில் அனைவராலும் தயக்கமின்றி பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் ஒன்று ஆகும். உலகநாடுகளில் அண்மைக்காலமாக கடனின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. காசோலைகள், மாற்றுச் சீட்டுகள் போன்ற கடன்கருவிகள் அதற்காக பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருந்தபோதிலும், பணமே அனைத்து கடன்களுக்கான அடிப்படை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

**இலக்கணங்கள்:**

பணத்திற்கு பல பொருளியல் அறிஞர்கள் இலக்கணம் வகுத்துள்ளனர் அவைகளில் வாக்கர் மற்றும் கிரௌதர் ஆகிய இரு அறிஞர்களின் இலக்கணம் கீழே தரப்பட்டுள்ளது.

”பணம் எதைச் செய்கிறதோ, அதுதான் பணம்” ("Money is what money does")

- வாக்கர்

”பரிவர்த்தனைகளில் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு இடையீட்டுக்கருவியாகவும், மதிப்பளவை மற்றும் மதிப்பினை இருப்பு வைத்தல் ஆகியவற்றினைச் செய்யும் ஒன்றாகவும் இருப்பது பணம் ஆகும்”.

- கிரௌதர்

**பணத்தின் பரிணாம வளர்ச்சி (Evaluation of Money):**

**பண்டமாற்று முறை (Barter system):**

பணத்தினை ஒரு பரிமாற்றக் கருவியாக அறிமுகப்படுத்தியது மனிதகுலத்தின் கண்டுபிடிப்புகளில் உயரிய ஒன்றாகும். பணம் அறிமுகமாவதற்கு முன் பண்டங்கள் மற்றும் பணிகளை நேரடியாக பரிமாறிக்கொள்ளும் பண்டமாற்று முறை நடைமுறையில் இருந்து வந்தது. பிறரிடம் உள்ள தங்களுக்கு தேவையான பொருட்களை அல்லது பணிகளை பெறும்பொருட்டு, தங்களிடம் உள்ள பொருட்களை அல்லது பணிகளை மாற்றாக வழங்குவது பண்டமாற்று முறையாகும். ஆனால், காலப்போக்கில் பண்மாற்று முறையில் பொருட்களை வாங்குபவர்களும் விற்பவர்களும் நிறைய சிக்கல்களை சந்தித்து வந்தனர். பண்டமாற்று முறையின் தோல்விக்குப்பின், தேவைபோக உபரியாக இருந்த பொருட்களை பரிமாறிக் கொள்ள பணம் என்ற இடையீட்டுக் கருவி தேவைப்பட்டது. அந்நிலையில் பொது இடையீட்டுக் கருவிகளாக விலங்கின் தோல், உரோமம், உப்பு, அரிசி, கோதுமை, பாத்திரங்கள், ஆயுதங்கள், போன்ற பொருட்கள் பணமாக பயன்படுத்தப்பட்டு வந்தன. இவ்வாறு பொருட்களை பொருட்களுக்கு மாற்றிக் கொள்ளும் முறையே பண்டமாற்று முறை என அழைக்கப்பட்டது.

**பண்டமாற்று முறையின் வரலாறு 6000 BC யில் துவங்கியது:**

- மெசபடோமியா பழங்குடியினரால் பண்டமாற்று முறை பயன்படுத்தப்பட்டது.
- போயனிசியர்களால் கடல் கடந்து பல்வேறு நகரங்களில் இம்முறை பயன்படுத்தப்பட்டது.
- பாபிலோனியர்கள் பொருட்களுக்குப் பொருட்களை மாற்றும் பண்டமாற்று முறையை பயன்படுத்தினர்.

**உலோகத் திட்டம்** (Metalic Standard):

பண்டமாற்று முறை மற்றும் பண்டப் பணமுறைக்குப் பின் நவீன பண முறைகள் தோன்ற ஆரம்பித்தது. அதில் முதன்மையானது உலோகப் பணத்திட்டம ஆகும். உலோகத்திட்டத்தில் தங்கம், வெள்ளி போன்ற ஏதாவது ஒரு உலோகம் பணத்தின் திட்ட மதிப்பினை நிர்ணயிக்கப் பயன்படுத்தப்பட்டது. உலோகத் திட்டத்தின் கீழ் உலோக நாணயங்கள் பணமாக உருவாக்கப்பட்டன. இந்த நாணயங்கள் முழு மதிப்பு பணமாக அல்லது முழு நிறையுடைய சட்டமுறை பணமாக இருந்து வந்தன. அதாவது அந்நாணயங்களில் முக மதிப்பு மற்றும் உள்ளடக்க மதிப்பு ஆகிய இரண்டும் சமமாக இருந்தன.

**பொன் திட்டம் (Gold Standard):**
பொன்திட்டத்தின் கீழ் ஒரு பணத்தின் அலகு ஒரு குறிப்பிட்ட எடையிலான பொன் அளவினால் வரையறுக்கப்பட்டிருந்தது. ஒரு பண அலகின் வாங்குதிறன் அப்பொன் பணத்தின் எடை அளவுக்கு சமமாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

**வெள்ளித் திட்டம் (Silver Standard):**
வெள்ளித் திட்டத்தில் ஒரு பணத்தின் அலகு குறிப்பிட்ட அளவிலான வெள்ளி உலோகத்தின் மதிப்பிற்கு ஈடானதாக இருந்தது. இம்முறையில் ஒரு நாட்டின் அரசு அதன் பணத்தை எப்பொழுது வேண்டுமானாலும் வெள்ளியாக மாற்றிக்கொள்ளும் அனுமதியினை வழங்கியிருந்தது.

**காகிதப் பணத் திட்டம் (Currency standard):**

காகிதப் பணத்திட்டம் என்பது நாட்டின் கருவூலமோ, மைய வங்கியோ அல்லது இரண்டுமோ வரையறையற்ற சட்டமுறை பணமாக காகித பணத்தினை புழக்கத்திற்கு வழங்கும் ஓர் பண முறையாகும். காகித பண முறையில், பணத்திற்கு ஈடான மதிப்பினை

உலோகமாக மாற்ற முடியாது. காகிதப்பண மதிப்பு நிர்ணயம் பொன் மற்றும் வெள்ளி போன்ற உலோக மதிப்புகளை சார்ந்து இருப்பதில்லை. காகிதப் பணதிட்டம் நிர்வகிக்கப்படும் காகிதப் பணத்திட்டம் நிர்வகிக்கப்படும் காகிதப் பணத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது. விலைவாசியை நிலைப்படுத்தும் நோக்கில் புழக்கத்திலுள்ள பண அளவினை நாட்டின் உச்ச நிலை அதிகார அமைப்பான மையவங்கி கட்டுப்படுத்துகிறது. பண மதிப்பிற்கான அரசின் கட்டளையைத் தாங்கி வருவதால் காகிதப் பணத்திட்டம் கட்டளைப் பணத்திட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

உலோகமாக மாற்ற முடியாது. காகிதப்பண மதிப்பு நிர்ணயம் பொன் மற்றும் வெள்ளி போன்ற உலோக மதிப்புகளை சார்ந்து இருப்பதில்லை. காகிதப் பணதிட்டம் நிர்வகிக்கப்படும்

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணம் நெகிழிப் பணமாகும். இது நிதிப் பொருட்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தோற்றமாகும். நெகிழிப் பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும். தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் (Plastic Money) உருவாக்கப்பட்டிருப்பதால் இது நெகிழி பணம் என்றழைக்கப்படுகிறது. ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை, முன்கூட்டியே பணம் செலுத்தப்பட்ட அட்டை, வணிக நிறுவன அட்டை (Store Card), அந்நிய செலாவணி அட்டை (Forex Card) மற்றும் சூட்டிகை அட்டை (Smart Card) என்று நெகிழிப் பணம் பல்வேறு வடிவங்களில் வந்துகொண்டிருக்கிறது. பரிவர்த்தனைக்காக ரொக்கப் பணம் கையில்கொண்டு வருவதை தவிர்ப்பதுதான் இவ்வகைப் பணத்தின் நோக்கம் ஆகும்.

**மெய்நிகர் பணம் (Crypto Currency):**

மைய வங்கியைச் சாராமல் பண பெருக்கத்தை சீர் செய்தல் மற்றும் நிதி மாற்றத்தை சரிபார்த்தல் போன்ற சுதந்திரம் கொண்ட டிஜிட்டல் நாணயங்கள் மெய்நிகர் பணமாகும்.

பிட்காயின் (Bitcon) போன்ற பரவலாக்கப்பட்ட பணம் தனிநபர் சொத்துக்கள் கட்டுப்பாட்டுக்குள்ளும் கையகப்படுத்துதலுக்குள்ளும் உட்படாமல் இருக்க ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்படுகின்றது.

**பணத்தின் பணிகள் (Functions of Money):**

பணத்தின் முக்கிய பணிகள் நான்கு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**பணத்தின் பணிகள்:**

1. முதல்நிலை பணிகள்
2. இரண்டாம் பணிகள்
3. துணைப்பணிகள்
4. இரத பணிகள்

1. **முதன்மை பணிகள்:**

1. **பணம் ஓர் பரிவர்த்தனை கருவியாக**: இது பணத்தின் அடிப்படை பணியாகும். பணம் பொது ஏற்புத் தன்மையைக் கொண்டது. மேலும், இது அனைத்து பரிவர்த்தனைகளிலும் தவறாது இடம்பெறுகிறது. பணத்தை பயன்படுத்தி செய்யும் பரிவர்த்தனைகளை இரு பகுதிகளாக பார்க்கலாம். முதலில் மற்றொருவருக்கு பொருட்களை வழங்கும்பொழுது பணம் பெறப்படுகிறது. இந்த செயல் விற்பனை எனப்படுகிறது. இரண்டாவதாக, பொருட்களை நாம் வாங்கும்பொழுது பணம் செலுத்தப்படுகிறது. இது கொள்முதல் எனப்படுகிறது. ஆகவே, நவீன பரிவர்த்தனைகளில் பணம் ஒரு இடையீட்டு கருவியாக செயல்பட்டு வருகிறது.

2. **பணம் ஓர் மதிப்பின் அளவுகோலாக**: பொருட்கள் மற்றும் பணிகளை மதிப்பளவை செய்வது பணத்தின் இரண்டாவது முக்கிய பணியாகும். பொருட்கள் மற்றும் பணிகளின் மதிப்புகளை பண அலகில் விலைகளாக வெளிப்படுத்தப்படுகிறது. ஆகவே, பணம் ஒரு பொது அளவு கோலாக பார்க்கப்படுகிறது. இதனால் சமுதாயத்திலுள்ள பல்வேறு பொருட்களுக்கான பாரிவர்த்தனை விகிதங்களை எளிதாக தீர்மானிக்க உதவுகிறது.

2. **இரண்டாம் நிலை பணிகள்:**

1. **பணம் ஒரு மதிப்பு நிலைக்கலனாக:**
பொருட்களை சேமிப்பாக வைத்திருந்தால் அது நிலைத்திருக்காது. ஆனால் பணம் கண்டுபிடிக்கப்பட்டபின் பொருள் மற்றும் பணியினை சேமித்து வைப்பதில் உள்ள சிக்கல்கள் மறைந்துவிட்டன. பணம் நீர்மைத் தன்மையைக் கொண்டிருப்பதனால், அதை எப்பொழுது வேண்டுமானாலும் நிலம், இயந்திரம் மற்றும் தளவாடம் என எளிதாக சந்தைப்படுத்தப்படும் சொத்துக்களாக மாற்றிக்கொள்ளலாம். அவ்வகை சொத்துக்களை மீண்டும் பணமாகவும் மாற்றிக் கொள்ள இயலும். ஆகவே, பணம் மிக சிறந்த மதிப்பின் நிலைக்கலனாக செயல்படுகிறது. அதேசமயம், பணத்தின் மதிப்பு ஒரளவுக்கு நிலைத்தன்மை கொண்டதாக இருந்தால் தான் இவ்வகையில் தனது பணியை சிறப்பாக செய்ய முடியும்.

2. **பணம் வருங்கால செலுத்துதல்களுக்கான ஓர் அடிப்படை:**
பண்டமாற்று முறையில் கடன் வாங்குவதிலும் திருப்பிச் செலுத்துவதிலும் சிக்கல் நிறைந்திருந்தது. கடனுக்குப் பெறப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகளை திருப்பிச் செலுத்தும்பொழுது மதிப்பு மாற்றத்தினால் எந்த அளவு பொருட்களை, பணிகளை திருப்பிச் செலுத்துவது என்ற சிக்கல் இருந்தது. ஆனால், இன்றைய நவீன பொருளாதாரத்தில் கடன்களை பெறுவதையும், திரும்பச் செலுத்துவதையும் பணம் எளிதாக்குகிறது. அதாவது பணம் வருங்கால செலுத்துதல்களுக்கு இடையீட்டுக் கருவியாக செயல்படுகின்றது.

3. **பணம் வாங்குதிறனை மாற்றிக் கொள்ளும் ஒரு கருவியாக:**
பொருளாதார வளர்ச்சியினை ஒட்டி பரிவர்த்தனை விரிவடைந்து செல்கிறது. தூரப்பகுதிகளுக்கு இடையிலும், எல்லை கடந்தும் பரிவர்த்தனைகள் நடைபெறுகிறது. இதனால், ஓரிடத்திலிருக்கும் வாங்குதிறன் மற்றொரு இடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. பணம் என்ற கருவி இந்த பணியினை எளிதாகவும் விரைவாகவும் செய்கிறது.

3. **துணைப்பணிகள்:**

1. **கடனுக்கான அடிப்படை:**

கடன்முறைக்கு அடிப்படையாக பணம் அமைந்துள்ளது. வணிக பரிவர்த்தனைகள் ரொக்கத்திலோ அல்லது கடனிலோ நடைபெறுகிறது. உதாரணத்திற்கு, வங்கி வைப்பினை வைத்திருக்கும் ஒருவர் அவர் கணக்கில் போதிய அளவு ரொக்க பண இருப்பு இரக்கும் பொழுது மட்டுமே காசோலைகளை பயன்படுத்துவார். வணிக வங்கிகள் இருக்கும்பொழுது மட்டுமே காசோலைகளை பயன்படுத்துவார். வணிக வங்கிகள் வாடிக்கையாளர் கணக்குகளிலுள்ள ரொக்க இருப்பின் அளவை பொறுத்தே கடன்களை உருவாக்கின்றன. ஆகவே, ரொக்க பணமே கடனுக்கான அடிப்படையாக அமைகிறது.

2. **பணம் தேசிய வருவாய் பங்கீட்டிற்கு உதவுகிறது:**
பண்டமாற்று முறையில் தேசிய வருவாய் பங்கீடானது மிகச்சிக்கலான ஒன்றாகும். ஆனால், பணம் என்ற கருவி கண்டறியப்பட்ட பின் வாரம், கூலி, வட்டி மற்றும் இலாபம் என காரணிகளுக்கான வருமானத்தை, அதாவது தேசியவருவாயை எளிதாக பகர்ந்தளிக்க முடிகிறது.

3. **இறுதிநிலைப் பயன்பாடுகளை ஒப்பிடவும், இறுதிநிலை உற்பத்தி திறன்களை ஒப்பிடவும் பணம் பயன்படுகிறது:**
நுகர்வோர் தனது மொத்த பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்தும் நோக்கில் தான் நுகரும் பல்வேறு பொருட்களின் இறுதிநிலைப் பயன்பாடுகளை பணத்தின் துணையுடன் சமப்படுத்த வேண்டியதாகிறது. ஏனெனில், பொருட்களின் விலை பணத்தில் உள்ள நிலையில் இறுதிநிலைப் பயன்பாடுகள் பணத்தின் அலகுகளில் வெளிப்படுத்தும்பொழுதான் அவைகளை ஒப்பிட்டு பயன்பாட்டினை உச்சநிலைப்படுத்த முடியும். அதேபோல், உற்பத்தியாளர் தனது இலாபத்தினை உச்சநிலைப்படுத்த பல்வேறு காரணிகளின் இறுதிநிலை உற்பத்தி திறனை பண அளவுகளில் ஒப்பிட வேண்டியுள்ளது.

4. **பணம் மூலதனத்தின் உற்பத்தி திறனை உயர்த்துகிறது:**

மூலதனம் பல்வகை வடிவங்களில் காணப்படுகிறது. பணம் நீர்மைத்தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். அதாவது, பணம் மூலதனத்தை எளிய முறையில் பிறவகை மூலதனமாக மாற்றலாம். பிறவகை மூலதனங்களை பணமாகவும் மாற்றலாம். ஆகவே, உற்பத்தியில் குறைந்த ஒரு மூலதனத்தை மாற்றி, அந்த இடத்தில் அதிக இறுதிநிலை உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு மூலதனத்தை கொணர பணம் துணை செய்கின்றது.

**இதர பணிகள்:**

1. **திரும்பச் செலுத்தும் திறனை தக்கவைக்க பணம் உதவுகிறது**: பணம் பொது ஏற்புத்தன்மை கொண்ட ஒரு சாதனமாகும். நிறுவனங்கள் தங்களின் செலுத்துதல்களை மேற்கொள்ள எப்பொழுதும் குறிப்பிட்ட அளவு ரொக்க பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும். இதேபோல், வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்களும் கூட தங்களது திரும்பச் செலுத்தும் திறனை தக்கவைத்துக்கொள்ள பணத்தை தயார் நிலையில் வைத்திருக்கும்.

2. **பணம் பொதுமைப்படுத்தப்பட்ட வாங்கு திறனை குறிக்கிறது:** பணம் என்ற வாங்குதிறன் கொண்ட சாதனத்தைக்கொண்டு எதை வாங்குவதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம். எந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காக அந்த பணம் என்ற வாங்குதிறன் சேமித்து வைக்கப்பட்டதோ, அதை மட்டுமே வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

3. **பணம் மூலதனத்திற்கு நீர்மைத் தன்மையை தருகிறது:**

பணம் என்பது நீர்மைத் தன்மை கொண்ட ஒரு மூலதனமாகும். இதன் துணையுடன் அனைத்து இடுபொருட்களை வாங்குவதன் மூலம் எந்த ஒரு செய்பொருளையும் உற்பத்தி செய்ய இயலும்.

**பண அளிப்பு:**

ஒரு பொருளாதாரத்தில் உள்ள மொத்தப் பண அளவே பண அளிப்பு ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நாட்டில் புழக்கத்தில் உள்ள பண அளவைக் குறிப்பதே பண அளிப்பாகும். வட்டிவிகிதம், விலைவாசி போன்றவற்றை நிர்ணயிப்பதில் பண அளிப்பு முக்கியப்பங்காற்றுகின்றது. குறிப்பிட்ட

காலத்தில் பண அளிப்பு நிலைக் (Stock) கருத்தாகவும் ஒரு கால இடைவெளியில் ஓட்டக் (Flow) கருத்தாகவும் உள்ளது.

**பண அளிப்பின் பொருள்:**

இந்தியாவில் காகிதப் பணங்கள் ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியாவாலும் நாணயங்கள் மத்திய அரசின் நிதித்துறையாலும் வெளியிடப்படுகின்றது. இது தவிர பொது மக்களால் வங்கிகளில் வைக்கப்பட்டுள்ள பல்வேறு வித கணக்குகளில் உள்ள இருப்புத் தொகைகளும் பணமாக கருதப்படுகின்றது. காகிதபணங்கள் அதிகாரம் பெற்ற சட்ட பூர்வமான செலாவணியாகும்.

இந்திய ரிசர்வ் வங்கி பண அளிப்பில் M1, M2, M3 மற்றும் M4 என நான்கு வகையிலான அளவீடுகளை செய்கின்றது.

M1 = காகிதப்பணம், நாணயங்கள் மற்றும் கேட்பு வைப்புகள்

M2 = M1 + அஞ்சலக சேமிப்பு வங்கியின் சேமிப்பு வைப்புகள்
M3 = M2 + அனைத்து வணிக வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகளிலுள்ள கால வைப்புகள்
M4 = M3 + அஞ்சலகத்திலுள்ள அனைத்து வைப்புகள்

இதில் M1 மற்றும் M2 குறுகிய பணம் என்றழைக்கப்படுகிறது. மேலும் M1 மற்றும் M2 பரந்தநிலை பணம் என்றழைக்கப்படுகிறது.

மேற்கூறிய M1 முதல் M4 வரையிலான வகைப்பாட்டு வரிசையில் பணத்தின் நீர்மைத்தன்மை தொடர்ச்சியாக குறைந்து வருவதை நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

**பணக் குறியீடு ₹**

இந்திய தொழில்நுட்பக் கழகம் (IIT) மும்பையில் முதுகலைப் பட்டம் பெற்ற திரு. D. உதயகுமாரால் வடிவமைக்கப்பட்ட புதிய பணக் குறியீடு ஜூலை 15, 2010ம் ஆண்டில் மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டது. தேவநாகரி எழுத்து "ரா" வும் ரோமன் எழுத்து "R" இல் செங்குத்துக்கோடு இல்லாமலும் உள்ள வடிவமைப்பாகும். அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், ஐரோப்பா நாடுகளுக்குப்பின் இந்தியா தனிப் பணக் குறியீடு கொண்ட நாடாக விளங்குகின்றது.

**பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள்:**

1. **ரொக்க வைப்பு விகிதம் (Cash – Deposit – CDR**): இது பொது மக்கள் கையில் வைத்திருக்கும் பணம் / வங்கி வைப்புக்களில் உள்ள பணம் என்ற விகிதத்தை குறிக்கும்.

2. **ரொக்க இருப்பு வைப்பு விகிதம் (Reserve – Deposit Ratio – RDR)**"வங்கி தனது பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருக்கும் இருப்பு மற்றும் மைய வங்கியில் வைத்திருக்கும் ரொக்க வைப்பு / மொத்த வைப்புகள்" என்ற விகிதம்.

3. **ரொக்க இருப்பு விகிதம் (Cash Reserve Ration – CRR)**: "வங்கியில் வைப்புகளில் குறைந்தபட்சமாக மைய வங்கியில் வைக்க வேண்டிய அளவு / வங்கிகளில் செலுத்தப்பட்ட மொத்த வைப்புக்கள்" என்ற விகிதம்.

4. சட்டபூர்வ நீர்மை விகிதம் (Statutory Liquidity – SLR) "வணிக வங்கிகள் வைத்திருக்கும் நீர்மை தன்மையிலான சொத்துக்கள் / வணிக வங்கிகளில் இருக்கும் மொத்த கேட்பு மற்றும் கால வைப்புகள்" என்ற விகிதம்.

**பண அளவு கோட்பாடுகள்:**

பண அளவுக் கோட்பாடுகள் பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் இடையேயான தொடர்பினை எடுத்துரைப்பதாகும். இங்கு, பிஷரின் பண அளவுக் கோட்பாடு மற்றும் கேம்பிரிட்ஜி ரொக்க இருப்பு அணுகுமுறை கோட்பாடு ஆகியன கொடுக்கப்பட்டுள்ளன.

1. ∴பிஷரின் பண அளவுக் கோட்பாடு:

பண அளவுக் கோட்பாடு என்பது மிக பழமையான கோட்பாடு ஆகும். இது 1588 – ஆம் ஆண்டு டாவன்ஷட்டி என்ற இத்தாலிய பொருளியல் அறிஞரால் முன்மொழியப்பட்டது. ஆனால், நவீன வடிவிலான இக்கோட்பாட்டினை உருவாக்கிய புகழ் முழுதும் "பணத்தின் வாங்கும் சக்தி" (1911) என்ற நூலை எழுதிய அமெரிக்க பொருளியலறிஞரான இர்வின் ∴பிஷரைச் சாரும். இவர் தனது கோட்பாட்டினை "பரிவர்த்தனைக்கான சமன்பாடு" என்று கணித சமன்பாட்டின் வாயிலாக வழங்கியுள்ளார்.

இச்சமன்பாட்டின் பொது வடிவம் ஆகும்.

இங்கு

$$MV = PT$$

M = மொத்த (காகித) பண அளவு

V = பணத்தின் சுழற்சி வேகம்

P = பொது விலை மட்டம்

T = வாணிபத்தின் அளவு

∴பிஷர் ஒரு நாட்டில் குறிப்பிட்ட கால அளவில் மொத்த பண அளிப்பு (MV) என்பது நாட்டில் வாங்க – விற்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகளின் அளவின் பண மதிப்பிற்கு (அதாவது மொத்த பணத்தேவைக்கு) (PT) சமமாக இருக்கும் என்று குறிப்பிடுகின்றார்.

$$MV = PT$$

பண அளிப்பு = பணத்தேவை

இச் சமன்பாடு "ரொக்க பரிவர்த்தனை சமன்பாடு" என்றும் அழைக்கப்படுகிறது.

மேற்சொன்ன சமன்பாட்டினை $P = MV/T$ என்று மாற்றியமைக்கும் பொழுது, பண சுழற்சி வேகமும், வாணிபத்தின் அளவும் மாறாதிருக்கும் சூழ்நிலையில் பணத்தின் அளவு எவ்வகையில் பொது விலைமட்டத்தையும், பணத்தின் மதிப்பினையும் நிர்ணயிக்கிறது என்பர் விளங்குகின்றது. இங்கு பண அளவு மாறுதல் நேரடியாக விலைமட்டத்தை பாதிக்கிறது.

மேற்சொன்ன சமன்பாடு காகிதப் பணத்தை மட்டுமே கணக்கில் கொண்டுள்ளது. ஆனால், நவீன வாணிப பொருளாதாரத்தில் காகிதப் பணத்துடன் வங்கியிலிருக்கும் கேட்பு வைப்புக்கள், கடன் பணம் மற்றும் அவைகளின் சுழற்சி வேகம் ஆகிய அனைத்தும் முக்கிய பங்கு வகிக்கின்றன. ஆகவே, ∴பிஷர் தனது சமன்பாட்டினை கீழ்கண்டவாறு விரிவாக்கினார்.

$$PT = MV + M^1V^1$$

$$\frac{P = MV + M^1V^1}{T}$$

மேற்கண்ட விரிவாக்கப்பட்ட சமன்பாட்டில், பொது விலைமட்டமானது (P) காகிதப் பண அளவு (M), பணத்தின் சுழற்ச்சி வேகம் (V), வங்கி கடன் பணத்தின் அளவு ($M^1$) வங்கிக் கடன் பணத்தின் சுழற்ச்சி வேகம் ($V^1$) மற்றும் மொத்த வாணிபத்தின் அளவு (T) ஆகிய காரணிகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

**வரைபட விளக்கம்:**

வரைபடம் (A) மொத்த பண அளவில் ஏற்படுத்தப்படும் மாறுதல் விலைமட்டத்தில் எவ்வாறு மாற்றத்தினை ஏற்படுத்துகிறது என்பதனை உணர்த்துகிறது. பண அளவு OM ஆக

இருக்கும்பொழுது விலைமட்டம் OP யாக உள்ளது. பிறகு பண அளவினை $OM_2$என இரட்டிப்பாக்கும் பொழுது விலைமட்டமும் $OP_2$என இரட்டிப்பாகிறது. மேலும், பண அளவு $OM_4$ என நான்கு மடங்காக்கும் பொழுது விலைமட்டமும் $OP_4$என நான்கு மடங்காகிறது. விலைமட்டச் சார்பு OP = f(M) க்கான நேர்கோடு வரைபடத்தின் தோற்றுவாயிலிருந்து 45° அமையும்பொழுது பணத்தின் அளவிற்கும் விலைமட்டத்திற்கும் உள்ள நேரடி சமவிகித உறவு விளங்குகிறது.

வரைபடம் (B) பணத்தின் அளவிற்கும், பணத்தின் மதிப்பிற்கும் உள்ள தலைகீழ் உறவினை விளக்குகிறது. வரைபடத்தின் செங்குத்து அச்சில் பண மதிப்பும் ($O_1$/P) படுகிடை அச்சில் பண மதிப்பும் படுகிடை அச்சில் பண அளவும் குறிக்கப்பட்டுள்ளன. பண அளவு OM ஆக உள்ளபொழுது, பணமதிப்பு $O_1/P$ - ஆக உள்ளது. பின்னர் பண அளவினை $OM_2$ என இரட்டிப்பாக்கும் பொழுது பண மதிப்பு $O_1/P_2$என பாதியாக குறைகிறது. தொடர்ந்து பண அளவினை $OM_4$ என நான்கு மடங்காக்கும்பொழுது பணமதிப்பு $O_1/P_4$என நான்கில் ஒரு பகுதியாக குறைகிறது. பண மதிப்புச் சார்பு $O_1/P = f(M)$ க்கான வளைகோடு மேலிருந்து கீழ்நோக்கி சார்ந்து பண அளவிற்கும் பண மதிப்பிற்கும் உள்ள எதிர்மறையான மற்றும் சமவிகித தொடர்பினை சுட்டிக்காட்டுகிறது.

**கேம்பிரிட்ஜ் அணுகுமுறை (ரொக்க இருப்பு அணுகுமுறை)**

**1. மார்ஷலின் சமன்பாடு**

மார்ஷலின் சமன்பாடு பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

$$M = KPY$$

இங்கு

M = பணத்தின் அளவு

Y = சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானம்

P = பொது விலைமட்டம்

K = மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக

வைத்திருக்க விரும்பும் சமுதாயத்தின் மொத்த உண்மை வருமானத்தின் ஒரு பகுதி

மேற்கண்ட சமன்பாட்டினை மாற்றி எழுதும் பொழுது,$P = M/KY$ என்று பொதுவிலை மட்டத்தினை (P) காண உதவுகிறத. மேலும் அதனை தலைகீழியாக மாற்றி எழுதும் பொழுது நமக்கு ($1/P = KY/M$ என பணத்தின் வாங்கும் சக்தி, அதாவது பண மதிப்பினை கண்டறிய முடிகிறது.

இறுதியாக கூறப்பட்ட $1/P = KY/M$ என்ற சமன்பாட்டினை மேலும் சற்று விளக்கமாக கூற வேண்டுமெனில், மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தை (KY = மொத்த பணத்தேவையின் அளவு) பண அளிப்பினால் (M) வகுத்தால் பணத்தின் மதிப்பினை கண்டறியலாம்.

மார்ஷல் கூற்றுப்படி, பண அளவு (M) என்ற காரணியைவிட மக்கள் தங்கள் கையில் ரொக்கமாக வைத்திருக்க விரும்பும் உண்மை வருமானத்தின் பகுதி (K என்ற கெழு) பணமதிப்பினை தீர்மானிப்பதில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது.

**1. கீன்ஸின் சமன்பாடு**

கீன்ஸின் முதல் சமன்பாடு பின்வரும் வகையில் அமைகின்றது.

$$n = pk \text{ (or) } p = n / k$$

இங்கு,

N = மொத்த பண அளிப்பு

p = நுகர்ச்சிப் பொருட்களின் விலை மட்டம்

k = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி நுகர்ச்சிப் பொருட்களின் அலகுகளில்

கீன்ஸ் ம என்பதனை உண்மை இருப்பு (Real Balance) என்று குறிப்பிடுகிறார். ஏனெனில் மக்களின் ரொக்க கையிருப்பு இங்கு நுகர்ச்சிப் பொருட்களின் அளவுகளில் கணக்கிடப்படுகிறது.

கீன்ஸின் கூற்றுப்படி, மக்களின் ரொக்க விருப்பத்தினை (k) பணவியல் அமைப்புகள் மாற்று இயலாது, ஆகவே, பணத்தின் அளவை (n) நெறிப்படுத்துவதன் மூலம் விலைவாசியை கட்டுப்படுத்தலாம். பணத்தின் மதிப்பினை நிலைப்படுத்தலாம் என்கிறார்.

பின்னர், கீன்ஸ் தனது சமன்பாட்டினை பின்வருமாறு விரிவாக்குகிறார்.

n = மொத்த பண அளிப்பு

p = நுகர்ச்சிப் பொருட்கள் (தொகுப்பின்) விலை மட்டம்

k = மக்கள் தங்கள் கையில் வைத்திருக்க விரும்பும் வருமானத்தின் ஒரு பகுதி நுகர்ச்சி பொருட்களின் எண்ணிக்கையில் (பல பொருட்களின் தொகுப்பு)

r = வங்கிகளின் ரொக்க இருப்பு விகிதம்

k' = வங்கி வைப்புகளாக சமுதாயம் வைத்திருக்கும் பணத்தின் அளவு – நுகர்ச்சிப் பொருட்களின் எண்ணிக்கையில்.

இவ்விரிவாக்கச் சமன்பாட்டிலும், கீன்ஸ் k, k' மற்றும் r ஆகியவைகள் மாறாதிருக்கும் என்கிறார். அச்சூழ்நிலையில், பண அளவை (n) மாற்றும் பொழுது விலைமட்டம் (P) நேரடியாகவும், சமவிகிதத்திலும் மாறும் என்கிறார்.

**பணவீக்கம்:**

பொருளாதாரத்தில் பணவீக்கம், பண வாட்டம் ஆகியன இரு பெரும் பொருளாதார சிக்கல்கள் ஆகும். ஆகவே, இவைகளை தெரிந்துகொள்வது மிகவும் அவசியம் ஆகும்.

**பணவீக்கம் என்பதன் பொருள்:**
பணவீக்கம் என்பது தொடர்ச்சியான மற்றும் குறிப்பிடும்படியான பொது விலைமட்ட அதிகரிப்பு ஆகும். சற்று விளக்கமாக கூறினால், பணவீக்கம் என்பது பண்டங்கள் மற்றும் பணிகளில் பொதுவிலைமட்ட அதிகரிப்பு விகிதத்தையும், அதன் விளைவாக பணத்தின் வாங்கும் சக்தி குறைவதையும் காட்டுகிறது.

**இலக்கணங்கள்:**

"குறைந்த அளவு பண்டங்களை அதிக
அளவு பணம் துரத்தும் நிலை"

- கோல்பர்ன்

"வாங்கும் சக்திக்கான அளவின் அசாதாரண
குறைவு நிலையாகும்"

- கிரிகெரி

**பணவீக்கத்தின் வகைகள் பணவீக்க வேகத்தின் அடிப்படையில்:**

பணவீக்கம் வேகத்தின் அடிப்படையில் தவழும் பணவீக்கம் (Creeping Inflation), நடக்கும் பணவீக்கம் (Walking Inflation), ஓடும் பணவீக்கம் (Running Inflation), தாவும் பணவீக்கம் (Hyper Inflation) அல்ல உயர் பணவீக்கம் என நான்காக வரைபடம் குறிக்கப்பட்டுள்ளது.

1. **தவழும் பணவீக்கம்:**

தவழும் பணவீக்கம் மிக குறைவான மற்றும் எளிமையான விகிதத்தில் பணவீக்க விகிதம் இருப்பதாகும். நீண்ட காலத்தில் விலைவாசி உயர்வதை மக்கள் எளிதாக உணர முடியாத அளவில் இருக்கும் பணவீக்கமே தவழும் பணவீக்கம் எனப்படுகிறது. இது மிதமான பணவீக்கம் (Mild Inflation) எனப்படுகிறது.

**2. நடக்கும் பணவீக்கம்**

பணவீக்கம் மிதமான வேகத்தில் ஒற்றை இலக்கத்தில், அதாவது 3 முதல் 9 சதவிகிதத்தில், இருந்தால் அது நடக்கும் பணவீக்கம் அல்லது நகரும் பணவீக்கம் (Trolling Inflation) என்றழைக்கப்படுகிறது.

**3. ஓடும் பணவீக்கம்:**

ஆண்டு பணவீக்க விகிதம் 10 முதல் 20 சதவிகிதத்திற்குள் இருந்தால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது. வேகமான விலைவாசி அதிகரிப்பை ஓட்டத்துடன் உவமைப்படுத்தி சொல்வதால் அது ஓடும் பணவீக்கம் எனப்படுகிறது.

**4. தாவும் பணவீக்கம்:**

தாவும் பணவீக்கம் அல்லது உயர் பணவீக்கம் என்பது சமாளிக்க முடியாத அளவிற்கு இரண்டு அல்லது மூன்று இலக்க சதவிகிதத்தில் உள்ள பணவீக்கம் ஆகும். மிக அதிகமான உயர் பணவீக்கம் இருக்கும்பொழுது ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் ஆண்டிற்கு 20 முதல் 100 வரை சதவிகிதமாக இருக்கும். கீன்ஸ் இதனை உண்மையான பணவீக்கம் என குறிப்பிடுகின்றார்.

| |
|---|
| 21 ஆம் நூற்றாண்டின் முதல் உயர் பணவீக்கம் முன்னெப்பொழுதும் இல்லாத அளவாக ஜிம்பாப்வே நாட்டில் ஆண்டிற்கு 3714 சதவிகிதமாக ஏப்ரல் 2007 இறுதியல் உயர்ந்தது. |

**தேவை இழுப்பு எதிர் செலவு உந்து பணவீக்கம்**

**1. தேவை - இழுப்பு பணவீக்கம்:**

எப்பொழுதுமே தேவை மற்றும் அளிப்பு ஆகியன பணவீக்கத்தை தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அளிப்பு நிலையாக உள்ள நிலையில், பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும் பொழுது விலைவாசி உயருகின்றது. இது தேவை - இழுப்பு பணவீக்கம் என்றழைக்கப்படுகிறது.

**2. செலவு – உந்து பணவீக்கம்:**

உற்பத்தியில் மூலப்பொருட்கள் மற்றும் இதர இடுபொருட்களுக்கான செலவு உயருகின்றது பொழுது உற்பத்தி செலவு கூடி பொருட்களுக்கான விலை அதிகரிக்கின்றது. இவ்வகை பணவீக்கம் செலவு – உந்து பணவீக்கம் எனப்படுகிறது.

**கூலி – விலை சுழல்:**

கூலி – விலை சுழல் மூலம் கூலி உயர்வுக்கும் பணவீக்கத்திற்கும் இடையேயான காரண – விளைவு உறவு விளக்கப்படுகிறது. கூலி உயரும் பொழுது செலவிடத்தகுந்த வருவாய் உயருகிறது. இதனால் பெர்ருட்களுக்கான தேவை உயருகின்றது. தொடர்ந்து பொருட்களுக்கான விலையும் உயருகின்றது. இதன் விளைவாக பணவீக்கம் ஏற்படுகிறது. விலைவாசி உயர்வின் காரணமாக தொழிலாளர்கள் கூலி உயர்வினை கோருவார்கள். இது உற்பத்திச் செலவினை மீண்டும் உயர்த்தி பொருட்களின் விலையை மீண்டும் மேல்நோக்கி உயர்த்த தூண்டும் ஒரு சுழலை ஏற்படுத்துகிறது.

**இதர காரணிகள் (தூண்டும் அடிப்படையில்)**

1. **காகிதப்பண பணவீக்கம் (Currency Inflation):**

அளவுக்கு அதிகமான காகிதப் பணத்தை மையவங்கி பயன்பாட்டிற்கு விடுவிக்கும்பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வு காகிதப் பணவீக்கம் எனப்படுகிறது.

2. **கடன்பண பணவீக்கம் (Credit Inflation):**

வணிக வங்கிகள் தாராளமாக கடனை அளிக்கும்பொழுது ஏற்படும் விலைவாசி உயர்வினை கடன்பண பணவீக்கம் ஆகும்.

3. **வரவு – செலவு பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் (Deficit Induced Inflation):**

வரவு – செலவுத் திட்டத்தினால் ஏற்படும் பற்றாக்குறையை (Budget Deficit) சரிசெய்யும் நிதியாக்க முறைகளில் ஒன்றாக, மையவங்கி மூலம் கூடுதல் காகிதப்பணத்தினை அச்சிட்டு பயன்பாட்டிற்கு விடப்படுகிறது. இக்கூடுதல் பணத்தினால் ஏற்படும் விலைவாசி உயர்வினை வரவு – செலவு பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

4. **இலாபத் தூண்டல் பணவீக்கம் (Profict Induced Inflation):**
அதிக இலாபத்தினை பெறும் நோக்கில் பொருட்களின் விலையில் உயர் இலாப விகித்தை சேர்ப்பதால் பொருட்களின் விலை அதிகரிக்கின்றது. இதுவே இலாபத் தூண்டல் பணவீக்கம் ஆகும்.

5. **பொருள் பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் (Scarcity Induced Inflation):**

விவசாயம் போன்ற துறைகளில் இயற்கை இடாப்பாடுகள் மற்றும் இதர காரணங்களால் உற்பத்தி பாதிக்கப்படும்பொழுது பொருள் பற்றாக்குறை ஏற்படும். மேலும், பதுக்கல் நடவடிக்கையினாலும் கருப்புச் சந்தையினாலும் பொருள் பற்றாக்குறை ஏற்படும். இப்பற்றாக்குறைகளினால் ஏற்படும் விலைவாசி உயர்வினை பொருள் பற்றாக்குறை தூண்டல் பணவீக்கம் என்கிறோம்.

6. **வரி தூண்டல் பணவீக்கம் : (Tax induced Inflation):**

மறைமுக வரிகளான கலால்வரி, சுங்கவரி மற்றும் விற்பனைவரி ஆகியவற்றில் ஏற்படும் உயர்வு காரணமாக விலைவாசி உயர்ந்து செல்வது வரி தூண்டல் பணவீக்கம் எனப்படுகிறது. உதாரணத்திற்கு பெட்ரோல் மற்றும் டீசல் பொருட்கள் மீதான வரி உயர்வு பணவீக்கத்தை தூண்டுகிறது. இவ்வகையான பணவீக்கத்தை வரிவீக்கம் (Taxflation) எனவும் அழைக்கிறோம்.

**பணவீக்கத்திற்கான காரணங்கள்:**
இந்தியாவில் பல்வேறு காரணங்களால் பணவீக்கம் ஏற்படுகிறது. அது ஏற்படுவதற்கான காரணங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன.

1. **பண அளிப்பு உயர்வு:**
காகித பண அளிப்பு உயர்வினால் மொத்த தேவை அதிகரித்து பணவீக்கம் ஏற்படுகிறது. பெயரளவு பண அளிப்பு (nominal money supply) உயர்வு பணவீக்கத்தை அதிகரிக்கின்றது.

2. **செலவிடத் தகுந்த வருவாயில் (Disposable income) உயர்வு:**

மக்களின் செலவிடத் தகுந்த வருவாய் அதிகரிக்கும்பொழுது அவை பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை தூண்டுகின்றன. செலவிடத் தகுந்த வருவாய் உயர்வு, தேசிய வருவாய் அதிகரிப்பினாலோ அல்லது வரிவிகித குறைப்பினாலோ ஏற்படும். இதன் காரணமாக பணவீக்கம் ஏற்படும்.

3. **உயர்ந்து வரும் பொதுச் செலவுகள்:**
வளர்ச்சி மற்றும் சமுதாய நலத் திட்டங்களை அமல்படுத்துதல் போன்றவற்றில் அரசின் செயல்பாடுகள் விரிவடைந்து வருவதால் பொதுச் செலவுகளின் அளவு கூடி வருகிறது. இதன் காரணமாகவும் பணவீக்கம் ஏற்படுகிறது.

4. **நுகர்வோர் செலவு அதிகரித்தல்:**
தவணை கொள்முதல் போன்ற கடன் கொள்முதல் முறைகள் அமல்படுத்தப்படுவதால் நுகர்ச்சிப் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவை அதிகரித்து அதன் காரணமாக விலைவாசி அதிகமாகி பணவீக்கம் ஏற்படுகிறது.

5. **மலிவு பணக் கொள்கை (Cheap Money Policy):**
மைய வங்கியின் மலிவுப் பணக்கொள்கை பொருளாதாரத்தில் கடன் அளவை அதிகப்படுத்தும். இக்கடன் அதிகரிப்பு,பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவையை உயர்த்துவதால் ஏற்படும் விலைவாசி உயர்வு பணவீக்கத்தை ஏற்படுத்துகிறது.

6. **பற்றாக்குறை நிதியாக்கம்:**
தொடர்ந்து பொதுச் செலவுகள் கூடிவருவதால், அரசின் வரவு – செலவு திட்டத்தில் பற்றாக்குறைக்குறை ஏற்படுகிறது. இப்பாற்றாக்குறையை ஈடு செய்ய கடன் வாங்குதல், புதிய காகிதப் பணம் அச்சடித்தல் என பற்றாக்குறை நிதியாக்க முறைகளில் அரசு ஈடுபடுகிறது. இதன் விளைவாக தொகு அளிப்பைவிட தொகு தேவையின் அளவு அதிகரித்து, விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

7. **கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள், நடவடிக்கைகள் மற்றும் கறுப்புப் பணம்:**

இலஞ்சம் மற்றும் வரிஏய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கறுப்புப் பணம் மற்றும் கணக்கில் காட்டப்படாத சொத்துக்கள் உருவாகின்றன. மேற்கண்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் பகட்டாக செலவு செய்வதால் தொகு தேவை அதிகரிக்கின்றது. அதே சமயம் கருப்புச் சந்தையும், பதுக்கலும் தொகு அளிப்பினை குறைக்கின்றது. இவைகளின் காரணமாக விலைவாசி உயர்ந்து பணவீக்கம் ஏற்படுகிறது.

8. **பொதுக்கடனை மீளச் செலுத்துதல்**
உள்நாட்டில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட பொதுக்கடனை அரசு திரும்பச் செலுத்தும்பொழுது மொத்த பண அளிப்பில் அதிகரிப்பு ஏற்படுகிறது. இது தொகு தேவையினை அதிகரித்து பணவீக்கத்தையும் ஏற்படுத்துகிறது.

9. **ஏற்றுமதி உயர்வு:**
ஏற்றுமதியை ஊக்கப்படுத்தும் பொழுது உள்நாட்டில் பொருள் அளிப்பு குறைந்து, விலைவாசி உயர்வு ஏற்படுகிறது. இதன் காரணமாக பணவீக்கம் ஏற்படுகிறது.

**பணவீக்கத்தின் விளைவுகள்**
பணவீக்கத்தின் விளைவுகள் இரண்டாக வகைப்படுத்தப்படுகிறது.

1. உற்பத்தியின் மீதான விளைவு
2. பகிர்வின் மீதான விளைவு

1. **உற்பத்தியின் மீதான விளைவுகள்**
மிதமான பணவீக்கம் உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகர்களுக்கு ஒரு ஊக்கக் காரணியாக செயல்படும். மிதமான விலைவாசி உயர்வினால் ஏற்படும் இலாபத்தினால் தூண்டப்பட்டு உற்பத்தி மற்றும் வணிகத்தின் மீதான முதலீடுகள் அதிகரிக்கும். தொடர்ந்து வேலைவாய்ப்பும் வருமானமும் அதிகரிக்கும். ஆனால், மேற்சொன்ன கூற்றுகள் உற்பத்திக் காரணிகள் முழுவேலைவாய்ப்பை எய்தாத நிலையில் மட்டுமே சரியாக இருக்கும்.

1. அதேசமயம் உயர் பணவீக்கம் பணத்தின் மதிப்பினை குறைப்பதன் மூலம், மக்களின் சேமிப்பை குறைக்கும்.

2. பணவீக்கத்தின் காரணமாக பணத்தின் மதிப்பு குறிப்பிடத் தகுந்த அளவு குறைவதால் நாட்டில் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கும் வெளிநாட்டு மூலதனங்கள் திரும்பிச் செல்லும்.

3. மேற்கண்ட நடடிக்கையின் காரணமாக மூலதன திரட்சி குறையும். இது புதிய முதலீட்டில் பின்னடைவை ஏற்படுத்தி நாட்டின் உற்பத்தியின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

தொழில் முனைவோர் மற்றும் வணிகர்களின் இடர் ஏற்றல் பணியினை ஊக்கமிழக்கச் செய்வதாக அமையும்

4. பதுக்கல்காரர்களும் நுகர்வோரும் பொருட்களை பதுக்கி வைக்க பணவீக்கம் காரணமாக அமைகிறது. இது தொடர்ந்து, உயர் பணவீக்கத்திற்கு வழிவகுக்கிறது.

5. பணவீக்கமானது பொருள் உற்பத்தியை அதிகரிப்பதைவிட, ஊக வாணிப செயல்பாடுகளை அதிகரிக்கின்றது. ஊக வாணிபம் என்பது இலாப நோக்கில் பங்குகள் அல்லது பொருட்கள் விலை குறையும் என காத்திருந்தது, அது குறையும்பொழுது வாங்கி விலை அதிகரிக்கும்பொழுது விற்பனை செய்வது ஆகும். இதனால் நிகர உற்பத்தியோ, நிகர வேலைவாய்ப்போ அதிகரிப்பதில்லை.

2. **பகிர்வின் மீதான விளைவுகள்:**

1. **கடன் பெற்றோர் கடன் வழங்கியோர்:**
பணவீக்க காலத்தில் திருப்பிச் செலுத்தும் பொழுது பணமதிப்பு குறைவாக இருப்பதனால் கடன் வாங்கியோா் இழப்பையும் சந்திக்கின்றனா். எவ்வாறெனில், கடன் வாங்கியபொழுது பணமதிப்பு உயர்வாகவும், பணவீக்க காலத்தில் திருப்பிச் செலுத்தும் பொழுது பணமதிப்பு குறைவாக இருப்பதனால் கடன் வாங்கியோா் ஆதாயம் பெறுகிறாா். இதே காரணத்தால் கடன் வழங்கியோா் கூடுதலான பண மதிப்பு இருக்கும்பொழுது கடன் வழங்கி, பணவீக்க காலத்தில் குறைந்த பண மதிப்பில் பணத்தை மீளப் பெறும்பொழுது இழப்பு ஏற்படுகிறது.

2. **நிலையான வருவாய் பிரிவினர்:**
நிலையான வருவாயை உடைய பிரிவினர் பணவீக்கத்தினால் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் ஏனெனில், விலைவாசி உயர்வினால் ஏற்படும் வாழ்க்கைச் செலவு உயர்வுடன், நிலையான வருவாய் பொருந்திச் செல்வதில்லை. (உ.ம்) ஒரே மாதிரியான மாதச் சம்பளம் அல்லது கூலி பெறுவோர், ஓய்வூதியம் பெறுவோர், வட்டி பெறுவோர், வாடகை பெறுவோர் ஆகியோ மிகவும் பாதிக்கப்படுவர்.

3. **தொழில் முனைவோர்கள்:**

உற்பத்தியாளர், வணிகர் என்று தொழில் முனைவோர் போன்று எவ்வகையானவராக இருந்தாலும், அவர்களுக்கு பணவீக்கம் ஒரு வரமாகும்.ஏனெனில், பணவீக்கம் அவர்களுக்கு ஒரு ஊக்க சக்தியாக விளங்குகிறது. கிடங்கில் இருக்கும் பொருள் இருப்புக்களின் விலையேற்றத்தால் அவர்களுக்கு எதிர்பாரா ஆதாயம் (Windfall gian) கிடைக்கும்.

4. **முதலீட்டாளர்கள்:**

கடன் பத்திரங்களில் முதலீடு செய்தோருக்கு நிலையான வட்டியை பெறுவதால் அவர்கள் பணவீக்க காலத்தில் இழப்பினை சந்திப்பார்கள். மாறாக, பங்கு முதலீட்டாளர்கள் நல்ல இலாப ஈவு மற்றும் பங்கு மதிப்பேற்றம் போன்ற ஆதாரங்களை பெறுவார்கள்.

**பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வழிமுறைகள்:**

கீன்ஸ் மற்றும் மில்டன் ப்ரீட்மேன் பணவீக்கத்தினை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை கருத்துக்களின் அடிப்படையில் மூன்றாக பிரிக்கலாம் என்கின்றனர். அவைகள்

1. பணவியல் முறைகள்
2. நிதியியல் முறைகள் (J.M. கீன்ஸ்); மற்றும்
3. இதர முறைகள்

1. **பணவியல் முறைகள்**
பணவியல் முறைகள் நாட்டின் மைய வங்கியினால் அமல்படுத்தப்படும் முறையாகும். அவைகள்:

1. வங்கி விகிதத்தை உயர்த்துதல்

2. வெளிச்சந்தையில் அரசு பத்திரங்களை விற்றல்,
3. ரொக்க இருப்பு விகிதத்தை உயர்த்துதல் மற்றும் சட்டபூர்வ நீர்மை விகிதத்தை உயர்த்துதல்.
4. நுகர்வோர் கடனை கட்டுப்படுத்துதல்,
5. கடன் விளிம்பு நிலையினை உயர்த்துதல்,
6. மீள் வாங்கல் விகிதம் மற்றும் திருப்ப மீள் வாங்கல் விகிதம் (Reverse Repo Rate) ஆகியவற்றினை உயர்த்துதல் ஆகும்.

**2. நிதியியல் நடவடிக்கைகள்:**
பணவீக்க சூழ்நிலையை கட்டுப்படுத்துவதில் நிதிக் கொள்கையும் அதன் கருவிகளும் முக்கிய பங்கு வகிப்பது உணரப்பட்டுள்ளது. பணவீக்கத்திற்கு எதிரான நிதியியல் நடவடிக்கைகளாவன அரசு செலவினங்களை குறைப்பது, பொதுமக்களிடமிருந்து கடன்களை பெறுவது மற்றும் வரிவிதிப்புகளை விரிவாக்குவது.

**3. இதர நடவடிக்கைகள்:**
இதர நடவடிக்கைகள் குறுகியகால நடவடிக்கைகள் மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் என இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளன.

**1. குறுகிய கால நடவடிக்கைகள்:**
குறுகியகால நடவடிக்கையாக பொதுவிநியோக முறையின்கீழ் நியாயவிலை கடைகளில் அத்தியாவசிய பொருட்களை பங்கீடு செய்து வழங்குதல் ஆகும். இந்தியாவில் எப்பொழுதெல்லாம் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகிறதோ அப்பொழுதெல்லாம் பொருட்களை இறக்குமதி செய்து விலையேற்றம் ஏற்படா வண்ணம் தடுக்கப்படுகிறது.

**2. நீண்டகால நடவடிக்கைகள்:**
நீண்டகால நடவடிக்கையாக பொருளாதார வளர்ச்சியை துரிதப்படுத்துவது, குறிப்பாக பொதுவிலைமட்டத்துடனும் வாழ்க்கைச் செலவுடனும் நேரடி தொடர்பைக் கொண்டிருக்கும் கூலிப் பொருட்களின் உற்பத்தியின் வளர்ச்சியை துரிதப்படுத்துவது ஆகும். நீண்டகால பொருளாதார வளர்ச்சியை அடையும் நோக்கினில் சேமிப்பு – முதலீடுகளை மேம்படுத்தும் வீதமாக நடப்பிலுள்ள சில நுகர்ச்சிகளை கட்டுப்படுத்துதலும் உள்ளடங்கும்.

**பணவாட்டம், மீள்பணவீக்கம் மற்றும் தேக்கவீக்கம்:**

**பணவாட்டம் (Deflation):**

விலைவாசி குறைதல், குறைந்த பண அளிப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆகியன பணவாட்டத்தின் முக்கிய இயல்புகள் ஆகும். பணவாட்டத்தின் போது விலைவாசி குறைதல் என்பது நுகர்வோருக்கு விரும்பத்தகுந்த ஒன்றாக இருந்தாலும், அக்குறைவு உற்பத்தியையும், வேலைவாய்ப்பையும் குறைக்கும் அளவுக்கு இருக்கக் கூடாது. முழுவேலைவாய்ப்புள்ள நிலையில் விலைவாசி குறைந்தால் அது வருமானம் மற்றும் வேலைவாய்ப்பில் விரும்பத்தகாக விளைவினை ஏற்படுத்தும்.

**மீள்பணவீக்கம் (Disinflation):**
வேலைவாய்ப்பினை பாதிக்காத வகையில் கடன்களை (வங்கிக் கடன், தவணைமுறை கொள்முதல் முறைகளை) கட்டுப்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தினை குறைத்து வருவது மீள்பணவீக்கம் ஆகும். மீள் பணவீக்கம் என்பதனை பின்வருமாறு வரையறுக்கலாம்.

”வேலைவாய்ப்பின்மையை ஏற்படுத்தாமலும், உற்பத்தி அளவுகள் குறையாமலும் பணவீக்கத்தை திருப்பும் செயல்முறையே மிள்பணவீக்கம் ஆகும்”.

**தேக்கவீக்கம் (Stagflation):**

தேக்கவீக்கம் என்பது பொருளாதார வளர்ச்சியில் தேக்கநிலையும், வேலைவாய்ப்பின்மையும், அதிக அளவிலான பணவீக்கமும் ஒன்றிணைந்த சூழ்நிலை ஆகும்.

## வணிகச் சுழற்சி (Business Cycle):

ஒரு முதலாளித்துவ அமைப்பு முறையில் பொருளாதார நடவடிக்கைகள் ஏற்ற இறக்கங்களுடனேயே இருக்கும். சீரான கால இடைவெளியில் அமையும் இவ்வகை ஏற்ற இறக்கங்கள் வணிகச் சுழற்ச்சி அல்லது வியாபாரச் சுழற்ச்சி (Trade Cycle) அல்லது தொழில் ஏற்ற இறக்கங்கள் (Fluctuations) என்றழைக்கப்படுகிறது.

### வணிகச் சுழற்ச்சியின் பொருள்:

வேவைாய்ப்பு, உற்பத்தி, வருமானம் போன்றவற்றை உள்ளடக்கிய ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளில் (Aggregate economic activitics) ஏற்படும் அலைவுகளே வணிகச் சுழற்ச்சி என குறிப்பிடப்படுகிறது. ஒரு நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கும் கூறுகளில் ஏற்படும் உள்ளார்ந்த சுருக்கம் மற்றும் விரிவாக்கத்தினால் வணிகச் சுழற்ச்சி ஏற்படுகிறது. இச்சுழற்ச்சிகளின் பண்புகளாவன: குறிப்பிட்ட கால இடைவெளியில் வருபவை, மாறுபட்ட தீவிரத் தன்மை கொண்டவை, மற்றும் அதன் செயலாக்க எல்லைகள் மாறுபட்டவை.

உள்ளார்ந்த சுருக்கம் மற்றும் விரிவாக்கத்தினால் வணிகச் சுழற்ச்சி ஏற்படுகிறது. இச்சுழற்ச்சிகளின் பண்புகளாவன: குறிப்பிட்ட கால இடைவெளியில் வருபவை, மாறுபட்ட தீவிரத் தன்மை கொண்டவை, மற்றும் அதன் செயலாக்க எல்லைகள் மாறுபட்டவை.

### இலக்கணம்:

"உயர்கின்ற விலைகளையும், குறைந்த வேலையற்றோர் சதவிகிதத்தையும் கொண்ட நல்ல வாணிபக் காலங்களையும், குறைகின்ற விலைகளையும், மிகுகின்ற வேலையில்லாத் திண்டாட்ட சதவிகிதத்தையும் கொண்ட கெட்ட வாணிபக் காலங்களையும் உள்ளடக்கியது வாணிபச் சூழல் ஆகும்".

- J.M. கீன்ஸ்

### வாணிபச் சுழற்ச்சியின் கட்டங்கள்:

வணிகச் சுழற்ச்சியினை உற்று நோக்கும்பொழுது அதனுடைய நான்கு கட்டங்கள் வெளிப்படும். அவைகள் முறையே 1. பூரிப்பு, 2. பின்னிறக்கம், 3. மந்தம், மற்றும் 4. மீட்சி எனப்படுகின்றன. வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை தெளிவாகக் காட்டுகின்றது.

1. **பூர்ப்பு கட்டம் (Boom)**

நீண்டகால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையை தாண்டுவது வணிகச் சூழலின் வளர்ச்சிக் தாண்டுவது வணிகச் சுழலின் வளர்ச்சிக் கட்டம் எனப்படுகிறது. இக்காலகட்டத்தில் பொருள் உற்பத்தி, பணக்கூலி, லாபம், மற்றும் வட்டி விகிதங்கள் உயரும். வங்கிக் கடன் தேவைகள் உயரும். பொதுவாக அனைத்து தரப்பினரிடமும் நம்பிக்கைகள் உயரும் வளர்ச்சிக் கட்டத்தின் உச்சத்தில் பூரிப்புநிலை (Boom) தோன்றும். பூரிப்பு நிலையில் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

1. **பின்னிறக்கம் (Recession):**

வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பை எய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாக கீழ்நோக்கி திரும்புகின்றன. பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதை பின்னிறக்கம் என்கிறோம். இக்கட்டத்தில் உற்பத்தி, பணக் கூலி, லாபம் மற்றும் வட்டி விகிதம் ஆகியன குறையத் துவங்கும். நிறுவனங்கள் தோல்வியடைய துவங்கும். வணிகர்கள் தாங்கள் அகலக்கால் வைத்து வணிகத்தை விரிவாக்கிவிட்டதை உணர்வார்கள். நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்கு குறைக்க ஆரம்பிப்பார்கள். தொடர்ந்து உற்பத்தி, வருமானம் ஆகியன குறைந்து வரும். பங்குச் சந்தையில் விலை வீழ்ச்சியின் காரணமாக பெரும் அச்சம் உருவாகும். வணிக நடவடிக்கைகள் சுணக்கமடையும். மக்களின் நீர்மைவிருப்பம் அதிகரித்து பணத்தை ரொக்கமாக கையில் வைத்துக்கொள்ள விரும்புவதால் பணச்சந்தை நடவடிக்கைகள் சுருங்க ஆரம்பிக்கும்.

## 2. மாந்தம் (Depression):

வணிகசுழற்ச்சியின் மூன்றாவது கட்டமான மந்தகாலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்புநிலைக்கு கீழ் மிகத்தீவிரமாக குறைந்து வரும். நிறுவனங்கள் நட்டமடைவதும், மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலைவாய்ப்பின்மையையும் ஏற்படுத்தும். வட்டி, இலாபம் மற்றும் கூலி ஆகியன மிகக் குறைந்த அளவில் இருக்கும். விவசாயிகளும். கூலிவேலை செய்வோரும் அதிக பாதிப்புக்குள்ளாவார்கள். வணிகர்களுக்கு கடன் வழங்குவதில் வங்கிகள் தயக்கம் காட்டும். வணிகச் சுழற்ச்சியின் மிக மோசமான கட்டம் மந்தம் ஆகும். ஏற்கனவே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வாங்கும் சக்தி இல்லாததால் கிடங்குகளில் தேக்கமடைய செய்யும். மந்தத்தின் கீழ் நிலை "தொட்டி" (Trough)என்றழைக்கப்படுகிறது. எவ்வாறு ஒருவர் மிக ஆழமான தொட்டிக்குள் தவறி விழுந்துவிட்டால் பிறர் உதவியின்றி எளிதில் அவரால் மீள முடியாதோ, அதுபோல பொருளாதார நடவடிக்கைகள் மந்த நிலையின் ஆழத்தில் விழுந்துவிட்டால், வெளியார் உதவியின்றி தானே மீள இயலாத நிலையை குறிக்க "தொட்டி" என்ற கருத்து பயன்படுத்தப்படுகிறது.

## 3. மீட்சி (Recovery or Revival):

மந்த நிலைக்குப்பின் மீட்சி இடம்பெறுகிறது. இது, மந்தத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும். முதலில், மூலதனபொருட்களுக்கான தேவை மீட்சி பெறுவதில் துவங்குகிறது. அரசால் செய்யப்படும் தன்னிச்சை முதலீடுகள் (Antonomous Investments) பொருளாதார நடநடவடிக்கைகளை மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கின்றன. அம்முதலீடுகள் மூலம் கிடைக்கும் வேலைவாய்ப்புகளினால் ஏற்படும் வருமானம் பொருட்களுக்கான தேவையை மெதுவாக உயர்த்துகிறது. கிடங்குகளில் தேக்கமடைந்த பொருட்கள் காலியாக துவங்குகிறது. இதனால், தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகளான வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருவாய், கூலி, லாபம் ஆகிய மீட்சி பெறுகின்றன.

**தொகுப்புரை:**

பணம் மத்திய வங்கியாலும் நாணங்கள் மத்திய அரசாலும் வெளியிடப்படுகின்றது. வங்கி வைப்புகள் வணிக, கூட்டுறவு வங்கிகளால் ஏற்படுத்தப்படுகின்றது. பணத்தின் தேவையானது பல்வேறு காரணிகளாகிய வருமானம், விலை மட்டம், வட்டி வீதம் போன்றவைகளால் தீர்மானிக்கப்படுகின்றது. பணத்தின் தேவையானது பல்வேறு போன்றவைகளால் தீர்மானிக்கப்படுகின்றது. பணத்தின் தேவையானது பல்வேறு காரணிகளாகிய வருமானம். விலை மட்டம். வட்டிவீதம் போன்றவைகளால் தீர்மானிக்கப்படுகிறது.

## அத்தியாயம் - 6
## Banking
### (வங்கியியல்)

**மைய வங்கி (Central Bank):**

- மைய வங்கி, ரிசர்வ் வங்கி அல்லது பணவியல் அதிகார அமைப்பு என்பது அரசின் பணம், பண அளிப்பு, மற்றும் வட்டிவிகிதம் ஆகியவற்றை மேலாண்மை செய்யும் ஒரு நிறுவனம் ஆகும். மேலும், நாட்டிலுள்ள வணிக வங்கிகளை மேற்பார்வையிடுவதும் இதன் பணியாகும்.

**மைய வங்கியின் பணிகள் (Functions of Central Bank):**

- ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கியாகும். இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. இது பணவியல் கொள்கை மூலம், பண அளிப்பினை மேலாண்மை செய்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி சட்டம், 1934 ன் படி, ஏப்ரல் 1- ஆம் தேதி 1935 முதுல் ரிசர்வ் வங்கி தனது பணியினை துவங்கியது. துவக்கத்தில், வங்கியின் மூலதனம் 100 மதிப்பு கொண்ட சம பங்குகளாக பிரிக்கப்பட்டு தனியார் வசம் இருந்தன. இந்திய சுதந்திரத்திற்குப் பிறகு, குறிப்பாக ஜனவரி 1, 1949 அன்று இந்திய ரிசர்வ் வங்கி நாட்டுடமையாக்கப்பட்டது. பின்வருவன இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகள் ஆகும்.

**பண அதிகார அமைப்பு (Monetary Authority)**

- இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அந்நி செலாவணி பரிவர்த்தனை விகிதத்தினை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்து நிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பணவீக்கத்தை கட்டுப்படுத்துதல், மற்றும் வங்கியமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றை செய்கிறது.

**காகிதப்பண வெளியீடு:**

- இந்தியாவில் நாணயங்கள் மற்றும் ஒரு ரூபாய் காகிதப்பணத்தைத் தவிர அனைத்து வகையான காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமை பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும். மேலும், பண மற்றும் கடன் அளவுகளை இது மேலாண்மை செய்கிறது. பழக்கத்தில் உள்ள போலியான பணத்தினை கட்டுப்படுத்தும் பொறுப்பும் மைய வங்கிக்கு உண்டு.

**வங்கி உரிமங்கள் வழங்குபவர்**

- வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22ன் படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித்தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும். இப்பணியையும் ரிசர்வ் வங்கி செய்கின்றது.

**அரசுக்கான வங்கி**

- இது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும். அரசுகளுக்கு குறுகியகால கடன்களை தருகிறது. இது அரசு கடன்கள், அரசு கடன் தொடர்பான சேவைகள், அரசு கடன் பத்திரங்கள்களை உருவாக்கி விற்பனை செய்வது ஆகிய பணிகளைச் செய்கின்றது. மேலும், அரசுக்கு வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குகிறது.

**வங்கிகளின் வங்கி**

- இந்திய ரிசர்வ்வங்கி அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும். இது வங்கிகளுக்கு வேண்டிய கடன்களை அளிக்கிறது. ஆவைகளின் வைப்புக்களை ஏற்கிறது. மாற்றுச் சீட்டுக்களை மறு தள்ளுபடி செய்கிறது. அதனால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.

**கடைசி நிலைக்கடன் ஈவோன்**

- வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிச்கல்கள் ஏற்படும்பெழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் அச்சிக்கலிருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.

**தீர்வாக செயல்படுகின்றது**

- வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிவர்த்தனைகளை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி சமன் செய்கின்றது. பரிவர்த்தனைக் கருவிகளை பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், பரிவர்த்தனை தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

**அந்நிய செலாவணி பாதுகாவலன்:**

- இது அந்நிய செலாவணி இருப்புக்களை பாதுகாக்கும் பணியினை செய்கிறது. 1999- ஆம் ஆண்டு அந்நிய செலாவணி மேலாண்மைச் சட்டம் (Foreign Exchange Management Act – FEMA) சட்டத்தின்படி இது அந்நிய செலாவணி மேலாண்மையும் நிர்வகிப்பினையும் மேற்கொள்கிறது.

- அந்நிய பணத்திற்கு எதிரான இந்திய ரூபாயின் பரிமாற்ற விகிதத்தை நிலைப்படுத்துவதற்காக வெளிநாட்டு பணங்களை அவ்வப்பொழுது வங்கி விற்கும் நடவடிக்கையில் ஈடுபடுகிறது.

**பொருளாதாரத்தை நெறிப்படுத்துகிறது**

- பணவியல் கொள்கையை அடிப்படையாக கொண்டு பொருளாதாரத்தை நெறிப்படுத்தி விரும்பத்தகுந்த பாதையில் கொண்டு செல்கிறது. மேலும், தேசிய வருவாய், வேலைவாய்ப்பு, செலவு, சேமிப்பு, முதலீடு போன்ற முக்கிய குறியீடுகளை தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துகிறது.

**அரசு கடன் பத்திரங்களை நிர்வகிக்கிறது**

- குறிப்பிட்ட சதவிகிதத்திலான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை அரசின் கடன்பத்திரங்களாக கொண்டுள்ள நிறுவனங்களை இந்திய ரிசர்வ் வங்கி கண்காணித்து நிர்வாகிக்கின்றது.

**செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதில் நெறியாளராகவும், மேலாளராகவும் செயல்படுகிறது**

- 2007 – ஆம் ஆண்டு செலுத்துதல் மற்றும் தீர்வுச் சட்டம் (The Payment and Settlement System Act 2007 – PSS Act) இந்திய ரிசர்வ் வங்கிக்கு நாட்டின் செலுத்துதல் மற்றும் தீர்வு செய்வதற்கான மேற்பார்வையிடும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஆகவே, ரிசர்வ் வங்கி பாதுகாப்பான மற்றும் திறமையான செலுத்துதல் மற்றும் தீர்வுகளை மேற்பார்வையிடுவதன் மூலம் மேம்பாட்டிற்கு வழிவகக்கின்றது.

**மேம்பாட்டு பணி**

- இந்திய ரிசர்வ் வங்கி சிறந்த வங்கி அமைப்பினை ஏற்படுத்துவதில் மக்கிய பங்குவகிக்கின்றது. அதன் மூலம் சிறந்த உற்பத்தித் திறன் கொண்ட துறைகளுக்கு கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்கின்றது. தேசிய குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் பல்வேறு பரந்த மேம்பாட்டு பணிகளை மேற்கொள்கின்றது.

- இது மேலும், நாட்டின் நிதிக்கட்டமைப்பினை ஏற்படுத்தும் நிறுவனங்களையும் அமைக்கின்றது. இதனுடன் கூட, நாட்டில் நிதிச் சேவைகள் மற்றும் நிதிக் கல்வியறிவு ஆகியவற்றை விரிவாக்கும் பணியினையும் செய்கின்றது இதற்கான கல்வி, ஆய்வு நிறுவனங்களையும் நடத்துகின்றது.

**பணவியல் மற்றும் இதர தகவல்களை வெளியிடுகிறது**

- பணம், வங்கி மற்றும் முக்கிய பொருளாதாரப் புள்ளிவிவரங்களை வெளியிடுகிறது. மேலும், இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளை திறனாய்கிறது.

- புள்ளிவிவரங்களை திரட்டி, வரிசைப்படுத்தி இந்திய ரிசர்வ் வங்கி வெளியீடு (Reserve Bank of India bulletin) மூலம் மாத, காலாண்டு, ஆண்டு விவரங்களை வெளியிடுகிறது.

**பரிவர்த்தனை மேலாளர் மற்றும் நெறியாளர்**

- சர்வதேச பண நிதியத்தின் இந்திய உறுப்பினர் பிரதிநிதியாக இந்திய ரிசர்வ் வங்கி விளங்குகிறது. நிதியத்திலிருந்து பெறப்படும் அந்நிய செலாவணியை மேலாண்மை செய்வதும், அதிகாரம் அளிக்கப்பட்ட அந்நிய செலாவணி விற்பனையாளர்களான வணிக வங்கிகளை நெறிப்படுத்தும் செயலையும் இந்திய ரிசர்வ் வங்கி செய்கிறது.

**வங்கி குறைதீர்ப்பாய திட்டம்:**

- இந்திய ரிசர்வ் வங்கி 1995 ல் வங்கி குறைதீர்ப்பாயத்தினை (Banking Ombudsman)அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ், வங்கிகள் தொடர்பாக ரிசர்வ் வங்கிக்கு வரும் அனைத்து புகார்கள் மற்றும் மேல்முறையீடுகளை வங்கி குறை தீர்ப்பாயம் களைகின்றது.

- இணையவழியில் வரும் புகார்கள் உட்பட அனைத்து வழிகளில் வரும் புகார்களையும் இந்த குறை தீர்ப்பாயம் கணக்கில் எடுத்துக் கொள்கின்றது.

**இந்திய வங்கி நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியம்**

- வங்கிகளின் திறனை அளவிடும் விதமாக உலகளவில் ஏற்கப்பட்டுள்ள நெறிமுறைகள் மற்றும் மதிப்பீடுகள் (அடிப்படையில்) இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய வங்கி நெறிமுறை மற்றும் மதிப்பீடுகள் வாரியத்தை (Banking Codes and standards Board of India – BCSBI) அமைத்துள்ளது.

**கடன் கட்டுப்பாட்டு அளவுகள் (Credit Control Measures):**

| கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் | கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் |
|---|---|
| வங்கி விகிதக் கொள்கை | 1. கடன் பங்கீடு |
| வெளிச்சந்தை நடவடிக்கைகள் | 2. நேரடி நடவடிக்கைகள் |
| மாறும் குறைந்தபட்ச வங்கி | 3. நெறிமுறை தூண்டல் |
| ரொக்க இருப்பு விகிதம் | 4. விளம்பரப்படுத்துதல் |
| | 5. நுகர்வோர் கடனை நெறிப்படுத்துதல் |
| | 6. விளிம்பு நிலை தேவைத் தொகையை மாற்றுதல் |

- கடன் கட்டுப்பாட்டு நுட்பம் என்பது மைய வங்கியின் பணவியல் மேலாண்மையின் முக்கிய நோக்கம் ஆகும்.

- கடன் கட்டுப்பாட்டு முறைகள், 1934 ஆம் ஆண்டின் இந்திய ரிசர்வ் வங்கி சட்டம் மற்றும் 1949-ஆம் ஆண்டின் வங்கி நெறிமுறைச் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் சட்டபூர்வ அங்கீகாரத்தினை பெறுகிறது.

- இந்திய ரிசர்வ் வங்கி தனது கடன்கட்டுப்பாட்டு முறையினை மற்ற நாடுகளிலுள்ள கடன் கட்டுப்பாட்டு முறைகளைவிட சிறப்பாக அமல்படுத்தி வருகிறது.

**கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Methods of Credit Control):**

I. **கடன் அளவுக் கட்டுப்பாடு முறைகள்** (Quantitative methods of Credit Control):

**வங்கி விகிதக் கொள்கை (Bank Rate Policy)**

- வங்கி விகிதக் கொள்கை என்பது தள்ளுபடி விகித கொள்கை (Discount Rate Policy) என்றும் அழைக்கப்படுகிறது. மைய வங்கியானது எந்த விகிதத்தில் முதல்நிலை மாற்றுச் சீட்டுகள் மற்றும் பிணையங்கள் தள்ளுபடி செய்கிறது என்பதே வங்கி விகித கொள்கை என்பதாகும்.

- மைய வங்கியானது. பணவீக்க காலத்தில் வங்கி விகிதம் அதாவது மைய வங்கியின் தள்ளுபடி விகிதம் அதிகரிக்கப்படுவதால் நடப்பு வட்டி விகிதம் அதிகரிக்கப்படுவதால் நடப்பு வட்டி விகிதம் அதிகரிக்கப்பட்டு கடன் அளவு குறைக்கப்படுகிறது.

- மாறாக, பணவாட்ட காலத்தில் எதிர்மறையாக வங்கி தள்ளுபடி விகிதம் குறைக்கப்படுகிறது. இது நடப்பு சந்தை வட்டி விகிதத்தை குறைக்கும். இதனால் உந்தப்பட்டு நிறைய கடன்கள் உருவாகும். இதனால் கடன் பண அளிப்பு அதிகரித்து பணவாட்டம் சரி செய்யப்படும்.

**வெளிச்சந்தை நடவடிக்கைகள் (Open Market Operations):**

- ஒரு குறுகிய அளவில் பார்க்கும்பொழுது, மைய வங்கியானது பொதுச் சந்தையில் அரசின் கடன் பத்திரங்களை வெளியிடுவதும் திரும்பப்பெறுவதும் வெளிச்சந்தை நடவடிக்கைகள் எனப்படுகின்றது.

- சற்று விரிவாக பார்க்கும்பொழுது, மைய வங்கி அரசின் கடன் பத்திரங்களை மட்டுமல்லாமல் தனியார் நிறுவனங்களின் தகுதியடைத்த பத்திரங்களையும் விற்பனை செய்வதும், திரும்பப் பெறுவதும் ஆகும்.

- வணிக வங்கிகளும், தனி நபர்களும் வெளியிடும் கடன் பத்திரங்களை வாங்கும்பொழுது, பொருளாதாரத்தில் சுழற்சியில் உள்ள பணமும், கடன் பணமும் குறையும், இதனால் பணவீக்கம் கட்டுப்படுத்தப்படும்.

- மாறாக, பணவாட்ட காலத்தில், முன்னர் வெளியிடப்பெற்ற கடன் பத்திரங்களை திரும்ப பெற்றுக்கொள்ளும்பொழுது வணிக வங்கிகளிடமும் பொதுமக்களிடமும் ரொக்கம் மற்றும் கடன் பணத்தின் அளவு அதிகரிக்கும்.

**மாறும் ரொக்க இருப்பு விகிதம் (Variable Cash Reserve Ratio):**

- அ) ரொக்க இருப்பு விகிதம்: வணிக வங்கிகளிடம் வந்து சேரும் கேட்பு மற்றும் கால வைப்புகளில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை அவைகள் மைய வங்கியில் இருப்பாக வைக்கவேண்டும்.

- இது மைய வங்கி சட்டத்தின்படி பின்பற்ற வேண்டியது ஆகும். இதுவே, ரொக்க இருப்பு விகிதம் எனப்படுகிறது. ரொக்க இருப்பு விகிதத்திற்கும் வணிக வங்கிகள் வழங்கும் கடன் அளவிற்கும் எதிர்மறை தொடர்பு உள்ளது.

- வணிக வங்கிகளிடம் கூடுதலான பணம் உள்ள சூழ்நிலையில் அவைகள் தேவைக்கு அதிகமான கடன் பணத்தை உருவாக்க வாய்ப்பிருக்கிறது. இது பொருளாதாரத்தில் விரும்பத் தகாத விளைவுகளை ஏற்படுத்தும்.

- ஆகவே மைய வங்கி தனது அதிகாரமான ரொக்க இரப்பு விகிதத்தை உயர்த்துவதன் மூலம், வணிக வங்கிகளின் கடன் அளவை கட்டுப்படுத்துகிறது.

- பணவாட்டத்திற்குப் பின் பொருளாதாரம் மீட்சி பெற அதிக கடன் தேவைப்படுகிறது. அச்சமயத்தில் பண அளிப்பு குறைவாக இருக்கும். மைய வங்கி இவ்விகிதத்தை குறைப்பதன் மூலம், வணிக வங்கிகள் குறைவான இருப்பை மட்டுமே வைத்துக்கொண்டு கூடுதலான தொகையை கடன் பணமாக அளிக்க இயலும்.

- ரொக்க இருப்பு விகிதம் அதிகமாக இருந்தால் வணிக வங்கிகளின் கடன் உற்பத்தி குறைவாகவும், ரொக்க இருப்பு விகிதம் குறைவாக இருந்தால் கடன் உற்பத்தி அதிகமாகவும் இருக்கும்.

- மாறும் ரொக்க இருப்பு விகிதம் என்பது பணவியல் கொள்கையின் ஒரு கருவி. இதனை முதன் முதலாக கீன்ஸ் பரிந்துரைத்தார் அமெரிக்க மைய வங்கியான பெடரல் ரிசர்வ் சிஸ்டம் (Federal Reserve system) முதன் முதலில் இதை அமல்படுத்தியது.

**சட்டபூர்வ நீர்மை விகிதம்:**

- சட்டபூர்வ விகிதமான இதில், வங்கிகள் தன்னகத்தே எப்பொழுதும் வைத்திருக்க வேண்டிய ரொக்கம், தங்கம், மற்றும் ஒப்புதல் பெற்ற பத்திரங்கள் உள்ளடக்கிய நீர்மை தன்மை கொண்ட சொத்துக்கள் ஆகும். இது கேட்பு வைப்பு மற்றும் கால வைப்பு போன்ற வங்கியின் பொறுப்புக்களின் ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவிற்கு இருக்க வேண்டும்.

**கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள்:**

- கடன் தன்மை கட்டுப்பாட்டுமுறை அல்லது தெரிந்தெடுத்த கடன் கட்டுப்பாட்டு முறைகள் (Selective credit control methods) என்பது தெரிந்தெடுத்த துறைகளில், தொழில்கள், வணிகங்கள் அல்லது பயன்களில் மட்டும் கடன் கட்டுப்பாட்டினை கொண்டு வருவது ஆகும். இம்முறைகளில் கீழ்க்கண்டவை அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன.
- கடன் பங்கீடு
- நேரடி நடவடிக்கைகள்
- நெறிமுறை தூண்டல்
- விளம்பரப்படுத்துதல்
- நுகர்வோர் கடனை முறைப்படுத்தல், மற்றும்
- ஈட்டுக் கடன்களில் விளிம்பு நிலையை தொகையை மாற்றுதல் ஆகியன கடன் தன்மை கட்டுப்பாட்டு முறைகள் ஆகும்.

**கடன் பங்கீடு (Rationing of Credit):**

- இது ஒரு பழமையான கடன் கட்டுப்பாட்டு முறையாகும். முதன் முறையாக பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தின் மையவங்கியான இங்கிலாந்து வங்கியில் (Bank of England) இம்முறை பயன்படுத்தப்பட்டது. வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் பல்வேறு நோக்கங்களுக்காக வழங்கப்படுகிறது.

- நாட்டின் பண அளிப்புச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஆக கடன் நோக்கங்களைப் பட்டியலிட்டு வரையறை செய்வதன் மூலம் கடன் கட்டுப்பாட்டினை ஏற்படுத்துவது ஆகும்.

- இதில் பின்வரும் இருவகைகள் உள்ளன. மாறும் தொகுப்பு வரையறை (Variable Portfolio Celling) மற்றும் மாறும் மூலதன – சொத்து விகிதம் (Variable – Capital – Asset Ration)

**மாறும் தொகுப்பு வரையறை:**

- இதில் ஒவ்வொரு வணிக வங்கியும் எவ்வளவு அதிகபட்ச கடன் மற்றும் முன்பணம் கொடுக்கலாம் என்பதனை மைய வங்கி வரையறுப்பது ஆகும்.

**மாறும் மூலதன – சொத்து விகிதம்:**

- இது வணிக வங்கிகள் தங்களது சொத்து மதிப்பில் எந்த அளவு மூலதனமாக வைத்துக்கொள்ளலாம் என்பதனை மைய வங்கி வரையறை செய்வது ஆகும்.

**நேரடி நடவடிக்கைகள் (Direct Actions)**

- நேரடி நடவடிக்கைகள் என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கியது ஆகும்.

- அ) வணிக வங்கிகள் தள்ளுபடிக்காக கொண்டுவரும் மாற்றுச் சீட்டு உள்ளிட்ட அனைத்து பிணையங்களையும் ஒட்டுமொத்தமாக மைய வங்கி மறுப்பது ஆகும். இதன் மூலம் வணிக வங்கிகள் வழங்கும் கடன் அளவு கட்டுப்படுத்தப்படும்.

- ஆ) மூலதனம் மற்றும் இருப்புக்களைத் தாண்டி மொத்தக் கடனளைவை கொண்டுள்ள வணிக வங்கிக்கு வேண்டப்படும் நிதி ஒதுக்கீட்டினை மைய வங்கி மறுப்பது ஆகும்.

- இ) அனுமதிக்கப்பட்ட அளவைத் தாண்டி மைய வங்கியில் கடன்பெறும் வணிக வங்கிகளுக்கு இயல்பான வட்டியுடன் அபராத வட்டி விகிதத்தை விதிப்பது ஆகும்.

**நெறிமுறைக் தூண்டல் (Moral Suasion):**

- வணிக வங்கிகளின் கடன் அளவை கட்டுப்படுத்த மைய வங்கி அடிக்கடி கையாளும் ஒரு முறையாகும். இம்முறையின் கீழ், அறிவுரைகளையும் வேண்டுகோளையும் வைப்பதன் மூலம் வணிக நெறிமுறையினைப் போதித்து வணிக வங்கிகள் வழங்கும் கடன்களைக் கட்டுப்படுத்துகிறது.

**விளம்பரப்படுத்தல் (Publicity)**

- மைய வங்கி தனது கடன் வழங்கும் கொள்கைகளை பொதுமக்களிடம் விளம்பரப்படுத்தவதன் மூலம் கடன் அளவை கட்டுப்படுத்துவது ஆகும். ஆனால், இம்முறையின் வெற்றி மைய வங்கியால் எந்த அளவுக்கு மக்களிடம் பொதுக்கருத்தினை ஏற்படுத்த முடிகிறது என்பதைப் பொறுத்து அமையும்.

**நுகர்வோர் கடனை நெறிப்படுத்தல் (Regulation of Consumer Credit)**

- தவணைமுறைக் கொள்முதல் போன்றவற்றில் நுகர்வோர் செலுத்தும் தவணைத் தொகையை அதிகப்படுத்துதல், தவணைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் மூலம் நுகர்வோர் கடன் வாங்குவதை குறைப்பது ஆகும்.

**ஈட்டுக் கடன்கள் மீதான விளிம்பு தொகை தேவையை மாற்றுதல் (changes in the Margin Requirement on Security Loans)**

- பொரும்பாலான நாடுகளில் நடைமுறையில் இருந்தாலும், இம்முறை அமெரிக்காவில் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அந்நாட்டின் மையவங்கியான அமெரிக்க பெடரல் ரிசர்வ் சிஸ்டத்தின் இயக்குநர் குழு ஈட்டுக் கடன்களின் விளிம்புநிலை தொகை தேவையை மாற்றியமைக்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது. இந்த அதிகாரம், அமெரிக்காவின் 1934-ஆம் ஆண்டு பிணைய பரிவர்த்தனை சட்டத்தின் (Securities Exchange Act, 1934) அடிப்படையில் அமைந்துள்ளது. இதன் மூலம் பங்குச்சந்தையில் ஊக வாணிபத்தில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்த ஏற்படுத்தப்பட்டது.

| பணத்தின் அளிப்பைக் கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கியால் மேற்கொள்ளப்படும் கருவிகளே ரெபோ விகிதம் மற்றும் மீள்ரெப்போ விகிதங்களாகும். ரெப்போ விகிதம் எப்பொழுதும் மீள்ரெப்போ விகிதத்தை வட அதிகமாகவே இருக்கும் | |
|---|---|
| **ரெப்போ விகிதம் (RR)** | **மீள் ரெப்போ விகிதம் (RRR)** |
| வணிக வங்கிகளுக்கு மைய வங்கி குறுகிய கால கடன் வழங்கும்பொழுது விதிக்கும் வட்டி விகிதமே ரெப்போ விகிதம் எனப்படுகிறது. இவ்வங்கிகளுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்படும்பொழுது அவைகள் பத்திரங்களை ஈடாக வைத்து இந்திய ரிசர்வ் வங்கியில் கடன்களை பெறும். ஆந்நிலையில் விதிக்கப்படும் வட்டி விகிதமே ரெப்போ விகிதம் எனப்படுகிறது. பணவீக்கத்தை கட்டுப்படுத்த ரெப்போ விகிதத்தை அதிகரிப்பதன் மூலம் கடன் வாங்குவதற்கான செலவை அதிகபடுத்தி, கடன் வாங்குவதைக் குறைக்கிறது. பணவாட்ட சூழ்நிலையில் | வணிக வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனுக்கான இந்திய ரிசர்வ் வங்கி கொடுக்க விரும்பும் வட்டி விகிதமே மீள் ரெப்போ விகிதம் எனப்படுகிறது. மீள் ரெப்போ விகிதத்தை உயர்த்தினால், அது வணிக வங்கிகளுக்கு இலாபகரமான வட்டி விகிதமாகி அவைளிடம் உள்ள பணத்தை ரிசர்வ் வங்கியிடம் கொண்டு வந்த சேர்க்கிறது. இதனால் அந்த பணத்திற்கு உயர் பாதுகாப்பு கிடைக்கிறது. இதனால் வணிக வங்கிகள் தனது வாடிக்கையாளருக்கு கடன கொடுப்பது குறைகிறது. இது இயற்கையாகவே வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் கடனுக்கான வட்டி விகிதத்தை உயர்த்தும் |

**இந்திய ரிசர்வ் வங்கியும் கிராமப்புற கடனும் (RBI and Rural Credit)**

- இந்தியா போன்ற வளரும் நாடுகளில் மைய வங்கியானது பணவியல் நெறிமுறைகளை செயல்படுத்துவதுடன் அதன் எல்லை முடிந்துவிடவதில்லை. அது, விவசாயம், மற்றும் தொழில் உள்ளடக்கிய அனைத்துத் துறைகளின் வளர்ச்சிகளிலும் பங்குபெறுவது எதிர்பார்க்கப்படுகிறது.

**விவசாயத் துறை நிதியளிப்பில் இந்திய ரிசர்வ் வங்கியின் பங்கு**

- இந்திய ரிசர்வ் வங்கி விவசாயத்துறைக்கான நிதியளிப்பில் மிக முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தில் விவசாயத்தின் முக்கியத்துவம் மற்றும் முறைசார் நிறுவனங்களின் கடன் வசதி பற்றாக்குறை போன்ற காரணங்களால் ரிசர்வ் வங்கியின் பொறுப்பு இதில் அதிகமாகிறது.

- தனது பங்கின் முக்கியத்துவம் கருதி இந்திய ரிசர்வ் வங்கி விவசாயத்திற்கென தனியான விவசாய கடன் துறையை (Agriculture Credit department) துவங்கியது.

**விவசாய கடன் துறையின் பணிகள்:**

- அ. நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து விவசாய கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது

- ஆ. மைய அரசு, மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கிகள், மற்றும் இதர வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.

- இ. ஊரகத் துறைக்கு தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக விவசாயக் கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும்.

- விவசாயம் மேம்பாட்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் மிகவும் பங்கு மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

- இது நேரடியாக விவசாயயிகளுக்கான கடன் வழங்காமல், ஊரக கடன் வழங்குவதில் தேர்ச்சி பெற்ற நிறுவனங்கள் மூலமாக மறு கடனாக வழங்கி வந்தது.

- இந்திய ரிசர்வ் வங்கி தனக்குக் கீழாக மாநில கூட்டுறவு வங்கிகள் (மாநில அளவு), மத்திய கூட்டுறவு வங்கிகள் (மாவட்ட அளவு), மற்றும துவக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் (கிராம அளவு) மூன்றடுக்கு முறை வழியாக விவசாயத்திற்கான கடனை வழங்கி வந்தது.

- இந்திய ரிசர்வ் வங்கி பருவகால விவசாய பணிகள் மற்றும் விவசாய பொருள் சந்தையிடல் தொடர்பாக குறுகியகால கடன்களை அல்லது பயிர்க்கடன்களை (short-term loans or crop loans) வழங்கி வந்தது.

- இதற்காக மாநில கூட்டுறவு வங்கிகள் அரசு பத்திரங்கள் மற்றும் நிலவள வங்கிகளின் கடன் பத்திரங்களை ஈடாக ஏற்று 15 மாதக் கடனை ரிசர்வ் வங்கி வழங்கி வந்தது. இதேபோல் நிலத்தினை தர மேம்படுத்துதல், பாசன வசதி ஏற்படுத்துதல், இயந்திரங்கள் வாங்குதல் ஆகிய நோக்கங்களுக்காக 15 மாதம் முதுல் 5 ஆண்டுகள் வரையிலான மத்திய கால கடன்களையும் (Medium-term loan) வழங்கி வந்தது.

- மேலும், நிலத்தினை முற்றிலுமாக மாற்றுவது மற்றும் பழைய கடன்களை திருப்பச் செலுத்த உதவும் வகையில் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நீண்டகால (Long-term loan) கடன்களையும் வழங்கி வந்தது.

- 1982 ஆம் ஆண்டுக்கு பிறகு விவசாய கடன் சம்பந்தமான அனைத்து பொறுப்புகளையும் நபார்டு வங்கி (NABARD) இந்திய ரிசர்வ் வங்கியிலிருந்து பெற்றுக் கொண்டது.

- அதிலிருந்து ஊடகக் கடன் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் நபார்டு வங்கி மேற்கொண்டுள்ளது.

**விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகம் (Agricultural Refinance Development Corporation – ARDC):**

- இந்திய விவசாயிகளுக்கு மத்திய மற்றும் நீண்டகால கடன்களே அதிகம் தேவை இருந்தபொழுதிலும் அதைப் பெறுவதில் சிக்கல்கள் இருந்தன. இவ்வகைக் கடன்களை அளிக்கும் ஒரே அமைப்பு ரீதியான நிறுவனம் நிலவள வங்கிகள் (Land Development Banks) ஆகும்.

- ஆனால், அந்த வங்கிகள் போதுமான அளவு வெற்றியடையாமல் பின்தங்கியிருந்தது. அதே சமயம் இந்த நோக்கத்திலான கடன்களின் தேவை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வந்தது.

- இந்த இடைவெளியினைப் போக்கவும், பல்வேறு விவசாய மேம்பாட்டு திடடங்களுக்கான நிதி ஆதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடனும் பாராளுமன்ற சட்டத்தின் அடிப்படையில் ஜுலை 1, 1963-ல் விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

**விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகத்தின நோக்கங்கள்:**

- மத்திய நிலவள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் பட்டியல் வங்கிகள் (Scheduled Banks) போன்ற தகுதிவாய்ந்த அமைப்புகளுக்கு தேவையான மறுநிதியினை வழங்குவது.

- இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட மத்திய நிலவள வங்கிகள், மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் பட்டியல் வங்கிகள் வெளியிடும் கடன் பத்திரங்களை வாங்கி அதன் மூலம் நிதியளிப்பினை செய்வது.

**வட்டார ஊரக வங்கிகள் (Regional Rural Banks – RRBs)**

- ஊரக நிதி வழங்கும் நிறுவனங்களில் அடுத்த முக்கியமான வங்கியமைப்பு வட்டார ஊரக வங்கிகள் ஆகும். இது கிராமின் வங்கிகள் (GraminBanks) என்றும் அழைக்கப்படுகிறது. மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் 20-அம்ச பொருளாதார திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் கிராமப்புறங்களில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களை தொடர் கடன்சுழலில் (Indebtedness) இருந்து விடுவிப்பதாகும்.

- அக்கால கட்டத்தில் அமல்படுத்தப்பட்ட புதிய பொருளாதார திட்டத்தினை தொடர்ந்து வட்டார ஊரக வங்கிகள் 1975 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டன. இவைகளுக்கான மூலதன 50% மைய அரசாலும் 15% மாநில அரசாலும் 35% நடத்துகின்ற வணிக வங்கியாலும் அளிக்கப்பட்டது.

- இவ்வங்கிகளின் நோக்கம் விவசாயிகளுக்கு, குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் (Small and marginal Farmers) நிலமற்ற விவசாய தொழிலாளர்கள், கைவினைஞர்கள் மற்றும் சிறு தொழில்முனைவோர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் ஊரக பகுதியில் விவசாயம், வர்த்தகம், தொழில் மற்றும் இதர உற்பத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவது ஆகும்.

**வட்டார ஊரக வங்கிகளுக்கான சலுகைகள்:**

- ஆரம்பத்தில் பங்குமூலதனத்தை வழங்கிய வணிகவங்கிகள் அவைகளுக்கான மேலாண்மை மற்றும் நிதி தொர்பான உதவிகளை மற்றும் குறைந்த அளவாக 8.5 சதவிகித வட்டியில் கடன்களையும் வழங்கி வந்தன.

- மேலும், வணிகவங்கிகள் தனது அலுவலர்களை அயற்பணியாளர்களாக வட்டார வங்கிகளுக்கு அனுப்புவது, மற்றும் வட்டார ஊரக வங்கிப் பணியாளர்களுக்கு ஆகும் பயிற்சி செலவுகளை மேற்கொள்வது ஆகிய சலகைகளை வழங்குகிறது. மத்திய ரிசர்வ் வங்கி வட்டார ஊரக வங்கிகளுக்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கியுள்ளது.

- வட்டார ஊரக வங்கிகள் 3 சதவிகித ரொக்க இருப்பினையும். 25 சதவிகித சட்டபூர்வ நீர்மை இருப்பினை வைத்திருக்கவும் அனுமதிக்கப்படுகிறது.

- நபார்டு வங்கி மூலம் இவைகளுக்கு மறு கடன்களையும் வழங்கி வருகின்றன.

**விவசாய கடனுக்கான நபார்டு வங்கியின் பங்கு (NABARD AND ITS ROLE IN AGRICULTURAL CREDIT):**

- துவக்க காலத்திலிருந்தே மத்திய ரிசர்வ் வங்கி விவசாயக்கடன்கள் வழங்க தனித்துறையை ஏற்படுத்தியது. பின்னர் விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகம் என்ற துணை அமைப்பு இருந்த பொழுதிலும், இந்திய ரிசர்வ்வங்கி விவசாய முன்னேற்றக் கருத்தை விரிவு செய்து கிராமப்புற முன்னேற்றத்திற்காக கடன்களை விரிவுபடுத்தும் நோக்கில் கிராமப்புற முன்னேற்றத்திற்கான திட்டங்களை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்த விரிவான அடித்தளம் கொண்ட ஒரு அமைப்பு மத்திய ரிசர்வ் வங்கிக்குத் தேவைப்பட்டது. அதன் காரணமாக 1982-ஆம் ஆண்டு ஜூலை மாதம் விவசாயம் மற்றும் ஊரக மேம்பாட்டிற்கான தேசிய வங்கியினை 1982ம் ஆண்டு பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தோற்றுவித்தது. சுருக்கமாக

நபார்டு –NABARD

↓

மாநில கூட்டுறவு வங்கி

State Cooperative Bank

↓

மத்திய கூட்டுறவு வங்கி

Central Cooperative Bank

↓

துவக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

Primary Cooperative Scoeity

↓

**நபார்டு வங்கி வழங்கும் மூன்றடுக்கு கூட்டுறவுக் கடன் முறை:**

- நபார்டு என்று அழைக்கப்படுகிறது. விவசாய மறுகடன் மேம்பாட்டு கழகத்தின் பணிகள் முழுமையும், வட்டரா ஊரக வங்கிகளின் மறுகடன் பணிகளையும் தானே ஏற்று செய்துவருகிறது. அதன்பிறகு, அனைத்து விவசாயக் கடன்களுக்கான தலைமை அமைப்பாக நபார்டு வங்கி செயல்பட்டு வருகிறது.

- நபார்டின் மூலதனம் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய அரசு ஆகியவை சரிபகுதியாக வழங்கியுள்ளது.

- நபார்டு வங்கி மேலாண்மையைப் பொறுத்தவரை, இந்திய அரசின் மைய இயக்குநர் குழுவிலிருந்து நபார்டு வங்கியின் இயக்குநர் குழுவுக்கு மூவரைப் பரிந்துரைத்துள்ளது. ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் நபார்டின் தலைவராக இருப்பார்.

**நபார்டு வங்கியின் பணிகள்:**

- ஏற்கனவே இந்திய ரிசர்வ் வங்கியும் அதன் துணை அமைப்புகளும். விவசாயம் மற்றும் ஊரக முன்னேற்றத்திற்காக எந்தெந்த பணிகளை ஆற்றிவந்ததோ அப்பணிகள் அனைத்தையும் நபார்டு வங்கி மேற்கொண்டு வருகிறது. பின்வருவன நபார்டு வங்கியின் குறிப்பிட்ட பணிகளாகும்.

- நபார்டு வங்கி ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் அனைத்து வகையான உற்பத்தி மற்றும் முதலீட்டுக்காக விவாசயம், சிறுதொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், மற்றும் இதர ஊரக தொழில் நடவடிக்கைகளுக்கான மறுகடனை வழங்குகிறது.

- இது மாநில கூட்டுறவு வங்கிகள், வட்டார ஊரக வங்கிகள், நிலவள வங்கிகள் மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இதர நிதிநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு குறுகியகால, மத்தியகால மற்றும் நீண்டகால கடன்களை வழங்குகிறது.

- கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களின் பங்கு முதலீட்டை வழங்கும் பொருட்டு மாநில அரசுகளுக்கு 20 ஆண்டு நீண்டகால கடன்களை நபார்டு வங்கி வழங்குகிறது.

- மைய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது விவசாயம் மற்றும் ஊராக வளர்ச்சிக்கான பங்கு மூலதனம் அல்லது கடன் பத்திரங்களை பெற்றிருக்கும் நிறுவனங்களுக்கு நீண்டகால கடனை அளிக்கிறது.

- மைய அரசு, மாநில அரசுகள், திட்டக்குழு (தற்பொழுது நிதி ஆயோக்) மற்றும் மைய, மாநில அரசுகளின் - சிறுதொழில்கள், குடிசை மற்றும் கிராமத் தொழில்கள், கைவினைத் தொழில்கள், இதர மிகச்சிறு தொழில்களுக்கு உதவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயலாற்றும் நடவடிக்கைகளை நபார்டு வங்கி மேற்கொண்டுள்ளது.

- நபார்டு வங்கி, வட்டார ஊரக வங்கிகள் மற்றும் துவக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களை தவிர்த்த அனைத்து கூட்டுறவு வங்கிகளையும் ஆய்வு செய்யும் பணியினை செய்கிறது.

- வேளாண்மை மற்றும் ஊராக வளர்ச்சிக்கான ஆய்வுகளை மேம்படுத்தும் விதமாக ஆய்வு மற்றும் வளர்ச்சி நிதியினை பராமரிக்கிறது.

**தொழில் நிதியும் இந்திய ரிசர்வ் வங்கியும் (RBI and Industrial Finance):**

- தொழில் நிதியினை வணிக வங்கிகள் வழங்கினாலும், அதன் கடனளவும், கடனுக்கான கால அளவும் குறைவாகவே இருந்து வந்தது.

- வங்கிகள் பெரும்பாலும் பொதுமக்களிடம் குறுகிய கால வைப்புக்களை பெறுவதால், அவைகள் பெரும்பாலும் குறுகியகாலக் கடன்களை அளிக்க மட்டுமே முன்வந்து கொண்டிருந்தன.

- முன்னதாக, தொழிற் துறையின் மொத்தக் கடனில் வணிக வங்கிகளின் கடன் மிகக் குறைந்த அளவாக இருந்தது.

- ஆகவே, தொழிற்துறைக்கான நீண்டகால கடன்களைப் பெறுவதற்கான ஆதாரங்கள் தேவைப்பட்டன. தொழிற்துறைக்கான நிதி மற்றும் மேம்பாட்டிற்காக பின்வரும் நிறுவனங்கள் இந்தியாவில் ஆரம்பிக்கப்பட்டன.

**தொழில்நிதிக்கான அமைப்புகள்:**

**அனைத்து இந்திய அளவியல்:**

  - இந்திய தொழில் நிதிக் கழகம்
  - இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம்
  - இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி

**மாநில அளவில்**

  - மாநில நிதிக்கழகம்
  - மாநில தொழில் மேம்பாட்டு கழகம்

**இந்திய அளவில் உள்ள நிறுவனங்கள் (All India Level Institutions):**

**இந்திய தொழில் நிதிக் கழகம்**

- தொழில்நிதி மற்றும் மேம்பாட்டு நிறுவன சங்கிலித்தொடரில் முதன்மையாக ஆரம்பிக்கப்பட்டது நிறுவனம் இந்திய தொழில் நிதிக் கழகம் ஆகும்.
- பாராளுமன்ற சட்டப்படி இது 1948 ஆம் ஆண்டு ஜுலை 1-ல் அமைக்கப்பட்டது. இக்கழகம் பின்வரும் வழிகளில் தொழில் நிதியினை வழங்குகிறது.
- இந்திய ரூபாய் மற்றும் வெளிநாட்டு பணத்தில் நீண்ட காலக் கடன்களை வழங்குகிறது.
- வெளியிடப்பட்ட சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களுக்கு ஒப்புறுதியளிக்கிறது.
- சம உரிமைப் பங்குகள், முன்னுரிமைப் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களை வாங்குகிறது.
- இறக்குமதி செய்யப்படும் மற்றும் இந்தியாவிலிருந்து வாங்கப்படும் தொழிற்துறை இயந்திரங்களுக்கான பணத்திற்கு உத்திரவாதம் அளிக்கின்றது.
- வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து அந்நாட்டின் பணத்தில் வாங்கப்படும் கடன்களுக்கான உத்திரவாதத்தையும் அளிக்கிறது.
- பொதுத்துறை, தனியார் துறை, இணை நிறுவனங்கள், மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் தொழிற்துறையில் ஈடுபடவோ அல்லது விரிவுபடுத்தவோ இந்திய தொழில் நிதிக் கழகம் (IFCI) நிதியுதவி அளிக்கின்றது. இத்தகைய நிதி உதவிகள் புதிய தொழில் திட்டங்களை ஏற்படுத்தவோ, விரிவாக்கம் செய்யவோ, பரவலாக்கவோ அல்லது ஏற்கனவே உள்ள இயந்திரங்களைப் புனரமைப்பு செய்யவோ நவீனப்படுத்தவோ அளிக்கப்படுகின்றது. மைய அரசால் தொழிற்துறையில் பின்தங்கிய மாவட்டங்கள் என்று அறிவிக்கப்பட்ட மாவட்டங்களில் தொழில் தொடங்க நிதியினை குறைந்த வட்டிவிகிதங்களில் வழங்குகின்றது.
- இந்திய தொழில் நிதிக் கழகம் தனக்கான நிதியை பின்வரும் வழிகளில் பெறுகிறது.
- கடன்பத்திரங்களை சந்தையில் வெளியிடுகிறது.
- இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி மற்றும் மைய அரசிடம் கடனாக பெறுகிறது. மற்றும் பாதுகாப்பான வெளிநாட்டு கடனை வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு மூலதனச் சந்தையிலிருந்து பெறுகிறது.
- இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுச் கழகம் (Industrial Credit and Investment Corportion of India (ICICI)

**ICICI வங்கியின் பணிகள்:**

- தொழில் நிறுவனங்களுக்கு உதவுதல்
- அந்நியச் செலாவணி கடன்கள் வழங்குதல்
- வர்த்தக வங்கிப் பணிகள்
- கடன் பெற சான்று வழங்கல்
- திட்டங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்தல்
- வீட்டு வசதிக் கடன்கள வழங்குதல்

- குத்தகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- இந்திய அரசு, உலக வங்கி மற்றும் அமெரிக்க அரசு ஆகியவற்றால் நியமிக்கப்பட்ட மூவர் குழவின் பரிந்துரையின் அடிப்படையில் இந்திய தொழிற் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம் 1955-ஆம் ஆண்டு ஜனவரி 5-ஆம் நாள் ஒரு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது.

- உலக வங்கியிலிருந்து பெறப்படும் இந்திய தொழிற்கடன்களை முறைப்படுத்தி அளிப்பதும், மூலதனச் சந்தையை கட்டமைப்பதும் இக்கழகத்தின் நோக்கமாகும்.

- ஆரம்பத்தில் இக்கழகத்தின் மூலதனம், தனியார் நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் பொதுமக்களிடம் இருந்தது. ஆனால், தற்பொழுது குறிப்பாக இது தேசியமயமாக்கப்பட்ட பின், இதன் பெரும்பாலான மூலதனம் பொதுத் துறை நிறுவனங்களான வங்கிகள், ஆயள் காப்பீட்டுக் கழகம், பொது காப்பீட்டுக் கழகம் மற்றும் இதன் துணை அமைப்புகள் ஆகியோரிடம் உள்ளது.

- இக்கழகத்தின் முக்கிய இயல்புகளில் ஒன்று, வெளிநாட்டு கடன் பணத்தை பெற்று தொழில் வளர்ச்சிக்கு உதவுவது ஆகும். இதன் துவக்கத்திலிருந்து வழங்கப்பட்ட கடன்களில் 50 சதவிகிதம் வெளிநாட்டுப் பணமாகவே வழங்கப்பட்டுள்ளது.

- இக்கழகம் வெளிநாடுகளிலிருந்தே நிதிவசதியை பெறுவதால் இது சாத்தியமாகிறது. முக்கியமாக உலக வங்கி இக்கழகத்திற்கு கடன் வழங்குவதில் தனிப்பெரும் நிறுவனமாக உள்ளது.

- 1973 முதல் இது தனக்கான நிதியை பன்னாட்டு மூலதனச் சந்தையிலிருந்தே பெறுகிறது.

- பெரும்பாலான இந்திய ரூபாய்களில் திரட்டப்படும் நிதி, கடன் பத்திரங்கள் மூலம் மூலதனச்சந்தையிலிருந்தே திரட்டப்படுகிறது.

- மேலும் இக்கழகம் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியிடமிருந்தும், மையவங்கியிடமிருந்தும் கடன் பெறுகிறது. அதேசமயம் இதன் பெரும்பாலான நிதி தனியார் துறைக்கே செல்கிறது.

## இந்திய தொழில் மேம்பாட்டு (Industrial Development Bank of India (IDBI):

- வங்கிகள் உள்ளிட்ட தொழிற்கடன்கள் வழங்கும் பல்வேறு நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் ஒரு தலைமை நிறுவனம் உருவாக்கப்பட வேண்டும் என்ற முதன்மை நோக்கத்தின் அடிப்படையில் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி துவங்கப்பட்டது இந்த வங்கி பிப்ரவரி 15, 1976 வரை இந்திய ரிசர்வ் வங்கியின் முழு துணை அமைப்பாக இருந்தது. பின்னர் இது பிரிக்கப்பட்டு அதே ஆண்டின் பிப்ரவரி 16 முதல் இந்திய அரசிற்கு சொந்தமான தன்னாட்சி பெற்ற ஒரு கழகமாக மாறியது.

### இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியின் பணிகள்:

- இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியின் முக்கிய பணிகள் ஒருபிரிவுகளாக கீழே தொகுக்கப்பட்டுள்ளன.

- மற்ற தொழில் நிதிநிறுவனங்களுக்கு நிதியளிப்பது மற்றும்

- தொழிற் நிறுவனங்களுக்கு நேரடியாகவோ அல்லது மற்ற நிதியளிக்கும் நிறுவனங்களுடன் இணைந்தோ நேரடியாக கடன் வழங்குவது. இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியானது, மைய அரசின் தொழில் நிதிக் கழகம், மாநில தொழில் நிதிக் கழகங்கள் மற்றும் அரசால் குறிப்பிடப்படும் நிதிநிறுவனங்கள், பட்டியல் வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மறுநிதியனை அளிக்கிறது. தொழிற் நிறுவனங்களுக்கு பல்வேறு வகைகளில் கடன்களை வழங்குகிறது.

- இவ்வங்கியின் சிறப்புச் செயல்பாடாக வளர்ச்சி உதவி நிதி என்ற ஒரு சிறப்புநிதியை உருவாக்கியுள்ளது. இந்நிதி அதிக முதலீட்டையும் குறைந்த எதிர்பார்க்கப்படும் வருவாயையும் கொண்ட தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்டதாகும் அவ்வகையான தொழில் நிறுவனங்கள் இயல்பான வழியில் போதுமான நிதியை திரட்ட இயலாது. மார்ச் 1982ல் ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (EXIM Bank) துவங்கப்படும்வரை ஏற்றுமதிக்கான நிதி உதவியையும் இவ்வங்கி வழங்கி வந்தது குறிப்பிடத்தகுந்ததாகும்.

**மாநில அளவிலான நிறுவனங்கள்**

**மாநில நிதிக்கழகங்கள் State Financial Corporation (SFCs)**

- 1951-ஆம் ஆண்டு இந்திய அரசால் இயற்றப்பட்ட மாநில தொழில் நிதிக் கழக சட்டத்தின்படி பல்வேறு மாநிலங்களில் மாநில தொழில் நிதிக் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தந்த மாநிலங்களில் சிறு மற்றும் நடுத்தர தொழில் மேம்பாட்டினை ஏற்படுத்துவது இக்கழகங்களின் நோக்கமாகும். சில தொழில் நிதிக் கழகங்கள் தங்களின் மாநில எல்லைகளைத் தாண்டியும் தொழில் நிதி உதவிகளை செய்துவருகிறது.

- ஒரு கோடிக்கு ரூபாய்க்குள் பங்கு மூலதனத்தையும், இருப்புக்களையும் கொண்ட நிறுவனங்களுக்கு மாநில தொழில் நிதிக் கழகங்கள் கடன்கள் மற்றும் ஒப்புறுதிகளையும் வழங்குகிறது. அதிகபட்சமாக ஒரு தொழில் நிறுவனத்திற்கு 60 இலட்சம் நிதியாக வழங்கப்படுகிறது.

- மாநில தொழில் நிதிக் கழகங்கள் மறுநிதியாக இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியிடமிருந்து கடன் பெறுகிறது. இது தவிர, கடன் பத்திரங்களை விற்பதன் மூலம் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியிடமருந்தும் தற்காலிக கடன்களைப் பெறுகிறது.

**மாநில தொழில் மேம்பாட்டு கழகங்கள் State industrial Development Corporations (SIDCOs)**

- மாநில தொழில் மேம்பாட்டு கழகம் மாநில அரசுகளினால் அமைக்கப்படுவது ஆகம். இக்கழகம் அந்தந்த மாநில அரசுகளுக்கே உரிமையானதாகும்.

- இக்கழகங்கள் தொழிற் நிறுவனங்களுக்கான கடன்களை அளிப்பதோடு, மாநிலத்தில் தொழில்மயமாதலை தூண்டுவதும் ஆகும்.

- மாநில தொழில் மேம்பாட்டு கழகம் தொழில் நிறுவனங்களுக்கு கடன்கள், ஒப்புறுதியளித்தல், மற்றும் நேரடியாக பங்குகள் மற்றும் கடன்பத்திரங்களை வாங்குதல் மூலம் நிதி வசதியினை அளிக்கிறது.

- கூடுதலாக, தொழில்நுட்ப விசாரணைகள், திட்டத்தினை கண்டறிதல், திட்ட சாத்தியக்கூறுகளை ஆராய்தல். தெரிந்தெடுத்தல் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி வழங்குதல் என பல மேம்பாட்டு பணிகளையும் இக்கழகம் மேற்கொள்கிறது. தனியார் பங்கேற்பை அனுமதிக்கும் கூட்டுத் திட்டங்களையும் இக்கழம் ஊக்குவிக்கிறது.

இவ்வகையான கூட்டுத்திட்டங்களின் முதலீடு கழகத்தின் சார்பில் 26 சதவிகிதம், தனியாரின் 25 சதவிகிதம், மற்றும் பொதுமக்களின் 49 சதவிகிதம் ஆகியன பங்களிப்பாக இருக்கும்.

- பல்வகை அடிப்படை வசதிகளை கொண்ட தொழிற்பேட்டைகளை அமைப்பது மற்றும் புதிய தொழில் மையங்களை அமைப்பது என இக்கழகத்தின் பணிகள் விரிவடைகின்றன. மாநில அரசுகளின் மானியங்களை நிர்வகிப்பதும் இக்கழகத்தின் பணியாகும்.

- மேலும், இவைகள் இந்திய தொழில் மேம்பாட்டு வங்கியிலிருந்து மறுநிதியினை பெறுகிறது. பங்கு கடன் பத்திரங்கள் மூலம் கடன் பெறுவது, வைப்புக்களை ஏற்பது போன்ற பணிகளையும் இது மேற்கொள்கிறது.

**பணவியல் கொள்கை (Monetary Policy)**

- பண அளிப்பு மற்றும் வட்டிவிகிதத்தை மேலாண்மை செய்யும் நோக்கோடு உருவாக்கப்படும் பேரினப் பொருளியல் கொள்கையே பணவியில் கொள்கை எனப்படுகின்றது. பேரினப் பொருளியல் கொள்கைகளான பணவீக்கம், நுகர்ச்சி, வளர்ச்சி மற்றும் நீர்மைத்தன்மை போன்றவற்றை அடைய மேற்கொள்ளும் தேவை சார்ந்த பொருளியல் கொள்கையாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் முக்கியத்துவம் பெற்றதும், 1976-ஆம் ஆண்டு நோபல் பரிசு பெற்ற மில்டன் ∴பிரைட்மேனால் முன்னெடுத்துச் சொல்லப்பட்ட பணவியல் கொள்கையாகும்.

- அவர் ஒரு பணவியலாளராக இருந்தும், 1929 துவங்கி 1930 களில் நிலவிய உலக பெருமந்தத்துக் காரணம் அமெரிக்க மையவங்கியான பெடரல் ரிசர்வ் சிஸ்டத்தின் பணவியல் கொள்கையில் ஏற்பட்ட குளறுபடிகள்தான் என்பதனைத் தனது நூலான "அமெரிக்க ஐக்கிய அரசுகளின் பணவியல் வரலாறு, 1986 – 1960" (Monetary History of the United states, 1867 – 1960) எனற் நூலில் மிகத் தைரியமாகத் தெரிவித்திருந்தார்.

**விரிவாக்க பணக்கொள்கை மற்றும் சுருக்க பணக்கொள்கை:**

- விரிவாக்க பணக்கொள்கை என்பது (Expansionary Monetary Policy) மலிவுப் பணக்கொள்கையாகும் (Cheap Money Policy) இதில் பணவியல் அதிகார அமைப்பான மைய வங்கி அதன் கருவிகளை பயன்படுத்தி பொருளாதாரத்தை நிலைப்படுத்துகிறது.

- நடப்பு குறுகியகால வட்டி விகிதத்தைவிட குறைவான வட்டிவிகிதத்தையும், வழக்கத்தை விட வேகமான பண அளிப்பையும் ஏற்படுத்துவது விரிவாக்கப் பணக்கொள்கையாகும்.

- இது பாரம்பரியமாக பொருளாதார நடவடிக்கைகளின் பின்னிறக்க காலத்தில் ஏற்படும் வேலைவாய்பின்மைக்கு எதிராக எடுக்கப்படும். வட்டி விகித குறைப்பு நடவடிக்கை கடனுக்கு ஆகும் செலவை குறைந்து தொழில் உற்பத்தியையும், வாணிபத்தையும் விரிவாக்கும்.

- இதனால் தொகு தேவை (அனைத்து பொருட்கள் மற்றும் பணிகளுக்கான தேவை) அதிகரித்து, மொத்த உள்ளநாட்டு உற்பத்தியால் கணக்கிடப்படும் குறுகியகால வளர்ச்சியை தூண்டும்.

- மேற்கூறியதற்கு எதிரானது சுருக்கப் பணக்கொள்கை (Contractionary Monetary Policy) அருமைப் பணக்கொள்கை எனப்படுகிறது. இதில் குறுகியகால வட்டிவிகிதம் நடப்பு வட்டிவிகிதத்தைவிட அதிகப்படுத்துவது, பண அளிப்பினை குறைப்பது அல்லது சுருக்குவது ஆகும்.

- இது, பொருளாதாரத்தின் குறுகியகால வளர்ச்சியை குறைத்து பணவீக்கத்தை குறைப்பது ஆகும். சுருக்கப்பணக் கொள்கை வேலைவாய்ப்பின்மையை அதிகரித்து நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர்கள் கடன் வாங்குவதையும் செலவு செய்வதையும் குறைப்பதன் மூலம் பொருளாதாரத்தை பின்னோக்கி திருப்புவது ஆகும்.

- பணவீக்கம்
- கடன் பெறுதல் எளிது
- நுகர்வோர் அதிகம் நுகர்வர்
- வியாபாரம் விசாலமாகும்
- அதிக மக்கள் வேலை பெறுவார்கள்
- மக்கள் அதிகம் செலவு செய்வார்கள்
- மந்த நிலை
- கடன் பெறுதல் கடினம்
- நுகர்வோர் குறைவாக நுகர்வர்
- வியாபார விரிவாக்கம் தள்ளிப்போகும்
- வேலையின்மை அதிகரிக்கும்
- உற்பத்தி குறையும்

**பணவியல் கொள்கையின் நோக்கங்கள் (Objectives of Monetary Policy):**

- வளர்ந்த நாடுகளின் பொருளாதாரத்தில் பணவியல் கொள்கை நிலைப்படுத்துதல் மற்றும் பொருளாதார அமைப்பினில் சமநிலையைப் பேணுதல் ஆகிய பணிகளை செய்ய வேண்டியுள்ளது.

- ஆனால், வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதாரத்தில் இது இயக்கநிலையை ஏற்படுத்தி பொருளாதாரத்தை விரிவாக்க ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

- பணவியல் கொள்கை பொருளாதாரத்தில் மாற்றத்தினை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த ஒரு கருவியாக உணரப்படுகிறது.

**பணவியல் கொள்கையின் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்கள்:**

**பணத்தின் நிடுநதைத் தன்மை:**

- பொருளியலாளர்களான விக்ஸ்டெட், ஹேயக் மற்றும் ராபர்ட்சன் ஆகியோர் பணத்தின் நடுநிலை பற்றி விவரித்த முக்கிய நிபுணர்கள் ஆவர்கள். அவர்கள் பணவியல் அதிகார அமைப்பு பொருளாதாரத்தில் பணம் நடுநிலைத் தன்மை நோக்கம் கொண்டதாக இருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினர்.

- பணத்தில் ஏற்படும் மாற்றமே அனைத்து பொருளாதார ஏற்றத்தாழ்வுகளுக்கும் அடிப்படைக் காரணம் ஆகும். பண நடுநிலையாளர்களின் கூற்றுப்படி, பணவியல் மாற்றங்கள் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கும் நாட்டின் பொருளாதார அமைப்பில் விலகலையும், இடையூறுகளையும் ஏற்படுத்தும் என்றனர்.

**விகித நிலைத்தன்மை:**

- பரிவர்த்தனை விகித நிலைத்தன்மை என்பது பணவியல் கொள்கையின் பாரம்பரியமான நோக்கமாகும்.

- பல்வேறுநாடுகளில் பொன் திட்டம் அமலில் இருந்து காலத்தில் இது ஒரு முக்கிய நோக்கமாகும். எப்பொழுது ஒரு நாட்டின் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலை

தோன்றுகிறதோ அப்பொழுது தங்க நகர்வின் காரணமாக அது தானாகவே சரி செய்துகொள்ளும்.

- ”எப்பொழுது தங்கம் உள்வருகிறதோ அப்பொழுது பணமும் கடனும் விரிவடைகிறது. எப்பொழுது தங்கம் வெளிச்செல்கிறதோ அப்பொழுது பணமும் கடனும் சுருங்குகிறது” என்பது ஒரு முக்கியமான புகழ்பெற்ற வாக்கியமாகும். இம்முறை இருக்கும்பொழுது செலுத்துச் சமநிலையில் ஏற்படும் சமனற்ற நிலைகள் தானாகவே சரிசெய்யப்பட்டு பரிவர்த்தனை விகிதத்தில் நிலைத்தன்மை பேணப்படும்.

- பரிவர்த்தனை விகிதங்களில் நிலையற்ற தன்மை இருந்தால், அது தங்கம் வெளிச்செல்லுதல் அல்லது உள்வருதல் ஆகியவற்றால் செலுத்துச் சமநிலையில் சமனற்ற நிலையை உருவாக்கும்.

- ஆகவே பரிவர்த்தனை விகிதங்களில் நிலைத்தன்மையை ஏற்படுத்துவது பன்னாட்டு வாணிபத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**விலை நிலைத்தன்மை:**

- பொருளியலாளர்கள் காஸல், கீன்ஸ் போன்றவர்கள் விலை நிலைத்தன்மை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையில் முக்கிய நோக்கமாக என்கின்றனர்.

- விலை நிலைத்தன்மை பொதுமக்களிடம் பொதுவான நம்பிக்கையை ஏற்படுத்தும். மேலும் இது வணிக நடவடிக்கையை அதிகரித்து ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

- மக்களிடையே சமமான வருவாய் மற்றும் சொத்துப் பங்கீடுகளை செய்யும். இவைகளின் தொடர் விளைவாக வளர்ச்சிக்கான பொது அலையும் சமுதாய நலனும் நிறுவப்படும்.

- இங்கு விலை நிலைத்தன்மை என்பது விலை மாறாமல் நிலையாக (Price rigidity) இருப்பதோ, விலைத் தேக்கமடைந்து (Price stagnation) இருப்பதோ அல்ல.

- ஒரு மிதமான விலையேற்றம் என்பது பொருளாதார வளர்ச்சியின் ஊக்க சக்தியாக இருக்கும். இந்த மிதமான விலையேற்றம் என்பது கிட்டத்தட்ட நிலையான விலையின் பெரும்பாலான பண்புகளையும் தன்னகத்தே கொண்டதாக இருக்கும்.

**முழுவேலைவாய்ப்பு:**

- உலக பெருமந்தத்தின்பொழுது, வேலைவாய்பபின்மை மிகவேகமாக அதிகரித்தது. இது சமுதாய அளவில் அபாயகரமானதும், பொருளாதார அளவில் வீணடிப்பையும், அறநெறியளவில் வருந்தத்ததக்கதாகவும் இருந்தது.

- ஆகவே, முழுவேலைவாய்ப்பு என்பது பணவியல் கொள்கையின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. மேலும், 1936-ல் வெளியிடப்பட்ட ”வேலைவாய்ப்பு, வட்டி, மற்றும் பணத்திற்கான பொதுக் கோட்பாடு” (General Theory of Employment, Interest and Money) என்ற கீன்ஸின் நூல் முழுவேலை வாய்ப்பு என்ற பணவியல் கோட்பாட்டின் குறிக்கோளை முன்னிலைப்படுத்தியது.

**பொருளாதார வளர்ச்சி**

- பொருளாதார வளர்ச்சி என்பது நீண்டகாலத்தில் உண்மை தலா வருவாய் (real per capita income) அதிகரித்து செல்லும் நடவடிக்கை ஆகும். இது மனித விருப்பத்தை நிறைவு செய்யும் பொருள் உற்பத்தியின் அளவு அதிகரிப்பதை உணர்த்துவது ஆகும்.

- ஆகவே, சமநிலை பண அளவு உற்பத்தி அளவுகள், சாதகமான சேமிப்பு முதலீடு ஆகிய சூழ்நிலைகளை பராமரித்து அதன்மூலம் நீடித்த பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவது பணவியல் கொள்கையின் குறிக்கோளாக அமைகிறது. தேவை மற்றும் அளிப்பிற்கிடையே சமநிலையை ஏற்படுத்த நெகிழ்ச்சியுடன் கூடிய பணவியல் கொள்கை ஒரு சிறந்த வழிமுறையாகும்.

**செலுத்துச் சமநிலையில் சமநிலையை பேணுதல்:**

- செலுத்துச் சமநிலையில், சமநிலையை பேணுதல் என்பது பணவியல் கொள்கையின் அடுத்தக் குறிக்கோளாகும் உலகப்போர்களுக்குப் பிறகு வாணிபத்தில் சமனற்ற நிலைகள் தோன்ற ஆரம்பித்தன. உலக வர்த்தகம் சமனற்ற நிலையில் அதிகரித்ததால் வரும் அந்நிய செலாவணி பிரச்சனையாகும்.

- இதன் காரணமான செலுத்துசமநிலையில் வரும் பற்றாக்குறை பொருளாதாரத்தின் மற்ற குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதின் திறனையும் குறைக்கும் இதனால், குறைவளர்ச்சி நாடுகள் தங்களுடைய இறக்குமதியினை குறைப்பதால் அதன் வளர்ச்சி நடவடிக்கைகள் பாதிக்கப்படும் பாதகமான நிலைக்கு தள்ளப்படுகிறது ஆகவே, பணவியல் கொள்கை செலுத்துச்சமநிலையில் சமமான நிலையினை பேணுவதை தனது குறிக்கோளாக கொண்டிருக்கிறது.

**வங்கித் துறையில் சமீபகால, முன்னேற்றங்கள் (Recent Advancements in Banking Sector):**

**மின்னனு வங்கி முறை (E-Banking):**

- மின்னணு வங்கியானது நிகழ்நிலை வங்கி முறை (Online Banking) அல்லது இணைய வங்கி முறை (Internet Banking) என்றும் அழைக்கப்படுகிறது. இம்முறையில் ஒரு வங்கி அல்லது நிதிநிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் தங்களது பல்வேறு நிதிப்பரிவர்த்தனைகளை அவ்வங்கி அல்லது நிறுவனத்திற்கு நேரில் செல்லாமல் அவைகளின் இணையதளத்திலேயே நிகழ்த்துவது ஆகும்.

- பாரம்பரியமான கிளை வங்கிமுறை போல் (branch banking) அல்லாது இவ்வங்கி முறையில் மையப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குள் இணைப்பினை ஏற்படுத்தி பரிவர்த்தனைகள் மற்றும் இதர வங்கி நடவடிக்கைள் நடைபெறுகிறது. இன்றைய இந்த மெய்நிகர் வங்கி முறை (Virtual banking) வழக்கமான வங்கி முறையுடன் ஒப்பிடும்பொழுது பரிவர்த்தனைகளுக்கான செலவையும் நேரத்தையும் பெருமளவுக்கு குறைக்கின்றது.

**ஆர்.டி.ஜி.எஜ் (RTGS), நெ.ஃ.ப்ட் (NEFT):**

- இது ஒரு வங்கியின் வாடிக்கையாளர் தனது கணக்கிலிருந்தும் பணத்தினை மற்ற வங்கியின் எந்த ஒரு கிளையில் கணக்கு வைத்திருக்கும் மற்றொரு வாடிக்கையாளருக்கு பணத்தினை விரைவாக மாற்றும் முறைகளாகும்.

- இவ்வகை பணபரிமாற்றங்கள் இருவகைப்படும். ஆர்.டி.ஜி.எஸ் மற்றும் நெ.ஃ.ப்ட் இதில் நிகழ்நேர பெருந்திரள் தீர்வுகள் (Real Time Gross Settlements – RTGS) ஆர்.டி.ஜி.எஸ்) என்பது பெயரில் குறிப்பிட்டுவாறு பரிவர்த்தனைக்காக காத்திருக்கும் நேரம் ஏதும் இல்லாமல் நிகழ்நேரத்திலேயே கண்க்கீடு ஏதும் இன்றி நடைபெறுகிறது.

- மொத்த பணமதிப்பு தீர்வு என்பதன் பொருள் பணப்பரிவர்த்தனைகள் அறிவுறுத்தலின்படி ஒன்றன்பின் ஒன்றாக தீர்க்கப்படுகிறது என்பதாகும்.

- தேசிய மின்னணுவழி பணப்பரிவர்த்தனை (National Electornic Funds Transfer – NEFT – நெ.ஃ.ப்ட்)என்பது வலைத்தள இணைப்பின் மூலமாக ஏதேனும் ஒரு வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் மூலம் மற்றொரு வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் மூலம் மற்றொரு வங்கி

அல்லது நிதி நிறுவனத்தில் கணக்கு வைத்திருக்கும் தனி நபர்கள், வர்த்தகர்கள், மற்றும் நிறுவனங்கள் பணம் பெற்றுக்கொள்ளும் முறையாகும். இதில் நெ.ஃப்ட் அரைமணிக்கொரு முறையான தொகுப்பாக பணப்பரிவர்த்தனையை மேற்கொள்கிறது.

- அனைத்து வங்கி வேலைநாட்களிலும் காலை 8 மணி முதல் இரவு 7 மணிவரை மொத்தம் 23 தொகுப்புகளாக பணப்பரிவர்த்தனை நடைபெறுகிறது. இதில், பணப்பரிவர்த்தனை நடைபெற்ற அதே நாளில், பணத்தை பெறுபவர் காலை 8 மணிமுதல் மாலை 6.30 வரையிலான தொகுப்பில் பெற்றுக்கொள்ளலாம்.

- ஆனால் மாலை 6.30 மணிக்குமேல் இரவு 7 மணிவரையிலான நேரத் தொகுப்பில் பரிமாற்றம் நிகழ்ந்தால் அதே வேலைநாளிலோ அல்லது அடுத்த வேலைநாளிலோ முடிவுறும். இவ்விரு முறைகளும் இந்திய ரிசர்வ் வங்கியின் பார்வையில் நடைபெறுகிறது.

### தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automated Teller Machine):

- தானியங்கி பணம் வழங்கும் இயந்திர முறை 1967-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. அடுத்த தலைமுறை தானியங்கி பணம் வழங்கும் முறை நேரடித் தொடர்பினை தவிர்ப்பதாக இருக்கும். இந்த நேரடி தொடர்பற்ற ஏ.டி.எம். முறை ஸ்மார்ட் கைபேசி வசதியில் உள்ள ஆப்பிள் பே, கூகுள் வால்ட் போன்ற பணப்பரிவர்த்தனை முறைகளை போன்றது. சில வெளிநாடுகளில் நேரடி தொடர்பற்ற ஏ.டி.எம். முறைகள் கிடைக்கின்றன.

- இந்தியாவில் பையொமெட்டிரிக் முறையில் அறிந்து பணம் வழங்கும் முறைகள் கத்தார் தேசிய வங்கி ஏ.டி.எம். இயந்திரங்களில் பயன்படுத்தப்படுகிறது. இம்முறைகள் ஏ.டி.எம். களில் நடைபெறும் பாதுகாப்பற்ற பணப்பரிவர்த்தனையின் சிக்கல்களைத் தவிர்ப்பதாக இருக்கும்.

### பே.டி.எம் (Paytm)

- பேடிஎம் என்பது இந்திய மின்னணு வர்த்தக பணம் வழங்கும் முறையாகும். பணம் வழங்கும் வங்கி (Payment Bank) என்பதன் விரிவாக்கம் தான் பேடி.எம். எனப்படுகிறது.

- இது ஆகஸ்ட் 2015ல் இந்திய ரிசர்வ் வங்கியின் உரிமம் பெற்று ஆரம்பிக்கப்பட்டதாகும். இவ்வங்கி விஜய் சர்மா கேல்கர் என்பவரின் 51 சதவிகித பங்குகள், ஒன் 97 கம்யூனிகேசன்ஸ் (One 97 Communications) நிறுவனத்தின் 39 சதவிகித பங்குகள், மற்றும் ஒன் 97 கம்யூனிகேசன்ஸின் துணை நிறுவனத்தின் 10 சதவிகித பங்குகளை கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தனி நிறுவன ஆகும்.

### பற்று அட்டை (Debit Card) மற்றும் கடன் அட்டை (Debit Card and Credit Card):

- பற்று அட்டை என்பது வாடிக்கையாளர் தனது வங்கிக் கணக்கிலிருக்கும் பணத்தை தானியங்கி இயந்திரத்தின் மூலம் பணம் எடுப்பது, பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான கட்டணங்களை வழங்குவது போன்ற பணப்பரிவர்த்தனைகளுக்கு பயன்படுத்தப்படும் அட்டையாகும்.

- கடன் அட்டை என்பது, அந்த அட்டையை வழங்கிய நிறுவனத்தில் உறுதியளித்த நபர்களால் பெறப்படும் அட்டையாகும். இவ் அட்டையைக் கொண்டு பொருட்கள் மற்றும் பணிகளுக்கான கட்டணங்களை செலுத்தலாம்.

- அவ்வாறு செலுத்தப்பட்ட தொகையுடன், ஒத்துக்கொள்ளப்பட்ட கூடுதல் கட்டணத்தையும் சேர்த்து பின்னர் கடன் அட்டை வழங்கிய நிறுவனத்திற்கு அவர் செலுத்த வேண்டும். பெரும்பாலும் வங்கிகள்தான் கடன் அட்டைகளை வழங்குகிதது. கடன் அட்டை முறை என்பது கடன் வழங்கும் முறையின் ஒரு நீட்சி ஆகும். பல்வகைப்பட்ட சிக்கலான கட்டணமுறைகள் வாடிக்கையாளர்கள் கடன் அட்டை கொண்டு பொருட்களை வாங்குவதைக் கட்டுப்படுத்துகிறது.

## செயல்படாத சொத்து (Non-Peforming Assets):

- கடன் வாங்குபவர்கள் தொடர்ந்து 90 நாட்களில் வட்டியோ அல்லது கடன்தொகையின் பகுதியையோ செலுத்தாமல் இருந்தால் அதை செயல்படாத சொத்து என்கிறோம். இவ்வகையான செயல்படா சொத்துக்கள் நிதிநிறுவனங்களுக்கு மிகப்பெரும் பிரச்சனையாக இருக்கும். ஏனெனில், அவைகள் தங்களது வருமானத்திற்கு கடனுக்கான வட்டியை சார்ந்தே இருக்கும்.

- இப்பொழுது, அவ்வகை சொத்துக்களின் மதிப்பு 10 லட்சம் கோடி அளவுக்கு இருக்கிறது. இதன் விளைவாக, வங்கிகளில் மூலதனப் பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே, இந்திய அரசு ஏழை மக்களின் வரிப்பணத்தினை நிர்பந்தத்திறகு ஆளாகிறது. ஏற்கனவே 2 லட்சம் கோடி அளவுக்கு பற்றாக்குறைக்கான பணத்தை இந்திய அரசு செலுத்தியுள்ளது. 2018 – 19ம் ஆண்டுகளில் 68,000 கோடி மத்திய அரசு வங்கிகளுக்கு செலுத்தியுள்ளது. இவ்வாறு செயல்படா சொத்துக்கள் சாதாரண மக்களை பாதிக்கின்றது.

## வங்கிகள் இணைப்பு (Merger of Banks):

- 2017-ஆம் ஆண்டு மைய அரசின் அமைச்சரவைக் குழுகூடி இந்திய ஸ்டேட் வங்கி குழுவின் ஐந்து இணை வங்கிகளை இணைப்பதற்கான முடிவை எடுத்தது. இதற்காக சட்ட மசோதா பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

- ஐந்து இணை வங்கிகளுடன் பாரதிய மகிளா வங்கியும் இணைக்கப்பட்டு பாரத ஸ்டேட் வங்கியாக ஏப்ரல் 1, 2017 முதல் செயல்படத் தொடங்கியது. இந்த இணைப்பினால் உலகிலுள்ள முதல் 50 வங்கிகள் பட்டியலில் பாரத ஸ்டேட் வங்கியும் இடம்பெற்றது.

- பைக்கனர் ஸ்டேட் வங்கி, ஜெய்பூர் ஸ்டேட் வங்கி, மைசூர் ஸ்டேட் வங்கி, ஜெய்பூர் ஸ்டேட் வங்கி, மைசூர் ஸ்டேட் வங்கி, பாட்டியாலா ஸ்டேட் வங்கி, மற்றும் திருவாங்கூர் ஸ்டேட் வங்கி ஆகியவை இணைக்கப்பட்ட இணைப்பு வங்கிகள் ஆகும்.

- இதற்கு முன்னர, இந்தூர் ஸ்டேட் வங்கி, சௌராஸ்டிரா ஸ்டேட் வங்கி ஆகிய இரு வங்கிகள் இணைக்கப்பட்டிருந்தன. இணைப்பிற்குப் பிறகு, பாரத ஸ்டேட் வங்கியின் மொத்த வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 37 கோடியாகவும், கிளைகளின் எண்ணிக்கை 24 ஆயிரமாகவும், தானியங்கி பணம் வழங்கும் எந்திரங்களின் எண்ணிக்கை 60 ஆயிரமாகவும் இருக்கிறது.

## பணச்சந்தை (Money Market):

- அதிக நீர்மைத் தன்மையை கொண்டதும் குறுகியகாலத்தில் முதிர்ச்சியுறுவதுமான நிதிக் கருவிகளை கையாளும் சந்தையே பணச் சந்தை எனப்படுகிறது. ஒரு நாள் முதற்கொண்டு ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் நிதிக் கருவிகள் இச்சந்தையில் கையாளப்படுகிறது.

- இங்கு கையாளப்படும் நிதிக்கருவிகள் அரசுப் பத்திரங்கள், வணிகப் பத்திரங்கள், அழைப்புப் பணம், வைப்புச் சான்றுகள், வங்கியாளர் ஏற்புகள், மாற்றுச் சீட்டுகள், மறு வாங்கல் ஒப்பந்தங்கள், கருவூல உறுதிச் சீட்டுக்கள், அந்நிய செலாவணிகள் போன்றவை ஆகும். இவைகள் அனைத்தும் ஒரு வருடத்திற்குள் முதிர்ச்சியடையும் வகையிலான கருவிகள் ஆகும்.

- இந்திய ரிசர்வ் வங்கி, வணிக வங்கிகள், மேம்பாட்டு வங்கிகள், வட்டார வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள், மற்றும் இதர அமைப்புசாரா நிதி நிறுவனங்கள் ஆகியவை குறுகிய கால நிதியை பணச்சந்தையில் அளிக்கின்றது.

## மூலதனச் சந்தை (Capital Market):

- நீண்ட கால நிதிக் கருவிகளை வாணிபம் செய்யும் சந்தை மூலதனச் சந்தை எனப்படுகிறது. உற்பத்தி நோக்கில் நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு தேவைப்படும் நிதியினை திரட்டும் இடமாக மூலதனச் சந்தை இருக்கிறது. மூலதனச் சந்தையில் பயன்படுத்தப்படும் பாரம்பரியமான நிதிக் கருவிகள் கடன் பத்திரங்களும் சமபங்குகளும் ஆகும்.

- ஆனால் இப்பொழுது அக்கருவிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது மேற்கூறியவையுடன் அந்நிய செலாவணி முன்பேர வர்த்தகம் மற்றும் இதர கடன் சாதனங்களும் அடங்கும்.

- இச்சந்தையில் தனி முதலீட்டாளர்கள், நிதி நிறுவனங்கள், நிதிக் கழகங்கள், வங்கிகள், அரசு பங்கு, சந்தைகள் தொழில் நிறுவனங்கள் உள்ளிட்டவை உறுப்பினர்களாக உள்ளனர்.

- இவர்களை கடனளிப்பவர்கள், கடன்பெறுபவர்கள், மற்றும் வசதி செய்யும் நிறுவனங்கள் என மூன்று வகையாக பிரிக்கலாம்.

**பணமதிப்பு நீக்கம் (Demonetization):**

- பணமதிப்பு நீக்கம் என்பது அரசின் சட்டபூர்வ பணத்தொகுப்பிலிருந்து குறிப்பிட்ட அலகிலான பணத்தின் மதிப்பை செல்லாது என அறிவிக்கும் செயலாகும்.

- அந்த பணம் பணச்சுழற்சியிலிருந்து நீக்கப்பட்டு அந்த இடத்தில் வேறு வடிவிலான பணம் இடம்பெறும். இந்தியாவில் 2016-ஆம் ஆண்டு நவம்பர் 8-ஆம் நாள் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ரூபாய் 500 மற்றும் ரூபாய் 1000-மதிப்பிலான காகிதப்பணம் மதிப்பு நீக்கப்பட – அவ்வாறு மதிப்பு நீக்கப்பட்ட பணத்தின் மொத்த மதிப்பில் 99 சதவிகிதம் இந்திய ரிசர்வ் வங்கிக்கு திரும்பியது.

**பணமதிப்பு நீக்கத்தின் நோக்கங்கள்:**

- கருப்புப் பணத்தினை ஒழிப்பது
- இலஞ்சத்தை தடுப்பது
- தீவிரவாதத்திற்கு பணம் செல்வதை தடுப்பது மற்றும்
- கள்ளப் பணத்தினை தடுப்பதும் ஆகியன

**தொகுப்புரை:**

- ஒரு நாட்டின் வளர்ச்சிக் செயல்பாட்டில் நிதிக் துறை முக்கியபங்கு வகிக்கின்றது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியது.

- வருமானத்தை விட குறைவாகச் செலவு செய்வோரிடமிருந்து வருவாய்க்கு அதிகமாகச் செலவு செய்வோருக்கு அதாவது நிகரச் சேமிப்பாளர்களிடமிருந்து நிகரக் கடன் வாங்குவோருக்கு பணம் பரிமாறும் அமைப்பாக நிதி நிறுவனங்கள், கருவிகள் மற்றும் அங்காடிகளை உள்ளடக்கிய பண அமைப்பு செயல்படுகின்றது.

- வணிக வங்கிகள் தங்கள் செயல்பாடுகளை மாற்றியமைத்தல் அவைகளின் செயல்திறனை மேம்படுத்தியது மூலமாக நிதியியல் சீர்திருத்தக் கொள்கைகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இருந்த போதிலும் 2010 களில் செயல்படா சொத்துகளின் அளவு கணிசமாக அதிகரித்துள்ளது.

# 9.பொது நிதி (Public Finance)

## பொதுநிதி – பொருள்

- பொது நிதி என்பது அரசின் நிதி சார்ந்தவை பற்ற படிக்கக்கூடியதாகும். இது அரசின் வருவாய் மற்றும் செலவுகளைப் பற்றியும், அவை ஒன்றொடொன்று எவ்வாறு சரி செய்து கொள்கிறது என்பதை பற்றியும் விள்ககுகிறது.
- நவீன காலத்தில் பொது நிதியியல் ஐந்து துணைப்பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. அவை பொது வருவாய், பொதுச் செலவு, பொதுக் கடன், நிதி நிர்வாகம், நிதிக் கொள்கை.

## பொது வருவாய்

- பொது வருவாய் என்பது வருவாயைப் பெருக்கக் கூடிய முறைகளான வரி மற்றும் வரியில்லா வருமானங்கள் பற்றியும், வரிக்கொள்கை, வரிவிகிதம், வரியின் பளு, வரியின் தாக்கம் மற்றும் அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.

## பொதுச் செலவு

- இப்பகுதி அரசின் செலவு, பொதுச் செலவின் விளைவுகள் மற்றும் பொது செலவைக் கட்டுப்படுத்துதல் போன்றவை சார்ந்த அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

## பொதுக்கடன்

- பொதுக்கடன் என்ற பகுதியில் உள்நாடு மற்றும் வெளிநாட்டின் மூலம் பெறக்கூடிய கடன்களுக்கான வளங்களைப் பற்றி படிக்கிறது. இதில் பொதுக்கடன்களின் சுமை, அதன் விளைவுகள் மற்றும் திரும்பச் செலுத்தும் முறை பற்றி இத்தலைப்பின் கீழ் வருகிறது.

## நிதி நிர்வாகம்

- இப்பகுதி அரசின் வரவு செலவு திட்டத்தின் பல்வேறு பகுதிகளைப் பற்றி படிக்கிறது. வரவு செலவு திட்டம் என்பது ஓராண்டிற்கான அரசின் பேரளவு நிதி திட்டமாகும். வரவு செலவு திட்டத்தின் பல்வேறு நோக்கங்கள் மற்றும் அதனைத் தயாரிப்பதற்கான வழிமுறைகள், நிதி ஒதுக்கீடு, மதிப்பீடு மற்றும் தணிக்கை போன்றவைகள் நிதி நிர்வாகத்தின் கீழ் வருகிறது.

## நிதிக் கொள்கை

- வரிகள், மானியங்கள், பொதுக்கடன் மற்றும் பொதுச் செலவு ஆகியவைகள் நிதிக்கொள்கையின் கருவிகளாகும்.

## பொதுநிதி மற்றும் தனியார் நிதி

- பொது நிதி என்பது அரசின் வருவாய், செலவு, கடன்கள் மற்றும் நிதி நிர்வாகம் பற்றி விளக்குகிறது. தனியார் நிதி என்பது தனிநபர் அல்லது தனியார் நிறுவனங்களின் வருவாய், செலவு, கடன் மற்றும் அதன் நிதி நிர்வாகம் ஆகியவற்றைப் பற்றி படிக்கிறது. பொதுநிதி மற்றும் தனியார் நிதி அடிப்படையில் ஒன்றுபோல் இருந்தாலும் அவற்றின் அளவு, நோக்கம், விளைவு, தாக்கம் ஆகியவற்றில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன.

## ஒற்றுமைகள்

### பகுத்தறியும் தன்மை

- பொது மற்றும் தனி நிதி பகுத்தறிவை அடிப்படையாக கொண்டவை. இரண்டும் குறைந்த செலவில் அதிக நலத்தைப் பெறுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.

### கடனுக்கான் வரையறை

- இரண்டுக்குமான கடன்கள் வரையறைக் கொண்டுள்ளது. தனது வருவாய்க்கு அப்பால் அரசம் செல்வதில்லை. அரசின் பற்றாக்குறை வரவு செலவு, திட்டத்திற்கும் எல்லை இருக்கிறது.

**வளங்களின் பயன்பாடு**

- தனி மற்றும் பொது துறைகள் வரையறுக்கப்பட்ட வளங்களையே கொண்டுள்ளது. இவ்விரண்டும் உத்தம அளவில் வளங்களைப் பயன்படுத்த முனைகிறது.

**நிர்வாகம்**

- நிர்வாகத் திறனானது அரசு மற்றும் தனியாரின் செயல்திறனைப் பொருத்து அமைகிறது. செயல்திறன் இன்மை மற்றும் ஊழல் ஆகியவை நிர்வாகத்தில் காணப்பட்டால் விபரங்கள் மற்றும் நட்டங்கள் ஏற்படும்.

**வேற்றுமை**
**வருமான மற்றும் செலவு சரிகட்டல்**

- அரசு செலவினை மதிப்பீடு செய்து, அதற்கேற்ப வருவாயை எழுப்ப முயற்சிக்கிறது. தனிநபர்கள் வருவாய்க்கு ஏற்ப செலவினை வைத்துக் கொள்வார்கள். எடுத்துக்காட்டாக தனியார் நிதி என்பது இருக்கக்கூடிய துணி அளவிற்கு மேலங்கி (Coat) தைப்பது போன்றும், பொதுநிதி என்பது மேலங்கியின் தேவைக்கேற்ப துணி அளவை முடிவு செய்வது போன்றதாகும்.

**கடன்**

- அரசானது உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு வழிகள் மூலம் கடன்களை பெறலாம். மேலும் அரசானது, பத்திரங்களை வெளியிட்டு மக்களிடம் கடனைப் பெறலாம். ஆனால் தனியார் இவ்வாறு அவர்களிடம் கடனைப் பெறமுடியாது.

**பணம் அச்சடிக்கும் உரிமை**

- அரசு வேண்டுமெனில் பணத்தை அச்சடிக்கலாம். இது பணத்தை உருவாக்குதல், பகிர்வு செய்தல் மற்றும் நிர்வகித்தல் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். தனியார் பணத்தை உருவாக்க இயலாது.

**நடப்பு மற்றும் எதிர்கால முடிவுகள்**

- அரசானது எதிர்காலத் திட்டங்களை கருத்தில் கொண்டு நீண்டகால முடிவினை மேற்கொள்கிறது. ஆரசின் முதலீடானது மேற்கொள்கிறது. அரசின் முதலீடானது பள்ளிகளுக்கான கட்டிடங்கள் கட்டுதல், மருத்துவமனை மற்றும் அடிப்படை வசதிகளை மேற்கொள்வது ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. ஆனால் தனயார் நிதியானது குறுகிய கால திட்டங்களுக்கான நிதியைக் கொண்டவை ஆகும்.

**நோக்கம்**

- பொதுத்துறையின் முக்கிய நோக்கம், பொருளாதாரத்தில் சமூக நன்மையை வழங்குவதாகும். தனியார் துறையின் நோக்கம் சொந்த நன்மை உயர்த்துவது, அதாவது இலாபத்தை உச்சப்படுத்துவதாகும்.

**கட்டாய வருவாய் பெறுவதற்கான வழிகள்**

- தனிநபரின் வருமானத்திற்கான ஆதாரங்கள் குறைவாகும். ஆனால் அரசுக்கு அதிகமாகும். அரசு தனது அதிகாரவரம்பை பயன்படுத்தி வருவாயைப் பெறலாம்.

**பெரிய அளவிலான மாற்றங்களை கொண்டுவருவதற்கான திறன்**

- பொதுநிதிக்கு வருவாய் சார்ந்த பெரிய முடிவுகளை எடுப்பதற்கான திறன் உண்டு. தனது வருவாயை திறமையாக மற்றும் வெளிப்படையாக அரசால் சரிகட்ட இயலும். ஆனால் தனி நபர்கள் அவ்வாறான பெரிய முடிவுகளை எடுக்க இயலாது.

**தற்கால அரசின் பணிகள்**

- தற்கால அரசானது காவல் அரசாக மட்டுமில்லாமல் நலம் பேணும் அரசாக உள்ளது. இது பொருளாதார மற்றும் சமூகக் கட்டமைப்புகளை உருவாக்குவதையும், நாட்டிற்கு உள்ளேயும், வெளியிலும் நிலைத்தன்மையை உறுதி செய்தல், நீடித்த நெடுநாள் வளர்ச்சிக்கான காரணிகளை பாதுகாத்தல் ஆகியவற்றில் பெரிய அளவிலான பங்கினை ஆற்றுகிறது. அரசின் முக்கியப் பணிகள் பின்வருவனவாகும்.

**பாதுகாப்பு**

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழிவிலிருந்து பொதுமக்களை பாதுகாப்பதே அரசின் முக்கியப் பணியாகும். அரசு போதுமான அளவில் காவல் மற்றும் ராணுவ நிலைகளை பராமரித்து பாதுகாப்பு பணிகளைச் செய்கிறது.

**நீதி**

- நீதியை பரிபாலனம் செய்தல் மற்றும் தகராறுகளைத் தீர்த்தல் ஆகியவை அரசின் பணியாகும். அரசானது, அனைத்து வகுப்பனரும் சமநீதி பெறும் வகையில் நீதி அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

**நிறுவனங்கள்**

- தனி நிறுவனங்கள் மீதான ஒழுங்குமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தற்கால அரசின் பணியின் கீழ் வருகிறது. அரசானது சில நிறுனங்களின் சொந்தமாகக் கொண்டு அவற்றினை வெற்றிகரமாக செயல்படுத்துவதும் அரசின் பொறுப்புகளாகும்.

**சமூக நலன்**

- நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக கல்வி, சமூக பாதுகாப்பு, சமூக காப்பீடு, உடல்நலம் மற்றும் துப்புரவு போன்றவற்றை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும்.

**கட்டமைப்பு**

- தற்கால அரசுகள் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பினை உருவாக்குவதன் மூலம் பொருளாதார முன்னேற்றித்திற்கான அடித்தளத்தை அமைக்கிறது.

**பேரின பொருளாதாரக் கொள்கை**

- பேரின பொருளாதார நோக்கங்களை அடைவதற்காக நிதிக் கொள்கை மற்றும் பணக் கொள்கை ஆகியவற்றை அரசு மேற்கொள்கிறது.

**சமூக நிதி**

- பொருளாதாரத்தின் வளர்ச்சி நிலையின் போது சமூகத்தின் சில பிரிவினர் மற்றவர்களைவிட கூடுதல் நன்மை அடைகின்றனர். நிதித் தீர்வை மூலம் வருவாயை மறுபகிர்வு செய்வதற்கு அரசானது தேவைப்படுகிறது.
- ஒரு சிலரிடம் பொருளாதார சக்தி குவிந்து காணப்படும் தீமையை களைவது அரசின் முக்கியப் பணியாகும். இதனை களைவதற்காக முற்றுரிமை மற்றும் வாணிப கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்கிறது.
- அரசு மூன்று விதமான வழிகளில் பங்காற்றுகிறது.

- பொருட்கள் மற்றும் பணிகளை உற்பத்தி செய்பவராக
- பொது மற்றுமும் சமூக பண்டங்களை அளிப்பவராக
- பொருளாதார முறையை ஒழுங்குபடுத்தபவராக

## பொதுச்செலவு

**பொருள்**

- மக்களின் சமூகத் தேவையை நிறைவேற்றுவதற்காக மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளும் செலவினமே பொதுச் செலவாகும்.

**வரைவிலக்கணம்**

- ''பொது அமைப்புகளான மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அமைப்புகள், சமூகத்தின் பொதுவான விருப்பங்களை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளக் கூடிய செலவுகள் பொதுச் செலவாகும்''– என வரையறை செய்யப்படுகிறது.

**பொதுச் செலவின் வகைப்பாடு பின்வருவனவாகும்**
**நன்மை அடிப்படையிலான பாகுபாடு**

- கான் மற்றும் பிளின் ஆகியோர் பொதுச் செலவை நன்மை அடிப்படையில நான்கு வகைகளாக வகைப்படுத்துகிறார்கள். அவை.
- ஆனைத்து சமூகத்திற்கும் பலன் அளிக்கிற பொதுச்செலவு உதாரணமாக, பொது நிர்வாகம், இராணுவம், கல்வி, பொதுச் சுகாதாரம் மற்றும் போக்குவரத்து போன்றவற்றிற்கான செலவுகள்.
- சில மக்களுக்கான சிறப்பு நன்மை தரக்கூடிய மற்றும் முழு சமுதாயத்திற்கும் பொது நன்மை தரக்கூடிய செலவுகள். ஊதாரணமாக, நீதி நிர்வாகம்.
- ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு நேரடியாக நன்மை தரக்கூடிய மற்றும் சமுதாயத்திற்கு மறைமுகமாக நன்மை தரக்கூடிய செலவுகள். உதாரணமாக சமூக பாதுகாப்பு, பொது நலன் ஓய்வூதியம் மற்றும் வேலையின்மைக்கான நிவாரணம் ஆகியவற்றிற்கான செலவுகள்.
- சில நபர்களுக்கு சிறப்பு நன்மை பயக்கும் வகையிலான செலவு உதாரணமாக ஒரு குறிப்பிட்ட தொழிலுக்கான மானியம் வழங்குதல்.

**பணி அடிப்படையிலான வகைப்பாடு**

- ஆட்ம்ஸ்மித் பொதுச் செலவினை அரசின் பணிகள் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தியுள்ளார்.

**பாதுகாத்தல் பணிகள்**

- இது நாட்டின் குடிமக்களை அந்நிய ஆக்கிரமிப்பு மற்றுமும் உள்நாட்டுச் சீரழிவு ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பதற்கான செலவை உள்ளடக்கியுள்ளது. ஊதாரணமாக பாதுகாப்பு, காவல்துறை, நீதிமன்றங்கள் போன்றவற்றிற்கான செலவுகள்.

**வணிக பணிகள்**

- வணிக மற்றும் வியாபார வளர்ச்சிக்காக மேற்கொள்ளக் கூடிய பொதுச் செலவை உள்ளடக்கியது. உதாரணமாக போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு மேம்படுத்துவதற்கான செலவுகள்.

**வளர்ச்சி பணிகள்**

- இது கட்டமைப்பு மற்றும் தொழில் மேம்பாட்டிற்கான பொதுச் செலவை உள்ளடக்கியுள்ளது.

**பொதுச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்கள்**

- தற்கால அரசு என்பது நலம் பேணும் அரசாகும். இதில் அரசானது சமூக பொருளாதார மற்றும் அரசியல் சார்ந்த பணிகளை செய்துதர வேண்டியுள்ளது. இவைகள் பொதுச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்காக உள்ளது.

**மக்கள் தொகை வளர்ச்சி**

- 67ஆண்டு கால திட்டங்களில் இந்தியாவின் மக்கள்தொகை 1951-ல் 36.1 கோடியிலிருந்து 2011-ல் 121 கோடியாக உயர்ந்துள்ளது. மக்கள் தொகை வளர்ச்சியினால் உடல்நலம், கல்வி, சட்டம் ஒழுங்கு போன்றவற்றிற்காக பேரளவு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. இளைஞர்களுக்கான கல்வி மற்றும் சேவைகளுக்காகவும், முதியோர்களுக்கான ஓய்வூதியம், சமூக பாதுகாப்பு மற்றும் உடல் நலத்திற்கான வசதிகள் ஏற்படுத்தவும் பொதுச்செலவு அதிகமாகிறது.

**பாதுகாப்புச் செலவு**

- இந்தியாவில் பாதுகாப்பிற்கான செலவு அதிகரித்தவண்ணம் உள்ளது. இராணுவ தளவாடங்களை நவீனமயமாக்குவதால் இராணுவ செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது. 1990 – 91-ல் 10,874 கோடியாக இருந்த அரசின் பாதுகாப்புச் செலவு 2018-19-ல் 2,95,511 கோடியாக அதிகரித்துள்ளது.

**அரசு மானியங்கள்**

- இந்திய அரசானது, உணவு, உரங்கள், முன்னுரிமை துறைக்கான கடன் வழங்கல், ஏற்றுமதி மற்றும் கல்வி போன்ற பல இனங்களுக்கு மானியங்களை வழங்குகிறது. மானியங்களுக்கான தொகை மிக அதிகமாக இருப்பதால் பொதுச் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.
- 1991-ம் ஆண்டில் மத்திய அரசின் மான்யத்திற்கான செலவு 9581 கோடியிலிருந்து 2,29,715,.67 கோடியாக 2018-19ல் அதிகரித்துள்ளது. மற்றொருபுறம் பெரும் நிறுவனங்களுக்கு மானியமாக (ஊக்கத் தொகை) 5-இலட்சம் கோடிக்கு மேல் வழங்கியுள்ளது.

**கடன் சேவைகள்**

- அரசானது அதிகமான அளவில் உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு ஆதாரங்கள் மூலம் கடன் பெற்றுள்ளன. அதன் விளைவாக அரசு கடனை திருப்பி செலுத்துவதற்காக அதிக பணம் தேவைப்படுகிறது.
- மத்திய அரசின் வட்டி செலுத்தல்களுக்கான தொகை 1990-91-ல் 21500 கோடியிலிருந்து 2018-19ல் 5,75,794 கோடியாக அதிகரித்துள்ளது.

**வளர்ச்சித் திட்டங்கள்**

- அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை மேற்கொள்கிறது. அவையாவன நீர்பாசனம், இரும்பு மற்றும் எ.்.கு கனரக எந்திரங்கள், எரிசக்தி, தொலைதொடர்பு போன்றவையாகும். இந்த வளர்ச்சித் திட்டங்களுக்கு அதிகளவு முதலீடு தேவைப்படுகிறது.

**நகரமயமாக்கல்**

- நகரங்களில் மக்கள் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. 1950 - 51-ல் மொத்த மக்கள் தொகையில் 17 சதவீதம் பேர் நகர்புறத்தில் வாழ்ந்தனர். தற்போது நகர மக்கள் தொகை 43% அளவிற்கு அதிகரித்துள்ளது. தற்போது 1 மில்லியன் மக்கள் தொகைக்கு மேல் சுமார் 54 நகரங்கள் உள்ளது. இதனால் சட்டம் ஒழுங்கை பராமரிப்பதற்கு, கல்வி மற்றும் குடிமை வசதிகளை மேற்கொள்ள அதிக அளவில் செலவுகள் ஏற்படுகின்றது.

**தொழில் மயமாக்கல்**

- அடிப்படை மற்றும் கனரக தொழில்களுக்கு அதிக அளவு மூலதனம் தேவைப்படுகிறது. மேலும் இது உற்பத்திக்கு நீண்ட காலத்தையும் எடுத்துக்கொள்ளும். அரசானது இத்தகைய தொழிற்சாலைகளை திட்டமிட்ட பொருளாதாரத்தில் துவங்கவேண்டியுள்ளது. மேலும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் போக்குவரத்து, தகவல்தொடர்பு, எரிசக்தி, எரிபொருள் போன்ற அடிப்படை வசதிகள் தேவைப்படுகிறது.

**மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான மானியங்கள் அதிகரிப்பு**

- இயற்கை பேரழிவுகளை எதிர்கொள்வதற்கு மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கான வங்கப்படும் மானியங்கள் உதவித்தெகை பெருருமளவில் அதிகரித்துள்ளது.

**பொது வருவாய்**

- பொது வருவாய் என்பது பொது நிதியியலில் முக்கிய இடம் வகிக்கிறது. மக்களின் நலனுக்காக அரசு பல்வேறு பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பொதுச் செலவுகள் உயர்ந்து வருவதால் அதனை பொது வருவாயின் மூலமே சரிசெய்ய முடியும். பொது வருவாயை


அதிகரிப்பது என்பது பொதுச் செலவின் அவசியம் மற்றும் மக்களின் செலுத்தும் திறன் அடிப்படையில் அமையும்.

**பொருள்**

- பொது வருவாய் அல்லது பொது வருமானம் என்பது மூலங்களின் வழியாக அரசு பெரும் வருமானத்தைக் குறிக்கும்.
- டால்டன் கூற்றுப்படி "பொது வருமானம்" என்பதை குறுகிய மற்றும் பரந்த பொருளில் விளக்கப்படுகிறது. பரந்த பொருளில் பொதுவருவாய் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்தில் பொது அதிகார அமைப்பினர் பெரும் அனைத்து வருவாய் அல்லது கடன் உட்பட உள்ள பெறுதல்களைக் குறிக்கும். குறுகிய கண்ணோட்டத்தில் பொது அதிகார அமைப்பின் வருமான வளங்களை மட்டும் உள்ளடக்கியுள்ளது. இதனை வருவாய் வளங்கள் எனக் கூறப்படுகிறது.
- குழப்பத்தை தவிர்ப்பதற்காக, பரந்த பொருளில் பொதுப் பெறுதல்கள் எனவும், குறுகிய கண்ணோட்டத்தில் பொது வருவாய் எனவும் அழைக்கப்படுகிறது. குறுகிய பொருளில், பொது வருவாய் என்பது அரசின் வருவாய். இது 'வருவாய் சாதனம்' என்றும் பரந்த பொருளில் அரசு கடன் வழியாக பெறுவதும் ஆகும்.

**பொது வருவாயின் வகைப்பாடு**

- பொது வருவாய் இருவகையாக வகைப்படுத்தப்படுகிறது.




**வரி வருவாய்**

**பொருள்**

- வரி என்பது குடிமக்கள் எவ்வித பிரதிபலனும் எதிர்பாராமல் அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடியதாகும். இது அரசால் சட்டப்படி வரி செலுத்துவோர் மீது விதிக்கப்படுகிறது. இதனை வரி செலுத்துபவர் மறுக்காமல் செலுத்த வேண்டியதாகும்.

**வரைவிலக்கணம்**

"ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனம் அரசிடமிருந்து
எந்தவொரு நன்மையும் எதிர்பாரமால் அரசுக்கு கட்டாயம் செலுத்தக் கூடியதாகும்"

-அனடேல் முராட்

"வரி என்பது பொது அதிகார அமைப்பினால் விதிக்கப்பட்டதை செலுத்த வேண்டிய ஒரு கட்டாய பங்களிப்பாகும். செலுத்தப்பட்ட தொகைக்கு சமமான பலனை எதிர்பாரமல் செலுத்த வேண்டியதாகும். இது தண்டத்தொகை அல்லது சட்டபூர்வமான குற்றத்திற்காக விதிக்கப்படுவதல்ல"

- டால்டன்

**வரியின் அம்சங்கள்**

- வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தப்படக்கூடிய ஒன்றாகும். மக்கள் மீது சுமத்தப்படுகிற வரியை கட்டாயம் செலுத்த வேண்டும். வரியைச் செலுத்த மறுப்பது தண்டிக்கப்படக் கூடிய குற்றமாகும்.

- பொதுநிர்வாகத்தினரிடம் வரி செலுத்தவோர் எவ்வித பிரதிபலனும் எதிர்பாரமல் செலுத்த வேண்டியது. இதன் பொருளாவது என்னவென்றால் வரிசெலுத்துவோர், வரிசெலுத்துவதால் தனக்கு குறிப்பிட்ட நன்மை ஏதும் எதிர்பாரமல் செலுத்த கூடியது.
- ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.
- வரியானது சட்டத்தை மீறியதற்காக சுமத்தப்படும் தண்டத்தொகை போன்று விதிக்கப்படுவதல்ல.

**சில வரி வருவாய் மூலங்கள்**

- வருமான வரி
- நிறுவன வரி
- விற்பனை வரி
- கூடுதல் கட்டணம்
- செஸ் (வரிக்கு வரி)

**வரிசாரா வருவாய்**

- வரியல்லாத ஆதாரங்களிலிருந்து அரசினால் பெறப்படுகிற வருவாயை வரிசாரா வருவாய் என அழைக்கப்படுகிறது. வரிசாரா வருவாயின் ஆதாரங்களாவன.

**1. கட்டணம்**

- அரசிற்கான மற்றொரு முக்கியமான வருவாய் ஆதாரம் கட்டணம் ஆகும். பொது நிர்வாகத்தில் செய்யும் சேவைக்காக கட்டணம் விதிக்கப்படுகிறது. கட்டணம் என்பது வரியை போல் கட்டாயம் செலுத்தக்கூடியது அல்ல. அரசானது சில சேவையைச் செய்வதற்காக கட்டணங்களை வசூலிக்கிறது. எடுத்துக்காட்டாக, கட்டணம் என்பது பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமங்கள் போன்றவற்றை வழங்குவதற்காக விதிக்கக்கூடியது.

**2. தண்டத்தொகை**

- சட்டத்தை மீறுவோர் மீது சுமத்தப்படுவது தண்டத் தொகை ஆகும். எடுத்துக்காட்டாக, சாலை விதிகளை மீறுதல், வருமான வரியை உரிய காலத்திற்குள் செலுத்தாமல் தாமதமாக செலுத்துவோர் மீது விதிக்கப்படுவது.

**3. பொதுத் துறை நிறுவனங்களின் வருவாய்கள்**

- அரசானது பொதுத் துறை நிறுவன அமைப்புகளில் உள்ள உபரியை வருமானாகப் பெறும். சில பொதுத்துறை நிறுவனங்கள் பெரிய அளவில் இலாபம் ஈட்டுகிறது. அதன் இலாபம் மற்றும் பங்காதாயங்களை பொதுச் செலவிற்காக அரசு பயன்படுத்திக் கொள்கிறது.

**4. மேம்பாட்டுக்கான சிறப்புத் தீர்வைகள்**

- இது ஒரு குறிப்பிட்ட பகுதியில் அரசு மேற்கொண்ட பொதுத் திட்டத்திற்காக அப்பகுதியினர் மீது சிறப்புத் தீர்வைகள் விதிக்கப்படுகிறது. ஒரு பகுதியில் பொது புங்காக்கள் அல்லது சாலை வசதி செய்வதால் அப்பகுதியில் நிலத்தின் மதிப்பு உயர்வதால் அப்பகுதியில் சிறப்புத் தீர்வைகள் விதிக்கப்படுகிறது.

**5. அன்பளிப்புகள், மான்யங்கள் மற்றும் உதவிகள்**

- தற்காலத்தில் ஒரு அரசிடமிருந்து மற்றொரு அரசுக்கு வழங்கப்படுவது உதவத்தெகை ஆகும். மத்திய அரசு மாநில அரசுக்கும் மற்றும் மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அவற்றின் பணிகளை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் உதவியாகும்.
- வெளிநாடுகளிலிருந்து பெறக்கூடிய உதவியை அயல்நாட்டு உதவி என அழைக்கப்படுகிறது. வளரும் நாடுகள் இராணுவ உதவி போன்றவற்றை இதர நாடுகளிலிருந்து பெறுகின்றது.

**6. மரண தீர்வை**

- ஒருவர் வாரிசு இல்லாமலோ அல்லது உயில் ஏற்படுத்தாமல் மரணமடைந்தால், அவர் மரணத்திற்குப் பிறகு விட்டுச் சென்ற உடைமைகளை அரசு எடுத்துக்கொள்ளும்.

**வரி வதிப்பின் புனித விதிகள்**

- ஒரு நல்ல வரியில் இருக்க வேண்டிய அம்சங்கள் மற்றும் தன்மைகளை புனித விதிகள் என விவரிக்கப்படுகிறது. புனித விதிகள் என்பது அனைத்து வரிகளுக்கும் பொதுவானதாக இல்லாமல்

தனிப்பட்ட வரிக்கு மட்டும் அதன் தரத்தைக் குறிக்கிறது. ஒரு நல்ல வரி அமைப்பு என்பது அனைத்து வகை வரிகளை சரியாக இணைத்து புனித விதிகளை பெற்றிருக்க வேண்டும்.

- ஆடம் ஸ்மித் கருத்துப்படி நான்கு புனித விதிக்ள உள்ளன அவையாயவன.

**வரி விதிப்பு விதிகள்**

- சிக்கன விதி
- சமத்துவ விதி
- வசதி விதி
- உறுதி விதி
- திறன் மற்றும் நெகிழ்வு விதி

**1. செலுத்தும் திறன் பற்றிய விதி**

- மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப அரசானது வரி வேண்டும். ஏழை அல்லது நடுத்தர வர்க்கத்தினரை ஒப்பிடும் போது செல்வந்தர் அதிக வரி செலுத்தும் வகையில் இருக்க வேண்டும்.

**2. நிச்சயத்தன்மை விதி**

- வரி வீதம் அல்லது செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை இல்லாத வகையில் அரசு வரியினை விதிக்க வேண்டும். வண்ணம் உறுதிப்படுத்த வேண்டும். அரசு தன் போக்கிற்கு வரிகளை விதித்தால் அது மக்களின் செலுத்தும் திறன் மற்றும் வேலை செய்யும் திறனையும் பாதிக்கும்.

**3. வசதி விதி**

- வரி வசூலிக்கும் முறை மற்றும் வரி செலுத்தும் காலம் மக்களின் வசதிக்கேற்ப அமைய வேண்டும். வரி செலுத்துவோர்கள் வரியை சிரமமின்றி செலுத்தும் வண்ணம் வசதியான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.


**4. சிக்கன விதி**

- அரசு வரிகளை வசூலிப்பதற்கு பணம் செலவிடுகிறது. உதாரணமாக, வரிகளை வசூலிப்பவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. வசூலிப்பதற்கான செலவு வரிகளை விட அதிகமாக இருந்தால் அவை மோசமான வரிகளாகும். எனவே, ஆடம்ஸ்மித் கருத்துப்படி வசூலிக்கும் செலவுகள் குறைவாக இருக்கும் வரிகளை மட்டுமே அரசு விதிக்க வேண்டும் என்பதாகும்.

**நேர்முக வரி மற்றும் மறைமுக வரி**

**நேர்முக வரி**

- நேர்முக வரி என்பது நபரின் வருமானம் மற்றும் செல்வம் மீது விதிக்கப்பட்டு அரசுக்கு நேரடியாக செலுத்தக் கூடியதாகும். அவ்வரியின் சுமையை பிறருக்கு மாற்ற இயலாது. வரி வளர்வீத தன்மை கொண்டது. ஒரு நபரின் செலுத்தும் திறனுக்கு ஏற்றவாறு வரி விதிக்கப்படும். அதாவது பணக்காரர்களிடமிருந்து அதிகமான வரியும் மற்றும் ஏழை மக்களிடமிருந்து குறைவான வரியும் வசூலிக்கப்படும்.
- நேரடி வரி சார்ந்த திட்டங்கள் மற்றும் கொள்கைகளை இந்திய அரசு, நிதி அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய நேர்முக வரி வாரியத்தால் பரிந்துரை செய்யப்படுகிறது.




**நேர்முக வரிகளின் நன்மைகள்**
**சமத்துவம்**

- நேர்முக வரிகள் வளர்வீதம் கொண்டவை. அதாவது, வரி அடிப்படையைப் பொறுத்து வரிவீதம் மாறும். எடுத்துக்காட்டாக வருமான வரி சமத்துவ விதி அடிப்படையில் அமைந்துள்ளது.

**நிச்சயத்தன்மை**

- நேர்முக வரி நிச்சயத்தன்மை விதியை உறுதி செய்கிறது. உதாரணமாக, வருமான வரி செலுத்துபவர் எங்கு, எப்பொழுது, எவ்வளவு வரியை செலுத்த வேண்டும் என அறிந்துள்ளார்.

**நெகிழும்தன்மை**

- நேர்முக வரிகள் நெகிழும்தன்மை திருப்தி செய்கிறது. வருமான வரியானது வருமானத்தின் நெகிழ்ச்சியைப் பொருத்து அமையும். வருமானம் மட்டம் உயரும் போது, அரசிற்கான வரிவருவாயும் உயரும்.

**சிக்கனம்**

- நேர்முக வரிகளை வசூலிப்பதற்கான செலவு மற்ற வரிகளை ஒப்பிடுகையில் குறைவாகும். ஏனெனில் வரி செலுத்துபவர்கள் நேரடியாக அரசிற்கு வரி செலுத்துகின்றனர்.

**நேர்முக வரிகளின் தீமைகள்**
**பிரபலமின்மை**

- நேர்முக வரி பிரபலமில்லாமல் உள்ளது. மேலும் இது வசதிக்குறைவானதாகவும், நெகிழ்ச்சி குறைவானதாகவும் உள்ளது

**உற்பத்தித்திறன் பாதிக்கப்படுகிறது**

- பல்வேறு பொருளாதார வல்லுனர்கள் கருத்துப்படி நேர்முக வரி உற்பத்தித்திறனை பாதிக்கிறது. குடிமக்கள் அதிக வரித் தொகையை செலுத்த வேண்டியதால், வருமானம் அதிகம் ஈட்ட வேண்டும் என்ற விருப்பம் இல்லாமல் உள்ளனர்.

**வசதிகுறைவு**

- கணக்கு பராமரித்தல் மற்றும் வரி தாக்கல் செய்வதிலும், மொத்தமாக வரி செலுத்துதல் போன்றவற்றிலும் வரி செலுத்துபவருக்கு வசதி குறைவாக உள்ளது.

**வரி ஏய்த்தல்**

- நேர்முக வரியின் சுமை அதிகமாக இருப்பதால் வரி செலுத்துபவர்கள் வரியை ஏய்ப்பதற்கு முயல்கின்றனர். இது கறுப்புப் பணம் உருவாவதற்கு வாய்ப்பாவதால் அது பொருளாதாரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்துகிறது.

**மறைமுக வரி**

- மறைமுக வரி எனப்படுவது பொருட்களையோ அல்லது பணிகளையோ வாங்கும் நபர் மீது விதிக்கப்படுகிற வரியாகும் மேலும் இது அரசுக்கு மறைமுகமாக செலுத்தப்படுகிறது. இவ்வரிச்சுமை எளிதாக மற்றொரு நபர் மீது மாற்ற முடியும். ஏழை அல்லது பணக்காரர் என் யாராக இருந்தாலும் அந்நபர்கள் மீது சமமாக சுமத்தப்படும்.

**பல்வேறு மறைமுக வரிகள் உள்ளன. அவை**

**உற்பத்தி வரி:**

- உற்பத்தயாளர் வரியை செலுத்தினாலும் பளுவை மொத்த அல்லது சில்லறை விற்பனையாளரிடம் மாற்றிவிடுவார்.

**விற்பனை வரி:**

- கடை உரிமையாளர் அல்லது சில்லறை விற்பனையாளர்களால் முதலில் செலுத்தப்பட்டு வரிச்சுமையை பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான விற்பனை வரியுடன் நுகர்வோர்களுக்கு மாற்றப்படுதல் ஆகும்.

**சுங்கத் தீர்வை**

- வெளிநாடுகளிலிருந்து பெறக்கூடிய பொருட்களுக்கு இறக்குமதி தீர்வை செலுத்தப்படும். ஆனால் இதனை இறுதியாக நுகர்வோர்கள் மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மீது மாற்றப்படும்.

**கேளிக்கை வரி**

- திரையரங்கு உரிமையாளர் மீது உள்ள பொறுப்பை திரைப்படம் காண வருபவர்கள் மீத மாற்றுகின்ற வரியாகும்.

**சேவை வரி**

- தொலைபேசி, காப்பீட்டு, உணவு விடுதி போன்ற சேவைகளுக்காக செலுத்தக்கூடிய கட்டணங்களாகும்.

**மறைமுக வரிகளின் நன்மைகள்**

**பரந்து காணப்படுதல்**

- எல்லா நுகர்வோர்களும் அவர்கள் ஏழை அல்லது பணக்காரர்களாக இருந்தாலும் மறைமுக வரிகளை செலுத்த வேண்டும். இதனால்தான் நேர்முகவரிகளை விட மறைமுக வரிகள் அதிக நபர்களை உள்ளடக்கியுள்ளது. எடுத்துக்காட்டாக, இந்தியாவில் 2 சதவீத நபர்கள் மட்டுமே வருமான வரி செலுத்துகிற நிலையில் மறைமுக வரியை அனைவரும் செலுத்துகின்றனர்.

**சமத்துவம்**

- பணக்காரர்களால் பயன்படுத்தப்படக் கூடிய ஆடம்பர பொருட்கள் மீது அதிக வரி சுமத்தப்படுவதால் மறைமுக வரி சமத்துவ விதியின் அடிப்படையில் அமைகிறது.

**சிக்கனத் தன்மை**

- உற்பத்தியாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பதற்கான செலவு குறைவாகிறது. வணிகர்கள் மதிப்புமிக்க வரி வசூலிப்பவர்களாக செயலாற்றுகின்றனர்.

**உடலுக்கு தீங்கான பொருட்களின் நுகர்வை குறைக்கிறது**

- அரசானது உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடிய பொருட்கள் மீது மறைமுக வரியை விதிக்கிறது. எடுத்துக்காட்டாக புகையிலை, மது போன்ற பொருட்கள் மீதான வரி. இது பாவ வரி என அழைக்கப்படுகிறது.

**வசதியானது**

- மறைமுக வரியானது பண்டங்கள் மற்றும் பணிகள் மீது விதிக்கப்படுகிறது. நுகர்வோர் இதனை வாங்கும்போது விலையுடன் சேர்த்து செலுத்திவிடுவதால், வரி செலுத்துவதை உணர்வதில்லை.

**மறைமுக வரியின் தீமைகள்**
**வசூலிக்கும் செலவு அதிகம்**

- நேர்முக வரியை ஒப்பிடும்போது மறைமுக வரியை வசூலிக்க ஆகும் செலவு அதிகமாகும். அரசு பெரும் தொகையை மறைமுக வரி வசூலுக்காக செலவு செய்கிறது.

**நெகிழ்ச்சியற்ற தன்மை**

- நேர்முக வரிகளை ஒப்பிடும் போது மறைமுக வரிகள் குறைவான நெகிழ்ச்சி தன்மை கொண்டதாகும். மறைமுக வரிகள் எப்போதும் சமமான விகிதாச்சார வீதத்தில் அமையும்.

**தேய்வீதம்**

- மறைமுகவரிகள் சில நேரங்களில் நீதியற்ற மற்றும் தேய்வீத தன்மை கொண்டதாகும். வருமான மட்டத்திற்கு அப்பாற்ப்பட்டு ஏழை மற்றும் பணக்காரர்கள் ஆகிய இருவரும் ஒரே மறைமுக வரித் தொகையைச் செலுத்த வேண்டும்.

**உறுதியின்மை**

- மறைமுக வரிகள் உயரும்போது விலை உயர்வதால் பொருட்களுக்கான தேவையை குறைகிறது. ஆகையால் அரசு எதிர்பார்க்கக்கூடிய வருவாய் வசூல் பற்றி உறுதியற்று காணப்படுகிறது. எனவே தான் டால்டன் 2 + 2 என்பது 4 –அல்ல, அது 3 அல்லது அதற்கும் குறைவாக இருக்கும் என மறைமுக வரியைக் குறிப்பிடுகிறார்.

**குடிமை உணர்வின்மை**

- விலையுடன் வரி மறைந்திருப்பதால், நுகர்வோர்கள் வரி செலுத்துவது பற்றி விழிப்புணர்வு பெற்றிருக்கவில்லை.

**பொதுக்கடன்**

- 18 மற்றும் 19ம் நூற்றாண்டுகளில் அரசின் செயல்பாடனது குறைவானதாகும். ஆனால் 20 நூற்றாண்டிலிருந்து அரசிற்கான பொறுப்புகள் அதிகரித்துக்கொண்டே உள்ளது எனவே அரசானது ஏற்கனவே உள்ளது எனவே அரசானது ஏற்கனவே உள்ள பாரம்பரியமான வருவாயுடன் தனிநபர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களிடம் கடன்கள் வாங்குகிறது. வளர்ச்சி குன்றிய நாடுகள், வளர்ச்சித் திட்டங்களுக்காக அதிகமான கடன் பெறுகிறது. சில நாடுகள் இத்தகைய கடன்களினால் கடன் பொறியில் சிக்கியுள்ளது.

**வரைவிலக்கணம்**

- ''கடன் என்பது அரசு கருவூலத்தால் கடன் வழங்கியவர்களுக்கு வட்டியும், அசலும் கொடுப்பதற்கான வட்டியும், அசலும் கொடுக்கப்பதற்கான உத்தரவாதம் ஆகும். நடப்பு நிதி பற்றாக்குறையைச் சரிசெய்வதற்காக திரட்டப்படும் நிதி ஆகும்''
  - பிலிப் E. .டெய்லர்.

- ''பொதுக்கடன் என்பது நிதிக் கருவிகள் வாயிலாக அரசானது தனியார் துறையிலுள்ள தனிநபர்கள் அல்லது நிறுவனங்களிடம் பெறுவதாகும். இதனைக் கொண்டு தனியார் துறையைத் தூண்டி அதன்
- மனிதவளங்கள் மற்றும் உண்மையான வளங்களைப் பெருக்குவதற்கும் மற்றும் அந்த நிதியினைக் கொண்டு வளங்களை வாங்குதல் அல்லது நலத்தை உருவாக்குதல் அல்லது மானியங்களை வழங்குதல் ஆகியவற்றை செய்தலைக் குறிப்பாகும்''
  - கார்ல் எஸ்.ஷோப்

**பொதுக்கடனின் வகைகள்**
**உள்நாட்டு பொதுக்கடன்**

- உள்நாட்டு கடன் என்பது, ஒரு நாட்டிற்குள் குடிமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அரசினால் பெறப்படும் கடனாகும். உள்நாட்டு பொதுக்கடன் என்பது செல்வத்தை மாற்றிக் கொள்வது பற்றியதாகும்.

**உள்நாட்டு பொதுக்கடனின் முக்கிய ஆதாரங்களாவன**

- அரசு பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை தனிநபர்கள் வாங்குதல்.
- அரசிடமிருந்து பத்திரங்களை தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள் பெறுதல்.
- அரசு பத்திரங்களை நிதிசாரா நிறுவனங்களாகிய UTI, LIC,GICபோன்றவைகள் பெறுதல்.
- பண அளிப்பு வாயிலாக அரசிற்கு மைய வங்கி கடன் வழங்குகிறது. அரசின் செலவுகளை சந்திப்பதற்காக மைய வங்கி பணமாகவும் வழங்குகிறது.

**வெளிநாட்டு பொதுக்கடன்**

- பன்னாட்டு நிறுவனம் மற்றும் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் கடன், அயல்நாட்டு கடன் என அழைக்கப்படுகிறது. IMF, உலக வங்கி,IDA, ADB போன்ற அமைப்புகளிடமும், வெளிநாட்டு அரசுகளிடம் கடன் பெறுவது அயல்நாட்டுக் கடன்களுக்கான முக்கிய ஆதாரமாக உள்ளது.'

**வெளிநாட்டுக் கடன் - ஜூன் 2018 – நிலவரப்படி**

| தரவரிசை | நாடுகள் | வெளிநாட்டுக் கடன் (மில்லியன் டாலரில்) | தலா வீத கடன் அளவு (US டாலரில்) | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கடன் சதவீதம் (GDP) |
|---|---|---|---|---|
| 1 | அமெரிக்கா | 21,171,000 | 58,200 | 98 |
| 2 | இங்கிலாந்து | 8,475,956 | 127,000 | 313 |
| 3 | பிரான்சு | 5,689,745 | 87,200 | 213 |
| 4 | ஜெர்மனி | 5,398,267 | 65,600 | 141 |
| 7 | ஜப்பான் | 3,586,817 | 28,200 | 74 |
| 13 | சீனா | 1,710,625, | 1,200 | 14 |
| 21 | ரஷ்யா | 537,458 | 3,700 | 40 |
| 22 | இந்தியா | 529,000 | 380 | 20 |

**பொதுக்கடன் அதிகரிப்பதற்கான காரணங்கள்**

- பின்வரும் துணைத் தலைப்புகளில் பொதுக்கடன் அதிகரிப்பதற்கான காரணங்களைக் காணலாம்

**1. போர் மற்றும் ஆயத்தம்**

- போர் நெருக்கடி தான் அரசின் பொதுக் கடனை அதிகரிப்பதற்கான முக்கிய காரணியாக இருக்கின்றது. இன்றைய நாளில் போருக்கு ஆயத்தம் செய்தல் மற்றும் அணு ஆயுததிட்டங்கள் ஆகியவற்றிற்கு அரசு பெருவாரியான செலவு செய்கிறது. இதனால் கடன் ஏற்படுகிறது.

**2. சமுதாயத் தேவைகள்**

- தற்கால அரசானது நல அரசாக செயல்படுவதால் சமுதாய தேவைகளான பொது சுகாதாரம், தூய்மை, கல்வி, காப்பீடு, போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு போன்றவற்றை மேற்கொள்வதற்கும், இதர குறைந்தபட்ச தேவைகளை மக்களுக்கு செய்கிறது. இதற்கான செலவினை மேற்கொள்ள பொதுக்கடனை பெற வேண்டியுள்ளது.

**3. பொருளாதார முன்னேற்றம் மற்றும் நிதி பற்றாக்குறை**

- அரசு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை மேற்கொள்கிறது. இரயில்வே கட்டுமானம், மின்சாரத் திட்டங்கள், நீர்பாசனத் திட்டங்கள், கனரக தொழிற்சாலைகள் அமைத்தல் போன்றவற்றிற்கு தேவையான வளங்களை பொதுக்கடன் வாயிலாக அர பெருகிறது. ஆதிகளவில் பொதுச் செலவின் காரணமாக அரசு எப்பொழுதும் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தை எதிர்கொள்கிறது. இந்த பற்றாக்குறையை கடன்களால் மட்டுமே சரிசெய்ய முடியும்.

**4.வேலை வாய்ப்பு**

- தற்காலத்தில் அரசு வேலையின்மை பிரச்சனையை எதிர்கொள்கிறது. பொதுச் செலவின் வாயிலாக இது போன்ற சிக்கல்களை தீர்ப்பது அரசின் கடமையாக உள்ளது. இதற்காக அரசு

பெரிய தொகையினை செலவு செய்ய வேண்டியுள்ளது. இதனை பொதுக்கடன் வாயிலாகவே மேற்கொள்கிறது.

**5. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தல்**

- பழக்கத்தில் உள்ள பணத்தை அரசு திரும்ப பெற பொதுக்கடன் வழிமுறையை கையாளுகிறது. இதனால் விலை ஏற்றத்தைத் தடுக்கிறது.

**6. மந்தத்தை தடுத்தல்**

- மந்த காலங்களில் தனியார் முதலீடு குறைவாக இருக்கும். ஆதனை ஈடுகட்ட அரசானது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலங்களின் மூலம் கடன் பெறுவதை மேற்கொள்ளும்.

**பொதுக்கடனை திரும்ப செலுத்தும் முறைகள்**

- பொதுக்கடன் தீர்வு என்பது பொதுக்கடனை திரும்பச் செலுத்தும் வழிமுறையைக் குறிப்பதாகும். அரசு விற்பனை செய்துள்ள பத்திரங்களை பொதுமக்கள் அதன் முதிர்வு காலத்தில் பத்திரங்களை ஒப்படைத்து அதற்கான தொகையை வட்டியுடன் பெறுவர்.
- பொதுக்கடன் பின்வரும் வழிகளில் கடன் தீர்க்கப்படுகிறது.

**1. மூழ்கும் நிதி**

- கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை 'மூழ்கும் நிதி' என்பர். அரசு ஒவ்வொரு வருடமும் ஒரு குறிப்பிட்ட நிலையான தெகையை செலுத்துகிறது. கடன் முதிர்ச்சியடையும் போது வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருகிவிடும். இந்த முறை முதன்முதலில் இங்கிலாந்தைச் சேர்ந்த வால்போல் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.

**2. கடனை மாற்றுதல்**

- பொதுக்கடன் திரும்பச் செலுத்தப்படும் மற்றொரு முறை கடன் மாற்றுதல் ஆகும். இம்முறையில் பழைய கடனை புதிய கடனாக மாற்றப்படுகிறது. இம்முறையின் கீழ் அதிக வட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது. டால்டன் கடன் மாற்றுதல் கடன் பளுவை குறைக்கிறது என்கிறார்.

**3. வரவு செலவு திட்ட உபரி**

- உபரி வரவு செலவு திட்டத்தை அரசு தாக்கல் செய்யும்போது அந்த உபரியை கடனைத் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும். பொது வருவாய், பொதுச் செலவை விட அதிகரிக்கும் போது உபரி ஏற்படுகிறது. இது எப்போதாவது தான் பயன்படுத்தப்படுகிறது.

**4. பகுதியாகச் செலுத்தல்**

- இந்த முறையின் கீழ் அரசு பொதுக்கடனை சம வருடாந்திர தவணைகளாக செலுத்துகிறது. இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக சுலபமான முறையாகும்.

**5. கடன் மறுப்பு**

- அது அரசு கடன் செலுத்தும் சுமையிலிருந்து வெளி வருவதற்கான எளிமையான முறையாகும். இதில் அரசானது ஏற்கனவே செலுத்துவதாக உறுதியளித்த கடமையை மறுக்கும். இது கடனை திரும்ப செலுத்துவதாகாது, அதனை அழிப்பதாகும். சாதாரண சூழ்நிலைகளில் கடனை மறுக்க இயலாது ஏனெனில் அது அரசின் நாணயத்தன்மையை பாதித்து விடும்.

**6. வட்டி வீதத்தை குறைத்தல்**

- நிதிச் சிக்கல் ஏற்படும் நேரங்களில் கட்டாயமாக வட்டியை குறைத்து கடனை செலுத்துவதும் ஒரு வகையான கடன் தீர்வு முறையாகும்.

**7. மூலதனத் தீர்வை**

- ஒரு தனிநபர் அல்லது நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அல்லது வளர்ச்சி போக்கில் உள்ள மூலதன சொத்துக்கள் பெற்றிருப்பின் அதன் மீது அரசு வரி விதித்து, அதனை போர்க்கால கடனை செலுத்துவதற்கு பயன்படுத்துவதாகும். ஆனால் இது சர்ச்சைக்குரிய கடன் தீர்வை முறையாகும்.

**வரவு செலவு திட்டம்**

- 'பட்ஜெட்' என்ற பதம் "பௌஜெட்" என்ற பிரெஞ்ச் வார்த்தையிலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருளாவது 'சிறிய தோலட பை' என்பதாகும். வரவு செலவு திட்டம் என்பது எதிர்நோக்குகிற நிதி ஆண்டிற்குரிய அரசின் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவு ஆகியவற்றைக் காட்டும் வருடாந்திர நிதி அறிக்கை ஆகும்.

**வரைவிலக்கணங்கள்**

- "முதல் நிலையிலான ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது வருவாய் மற்றும் செலவு திட்டத்தை உள்ளடக்கிய ஆவணமாகும்"

  \- ரேனி ஸ்டோன்
- "வரவு செலவுத் திட்டமானது குறிப்பிட்ட காலத்தின் நிதி ஏற்பாடுகளை வெளிப்படுத்துகிறது. இது, வழக்கமான ஒப்புதலுடன் சட்டமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

  \- பாஸ்டபிள்

**மத்திய மாநில வரவு செலவு திட்டம்**

இந்தியா ஓர் கூட்டாரசு பொருளாதாரமாக விளங்குவதால் அரசின் வரவு செலவு திட்டம் அரசின் இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி மத்திய அரசு வருடாந்திர நிதி அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும். ஷரத்து 112ன் படி மத்திய வரவு செலவு திட்டம் பாராளுமன்றத்திலும், ஷரத்து 202ன் படி ஒவ்வொரு மாநில அரசம் சட்டமன்றத்திலும் தாக்கல் செய்ய வேண்டும.

**வரவு செலவு திட்டத்தின் வகைகள்**


- வருவாய் மற்றுமும் மூலதன வரவு செலவு திட்டம்.
- வருவாய் கணக்கு மற்றும் பிற கணக்குகளின் மீதான செலவு அடிப்படையில் வரவு செலவு திட்டம் இரு வகைகளில் சமர்பிக்கப்படுகிறது.


**வருவாய் வரவு செலவுதிட்டம்**

- இது வருவாய் வரவுகள் மற்றும் வருவாய் செலவினங்களைக் கொண்டது. இது வரி வருவாய் மற்றும் வரி சாரா வருவாய் என வகைப்படுத்தப்படுகிறது. வருவாய் செலவினங்களை திட்டம் சார்ந்த செலவினம் மற்றும் திட்டம் சாரா செலவினங்களாக வகைப்படுத்தபடுகிறது.

**மூலதன பட்ஜெட்**

- அது மூலதன வரவுகள் மற்றும் மூலதனச் செலவுகளை உள்ளடக்கியதாகும். மூலதன வரவின் முக்கிய ஆதாரங்களாக கடன்கள், முன்பணம் போன்றவை உள்ள. மூலதன செலவினத்தை திட்டம் சார் செலவினம் மற்றும் திட்டம் சாரா மூலதனச் செலவு என வகைப்படுத்தப்படுகிறது.






**துணை வரவு செலவுத் திட்டம்**

- போர்க்காலம் மற்றும் சுனாமி, வெள்ளம் போன்ற இயற்கை சீற்றங்களின் போது செலவுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போதுமானதாக இருப்பதில்லை. இந்த எதிர்பாரத சூழ்நிலையை சமாளிப்பதற்காக அரசினால் துணை வரவு செலவு திட்டம் செய்யப்படும்.

**நிதிக்கு வாக்கெடுப்பு**

- வரவு செலவுத் திட்டம்: இந்திய அரசியலமைப்பு ஷரத்து 116ன் படி, பட்ஜெட் வருட மத்தியில் சமர்ப்பிக்கப்படும் இதற்கு அரசியல் காரணம் இருக்கிறது. இருக்கக்கூடிய அரசானது தேர்தல் காரணமாக அந்த வருடம் முழுவதும் தொடர்ந்தோ தொடராமலோ இருக்கலாம். இதனால் அந்த அரசு தாக்கல் செய்யும் வரவு செலவுத்திட்டம "நொண்டி வாத்து வரவு செலவுத் திட்டம்" என அழைக்கப்படுகிறது. இது நிதிக்கு வாக்கெடுப்பு வரவு செலவுத் திட்டம் எனவும் அழைக்கப்படுகிறது.

- சிறப்பு நிகழ்வாக நிதிக்கு வாக்கெடுக்கும் வரவு செலவுத் திட்டமான அவசியமான இனங்களுக்கு பாராளுமன்ற ஒப்புதல் பெறும்வரை செலவு மேற்கொள் அனுமதி உள்ளது. வரவு செலவுத் திட்டம் பாராளுமன்றத்தில் ஒப்புதல் பெறும் வரை தொகுப்பு நிதியிலிருந்து பணம் பெற்றுக்கொள்ள சட்டரீதியான அனுமதி உள்ளதை வாக்கெடுக்கும் வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இத்தகைய அனுமதி அதிகபட்சம் இரண்டு மாதங்களுக்கு மட்டும் வழங்கப்படுகிறது.

**பூஜ்ய வரவு செலவுத் திட்டம்**

- இந்திய அரசு 1987-88ல் பூஜ்ய வரவு செலவுத்திட்டத்தை தாக்கல் செய்தது. இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும் புதிய இனமாக கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும் புதிய இனமாக கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிதாக செலவு மதிப்பீட்டை கொண்டுள்ளது. சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகளை சமூக மதிப்பீட்டை கொண்டுள்ளது. சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகளை சமூக பொருளாதார நோக்கங்களின் பார்வையில் மறு ஆய்வு செய்யப்பட்டு நியாயப்படுத்தும்.

**செயல்திறன் வரவு செலவுத்திட்டம்**

- எந்த ஒரு வரவு செலவு திட்டத்தின் வெளியீட்டின் அடிப்படையில் வரவு செலவுதிட்டம் அமைந்தால் அது செயல்திறன் வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படுகிறது. இது உலகில்

முதன் முதலில் அமெரிக்காவில் அறிமுகப்படுத்தப்பட்டது. சர்உப்பர் தலைமையில் அமெரிக்காவில் 1949-ல் நிர்வாக சீர்திருத்தக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவின் பரிந்துரையின்படி செயல்திறன் வரவு செலவுத் திட்டம் அமெரிக்காவில் அமைக்கப்பட்டது. மக்களின் நலனுக்காக இந்த வரவு செலவுத் திட்டத்தில் ''என்ன செய்தோம்'' ''எவ்வளவு செய்தோம்'' என்பதை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும். இந்தியாவில் செயல்திறன் வரவு செலவுத் திட்டத்தை ''சாதனைத் திட்டம்'' என அழைக்கப்படுகிறது.

**சமநிலை மற்றும் சமனற்ற வரவு செலவுத் திட்டம்**
**சம நிலை செலவுத் திட்டம்**

- ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதர்பார்க்கிற வருவாயும் திட்டமிடப்பட்டுள்ள செலவும் சமமாக இருந்தால் அது சமநிலை வரவு செலவுத் திட்டம் எனப்படும்.
- அரசின் திட்டமிட்ட வருவாய் = அரசின் எதிர்நோக்கும் செலவுகள்

| வரவு செலவு திட்டத்தின் வகைகள் | | |
|---|---|---|
| **பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்** | **சுமமான வரவு செலவுத் திட்டம்** | **உபரி வரவு செலவுத்திட்டம்** |
| செலவு > வருவாய் | செலவு = வருவாய் | செலவு < வருவாய் |

**சமநிலையில்லா வரவு செலவுத் திட்டம்**

- அரசு எதிர்பார்க்கிற வருவாயும் திட்டமிடப்பட்டுள்ள செலவும் சமமாக இல்லாது இருந்தால் அது சமநிலையில்லா வரவு செலவுத் திட்டமாகும்.

**சமநிலையற்ற வரவு செலவுத் திட்டம் இருவகைப்படும்**

1. உபரி வரவு செலவுத் திட்டம்
2. பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்.

**1.உபரி வரவு செலவுத் திட்டம்**

- ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாய் திட்டமிடப்பட்டுள்ள செலவைவிட அதிகமாக இருந்தால் அது உபரி வரவு செலவுத் திட்டம் எனப்படும்.
- உபரி வரவு செலவுத் திட்டம் = அரசு எதிர்பார்க்கிற வருவாய் > திட்டமிடப்பட்டுள்ள செலவு

**2.பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம்**

- ஒரு குறிப்பிட்ட ஆண்டில் அரசு எதிர்பார்க்கிற வருவாய் திட்டமிடப்பட்டுள்ள செலவைவிட குறைவாக இருந்தால் அது பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் எனப்படும்.
- பற்றாக்குறை வரவு செலவுத் திட்டம் = அரசு எதிர்பார்க்கிற வருவாய் < திட்டமிடப்பட்டுள்ள செலவு

**வரவு செலவு திட்ட செயல்முறைகள்**

- வரவு செலவு திட்ட செயல்முறைகள் என்பது வரவு செலவு திட்டத்தை தயாரிப்பது, தாக்கல் செய்வது மற்றும் செயல்படுத்துவது ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
-

**வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்**

- மைய அரசு வரவு செலவு திட்டத்தை மத்திய நிதி அமைச்சகம் தயாரிக்கிறது. மாநில அரசு வரவு செலவுத் திட்டத்தை மாநில நிதித்துறை தயாரிக்கும் போது, கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றை கவனத்தில் கொள்ளப்படுகிறது.
- பேரியல் பொருளாதார கொள்கை இலக்குகளை திட்ட காலத்திற்குள் அடைதல்.
- வரவு செலவுத் திட்டத்தின் யுக்திகள்.
- பல்வேறு திட்டங்களுக்கான நிதித் தேவைகள்.

- வருவாய் செலவினத்தின் மதிப்பீடு (பாதுகாப்பு செலவினம், மானியம், கடனுக்கான வட்டி செலுத்தல்கள் போன்றவை).
- மூலதன செலவினத்தின் மதிப்பீடு (இரயில்வே, சாலை, பாசன வளர்ச்சி போன்றவற்றிற்காக).
- வரி மற்றும் வரியற்ற வருவாய் வரவுகளின் மதிப்பீடு.
- கடன்களின் திரும்ப செலுத்தல்கள், பொதுத்துறையின் முதலீட்டு குறைப்பு, அங்காடி பெறுதல்கள் போன்ற மூலதன வரவுகளின் மதிப்பீடு.
- வருவாய் வரவுகளுக்கும் வருவாய் செலவுகளுக்கும் இடையேயான இடைவெளியின் மதிப்பீடு.
- நிதி பற்றாக்குறை, முதன்மை பற்றாக்குறை மற்றும் வருவாய் பற்றாக்குறையின் மதிப்பீடு.

**வரவு செலவுத் திட்டம் தயாரிக்கும் வழிமுறைகள்**

| |
|---|
| நிதி அமைச்சகம் வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை தயார் செய்யும் |
| பல்வேறு துறைகள் வருமானம் மற்றும் செலவு மதிப்பீடுகளை நிதி அமைச்சகத்திற்கு அனுப்பும் |
| வரவு செலவுத் திட்டம் தயாராகும் |
| மந்திரி சபை ஓப்புதலுக்கு, நிதி அமைச்சர் தாக்கல் செய்வார். |
| பாராளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்வதற்கு தயார் நிலையில் இருக்கும் |

**பட்ஜெட் தாக்கல் செய்தல்**

- நடுவன் அரசின் அங்கத்தினராக, நிதி அமைச்சர் மைய அரசின் வரவு செலவுத் திட்டத்தை புதிய நிதி ஆண்டு துவங்கும் முதல் நாள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்வார். மாநில அரசுகளின் நிதி அமைச்சர்களும் அவ்வாறே அங்காங்கே செய்வார்கள்.

- இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி, பண மசோதா (Money Bill) கீழ்சபையில் தொடங்கப்படும். மைய அரசில், எல்லா பண மசோதாக்களும் முதலில் மக்களவையிலும், மாநிலங்களில் சட்டப்பேரவையிலும் தாக்கல் செய்யப்படும். வரவு செலவுத் திட்டத்தில் பல்வேறு வரி சார்ந்த கருத்துக்களும் இடம் பெற்றிருக்கும். நிதி மசோதா நிறைவேற்றப்பட்ட பின்னர், வாக்களிப்பிற்குப்பின் சட்ட வடிவம் கொடுக்கப்படும். இதனடிப்படையில் செலவுகளை அங்கிகரிக்கப்படும். இந்த வழிமுறையில் தான் இந்தியாவில் வரவு செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படுகிறது.

**வரவு செலவுத் திட்டத்தை செயல்படுத்துதல்**

- வரவு செலவுத் திட்டத்தை அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்துகிறது. வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட பணத்தை பயனுள்ள வகையில் பயன்படுத்துவதுதான் மிக முக்கியமானதாகும்.
- வரவு செலவு திட்டத்தில் பாராளுமன்றக் கட்டுப்பாடுகள்.
- இந்தியாவில் அரசுக் கணக்குகள் கீழ்க்கண்ட மூன்று முறைகளில் பராமரிக்கப்படுகிறது.
  - (i) தொகுப்பு நிதி
  - (ii) அவசர நிதி
  - (iii) பொதுக் கணக்கு
- வரவு செலவுத் திட்டத்தை கட்டுப்படுத்தும் பாராளுமன்ற குழுக்கள்
  - (i) பொதுக் கணக்கு குழு

(ii) மதிப்பீட்டுக் குழு

- இந்தக் குழுக்கள் எந்த அமைச்சகமும் அல்லது துறையும் அனுமதிக்கப்பட்ட தொகையைவிட அதிகமாக செலவிடாமல் தொடர்ந்து கண்காணிக்கும்.

**வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைகள்**

- வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை என்பது வரவு செலவு திட்டத்தில் உள்ள வருவாய் செலவைவிட குறைவாக இருப்பதாகும். இந்த நிலையை அரசு பற்றாக்குறை எனவும் அழைக்கப்படும்.
- இந்திய அரசின் வரவு செலவுத் திட்டத்தில் நான்கு வகையான பற்றாக்குறைகள் உள்ளன.
    1. வருவாய் பற்றாக்குறை
    2. வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை
    3. நிதிப் பற்றாக்குறை
    4. முதன்மைப் பற்றாக்குறை

**வருவாய் பற்றாக்குறை**

- ஆரசின் வருவாய் செலவினம், வருவாய் வரவைவிட அதிகமாக இருந்தால் அது வருவாய் பற்றாக்குறை எனப்படும. இதில் மூலதன வரவு மற்றும் மூலதனச் செலவை கணக்கில் கொள்ளப்பட மாட்டாது. வருவாய் பற்றாக்குறை என்பது அரசின் அன்றாட பணிகளை நடத்துவதற்கு தேவையானதை விட குறைவாக உள்ளதைக் காட்டுவதாகும்.
- வருவாய் பற்றாக்குறை (RD) = மொத்தவருவாய் செலவினம் (RE) – மொத்த வருவாய் வரவுகள் (RR)
- RE-RR>0 ஆக இருக்கும்

**வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை**

- வருவாய் மற்றும் மூலதனக் கணக்குகளின் மொத்த வரவுக்கும் செலவுக்கும் உள்ள இடைவெளியே வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையாகும்.
- வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை = மொத்தச் செலவு – மொத்த வரவு

**நிதி பற்றாக்குறை**

- நிதிப்பற்றாக்குறை = வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை – அரசின் அங்காடிக் கடன்களும் ஏனைய பொறுப்புக்களும்
- எனவே நிதிப் பற்றாக்குறை என்பது வரவு செலவு பற்றாக்குறையைவிட அதிகமானதாகும்.

**முதன்மைப் பற்றாக்குறை**

- முதன்மைப் பற்றாக்குறையானது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும். இது அரசின் உண்மையான சுமையை காட்டும். மேலும் இதில் முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியை கணக்கில் கொள்ளாது. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.
- எனவே நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையைவிட அதிகமாக இருக்கும்.
- முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) – வட்டி செலுத்துதல் (IP)

**கூட்டமைப்பு நிதி**

- கூட்டாட்சி நிதி என்பது மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடையே வருவாய் வளங்களை ஒதுக்கீடு குறித்த தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கும். இது மத்திய மாநில அரசுகள் தங்களுக்கென ஒதுக்கபட்ட பணியினை திறமையாக செய்ய வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படும்.

* அதிகாரங்கள் பிரிவு: நமது அரசியலமைப்பில் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. எனவே அதன் வரம்புகளை மீறுவதும், மற்றவர்களின் செயல்பாடுகளை ஆக்கிரமிப்பதை தவிர்த்து அவரவர் சொந்த பொறுப்புகளில் செயல்படுகிறது. அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையில் மூன்று பட்டியல்கள் உள்ளன. அவை: மத்திய பட்டியல், மாநில பட்டியல் மற்றும் இணைப்புப் பட்டியல்.
* மத்திய பட்டியலில் பாதுகாப்பு, ரயில்வே தபால் மற்றும் தந்தி முதலிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 100 இனங்களைக் கொண்டுள்ளது.
* மாநில பட்டியலில் பொது நலன், காவல் போன்ற 61 இனங்களைக் கொண்டுள்ளது.
* இணைப்புப் பட்டியலில் 52-இனங்கள் மத்திய மற்றும் மாநிலங்களுக்கு பொதுவாக உள்ளது. இதில் மின்சாரம், தொழிற் சங்கம், பொருளாதார மற்றும் சமூகத் திட்டங்கள் போன்றவை உள்ளடங்கும்.

**மத்திய, மாநில அரசின் பணபங்களிக்கும் உறவு வருமான வழிகள்**
**மைய அரசின் வருவாய் மூலங்கள்**

* மைய அரசின் வரி மற்றும் வரியில்லா வருமான வழிகள் பட்டியலிடப்பட்டுள்ளன. அவற்றில் மிக முக்கியமானவை.

1. தொழில் நிறுவனங்கள் மீதான வரி
2. பணம், நாணயங்கள் மற்றும் அந்நியச் செலவாணி
4. சுங்க வரி ஏற்றுமதி வரி உட்பட
5. புகையிலை மற்றும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் ஏனைய பொருட்களுக்கான கலால் வரி.
6. வேளாண்மை நிலங்கள் தவிர்த்த பண்ணை வரி
7. நீதிமன்றங்கள் விதிக்காக மத்திய பட்டியலில் உள்ள இதர கட்டணங்கள்.
8. அயல்நாட்டு கடன்கள்.
9. இந்திய அரசால் அல்லது மாநிலங்களால் அமைக்கப்பட்ட லாட்டரி சீட்டுகள்.
10. தபால் துறையின் சேமிப்பு வங்கி.
11. தொலை தொடர்பு துறையின் வருவாய்கள்
12. மத்திய அரசுக்கு சொந்தமான சொத்துக்கள்.
13. மத்திய அரசின் பொதுக்கடன்
14. இரயில்வே
15. மாற்றுச் சீட்டுகள், காசோலைகள் மற்றும் உறுதிமொழி பத்திரங்கள் மீதான வில்லைக் கட்டணம்.
16. இந்திய ரிசர்வ் வங்கி
17. வருமான வரி (வேளாண் வருவாய் தவிர்த்து)
18. சொத்துக்களின் மூலதன மதிப்பில் விதிக்கப்படும் வரி (தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் விவசாய நிலம் தவிர)
19. பங்குச் சந்தை மற்றும் எதிர்கால சந்தை பரிவர்த்தனைகளில் முத்திரை வரிகளை தவிர வேறு வரி.
20. செய்திதாள் மீதான வரி (அதில் வெளியிடும் விளம்பரம் உட்பட)
21. இரயில், கடல் வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்குகள் மீதான வரி.

## II. மாநில வளங்கள்

1. தல வரி.
2. வேளாண் நிலங்கள் மீதான வரி.
22. மது மற்றும் போதைப் பொருட்கள் மீதான கலால் வரி
23. பண்ணை வரி (விவசாய நிலங்கள்).
24. நீதிமன்றங்கள் விதிக்காக மாநில பட்டியலில் உள்ள இதர கட்டணங்கள்.
25. நில வருவாய்
26. மத்தியப் பட்டியலில் இல்லாத ஆவணங்களுக்கான வில்லைக் கட்டணம்.
27. வேளாண் வருமான வரி
28. நிலம் மற்றும் கட்டிடங்கள் மீதான வரி
29. கனிம வளங்கள் எடுப்பதற்கான உரிம வரி
30. மின்சார நுகர்வு மற்றும் விற்பனைக்கான வரி

31. உள்ளூர் பகுதியில் நுகர்வு மற்றும் விற்பனை பொருட்களுக்கான நுழைவு வரி.
32. செய்தித்தாள் தவிர்த்த இதர பொருட்கள் மீதான விற்பனை வரி
33. செய்தித்தாள் தவிர்த்த இதர விளம்பரங்கள் மீதான வரி.
34. சாலை மற்றும் நீர்வழி மார்க்கமாக எடுத்துச் செல்லப்டும் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான வரி
35. வாகன வரி.
36. விலங்குகள் மற்றும் படகுகள் மீதான வரி.
37. வியாபாரம் மற்றும் தொழிலாளர்கள் மீதான தொழில் வரி.
38. ெபழுதுபோக்குகள் மற்றும் சூதாட்டங்கள் மீதான வரி.
39. சாலை சுங்க கட்டணம்.

### III. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்களுக்கு ஒதுக்கக்கூடிய வளங்கள் (சரத்து 269-ன் படி)

1. விவசாய நிலம் தவிர்த்த இதர சொத்துகள் மீதான வரி
2. பண்ணை வரி (வேளாண்மை நிலம் தவிர்த்த)
40. இரயில்வே கட்டணங்கள் மற்றும் சரக்கு கட்டணங்கள்.
41. பங்குச் சந்தை மற்றும் எதிர்கால சந்தை பரிவர்த்தனைகளில் முத்திரை வரிகளை தவிர வேறு வரி.
42. செய்திதாள் மீதான வரி (அதில் வெளியிடும் விளம்பரம் உட்பட)
43. இரயில், கடல் வழி மற்றும் ஆகாய மார்க்கமாக செல்லும் பயணிகள் மற்றும் சரக்குகள் மீதான வரி.
44. மாநிலங்களுக்கிடையேயான பண்டங்கள் விற்பனை மற்றும் வாங்குதல் மீதான வரி (செய்திதாள் தவிர)

### IV மத்திய அரசால் விதிக்கப்பட்டு, ஆனால் மாநில அரசு வசூலிப்பது மற்றும் பயன்படுத்துவது (ஷரத்து 268)

- வில்லைகட்டணம் மற்றும் சுங்கவரி மருத்துவ மற்றும் கழிவரை மீதான வரி (மத்திய பட்டியலில் குறிப்பிட்டுள்ளது) இந்திய அரசு விதிக்கும. ஆனால்
    (i) யூனியன் பிரதேசங்களில் இந்திய அரசு வசூலிக்கும்.
    (ii) மற்ற வகையில், மாநிலங்களே அவைகளை விதிக்கும்.

### V. மத்திய அரசால் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு பகிர்ந்தளிக்கக்கூடிய வரிகள் (சரத்து 270 மற்றும் 272-ன் படி)

1. வேளாண்மை வருவாய் தவிர்த்த இதர வருமான வரி வருவாய்.
2. இந்திய அரசின் மத்தியப் பட்டியலில் உள்ள மத்திய கலால் வரி (மருத்துவ மற்றும் கழிவறை மீதான வரி தவிர்த்த)

- வருமான வரியில் நிறுவனங்கள் மீதான வரி உள்ளடக்கப்படவில்லை.
- வருமான வரி மாநகராட்சி வரியை உள்ளடக்கியது அல்ல. நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வருமான வரி மத்திய மற்றும் மாநிலங்களிடையே பகிர்ந்தளிக்கப்படுகிறது.

**கூட்டரசு நிதியின் கொள்கைகள்**
**கூட்டரசு நிதியில் கீழ்க்காணும் முக்கிய கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன.**

1. சுதந்திரம்
2. சமத்துவம்
3. ஒரே மாதிரியான தன்மை
4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்
5. நிதி வசதி
6. ஒருங்கிணைத்தல் மற்றும் ஒன்றுபடுதல்
7. செயல்திறன்
8. நிர்வாகச் சிக்கனம்
9. பொறுப்பேற்பு

**1. சுதந்திரம்**

- கூட்டரசு நிதி முறையின் கீழ், ஒவ்வொரு அரசம் தன்னுடைய நிதியில் தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும். அதன் பொருளாவது ஒவ்வொரு அரசம் வருவாய் ஆதாரங்கள், வரி விதிப்பதற்கான அதிகாரம், பணத்தை கடன் வாங்குவது மற்றும் செலவினை சமாளிப்பது போன்றவை பற்றி தன்னாட்சி பெற்றிருக்க வேண்டும்.

**2. சமத்துவம்**

- சமத்துவ நீதியின் அடிப்படையில், மாநிலங்கள் நியாயமான வருவாய் பங்கினை பெறும் வண்ணம் வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

**3. ஒரே மாதிரியான தன்மை**

- கூட்டரசு முறையில், ஒவ்வொரு மாநிலமும் கூட்டாட்சி நிதிக்கு சம வரி செலுத்தல்களை செய்ய வேண்டும். ஆனால் வரி செலுத்தும் திறன் ஒவ்வொரு பகுதிக்கும் சமமாக இல்லாததால் இந்த கொள்கையை பின்பற்றப்பட இயலாது.

**4. போதுமான வளங்களைப் பெற்றிருத்தல்**

- போதுமான வளங்களைப் பெற்றிருத்தல் கொள்கை என்பது மத்திய மற்றும் மாநில அரசுகள், அவற்றின் பணிகளை திறம்பட மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் போதுமான அளவில் வளங்களைப் பெற்றிருக்க வேண்டும். போதுமான வளம் என்பது தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவையைக் கொண்டு குறிப்பிடுகிறது. இவை அதிகரித்து வரும் தேவையையும் எதிர்பாராத செலவுகளான போர் மற்றும் வெள்ளம் ஏற்படும் சூழ்நிலைகளை சமாளிக்க நெகிழ்ச்சியுள்ளதாக இருக்க வேண்டும்.

**5. நிதி வசதி**

- கூட்டரசு நிதி முறையில், மத்திய மற்றும் மாநில அரசுகள் புதிய வரி ஆதாரங்களை தங்களது நிதி தேவைக்கேற்றவாறு பெருக்கி கொள்ள முடியும். சுருக்கமாக கூறின், அரசின் பெருகிவரும் பொறுப்புகளுக்கேற்றவாறு வளங்களை வளர்த்து கொள்ள வேண்டும்.

**6. ஒருங்கிணைப்பு மற்றும் ஒன்றுபடுதல்**

- அனைத்து நிதிமுறைகளும் முழுவதும் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும். நாட்டின் பல்வேறு அடுக்குகளுக்கிடையே உள்ள நிதி முறைகளில் ஒருங்கிணைப்பு அவசியமாகிறது. அப்பொழுதுதான் கூட்டரசு முறை பிழைக்கும் இவை நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சியை முன்னேற்றுவதற்கு உதவும்.

**7. செயல்திறன்**

- நிதிமுறைகளை ஒன்றாக ஒருங்கிணைத்து மற்றும் திறமையான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். ஏய்ப்பு மற்றும் மோசடிக்கான வாய்ப்புகள் இருக்கக் கூடாது. ஓர் ஆண்டில் ஒரு முறைக்கு மேல் ஒருவரும் வரி விதிப்பிற்குட்படுத்தக் கூடாது இரட்டைவரி முறை கூடாது.

**8. நிர்வாகச் சிக்கனம்**

- எந்த ஒரு கூட்டரசு முறைக்கும் சிக்கனம் என்பது முக்கிய பண்பாக உள்ளது. வசூலிக்கும் செலவு குறைவாக இருப்பதோடு அதிக வருவாய் பெற்று அரசின் பிற துறைகளுக்கு செலவிடுவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.

**9. பொறுப்புணர்வு**

- நிதிசார் முடிவுகளுக்கு ஒவ்வொரு அரசம் பொறுப்பேற்க வேண்டும். அதாவது மத்திய அரசு பாராளுமன்றத்திற்கும், மாநில அரசு சட்டசபைக்கும் பொறுப்பேற்க வேண்டும்.

**நிதிக்குழுவின் வரலாறு**

| நிதிக்குழு | ஏற்படுத்தப்பட்ட ஆண்டு | தலைவர் | செயல்படும் காலம் |
|---|---|---|---|
| முதலாவது | 1951 | K.C. நியோகி | 1952-57 |
| இரண்டாவது | 1956 | K. சந்தானம் | 1957-62 |


| | | | |
|---|---|---|---|
| மூன்றாவது | 1960 | A.K. சந்தா | 1962-66 |
| நான்காவது | 1964 | P.V. ராஜ்மன்னார் | 1966-69 |
| ஐந்தாவது | 1968 | மகாவீர் தியாகி | 1969-74 |
| ஆறாவது | 1972 | K. பிராமனந்த ரெட்டி | 1974-79 |
| ஏழாவது | 1977 | J.M. சாலட் | 1979-84 |
| எட்டாவது | 1983 | Y.B. சவான் | 1984-89 |
| ஒன்பதாவது | 1987 | N.K.P சால்வே | 1989-95 |
| பத்தாவது | 1992 | K.C. பந்த் | 1995-2000 |
| பதினொன்று | 1998 | A.M. குஸ்ரோ | 2000-05 |
| பன்னிரெண்டு | 2002 | C. ரங்கராஜன் | 2005-10 |
| பதிமூன்று | 2007 | Dr. வஜய் கேல்கார் | 2010-15 |
| பதிநான்கு | 2013 | Dr. Y.V. ரெட்டி | 2015-20 |
| புதினைந்து | 2017 | N.K. சிங் | 2020-25 |

- இந்திய அரசியலமைப்பு ஷரத்து 280-ன் படி நிதிக்குழு பகுதி சட்டபூர்வ அமைப்பாகும். இது 1951-ம் ஆண்டு மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே நிதி உறவை வயைறுப்பதற்கு அமைக்கப்பட்டது.
- நிதிக்குழு மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான சமநிலையினை்மையக் குறைப்பதற்கும் (செங்குத்து சமநிலையின்மை) மற்றும் மாநிவங்களுக்கிடையேயான சமமின்மையைக் குறைப்பதற்கும் (படுகிடை சமநிலையின்மை) முயல்கிறது. இது உள்ளுணர்வினை ஊக்குவிக்கிறது.
- நிதிக்குழு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அமைக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே அது அமைக்கப்படுகிறது. இது ஒரு தற்காலிக அமைப்பாகும்.
- 14வது நிதிக்குழு 2013-ல் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் ஏப்ரல்1, 2015 முதல் மார்ச் 2020 வரை செல்லத்தக்கதாகும்.
- 15-வது நிதிக்குழு நவம்பர் 2017-ல் அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகள் ஏப்ரல் 1, 2020 முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

**இந்திய நிதிக்குழுவின் பணிகள்**

- ஷரத்து 280(3) நிதிக்குழுவின் பணிகள் பற்றி கூறுகிறது. இச்ஷரத்தின்படி இக்குழு குடியரசுத் தலைவருக்கு பின்வருவனவற்றை பரிந்துரை செய்கிறது.
  1. மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையே நிகரவரி வருவாய்களை ஒதுக்கீடு செய்து, மாநிலங்களுக்கு அவற்றிற்குரிய பங்கை பகிர்ந்தளித்தல்.
  2. மத்திய அரசு மாநிலத்திற்கு வழங்கவுள்ள மானிய அளவு பற்றியும் (ஷரத்து 275 (1)) மற்றும் அம்மானியம் பெறுவதற்கு மாநில அரசின் தகுதி குறித்து கொள்கைகளை உறுதி செய்தல்.

**வரி எவ்வாறு பிரிக்கப்படுகிறது**



- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு – 280 ன் கீன் நிதிக்குழு 5 ஆண்டுக்கு ஒருமுறை ஏற்படுத்தப்பட்டு, அது மத்திய மற்றும் மாநில அரசின் வரி பகிர்வை பரிந்துரை செய்யும்.
- 15-வது நிதிக்குழு மத்திய மற்றும் மாநில அரசின் நிதிப்பகிர்வு சார்ந்த பரிந்துரை 2020- முதல் நடைமுறைக்கு வரும்.
  3. நல்ல திடமான நிதியை நிலைநாட்டும் வண்ணம் இந்திய குடியரசு தலைவரால் பார்வைக்கு கொண்டு செல்ல வேண்டிய விபரங்கள். ஏனைய பிரச்சனைகளாகிய கடன் நிவாரணம், மாநிலங்களுக்கு வழங்குகிற இயற்கை சீற்றத்திற்கான நிதி, துணை ஆயத்தீர்வைகள் போன்றவைகள்.

**நிதிக் கொள்கை**

- தற்கால அரசுப் பேரினப் பொருளாதாரக் கொள்கையின் முக்கியக் கருவியாக நிதிக் கொள்கை உள்ளது. கீன்சின் 'புதிய பொருளாதாரம்' மற்றும் உலக பெருமந்தம் ஆகியவற்றால் நிதிக் கொள்கை முக்கியத்துவம் பெறுகிறது.

**நிதிக் கொள்கையின் பொருள்**

- பொதுவான கண்ணோட்டத்தில் நிதிக் கொள்கை என்பது உற்பத்தி, வேலைவாய்ப்பு, சேமிப்பு மற்றும் முதலீடு ஆகிய பேரின பொருளாதார மாறிகளைப் பாதிக்கும் வரவு செலவு திட்ட மதிப்பாகும்.

**வரைவிலக்கணங்கள்**

- ''நிதிக் கொள்கை எனப்படுவது தேசிய வருமானத்தின் மீது விரும்பத்தகுந்த விளைவை ஏற்படுத்தவும் மற்றும் விரும்பத்தகாத விளைவுகள் தவிர்க்கவும் அரசின் வருவாய் மற்றும் செலவினங்கள் பற்றி கொள்கையாகும்''. ஆர்தர் ஸ்மிதீஸ்.
- ''நிதிக் கொள்கை என்பது நாட்டின் பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு பயன்படுத்தப்படும் பொது நிதி அல்லது செலவு, வரி, பெறுதல்கள் மற்றும் நிதி நிர்வாகம் சார்ந்த கொள்கையாகும்''– பியுளெர்

**நிதிக் கருவிகள்**

- நிதிக் கொள்கையை சில நிதிக் கருவிகள் மூலம் செயல்படுத்தபடுகிறது. அரசின் செலவுகள், வரிவிதிப்பு மற்றும் கடன் பெறுதல் போன்றவை நிதிக் கருவிகள் ஆகும்.

**(i)** **வரிவிதித்தல்**: வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது. வரிகள் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கும். வரி அதிகரிப்பு செலவிடத்தக்க வருமானத்தை குறைக்கிறது. எனவே பணவீக்கத்தை கட்டுப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும். மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்பட வேண்டும்.

**(ii)** **பொதுச் செலவு**: பொதுச் செலவு பணியாளர்களின் கூலி மற்றும் சம்பளங்களை அதிகரிக்கும்போது பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான மொத்த தேவை உயருகிறது. ஆகையால் பொதுச் செலவு பின்னிறக்கம் மற்றும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த உதவுகிறது.

**(iii)** **பொதுக் கடன்**: அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது. அது பின்னர் மக்களுக்கு திரும்ப வட்டியோடு செலுத்தப்படுகிறது. இதனால் அரசிடமிருந்து பணம் மக்களுக்கு மாற்றப்படுகிறது.

**நிதிக்கொள்கையின் நோக்கங்கள்**

1. **முழு வேலைவாய்ப்பு**
2. **விலை நிலைத்தன்மை**
3. **பொருளாதார வளர்ச்சி**
4. **சமமான பகிர்வு**
5. **நாணய மாற்று வீத சமநிலை**
6. **மூலதன உருவாக்கம்**
7. **சமவட்டார வளர்ச்சி**

- நிதிக் கொள்கை பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு உதவுகின்றுது.

**1. முழு வேலைவாய்ப்பு**

- முழு வேலைவாய்ப்பு என்பது வளர்ந்த மற்றும் வளர்ந்து வரும் நாடுகளின் முக்கிய நோக்கமாகும். சமூக மேல் முதலீட்டில் பொதுச் செலவை மேற்கொள்ளவதால் வேலைவாய்ப்பை உருவாக்க முடியும். இந்தியாவில் ஊரக வேலைவாய்ப்பு திட்டங்களாகிய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்கள் வேலைவாய்ப்பு பெருக்கத்தை உருவாக்கம் நோக்கமாக கொண்டுள்ளது.

**2. விலை நிலைத்தனமை**

- விலை நிலையற்றதன்மை மொத்த தேவை மற்றும் அளிப்புக்கிடையே சமமின்மையை ஏற்படுத்துகிறது. பொருட்களுக்கான தேவை அதிகரிப்பதால் பணவீக்கம் ஏற்படுகிறது. பொதுச் செலவு மூலம் உண்மை உற்பத்தி அதிகரித்து தேவையும் அளவுக்கு அதிகமாக அதிகரித்தால் பொதுச் செலவைக் குறைப்பதன் மூலம் இதனைத் தவிர்க்கலாம். தேவைக்கு மேல் உள்ள தேவையை வரிவிதிப்பதன் மூலம் தனிநபர் செலவு செய்வதைக் குறைக்கலாம். வரிக்குறைப்பு மற்றும் பொதுச்செலவு மூலம் மந்தத்தை எதிர்கொள்ளலாம். மந்தகாலத்தில் அரசு செலவை அதிகரித்து வரிவிதிப்பைக் குறைத்துக் கொள்ளும்.

**3. பொருளாதார வளர்ச்சி**

- ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி திறனை பெருக்க நிதிக் கொள்கை பயன்படுகிறது. வரியானது முதலீட்டை பயன்படுகிறது. வரியானது முதலீடுடை ஊக்குவிக்கும் கருவியாக பயன்படுகிறது. வரி விடுமுறை மற்றும் வரி தள்ளுபடிகள் புதிய தொழிற்சாலைகள் மூலம் முதலீட்டை தூண்டுகிறது. பொதுத்துறை முதலீடு அதிகரிக்கப்படும்போது தனியார் துறையினரால் நிரப்ப முடியாத இடைவெளியை நிரப்புகிறது. வரிகள் மூலம் வளங்களைத் திரட்டுவதில் பற்றாக்குறை ஏற்பட்டால் அரசு உள்நாட்டு மற்றும் அயல்நாட்டு கடன் மூலம் வளர்ச்சி திட்டங்களுக்கு நிதி அளிக்கிறது.

**4. சமமான பகிர்வு**

- வளர்வீத வரி முறை பணக்கார மற்றும் ஏழை ஆகியோரிக்கிடையே உள்ள இடைவெளியை குறைக்க உதவுகிறது. வளர்வீதத்தில் பொதுச்செலவு அதிகரிப்பதன் மூலம் நலத்திட்டங்களாகிய இலவச கல்வி, பள்ளி குழந்தைகளுக்கான மதிய உணவு மற்றும் மான்யங்கள் போன்றவைகள் மூலம் ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துகிறது.

**5. நாணய மாற்று வீத சமநிலை**

- நாணய மாற்றுவீதத்தின் நகர்விற்கு ஏற்ப பன்னாட்டு வாணிபத்தின் ஏற்ற இறக்கங்கள் ஏற்படுகிறது. வரி சலுகைகள் மற்றும் உதவித் தொகை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்கிறது. அத்தியாவசியமற்ற பொருட்களுக்கு சுங்க வரி விதிப்பதன் மூலம் இறக்குமதி செலவைக் குறைக்கிறது. கச்சாப்பொருட்கள் மற்றும் இயந்திரங்களுக்கான இறக்குமதி வரியைக் குறைப்பதன் மூலம் செலவைக் குறைத்து ஏற்றுமதியில் நிறுவனங்கள் போட்டியிட உதவுகிறது.

**6. மூலதன உருவாக்கம்**

- விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனத்திரட்சி மிக முக்கியமானதாகிறது. வரிச் சுமை குறைப்பானது, செலவிடத்தக்க வருமானத்தை அதிகரிக்கிறது மற்றும் சேமிப்பு மூலம் மூலதனதிரட்சியை ஏற்படுகிறது. அரசானது மின்சாரம் மற்றும் போக்குவரத்து போன்ற அடிப்படைத் துறைகளில் செலவிடும்போது அது தனியார் முதலீட்டைத் தூண்டுகிறது.

**7. சமவட்டார வளர்ச்சி**

- பின்தங்கிய பகுதியில் உள்ள தொழிற்சாலைகளுக்கு நிதி ஊக்கம் வழங்கும் போது வட்டார வேறுபாடு குறைகிறது. பின்தங்கிய பகுதியில் தொழிற் பேட்டைகள் துவங்க பொதுச் செலவினை மேற்கொண்டால் அப்பகுதியின் வளர்ச்சி தூண்டப்படுகிறது.